# மனித குல உரிமைகள்




முதுமுனைவர் அடைக்கலம் சுப்பையன்

தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்
சென்னை - 600 005.

# மனித குல உரிமைகள்

முதுமுனைவர் **அடைக்கலம் சுப்பையன்**

**தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்**
காமராசர் சாலை/ சென்னை-600 005.

முதற்பதிப்பு : 2014

பதிப்புரிமை : தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்
சென்னை – 600 005.

நூலின் பெயர் மனித குல உரிமைகள்

நூலாசிரியர் பெயர் : முதுமுனைவர் அடைக்கலம் சுப்பையன்
வரலாற்றுத் துறை பேராசிரியர் (ஓய்வு)
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர் – 608002.

விலை : ரூ. 108/–

அச்சிட்டோர் : மீரா ஆப்செட் பிரிண்டர்ஸ்
104/184, வெங்கட்ரங்கம் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை 600 005.

299161
MADURAI KAMARAJ UNIVERSITY LIBRARY

# பொருளடக்கம்


இயல் பக்க எண்.

1. மனித குல உரிமைகள் 9
- வரலாற்றுக் கண்ணோட்டம்
- "சாமானிய அறிவு" செய்த புரட்சி
- "சமுதாய ஒப்பந்தம்" செய்தவினை
- குடியுரிமைகளின் சாசனம்
- மனித உரிமைகள்

2. உலகின் மகா சாசனம் 37
- மனித உரிமைகளின் அனைத்துலக அறிக்கை
- சுதந்திரமும் மனித உரிமைகளும்
- மனித உரிமைகள் என்றால் என்ன?
- மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு வழி உண்டா?

3. மனித உரிமையும் மனித உரிமைக்கல்வியும் 72
- மனித உரிமைகள் பற்றிக் கற்பித்தல்
- பல்கலைக்கழகங்களுக்கு ஓர் அறை கூவல்
- அனைவருக்கும் கல்வி
- கல்வி விரிவாக்கம்
- கல்வியைப் பரவலாக்குதல்
- மகளிர் கல்வி

- கிராமப்புறங்களில் கல்வி
- ஊனமுற்றோர் அகதிகள் குடிபெயர்ந்தோர்
- நடுத்தரக்காலத் திட்டக் கண்ணோட்டம்

4. மனித உரிமைகளும் சட்டமும் 96

- மனித உரிமைகளும் புதிய சட்ட அறிவுக் கொள்கையும்
- அறிவியலாளர்களின் அறிவியல்
- யுனெஸ்கோவும் மனித உரிமைகளும்
- மனித உரிமைகள் : யுனெஸ்கோவின் சில நடவடிக்கைகள்
- மகளிர் நிலையும் மலிவு ஊதியமும்
- மகளிர் பிரச்சினைகள் சமுதாயப் பிரச்சினைகள்

5. உலகளாவிய மனித உரிமைகள் 113

- உலகளாவிய மனித உரிமைகளும் சமத்துவமும்
- மனித உரிமைகளும் மூன்றாம் உலக நாடுகளும்
- மனித உரிமைகள் மீறல்கள்
- பன்னாட்டு மனித உரிமைகளும், சித்திரவதைக் கொடுமைகளும்.
- இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுப்புறச்சூழல்
- செய்தி மற்றும் தகவல் தொடர்புத்திறன்கள்
- உரிமைகள் சட்டமாகின்றன.
- பிறர் தலையீடில்லாக் கருத்துச் சுதந்திரம்
- கடமைகள்
- தப்பெண்ணங்கள், இனவெறி, பொறையின்மை, இன ஒதுக்கம்

- இன, பொருளாதார மற்றும் சமயப் பூசல்கள்
- தப்பெண்ணங்களைப் பரப்பும் செய்தித் தொடர்புச் சாதனங்கள், நூல்கள்
- இன ஒதுக்கலுக்கு எதிரான திட்டம்
- அமைதி, பன்னாட்டு உணர்வு, மனித உரிமை, நாடுகளின் உரிமை
- மனித உரிமைகள், அமைதி, படைக்கலக்குறைப்பு தொழில் நுட்பம்
- மண்டலச் சூழலில் அமைதியும், மனித உரிமைகளும்,
- மனித உரிமைப் பண்பாடு

6. இந்தியாவில் மனித உரிமைகள் 173

- அறநெறி இலட்சியங்கள்
- இந்தியாவின் விடுதலை அறிக்கை
- விடுதலை பெற்ற இந்தியாவில் மனித உரிமைகள்
- இந்திய அரசியல் நிர்ணயசபை டாக்டர் அம்பேத்கரின் பங்களிப்பு
- அடிப்படை உரிமைகள்
- சமதர்மக் குடியரசு
- புகழ்பெற்ற மனித உரிமை வழக்குகள்
- அடிப்படை உரிமைகளும், பன்னாட்டு மனித உரிமைகள்: ஒப்புமைகள்
- அரசியலமைப்புச் சீர்திருத்தம்
- தொழிலாளர்களின் உரிமைகள்
- சிறார்களின் உரிமைகள்

- தரமான கல்வி
- குழந்தை தொழிலாளர்முறை ஒழித்தல்
- வறுமை
- மரண தண்டனை
- மக்களின் கடைமைகளும் உரிமைகளும்
- வழிகாட்டும் நெறிகள்
- அரசியலமைப்பு தரும் பாடம்

7. தமிழ்நாடும் மனித உரிமைகளும் 223

- திராவிட இயக்கமும் மனித உரிமைகளும்
- சமதர்ம இயக்கம்
- சுயமரியாதையும் மனித உரிமையும்
- வகுப்புவாரி உரிமையும் இடஒதுக்கீடும்
- கோயில்களில் சமூகநீதி
- அறிஞர் அண்ணாவின் மனித உரிமைகள் பணியும் சிந்தனைகளும்
- மனிதன் என்றால் என்ன பொருள்?
- சாதியும் தீண்டாமையும்.

8. நீதித்துறையும் மனித உரிமைகளும் 258

- நீதித்துறையும் மனித உரிமைகளும் மறுக்கப்படும் நீதி
- காவல் துறையின் அத்துமீறல்
- நீதிபதிகளும் மக்கள் சேவையும்
- தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் பங்களிப்பு

- காவல் நிலைய மரணங்கள் மற்றும் பாலியல் வன்முறை
- மோதல் சாவுகள்
- கைது, குற்றம் சாட்டப்பட்டவர்களின் உரிமைகள்
- வழிகாட்டுதல்களைச் செயல்படுத்துதல்
- உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிகளின் கடமைகள்
- சிறார்களைக் கடுமையானப் பணிகளில் ஈடுபடுத்துதல்
- தேசிய மனித உரிமைகள் ஆணையம் பொது மக்களின் விழிப்புணர்வு

9. மகளிரும் மனித உரிமைகளும் 297

- பெண்ணுரிமைகள்
- பெண்ணுரிமை இயக்கம்
- பெண்ணுரிமைகளும், பணியிடங்களில் பாலியல் வன்முறையும்
- நீதித்துறையின் நோக்கங்கள்
- வேலையில் சமத்துவமும், வன்முறையும்
- வழிகாட்டலும் வழிமுறையும்
- பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்க (அம்னெஷ்டி இன்டர்நேஷனல்) சர்வதேச மன்னிப்புக்கழகம் வகுத்துள்ள திட்டங்கள்

10. சுற்றுச்சூழலும் மனித உரிமைகளும் 326

- இயற்கையைப் பாதுகாத்தல்: விவேகத்துடன் பயன்படுத்துதல்
- இந்திய விவசாயிகள்

- உலக மயமாக்கல் மற்றும் தாராள மயப்படுத்துதலும் மனித உரிமைகள் பாதிப்பும்
- யாரும் தனித்து வாழ்வதில்லை
- அணு உலையின் ஆபத்துக்கள்
- எதிர்காலத்தை நினைத்துப் பாருங்கள்
- மனித உரிமைப் புரட்சியும் சுகாதாரமும்
- மருத்துவத்துறையும் மனித உரிமைகளும்
- மருத்துவமும் மனித உரிமைகளும்

11. உலக அமைதியும் மனித உரிமைகளும் 359

- நோபல் பரிசு வென்றோர் கூட்டறிக்கை
- நீதி இல்லாததால் அமைதி இல்லை
- நோபல் பரிசு பெற்ற மருத்துவர்கள் அணு ஆயுதத்தின் ஆபத்து பற்றிய கருத்துக்கள்
- அமைதி பற்றிய சிந்தனைகள்
- ஐ.நா.வின் தோற்றமும், இந்தியாவின் பங்களிப்பும்
- பொதுவான உலக அரசு
- பகைமையும் பலாத்காரமும்
- மனித குல அறிக்கை
- அமைதியான வாழ்க்கைக்குத் தயாராகுதல்
- மூன்றாம் உலக நாடுகள்
- மக்கள் ஆட்சியில் மனித உரிமைகள்

# 1. மனிதகுல உரிமைகள்

நீ கூறுவதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது ஆனால் அதைக் கூறுவதற்கான உன்னுடைய உரிமையை நான் என்னுடைய உயிரைக் கொடுத்தும் காப்பேன்

- வால்டேர்

## வரலாற்றுக் கண்ணோட்டம்

உரிமைகள் என்றால் என்ன? அதற்கு ஏன் தனிமதிப்பு? உரிமை நாட்டம் மனித இயல்பிலேயே இணைந்து நிற்கும் குணமா, அல்லது குறிப்பிட்ட சூழ்நிலைகளின் விளைவா? அதுவே ஒரு குறிக்கோள் என்று அதை மக்கள் விரும்புகிறார்களா? அல்லது அதன் மூலம் பிற நன்மைகளைப் பெறுவதற்காகவா? உரிமைகள் கிடைப்பதால் பெரிய பொறுப்புக்கள் சுமத்தப்படுகின்றனவா? இப்பொறுப்புக்களின் கடுமையான தொல்லைகளுக்கு அஞ்சி, உடும்பு வேண்டாம் கையை விட்டால் போதும் என்ற அளவுக்குக் கசந்து, உரிமை நாட்டத்தையே மக்கள் எளிதில் கைவிட்டு விடுவார்களா? அல்லது ஒன்றுக்கொன்று சம்மந்தமில்லாத பல இன்னல்களை அகற்றும் பொருட்டு முன்னோர்கள் மேற்கொண்ட முயற்சிகளா? உரிமை நாட்டம் என்பது குறிப்பான ஏதாவது ஒரு இன்னலில் இருந்து விடுதலை விழைவதேயன்றி வேறொன்றுமில்லையா? அந்த இன்னல் நீங்கி, அதைச் சகிக்க முடியாது என்ற நிலை ஏற்படும் வரை சுதந்திர வேட்கை அல்லது உரிமை நாட்டம் மங்கிப் போய்விடுமா? எல்லோரும் சரிசமானம், மிக முக்கியமாக நம்மை விட உயர்ந்தோர் எனக் கருதி வந்தவர்களுடனும் நாம் சரிசமானம் என்கின்ற நிலைமை

விரும்புவதைக் காட்டிலும் உரிமை நாட்டம் தீவிரமானதா? ஒன்றுபட்டு பல சமூகத்தினருடன் கலந்து வாழ்வதால் உண்டாகும் திருப்தியும், ஒரே நாடாக அல்லது ஒரே சமூகம் போல் வாழ்வதால் உண்டாகிற வலிமையின் விளைவாகப் பிறரிடம் பெறுகிற மதிப்பு, உரிமையை விட்டுக் கொடுப்பதன் மூலம் அடையலாம் என மக்கள் நம்பினால் அவர்கள் தங்கள் உரிமையைத் தியாகம் செய்து விடுவார்களா?

உலகில் நாம் காணும் தற்கால நிலைமை, மேற்கண்ட கேள்விகளை எல்லா மக்களாட்சி நாட்டு மக்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறது. மக்களாட்சி நாடுகளின் மக்களாட்சி நிறுவனங்கள் ஒரு சம்பிரதாயத்துடன் பிணைக்கப்பட்டு விளங்குகின்றன. அத்தகைய கருத்துகள் அதன் வளர்ச்சிகள் மேலும் மேலும் அதன் வெளிப்பாடுகள் கொண்ட தலை சிறந்த மகாசாசனமே 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 10ஆம் நாள் வெளியிடப்பட்ட மக்கள் உரிமைகளின் அனைத்துலக அறிக்கை[1] ஆகும். ஐக்கிய நாடுகள் பேரவை 1948-ஆம் ஆண்டு மக்கள் உரிமைகள் பற்றிய உலக அறிக்கையை வெளியிட்ட போது, சட்டம் மற்றும் அறநெறி உறுதிப்பாடு வாய்ந்ததாய் மக்கள் உரிமைகள் பற்றிய சர்வதேசத் திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு அது முதற்படி என்று கருதப்பட்டது. இந்த விரிவான செயல் முறையை ஐ.நா. மன்றம் துவக்கி முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு 1976-இல் மக்கள் உரிமைகள் பற்றிய சர்வதேசத் திட்டம், பொருளாதார, சமூக, காலச்சார உரிமைகள் பற்றிய சர்வதேச ஒப்பந்தம்.2 வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச ஒப்பந்தம்.[3] இரண்டாவது ஒப்பந்தத்திற்கு துணையான விருப்பமுறைச் செயல் நெறிப்பத்திரம்[4] ஆகிய மூன்று குறிப்பிடத்தக்க உறுதிப்பத்திரங்களுடன் உருப்பெற்றது. ஒப்பங்களிலும், விருப்ப முறைச் செயல் நெறிப்பத்திரத்திலும் பங்கேற்க வருமாறு எல்லா

நாடுகளையும் ஐ.நா. பேரவை அழைத்திருக்கின்றது. நாடுகளின் பங்கேற்பு, மானிட உரிமைகளை மதித்து மேனிலைப்படுத்தும் செயலில் பெரிதும் உதவும் என்று ஐ.நா. நம்புகின்றது.

முழு சுதந்திரமும் உரிமைகளுமே அரசியல் வரலாற்றின் இறுதிக் குறிக்கோள், சுதந்திரம் என்பது மனிதனின் பிறப்புரிமை; அது கிடைத்துவிட்டால் மனிதனுடைய மதிப்புக்கு அதைக் காட்டிலும் உயர்ந்தது வேறொன்றும் இல்லை என்பதெல்லாம் மனித உரிமைகள் வரலாற்றிலிருந்து நாம் அறிந்த செய்திகளேயாகும் எனினும், இன்றைய உலகில் நாம் காண்பதென்ன?

மனித உரிமைகள் விவாதம் வெறும் வார்த்தைகள் சொற்றொடர்கள் பற்றியதல்ல, அது தூய்மையான கோட்பாடுகளும், கருத்துக்களும் ஆகும்.

மனித உரிமைகள் விவாதம் பன்னாட்டளவில் ஒரு சக்திமிக்க இயக்கமாக மாறி வந்துள்ளது. பன்னாட்டு மக்களையும் ஒருங்கிணைக்கும் கோட்பாடாகவும் செயல் வடிவமாகவும் உருவம் எடுத்துள்ளது.

உலக அளவில் இராணுவ, காவல்துறை, பாசிசக் கும்பல்களால் இழைக்கப்பட்ட குற்றங்கள் குறித்து பன்னாட்டு விசாரணைக் குழுக்களின் நடவடிக்கைகளும், அரசு சாரா தன்னார்வ நிறுவனங்களும், சில மேதைகளின் மற்றும் நீதிபதிகளின் அறிக்கைகளும் குறிப்பிடத்தக்க சக்தி வாய்ந்த கருவியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

கடந்த பல ஆண்டுகளாக, மனித உரிமைகள் பிரச்சனை பற்றிய ஆர்வம் பல்வேறு காரணங்களால் தீவிரமாகியிருக்கிறது. அதன் காரணங்கள் இங்கு பல்வேறு தலைப்புகளில் விளக்கப்பட்டுள்ளன. மனோ தத்துவப்போரின்

சகல உத்திகளையும் பயன்படுத்தி மனித உரிமைகள் விவாதங்கள் மூலம் மக்களாட்சிக்கு எதிராக ஓர் அரசியல் இயக்கத்தை வழக்கமாக்கி இருக்கிறார்கள், மனித உரிமைகளை மீறுவதற்கும், தவிர்ப்பதற்கும் வாத எதிர்வாதங்கள் தவிர்க்கும் நோக்கத்தோடு செயல்படுவாகும்.

பல நாடுகளின் சுதந்திர நிறுவனங்கள் என்று கருதப்பட்டவைகள் மறைந்து வருவதற்கு காரணம் பலாத்காரமல்ல; மக்களே மனப்பூர்வமாக, உற்சாகத்துடன் அவற்றைக் கை விடுகின்றனர் என்பதைக் காணும்போது அந்த நிறுவனங்கள் பெயரளவில் மட்டுமே சுதந்திர நிறுவனங்களாக இருந்தனவேயன்றி உண்மையில் சுதந்திரமாக எல்லா உரிமைகளுடன் இயங்கவில்லை என்பதை உணரலாம். அல்லது உரிமைக்காக போராடுவது மிகக்கடினம்; பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காப்பது அதனினும் கடினம்; நமக்கேன் அந்தத் தொல்லைகள் சிரமப்படாமல் சுகவாழ்வு வாழலாமே என்றெல்லாம், எண்ணிச் சோம்பி இருந்து விடுவார்களா? உணவு, உடை, உறைவிடம் போன்று - அல்லது குறைந்தப் பட்சம் உல்லாசமாகப் பொழுதைக் கழிப்பது போன்றாவது உரிமைகள் கிடைப்பதும் அதனால் விளையும் பயன்களும் முக்கியமானவை என்று கூறமுடியுமா? உலக மக்கள் தற்போது கருதுமளவிற்கு மனிதன் எப்பொழுதாவது உரிமை பெறுவதில் அக்கறை கொண்டிருந்தானா? உரிமைக்காக சாமானிய மக்கள் மேற்கொண்ட முயற்சியே அரசியல் வரலாற்றை இயக்கும் சக்தியாகும் என்கின்ற பழைய கொள்கையில் உண்மையுண்டா? அரசியல் சுதந்திரத்திற்காக மக்கள் நடத்திய போராட்டங்கள், உண்மையில் உரிமைதாகத்தால் ஊக்குவிக்கப்பட்டனவா, அல்லது, தம் நாட்டிற்கு நேரிட்ட அவமானம், தாழ்வு முதலிய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு நாட்டின் மதிப்பை

மீண்டும் நிலை நாட்ட உதவும் எந்த வகை அரசாங்கத்தையும் வரவேற்கும் நிலையில் மக்கள் இருந்தனர் என எண்ணி ஒருவாறு ஆறு தலடையலாம். இருந்தாலும் நம்நாட்டின் தற்போதய நிலைமைகளையும் பிறநாடுகளில் மக்களாட்சி மங்கிக் கிடைப்பதையும் பற்றிச் சிந்தித்து பார்க்கும் பொழுது நம் நாட்டில் உள்ள சமூக அமைப்பில் காணப்படும் உரிமைகளையும் மற்ற நாடுகளின் சமூக அமைப்பில் காணப்படும் உரிமைகளையும் குறித்து சில கேள்விகள் எழுகின்றன.

மேலே எழுப்பியுள்ள கேள்விகளெல்லாம் முற்றிலுமோ அல்லது பெரும்பாலுமோ இன்றைய உலக அரசியல் நிலமைக்குப் பொருந்தும் என உணர்கிறோம். எவ்வாறென்றால், அரசியல் என்பது வேறுபலசக்திகளை, குறிப்பாகப்பொருளாதார சக்திகளை, ஆதாரமாகக் கொண்டிருப்பதே நாம் எழுப்பியுள்ள கேள்விகள் சுட்டிக்காட்டும் நிலைமைகள் உருவானதற்கு மிகப் பெரிய காரணம் என்பதை நாம் அறிகிறோம்.

நாம் எழுப்பியுள்ள கேள்விகளில் புதைந்துள்ள பிரச்சினைகளும் அந்தக் கேள்விகளை வலியுறுத்தும் ஆற்றல்களும் சில உளவியல் கொள்கைகளும் ஒழுக்கநியதிகளும் மக்களாட்சிக்கு ஆதாரமாகும் என்று பண்டைக் காலத்திலிருந்த நம்பிக்கைகளோடு நிற்கவில்லை அவற்றிற்கும் அப்பாற்பட்டவையாகும்.

விவாதத்தின் தொடக்கத்தில் எழுப்பிய கேள்விகளில் பொதிந்துள்ள பிரச்சனைகளின் தன்மையில் ஏதாவது புதிய அம்சத்தைக் கண்டுபிடிக்கலாம் என்ற நோக்கத்தோடுதான் "மனித குடும்பத்தின் மாற்ற முடியாத உரிமைகள்"[5] என்ற இம் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொடர்ந்து இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்தக் கேள்விகளை முன் நிறுத்துவதற்கு காரணம் என்ன, மனிதனின், அதாவது, பண்பாட்டின ஒரு அம்சமோ அல்லது தோற்றமோ தலை தூக்கி நின்ற இதர அம்சங்களுக்கோ அல்ல தோற்றங்களுக்கோ தக்க உருக்கொடுத்து அவற்றை ஒழுங்குப்படுத்துகின்றனவா? அல்லது அரசியல் பொருளியல், அறவொழுக்கநியதிகள், கலை, வரலாறு, அறிவியல் முன்னேற்றம், சட்டம், சர்வாதிகார அரசாங்கங்கள், தொழில், நீதி, வர்த்தகம் சுற்றுப்புறசூழ்நிலை, உடல் நலம், உள்ள நலம் முதலியவை எல்லாம் பலவித அம்சங்கள் ஒன்றையொன்று இயக்குவதால் அதாவது ஒவ்வொன்றும் மற்றவைகளை இயக்குவித்து தாமும் இயக்குவிக்கப் பெறுவதனால் ஏற்படும் பல்வேறு தோற்றங்கள் தானா? விடைகாண முயலுவோம்.

## "சாமானிய அறிவு"[6] செய்த புரட்சி

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வரலாற்றில் தாமஸ்பெய்ன் என்னும் ஆங்கிலேயரின் பெயர் பொன்னே போல் பொறிக்கப்பட்டிருக்கின்றது. அமெரிக்கக் குடியரசு பெறுவதற்கு ஜார்ஜ் வாஷிங்டன் வாளேந்திப் போரிட்டதைப் போல, பெய்னும் பேனா ஏந்திப் புரட்சி செய்தார். தனிமனிதனின் ஆட்சியை விட மக்களாட்சியே சிறந்ததென நன்கு உணர்ந்திருந்தார். அமெரிக்க மக்களைச் சுயேச்சையடையத் தூண்டுகையில் ஏதேச்சதிகாரத்தின் தீமைகளைப் போலவே தன்னலம் ஒன்றையே கருதும் சர்வாதிகார ஆட்சியின் அபாயத்தையும் வலியுறுத்தினார். அறிவும் பொறுப்பும் உடைய மக்களுக்குப் பொறுத்தமான ஓர் அரசாங்கத்தை அமெரிக்கர்கள் அமைதியாகவும், நிதானமாகவும் நிறுவிக் கொள்ளக் கூடுமென அவர் உணர்ந்தார். புதிதாக அமையவிருக்கும் குடியரசின் அளவையும் ஆற்றலையும் முன்னமே ஓரளவு உணர்ந்தார்.

அது சமயம் அமெரிக்கக் காலனிகளின் வாழ்க்கையில் ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டிருந்தது. ஆங்கிலேயே மன்னனான மூன்றாவது ஜார்ஜின் கொடுங்கோலாட்சி, மக்கள் தலைவர்களுக்கு ஆத்திரமூட்டியது. அரசாங்கத்தில் பிரதிநிதித்துவம் உள்பட தமக்கும் வேண்டுமென அவர்கள் கேட்டனர். அதே சமயம் தாமஸ்பெய்ன் மட்டும் பிரிட்டனின் மனப்பாங்கை நன்கு அறிந்திருந்தார். சிறிது காலத்திற்குள் அமெரிக்காவின் உள்ளத்தையும் உணரலானார். பழைய உலகுக்கும் புது உலகுக்கும் இருந்த வேறுபாட்டை நன்கு உணர்ந்திருந்தார். பிரிட்டனும், அமெரிக்காவும் உளுத்துப்போன பழைய உலகைச் சார்ந்திருந்தன அமெரிக்கா புது உலகின் தலைவாயிலில் நின்றது. அமெரிக்க மண்ணை மிதித்து ஓராண்டு ஆவதற்குள்ளேயே அமெரிக்கா சுதந்திரமும், சுயேச்சையுங் கொண்ட குடியரசாக மலர்ச்சிடையப் போவதை அவர் கண்டார். அக்காட்சியை மனத்தால் ஆழ்ந்து எண்ணி அதை மக்களின் உள்ளத்தில் நிலைநாட்டக் கருதினார். அதன்பொருட்டு சாமான்ய அறிவு (Common Sense by Thomas Paine)[7] என்றொரு சிறுநூல் எழுதினார்.

1776 ஜனவரி 10ந் தேதியன்று அது புத்தக வடிவில் வெளிவந்தது. முதலில் மிகக்குறைந்த பிரதிகளே அச்சடிக்கப்பட்டன. தேவை அதிகரிக்கவே, பின்னர் பல பதிப்புக்கள் வெளிவந்தன. 25 லட்சம் மக்கள் வாழ்ந்த நாட்டில், 5 லட்சம் பிரதிகள் அதாவது 5 பேருக்கு ஒரு பிரதிவீதம், செலவாயின. ஆசிரியர் ராயல்டி உரிமைகளைக் காண்டினெண்டல் காங்கிரசுக்கே அளித்து விட்டார். நூலின் மூலம் பணம் சம்பாதிக்க விருப்பமில்லை. மக்கள் விடுதலையடைய வேண்டுமென்பதே இவரது எண்ணமாகும்.

“சாமான்ய அறிவை” இராணுவ அதிகாரிகள் தம்படையினருக்கும் ஆசிரியர்கள் தம் மாணவர்களுக்கும்,

மதகுருமார்கள் தம் சொற்பொழிவுகளைக் கேட்க வருவோருக்கும் படித்துக் காட்டினர். அதன் சொல்லாற்றலும், ஒழுங்கும் சாமான்ய மக்களின் உள்ளங்களை நெகிழச் செய்தன. நூல் முழுவதிலும், சுதந்திரமடைய வேண்டுமென்றும் திடசித்தமும், நேர்மையான தர்க்கவாதமும், மக்களின்பால் நட்பும் ஓங்கி நின்றன. அதைப் படித்த சாமானியக் குடிமகனும், தொழிலாளரும் தம்மைப்பற்றி அறிந்த ஒருவரால் தமக்கென்று, தாம் பேசும் மொழியிலேயே எழுதப்பட்டதெனத் நினைத்தனர்.

அவர்கள், தாம் ஏன் அடிமைகளாயிருக்க வேண்டுமென்றும், என்று அடிமை விலங்கை ஒழித்து விடுதலை அடைவோம் என்றும், தொலைவிலுள்ள ஓர் ஏகாதிபத்தியத்தினின்று விலகி விடுவது எவ்வளவு உயர்ந்த வாழ்வாகும் என்றும் நினைக்க தொடங்கினர்.

இந்நூலைப் படிக்குமாறு ஜார்ஜ் வாஷிங்டனுக்குப் பரிந்துரை செய்த ஜெபர்சன், வலுவான ஐக்கியப்பட்ட நாட்டை அமைப்பதற்குரிய சரியான கருத்துக்கள் இதிலுள்ளன என்றும், விடுதலையின் பொருட்டு மக்கள் ஏற்கனவே போராட்டத்தில் இறங்கியுள்ளனரென ஆசிரியர் கருதுகிறாரென்றும் கூறியிருக்கிறார். ஜார்ஜ் வாஷிங்டனும் இதன் நியாயமான கொள்கையையும், மறுக்க முடியாத வாதத்தையும் அங்கீகரித்தார்.

தெருக்களில் எல்லா இடங்களிலும் பெய்னின் நூல் வேத நூலாகக் கருதப்பட்டது. அனைவரும் சுதந்திரத்தைப் பற்றிப் பேசத் தொடங்கினர். மக்களின் போராட்டத்திற்கு இந்நூல் ஆதரவளித்தது. பெய்னைக் கௌரவிக்க நடந்த கூட்டமொன்றில் “சுதந்திர மக்கள் மகிழ்வுடன் தம் உயிரைப் பலியிட வரமாட்டார்களா? ” என ஆர்வமுடன் கேட்டான் ஒருவன்.

"மன்னன் ஜார்ஜ் வாழ்க!" என்று முழக்கமும் செய்தான் மற்றொருவன். சுதந்திரம் வாழ்க!" என்று சங்கநாகம் செய்தான் வேறொருவன்.

டாம் பெய்ன் "சாமானய் அறிவின்" அவதாரமானார். அனைவரும் அவரைத் "திருவாளர் சாமான்ய அறிவு" என்று அழைக்கலாயினர். சுதந்திரதாகத்தை ஊட்டி வளர்த்த இந்நூலினால், அயலாராக அமெரிக்கா வந்த இவர், இன்றும் அமெரிக்கரது உள்ளத்திலும் இடம் பெற்று விட்டார்.

ஜெபர்சன் ஒரு நாள் பெய்னிடம் இப்படிக் கூறினார். "எங்கள் நாட்டுக்கு நீங்கள் பெருஞ்சேவை செய்திருக்கிறீர்கள். எங்கள் சிந்தனையில் இருந்தவற்றைத்தான் நீங்கள் சொன்னீர்கள். நாங்கள் இவற்றைப்பேசி வந்திருக்கிறோம். ஆயினும் எதையும் மக்களுக்கு விளக்கும் வண்ணம் சொன்னால்தான் பயனுண்டு? அந்தப் பணியைத் தங்கள் நூல் செய்துள்ளது. இப்போது நாங்கள் அனைவருமே சுயேச்சையை விரும்புகிறோம். சுதந்திர சாசனத்தில் நகல் தயாராகி வருகிறது.

"அதில் தங்களின் "சாமான்ய அறிவைப்" பயன்படுத்தி வருகிறேன் என்பதைத் தங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். அதைப் பற்றி நான் பெருமை அடைகிறேன்."

சுதந்திர அறிக்கை தயாரான பின் அதைப்பெய்னுக்கு படித்துக்காட்டினார். "அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகளாகி நாங்கள் (அதைப்படித்த போது அவர் பெய்னை உற்று நோக்கினார். தம் நாட்டுக்கு அப்பெயரைச் சூட்டியது அவரல்லவா)" இக்காங்கிரசில் கூடி இக்காலனிகளின் மக்களின் பெயராலும் அவர்களின் அதிகாரத்துடனும் பிரகடனம் செய்வதாவது

"ஐக்கியப்பட்ட இக்காலனிகள் சுதந்திரமும் சுயேச்சையும் பெற உரிமை பெற்றுள்ளன. பிரிட்டிஷ் மன்னனுக்கு அரச விசுவாசம் காட்டுவதிலிருந்தும் இவை விடுதலை பெற்றுள்ளன. இவற்றிற்கும் கிரேட் பிரிட்டனுக்கும் உள்ள அரசியல் தொடர்புகள் யாவும் முற்றும் அறுபட்டு விட்டன. சுதந்திரமும் சுயேச்சையும் பெற்றுள்ள நாடுகள் என்ற வகையில் இவை போர் செய்யவோ சமாதானம் செய்யவோ நட்பு உடன்படிக்கை செய்து கொள்ளவோ, வியாபார ஏற்பாடுகள் செய்யவோ, மற்றும் சுதந்திர நாடுகள் என்னென்ன வெல்லாம் செய்ய உரிமை பெற்றுள்ளனவோ அவற்றை எல்லாம் செய்யவோ முழு அதிகாரம் பெற்றுள்ளன.

"எம் உயிரையும், சொத்தையும், கண்ணியத்தையும், பரஸ்பரம் பணயம் வைத்து நாங்கள் இப்பிரகடனத்தை ஆதரிக்கிறோம்."[8]

முற்றிலும் சரி என்று அங்கீகரித்தார் பெய்ன். "சாமான்ய அறிவு" தோன்றி ஆறுமாதத்திற்குப் பின் மேலே சொன்ன சுதந்தரப் பிரகடனம் கையெழுத்தாயிற்று. தாமஸ் ஜெபர்சன் பேனாபிடிக்க ஐவர் குழு ஒன்று சுதந்திர பிரகடனத்தைத் தயாரித்தது. காங்கிரஸ் அதை ஜூலை இரண்டாம் தேதி அங்கீகரித்தது. 1776 ஜூலை நான்காம் தேதி அதை வெளியிட்டது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அந்த சாசனத்தை உருவாக்கி அங்கீகரித்த மனிதர்கள் வெறும் சுதந்திரப் பிரகடனத்தோடு திருப்தி அடையவில்லை. மனித வர்க்கத்தின் அபிப்பிராயங்கள் மரியாதைக்குத் தகுதியுள்ளன என்பது அவர்களது அடிப்படைக் கருத்து.

தாங்கள் தேசிய சுதந்திரத்தின் ஆரம்பத்திலேயே அமெரிக்கர் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு ஆணித்தரமாகக் கொண்டு ஒரு தத்துவ மார்க்கத்தைப்

பிரகடனம் செய்தது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு சொற்களால் நிரந்தரம் ஆக்கப்பட்டு சாகாவரம் பெற்ற அந்த கொள்கைகள் தான் என்ன? ஜெபர்சன் எழுதினார்.

"எல்லா மனிதர்களும் பிறக்கும் போது சமமானவர்கள்; விலக்க முடியாத சில உரிமைகளைக் கடவுள் அவர்களுக்கு அளித்திருக்கிறார்; வாழ்க்கை உரிமை, சுதந்திர உரிமை, சுகத்தை நாடும் உரிமை இவற்றுள் சில; இவ்வுரிமைகளைப் பெற்றுக் காப்பாற்ற மனிதர்களிடையே அரசாங்கங்கள் நிறுவப்படுகின்றன; அவ்வரசாங்கங்களின் சக்தி ஆளப்படுவோரின் சம்மதத்திலிருந்து எழுகிறது; எவ்வகையான அரசாங்கமும் இந்த லட்சியங்களை ஒழிக்க நேர்ந்தால் அவ்வரசாங்கத்தை மாற்றி அமைத்து அல்லது நிர்மூலமாக்கிப் புது அரசாங்கம் ஒன்று நிறுவ மக்களுக்கு உரிமையுண்டு; அதன் அடிப்படைக் கொள்கைகளும் நிர்வாக சக்திகளும் மக்களுக்கு நலமும் மகிழ்ச்சியும் அளிக்கக்கூடியனவாக இருக்க வேண்டும். அந்த உண்மைகளுக்கு நிரூபணம் தேவையில்லை என்பது எங்கள் நம்பிக்கை."[9]

இது மக்களின் தத்துவம், மக்கள் அனைவரும் சமம்-கடவுள் முன்னிலையில் சட்டத்தின் முன்னிலையில் பேதங்கள் கிடையாது என்ற கருத்தை எடுத்துக்கொள்ளுவோம். மக்களாட்சி நாடுகளில் பல பேதபாவங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஏழை, பணக்காரன், ஆண், பெண், கறுப்புமனிதன்-வெள்ளை மனிதன் என்ற வேற்றுமைகள். "ஆனால் ஒரு சமூகம் தன் லட்சியப்படி வாழ முடியவில்லை என்பதற்காக லட்சியம் பொய்யாகிவிடாது"

விலக்க முடியாத சில உரிமைகளை பிறப்பின் வரங்களாக எல்லோரும் பெற்றிருக்கிறார்கள் என்பது பெரிய

உண்மை. மகிழ்ச்சியும், சுதந்திர வாழ்க்கையை நாடும் உரிமையையும் அவற்றில் ஒன்று நல்மனம் படைத்த அரசு விரும்பும் போது அளிக்கவும் வேண்டாத போது திரும்பிப் பெறவும் கூடிய உரிமைகள் அல்ல இவை; பிறப்புடன் மக்கள் அனைவரும் பெற்றவை. இழக்க முடியாதவை இந்த உரிமைகள்.

இந்தக் கொள்கைகள் அமெரிக்கர் உள்ளத்திலும், பிரெஞ்சு மக்கள் உள்ளத்திலும், ரஸிய மக்கள் உள்ளத்திலும், இந்திய மக்கள் உள்ளத்திலும் அந்த அந்தக் கால கட்டத்தில் வளர்ந்து அதிகார வர்க்கத்தின்பால் அவர்களுடைய மனநிலையை மாற்றிற்று.

சுருங்கச்சொன்னால், நன்மை செய்வதற்காக மக்கள் அரசாங்கங்களை உண்டாக்கினார்கள். தீமைகள் செய்வதற்காக அல்ல; மக்களை வாழவைப்பது ஆளுவோரின் கடமை, கொடுமைப்படுத்துவது அல்ல; அரசாங்கத்தை மக்கள் ஆக்க முடியுமானால் அழிக்கவும் முடியும். கொடிய ஆட்சியை மாற்றியமைக்கவோ, புதியதொன்றை நிலைநிறுத்தவோ அவர்களுக்கு உரிமை உண்டு. இது வெறும் வறட்டுக் கொள்கையல்ல என்பதை அமெரிக்கர் பிரெஞ்சு நாட்டவர், இந்தியர், பிலிப்பைன்ஸ் நாட்டவர் செய்து காட்டியுள்ளனர்.

## "சமுதாய ஒப்பந்தம்" செய்தவினை

ரூஸ்ஸோ தம் சமுதாய ஒப்பந்தத்தை 1762-ஆம் ஆண்டு வெளியிட்டார். 1776, ஜூலை 4-ந் தேதியன்று, அதாவது ரூஸ்ஸோ இறப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன், அமெரிக்கச் சுதந்திர அறிக்கை பிரகடனம் செய்யப்பட்டது. அதன் சில முக்கியமான பகுதிகளில் "சமுதாய ஒப்பந்தத்தின் உட்கருத்து, சற்றேறக்குறைய

ரூஸ்ஸோவின் மொழிகளிலேயே" வெளியிடப்பட்டுள்ளது. உதாரணமாக, சமுதாய ஒப்பந்தத்தின் சில வாசகங்கள் வருமாறு.[10]

"மனிதன் பிறக்கும்போது சுதந்திரமுள்ளவனாகவே பிறக்கிறான்."

"தந்தையாகட்டும், பிள்ளையாகட்டும், மன்னனாகட்டும், மக்களாகட்டும் - அனைவரும் சுதந்திரமாகவும் ஒரே மாதிரியாகவும் பிறக்கிறார்கள்."

"எந்த மனிதனுக்கும் தன் சகோதர மனிதர்கள் மீது ஆதிக்கஞ்செலுத்த இயற்கையான அதிகாரம் கிடையாது."

"ஒரு மனிதன், எவ்வித பிரதிபலனுமின்றித் தன்னைப் பிறருக்கு ஒப்புக்கொடுத்து-விடுகிறான் என்று சொல்வது சுத்த அபத்தம் இப்படி நினைக்கக்கூட முடியாது. இப்படி ஒப்புக் கொடுப்பது நியாயமற்றது அது செல்லுபடியாகாது"

"தன்னை அடிமைப்படுத்துகிற ஒவ்வொரு மனிதனும் தன்னைத்தான் அடிமைப்படுத்தலாமே தவிர தன் சுதந்திரம் அவர்களுக்கே சொந்தமானது. அவர்களைத் தவிர வேறுயாரும் அந்தச் சுதந்திரத்தை விற்க முடியாது"

"பலாத்காரத்தைப் பயன்படுத்தி ஒரு இனத்தை நீங்கள் அடக்கியாளுகிறீர்கள். அந்த இனத்தாரும் உங்களுக்கு அடங்கி நடக்கிறார்கள். இப்படி நீங்கள் அடக்கியாள்வதும், அவர்கள் அடங்கி நடப்பதும் நியாயமென்றுதானே, நீங்கள் கருதுகிறீர்கள்? சரி ஆனால், அதே இனத்தார் உங்களுடைய அடக்கு முறையிலிருந்து தங்களை விடுவித்தும் கொள்ள முயற்சி செய்து, அப்படியே விடுவித்துக்கொண்டு விடுகிறார்கள் என்றும் வைத்துக் கொள்வோம். அதுவும் நியாயமே எந்த நியாயத்தைக்கொண்டு நீங்கள் அவர்கள் சுதந்திரத்தைப் பறித்தீர்களோ, அதே நியாயத்தைக்கொண்டு

அவர்கள் மீண்டும் தங்கள் சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டார்கள். நீங்கள் செய்தது நியாயமானால் அவர்கள் செய்ததும் நியாயமே”[11]

அமெரிக்கப் புரட்சியாளர்கள் இவ்வாசகங்களால் பெரிதும் ஊக்கமடைந்தனர் என்பதில் ஐயமில்லை. அவர்கள் அறிவித்த சுதந்திர சாசனம் கூறுவதைப் பாருங்கள்.

“மக்கள் அனைவரும் ஏற்றத் தாழ்வின்றிச் சரிசமமாகவே படைக்கப்படுகின்றனர். ஆண்டவன் அவர்களுக்கு ஒன்றும் பறிபோகக் கூடாத நிரந்தர உரிமைகளை அளிக்கிறான். உயிர் வாழ்க்கை சுதந்திரம், இன்பத்தேட்டம் ஆகியவை இவ்வுரிமைகளுள் அடங்கியுள்ளன. இவ்வுரிமைகள் தெளிவான உண்மைகளாகும். இவ்வுரிமைகளைப் பாதுகாக்கவே மக்கள் இடையே அரசாங்கங்கள் ஏற்படுகின்றன. இவ்வரசாங்கங்கள் தம் அதிகாரத்தை மக்களின் அனுமதியிலிருந்தே பெறுகின்றன. எந்த அரசாங்கமாவது இந்நோக்கங்களுக்கு அழிவு ஏற்படுத்துமாயின், அதை மாற்றவோ அடியோடு ஒழித்துப் புதியதொரு அரசாங்கத்தை அமைக்கவோ மக்களுக்கு உரிமையுண்டு.”[12]

அமெரிக்கர் தம் சுதந்திரப் பிரகடனத்தில் இவ்வாறு சமுதாய ஒப்பந்தத்தின் வாசகங்கள் பலவற்றை அமைத்திருப்பதோடு, கூட்டாட்சி அரசியலிலும் இதன் கொள்கைகள் பலவற்றைத் தழுவியுள்ளனர்.

1789 ஆகஸ்டு மாதம் பிரெஞ்சு தேசிய நிர்மான சபை பிரகடனம் செய்ததும், பின்னர் 1791-ல் பிரெஞ்சு அரசியல் அமைப்புச் சட்டத்தில் முன்னுரையாகச் சேர்க்கப்பட்டதுமான மானிட உரிமைகள் அல்லது குடியுரிமைகளின் சாசனத்திலும் “சமுதாய ஒப்பந்தத்தின்” கருத்துக்களும் வசனங்களும் பின்வருமாறு காணப்படுகின்றன.

1. மக்கள் சுதந்திரமாகவும் சம உரிமைகளுடனும் பிறந்து அங்ஙனமே வாழ்கின்றனர்.

2. மனிதனின் இயற்கையானவையும், பறிக்கப்படாதவையுமான உரிமைகளைப் பாதுகாப்பதே அரசியல் சபை யாவற்றினுடைய நோக்கமாகும். சுதந்திரம், சொத்துரிமை, பாதுகாப்பு, அடக்குமுறைகளை எதிர்த்தல் இவையே அவ்வுரிமைகள்.

3. நாட்டு மக்களிடையே இயல்பாக அரசின்வேர் உள்ளது. ஒரு சங்கமோ, தனி மனிதனோ, மக்களிடமிருந்து வெளிப்படையாகப் பிறவாத எத்தகைய அதிகாரத்தையும் பயன்படுத்தக்கூடாது.

4. பிறருக்குத்தீமை எதுவும் விளைவிக்காமல் எதையும் செய்யும் உரிமையே சுதந்திரம்.

5. "சமுதாயப்பொதுச்சபை" எதைத்தன் கருத்துக்கள் என வெளிப்படுத்துகிறதோ, அதுவே சட்டம்[13]

இந்த அரசியலமைப்புச் சட்டத்தைத் தயாரித்த துய்சி, காங்கெனே மேர்சியே முதலியோர் தம் அறிக்கைகளில் தங்கள் அமைப்புத் திட்டம் ரூஸ்ஸோவின் கருத்துக்களின் விரிவேயாகும் எனக் கூறியிருப்பதிலிருந்து அவர்கள் ரூஸ்ஸோவுக்கு எவ்வளவு தூரம் கடமைப்பட்டுள்ளனர் என்பது புலனாகும்.

பதினாறாவது லூயி மன்னனின் விசாரணை நடந்தபோது அரசின்மீது மக்களின் பிரிக்க முடியாததும், மறுக்க முடியாததுமான அதிகாரத்தை வலியுறுத்திப் ஃபிரெஞ்சுப் புரட்சியை நடத்திய கட்சிகளுள் ஒரு பிரிவினரான ழிரோந்தேன்கள், தேசிய சபையானது தன் தீர்மானத்தை மக்களின் நேரான ஓட்டுக்கு விடவேண்டுமென அதைக் கட்டாயப்படுத்த முயன்றனர். பயங்கர ஆட்சி

நடந்தபோது, ழக்கோபேன் என்னும், தீவிரக் கட்சியினர் தம் கொடிய அதிகாரத்தை ஏற்படுத்தி நாட்டில் ரத்த ஆறு ஓடச்செய்தனர். அவர்களும் “மக்களின் உயரிய பிரிக்கக்கூடாத, உரிமைகளை” வலியுறுத்தினர். தாங்கள் மட்டுமே மக்கள் எனக்கொண்டு தங்களுக்கு விரோதமாக ஓட்டுப் போட்டவர்களை செய்தவர்களை எல்லாம் துரோகிகள் எனக்கருதினர். இப்பயங்கர வாதிகள் ரூஸ்ஸோவின் வசனங்களுக்கு தம் விருப்பப்படி பொருள் கூறிப் பயன்படுத்திக் கொண்டனர்.

மேலும், ரூஸ்ஸோவின் கருத்துக்கள் புரட்சி முறைக்கு ஓர் உருவம் தந்தது. சுதந்திரம், சமத்துவம் அரசியலில் மக்களின் மேலான அதிகாரங்கள் ஆகியன பிரெஞ்சுப் புரட்சியின் மூன்று மூலாதாரக்கோட்பாடுகளாக விளங்கின. இப்போது அவை உலக மக்களாட்சிக்கே உரியனவாய் விட்டன. மேலை நாட்டினர் தம் சமூக, அரசியல் சீர்திருத்தங்களில், ரூஸ்ஸோவின் சிந்தனைகள் சென்ற சுவட்டையே பின்பற்றினர். ரூஸ்ஸோ, பல்லாண்டுகளாகப் பெருகி வந்த அவலங்களைப் போக்குவதற்குரிய ஆற்றல் மக்களிடமிருக்கிறதென அவர்களுக்கு நம்பிக்கையூட்டினார். அது மெல்ல மெல்ல ஆக்கம்பெற்றுப் பழைய அதிகார வர்க்கங்களைப் பலவீனப்படுத்தியும் சிதைத்தும் வருகிறது.

உலகம் ரூஸ்ஸோவுக்கு எவ்வளவு தூரம் கடமைப்பட்டுள்ளது என்பதை மேலும் விவரித்துக் கூறத் தேவையில்லை.

## குடியுரிமைகளின் சாசனம்

“மக்கள் சம உரிமைகளுடன் பிறக்கின்றனர். அன்றியும் அவற்றில் நிலையாக நிற்கின்றனர்.”[14] 1789-ல் ஃபிரெஞ்சு தேசீய நிர்மான சபை பிரகடனம்செய்த

புகழ்பெற்ற "குடிமக்களின் உரிமைச் சாசனம்" இவ்வாறாகத் தொடங்குகிறது. புரட்சித் தலைவருள் ஒருவரான லப்பேயத்தின் ஆலோசனையின்படி, இம்மொழிகள் பதிமூன்று ஆண்டுகளுக்கு முன் பிரகடனஞ் செய்யப்பட்ட அமெரிக்கச் சுதந்திர சாசனத்தினின்று இரவல் வாங்கப்பட்டன. மானிட உரிமைச் சாசனம், மக்களிடையே மேன்மக்கள், கீழ்மக்கள், நடுத்தரமக்கள் என்ற யாதொரு வரையறையும் செய்யவில்லை. ஒருவன் மனிதராய் பிறந்தால் பறி போக முடியாததொரு இயற்கையான சிறப்பு அவனுக்கு ஏற்படுகிறது. அச்சிறப்பு அடிமைப்பட்ட மக்களுக்கும் உண்டு. சுதந்திர மக்களைப் போலவே சுதந்திரமிழந்த மக்களுக்கும் சம உரிமை உண்டென அது வலியுறுத்தியது. ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்குமுள்ள தொடர்பை அது அடியோடு மாற்றிவிட்டது.

கொடுங்கோலரின் சின்னமான பஸ்தீல் சிறையைத் தகர்த்த முதலாண்டு நிறைவு விழா 1790, ஜூலை மாதம் 14-ந் தேதியன்று பாரிஸ் நகரில் மார்ஸ் மைதானத்தில் சிறப்புற நடை பெற்றது. "மானிட உரிமைச் சாசனம்" அளித்த புதிய உரிமையை உலகறிய வெளிப்படுத்துவதே அதன்நோக்கமாகும். பல வாரங்களுக்கு முன்பே பாரிஸ் நகரவாசிகளின் ஒவ்வொரு பிரிவினரையும் சார்ந்த தொண்டர்கள் விழா உடை தரித்தும், பாடிக்கொண்டும், மண்வெட்டிகள் புல்செதுக்கிகளுடன் பல்லாயிரக் கணக்கான மக்கள் மைதானத்தில் கூடினர். பதினாறாவது லூயி மன்னனும் இத்தொண்டில் மக்களுடன் சரிசமமாகப் பங்கெடுத்துக் கொண்டான். விழாவில் கலந்து கொள்ள பிரான்ஸில் மிகத் தொலைவில் உள்ள பகுதிகளுக்கு மட்டுமன்றி அயல் நாடுகளுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது. பல மாகாணங்களிலிருந்து மக்கள் தம் தொப்பிகளில் சிவப்புக்

குஞ்சங்களும், கருவாலித் தழைகளும் அணிந்து குதிரைமீதும், வண்டியிலும், கால் நடையாகவும் பாரிஸ் நகரில் வந்து குழுமினர். பாரன் அனகர்சிஸ் குளூட்ஸ் என்னும் ரஷ்ய நாட்டு ஆட்டக்காரன் ஒருவன் சீனர், ஆஸ்திரேலிய, ஆங்கிலேயர், சாலதேயர் நீக்கிரோவர் போன்று பகட்டான உடையனிந்த சிலருடன் வந்து விழாவில் கலந்து கொண்டான். விழாவின் போது நாலா பக்கங்களிலிருந்தும், பீரங்கிகளும், துப்பாக்கிகளும் முழக்கம் செய்தன. பின்னர்; இருநூறு சமயக்குருமார்கள் அலங்கரித்திருந்த மேடையின் முன்பு, பிரதிநிதிகள் அரசியலமைப்பையும் புதுச்சுதந்திரங்களையும், மானிட உரிமைச் சாசனத்தையும் பாதுகாத்து நிலைநிறுத்த உறுதி எடுத்துக் கொண்டனர்.

இங்ஙனமாக குதூகலமாகவும் ஆரவாரத்துடனும் முழக்கஞ் செய்யப்பட்ட மானிட உரிமைச் சித்தாந்தம் பிரெஞ்சு எல்லைப் புறங்களைக் கடந்து உலகெங்கும் பரவி மக்களை எழுச்சி பெறச் செய்தது. ஜெர்மானிய தத்துவ அறிஞரான பிக்தே "மானிட உரிமைச் சாசனம் ஒரு புதிய யுகத்தையே ஆரம்பித்துள்ளது" எனக் கூறி அதனை வரவேற்றார். ஹெகல் என்னும் மற்றொரு ஜெர்மானிய தத்துவ ஞானி அதைச் "சிறப்பு வாய்ந்த புதுயுக உதயம்" என்றார். காண்ட் என்னும் வேறொரு ஜெர்மானிய தத்துவஞானி, "மக்கள் இனம் மெல்ல மெல்ல முன்னேறி வருகிறது" என்னும் தன் நம்பிக்கையை அது உறுதிப் படுத்துகிறது என்றார். ஹெஸ் நாட்டு இளவரசன் சார்லஸ் கான்ஸ்டன்டைன் தன்னை "குடிமகன் ஹெஸ்" என்று அழைத்துக்கொண்டு புதுக்கொள்கையை ஆர்வத்துடன் வரவேற்றான். இங்கிலாந்தில் விக் கட்சியை சார்ந்த பலர் பிரெஞ்சுப் புரட்சியை ஆர்வமுடன் ஆதரித்தனர். இலண்டன் நகரில் பிரான்ஸின் மீது நட்பு பாராட்டும் பல கழகங்கள் ஏற்பட்டன.

தாமஸ் ஹார்டி என்னும் பிரபல கவிஞரும் நாவலாசிரியரும் நிறுவிய லண்டன் கரெஸ் பாண்டிங் சங்கத்தைச் சார்ந்தவர்கள், நாட்டுக்குச் சுதந்திரத்தை வென்று தந்த பிரெஞ்சு கன்வென்ஷனைப் போற்றி, அதனால் மக்கட் குலத்திற்கே கிடைக்க கூடிய நலன்களைப் பற்றி மிக விரிவாகப் பேசினார். போலந்து நாட்டு இளவரசியான ரோசாலிலுபோமிர்ஸ்கா, புரட்சி ஆர்வம் மேலிட்டுப் புதுச் சுதந்திர நாடான பிரான்ஸ் சென்று சுதந்திரத்தின் பொருட்டுத் தன் உயிரையும் பலியிட்டாள். “மானிட உரிமைச்சாசனம்” பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு உலெகங்கும் பரவியது[15]. பலர் தம் கைக்குட்டைகளில் அதைப் பொறித்துக் கொண்டனர். அது தென் அமெரிக்காவிலும் பரவியது.

ஆயினும், இச்சாசனம் பல அரசாங்கங்களிடையே பிரமிப்பையும் கவலையையும் உண்டாக்கிற்று. பாரிஸ் நகரச் செய்திகளைப் பலாடினேட்டில் பரப்பக் கூடாதென்றும், அங்கே பிரெஞ்சுப் பத்திரிக்கைகள் வரக் கூடாதென்றும் பிரஷ்ய அரசாங்கத்தார் தடை செய்தனர். பிரெஞ்சு ஆசிரியர்களையோ, தாதிகளையோ, வேலையாட்களையோ எவரும் பணியில் வைத்துக்கொள்ளக் கூடாதென ஆஸ்திரிய அரசாங்கம் உத்தரவிட்டது. ரஸ்யநாட்டு அரசி காதெரைன் தன் நாட்டில் மானிட உரிமைக்கொள்கை பரவுவத்தைத் தடுக்க தீவிர முயற்சிகளை மேற்கொண்டாள். ஐரோப்பிய மக்களிடையே ஆர்வம் எழுந்ததாயினும், அது எழுச்சி பெறவில்லை. ஆதலால், மக்களின் கலகத்தை ஒவ்வொரு நாட்டு காவல் துறையினரும் எளிதில் அடக்கினர்.

ஆனால், பிரெஞ்சு ஆட்சிக்குட்பட்டிருந்த சாந்தோ தொமிங்கோ என்னும் தீவிலுள்ள 5 லட்சம் நீக்கிரோவர்களிடையே சுதந்திர சாசனம் பல விபரீதங்களை விளைவித்தது. அத்தீவிற்கு சென்ற பல ஐரோப்பிய

மாலுமிகள் அங்கே மானிட உரிமைச் சாசனத்தைப் பற்றிப்பேசினர். கடற்கரைக் கள்ளுக்கடைகளில் எழுந்த அச்செய்தி காடுகளில் வசித்த நீக்கிரோவர்களிடையே காட்டுத்தீபோல் பரவியது. அவர்கள் எழுச்சி பெற்றனர். தங்களை வதைத்து கொடுமைப்படுத்தியவர்களை எதிர்த்து வெள்ளையரின் கொடுங்கோலை ஒழிக்க தக்க தருனம் வந்ததென்று உணர்ந்தனர். மிருகங்களை விட கேவலமாகப் பல்லாண்டுகளாக நடத்தப்பட்டு வந்ததனால் ஏற்பட்ட வெறுப்பு, இக்கொள்கையால் கொழுந்து விட்டெரிந்தது. வெள்ளைக்காரத்தோட்ட முதலாளிகள் வாள், துப்பாக்கிகளைப் பயன்படுத்தி புரட்சியை ஒடுக்க முயன்றனர். நீக்கிரோவர் அடர்ந்த புதர்களில் ஒளிந்து வெள்ளையரை வளைத்துக்கொண்டு தாக்கினர். நீக்கிரோவர்களிடையே மேலை நாட்டுக் கலையறிவும் ஆற்றலும், ராணுவப் பயிற்சியுமுடைய தூஸ்ஸேண்ட் என்பவன் முன்வந்து அவர்களுக்கு தலைமை வகித்தான். அவன் அமெரிக்காவிலிருந்து துப்பாக்கிளை வரவழைத்துத் தம் இனத்தவருக்குச் சுடக் கற்றுக்கொடுத்தான். அவனுக்குப்பின், வெள்ளையரின் கொடுமைகளுக்கு ஆளாகி உடம்பெங்கும் காயமும் சவுக்கடியும் பெற்ற தெஸ்ஸாலின் தலைமை வகித்து "வெள்ளையருக்குச் சாவு" என்று முழக்கமிட்டான்.

முதல் உற்சாகத்தில் "மானிட உரிமைச் சாசனம்" அனைவருக்கும் உரியதாகுமென அரசியல் நிர்ணய சபை அறிவித்திருந்ததாயினும், பின்னர் சிந்தித்து சமத்துவ உரிமை காலனி மக்களுக்குக் கிடையாதென அறிவித்தது. ஆனால் நிர்ணய சபையின் ஆதிக்கம் போய் புரட்சி கரமான கன்வென்ஷனின் ஆதிக்கம் ஏற்பட்டபோது, அதன் தலைவரான ரோபெஸ்பியர் "காலனிகள் நம் கையை விட்டு

நழுவினாலும் நழுவட்டும். நம் கொள்கையை மட்டும் நாம் கைவிடலாகாது" என்று பறையறைந்தார். சாந்தோ தொமிங்கோ தீவின் தோட்டக்காரர்கள் தூதனுப்பி நீக்கிரோவரின் அட்டகாசங்களைப் பற்றிக் குறை கூறினர். அதற்கு ரோபெஸ்பியர் "மக்களாய் பிறந்த யாவரும் சம உரிமைப் பெற்றவர். பிரெஞ்சு குடிமகனான ஒவ்வொருவரும் அவனது நிறம் வெளுப்பு, கருப்பு, மஞ்சள் ஆகிய எந்நிற முடையதாயினும், முழு மரியாதைக்குரியவனே. அனைவரும் தம் உரிமைகளைப் பெற உதவுவதே நம் கடமையாகும்" எனக் கூறி அவர்களை அனுப்பிவிட்டார். பின்பு ஒரு சமயம் அத்தீவிலிருந்து நீக்கிரோவர் சிலர் தலைநகருக்கு வந்தனர். கன்வென்ஷன் அவர்களை வரவேற்றது. விடுதலையடைந்த நீக்கிரோவர் ஒருவன் 1794 பிப்ரவரி 3-ம் நாள் சட்டசபைக் கமிட்டியின் முன் தோன்றினான். பெரியமன்றம் ஒன்றில் பிரதிநிதிகளும் பார்வையாளர்களும் குழுமியிருந்தனர். கமிட்டியின் தலைவர் நீக்கிரோவனை வரவேற்று அவனுடைய இரு கன்னங்களிலும் முத்தமிட்டார்! அவ்வுருக்கமான காட்சியைக் காணப்பிரதிநிதிகள் பலகையின் மீதேறி நின்றனர். பின்னர் தாமும் தூதுவனைத்தழுவினார். ரோபெஸ்பியர் மேடை மீதேறி, "குடிமக்களின் தலைவரே! நடவடிக்கைகளைப் பார்க்க வந்திருப்போர் காலரியில் வயது மிகுந்த நீக்கிரோ பெண் ஒருவள் அதிக மகிழ்ச்சியின் காரணமாக மூர்ச்சையடைந்தாள்! இந்நிகழ்ச்சியையும் பதிவு செய்து கொள்ளுமாறு குறிப்பெடுப்போருக்கு உத்தரவிடுங்கள்" என்று கேட்டு கொண்டார். பிறகு தலைவர் ஆரவாரத்திடையே எழுந்து, "காலனிகள் உள்பட பிரெஞ்சு நாடுகள் யாவற்றிலும் அடிமை முறை ஒழிக்கப்பட்டதென பிரெஞ்சுப் புரட்சியின் பெயரால் நான் இதோ அறிவிக்கிறேன்" என மொழிந்தார்.

பல்லாயிரம் ஆண்டுகளாக மக்கள் இனம் சம உரிமை வழங்கும் உலகைப்பற்றிக் கனவு கண்டு வந்திருக்கிறது. அக்கனவு நனவாவதன் பொருட்டுப் பலர் புரட்சி செய்தும் போராடியும் வந்துள்ளனர். பலர் அந்த லட்சியத்தின் பொருட்டுத் தம்முயிரைப் பலியிட்டுள்ளனர். இப்போது அது கை கூடி விட்டது எளியவனின் உழைப்பின் பலனை, இனி வலியோன் களவாட முடியாது. பிரெஞ்சு நாட்டில் எத்தகைய பாதுகாப்பும் இன்றி ஆதிக்கச் சக்திகளின் வசம் மக்களின் பெரும் பகுதியினர் அடிமைப்பட்டிருந்த அநீதி ஒழிந்தது.

1789-ல் நடந்த பிரெஞ்சு புரட்சியானது சட்டம், நீதி, குடிமக்களின் உரிமை ஆகிய கருத்துக்களில் மக்களின் சம உரிமைகளை நிலை நாட்டி விட்டது. ஆனால் மக்களின் சமத்துவ நிலைக்கு ஊறு செய்யும் சொத்து என்னும் தனியுரிமை மட்டும் அப்படியே நிலைத்து விட்டது. செல்வர் உண்டு களித்து இன்பத்தில் புரள, வறியர் தம் வறுமையில் வாடினர். பசியால் பரிதவித்த மக்களே இம்மகத்தான புரட்சியைத் தொடங்கினர். அவர்கள் தம் புரட்சியில் வெற்றி பெற்றுச் சட்டப்படிச் சம உரிமை பெற்றனராயினும், பணம் படைத்தோரே வயிறார உண்ண முடிந்தது. “மானிட உரிமைச் சாசனம்” எழுப்பிய உற்சாகம் சிறிது தணிந்ததும், புரட்சி - எழுத்தாளர் இப்பிரச்சினையைக் கிளப்பினர். சொத்துரிமையே நம் இன்னல்களுக்கு காரணம் என்றார் மப்லி பாதிரியார்.

ஒரு சிலர் செல்வம் யாவற்றையும் ஏக போக உரிமையாக வைத்துக் கொண்டு பெரும்பாலோரைப் பட்டினி போட முடியுமானால், அந்தச் சமூகத்தில் சமத்துவம் நிலவுகிறது என்பதெல்லாம் வீண் மயக்கமேயாகும் என்றார் ழாக்ரூ என்னும் மடாதிபதி. மாரா என்னும் புரட்சித்தலைவர் சரிசம நிலைக்கு ஊறு செய்யும் தனிச் சொத்துரிமை மீது

போர் தொடங்கினார். ரபோ சேந்த் எத்தியன் என்பவர் "குரோனீக் தெபாரி" என்ற புரட்சிப் பத்திரிகையில் எழுதும்போது அரசியலில் சரிசமத்துவ உரிமையை அரசாங்கம் ஒழித்துவிட வேண்டுமென வற்புறுத்தினார்.

ஆனால், சொத்துரிமையிலும் சமநிலை இருக்க வேண்டுமென்பது முடியாத காரியமென்பதை மக்கள் விரைவில் உணர்ந்தனர்.

ரூஸ்ஸோ கூட, தம் "சமுதாய ஒப்பந்த"த்தில் சொத்துரிமை தனிநபரின் மூலாதார உரிமையென்றும், சமூகம் அவனுக்கு அதை அளிக்க வேண்டுமென்றும் கூறியிருந்தார். "மானிட உரிமைச் சாசன"ங் கூட எல்லா மக்களுக்கும் உரிய இயற்கை-உரிமைகளுள் சொத்துரிமையின் மீது கை வைக்காமல் அதை அப்படியே விட்டுவிட்டும் சொத்து முறையிலுள்ள கொடுமைகளை மட்டுமே நீக்க வழிதேட வேண்டுமெனப் புரட்சித்தலைவர்கள் மெல்ல மெல்ல ஏற்றுக் கொண்டனர். பிரிஸ்ஸோ என்பவர், "ஒவ்வொருவனையும் தன் உழைப்பின் பலனை அனுபவிக்க விடுவதே நியாயமென்றும், அவ்வாறே தனி உரிமைக்கு ஊக்கம் அளித்தால் தவிர செல்வம், வியாபாரம் பொருள்கள் யாதொன்றும் நாட்டில் தலைகாட்டாது" என்றும் எடுத்துக் காட்டினார்.

இலட்சிய உலகில் வாழ்ந்து வந்த பாரீஸ் நகர மக்கள் மெல்ல மெல்ல விழிப்புற்று நடைமுறை உலகில் கரடு முரடான உண்மைகளை உணர ஆரம்பித்தனர். ரோபெஸ்பியர் 1794-ல் இறந்தார். அவருக்குப்பின் டைரெக்டரேட் ஆட்சியும், நெப்போலியன் ஆட்சியும் இறுதியில் பழைய மன்னராட்சியும் ஒன்றன்பின் ஒன்றாக வந்தன. சாந்தோ தொமிங்கோ என்றும் வளம் மிகுந்த காலனியை அடிமைகளின் சுயஆட்சிக்கு விட்டு விட்டதைப்

பற்றி பிரெஞ்சு அரசாங்கம் வருந்த ஆரம்பித்தது. எப்படியேனும் நீக்கிரோக்களிடமிருந்து அத்தீவைத் திரும்பப் பெற்றுப் பழையபடி அவர்களை அடிமைகளாக்க வேண்டும் என்ற எண்ணம் தலைகாட்டலாயிற்று. நீக்கிரோ ஆட்சியிலும் அத்தீவில் சுதந்திரமும் சமத்துவமும் நிலை பெறவில்லை.

சுதந்திரம்பெற்ற அடிமைகளிடையே மீண்டும் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படலாயின. தொஸ்ஸாலின் நீக்கிரோவின் பேரரசன் ஆனான். பிரான்ஸில் பூர்போன் மன்னர் திரும்பி வந்த சமயத்தில், அங்கேயும் என்ரி என்னும் நீக்கிரோ மன்னன் மக்களை வருத்தித் தான் பல அரண்மனைகள் கட்டிக்கொண்டு சுக போகத்தில் ஆழ்ந்தான்.

ஆயினும் பழைய சமத்துவ - ஆர்வம் அடியோடு மறைந்து விடவில்லை. புரட்சி ஆர்வம் தணிந்து வெகுகாலம் ஆனபின்பும் நில பதிவாளராக இருந்த கிராக்கஸ் பாபெவ் என்பவன் சொத்திலும் சம உரிமையை நிலை நாட்டச் சதி செய்தான். தனிச் சொத்துக்களை எல்லாம் அரசாங்கச் சொத்துடன் ஒன்று சேர்த்து விட்டு, பொதுப் பண்டக சாலையிலிருந்து ஒவ்வொரு குடிமகனுக்கும் தேவையான உணவு, உடை, உறையுள் முதலியனவும் அளிக்க வேண்டுமென்பதே அவன் கருத்து. அவன் சதி முயற்சி நாடெங்கும் பரவியது. அவனுடைய ஆட்கள் பாரிஸில் வறுமைப்பட்டு அல்லலுறும் மக்களிடையே இரகசியமாக வேலை செய்தனர். ஆயுதப் பயிற்சி பெற்ற 7,000 ஆட்கள் தயாராக இருந்தனர். அறிவிப்புக் கிடைத்ததும் அவர்கள் பொதுக் கட்டிடங்களைக் கைப்பற்றி எதிர்ப்போரை அடக்கிவிட வேண்டுமென்பதே திட்டம்.

பிரான்ஸை ஆண்டு வந்த டைரக்டர்களுக்கு இத்திட்டம் தெரிந்து விட்டது. எந்த நடவடிக்கையும் எடுக்குமுன் பாபெவ்வையும் ஏனைய சதிகாரத்தலைவர்களையும் அவர்கள் கைது செய்தனர். சமூக-சமத்துவ உரிமைக்காகப்

பாடுபட்டு மாண்ட பலரைப் போலவே பாபெவ்வும் தூக்குமேடையேறினான். இத்தகைய வரலாற்றுப் பின்னனியில், நாம் மனித உரிமைகளைப் பற்றிய முக்கியத்துவத்தை உணருகிறோம்.

## மனித உரிமைகள்

மனிதர் அடக்குமுறையையும், வேறுபாடுகளையும் எதிர்க்கும் போது நீதி, சமத்துவம், சுதந்திரம் ஆகிய இலட்சியங்களை எடுத்துக் கூறுவர். சமயம், தத்துவம் ஆகியவற்றின் தீர்க்க தரிசிகளும் ஆன்மீகத் தலைவர்களும் மனித குல சகோரத்துவம் பற்றிப் போதித்துள்ளனர். நாளடைவில் முற்போக்குச் சமயங்கள் தம்விதிகள், சட்டமுறைகள், அரசியல், சமூக நிறுவனங்கள் ஆகியவற்றில் சில உரிமைகளை ஓரளவாவது போற்றும் உறுதிப்பாடுகளை இணைத்துள்ளன. ஆயினும் 20-ஆம் நூற்றாண்டில் வல்லாட்சிகள் இவ்வுரிமை அமைப்புகளை அழிக்கும் வகையில் அச்சுறுத்தின. இரண்டாம் உலகப்போருக்கு பின் ஏராளமான உயிர்களைக் கொன்ற அத்துயர நிகழ்ச்சியின் விளைவாக ஐ.நா.பொதுப் பேரவை டிசம்பர் 10, 1948-இல் “எல்லா இனங்களுக்கும் நாடுகளுக்கும் பொதுச் சாதனைத்தரமாக” அமையும் மனித உரிமைகளின் அனைத்துலக அறிக்கையை அறிவித்தது. ஆங்கிலேய, அமெரிக்க உரிமைகளின் மசோதாக்கள், அமெரிக்க சுதந்திர அறிக்கை 1789ஆம் ஆண்டின் பிரெஞ்சு மனித உரிமைகளின் அறிக்கை, போன்ற முந்திய ஆவணங்கள் 30 விதிகள் கொண்ட சுருக்கமான ஆவணமாகிய இந்த அறிக்கைக்கு பெருமளவு முன்னோடியாக இருந்தன.[16] இவ்வறிக்கையின்படி மனிதர் எல்லோரும் சுதந்திரத்துடனும் சம மாண்புடனும், உரிமைகளுடனும் பிறக்கின்றனர். ஒவ்வொருவருக்கும் வாழும் உரிமை உண்டு. எவரும் அடிமையாக இருக்கக்கூடாது. சித்திரவதைப் படக்கூடாது.

சட்டத்தின் முன் எல்லோரும், சமம். எல்லோருக்கம் சட்டப் பாதுகாப்பு உண்டு; ஒவ்வொருவருக்கும் எண்ண, மன, சமய கருத்துச் சுதந்திரமுண்டு. அமைதியாகக் கூடவும் சங்கங்களில் சேரவும் உரிமை உண்டு; உழைப்பதற்கு, நீதியும் ஏற்புடையதுமான வேலைச் சூழ்நிலையும், சமூகப் பாதுகாப்பும் பெறும் உரிமை உண்டு. தொழிற் சங்கங்களை அமைக்கவும், அவற்றில் சேரவும் உரிமை உண்டு. இளைப்பாற்றல், பொழுது போக்கு, ஊதியத்துடன் விடுறை, போதிய வாழ்க்கைத் தரம், மருத்துவ உதவி, கல்வி, ஆகியவை பெறும் உரிமை உண்டு. தாய்க்கும் சேய்க்கும் தனி உதவி, அனைவரும் சமுதாயத்திற்குக் கடமைப்பட்டவர்கள்.

மனித உரிமைகளில் அனைத்துலக அறிக்கை மிகப் பொதுவாக அமைந்துள்ளதெனக்குறை கூறுகின்றனர். ஆனால் 1966 இல் பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகளின் பன்னாட்டு ஒப்பந்தம், மனித, அரசியல் உரிமைகளின் ஒப்பந்தம் எனும் இரு பன்னாட்டு ஒப்பந்தங்களை ஐ.நா. நிறைவேற்றியது. இவற்றை 60-க்கு மேற்பட்ட நாடுகள் ஏற்றுக்கொண்டன. 1976-இல் இவை நடைமுறைக்கு வந்தன. கீழ்க்கண்ட உரிமைகளை இவை எடுத்துக் கூறின.

எல்லா நாடுகளும் விடுதலை பெறவும், தம் இயற்கைச் செல்வத்தையும், வளங்களையும் விருப்பம்போல் பயன்படுத்தவும் தம் அரசியல் நிலையை நிர்ணயிக்கவும், தம் பொருளாதார, சமூக, பண்பாட்டு வளர்ச்சிக்கு வழி வகுக்கவும் உரிமை பெற்றுள்ளன. இவை ஆண், பெண் உரிமைகளின் சமத்துவத்தையும் நாட்டின் சடங்குகளுக்குட்பட்டு வேலை நிறுத்தம் செய்யும் உரிமையையும், பண்பாட்டு வாழ்க்கையில் பங்கு பெற்று அறிவியல் வளர்ச்சியின் பயன்களைத் துய்க்கும் உரிமையையும் வலியுறுத்துகின்றன.[17]

ஆனால் மனித உரிமைகள் மனித சமூகங்களின் வளர்ச்சிக்கேற்ப அமைய வேண்டும். யுனெஸ்கோவின் பொது இயக்குனர் கூறிய "மனித உரிமைகளின் மூன்றாம் தலைமுறை" உருவாகி வருவதை இன்று காண்கிறோம். வளர்ச்சி பெறும் உரிமை, உடல் நலத்துக்கேற்ற, சமநிலை சூழல் அமைய, செல்வத்தைத் துய்க்கும் உரிமை ஆகியவை இவற்றுள் அடங்கும்.[18] தனிமனிதர் அரசுகள், பிறபொது தனிநிறுவனங்கள் ஆகியோரின் பொது முயற்சியால் மட்டும் இந்த ஒருமைப் பாட்டு உரிமைகளைப் பெற முடியும்.

## அடிக்குறிப்புகளும் சான்றுகளும்


1. Universal Declaration of Human Rights, UN Year Book 1948; UB Bulletin 1948 and 1949; R. Cassin, La Declaration Universelle des Droit de ஷL' Homme et samise enoeuvre, Paris 1956; The UN and the UN Human Rights New York 1968.

2. General Assembly Resolution 2200 AC XXI of 16 December 1966. Entry into force: 3 January 1976 in accordance with Article 27; UN Year Book, 1966 149-423.

3. General Assembly Resolution 2200 A XXI of 16 December 1966, Entry into force 23 March 1976 in accordance with Article 49; UN Year Book 1966; 356-359.

4. General Assembly Resolution 2200 A XXI of 16 December 1966, Entry into force 23 March 1976 in accordance with Article 9.

5. Human Rights Teheran proclamation 1968. UN Year Book 1968.

6. Thomas Paine, **Rights of Man 42** [E. Rhys ed. 1915).

7. The Complete Works of Thomas Paine (Fonered 1945)

8. Commager, **Documents of American History.**

9. Wood, The Creation of the American Republic (1969) Bailyn, The Ideological Origins of the American Revolution (1967); for its text see Commager, **op cit.**

10. Rousseau, The Social Contract, **Great Political Thinkers Plato to the Present** by William Ebenstein (Calcutta Oxford and IBH Publishing Co. 1969) 441-463.

11. **Ibid.,**

12. American Declaration of Independence.

13. Declaration of the Rights of Man and of Citizens Preamble, Art I (Fr. 1789).

14. **Ibid.**

15. Woodrow Wilson, "Edmund Burke and the French Revolution" **Century Magazine,** LXII (September 1901) 874-992. Wilson (then professor of Jurisprudence and politics, Princeton University) states first that the Revolution "the salvation" of France, and perhaps of Europe too" 784.

16. 3(1) U.N. GAORC. 3 ($88^{th}$- $180^{th}$ mig) at 26-980 (Third Committee Records); Johannes Morsink, "The Philosophy of the Universal Declaration" **Human Rights Quarterly,** Vol. 6, No. 3 Aug. 1984; 309-334.

17. General Assembly Resolution 1803 (XVII) of 14 December 1962. "Permanent Sovereignty over natural resources."

18. General Assembly Resolutions 523 (VI) of 12 January 1952, 626 (VII) of 21 December 1952; 1314 (XIII) of 12 December 1958; 1515 (XV) of 15 December 1960 and 1803 (XVII) of December 1962, **Human Rights, International Instruments** UN New York 1983, 20-21.

# உ. உலகின் மகா சாசனம்

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

- திருக்குறள், 972

ஐக்கிய நாட்டு சாசனப்படி "அடிப்படை மனித உரிமைகளில், மனிதன் உயர்விலும், கண்ணியத்திலும், பெரிய மற்றும் சிறிய நாடுகளைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள் அனைவருக்கும் சம உரிமைகள் உண்டு என்பதில் மீண்டும் நம்பிக்கை கொள்கிறோம்." 1789 ஆம் ஆண்டு ஆரம்பத்திலேயே, மற்றவர்களுக்குத் தீங்கைத் தருகின்ற அளவுக்கு உரிமை போகக்கூடாது என Declaration desdroits de L'homme et dn eitoyen அறிவித்தது. 1948 ஆம் ஆண்டைய மனித உரிமைகள் குறித்த சர்வதேசப் பிரகடனமானது தனி மனிதனின் அடிப்படை உரிமைகளைத் தெரிவிப்பதோடு, சமூகக் கடமைகள் என்ற வகையில் அந்த உரிமைகளின் வரையறை குறித்தும் பேசுகிறது (விதி 29) அனைத்துலக அறிக்கையின் அறுபதாவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் 2008 ஆண்டில் மனித உரிமைகள் குறித்த அடிப்படை கோட்பாடுகளையும் வல்லுணர்களின் சான்றிதழ்களையும் கண்ணோட்டமிட வேண்டும். "மனிதர்கள் பிறப்பிலும் வாழ்விலும் சுதந்திரமான சமத்தவ உரிமைகளை உடையவர்களே." மனித உரிமைகள் மற்றும் குடிமக்கள் குறித்த பிரகடனம் (1789) இந்த சொற்களோடுதான் தொடங்குகிறது. சமத்துவம் மற்றும் சமநீதி பற்றிய முழக்கங்கள் கல்லிலும் வெண்கலத்திலும் பொறிக்கப்பட்டுள்ளன. அமெரிக்க உயர் நீதிமன்ற கட்டிடத்தின் நுழைவாயிலின் முகப்பு முகட்டில் "சட்டத்தின்

முன் சமநீதி" என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

## மனித உரிமைகளும் அமைதியும்

ஐக்கிய நாடுகளின் சாசனங்கள் திரும்பத்திரும்ப வலியுறுத்துவது இதுதான். "மனித உரிமைகளை முழுமையாகப் பாதுகாக்க சமாதானம்தான் அடிப்படையான நிபந்தனையாகும். போர் அவைகளுக்கு எதிரானதாகும்."[1]

சமாதானமாக வாழ உரிமை என்பது, மனித உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை உள்ளடக்கிய முறையை ஒன்றாகச் சேர்த்த அடிப்படையான மற்றும் முக்கிய உரிமைகளைக் கொண்டது. சமாதானமாக வாழ உரிமை என்பது உண்மையில் வாழ்க்கைக்கு உரிமை என்பதன் எதார்த்தமாகும். மற்ற பிற உரிமைகளுக்கெல்லாம் இது முதல் இடத்தில் வைத்து பாதுகாக்கப்பட வேண்டியுள்ளது. சமாதானமாக வாழ உரிமை என்பது தனிமனிதர் என்ற வகையில் மனிதனுக்குறிய உரிமையாகும். இது நாடுகளுக்கும் பொருந்தும். மற்றும் இது மனித இனம் முழுமைக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டியதாகும். இந்த உரிமையை வாழ்க்கையின் மனிதனின் உயர்ந்த மதிப்பை சமாதானமாகவும், பாதுகாப்பாகவும் வாழ உள்ள மிக உயர்ந்த மனித உரிமையை மறுப்பது போரேயாகும்.

அமைதியும் மனித உரிமைகளும் அடிப்படையாகவே இணைந்தவை என்பதை உலகமெங்கிலும் உள்ள அதிகமான மக்கள் உணர்கிறார்கள். அமைதியாக வாழும் உரிமை ஓர் அடிப்படை மனித உரிமையாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்காக அவர்கள் தங்களது குரல்களை எழுப்புகிறார்கள்.

ஐ.நா. பொதுச் சபையில் உரிமைகளும் கடமைகளும், அதிகார பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அறிவிக்கப்பட்டது. குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். இயற்கையாகவோ, அறிவிக்கப்பட்டதற்கும், உண்மையான

நடைமுறைக்கும் இடைப்பட்ட தூரம், பல்வேறு சமூக அமைப்புகளது உண்மையான சூழ்நிலையை வெளிப்படுத்துகிறது. உரிமைகள் மற்றும் கடமைகளின் எதார்த்தம் சிலவற்றில் இடையூறாகவும் மற்றும் சிலவற்றில் ஆர்வமூட்டுவதாகவும் உள்ளது. ஆனால் அவைகளது அறிவிப்பும் சட்ட பூர்வ அங்கீகாரமுமே ஒருபடி முற்போக்கானது என்பது தெளிவு. இது சமாதானம் மற்றும் மனித உரிமைகளை மதித்தல், இன்னும் பிற மனிதாபிமானவற்றை மதித்தல் போன்ற லட்சியங்களைப் பரப்பும் சர்வதேச முயற்சிகளுக்கு அடிப்படையாக இருக்கமுடியும் இருக்க வேண்டும்.

## மனித உரிமைகளின் அனைத்துலக அறிக்கை

மனித உரிமைகளின் அனைத்துலக அறிக்கை 1948-இல் பாரிஸில் ஏற்றுக்கொள்ளப்பட்டு 2008ஆம் ஆண்டுடன் 60 ஆண்டுகள் நிறைவுறுகின்றன

“மக்கள் எல்லோரும், எல்லா நாடுகளும் எய்த வேண்டிய பொதுவான நியதியாக” இவை அறிவிக்கப் பெற்றன.[2]

இந்த அறிக்கையை உலக நாடுகள் அனைத்தும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. எல்லா நாடுகளிலும் மனித உரிமைகளின் முன்மாதிரியாக இவ் அறிக்கை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதிலிருந்தே இவ் அறிக்கையின் செல்வாக்கையும் முக்கியத்துவத்தையும் உணரலாம்.

மனித உரிமைகள் பற்றிய ஐ.நா. ஆணையம் (U.N. Human Rights Commission) ஒன்று 1945இல் நிறுவப் பெற்றது. மனித உரிமைகளையும், சுதந்திரங்களையும், திட்டவட்டமாக வரையறுத்தக்கூறும் “மனித உரிமைகளின் பன்னாட்டு மசோதா” (International Bill of Human Rights) ஒன்றை வரையும் பொறுப்பு இந்த ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

| பன்னாட்டு மனித உரிமைகள் அறிக்கை<br>ஐ.நா.வில் மனித உரிமைகள்<br>ஆணையத்தின் பணிகள்[3] | | | |
|---|---|---|---|
| வ.எண் | உறுப்பினர் நாடு | உறுப்பினர்/ பிரதிநிதியின் பெயர் | பணிகள்/பங்களிப்பு |
| 1. | இந்தியா | டாக்டர் சர்.ஏ. இராமசாமி முதலியார் | நீதிக்கட்சியின் தலைவர் Justice இதழின் ஆசிரியர் 1945-ஆம் ஆண்டு இந்தியாவின் சார்பாக சான்பிரான்சிஸ்கோ மாநாட்டின் பிரதிநிதி தலைவர் ஐ.நா. சாசனத்தில் கையெழுத்திட்டார். ஏனைய குழு உறுப்பினர்கள் சர்.வி.டி.கிருஷ்ணமாச்சாரி, சர் ஃபெரோஸ்கான் நூன் |
| | | | டாக்டர் ஏ.ஆர். முதலியார் அவர்கள் ஐ.நா.வின் சமூக பொருளாதார சபையின் (Ecosoc) தலைவர். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்திற்கான வழிகாட்டும் நெறிமுறைகளை வகுத்து அளித்தவர். |

| | | | |
|---|---|---|---|
| 2. | இந்தியா | எம்.ஆர்.மசானி | இந்திய அரசின் சார்பாக மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர், மிகச்சிறந்த அறிஞர், பன்னாட்டு மனித உரிமைகள் அறிக்கை தயார் செய்வதற்கு பேருதவி செய்த அறிஞர் |
| 3. | இந்தியா | திருமதி ஹான்ஸ் மேத்தா | ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் பெண் உறுப்பினர், பெண் உரிமைகளை பன்னாட்டு அறிக்கையில் இடம் பெறச் செய்தவர். தீவிரமான உறுப்பினர். ஆதலின் அரசால் திரும்பி அழைக்கப்பட்டவர். |
| 4. | பிரான்ஸ் | பேராசிரியர் ரெனி காஸின் | சட்டவியல் நிபுணர், மனிதகுல அறிக்கையை முதலில் பிரெஞ்சு மொழியில் எழுதியவர். சர்வதேச சங்கத்தில் இடம் பெற்றவர். 1969-ல் பன்னாட்டு மனித குல அறிக்கையை தயாரித்ததற்காக அமைதிக்கான நோபெல் பரிசு பெற்றவர். |

| | | | |
|---|---|---|---|
| 5. | கனடா | ஜான் பி.ஹம்பரே | பன்னாட்டு மனித குல அறிக்கையை முதலில் தயாரித்தவர். ஐ.நா.வின் மனித உரிமைகள் இயக்ககத்தின் முதல் இயக்குநர். |
| 6. | பனாமா | ரிக்கார்டோ ஜே.ஆல்பரோ | மனித உரிமை அறிக்கையில் அரசியல், சமூக, மனிதாபிமான மற்றும் பண்பாட்டு, கலாச்சார உரிமைகளை இடம் பெறச் செய்ய வலியுறுத்தியவர். |
| 7. | பிலிப்பைன்ஸ் | ஜெனரல் கார்லோஸ் ரோமுலோ | பத்திரிக்கையாளர், பத்திரிக்கை ஆசிரியர், செய்தி அறியும் உரிமை, பத்திரிக்கை சுதந்திரம் குறித்த அவரது கருத்துக்கள் அனைவரையும் கவர்ந்தது. |
| 8. | லெபனான் | சார்லஸ் மாலிக் | மனித உரிமைகள் குறித்த தத்துவங்களில் விற்பன்னர், சிறந்த சிந்தனையாளர், மனித உரிமைகளின் அறிக்கையை ஆணையத்தின் ஒப்புதலைப் பெற்று வெற்றியடைந்தார். ஒருவர் மற்றவரின் உரிமையை மதிக்க வேண்டும் என்ற கோட்பாட்டை வலியுறுத்தினார். |

| | | | |
|---|---|---|---|
| 9. | இங்கிலாந்து (U.K) | பிலிப் ஜே. நோயல் பேக்கர் | ஆங்கில நாடாளுமன்ற உறுப்பினர், ராஜதந்திரி 1945- டாக்டர் ஏ.ஆர். முதலியாரோடு இந்தியாவின் சார்பாக சான்பிரான்ஸ்சிஸ்கோ மாநாட்டில் கலந்து கொண்டவர். ஐ.நா.சமூக பொருளாதார சபையின் உறுப்பினர். தூதுக்குழு உறுப்பினர்கள் அரசின் கட்டுப்பாடின்றி சுதந்திரமாக கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும் என வலியுறுத்தினார். 1959-ல் அமைதிக்கான நோபெல் பரிசு பெற்றவர். |
| 10. | இங்கிலாந்து (UK) | சார்லஸ் டியூக் | பின்னாளில் அரசியல் பிரதிநிதி அரசகுடும்பத்தைச் சேர்ந்தவரானார். |
| 11. | டென்மார்க் | திருமதி போடில் பெக்ட்ரப் | சமூக பொருளாதார சபையின் தலைவராக (1946) பணியாற்றினார். இக்கனமே பெண் உரிமைகள் குறித்த விவாதத்தை விரிவுபடுத்த வேண்டும் என வலியுறுத்தினார். |
| 12. | ஐக்கியஅமெரிக்கா (U.S.A) | திருமதி ரூஸ்வெல்ட் அமெரிக்க குடியரசுத்தலைவர் பிராங்லின் ரூஸ்வெல்ட்டின் துணைவியார் | மனித உரிமைகள் ஆணையம் முதல் கூட்டத் தொடர் ஜனவரி 27 முதல் பிப்ரவரி 10, 1947 வரை நடைபெற்றது. திருமதி ரூஸ்வெல்ட் ஆணையத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்பு 1951 வரை சிறப்பாகப் பணியாற்றினார். |

| | | | |
|---|---|---|---|
| 13. | ஐக்கிய அமெரிக்கா (U.S.A) | திருமதி ஆஸ்வால்டு லார்ட் | மனித உரிமைகள் ஆணையத்தின் துணைத்தலைவர் |
| 14. | சீனக்குடியரசு | பி.சி. சாங்க் | சீனக்குடியரசின் தத்துவங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தவர், "எளிமையான சொற்றொடர்களில் வரைவு" செய்ய பேருதவியாய் இருந்தவர் |
| 15. | பெல்ஜியம் | பேராசிரியர் பெர்னாண்ட் டே ஹெளஸ்ஸி | மிகச்சிறந்த சொற்பொழிவாளர் |
| 16. | சிலி | பெலிக்ஸ் நிய்ட்டோ டேல் ரியோ | சிலி நாட்டின் அரசியல் பிரதிநிதியாகப் பணியாற்றினார். |
| 17. | எகிப்து | உஸ்மர் எபிட் | நாட்டின் அரசியல் பிரதிநிதியாகப் பணியாற்றினார். |
| 18. | ஈரான் | செஸ்சேமி கானி | நாட்டின் அரசியல் பிரதிநிதியாகப் பணியாற்றினார். |
| 19. | உருகுவே | ஜோய் எ.மோரா | நாட்டின் அரசியல் பிரதிநிதியாகப் பணியாற்றினார். |
| 20. | சோவியத் யூனியன் | அலெக்சாண்டர் போகோ மோலோவ் | வாலண்ட்டின் டிப்லிகோவ் (மாற்று உறுப்பினர்) சோசலிஸக் கோட்பாடுகளையும் பெண்ணுரிமைகளையும் அதிகமாக வலியுறுத்தினர். |

| | | | |
|---|---|---|---|
| 21 | பைலோரஸியா | டி. காமின்ஸ்க்கே (மற்றும்) ஜி.எல் ஸ்டாரிக் | சோசலிஸக் கோட்பாடுகளையும், பெண்ணுரிமைகளையும் அதிகமாக வலியுறுத்தினர். |
| 22. | உக்ரைன் (மற்றும்) யூகோஸ்லோவியா | வில்டிஸ்லாவ் (மற்றும்) ரிப்னிக்கர் | பத்திரிகை ஆசிரியர்கள் |
| 23. | சிலி | ஹெர்மன் சாண்டா குருஸ் | புதிய உறுப்பினர், மனித உரிமை வரைவுக்குழுவின் உறுப்பினர். |
| 24. | சிலி | எட்டார்டோ ஃரே (மற்றும்) சல்வேடோர் அலெண்டே | சிலி நாட்டின் தீவிர உறுப்பினர்கள், பின்னாளில் அந்நாட்டின் அதிபர்கள் |
| 25. | சோவியத் யூனியன் | பேராசிரியர் விலாடிமிர் கோரட்ஸ்கி | சிறந்த சட்ட வல்லுனர், பின்னாளில் சர்வதேச நீதிமன்றத்தின் நீதிபதி, சோவியத் கோட்பாட்டிற்கு உடன்படாத சொற்றொடர்களைக் கடுமையாகச் சாடியவர். உள்நாட்டின் இறைமை அதிகாரத்தைத் தாண்டிய மனித உரிமைகளை எதிர்த்து எச்சரித்தனர். |

| | | | |
|---|---|---|---|
| 26. | சோவியத் யூனியன் | போகோ மோலோவ் (மாற்று உறுப்பினர்) | |
| 27. | இங்கிலாந்து | டியூகெஸ்ட்டன பிரபு<br>ஜியோப்ரே வில்சன் (மாற்று உறுப்பினர்) | ஆணையத்தில் பணியாற்ற இயலவில்லை. இவரின் பணி சிறப்பாக அமைந்திருந்தது |
| 28. | இங்கிலாந்து | கொலோனல், கோட்ங்சன் (மாற்று உறுப்பினர்)<br>ஆர்.எச்.ஹாரி | பின்னாளில் ஐ.நா.வின் பன்னாட்டு சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய ஒப்பந்தத்தை வரைவு செய்ய துணை நின்றவர்கள். |
| 29. | கியூபா | கை பெரெஸ் சிஸ்னெரோஸ் | கடைசி முயற்சியாக மனித உரிமைகள் ஆணைய முயற்சியால் ஏற்பட்ட வரைவுகளை தள்ளிவிட்டு, முன்பே இருந்த உரிமைகளும் (அமெரிக்க நாடுகளின் நிறுவனம் - பொகோடாவில் - அனுசரித்த) உரிமைகளும் கடமைகளும் குறித்த அமெரிக்க அறிக்கையை நடைமுறைப்படுத்த முயற்சித்தவர். ரோமன் கத்தோலிக்க சமூக தத்துவங்களை முன்னிருத்தி விவாதித்தவர். இதை கத்தோலிக்க மதச்சபையினரும், பொதுவுடைமைக் கட்சியினரும் எதிர்த்தனர். |

| | | | |
|---|---|---|---|
| 30. | போலந்து | திருமதி காலினோவ்ஸ்கா | அனைத்துலக மனித உரிமை அறிக்கையை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தினார். |
| 31. | நெதர்லாந்து | பாதிரியார் பிவேபோர்ட் | மனிதன் தெய்வத் தன்மையுடையவன் சாகாவரம் பெற்ற விதியை உடையவன் என்ற திருத்தத்தை கொண்டு வந்தார். முயற்சி பயனளிக்கவில்லை, தனது திருத்தத்தை திரும்பப் பெற்றுக் கொண்டார். |
| 32. | கனடா | டானா வில்கிரஸ் | வெளிவிவகாரத்தின் மூத்த அரசியல் தந்திரி |
| 33. | கனடா | லெஸ்ட்டர் பியர்சன் | வரலாற்றுத்துறை பேராசிரியர், ஆக்ஸ்போர்டு மற்றும் டோரண்டோ பல்கலைக்கழகங்களில் கனடாவின் பங்களிப்பு குறித்து மிகச் சிறந்த கண்ணோட்டத்தோடு விவாதித்தார். ஓட்டெடுப்பில் கலந்து கொண்டார். பின்னாளில் கனடாவின் பிரதமராக பணியாற்றினார். 1957–ல் அமைதிக்கான நோபெல் பரிசு பெற்றார். நேட்டோவின் தலைவராக பணியாற்றினார். |

இந்த மசோதாவின் முற்பகுதியைத்தான் "மனித உரிமைகளின் அனைத்துலக அறிக்கை" (Universal Declaration of Human Rights) என்ற பெயரில் 1948 டிசம்பர் 10இல் ஐ.நா. பேரவை ஒரு மனதாக ஏற்றுக்கொண்டது.

பன்னாட்டு மனித உரிமைகள் மசோதாவிற்கான நோக்கங்கள், கருத்துக்களுக்கான விவாதங்களை பிராங்லின் ரூஸ்வெல்ட்டின் துணைவியார் டிலானோ ரூஸ்வெல்ட் விவாதங்களை தொடங்கி வைத்தார். இந்தியாவின் சார்பாக கலந்து கொண்ட பேரறிஞர் எம்.ஆர்.மசானி மற்றும் திருமதி ஹான்ஸ் மேத்தா ஆகியோர் உலக நாடுகளின் சார்பாக உடன்பாடான மனித உரிமைகளைத் தெளிவாக எடுத்துரைத்தனர்.

பொதுவாக, அமெரிக்க ஐரோப்பிய உறுப்பினர்களுக்கும், ஆசிய ஆப்பிரிக்க உறுப்பினர்களுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் நிலவியது. ஆனாலும், ஆசிய ஆப்பிரிக்க நாடுகளின் பிரதிநிதிகள் தங்களுடைய வரலாற்றுப் பின்னனியோடு கூடிய கோட்பாடுகளையும் கருத்துக்களையும் வலியுறுத்தி சிறுபான்மையோர் உரிமைகள், பெண்களின் உரிமைகள் குறித்து அதிகம் வாதாடி வெற்றி பெற்றனர் என்றே கூற வேண்டும். இன ஒதுக்கல், இனப்படுகொலை, நாசிஸம், பாசிஸம், செய்தி அறியும் உரிமை பற்றிய விவாதங்கள் நடைபெற்றன.

இரண்டாம் உலகப்போர் முடிந்த சூழல் மனித உரிமைகள் விவாதத்தை துரிதப்படுத்துவதற்கு ஏதுவாக இருந்தாலும், நாடுகளின் நிலைமை இத்தகைய அமைதியான போக்குக்கு உகந்ததாக இல்லை. மக்களோடு நாடுகளோடு நேரிடையான தொடர்புடைய எந்த நிறுவனமும் அந்த உணர்வின் பாதிப்புக்கு ஆட்படவே வேண்டியிருந்தது. சிறுபான்மை மக்களின் உணர்ச்சி மிகவும் புண்பட்டு இருந்தது.

உலகெங்கும் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு இருந்தனர். அரசியல் விழிப்புடையவர்களிடையேயும் இராஜ தந்திரிகள், உலகத் தலைவர்கள் சிந்தனையாளர்களிடையேயும், மனித உரிமைகள் குறித்த மிகுந்த ஆழ்ந்த சிந்தனையைத் தோற்றுவித்தது. பெர்ட்ரண்ட்ரஸ்ஸல், எச்.ஜி.வெல்ஸ், பெர்னாட் ஷா, காந்தியடிகள், ஜவஹர்லால் நேரு, ஜெனரல் ஸ்மட்ஸ், அல்டஸ் ஹக்சிலி இன்னும் பலர் மனித உரிமைகள் விவாதம் குறித்து தங்களின் கருத்துக்களை வெளியிட்டனர்.

மனித உரிமைகள் வரைவுக்குழு எண்பத்தோறு நீண்ட கூட்டத்தை நடத்த வேண்டியிருந்தது. நூற்றி அறுபத்து எட்டு தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன. ஐ.நா.வின் உறுப்பினரான அனைத்து நாட்டின் ஐம்பத்தொன்பது தூதுக்குழுக்களும் பொது விவாதத்தில் கலந்து கொண்டன.

மிகுந்த எதிர்பார்ப்புக்கிடையேயும், இடர்பாடுகளுக்கு இடையேயும், மனித குலத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பணிமுடிந்து ஐ.நா.வின் பொதுச்சபையின் ஓட்டெடுப்பிற்கு தயார் நிலையில் இருந்தது.

டிசம்பர் 10, 1948 நல்லிரவு, ஐ.நா.வின் பொதுச்சபையில் உறுப்பினரான ஆறு பொது உடமை நாடுகளும் மற்றும் சவூதி அரேபியா, தென் ஆப்பிரிக்கா ஆகிய எட்டு நாடுகளும் ஓட்டெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. ஏனைய உறுப்பு நாடுகள் ஓட்டெடுப்பில் கலந்து கொண்டு அனைத்துலக மனித உரிமை அறிக்கைக்கு ஆதரவாக ஓட்டு செய்தனர். மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் திருமதி டிலானோ ரூஸ்வெல்ட் தனது உரையில் இது பன்னாட்டு மனித குலத்தின் மகாசாசனம் ஆகும் என கூறி மகிழ்ந்தார்.

அந்தச் சமயத்தில் ஐ.நா.வின் உறுப்பாக இருந்திராத நாடுகளும் இந்த அறிக்கையை ஏற்றுக் கொண்டுள்ளன.

பலநாட்டு தேசிய அரசியலமைப்புகளிலும் மற்றப் பன்னாட்டு ஆவணங்களிலும் இவ்வறிக்கையின் பகுதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவ்வறிக்கையில் கண்டுள்ள கடமைப் பொறுப்புகளைப் பிற நாடுகள் மீறும்பொழுது, அந்நாடுகளைக் கண்டிப்பதற்கு இவ்வறிக்கையின் துணையை நாட அரசுகள் தயங்குவதில்லை.[4] ஐ.நா. உறுப்பு நாடுகள் ஏற்றுக் கொண்டிருந்த புதிய ஐ.நா. உடன்படிக்கையில் இந்த அறிக்கையின் பல பகுதிகள் இடம் பெற்றுள்ளன.

குடியேற்ற ஆதிக்கத்தில் அவதியுற்ற கோடிக்கணக்கான மக்களுக்கு விடுதலை வேட்கையினையும் போராட்ட உணர்வினையும் இந்த அறிக்கையும், ஐ.நா. சாசனமும் ஊட்டின. மனித உரிமைகளை உலகலாவியதாக அமைத்தது எத்துணை நியாயமானதென்பதை ஒடுக்கப்பட்ட மக்களின் சுதந்திரப் போராட்டம் உணர்த்தியது.

மனித உரிமைகளின் அறிக்கையானது தனி மனிதனின் அடிப்படை உரிமைகளைத் தெரிவிப்பதோடு சமூகக் கடமைகள் என்ற வகையில் அந்த உரிமைகளின் வரையறை குறித்தும் பேசுகிறது. (விதி- 29).

உரிமைகளையும் சுதந்திரங்களையும் உறுதியான சமூகச் சூழலில்தான் அனுபவிக்க முடியும். சுதந்திரம் என்பதும் மனக்கண்ணில் தோன்றுவதன்று- அது சமூக வெற்றிடத்தில் இருப்பதுமன்று.

## சுதந்திரமும் மனித உரிமைகளும்

சுதந்திரத்தைக் காப்பதற்காகப் பன்னாட்டுச் சமுதாயமும், அடிமை முறையினையும் மற்றும் இது போன்ற நிறுவனங்களையும், பழக்கங்களையும் தடை செய்திருக்கிறது.

எண்ணற்ற பன்னாட்டு உடன்படிக்கையிலும் இக்கருத்து வலியுறுத்தப்பெற்றுள்ளது. இவற்றுள் 1926ஆம்ஆண்டில் நடந்த அடிமை முறைப்பற்றிய மாநாடும்.[5] உரிமையியல் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்து 1966இல் நடந்த மாநாடும் குறிப்பிடத்தக்கவை. தனிநபர் சுதந்திரம் என்ற பெயரில் எவரொவருவரும் தான் அடிமையாவதற்குத் தனக்கு உரிமை உண்டென வாதிடுவார்களாயின், அவர்களுடைய உரிமையை இது பறிக்காது. எவரேனும் அத்தகைய உரிமையை பயன்படுத்திக் கொள்ள விரும்பினால் அதற்குத் தடையேதுமில்லை. தான் விரும்பும் நேரத்தில் தன் சுதந்திரத்தை மீட்டுக்கொள்ள வழி இருக்குமானால் அவர் அவ்விதம் செய்யலாம். அனால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்கள் அவ்விதம் செய்ய இயலுவதில்லை.

19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரெஞ்சுச் சிந்தனையாளர் ஒருவர் கூறியது இங்கு சிந்திக்கத்தக்கது. "வலியவனுக்கும், இளைத்தவனுக்குமிடையில் சுதந்திரம் அடங்கியொடுங்குகிறது. சட்டம் தான் விடுதலை செய்கிறது"[6] என்ற கருத்தைச் சுதந்திரக் கோட்பாட்டாளர்கள் சிந்திக்க வேண்டும்.

சட்டத்தை நாம் எப்பொழுதும் அவநம்பிக்கையுடன் நோக்குகின்றோம். அடிமையாய் இருப்பதற்கும், கல்வியை மறுப்பதற்கும், குற்றஞ்சாட்டப்பட்டால் வழக்கறிஞர் வைத்து வாதாடமலிருப்பதற்குமான சுதந்திரத்தைத்தான் நாம் தனிமனிதர் சுத்நதிரம் எனக் கருதுகிறோம். இது சரியாகுமா?

சில ஆண்டுகளுக்கு முன்பு காரல் வாசக் முன்னாள் மனித உரிமை, அமைதித்துறையின் இயக்குனர் யுனெஸ்கோவின் கணிக்கும் எந்திரத்தின் துணைகொண்டு மனித உரிமைகளை வரையறுக்க முயன்றார். எல்லாவகை

நூல்களிலிமிருந்து எடுத்த சுமார் 60,000 வாசகங்களை அதில் செலுத்தி, எந்தந்த வாசகங்கள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை அறிந்து மனித உரிமைக்கு இலக்கணம் கூற முனைந்தார்.[7] அப்படி அதிக அளவில் பயன்படுத்தப்பட்ட சொல்லாக அவர் கண்டறிந்த சொல் “சட்டம்” என்பதாகும். “தேசிய அளவிலும், பன்னாட்டளவிலும், சுதந்திரம் மீறப்படுவதைத் தடுத்து, எல்லோருக்கும் சமஅளவில் சுதந்திரத்தை அனுபவிக்க வழி செய்வது சட்டம்தான்”[8] என்பதை அறிந்தார்.

எனவே, மனித உரிமையில் ஈடுபாடுள்ளவர்கள் எழுப்பும் வினாக்களுக்குத் துல்லியமான விடை காண்பதற்குப் பன்னாட்டு சட்டத்தை நாடுவது நலமாக இருக்கும்.

அப்படிச் செய்தாலும், எல்லாவற்றுக்கும் விடை கிடைத்து விடும் என்பதற்கில்லை. அதற்கு அந்தந்த தனிநாடுகளின் முடிவுகளையே எதிர்நோக்க வேண்டியிருக்கும். இந்த வகையில் ஐ.நா. யுனெஸ்கோ ஐ.எல்.ஓ. போன்ற பன்னாட்டு நிறுவனங்களின் உதவி பயனுள்ளதாகவும் அவசியமானதாகவும் இருக்கும். அதற்கான முயற்சியை நாமனைவரும் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டியது அவசியம்” என்றார் காரல் வாசக்.

## மனித உரிமைகள் என்றால் என்ன?

மனிதனாக இருக்கின்ற ஒரே காரணத்தினால் மனிதனுக்குள்ள உள்ளார்ந்த மற்றும் மாற்றமுடியாத உரிமையை ஏற்றுக்கொள்வது தான் மனித உரிமைக்கோட்பாடு என்பதாகும்.

**நடைமுறையில் இக்கருத்து எவ்வாறு பிரதிபலிக்கிறது?**

உலக வரலாற்றை நோக்கின் மனித வாழ்வும் மனிதனின் கண்ணியமும் புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கின்றன. இன்னும்

தொடர்ந்து சீர்குலைக்கப்படுகின்றன. எனினும் மனிதகுல முழுமைக்கும், பொதுவான, இயற்கைச் சட்டத்தை உருவாக்கும் கருத்து பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே வலுப்பெற்று வந்துள்ளது. அரசியல் உரிமையின் மூலாதாரமானதாகவும் முன் மாதிரியாகவும் இயற்கைச் சட்டம் நெடுங்காலமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த உரிமைகள் முதன் முதலில் தேசிய அரசியலமைப்புகளின் அடித்தளமாக அமைந்துள்ளன. இதன் மூலம் அரசுக்கும் தனிநபருக்குமிடையில் ஒருவகை ஒப்பந்த உறவு நிலவுகிறது என்பதும் புலனாகிற்று. இந்த முற்கோலின் அடிப்படையாகவே அமெரிக்க விடுதலை அறிவிக்கையும் பிரெஞ்சு மனித உரிமைகள் அறிவிக்கையும் தோன்றின.

சென்ற நூற்றாண்டிலும், இந்நூற்றாண்டிலும் ஐரோப்பாவிலும் இலத்தீன் அமெரிக்காவிலும், ஆசியாவிலும் பலநாடுகள் இந்த கொள்கையினைப் பின்பற்றின. 1960-க்குப் பின்பு ஆஃப்பிரிக்காவில் விடுதலைபெற்ற பலநாடுகள் தங்களின்புதிய அரசியலமைப்புகளில் மனித உரிமைகளை ஏற்று இணைத்துக்கொண்டன. சில அரசியலமைப்புகளில் மனித உரிமைகளின் அனைத்துலக அறிக்கை கூடச்சேர்க்கப் பெற்றுள்ளன.

மனித உரிமைகள் அரசியலமைப்புகளில் இடம் பெற்ற போதிலுங்கூட, அவற்றை அரசுகள் மீறமுடியும்; மீறியும் வருகின்றன; சட்டத்தின் வாயிலாகவும் ஏதேச்சதிகார வழிகளிலும் இவ்வுரிமைகளை நீக்கிவிட இயலுகின்றது.

## மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு வழி உண்டா?

மனித உரிமைகளுக்கு உறுதிப்பாடாகவும், காப்பாளராகவும் விளங்குவது அரசுதான். மரபுவழியிலும் சரி, வரலாற்று முறையிலும் சரி ஒரு சில

விலக்குகளைத்தவிர்த்துப் பொதுவாக மற்றொரு நாட்டின் விவகாரங்களில் தலையிட அரசுகளுக்கு உரிமையில்லை.

இந்த உரிமைகளை பாதுகாக்கும்பொறுப்பை அரசுகளிடம் மட்டுமே விட்டுவிட இயலாது. அவை அனைத்துலக உறுதிப்பாட்டிற்கு உட்பட்டவை என்னும் கருத்து முதல் உலகப்போர் முதற்கொண்டு வளர்ந்து வந்துள்ளது. பன்னாட்டுச் சங்கத்தின் உரிமைக் கட்டளையில் மனித உரிமைகள் பற்றிக் குறிப்பிடப்படவில்லையெனினும்; பன்னாட்டு வழிகள் மூலமாக மனித உரிமைகளைப் பாதுகாக்கும் முயற்சியில் முனைந்தது. ஆயினும் ஒரு சில நாடுகளில் சிறுபான்மையினருக்கும் பாதுகாப்பளிப்பதற்கான சூழ்நிலைகள் உருவாக்குவதுடன் அதன் முயற்சி நின்று விட்டது.

இரண்டாம் உலகப் போரின் போது எதேச்சதிகார அரசுகள் தங்களைக் காட்டிலும் தாங்கள் ஆக்கிரமித்த பகுதிகளில் மனித உரிமைகளை ஈவிரக்கமின்றிப் பறிப்பதில் ஈடுபட்டன. இனம் சமயம், நாட்டுரிமை என்ற பெயரால் ஒரு சில மக்களை ஒழித்துக் கட்டுவதிலும் அவை முனைந்து நிற்கின்றன. எனவே இரண்டாம் உலகப்போரின் பின்னர் மனித உரிமைகள் பாதுகாப்பிற்குப் பன்னாட்டளவில் நிர்பந்தங்களை ஏற்படுத்த முயற்சி நடந்தது. இந்த நோக்கத்தை ஐ.நா.வின் பட்டயம் பிரதிபலிப்பதுடன் வலியுறுத்தவும் செய்கின்றது.

“மனித உரிமைகள் மீதும், இனம், பால், மொழி அல்லது சமயம் என்ற பாகுபாடு கருதாமல் அனைவருக்குமான அடிப்படைச் சுதந்திரங்கள் மீதும் மரியாதையை வளர்த்து ஊக்குவிப்பதின் மூலம் பன்னாட்டுக் கூட்டுறவை ஏற்படுத்துவதற்கு ஐ.நா. பாடுபடும்”[9] என ஐ.நா. மகாசாசனத்தின் முதலாவது பிரிவு கூறுகிறது. 55ஆவது

(உறுப்பும்) !பிரிவும் இதனையே வலியுறுத்துகிறது. 55ஆவது பிரிவில் வகுக்கப்பட்டுள்ள நோக்கங்களை ஐ.நா.வின் ஒத்துழைப்புடன் ஈடேற்றுவதற்குத் தனித்தனியாகவும் கூட்டாகவும் நடவடிக்கை எடுக்க முனைவதாக ஐ.நா. உறுப்பு நாடுகள் அனைத்தும் உறுதி எடுத்துக் கொள்வதாக 56-ஆவது பிரிவு கூறுகிறது.

மகாசாசனத்தின் 63-வது பிரிவிற்கிணங்க ஐ.நா.வின் சிறப்பு நிறுவனங்களுள் ஒன்றாக யுனெஸ்கோ நிறுவப்பெற்றது. மனித உரிமைகள் குறித்து யுனெஸ்கோ மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு இந்த உறுப்புகளில் கண்டுள்ள வகைமுறைகளே அடிப்படையாக அமைந்துள்ளன.

மகாசாசனம் ஓர் உடன்படிக்கையர்தலால், அது சட்டப்படிக்கட்டுப் படுத்தும் தன்மையுடையதாகும். எனவே, அதன் வகை முறைகள் பன்னாட்டுச் சட்டத்தின் ஆற்றலைக் கொண்டு உள்ளன. தேசியச் சட்டங்களோ நடைமுறைகளோ இந்த வகை முறைகளுக்கு முரணாக இருத்தலாகாது. உறுப்பு நாடுகள் அனைத்தும் நல்லெண்ணத்துடன் நிறைவேற்ற வேண்டிய அடிப்படைக் கடமைகளையும் இச்சாசனம் வகுத்துரைக்கிறது. எனவே, இச்சாசனத்தின் ஓர் அங்கமாக உள்ள நாடுகள், மனித உரிமைகளை மதித்துப் போற்றவும், நடை முறையில் அனுசரித்து ஊக்குவிக்கவும், இந்நோக்கங்களை நிறைவேற்றுவதில் மற்ற நாடுகளுடன் ஒத்துழைக்கவும் கடப்பாடுடையணவாகும்.

மகாசாசனத்தின்படி மனித உரிமைகளை ஊக்குவிக்கவும் தமக்குள்ள கடமைகளுக்கினங்க அரசுகள் நடக்கின்றனவா என்பதைக் கண்டறியப் பன்னாட்டு ஆய்வு நடத்துவதை அரசுகள் எதிர்ப்பதேன்? "ஒரு நாட்டின் உள்நாட்டு அதிகார வரம்புக்குட்பட்ட விவகாரங்களில் ஐ.நா.

தலையிடலாகாது” என்று மகாசாசனத்தில் ஒரு பிரிவு (2(7) கூறுகிறது.

மனித உரிமைகள் பற்றிய தாங்கள் கட்டுபாடுகளை மீறி நடக்கும் நாடுகள், அது வெளியில் தெரியாமலிப்பதற்காக, இந்த உறுப்பின் போர்வையில் தங்கள் விவகாரங்களை விவாதிப்பதை எதிர்க்கின்றன. அதே சமயம் மற்ற நாடுகளின் விவகாரங்களை விவாதிப்பதற்கு அவை தயாராக உள்ளன. அதே நாடுகள் தாம் பிற உறுப்பு நாடுகளின் விவகாரங்களை ஆராய்வதற்கு அனுமதிக்கும் தீர்மானங்கள் ஐ.நாவில் வந்த போது அவற்றை ஆதரித்தன. இவ்வாறு வெவ்வேறு அரசுகள் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு நிலைகளை மேற்கொண்டிருக்கின்றன.

“தலையீடு” என்பது நேரடித் தலையீடு எனப் பொருள்படும் என்றும், எனவே “தலையீடு” என்பதில் விவாதம் உள்ளடங்காது என்றும் வாதிடுகிறார்கள். ஒரே மாதிரிக் கட்டுப்பாடுகளை எல்லா நாடுகளும் ஏற்றுக்கொண்டிருக்கும் பொழுது, மற்ற நாடுகள் அவற்றை மதித்து நடக்க வேண்டுமென ஒவ்வொரு நாடும் எதிர்பார்ப்பது சட்டபூர்வமானதாகும் என்ற கருத்து இன்று ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது.

நடைமுறை நிலைமைகளில் ஐ.நா. மாகாசாசனம் விளைவு எதனையும் உண்டாக்கும் எனக்கருதலாமா? நாடுகளிடையே அமைதியும் சுமூக உறவும் நிலவுகிறது; அவை மனித உரிமைகளை ஏற்று நடப்பதை பொறுத்திருக்கிறது என மகாசாசனம் வலியுறுத்துகிறது. மேலும் இதற்கேற்றச் சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும் என்றும் அது கூறுகிறது. மனித உரிமைகளுக்கு பொருளாதார சமூக ஒத்துழைப்பு மேம்பாடு போன்ற உலகளாவிய தொடர்புகளுக்கிடையில் நெருங்கிய பிணைப்பையும் அது ஏற்படுத்துகிறது.[10]

மகாசாசனம் கையெழுத்தான பிறகு, பெரும் மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன. குறிப்பாக குடியேற்ற ஆதிக்க ஒழிப்பில் ஏற்பட்டுள்ள மாற்றத்தைக் குறிப்பிட வேண்டும். இன்று பல புதிய நாடுகள் தோன்றியுள்ளன.

எனினும் மகாசாசனத்தின் வகைமுறைகள் பொதுத்தன்மை வாய்ந்தனவாக இருப்பதால், மனித உரிமைகளையும் சுதந்திரங்களையும் நடைமுறையில் செயல்படுத்தக் கூடிய விதத்தில் அவற்றுக்கு இன்னும் திட்டவட்டமான இலக்கணங்களை வகுப்பது அவசியமாகிறது.

அது எவ்விதம் செய்யப்பட்டது? மனித உரிமைகள் பற்றிய ஐ.நா. ஆணையம் ஒன்று 1945-இல் நிறுவப் பெற்றது. மனித உரிமைகளையும் சுதந்திரங்களையும் திட்டவட்டமாக வரையறுத்துக் கூறும் "மனித உரிமைகளின் பன்னாட்டு மசோதா" ஒன்றை வரையும் பொறுப்பு இந்த ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த மசோதாவின் முதற்பகுதியைத்தான் "மனித உரிமைகளின் அனைத்துலக அறிக்கை" என்ற பெயரில் 1948 டிசம்பர் 10-இல் ஐ.நா. பேரவை ஒரு மனதாக ஏற்றுக் கொண்டது. எல்லா மக்களும் எல்லா நாடுகளும் எய்த வேண்டிய பொதுவான நியதியாக இவை அறிவிக்கப் பெற்றன.[11]

அந்தச் சமயத்தில் ஐ.நா.வின் உறுப்பாக இல்லாத நாடுகள் இந்த அறிக்கையை ஏற்றுக் கொள்கின்றனவா? மனித உரிமைகளை உலகலாவியதாக அமைத்தது எத்தனை நியாயமானதென்பதை ஒடுக்கப்பட்ட மக்களின் சுதந்திரப் போராட்டம் உணர்த்தியது. தங்கனீக்காவின் குடியரசுத்தலைவர் ஜீலியஸ் நைரேரே 1961இல் ஐ.நா. பேரவையில் உரை நிகழ்த்துகையில் "நம்முடைய உள்நாட்டு

வெளிநாட்டுக் கொள்கைகளுக்கு அடிப்படையாக மனித உரிமைகள் அறிக்கையைப் பயன்படுத்திக் கொள்வதற்கு முயல்வோம்" என்று கூறினார்.

மனித உரிமைகள் பற்றிய ஆணையத்திற்கு உறுப்பினர்களை நியமிப்பதிலும் தேர்ந்தெடுப்பதிலும் உறுப்பு நாடுகள் அனைத்தும் ஆர்வத்துடன் ஈடுபடுவதுடன்அதன் முடிவுகளைச் செயலாக்குவதிலும் ஊக்கத்துடன்பங்கு கொண்டு வருகின்றன.

இந்த அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள உரிமைகள் யாவை? இந்த உரிமைகளைப் பொதுவாக இருவகையாகப் பகுக்கலாம். முதல் வகையில் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் அடங்கும். வாழ்க்கை, சுதந்திரம் மற்றும் சொந்தப் பாதுகாப்பு ஆகியவற்றிற்கான உரிமை, சித்திரவதை அல்லது அடிமைத்தனத்திலிருந்து விடுதலை, அரசியலில் பங்கு கொள்ளும் உரிமை, கருத்துக்கும் கருத்து வெளியீட்டுக்கும் சிந்தனைக்கும் சமய நம்பிக்கைக்குமான சுதந்திரம் அமைதியான முறையில் ஒருங்கு கூடுவதற்கும், சங்கத்தில் சேர்வதற்குமான உரிமை ஆகிய அனைத்தும் இதில் அடங்கும்.

இரண்டாம் வகையைச் சேர்ந்தவை சமூகம், பொருளாதாரம் பண்பாடு பற்றிய உரிமைகளாகும். வேலை பெறவும், நியாயமான வாழ்க்கைத் தரத்தை அடையவும், கல்வி கற்கவும், சுதந்திரமான பண்பாட்டு வாழ்க்கை நடத்துவதுமான உரிமைகள் இதில் உள்ளடங்கும். இது தவிர, மனித கண்ணியத்தின் சமத்துவ அடிப்படையில் உரிமைகளின் உலகப்பொதுமைப்பாட்டை இவ்வறிக்கையின் முதல் பகுதி விளக்குகிறது. எந்த வகையான பாகுபாடுமின்றி எல்லா உரிமைகளும் எல்லோருக்கும் உண்டு என்பதை இரண்டாம் பகுதி வலியுறுத்துகிறது. "மனிதக் குடும்பத்தின்

Dr. T.P.M. LIBRARY MADURAI KAMARAJ UNI

உள்ளார்ந்த கண்ணியம், சரி நிகர் மற்றும் மாற்ற முடியாத உரிமைகள்" எனத் தொடங்கும் இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ள, உரிமைகள் அவற்றின் முன்னுரிமைக்கேற்ப பகுத்துரைக்கப் பட்டுள்ளன.[12]

இந்த அறிக்கை நாடுகளைச் சட்டப்படிக் கட்டுப்படுத்துமா? இந்த அறிக்கை நாடுகளைச் சட்டப்படிக் கட்டுப்படுத்துகின்ற ஓர் ஆவணம் அல்ல. எனினும், நாடுகள் தங்களது நடவடிக்கையிலும், இதனைப் பயன்படுத்துவதன் மூலம் இதற்கு சட்டபூர்வத்தன்மையை அளித்துள்ளன. இதனால், பன்னாட்டு அளவிலும், உள்நாட்டு நிலையிலும் சட்டம் மற்றும் அரசியல் பிரச்சினைகளில் இவ்வறிக்கையின் உதவியை அரசுகள் நாடுகின்றன.

"மனிதக் குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களது மாற்ற முடியாத உரிமைகளை உலக மக்கள் அனைவரும் பொதுவாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என இவ்வறிக்கை வலியுறுத்துவதுடன் பன்னாட்டுச் சமுதாயத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் ஒரு கடமைப்பொறுப்பினை ஏற்படுத்தியுள்ளது" என 1968இல் டெஹரானில் நடந்த மனித உரிமைகள் பற்றிய மாநாடு தெளிவுபடுத்தியது.[13] இதில் பன்னாட்டுச் சமுதாயத்தின் பொதுக்கருத்து பிரதிபலித்தது. இந்த கடமைப் பொறுப்பை நிறைவேற்றும்படி நாடுகளைக் கட்டாயப் படுத்துவதற்குச் சட்ட ஒப்பளிப்பு எதுவுமில்லை. இக்கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் ஒத்துழைக்க விரும்பாத நாடுகளுடன் ஒத்துழைக்காமலிருப்பது என்பதுதான் இப்பொழுது பன்னாட்டுச் சமுதாயத்திற்கு உள்ள சட்டபூர்வமான சாதனம்.

இதனைச் செயலாக்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன? மூன்றடுக்கு நோக்கத்தின் முதலடுக்குத்தான் மனித உரிமைகளின் அனைத்துலக அறிக்கையாகும்.

"மனித உரிமைகளின் பன்னாட்டு மசோதாவின்" இரண்டாவது, மூன்றாவது பகுதிகள், 1966 டிசம்பர் 16இல் ஐ.நா. பேரவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இதில் இரு ஒப்பந்தங்கள் அடக்கியுள்ளன. ஒன்று "குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றி பன்னாட்டு ஒப்பந்தம்"[13] என்பது. இன்னொன்று "சமூக, பொருளாதார கலாச்சார உரிமைகள் பற்றிய பன்னாட்டு ஒப்பந்தம்"[14] ஆகும். இந்த ஒப்பந்தங்களைப் பன்னாட்டுச் சமுதாயம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. இதன் மூலம் ஒவ்வொரு உரிமையின் உள்ளடக்கத்திற்கு மட்டுமின்றி, இந்த உரிமைகளைக் குறைவுறச் செய்யவோ கட்டுப்படுத்தவோ அரசுகளுக்குள்ள உரிமைக்கும் பன்னாட்டு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

அறிக்கையிலிருந்து இந்த ஒப்பந்தங்கள் எவ்வாறு வேறுபடுகின்றன?

1. முதலாவதாக, இந்த ஒப்பந்தங்களை 35 அரசுகள் ஏற்றுறுதி செய்யுமானால், அவை சட்டப்படிக் கட்டுப்படுத்தும் உடன்படிக்கைகளாகிவிடும்.

2. இரண்டாவதாக, இவ்வொப்பந்தங்களில் உறுப்பினரா வதற்குச் சம்மதிப்பதன் பேரில் இந்த ஒப்பந்தங்களின் வகை முறைகளுக்கிணங்கத் தாங்கள் நடப்பது குறித்து அறிக்கைகள் அளிக்க அரசுகள் உறுதியளிக்கின்றன.

3. மூன்றாவதாக இந்த ஒப்பந்தங்களை 1966-லேயே ஐ.நா. பேரவை ஏற்றுக் கொண்ட போதிலும், 1976 இல் தேவையான 35 உறுப்பு நாடுகள் ஏற்றுறுதி செய்த பின்னரே இவை அமுலுக்கு வந்தன.

4. நான்காவதாக இந்த ஒப்பந்தங்களில் உறுப்பினராகவுள்ள நாடுகளைத்தான் இவை கட்டுப்படுத்தும். 1978 செப்டம்பர் வரையில் 50 நாடுகள் இந்த ஒப்பந்தங்களில் உறுப்பினர்களாகியுள்ளன.

இந்த ஒப்பந்தங்கள், மகாசாசனத்துடன் எந்த வகையில் தொடர்புடையன? ஐ.நா. மகா சாசனத்தில் அடங்கியுள்ள மனித உரிமைகள் பற்றிய பன்னாட்டுச் சட்டத்தின் அடிப்படை விதிமுறைகளுக்கு அறிக்கை விளக்கம் தருகிறது. இந்த ஒப்பந்தங்களை ஏற்றுறுதி செய்துள்ள நாடுகள் மட்டுமே இவை நேரடியாகவே கட்டுப்படுத்துகின்றனவாயினும் ஐ.நா. உறுப்பு நாடுகளுக்கு மகாசாசனத்தின் படியுள்ள கடமை பொறுப்புகளுக்கும், பன்னாட்டுப் பண்புத்தரமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட மனித உரிமைகளின் அனைத்துலக அறிக்கைக்கும் இவை தொடர்புடையனவாகும்.[15]

செயலாக்கத்திற்கு என்னென்ன வழிமுறைகள் வகுக்கப் பெற்று உள்ளன? குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய ஒப்பந்தத்தின் படி மனித உரிமைகள் சிறப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டு உள்ளது. இதில், அரசுகளின், பிரதிநிதிகளாக அல்லாத 18 சுயேச்சையான நிபுணர்கள் நியமிக்கப் பெற்றுள்ளனர். இந்த ஒப்பந்தங்களின் படியான கடமைப் பொறுப்புகளைத் தாங்கள் நிறைவேற்றி வரும் விதம் குறித்த அரசுகளிடமிருந்து அறிக்கைகளைப் பெற்று இக்குழு ஆராய்கிறது. இக்குழு சம்மந்தப்பட்ட அரசிடம் விளக்கம் கேட்கிறது. தொடர்ந்து தனது கருத்துக்களை அந்த அரசுக்குத் தெரிவிக்கிறது. இந்த ஒப்பந்தங்களின்படியான கடமைப் பொறுப்புகளை ஒரு நாடு நிறைவேற்றவில்லையென இன்னொரு நாடு தெரிவிக்கும் புகார்களை ஏற்கவும் இக்குழு அதிகாரம் பெற்றுள்ளது. இவ்வகை முறையைச் செயற்படுத்த 10 நாடுகள் இசைவு தெரிவிக்க வேண்டும்.[16]

கடமைப் பொறுப்புக்களுக்கிணங்க அரசுகள் நடக்கவில்லையென மனித உரிமைகள் குழு கருதினால் அதனால் என்ன செய்ய முடியும்? தேசிய அளவில் மனித உரிமைகளை அனுசரிப்பதைப் பொறுத்துத்தான் அவற்றுக்கான பாதுகாப்பு அமைகிறது. அவ்வுரிமைகளை

நிலை நாட்டுவதற்கான எந்திரம் எதுவுமில்லா திருப்பதால், இக்குழுவின் செயற்பாடு ஒருவரம்பிற்குட்பட்டதாகவே இருக்கிறது. எனினும் இக்குழுவின் அறிக்கைகள் பகிரங்கமாவதால் ஏற்படும் பாதகமாக விளைவுகள், அரசுகளை இவற்றை அனுசரிக்கத் தூண்டுகின்றன. மனித உரிமைகளைச் செயல்படுத்துவது குறித்துத் தெரிவிக்கப்படும் கண்டனங்களை அரசுகள் விரும்புவதில்லை. புகார்களும் நாடுகளிடையே ஆக்க பூர்வமாக பேச்சு வார்த்தைக்கு வழி செய்து, அதன் மூலமாக இந்த ஒப்பந்தங்களின் வகை முறைகள் நாடுகள் அனுசரிக்குமாறு செய்வது இக்குழுவின் முக்கிய நோக்கமாகும்.

தனிப்பட்டவர்களின் முறையீடுகளையும் இக்குழு கவனிக்குமா? குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய ஒப்பந்தத்திற்கான முதற்குறிப்பின் வகைமுறைகளின்படி, தனிப்பட்டவர் உரிமைகளை ஓர் அரசு மீறுமானால், அது குறித்துச் செயல்படும் முறையீடுகளின் மீது இக்குழு நடவடிக்கை எடுக்கலாம். இந்த ஒப்பந்தத்தின் கடமைப் பொறுப்புகளை ஏற்றுமதி செய்துள்ள நாடுகளின் குழுக்கள் மட்டுமே இக்குழுவிடம் புகார் செய்யலாம். அதுவும், உள்நாட்டில் எல்லாப் பரிகார நடவடிக்கைகளையும் கையாண்டு தோல்வியுற்ற பின்னரே இவ்விதம் முறையிடலாம். பாதிக்கப்பட்ட ஒருவர் இக்குழுவுக்கு முறையீடு செய்ய இயலாதிருக்கும் போது, அவர் சார்பாக வேறொருவர் முறையீடு செய்யலாம். இந்த முறையீடுகளை இக்குழு தனிப்பட்ட முறையில் கவனித்து, அதைப் பற்றிய தனது கருத்தைத் தனிநபருக்குத் தெரிவிப்பதுடன் சம்மந்தப்பட்ட அரசுக்கும் தெரிவிக்கும்.

சமூக, பொருளாதார, பண்பாட்டு உரிமைகள் பற்றிய ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்குள்ள வகை முறைகள்

யாவை? இந்த ஒப்பந்தத்தின்படி, இதில் உறுப்பினராகியுள்ள நாடுகள், அங்கீகரிக்கப்பட்டுள்ள உரிமைகளை எய்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து ஐ.நா.வின் பொருளாதார மற்றும் சமூக சபைக்கு (ECOSOC) அறிக்கைகள் அளிக்க வேண்டும். இந்த ஒப்பந்தத்தில் உறுப்பினராகியுள்ள நாடுகளைச் சேர்ந்த 18 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பணிக்கு ஒன்றை இச்சபை நியமித்துள்ளது. இக்குழு அறிக்கைகளை ஆராய்கிறது.[17] மற்ற நாடுகள் அனைத்தும் பார்வையாளர்களாகக் கலந்து கொள்ளலாம். இவைத்தவிர இவ்வறிக்கையிலுள்ள பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனத்தின் யுனெஸ்கோவின் திறம்பாடு பற்றிய பகுதிகளையும் இந்நிறுவனங்கள் ஆராய்கின்றன. உலக மக்களில் பெரும்பகுதியினருக்கு பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் எட்டாக் கனியாக இருப்பதால், இந்த உரிமைகள் அனைத்தும் மக்களுக்கும் கிட்டும்படி செய்வதற்குப் பாடுபடுவது பன்னாட்டுச் சமுதாயத்தின் பொறுப்பாக இருந்து வருகிறது.

உரிமைகள் மசோதாவைத் தவிர்த்து, வேறெவையேனும் மனித உரிமை ஆவணங்கள் உண்டா? அறிக்கையிலும் பன்னாட்டு ஒப்பந்தங்களிலும் வகுத்துரைக்கப் பெற்றுள்ள மனித உரிமைகளில் குறிப்பிட்டவற்றுக்கான கடமைப் பொறுப்புகளையும் பாதுகாப்புகளையும் விரித்துரைக்கும் பற்பல அறிக்கைகளையும் ஒப்பந்தங்களையும் ஐ.நா. பேரவை ஏற்றுக் கொண்டிருக்கிறது. இவற்றுள் ஓர வஞ்சனை மற்றும் வாழ்வு உரிமை பற்றிய ஒப்பந்தங்களும் உள்ளடங்கும்.[18]

## இனப்படுகொலை

இனப்படுகொலை குற்றத்தைத் தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான ஒப்பந்தத்தை 1948 டிசம்பரில்

ஐ.நா.பேரவை ஏற்றுக்கொண்டது. இந்த ஒப்பந்தம் 1951 இல் அமலுக்கு வந்தது. இதனை இப்போது 82 நாடுகள் ஏற்றுறுதி செய்துள்ளன. "இனப்படுகொலை என்பது ஒரு தேசிய, இன, நிற, சமயப் பிரிவினரை முழுமையாகவோ பகுதியாகவோ அழிப்பதற்கான உட்கருத்துடன் ஒரு சில செயல்களைச் செய்தல்"[19] என்று இந்த ஒப்பந்தத்தில் விளக்கப்பட்டுள்ளது. போர் காலத்திலாயினும், அமைதிக் காலத்திலாயினும் இனப்படு கொலை செய்வது ஒரு குற்றம் என்பதாகப் பன்னாட்டுச் சட்டம் வகுத்துள்ளது.

## ஓரவஞ்சனை

எல்லாவகை இனப்பாகுபாடுகளையும் ஒழிப்பது பற்றிய பன்னாட்டு ஒப்பந்தம் 1969இல் ஏற்பட்டது.[20] இதனை 97 நாடுகள் ஏற்றுக் கொண்டன. மரபு, நிறம், அல்லது இனம் ஓர் அடிப்படையில் ஓரவஞ்சனை காட்டுதல் தொடர்பான ஐ.நா.வின் மிக விரிவான அறிக்கை இதுவாகும்.

ஒரு ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்ட நாடுகள், எல்லாவகை இன வேற்றுமைகளையும், ஒழித்துக் கட்டி, தனி இனக்குழுவினருக்கு மனித உரிமைகளும் சரிநிகராகக் கிடைக்கும்படி செய்யும் கொள்கையைக் கடைப்பிடிப்பதாக உறுதி ஏற்கின்றன.

இந்த ஒப்பந்தத்தின்படி இனவேற்றுமை ஒழிப்பு பற்றிய தனிக்குழு ஒன்று நிறுவப் பெற்றுள்ளது.[21] அரசுகள் எந்த அளவுக்கு இக்கொள்கைக்கு இணங்க நடக்கின்றன என்பதனைக் கண்காணிப்பது இக்குழுவின் பணியாகும். இக்குழுவின் பணி நான்கு வகைப்பட்டதாகும். முதலாவதாக, இந்த ஒப்பந்தத்தைச் செயலாக்குவதற்குத் தாங்கள் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து அரசுகள் அளிக்கும் அறிக்கைகளை இக்குழு ஆராய்கிறது. இரண்டாவதாக நாடுகளுக்கிடையிலான புகார்களை விசாரிப்பதாகும்.

மூன்றாவதாக அரசுகளுக்கெதிரான தனிநபர்களின் புகார்களை ஆராய்வதாகும். இதற்கு தனிநபர் விண்ணப்ப உரிமையைச் சம்மந்தப்பட்ட அரசு ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். இந்த நடைமுறை செயலுக்கு வருவதற்கு இவ்வுரிமையைக் குறைந்தது பத்து நாடுகளாவது அங்கீகரிக்க வேண்டும். நான்காவதாக, தர்மகர்த்தாப் பகுதிகளிலும் சுயாட்சிபெறாத மண்டலங்களிலும் வசிக்கின்றவர்களிடமிருந்து வரும் மனுக்களையும் பரிசீலிக்கும்.

அறிக்கைகளை இக்குழு ஆராய்ந்து எடுத்த முடிவுகள் பாராட்டுதலைப் பெற்றுள்ளன. பல நாடுகள் அறிக்கைகளை அளிக்க ஆர்வத்துடன் முன் வந்துள்ளன. அறிக்கைகளை ஆராயும் குழுக்களில் பல நாடுகள் முன்வந்து பங்கேற்கின்றன. அறிக்கைகளின் பரிசீலனைகளில் அரசுகளும் பங்கு கொள்வதன் மூலமாக பல புதிய தகவல்கள் கிடைக்கின்றன. இக்குழு யாரையும் கண்டம் செய்வதில்லை. தங்களுடைய கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு அரசுகளை ஊக்குவிப்பதற்குப் பேச்சுவார்த்தை முறைகளையே இக்குழு கையாள்கின்றது. "ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும்" தெரிவிக்க இதற்கு உரிமையுண்டெனினும், இதற்கு ஒப்புதலளிக்கவும் அதிகார உரிமை நல்கவும் இக்குழு ஐ.நா. பேரவையை எதிர்பார்க்க வேண்டியுள்ளது.

மனித உரிமைகள் மீறப்படுவதாகக் கருதுகிற எவரும் ஐ.நா.வுக்கு மேல் முறையீடு செய்யலாமா? ஐ.நா. தோன்றியது முதல் மனித உரிமைகள் மீறப்படுவது குறித்துத் தனிநபர்களிடமிருந்தும் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான புகார்கள் வந்தவண்ணமிருக்கின்றன. 1951 முதல் 1971 வரையிலும் 1,20,000 புகார்கள் வந்துள்ளன.

இவை குறித்து என்ன செய்யப்பட்டு வந்தன? பொருளாதார மற்றும் சமூக சபையின் ஒரு துணை

அமைப்பாகவுள்ள மனித உரிமைகள் ஆணையம் (United Nations Commission on Human Rights) இந்த புகார்களை முக்கியமாக 2005-ந்தாம் ஆண்டு வரை கவனித்துவந்தது. ஆனால், எந்த நடைமுறைகளின்படியும் தனி நபரின் புகார்கள் குறித்து நடவடிக்கை எடுப்பதற்கு இதற்கு அதிகாரமில்லாமல் இருந்து வந்தது. புகார்களைக் கையாள்வதற்கான முறையை பொருளாதார மற்றும் சமூக சபை வகுத்துரைத்திருக்கிறது.

புகார்களின் ரகசியமான பட்டியல்கள் ஆணையத்தின் உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டன. இப்புகார்கள் குறித்து அரசுகளுக்கும் தெரிவிக்கப்பட்டது ஆனால், அரசுகளிடமிருந்து வரும் பதில்கள், புகார்களை அனுப்பும் நபருக்கோ தெரிவிக்கப்படவில்லை.

1960-க்குப்பின் ஆஃப்பிரிக்காவில் பல புதிய நாடுகள் தோன்றின. தென் ஆஃப்ரிக்காவில் குடியேற்ற ஆதிக்க வெறியும் நிறவெறியும் கொண்ட சில நாடுகள் மனித உரிமைகளை மீறுவதற்கு எதிராகக் கடும் நடவடிக்கைகள் எடுக்கும் வகையில் ஐ.நா. நடவடிக்கையை விரிவுபடுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இன ஒதுக்கல் கொள்கை போன்ற மனித உரிமைகளுக்கு மீறுதலான கொடுஞ்செயல்களால் உருவாகியுள்ள நிலைமையை ஆராய்ந்து பொருளாதார மற்றும் சமூக சபைக்கு பரிந்துரையளிக்கும்படி மனித உரிமைகள் ஆணையத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானத்தை 1967-இல் இச்சபை நிறைவேற்றியது.[22]

இதன்பின், உண்மையை அறிவதற்கான ஆய்வுகள் தொடங்கப் பெற்றன. முதலில் தென் ஆஃபிரிக்காவிலும் பின்னர் மற்றப் பகுதிகளிலும் அரசு நிபுணர்கள் மூலமாக உண்மை விவரங்களை சேகரிக்க முயற்சி

மேற்கொள்ளப்பட்டது. இந்தக் குழுவினர் சம்மந்தப்பட்ட பகுதிகளுக்குள் நுழைய அனுமதிக்கப்பட வில்லையாயினும், ஏராளமான உண்மைச் சான்றுகளை இக்குழுவினர் சேகரித்தனர். இச்சான்றுகளின் அடிப்படையில் ஐ.நா. பேரவையும் மனித உரிமைகள் ஆணையமும் பின்னர் பல தீர்மானங்களை நிறைவேற்றின. இக்குழுவினரின் நடவடிக்கைகள் பகிரங்கமாகவே நடத்தப்படுகின்றன. எனினும், குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலைக்கு அப்பால் அவற்றின் செயல்பாட்டை நீடிக்க இயலவில்லை.

பொருளாதார மற்றும் சமூக சபையின் தீர்மானம் ஒன்றின் மூலம் 1970-இல் சிக்கலானதொரு இரகசிய நடைமுறை வகுக்கப்பெற்றது. இதன்படி மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களைக் கொடூரமாக மீறுதல் பற்றிப் புகார்கள் விசாரிக்கப்படும். இம்மீறுதல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமின்றி இம்மீறுதல்கள் குறித்து நேர்முகமாகவோ, நம்பகமாகவோ தகவல் பெற்றுள்ள எந்த நபரும், குழுவினரும் அல்லது அரசு நிறுவனம் சாட்சியமளிக்கலாம்.[23]

ஓரவஞ்சனைத்தடுப்பு மற்றும் சிறுபான்மையோர் பாதுகாப்புக்கான துணை ஆணையம் என்பது மனித உரிமைகள் ஆணையத்தின் ஒரு துணை நிறுவனமாகும்.[24]

இத்துணை ஆணையத்தின் பணிக்குழு ஒன்று முதலில் புகார்களைப் பரிசீலித்துத் துணை ஆணையத்திற்குப் பரிந்துரைகளைச் செய்கிறது. மேலும் விரிவான ஆய்வு நடத்தவேண்டுமென பொருளாதார மற்றும் சமூக சபைக்குப் பரிந்துரை செய்வதா? அல்லது சம்மந்தப்பட்ட அரசின் ஒத்துழைப்புடன் நிலைமை விசாரித்தறிவதற்குத் தனிக்குழு ஒன்றை அமைப்பதா? என்பது குறித்து மனித உரிமைகள் ஆணையம் முடிவெடுக்கும்.[25]

பொருளாதார மற்றும் சமூக சபைக்குத் தனது பரிந்துரையை அளிக்கும் வகையில் மனித உரிமைகள் ஆணையம் தனது நடவடிக்கைகள் அனைத்தையும் இரகசியமாகவே நடத்துகிறது. எனவே இதன் நடைமுறைச் செயற்பாடு குறித்து இதுவரை அதிகார பூர்வமான தகவல் எதுவும் இல்லை. இந்த நடை முறையின்படி எந்தெந்த நாடுகள் பரிசீலிக்கப்பட்டன என்ற பட்டியலை முதன் முறையாக 1978 மார்ச்சில் இந்த ஆணையம் வெளியிட்டது எனினும் எந்த ஒரு நிலைமை குறித்தும் மேலாய்வு நடத்தவேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டதாக இதுவரை வெளிப்படையாகத் தெரியவில்லை.[26]

ஐ.நா.வின் பொதுச் செயலாளர் கோபி அன்னான் காலத்தில் மனித உரிமைகள் ஆணையத்தை 52 பேர் கொண்ட மனித உரிமைக் குழுவாக மாற்றப்பட்டது. 1994 முதல் மனித உரிமைகள் ஆணையர் ஐ.நா.வின் பொதுக்குழுவாலும், பாதுகாப்புச் சபையாலும் நியமிக்கப்படுகிறார்.

## அடிக்குறிப்புகளும் சான்றுகளும்


1. 1968- இல் ஐ.நா. வால் ஏற்பாடு செய்யப்பட்ட மனித உரிமைகள் குறித்த சர்வதேச மாநாட்டு தீர்மானம்.
2. Human Rights: A compilation of International Instruments of the United Nations UN Publication, Sales No. E. 83. XIV. 1.
3. John P. Humphrey, “The Great Adventure: The United Nations and Human Rights” Transnational Publishers. IncDobbs Ferry, NY Chapter XI **Human Rights Quarterly** Vol. 5. No. 4. Nov. 1983, 387-439.
4. யுனெஸ்கோ கூரியர் ஆகஸ்டு 1973.
5. Slavery, Servitude, Forced Laour and Similar Institutions and practices, signed at Geneva on 25 September 1956. The

Convention was amended by the protocol done at the Headquarters of the United Nations, New York, on 7 December 1953, the amended convention entered into force on 7 July 1955.

6. **UNESCO Courier** August 1973

7. **Ibid.**

8. **Ibid.**

9. UN Charter Art Para 3

10. John P. Humphrey, The UN Charter and the Universal Declaration of Human Rights" in International Protection of Human Rights, ed. Evan Luard. (New York 1967) 39-51.

11. Commission on Human Rights (CHR) Established in 1946 by ECOSOC Resolution 5 (1) Reports to ECOSOC 43 members elected by ECOSOC, each from a different Member State of the U.N.

12. Universal Declaration of Human Rights, Preamble

13. Proclaimad by the International conference on Human Rights at Tehran, 13 May 1968. International Covenant on Civil and Political Rights, General Assembly Resolution 2200 A (XXI) 16 December 1966, Entry into for ce: March-1976 in accordance with article 49; U.N.Doc. A/6316 (1966); Jack Donnelly "Cultural Relativism and Universal Human Rights", 6 HRQ 400 (1984); Stephen Marks, "Emerging Humna Rights: A New Generation for the 1980's" 33 Rutgers Law Review 435 (1981).

14. International Covenant on Economic Social and cultural Rights, General Assembly Resolution 2200 A (XXI) 16 December 1966; Entry into force 3 January 1976, in accordance with article 27; U.N. Doc. A/6316 (1966).

15. Tom J. Farer 'The United Nations and Human Rights, More than a Whimper less than a roar" in United Nations. Divided World, **Human Rights Quarterly** 9 (1987) 550-586.

16. Human Rights Committee (International Covenant on Civil and Political Rights) Established in 1976. Reports to General Assembly. Through ECOSOC. Mandate: considers reports submitted by states parties under Article 40 of the covenant. Considers Communications received in accordance with provisions of the Optional Protocol to the Covenant Membership 18 nationals of the States parties to the covenant.

17. UN Doc. CCPR (SP) SR. 2 of September 1976, Faroorkh "Jhabvala "The Practice of the Covenant's Human rights committee, 1976-82 review of the state party Reports", 1 (Feb 1984) 81-106; A. Subbian, **Human Rights, Complaints Systems: International and Regional** New Delhi: Deep Deep Pvt ltd., 2003) 22-52.

Working Group of Governmental Expects on the Right to Development Established in 1981 by CHR Res 36 (XXXVII) Reports to Commission on Human Rights.

18. United Nations Declaration on the Elimination of all Forms of Racial Discrimination, General Assembly resolution 1904 XVIII of 20 November 1963; International Convention on the Elimination of all forms of Racial Discrimination of all Forms of Racial Discrimination General Assembly Resolution 2106 (XX) of 21 December 1965;.

19. **Human Rights A compilation of International Instruments, Prevention of Discrimination, Declarations, Conventions** etc. 22-55.

20. Convention on the Prevention and Punishment of the crime of Genocide GAR 260 A (III). December 1948 Entry into force 12 January 1951 accordance with article XIII.

    International Convention on the Elimination of All Forms of Racial Discrimination. GAR 2105 A (XX) 21 December 1965; Entry into force: 4 January 1969, in accordance with article 19; UN Declaration on the Elimination of All Forms of Racial Discrimination; GAR 1904 (XVIII) on 20 November 1963.

21. Report of CERD to the General Assembly at its fifty- fifth session (CERD/C/55CRP. 1/ ADD. 3 Para 136.Luis Valencia Rodriguez "Racial Discrimination in Economic Social and cultural life" UNESCO United to Combat recism" Selected articles and standard – Setting Instruments. (Paris: 2001) 125-139.

22. A. Subbian **Supra note** 17.

23. Intentional Convention on the Suppression and Punishment of the Crime of Apartheid GAR 3068 (XXVIII) – 30 November 1973; Entry into foce, 18 July 1976, in accordance with article XV.

24. Howard Tolley, Jr. "Decision- Making at the United Nations Commission on Human Rights, 1979-82" **Human Rights Quarterly** Vol. 5, 1983, 27-57.

25. Economic and Social Council resolution 1979/38; Sub-commission on prevention of Discrimination and protection of Minorities, resolution 5 B (E/CN 4 Sub 2/435, E CN. 4/ 1350) 1979. 50, Para 1.

26. Economic and Social council, committee on Human Rights, Sub- commission on prevention of Discrimination and Protection of Minorities (1 756) 198M" September 1980.

# 3. மனித உரிமையும் மனித உரிமைக் கல்வியும்

கல்வியின் குறிக்கோள், அறிவை வளர்ப்பது மட்டுமல்ல; இதயத்திற்கும் மனச்சான்றிற்கும் விடுதலை தேடித்தருவதும் அதன் நோக்கமாகும் ஊரில் உள்ள சேரிகளைவிட, உள்ளத்தில் உள்ள சேரிகள் மிகக் கொடியவை, கல்வி நிலையங்கள் மூலமாகத்தான், நாம் ஜனநாயக மனப்பான்மைகளையும் கருணை உணர்வும் வளர்க்க முடியும்

- டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன்

ஐ.நா. சாசனத்தில் பொறிக்கப்பட்டுள்ள மனிதாபிமான இலட்சியங்களை செயல்முறைப்படுத்துவதற்கு, நாடுகளுக்கிடையே சமாதானம், நட்புறவு, மற்றும் மனித கண்ணியத்தை மதிக்கும் ஆழ்ந்த மரியாதை ஆகிய உணர்வுடன் கூடிய பயனுள்ள கல்வி இளைய தலைமுறைக்குத் தேவைப்படுகிறது. இளைய தலை முறைக்கு சமூகப் பொறுப்பை கற்பிப்பதென்பது, இளைய தலைமுறைக்கு அவர்கள் சமூகத்திற்குச் செய்ய வேண்டிய கடமையை, அவர்களது அடிப்படை உரிமைகளை, அவைகளைப் பயன்படுத்தும் வழிகளைக் கற்பிப்பதாகும். மேலும், இந்த கல்வி, மனித இனத்திற்காகப் பணியாற்றவும், மனித இனத்தைக் காக்கவும், உலகில் சமாதானம் மற்றும் நீதியைப் பாதுகாக்கவும் ஆகிய பண்புகளை வளர்க்கிறது. மனிதனின் கண்ணியம் மற்றும் உரிமைகள் குறித்த

மனிதாபிமான இலட்சியங்கள் இந்தக் கல்வியின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

## மனித உரிமைகள் பற்றிக் கற்பித்தல்

"உயிர் வாழும் உரிமை, சுதந்திர உரிமை
பாதுகாப்பு உரிமை அனைவருக்கும் உண்டு...
யாரையும் அடிமையாக வைத்திருக்க முடியாது.
யாரையும் சித்திரவதை செய்யவோ,
தண்டனைக்கு உட்படுத்தவோ
கூடாது, காவலில் வைக்கவும் நாடு
கடத்தவும் கூடாது.... அனைவரும்
சட்டத்தின் முன் சரிசமம் எவ்வித வேறுபாடுமின்றி
சட்டத்தின் முன் சமபாதுகாப்பு பெற
அனைவருக்கும் உரிமையுண்டு....ஒவ்வொரு
நாட்டிலும் எங்கும் செல்வதற்கும் அனைவருக்கம்
உரிமையுண்டு.
நாட்டை விட்டு வெளியே போகவும்
திரும்பி வரவும், அனைவருக்கும்
உரிமையுண்டு......எண்ண,
மனச்சான்று, மத உரிமை, கருத்து,
பேச்சு உரிமை, கல்வி உரிமை, தனக்கும்
தன் குடும்பத்திற்கும் நலமும் வளமும்
அளிக்கப் போதுமான வாழ்க்கைத் தரம்
பெறும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு"[1]

1948-ஆம் ஆண்டு டிசம்பர் 10-ம் நாள் இவ்வரிகள் ஐ.நா. பொதுப் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட மனித உரிமைகளின் அனைத்துலக அறிக்கையில் காணப்படுகின்றன.

அப்போது இனம், நிறம், பாலினம் மொழி, மதம், கருத்து, நாட்டினம் அல்லது சமூகம், சொத்து, பிறப்பு ஆகிய எல்லா வேறுபாடுகளையும் பொதுப் பேரவை கண்டனம் செய்தது. ஆனால் இன்று செய்தித்தாளைப் படிப்போரும் வானொலி அல்லது தொலைக்காட்சி மூலம் செய்தி அறிவிப்போரும் இக்கொள்கைகளுக்கும் நடைமுறை நிகழ்ச்சிகளுக்கு முள்ள வேறுபாடுகளைக் கண்டு வியப்புறுவர். இவ்வறிக்கை

"எல்லா நாடுகளும் அடைய வேண்டிய
சாதனைத் தரமென்றும், இவ்வுரிமைகளை
மதிப்பதற்காக ஒவ்வொரு சமூக நிறுவனமும்
கல்வியின் வாயிலாக முயல வேண்டுமென்றும்
அப்போது அறிவிக்கப்பட்டது"[2]

இவ்வறிக்கையின் 30ஆம் ஆண்டு விழாவின் ஒரு நிகழ்ச்சியாக ஆஸ்திரியாவிலுள்ள வியன்னாவில் செப்டம்பர் 12 முதல் 16 வரை யுனெஸ்கோ ஒரு பன்னாட்டு மாநாட்டைக் கூட்டியது. அதில் 300 பேர்கள் கலந்து கொண்டனர். இந்த 60 உறுப்பு நாடுகளும் பிரதிநிதிகளும் 50 தனி நிறுவனங்களின் பார்வையாளர்களும், எல்லா கல்வி நிலைகளிலும் பள்ளியின் உள்ளும் புறமும் மனித உரிமைகள் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்றும், எல்லா நாடுகளிலும் ஆண், பெண் அனைவருக்கம் இது வாழ்க்கை முழுவதும் கல்வி வழங்க வேண்டும் என்றும் முடிவு செய்தனர்.

பொருளாதார, சமூக, பண்பாட்டு அரசியல் உரிமைகள் ஆகிய எல்லா மனித உரிமைகளும் சம முக்கியத்துவம் வாய்ந்தவை என்றும், பிரிக்க முடியாதவை என்றும் வலியுறுத்தினர். அவர்கள் இத்தகைய கல்வியில் கீழ்கண்ட

நோக்கங்களையும் வரையறுத்தனர்; மனித உரிமைகளின் உள்ளார்ந்த இயல்புகளாகிய சகிப்புத் தன்மை, மதிப்பு, ஒருமைப்பாடு ஆகியவற்றை வளர்த்தல்; நாட்டிலும் உலக அளவிலும் சமூக அரசியல் துறைகளில் இவ்வுரிமைகள் உண்மையாகவே நிலவுவதற்காக வழி வகைகளை வகுக்கும் உணர்வைத் தனி மனிதனிடம் வளர்த்தல், கல்வி செய்தித் துறைகளின் வாயிலாக மனித உரிமைகள் பற்றி அறிவை வளர்ப்பதற்காக ஒரு நிதியை நிறுவுவதுடன், பாடத்திட்டம், கல்விமுறை, அமைப்பு, கல்விச் சாதனங்கள் போன்றவைப் பற்றிய விவரங்கள் அடங்கிய ஆறாண்டுத் திட்டமும் பரிந்துரைக்கப்பட்டது.

## பல்கலைக்கழகங்களுக்கு ஓர் அறை கூவல்

மனித உரிமைகளை அடையவேண்டுமென்று இன்று அனைத்துலக மக்களும் விரும்புகிறார்கள். சட்டத்துறையிலும் அரசியல் துறையிலும் "அனைத்துலக மனித உரிமை அறிக்கை"யின் செல்வாக்கு வளர்ந்து கொண்டே வருகிறது. மனித உரிமைகளுக்கு ஆதரவாக உடன்பாடுகள் பல ஏற்பட்டுள்ளன. அவற்றிற்கு ஆதரவும் விளம்பரமும் தருவதற்காகப் பன்னாட்டு நிறுவனங்கள் பல தோன்றியுள்ளன. அவற்றைத் தடுப்பதற்கு எந்த அரசாலும் இயலவில்லை. இவையெல்லாம் மனித குலத்தின் உரிமை வேட்கைக்குச் சான்றாயுள்ளன.

இன்றைய உலகில் தோன்றியுள்ள சமுதாயப் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளவும் அவற்றிற்குத் தீர்வு காணவும் உதவக்கூடிய அடிப்படையறிவை மனிதகுலம் அடைய வேண்டுமானால் கல்வியின் பல நிலைகளிலும் மனித உரிமை பற்றிக் கற்பிக்க வேண்டும். மனித ஆளுமை

முழுவளர்ச்சியடைவதற்கும் மனித உரிமைகளை மதித்து நடப்பதற்குரிய மனப்பாங்கை மக்கள்பெறுவதற்கும் கல்வி உதவ வேண்டுமென்று அனைத்துலக மனித உரிமையறிக்கையின் 26ஆம் வாசகம் சொல்கிறது. மனித உரிமை பற்றிக் கற்பதும் கற்பிப்பதும் பன்னாட்டு நட்புறவையும் அமைதியையும் வளர்ப்பதற்கு அடிப்படையான முயற்சியாய் இருக்கும் என்று யுனெஸ்கோ 1974-ல் எடுத்துரைத்தது.

பல்கலைக்கழகக் கல்வியின் பல துறைகளோடும் மனித உரிமைக் கல்வியை இணைத்துக் கற்பிக்கலாம். வரலாறு, அரசியல், தத்துவம், மருத்துவம், பொறியியல் கல்வியியல், சமூகவியல், இயற்பியல், உயிரியல், இலக்கியம், கலை முதலிய பல துறைகளும் அதற்கு ஏற்றவையே. தொழில் நுட்ப முன்னேற்றம் மனித உரிமைகளை எவ்வாறு பாதித்துள்ளது என்பதை அறிவியலாரும், பொறியியலாரும், கட்டடக் கலைஞரும் ஆராயலாம். அது போலவே, பொதுச் சுகாதாரமும், மரபு வழி பண்பியல் சோதனைகளும் மாற்றுறுப்புப் பொருத்தல், மனநோய் மருத்துவம் முதலிய புதுமுறைகளும் மனித உரிமைகளை எவ்வாறு பாதிக்கின்றன என்று மருத்துவர் ஆராயலாம்.

சித்திரவதை, இனக்கொலை, சிறுபான்மையினருக்கு எதிரான செயல்கள், வறுமை, பட்டினி முதலிய தீமைகளை இது வரையில் நம்மால் அகற்ற முடியவில்லை. இந்தப் பிரச்சினைகளுக்குரிய தீர்வை வரலாறு, பொருளாதாரம் தத்துவம், அரசியல், நிர்வாகம், நீதித்துறை சட்டவியல் முதலிய பாடங்களைக் கற்பிக்கிற ஆசிரியர்கள் காண வேண்டும். தத்துவக் கல்வி இறைமையியல் கல்வி

ஆகியவையும் கவிஞர் கலைஞர் ஆகியோருடைய படைப்புகளும் மனித உரிமைத்துறையில் உதவ முடியும். பல்கலைக்கழகக் கல்வியில் மனித உரிமைப் பாடத்தையும் சேர்த்துக் கற்பிப்பது மேலே சொன்ன பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பெரிதும் உதவும்.

பல்கலைக்கழக ஆசிரியக் கல்வித் துறைகளிலும் ஆசிரியப் பயிற்சி நிலையங்களிலும் மனித உரிமைகளைப் பற்றிக் கற்பிப்பதும் மிகவும் முக்கியமானது. அடிப்படை மனித உரிமைகள், அவற்றை நடைமுறைப்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள் ஆகியவற்றிற்குரிய தீர்வுகள் ஆகியவை பற்றி எதிர்கால ஆசிரியர்கள் தெரிந்து கொள்ளாவிட்டால் தொடக்கப் பள்ளிகளும் உயர்நிலைப் பள்ளிகளும் மனித உரிமைகளின் முன்னேற்றத்திற்கான சிறந்த தொண்டு எதையும் செய்ய முடியாது. மனித உரிமை புறக்கணிக்கப்படுவதை உலகின் பல நாடுகளிலும் காண்கிறோம். அதனால் மனித உரிமைகளுக்கு வலிமை தரக்கூடிய கல்வியை வலுப்படுத்துவது இன்றியமையாத நடவடிக்கையாகும்.[3]

அனைத்துலக மனித உரிமை அறிக்கையை ஐ.நா. 1948-ஆம்ஆண்டு டிசம்பர் 10-ம் நாள் வெளியிட்டது. பின்னர், அந்த உரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்காகப் பன்னாட்டு ஒப்பந்தங்கள் பல செய்யப்பட்டன. இன்று ஐ.நா.வின் உடன்பாடுகள் இரண்டு நடைமுறையில் உள்ளன. ஒன்று இன எதிர்ப்புச்செயல்களைத் தடுக்கும் நோக்க முடையது. இனக் கொலையைத் தடுத்தல் ஒறுத்தல் ஆகிய நோக்கமுடையது.

மேலே சொன்ன ஆவணங்களைத் தவிர, கல்வியில் இனப்பாகுபாட்டைத் தடை செய்கிற யுனெஸ்கோத் தீர்மானமும் பணித்துறையில் இனப்பாகுபாட்டைத் தடைசெய்கின்ற ஐ.எல்.ஓ. தீர்மானமும் நடைமுறையில் உள்ளன.[4] மேலும், மகளிர் உரிமைகளைக் காக்கவும், அகதிகளின் உரிமைகளைக் காக்கவும், அடிமை முறையையும் அடிமை வாணிகத்தை ஒழிக்கவும் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அன்றியும் அபார்த்தீட் (இன ஒதுக்கல்) முறையை எதிர்க்கிற ஒப்பந்தமும் போர்காலத்தில் மனித உரிமைகளைக் காப்பதற்கான ஜெனிவா ஒப்பந்தமும் நமது கவனத்தைக் கவர்கின்றன.

எனினும், அகதிகள் அனைத்தையும் தடுக்க முடியா விட்டாலும் அவற்றுள் ஒரு சிலவற்றையேனும் தடுக்க முடியும். சிவில் அரசியல் உரிமைகள் பற்றிய ஒப்பந்தமும் அரசுகள் மனித உரிமைகளை மதித்து நடக்கின்றனவா என்று மேற்பார்வை செய்வதற்கேற்ற பன்னாட்டு நிறுவனங்களை அமைத்துள்ளன. யுனெஸ்கோவும் ஐ.எல்.ஓவும் கூட அத்தகைய நிறுவனங்களை அமைத்துள்ளன. பெரிய அநீதிகளை விசாரிப்பதற்கேற்ற முறைகளை ஐ.நா.வின் மனித உரிமைக்குழு உருவாக்கியுள்ளது.[5]

மேலும், ஐரோப்பியக் கவுன்சில் அமெரிக்க நாடுகளின் மண்டல நிறுவனங்கள் ஏற்படுத்தியுள்ள குழுக்கள் மனித உரிமைகளின் செயற்பாடுபற்றி ஏராளமான தகவல்களைத் திரட்டியுள்ளன.

மேலே சொன்ன பன்னாட்டு நிறுவனங்களையும், மனிதஉரிமைகள் மறுக்கப்படுவதைத் தடுக்க அவை கையாளக்கூடிய முறைகளையும் பற்றிப் பல்கலைக்

கழகங்களில் கற்பிப்பது மிகுந்த பயன் தரும். மனித உரிமைப் படிப்பு அறிவு வளர்ச்சிக்கு உகந்தபாடமாகும். மனித உரிமைகள் கொள்கை வரம்புகளையும் அரசியல்-பண்பாட்டு எல்லைகளையும் கடந்து வருபவை. அவற்றைப் பற்றிப் படிப்பது 1974. இல் யுனெஸ்கோ வற்புறுத்திய பன்னாட்டு நோக்கையும் உணர்வையும் வளர்ப்பதற்கு ஏற்றதாயிருக்கும்.

பாடத்திட்டம் துறைக்கேற்றவாறு மிகுதியாகவோ குறைவாகவோ வேறுபடும். பன்னாட்டுச் சட்டக் கல்வியில் மனித உரிமைப் பாடம் இடம் பெறும் போது உலகின் கவனத்தை ஈர்த்துள்ள உரிமைகளும் கவலைகளும் எழுப்பியுள்ள பிரச்சினைகளுக்கேற்றவாறு பன்னாட்டுச் சட்டத்தில் அமைந்துள்ள மாறுதல்கள் முக்கியத்துவம் பெறும். இரண்டாம் உலகப் போருக்கு முன்பு, ஒவ்வொரு நாடும் தன்னுடைய குழந்தைகளைத்தன் விருப்பம் போல் நடத்தலாம் என்பது பன்னாட்டுச் சட்டமாயிருந்தது. ஒரு நாட்டின் குடிமக்களை அந்நாட்டின் அரசு எவ்வளவு கொடுமைப்படுத்தினாலும், அது அந்த நாட்டின் உள்நாட்டுப்பிரச்சனை என்பதும் பிறநாடுகள் அதில் தலையிடக்கூடாது என்றும் சொல்லித் தப்பித்துக் கொள்ள முடியாது. மனித உரிமை மறுப்பைக் கைவிட வேண்டும் என்று பிறநாடுகள் அந்த நாட்டை வற்புறுத்துவதற்குச் சட்டம் இன்று இடம் தருகிறது.[6]

யுனெஸ்கோ ஐ.எல்.ஓ. முதலிய பன்னாட்டு நிறுவனங்கள் மனித உரிமைத்துறையில் ஆற்றியுள்ள பணிகளையும் அவற்றின் முயற்சிகள் முழுப்பயன் தராததற்கு உரிய காரணங்களையும் சட்ட மாணவர் ஆராய வேண்டும் அன்றியும், அரசு தொடர்பில்லா நிறுவனங்கள் மனித

உரிமைத் துறையில் ஆற்றுகின்ற பணிகளையும் மாணவர் அறிந்து கொள்ள வேண்டும். அத்தகைய நிறுவனங்களுள் மிகவும் புகழ்பெற்றது. லண்டனிலுள்ள பொது மன்னிப்புப் பன்னாட்டு நிறுவனமாகும்.[7] மேலும் ஜெனிவாவிலுள்ள பன்னாட்டு சட்ட வல்லுநர் கமிஷன் (1952)[8] ஃபிரஸல்லிலுள்ள ஜனநாயக வழக்கறிஞர் சங்கம் (1945)[9] நியூயார்க்கிலுள்ள பன்னாட்டு மனித உரிமைச்சங்கம் (1942)[10] முதலியவையும், பல்வேறு சமயச் சங்கங்களும் தொழிற்சங்கங்களும் சிறந்த பணியாற்றுகின்றன.

மனித உரிமைபற்றி அரசுகளுக்கிடையில் நடைபெறுகிற தொடர்புகளும் அவற்றிற்கும் அரசுத் தொடர்பில்லா நிறுவனங்களுக்கும் இடையில் நடைபெறுகிற தொடர்புகளும் படிப்பதற்கு மிகவும் கவர்ச்சியாய் இருக்கும்.

ஆனால், இந்த ஆராய்ச்சிக்கு மையமாயிருப்பது மனித உரிமைகள் எவ்வாறு பன்னாட்டியல்பு பெற்றன என்பதாகும். அந்தப் பன்னாட்டியல்பு பன்னாட்டுச் சட்டத்திற்கு மனிதப் பண்பை அதாவது இரக்க இயல்பை அளித்துள்ளது. மனித உரிமைகளை மறுத்தல் எந்த இடத்தில் நிகழ்ந்தாலும், இன்று உலக நாடுகள் பலவும் அதைப் பற்றிக் கவலையடைகின்றன. சட்டத்துறையிலும் அரசியல் துறையிலும் அதனால் தோன்றியுள்ள மாறுதல்கள் மனித உரிமை பற்றிய பாடத்தில் முக்கிய இடத்தைப் பெற வேண்டும். எனவே சட்டஇயல் ஆசிரியர் மனித உரிமை பற்றி பன்னாட்டுச் சட்டத்தின் தன்மைகளை மட்டும் விளக்குவதோடு அரசியல் பொருளாதார, பண்பாட்டு இயல்புகளையும் அவை தனி மனிதனை மட்டுமன்றி மனித குலம் முழுவதையும் எவ்வாறு பாதிக்கின்றன என்பதையும் கற்பிக்க வேண்டும்.

பல்கலைக்கழகத்தில் மனித உரிமைபற்றி கற்பிப்பது சிறந்த பயன்தரும். சித்திரவதை, இனக்கொலை, உரிமை மறுப்பு முதலிய கொடுமைகளால் தலைமுறை தலைமுறையாய்த் துன்புற்று வந்த மக்கள் அக்கொடுமைகளிலிருந்து விடுதலை பெறுவதற்கு மனித உரிமை பற்றிய படிப்பும் உதவும். மனித உரிமையிலும் மாண்பிலும் நம்பிக்கையுள்ள நாடுகள் எல்லாம் தமது பல்கலைக் கழகங்களில் மனித உரிமைப் பாடத்தைக் கற்பிக்க வேண்டும்.

## அனைவருக்கும் கல்வி

உலகில் பகுத்தறிவு விகிதம் குறைவாக இருப்பதோடு மக்கள் தொகை பெருக்கத்துடன் இணைந்து நோக்கும்போது வயது வந்த படித்தவர்களின் எண்ணிக்கையும் பெருகி வருகின்றது. படிப்பறிவில்லாதவர்களின் தொகை 1970இல் 76 கோடி 1980இல் 81.4 கோடி, இத்தொகை இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் 90 கோடிக்கும் மேலாக உயர்ந்தது. இவ்வாறு, படிப்பறிவின்மைதான் இன்றையப் பண்பாட்டுச் சமுதாயத்திற்குப் பெரும் அறைகூவலாக விளங்குகிறது.

ஆனால் எல்லோருக்கும் கல்வியறிவு புகட்டி விட்டால் மட்டும் சிக்கல் தீர்ந்து விடாது. ஒவ்வொருவருக்கும் சிறந்த வாய்ப்புகளை அளித்து, அனைவருக்கும் சமவாய்ப்பு நல்குவது தான் நோக்கமாக இருக்க வேண்டும்.

## அம்னஸ்டி இண்டர்நேஷனல் எவ்வாறு தொடங்கியது

அம்னஸ்டி இண்டர்நேஷனல் 1961ஆம் ஆண்டு பிரித்தானிய வழக்குரைஞர் பீட்டர் பெனன்சன் என்பவர்,

லண்டன் அப்சர்வர் பத்திரிகையில் எழுதிய ஒரு கட்டுரையுடன் தொடங்கியது. அவர் எல்லா மக்களையும் எவ்வித சார்புமின்றி, அமைதியாக, "மனசாட்சிக் கைதி"களின் விடுதலைக்காக செயலாற்றும்படி வற்புறுத்தினார். ஒரே மாதத்திற்குள் பல நாடுகளைச் சேர்ந்தவர்கள், சுமார் ஆயிரம் பேர், கைதிகளுக்கு நடைமுறை உதவிகளை அளிக்க முன் வந்தனர். வழக்குகள் குறித்து தகவல்கள் சேகரிக்க அவற்றை வெளியிட, அரசாங்கத்தை அணுக தேவையான உதவிகள் செய்ய, அவர்கள் தயாராக இருந்தனர். ஒரு சிறு பிரச்சார முயற்சியாகத் தொடங்கிய அம்னஸ்டி இண்டர்நேஷனல் இன்று ஒரு சர்வதேச இயக்கமாக வளர்ந்துள்ளது. சிந்தனையாளர்கள், கல்வியாளர்கள், மாணவர்கள், பொதுநலம் விழைவோர்கள் அனைவரும் இந்த பொது மன்னிப்பு நிறுவனத்தை ஆதரிக்கின்றார்கள்.

ஆயிரக்கணக்கான மக்கள் தாங்கள் கொண்டுள்ள நம்பிக்கைகளின் காரணமாக சிறையிடப்பட்டுள்ளனர். பலர் எவ்வித குற்றச்சாட்டோ, விசாரணையோ இன்றி அடைக்கப்பட்டுள்ளனர். சித்திரவதை மற்றும் மரண தண்டனை எங்கும் பாவியுள்ளன. பல நாடுகளில் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் அரசின் தடுப்புக் காவல் முகாம்களுக்கும், சிறைச்சாலைகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டபின், "மாயமாய்" மறைந்துள்ளனர். இன்னும் சிலர் எந்த சட்ட வரையறையுமின்றி பொறுக்கியெடுக்கப்பட்டு, அரசாங்கத்தாலோ, அதன் ஏஜெண்டுகளாலோ கொலை செய்யப்பட்டுள்ளனர்.

முற்றிலும் வேறுபட்ட சித்தாந்தங்களைக் கொண்ட நாடுகளில் நடைபெற்றுவரும் இத்தகைய மீறல்களை

எதிர்கொள்ள சர்வதேச அறைகூவல் தேவைப்படுகிறது. மனித உரிமைகளைப் பாதுகாக்கும் உலகளாவிய பொறுப்பானது, தேச எல்லை, இனம், சித்தாந்தம் ஆகியவற்றைக் கடந்ததாகும். இந்த அடிப்படை நம்பிக்கையைக் கருத்தில் கொண்டே அம்னஸ்டி இண்டர்நேஷனல் செயல்படுகிறது.

## அம்னஸ்டி இண்டர்நேஷனல் என்பது என்ன?

அம்னஸ்டி இண்டர்நேஷனல் ஒரு சுதந்திரமான உலகந்தழுவிய இயக்கம். அது சர்வதேச மனித உரிமைப் பாதுகாப்பில் ஒரு முக்கிய பங்காற்றுகிறது. அதன் செயல்கள் சிறையிடப்பட்டவர்கள் மீது ஒருமுகப்படுத்தப்படுகின்றன.

- இது மனசாட்சிக் கைதிகளின் விடுதலைக்காக பாடுபடுகிறது. தங்கள் நம்பிக்கைகள், நிறம், பால், இனம், மொழி மற்றும் மதம் ஆகியவற்றிற்காக காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களே மனசாட்சிக் கைதிகள்; இவர்கள் வன்முறையில் ஈடுபடுவதோ அதை போதிப்பதோ கிடையாது.
- இது அனைத்து அரசியல் கைதிகளுக்கும் நேர்மையான காலதாமதமற்ற விசாரணை கிடைக்கச் செயல்படுகிறது.
- இது மரணதண்டனையை முற்றிலும் எதிர்க்கிறது. மேலும் கைதிகள் சித்திரவதை செய்யப்படுவது, குரூரமாக, கீழ்த்தரமாக, மனிதாபிமானமற்ற வகையில் நடத்தப்படுவது மற்றும் தண்டிக்கப்படுவது ஆகியவற்றையும் இது எவ்வித பாகுபாடுமின்றி எதிர்க்கிறது.

## யார் அம்னஸ்டி இண்டர் நேஷனலை ஆதரிக்கிறார்கள்?

அம்னஸ்டி இண்டர்நேஷனலுக்கு உலகெங்கும் ஊக்கமிக்க உறுப்பினர்கள் இலட்சக்கணக்கில் உள்ளனர். 150க்கும் மேற்பட்ட நாடுகளில் 700,000-க்கும் அதிகமான உறுப்பினர்கள் சந்தாதாரர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இப்பணியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ளனர். அம்னஸ்டியின் குறிக்கோளை ஆதரிக்கும் எவரையும் இவ்வியக்கம் வரவேற்கிறது. வாழ்க்கையின் பல வேறுபட்ட நிலைகளிலிருந்து வரும் பல்வகைப்பட்ட சிந்தனையோட்டத்தைக் கொண்ட இதன் உறுப்பினர்கள், அம்னஸ்டி இண்டர்நேஷனலின் பலவித நடவடிக்கைகளில் முழுமையாகப் பங்கேற்க ஊக்கம் அளிக்கப்படுகிறார்கள்.

அம்னஸ்டி இண்டர்நேஷனல் அரசியல் சார்புடையதா?

அம்னஸ்டி இண்டர்நேஷனல் அரசியல் சார்பற்றது. அது எந்த அரசாங்கத்தையும் அரசியல் அமைப்பையும் ஆதரிப்பதோ, எதிர்ப்பதோ கிடையாது. அத்துடன் அது எந்தக் கைதிகளின் உரிமைகளைக் காக்க போராடுகிறதோ அவர்களின் கொள்கைகளை ஆதரிப்பதோ, எதிர்ப்பதோ இல்லை. அது அரசாங்கத்தின் சித்தாந்தம் அல்லது பாதிக்கப்பட்டவரின் நம்பிக்கை பற்றி பொருட்படுத்தாது. ஒவ்வொரு வழக்கிலும் உள்ள மனித உரிமைப் பாதுகாப்பு குறித்து மட்டுமே அக்கறை கொள்கிறது.

## அம்னஸ்டி இண்டர்நேஷனல் தகவல்களை எவ்வாறு சேகரிக்கிறது?

அம்னஸ்டி இண்டர்நேஷனல் உண்மைகளை பாரபட்ச மற்றும் துல்லியமாகவும் தெரிவிப்பதற்கு அதிக

முக்கியத்துவம் அளிக்கிறது. அதனுடைய செயல்பாடுகள் மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகளை ஆழ்ந்த கவனத்துடன் ஆய்வு செய்வதைச் சார்ந்திருக்கிறது. லண்டனில் உள்ள தலைமைச் செயலகத்தில் (40 நாடுகளைச் சேர்ந்த 250 பேர் இங்கு பணியாற்றுகின்றனர்) உள்ள ஆய்வாளர்கள் பல்வேறு வழிகளில் செய்திகளைச் சேகரித்து அவற்றை ஆய்வு செய்கின்றனர். ஆய்வு செய்யப்படுபவற்றில், நூற்றுக்கணக்கான, பத்திரிகைகள் மற்றும் செய்தித்தாள்கள், அரசு அறிக்கைகள், வானொலி ஒலி பரப்புகள், வழக்குரைஞர்கள் மற்றும் மனிதாபிமான அமைப்புகளின் அறிக்கைகள், சிறையில் இடப்பட்டவர்கள், அவர்களின் உறவினர்கள் ஆகியோரின் கடிதங்களும் அடங்கும். இத்துடன் அம்னஸ்டி இண்டர்நேஷனல், உண்மையை கண்டறியும் குழுக்களை நேரடியாக ஆராய்வதற்கும், விசாரணைகளில் பார்வையாளராக கலந்து கொள்வதற்கும், கைதானவர்களை சந்திப்பதற்கும், அரசாங்க அதிகாரிகளுடன் நேர்முக உரையாடல் நிகழ்த்தவும் அனுப்புகிறது. அம்னஸ்டி இண்டர்நேஷனல் அது வெளியிடும் அறிக்கைகள் குறித்து முழுப்பொறுப்பு ஏற்பதுடன் அதன் எந்த நிலையிலும் தவறு இருப்பதாக நிரூபிக்கப்பட்டால் திருத்தம் வெளியிடவும் தயாராக உள்ளது.

## அம்னஸ்டி இண்டர்நேஷனலுக்கு எங்கிருந்து பணம் கிடைக்கிறது?

அம்னஸ்டி இண்டர்நேஷனல் நிதியைப் பொறுத்தவரை அதன் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களின் நன்கொடையைச் சார்ந்தே உள்ளது. அதனுடைய புணிகளுக்கு அரசியல் சுதந்திரம் போலவே, பொருளாதார

சார்பின்மையும் இன்றியமையாததாகும். நன்கொடைகள் ஏற்பது குறித்து, அம்னஸ்டி கடுமையான விதிமுறைகளைக் கொண்டுள்ளது. அம்னஸ்டியால் பெறப்படும் நிதி அதன் நடுநிலையை பாதிக்காமல், நிதியளிப்பாளரைச் சார்ந்து நிற்காமல், அதன் செயல்பாட்டுச் சுதந்திரத்தை தடுக்காமல் இருக்கின்றதா என்பது உறுதி செய்து கொள்ளப்படுகிறது. பொதுவாக பெரும்பான்மையான நிதி, சிறிய, தனிப்பட்ட நன்கொடைகள், உறுப்பினர் கட்டணங்கள் மற்றும் நிதி சேகரிப்பு முயற்சிகளில் இருந்தே கிடைக்கிறது. தன்னுடைய நிதிக்காக அம்னஸ்டி, எந்த ஒரு அரசாங்கத்தின் பணத்தையும் ஒரு போதும் நாடுவதோ பெறுவதோ கிடையாது.

## உலகெங்கும் அம்னஸ்டி இண்டர்நேஷனல்

உலகெங்கும் பல்வேறு நாடுகளில் உள்ள 700,000க்கும் அதிகமான உறுப்பினர்களில் பெரும்பாலோர் ஆங்காங்கு சிறு குழுக்களாக இணைந்து பணியாற்றுகின்றனர். தற்போது ஆப்பிரிக்கா, ஆசியா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் சுமார் 4149 குழுக்கள் உள்ளன. ஒவ்வொரு நாட்டிலுள்ள குழுவும் தனது நாடு அல்லாத பிற நாடுகளில் சிறையிடப்பட்டிருக்கும் கைதிகளின் சார்பாக செயல்படுகின்றது. இது பாரபட்சமற்ற செயல்பாட்டிற்கு வழி செய்வதுடன் மனித நேயம் தேச எல்லைகளைக் கடந்த ஒன்று என்ற அம்னஸ்டியின் கொள்கையையும் உறுதி செய்கிறது. ஒவ்வொரு குழுவும் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த இரு கைதிகளின் வழக்கை எடுத்துக் கொண்டு, அக்கைதிகளின் விடுதலைக்காக தொடர்ந்து அவ்வரசாங்கத்திற்கு கடிதம் எழுதுகின்றது. வேறு பல நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது.

எந்த குழுவோ அல்லது உறுப்பினரோ தனது நாட்டைக் குறித்து அம்னஸ்டிக்கு தகவல் அளிக்கும்படி எதிர்பார்க்கப்படுவதில்லை. அது போல அவர்களது நாட்டில் நடக்கும் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச இயக்கம் விடுக்கும் அறிக்கைகளுக்கோ, அதன் செயல்பாட்டிற்கோ அவர்கள் எவ்வகையிலும் பொறுப்பில்லை.

அம்னஸ்டி இண்டர்நேஷனல் ஜனநாயக முறையில் நடத்தப்படுகிறது. 60-க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள உறுப்பினர்கள், அந்தந்த நாட்டின் நாட்டுப்பிரிவு அமைப்பின் செயற்குழு உறுப்பினர்களை தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கின்றனர். இப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அடங்கிய சர்வதேச கவுன்சில் முக்கியமான கொள்கைகள் குறித்த முடிவுகளை எடுக்கிறது. அவர்கள் எடுத்த முடிவுகளை முறைபடுத்தவும், தலைமைச் செயலகத்தின் அன்றாட நடவடிக்கைகளை மேற்பார்வையிடவும் ஒரு சர்வதேச நிர்வாகக்குழு தேர்ந்தெடுக்கப்படுகிறது.[11]

## கல்வி விரிவாக்கம்

அடிப்படைக் கல்வி வசதியினைப் பெருக்குவதும் வயது வந்தவர்களுக்குக் கல்வி வசதிகளை ஏற்படுத்துவதும் பத்தாண்டுகளில் 1995-2005 ஐ.நா.வின் தலையாய செயற்திட்டமாக இருந்தது. முறைசார்ந்த கல்வி, அதன் முக்கியத்துவம் குன்றாமல் தீவிரப்படுத்த அதே சமயம், கிராமப்புற மக்களின் தேவைகளுக்கு ஏற்ப தக்க மாறுதல்கள் செய்யப்பட்டன.

பின்தங்கிய பகுதிகளில் வசதிகளைப் பெருக்குதல் சமுதாயத்தின் ஒத்துழைப்பு உணர்வைத் தூண்டுதல், புதிய, அணுகுமுறைகளை வகுத்தல் ஆகிய மூன்றும் ஒரே சமயத்தில் செயல்படும். குழந்தைகளுக்கும் முதியோருக்கும் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்குத் தக்க பயிற்சியளிப்பதிலும் பள்ளிக் கல்வியை முடித்துப் பணியுலகுக்குள் நுழையும் இளைஞர்கள் புதிய முயற்சிகளில் ஈடுபட ஆர்வமூட்டுவதிலும் தனிக்கவனம் செலுத்தப்படும்.

## கல்வியைப் பரவலாக்குதல்

கல்வித்துறை நடவடிக்கை ஒவ்வொன்றும் நீதி மற்றும் சம உரிமைக் கொள்கையின் அடிப்படையில் அமையுமாறு செய்வது இரண்டாவது முக்கிய நோக்கமாகும். கல்வியில் எல்லா வகை ஓர வஞ்சனைகளையும் எதிர்த்து யுனெஸ்கோ தொடர்ந்து போராடும். மிகவும் பின் தங்கியுள்ள சமூகக் குழுமங்கள் கல்வி பெறுவதற்கான தங்கள் உரிமையைப் பயன்படுத்திக் கொள்வதை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளுக்கு உதவி புரியும்.

கல்வியை மக்களிடம் பரப்பும் பணி, ஆயுட்கால கல்வியுடன் இரண்டற இணைந்ததாக இருக்கிறது. எனவே பல்கலைக்கழகத்திற்கும், பள்ளிக்கும் செல்ல இதுவரை வாய்ப்புப் பெற்றிராத மக்களுக்கு, கல்வி வசதிகளை விரிவுபடுத்த வேண்டும்.

ஆயுட்காலக் கல்வியில் முதியோர் கல்வி முதலிடம் பெறுகின்றது முதியோர் கல்வி நிறுவனங்கள் தொழிலாளர் மற்றும் தொழிலதிபர் நிறுவனங்கள் ஆகியவற்றிடையே ஒத்துழைப்பை ஏற்படுத்துவதன் வாயிலாக முதியோர்

எளிதாக வேலையை மாற்றிக் கொள்வதற்கு வசதி செய்து கொடுக்கப்படும். மேலும் கல்வியறிவின் துணை கொண்டு, நகராட்சிப் பொறுப்புகளுக்கும் சமுதாய விவகாரங்களின் மேலாண்மைக்கும் முதியோரை ஆயத்தப்படுத்துவதிலும் தனிக்கவனம் செலுத்தப்படும்.

ஆயுட்கால கல்வி என்பது, முதியோர் கல்வி நடவடிக்கைகளுடன் உள்ளடங்கும். இது சிலவகைச் சமூக பொருளாதார மற்றும் சமூக பண்பாட்டு முட்டுப்பாடுகளுக்குச் சரியீடாக அமையும்.

## மகளிர் கல்வி

பல நாடுகளில் கல்வியில் மகளிர் இன்னும் சிறுபான்மையினராகவே உள்ளனர். கல்வியின் நிலை உயர உயர மகளிர் விகிதம் குறைந்து கொண்டே வருகின்றன.

மக்களிடையே படிப்பறிவின்மை அதிக அளவில் நிலவுவதைப் போக்குவது உடனடிப் பிரச்சினையாக உள்ளது. 1980-2001இல் 15 வயதுக்கு மேற்பட்ட பெண்களில் 33.9% பேர் படிப்பறிவில்லாதவர்கள்; ஆண்களில் இந்த விகிதம் 23.3% இதனால் இளந்தலை முறையினரின் எதிர்காலத்தில் தீய விளைவுகள் ஏற்படுகின்றன.

மகளிர் கல்வி பெறுவதற்கு முட்டுக்கட்டையாக இருக்கும் சமூக அல்லது பண்பாட்டுக் காரணிகளை அகற்றுவது இதில் யுனெஸ்கோவின் முக்கிய நோக்கமாக அமைந்துள்ளது. இதற்கு சமூகவியல் மற்றும் மானிடவியல் போன்ற பல்வேறு துறையினருடன் இணைந்து யுனெஸ்கோ செயற்படுகிறது. ஆசிரிய தொழிலில் மகளிர் அதிக அளவில் ஈடுபாடு கொள்வதற்கும் ஊக்கமளிக்கப்படும்.

மகளிரிடையே படிப்பறிவின்மையைப் போக்குவதற்கான கொள்கைகளை வகுப்பதில் உறுப்பு நாடுகளுடன் யுனெஸ்கோ ஒத்துழைக்கும். தொழில் மற்றும் தொழில் நுட்பக் கல்வியில் எல்லா நிலைகளிலும் மகளிருக்குச் சமவுரிமையளிப்பதை ஊக்குவிக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாகத் தேசிய அளவில் கல்வி மற்றும் தொழில் வழிகாட்டும் பணிகளை மேம்படுத்துவதற்கு உதவியளிக்கப்படும்.

## கிராமப்புறங்களில் கல்வி

பல நாடுகளில் பெரும்பாலானாவர் கிராமப்புறங்களிலேயே வாழ்கின்றார்கள். கிராமப்புறங்களில் பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்களை நிறுவுவதலும், கிராமப்புறக் கல்விப் பணிகளின் தரத்தை உயர்த்துவதுதான் இப்பொழுதுள்ள பிரச்சினை. கிராமப் புறங்களில், பள்ளிகளும் பல்கலைக்கழகங்களும் மாணவர்கள் வசிக்குமிடங்களிலிருந்து வெகு தொலைவில் உள்ளன. பல பள்ளிகள் முழுமையான கல்வி வசதியை அளிக்கவில்லை. ஆசிரியர்கள் உரிய தகுதி பெற்றவர்களாயில்லை. பள்ளிக்கட்டிடங்களும், சாதனங்களும் போதிய அளவில் இல்லை. நகர்புறக் கல்விக்கும் கிராமப்புறக் கல்விக்கும் வேறுபாடு ஏற்பட்டிராத வகையில் அதே சமயம் கிராம மக்களின் தேவைகளுக்கு ஏற்ப கிராமப்புறக் கல்வியை மேம்படுத்த வேண்டியது இன்றியமையாத தேவையாகும்.

## ஊனமுற்றோர் அகதிகள் குடிபெயர்ந்தோர்

கல்வி பெறும் உரிமையை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதில் ஒரு சில குழுமத்தினருக்கு

ஏற்படும் இடையூறுகளைக் களைவதற்கு உதவி புரிவது யுனெஸ்கோவின் நோக்கமாகும். உடல் ஊனங்களைத்தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும், ஊனமுற்றோரின் பெற்றோருக்கு உரிய அறிவு புகட்டுவதில் தனிக்கவனம் செலுத்தப்படும். ஊனமுற்றோருக்கு கல்வி கற்பிக்கச் சிறப்பு முறைகள் வகுக்கப்படும். அவர்கள் சமுதாயத்தில் இரண்டற இணைவதில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

உலகில் இன்று ஒரு கோடி அகதிகள் உள்ளனர். இவர்களில் 50 இலட்சத்திற்கு மேல் ஆஃப்பிரிக்காவில் இருக்கின்றனர். அண்மை கிழக்குப் பகுதியிலுள்ள பாலஸ்தீன் அகதிகள் கல்வித்திட்டத்திற்கு UNRWA நிறுவனத்துடன் யுனெஸ்கோ ஒத்துழைத்தது. அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஆணையருடைய அகதிகளுக்கான கல்வி வசதித் திட்டங்களுக்குத் தேவையான தொழில் நுட்ப உதவியை யுனெஸ்கோ அளிக்கும். அகதிகளுக்கு அடைக்கலம் அளித்துள்ள நாடுகள், தங்களுடைய கல்விமுறையில் அகதிகளுக்கான பாடத்திட்டங்களைச் சேர்ப்பதற்கு ஊக்கமளிக்கும். தேசிய விடுதலை இயக்கங்களின் கல்விக்காக யுனெஸ்கோ அளிக்கும் உதவி விரிவாக்கப்படும்.

குடிபெயர்ந்து வந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்கள் பற்றிய பிரச்சினை மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுத்திருக்கிறது. குடிபெயர்ந்தவர்களின் இரண்டாம் தலைமுறையினர், அவர்கள் குடிபெயர்ந்துள்ள நாடுகளின் வாழ்க்கை முறையை ஏற்றுக்கொள்ளும்படி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களுக்குத் தாய்மொழியைக் கற்பிப்பதிலும் தனிக்கவனம்

செலுத்தப்படும். அவர்களுடைய தாயகத்தின் பண்பாட்டுத்தொடர்புகள் அறுந்துவிடாமல் பாதுகாக்கவும் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

## நடுத்தரக் காலத் திட்டக் கண்ணோட்டம்

### மனித உரிமைகள்

மனித உரிமைகள் பற்றிய ஆய்வு இன்றைய நிலையில் முரண்பாட்டைக் காட்டுகிறது. மனித உரிமைகள் என்பது கருத்து அளவிலும், பொருளிலும் விரிவடைந்துள்ளது. அவை மனித உரிமைகள், அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகள் எனப் பொருள்படுகின்றன. தனிமனிதர் மட்டுமல்லாமல், நாடுகளும் தம் உரிமைகளைத்துய்க்க வேண்டும். அதற்கு மாறாக அவை பெருமளவில் மீறவும்படுகின்றன. குறிப்பாக இன ஒதுக்கம், விடுதலை விழைவுள்ளோரும், ஆயிரமாயிரம் அகதிகளும் பெற வேண்டிய உரிமைகள் மறுக்கப்படுதல், எதிர் இயக்கங்களை ஒடுக்குதல், சித்திரவதை போன்றவற்றைக் கூறலாம்.

1. தனி மனிதரையும் நாடுகளையும் ஒன்றாக இணைக்கும் பொதுவானதோர் எதிர்காலத்தை உணரும் வகையில் இன்றைய உலகப் பிரச்சினைகளைத் தொடர்ந்து ஆராயத் துணை செய்தல்.

2. சமூக உலகச் சமுதாய வாழ்வில் தனிமனிதரும் தொகுதிகளும் பரவலாகப் பங்குபெற வழி வகுத்தல்

3. மக்களிடையே உண்மையான ஒப்புரவை ஏற்படுத்தும் பண்பு நெறிகளைப் புதுப்பித்து ஊக்கி, அதனால் அமைதியையும் மனித உரிமைகளையும் பேணுதல்.

4. 1. உலகப்பிரச்சினைகள், வருங்கால ஆய்வுகள் பற்றிய ஆராய்ச்சி

2. அனைவருக்கும் கல்வி

3. மனிதப் பணியின் செய்தித் தொகுப்பு

4. கல்வித் திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தல்

5. கல்வி, பயிற்சி, சமூகம்

6. அறிவியலும் அவற்றை வளர்ச்சிக்குப் பயன்படுத்துதலும்

7. தகவல் முறைகளும் அறிவு வாய்ப்புகளும்.

8. வளர்ச்சி நடவடிக்கையின் கொள்கைகளும் முறைகளும்செயல் திட்டங்களும்

9. அறிவியல், தொழில்நுட்பம், சமூகம்,

10. மனிதன் சூழ்நிலையும், நில, கடல் வளங்களும்

11. பண்பாடும் வருங்காலமும்

12. தப்பெண்ணம், சகிப்புத் தன்மை இன்மை, இனவெறி இன ஒதுக்கம் ஆகியவற்றை ஒழித்தல்

13. அமைதி, பன்னாட்டு ஒப்புரவு, மனித உரிமைகள் நாடுகளின் உரிமைகள்

14. மகளிர் நிலை.

இப்பெருந்திட்டம் மனித நடவடிக்கையின் எல்லாத் துறைகளிலும் ஆடவர், மகளிர் பெரும்பங்கு பற்றி புதிய கருத்தை வகுக்க முனைகின்றது. ஆயினும் யுனெஸ்கோ ஈடுபட்டுள்ள பிரச்சினைகளில் மகளிர் சார்ந்த இயல்புகள் திட்டத்தின் எல்லாப் பகுதிகளிலும் காணப்படுகின்றன.

## அடிக்குறிப்புகளும் சான்றுகளும்

1. Universal Delaration of Human Rights
2. I bid
3. தாமஸ் ப்யூர்கெந்தால் "பல்கலைகழகங்களுக்கு ஓர் அறை கூவல் யுனெஸ்கோ கூரியர் டிசம்பர் 1978.
4. Convention against Discrimination in Education, Adopted by the General Conference of the UNESCO on 14 December 1960, Entry into force: 22 May 1962, in accordance with article 14.
5. Discrimination (Employment and Occupation) Convention No. 111 Adopted on 25 June 1950 by ILO Entry into force: 15 June 1960 in accordance with article. 8.
6. Declaration of the Rights of the Child, proclaimed by the General Assembly of the United Nations on 20 November 1959 (resolution 1386 XIV).
7. Amnesty International, 1967. Edy Kaufman " Prisoners of Conscience: The shaping of A New Human Rights Concpet" HRQ 13, No. 3, (August 1991) 339-368; Amnesty International UN: Oral Statement on Thematic Mechanisms, AI Index : IO'R 41/WU 02/1994; பன்னாட்டளவில் சுமார் 1000க்கும் மேற்பட்ட பெரிய சிறிய அளவிலான தன்னார்வ நிறுவனங்கள், குழுக்கள் மனித உரிமைகளைக் காப்பதில் முனைந்துள்ளன. உதாரணத்திற்கு சில 1. Friends world committee for consultation (FWCC)- Quake United Nations Office (Geneva). Geneva; 2. International Alert (IA) London; 3. International Movement Against All Form's of

Discrimination and Racism (IMADR) Tokyo; 4. Africa watch India Alert Oak Park; 5. Commission for Justice and Peace (CJP) Dhaka; 6. Japan Civil Liberties Union, Tokyo; 7. Tamil Information Centre (TIC), London; 8. Human Rights, Internet, (HRI) Toronto, Canada; 9. Busma Rights Movement for Action, (BURMA) Bangkok; 10. Child Workers in Nepal, (CWIN) Kathmandu; 11. Manushi New Delhi; 12. Law Association for Asia and the pacific (LAWASIA) Kensington; 13. Americans Watch Committee, (AW) New York; 14. American Friends Service Committee (AFSC) Philadelphia; 15. American Bar Association. (ABA) Chicago; 16. Article 19, London; 17. Human Rights Society of Pakistan Lahore; 18. Indian Social Institute (ISI) New Delhi. (ISI) New Delhi; Donald P. Kommers and Gilburt D Loescher (Ed) **Human Rights and American Foreign Policy** (Note Dame: University of Note Dame Press 1979) 75,88,181 and 240. Amnesty International Report 1977, (Ethiopia's Summary Killings ) 69-72. Sumner B. Twiss "Torture, Justification and Human Rights: Toward and Absolute proscription" **Human Rights Quarterly** Vol. 29 No. 2 May 2007, 346-367. Henry Forbes Smith and Mark Freeman "the Mandatory Reporting of Torture by Detention Center Officials. An Original Proposal" **Human Rights Quarterly** 27 (2005) 327-349.

8. International Commission of Jurists (ICJ) 1952.

9. International Association of Democratic Lawyers, 1945.

10. International League for Human Rights 1942.

11. Amnesty International Annual Publications.

# 4. மனித உரிமைகளும் சட்டமும்

எதேச்சதிகார அதிகாரம் செலுத்துபவரும் அதிகாரம் செலுத்த இடமளிப்பவரும், பெரும் குற்றவாளிகள், உலகில் எங்கு எதேச்சதிகாரம் தலை தூக்கினாலும் அதை எதிர்க்கக் கடமைப்பட்டவன் மனிதன்.... எவனொருவனும் எதேச்சதிகாரம் செலுத்த முடியும் என்று கூறுவது அரசியலில் பெரும் கயமையாகும்

- எட்மண்ட் பர்க்

## மனித உரிமைகளும் புதிய சட்ட அறிவுக் கொள்கைகளும்

மனித தன்மையை அடிப்படையாகக் கொண்டு மனித உரிமைகள் எழுகின்றன. அத்தகைய உரிமைகள் உண்டு என வெகுகாலமாக நம்பப்பட்டு வந்த போதிலும் அவை பற்றி வழக்கறிஞர்கள் அண்மைக் காலத்தில்தான் ஆழ்ந்த அக்கறைக் காட்டலாயினர். அரசியல் காரணமாக இத்தனை காலமும் மனித உரிமைகள் சட்டத்தின் வெளிச்சம் படாமல் இருளில் கிடக்க நேரிட்டது. சட்ட வல்லுனர்கள் அவற்றைப் புறக்கணித்து விட்டு மாமூலான பழைய சட்டங்களையும் விதிகளையும் பற்றியே கவனம் செலுத்தி வந்தனர். யாராவது ஓரிருவர் மனித உரிமைகள் பற்றி ஆராய வேண்டுமென எண்ணினாலும் பரம்பரைப் புறக்கணிப்பு காரணமாக அவற்றின் பக்கம் போக முடிவதில்லை.

இன்று அந்த பழைய போக்கு மாறிவருகின்றது. மனித விவகாரங்கள் பொறுத்துத்தீர்ப்புக் கூறுகின்றவர்கள், சட்டங்களின் முகப்புரைகளில் உரிமைகள் பற்றி விளம்பரப் படுத்தப்பட்டுள்ள கொள்கைகளின் அடிப்படையில் தீர்ப்புகள் வழங்க முற்படுகிறார்கள். நம் காலத்தில், மனித உரிமைகள்

பெயரால் புரட்சிக் கொடியை உயர்த்துவது ஆர்வம் என்றாலும் மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டுமென எடுக்கப்படும் நடவடிக்கைகள் ஏராளமாக உள்ளன. இந்த மாறுதல் ஒன்றே, மனித உரிமைகள் சட்டத் துறையில் ஓர் அங்கமாகி விட்டதென்பதைக் காட்டும்.

மனித உரிமைகள் சட்டத்தின் பார்வையினுள் வர வேண்டுமானால் மூன்று விதிகள் உண்டு;

முதலாவதாக, சட்ட ரீதியாக நிறுவப்பட்ட அரசினைக் கொண்ட சமூகம் வேண்டும்.

இரண்டாவதாக, மனித உரிமைகள் செலுத்தப்படுவதற்கான சட்ட ஏற்பாடு கொண்டதாய் அரசின் உள் அமைப்பு இருத்தல் வேண்டும்; அந்தச் சட்ட ஏற்பாடானது, உரிமைகளின் இயல்புகளையும், வெவ்வேறு சூழ்நிலைகள் எழக் கூடியதையும் கணக்கில் கொண்டு போதுமான நெகிழ்ச்சிக்கு இடமளிப்பதாய் இருத்தல் வேண்டும்.

மூன்றாவதாக, மனித உரிமைகள் மதிக்கப்படுகின்றன என்பதை உறுதி செய்யும் வகையில், விதிகளைக்கொண்ட தெளிவான சட்டப் பாதுகாப்பு ஏற்படுத்த வேண்டும்; மனித உரிமைகளைப் பயன்படுத்துவதற்கு அப்பாதுகாப்பு உதவ வேண்டும்.

சுதந்திர நாட்டில்தான் மனிதன் சுதந்திரமுள்ளவனாக விளங்க முடியும். ஒரு நாட்டின் மக்கள் சுய நிர்ணயம் செய்வதைப் பொறுத்து, அந்நாட்டின் சுதந்திரம் அமையும். “மக்கள் அனைவரும் தம் நிலையைத் தாமே நிர்ணயிக்கும் உரிமை உண்டு. அந்த உரிமையை ஆதாரமாய்க் கொண்டு அவர்கள் தமது அரசியல் அந்தஸ்தைச் சுதந்திரமாய் நிர்யணம் செய்வர்; தத்தம் பொருளாதாரம், சமூக கலாச்சார மேன்மைக்குரிய வழிகளைச் சுதந்திரமாய்ப் பின்பற்றுவர்.”[1] “எல்லா மக்களுக்கும் தம் நிலையைத் தாமே நிர்ணயிக்க

உரிமை உண்டு. அந்த உரிமையின் அடிப்படையில் அவர்கள் தம்தம் அரசியல் அந்தஸ்தைச் சுதந்திரமாய் நிர்யணயம் செய்து தம்தம் பொருளாதார, சமூக, கலாச்சார முன்னேற்றத்தை சுதந்திரமாய் தொடர்வர் (பகுதி-1 பிரிவு-1) "2

தனிப்பட்டவருக்குச் சுதந்திரம் எப்படி வாழ்வின் அடிப்படையாக இருக்கிறதோ அப்படி ஒரு சமூகத்திற்கு அடிப்படையாக இருப்பது கூட்டு சுயநிர்ணயம். இந்தப் பொருளில் ஷசுயநிர்ணயம்' என்பதை தனிநபர் உரிமை என்று எடுத்துக் கொள்ள முடியாது. மனித உரிமைகள் மொத்தத்துக்கும் இன்றியமையாத தகுதிக் கூறாக "சுயநிர்ணயம்" இருக்கிறது என்பதில் ஐயமில்லை. சுதந்திரம் கொண்டிராத சமூகத்தில் தனி நபர்கள் சுதந்திரத்துடன் வாழ முடியாது.

எனவே, மனித உரிமைகளுக்கு மதிப்பு ஏற்படவேண்டுமானால் சுயநிர்ணயம் இருந்தாக வேண்டும் என்பது தெளிவு. அவை மதிக்கப்படுவதை மட்டும் உறுதி செய்தால் போதுமா?

சுயநிர்ணயத்தால் பெறப்படும் சுதந்திரம் என்பது ஒரு மக்கள் கூட்டம் பெறும் விடுதலை என்று ஆகுமென்றாலும் தனிநபர்களின் விடுதலை என்று ஆவதாகச் சொல்வதற்கு யாருக்கும் தைரியம் ஏற்படாது. சமுதாய அமைப்பிலேயே மனித உரிமைகளுக்கு ஒரு சிறப்பான இடம் ஒதுக்கவில்லையென்றால், அவை வெறும் சொற்கூட்டமாக ஆகிவிடக்கூடும். தனிநபர் சம்மந்தபட்டதாக மனித உரிமைகளின் இலக்கணம் இருக்கின்ற போதிலும், அடிப்படை கருத்து சமுதாயப் பாங்கானதாகும். இந்த அம்சத்தை நாம் கவனிக்க தவறுகிறோம். அதன் விளைவாக, மனித உரிமைகளும் அரசதிகாரமும் ஒன்றுக்கொன்று எதிராக உள்ளன என்ற கருத்து ஏற்படுகிறது.

இந்த எதிரம்சம் ஒரு வகையில் இயற்கையானது; தானாக ஏற்படக் கூடியது. ஆகவே இரண்டுக்குமிடையே சமநிலை உண்டாக வேண்டுமென்றால் ஒவ்வொன்றின் மீதும் சரியான வரையறைகள் விதித்தால் தான் முடியும். ஆனாலும் அவற்றுக்கிடையே அடிப்படையில் வலுவான வேற்றுமை இருக்கத்தான் செய்யும் என்று நினைப்பது ஆபத்தானது. மனித உரிமைகளுக்கு சட்டப்போக்கில் சிறப்புத்தகுதி உண்டாக்க முயற்சி செய்யும் சமயத்தில் அத்தகைய கருத்து இருப்பது கூடாது. ஏனெனில் சட்டம்தான் அத்தகைய வேறுபாடு தோன்றும்போதெல்லாம் மனித உரிமைகளுக்குக் காப்பரணாகவும் தூண்டுதலாகவும் இருக்கக் கூடியது. அரசிடம் ஆதிக்கவலு எப்போதும் உண்டு. வேறுபாடு எழும் நேரத்தில் ஆதிக்க வலு செயல்பட்டு, மனித உரிமைகள் தோற்கத்தான் நேரிடும். எனவே சட்டமியற்றி வரையறைகள் விதித்தல் வேண்டும்.

ஆனால், மனித உரிமைகள் பொறுத்து சமுதாயப் பின்னனியில் கவனித்தால், அவற்றுக்கு வரையறை விதிப்பதற்கு நியாயம் கொஞ்சம் என்றும், அவற்றை வளர்ப்பதற்கான நியாயமே அதிகமென்றும் தோன்றும். வழக்கறிஞர்கள் வரையறை விதித்தல் என்று சொல்லமாட்டார்கள்; அவர்கள் ஒழுங்குமுறைப்படுத்துதல் என்றுதான் குறிப்பிடுவார்கள்.

ஒழுங்குமுறைப் படுத்துதல் என்பதற்கு உதாரணமாக சாலையில் வண்டி வாகனங்கள் இடப்புறம் அல்லது வலப்புறம் செல்ல வேண்டும் என்று விதி உண்டாக்குவதைக் கூறலாம். அந்தவிதி போக்குவரத்தைத் தடங்கல் செய்துவிடாது. ஆனால் போக்குவரத்து வசதியாக ஒழுங்காக நடைபெறுவதற்கு உதவும். அதே போல, ஏகபோக நிறுவனங்களை தேசியமயமாக்குவதும், பெருஞ்சொத்துகளுக்கு மிகுந்த வரி விதிப்பதும், சொத்துரிமையை ஒழிப்பதாகாது. செல்வம் சிலரிடம் மட்டுமே

முடங்காமல் பலருக்கும் பயன்படுவதாக இருக்க வேண்டும் என்பதே நோக்கம். எனவே ஒழுங்குமுறைப்படுத்துதலால் நன்மையே உண்டு.

சுதந்திரமான அரசினால் அறிவுப்பு செய்யப்பட்டு சட்டத்தினால் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்டிருந்த போதிலும், திறமான உத்தரவாதம் இல்லையென்றால் மனித உரிமைகள் ஒரு முக்கியத்துவமில்லாமல் போய்விடக்கூடும். மனித உரிமை கொண்டிருப்பவர்களுக்குத் தீங்கு ஏற்படுமானால், தீர்வு பெறுவதற்கான உறுதிப்பாடு இருக்க வேண்டும். இந்தத் தீர்வு இருவகைகளில் பெறக் கூடியதாக இருக்கலாம். நிறுவப்பட்ட முறையில் தீர்வு பெறுவது ஒன்று. நிறுவப்படா முறையில் பெறுவது மற்றொன்று

ஓர் அரசின் எல்லைக்குள் நிறுவப்பட்ட முறையில் தனிப்பட்ட ஒருவர் தன்னைப் பொறுத்த மனித உரிமையைப் பாதிக்கும் நடவடிக்கைகள் நீக்கம் செய்யப்பட வேண்டுமென்று தீர்வு கோரிப் பெறலாம். அது இயலாத போது தனக்கு ஏற்பட்ட தீங்குக்காக இழப்பீடு பெறலாம். அனைத்துலக அளவிலும் அதைபோலதீர்வுகள் பெறமுடியும்.

நிறுவப்படா முறையில் நியாயமற்ற சட்டமொன்றுக்குப் பணிய மறுப்பதற்கான உரிமை உண்டு. இந்த உரிமை எந்த நாட்டிலும் எந்தச் சட்டப் புத்தகத்திலும் காணப்பட மாட்டாது. எனினும், எல்லா மனிதனின் மனசாட்சியிலும் இந்த உரிமை பதிந்திருக்கிறது. நிறுவப்பட்ட முறையில் உள்ள பாதுகாப்புகள் போதுமான அளவில் இல்லாதவிடத்து, அடக்கு முறையை எதிர்ப்பதே மனித உரிமைகளுக்குக் கிடைத்துள்ள பெரிய உறுதிப்பாடாக அமையும். இந்த எதிர்ப்பு உரிமையானது 1776 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 4-ஆம் தேதியிட்ட ஐக்கிய அமெரிக்காவின் விடுதலை அறிக்கையில் எழுதப்பட்டுள்ளது. 1793 ஆம் ஆண்டு ஜுன் 24 ஆம் தேதியிட்ட பிரெஞ்சு நாட்டின் மனிதனின் உரிமைகள்

பற்றிய அறிக்கையில் விளம்பரப்படுத்தப்பட்டு உள்ளது. அனைத்துலக மனிதகுல உரிமைகளின் அறிக்கையிலும் இந்த எதிர்ப்பு உரிமை இடம்பெற்றுள்ளது. அவ்வறிக்கையின் முகப்புரை பின்வரும் வாசகத்தைக் கொண்டுள்ளது.

"கொடுங்கோன்மைக்கும் அடக்கு முறைக்கும் எதிராக மனிதன் கடைசிவழியாக புரட்சிக் கலகம் செய்யும்படி கட்டாயப்படுத்தப்படாமல் இருக்க வேண்டுமானால், மனித உரிமைகள் சட்ட முறையால் பாதுகாக்கப்பட வேண்டியது இன்றியமையாததாகும்."[3]

யுனெஸ்கோவின் மத்திய காலத்திட்டம் (1977-1982) அடுத்து மனித உரிமைக்கல்வி பத்தாண்டுகள் 1995-2004 பின்வருமாறு விளம்பியது.

மனித உரிமைகள் என்பவை புதிய ஒழுக்க நெறிகள் அல்ல, புதிய சமயக் கருத்துக்களும் இல்லை. அவை மனித குலத்தினர் அனைவருக்கும் பொதுவானவை. மெய்ஞ்ஞானம், அறிவியல், சமூக இயல், சட்டம், வரலாறு, அல்லது புவி இயல் எந்தத் துறையில் ஆய்வோரும் மனித உரிமைகளைப் பற்றி ஆராய்ந்து, அவை பற்றிய கருத்துக்களைத் தம் துறையில் இணைத்துக் கொள்வது அவசியம். இப்படி மனித உரிமைகள் அறிவியல் போக்கில் உருவாவதைப் படிப்படியாக வளர்க்க வேண்டும்.[4]

மனித உரிமைகள் பற்றியும், அவற்றைப் போதிப்பது பற்றியும் யுனெஸ்கோ கொண்டுள்ள ஈடுபாடு எல்லோரும் அறிந்ததே. யுனெஸ்கோவின் அமைப்புத் திட்டத்திலேயே "மனித உரிமைகளை வளர்க்க வேண்டும்" என்று பொறிக்கப்பட்டுள்ளது. யுனெஸ்கோ நிறுவனத்தின் நோக்கமே அதுதான்.[5]

மனித உரிமைகள் பற்றிப் போதிக்கும் விஷயத்தில் அதன் பணியை அங்கீகரித்து ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையம் 1971 மார்ச் மாதத்தில்

யுனெஸ்கோ மேலும் செய்ய வேண்டிய செயல்கள் பொறுத்து பின்வருமாறு கூறியுள்ளது. மனித உரிமைகள் குறித்து முறையான ஆராய்ச்சி வேண்டும். அறிவியல் போக்கிலான தனிப்பட்ட ஆராய்ச்சித்துறை ஏற்படுத்தி ஆராய வேண்டும். உலகிலுள்ள முக்கிய சட்ட முறைகள் எல்லாவற்றையும் அலச வேண்டும். அப்போது மனித உரிமைகள் பற்றி புரிந்துகொள்ள வசதி ஏற்படும்.[6]

மனித உரிமைகள் தொடர்பாகச் செய்யும் ஆராய்ச்சியானது இதர கல்வித்துறையுடன்உறவு கொள்ளவும் அவற்றை வளப்படுத்தவும் உதவும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

## அறிவியலாளர்களின் அறிவியல்

மத்திய காலத்தில் தத்துவ இயலை "அறிவியல்களின் அறிவியல்" என்று குறிப்பிடுவார்கள். இக்காலத்தில் மனித உரிமைகள் "அறிவியலாளர்களின் அறிவியல்" ஆகின்றது. மனித உரிமைகள் என்னும் துறைக்கு அவ்வளவு முக்கியத்துவம் வழங்கத் தயங்குபவர்கள் கூட மற்ற துறைகளை ஆராயுங்கால் மனித உரிமைகளைப் பற்றியும் ஆராய்ச்சி செய்தால்தான் எந்த அளவிற்கு மனித உரிமைகள் உண்டு, எத்தனை விதங்கள் உண்டு, ஆங்காங்கு எப்படி உள்ளது, அனைத்துலக அளவில் எப்படி உள்ளது என்பனவற்றை அறிந்து கொள்ள முடியும் என்பதனை ஒத்துக்கொள்வார்கள்.

1978 செப்டம்பர் 12-16 தேதிகளில் வியன்னாவில் நடைபெற்ற மனித உரிமைகள் பற்றிப் போதிப்பது பொறுத்த அனைத்துலக மாநாட்டின் போது யுனெஸ்கோ வெளியிட்ட டைமென்ஸ் இன்டர்நேஷனல்ஸ் டெஸ் டிராய்ட்ஸ் டிஎல் ஹோமி என்ற அறிக்கை உண்மையில் ஒரு சட்டப் பாடப்புத்தகமாக அமைந்தது. பல்கலைக்கழகங்களில் சட்டக் கல்வித் துறையிலும், அரசியல் சமூகவியல் கல்வித் துறைகளிலும் பாடங்கள் போதிக்க உதவும் வகையில் அந்நூல் தயாரிக்கப்பட்டது.

கல்வி நலனை எண்ணியும் நடைமுறைச் செயல்களை எண்ணியும், யுனெஸ்கோ இப்படி சட்ட நூலாகக் கொண்டு வர நேரிட்டது. மனித உரிமைகள் எழுத்தில் வடிக்கும்போது சட்ட இயல் நிபுணர்கள் ஆராய்ந்து மனித உரிமைகள் பற்றிய வெவ்வேறு நூல்களிலிருந்து எடுத்துத் தர வேண்டியதாக இருக்கிறது. மனித உரிமைகள் பற்றி அறிவியல் போக்கில் ஆராய வேண்டும் என்ற கருத்துக்கு முதல் முதல் ஆதரவு அளித்தது உலகெங்குமுள்ள சட்டக் கல்வித் துறையாகும். சட்டக்கல்வி பேராசிரியர்களும் மாணவர்களும் இப்போது அரசமைப்புச் சட்டங்களிலும் அனைத்துலகப் பொதுச் சட்டத்திலும் கொடுக்கப்பட்டுள்ள பொதுவான விவரங்கள் காணவில்லை என்று மனித உரிமைகள் பற்றி மேற்கொண்டு அறிய விரும்புகிறார்கள்.

மனித உரிமைகள் பொறுத்து இப்போது சட்டமுறையில் அணுகிப் பார்க்கப்பட்டு வருகிறது. சமூகவியல் முறை சார்ந்ததாகப் பார்க்கப்பட வில்லை. இதனால், சமுதாய அமைப்புகளின் ஒரு பாகமே மனித உரிமைகள் என்பவை என்னும் உண்மையும், அச்சமுதாய அமைப்புகளில் உள்ள குறைபாடுகள் காரணமாக மனித உரிமைகள் சிலவற்றுக்கு ஊறு நேர்கிறது என்னும் உண்மையும் மறைக்கப்பட்டுப் போகக்கூடும், இந்த நிலை மாற வேண்டுமானால், மனித உரிமைகள் என்னும் பொருளைப் பல துறைகள் பொறுத்தும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளவேண்டும். அதற்கானவற்றை யுனெஸ்கோவும் மற்ற சர்வதேச நிறுவனங்களும் செய்துள்ளன அரசியல் மற்றும் சட்டவியல் மேதைகளும் நீதி அரசர்களும் விரிவாக ஆய்வு செய்துள்ளனர் என்பதை அறியும் போது மகிழ்ச்சி அடைகிறோம்.

## யுனெஸ்கோவும் மனித உரிமைகளும்

முந்திய வல்லாட்சிகளில் குடிகள்தாம் இடம் பெயர்ந்து செல்லும் உரிமையைக் கட்டுப்படுத்திய வெளிப்படையான கட்டுப்பாடுகளிலும், அரசு அதிகாரம் ஊட்டிய அச்ச

உணர்வினாலும், தம் அடிமைநிலையை ஏற்றுக் கொண்டனர். ஆனால் வருங்காலக் குடிகள் தம் வாழ்க்கையின் மூலத்திலேயே கட்டுப்படுத்தப்படுவதால் தம் அடிமை நிலையை விரும்பி அதைச் சுதந்திரம் என்பர் - வில்லியம் லெஸ்ய் கூறிய கருத்தின் அடிப்படையில் ஐ.நா.வும், யுனெஸ்கோவும் கவனம் செலுத்தியுள்ளன.

"தனிமனிதனின் உயர்வும் மதிப்புமே மக்களாட்சியின் ஆதாரக்கொள்கை, அதுவே எல்லா மதங்களும் போதிக்கும் உண்மை, நம்முடைய அரசியல், சட்டத்திலும் அக்கொள்கை இடம் பெற்றுள்ளது."

- (டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்)

மனித உரிமைகள் மீறுவது பற்றிய குற்றச் சாட்டுகளைக் கவனிப்பதற்காக (1) மார்ச் 3, 1 978 இல் யுனெஸ்கோவின் நிருவாகக் குழு தனது தீர்மானத்தின் வாயிலாகப் புதிய வழி முறைகளைக் கையாண்டுள்ளது.

இவற்றிற்கேற்ப தனிமனிதன் ஒருவரின் மனித உரிமைகள் மறுக்கப்படுவதையோ, அரசு சட்டப்படி அல்லது நடைமுறையில் மனித உரிமைகளுக்கு எதிராக செயல்படுத்தும் கொள்கையின் வாயிலாக அல்லது ஒரே வகையான தனிப்பட்ட நிகழ்ச்சிகளின் தொகுதியாக மனித உரிமைகள் பெருவாரியாக மறுக்கப்படுவதையோ பற்றி எவரும், எத்தொகுதியினரும், யுனெஸ்கோவின் பொது இயக்குநருக்கு எழுதலாம். யுனெஸ்கோ இத்துறையில் அறநெறிக்கேற்பவும், தனது சட்ட உரிமைக்கு உட்படும் இணக்க உணர்வுடனும் ஒப்புரவுடனும் செயலாற்ற வேண்டும். யுனெஸ்கோ பன்னாட்டு நீதிமன்றம் போல் செயலாற்ற இயலாது.

இத்தகைய முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமெனில் அவை பத்து நிபந்தனைகளுக்கு உட்பட்டும், மனித உரிமையின் அனைத்துலக அறிக்கைக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும்.

நிர்வாகக் குழுவின் தீர்மானம் வகுத்த வழிமுறைகளுக்கேற்ப, பொது இயக்குநர் தமக்கு தகவல் கிடைத்ததும், அதைக் குறிப்பிட்ட அரசாங்கத்திற்கு தெரிவிப்பதற்கும், நிருவாகக் குழுவின் பரிந்துரைக் குழுவிற்கு அறிவிப்பதற்கும் அத்தகவலைக்கொடுத்தவர் மறுக்க மாட்டார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

தகவல் தந்தவரின் இசைவைப் பெற்றதும், அதை அந்த அரசாங்கத்திற்கு அறிவித்து, பதில் பெறப்படும் முழு தகவலை இரகசியமாக ஆய்ந்து, நட்புறவான முடிவை ஏற்படுத்த இயலும். குழுதன் முயற்சியின் முடிவு என்ன வாயினும், தான் ஆய்ந்த தகவலைப் பற்றிய இரகசிய அறிக்கையை யுனெஸ்கோவின் நிருவாகக் குழுவிடம் சமர்ப்பிக்கும். நிருவாகக் குழு இவ்வறிக்கையை இரகசியமாக ஆராயும். ஆனால் மனித உரிமைகள் பெருவாரியாக் மறுக்கப்படுமாயின், நிருவாகக் குழு பொதுக்கூட்டங்களில் இதை ஆராயலாம். எடுத்துக்காட்டாக படைத்தாக்குதல், நாடுகளின் உள்நாட்டு காரியங்களில் தலையிடல், அயல்நாட்டைக் கைப்பற்றுதல், ஏகாதிபத்தியம், இன அழிப்பு, இன ஒதுக்கக் கொள்ளை, இனவெறி, தேசிய, சமூக அடக்குமுறை போன்றவற்றில் இவ்வாறு செய்யலாம். இவற்றை யுனெஸ்கோவின் பொது மாநாட்டிலும் ஆராயலாம்.[7]

## மனித உரிமைகள் யுனெஸ்கோவின் சில நடவடிக்கைகள்

| | |
|---|---|
| யுனெஸ்கோவின் அதிகார எல்லைக்குள் மனித உரிமைகள் பற்றிய பிரச்சினைகளை ஆய்தல் | இனவெறியை ஆதரிக்கும் போலி அறிவியல் கொள்கைகளையும் விவரங்களையும்அறிவியல் முறையில் திறனாய்தல் |
| நகர, கிராமம் பகுதிகளில் மனித உரிமைகளைப் பயன்படுத்துவதை வளர்த்தல் | மனித உரிமைகளைக் கற்பிக்கும் வசதிகளைப் பெறுதல். |
| சகிப்புத்தன்மை பற்றிய முக்கிய நூல்களை மொழி பெயர்த்தல் | இனவளர்ச்சி இனக்கொலை பற்றிய ஆய்வு. |
| மக்கள்தொகை ஆய்வுகளில் மனித உரிமைப் பிரச்சினைகள் இணைத்தல் | தனியார், அரசாங்கம் சாராத அதிகாரங்கள் மனித உரிமைகளைக் குறைப்பது பற்றிய ஆய்வு. |
| இனஒதுக்கம், இனவெறி போன்ற மனித உரிமையை மீறும் கொள்கைகளை எதிர்த்தல் | இனம், இனவெறுப்பு பற்றி யுனெஸ்கோ அறிக்கையைச் செயல்படுத்தல் |
| மனித உரிமைகள் பற்றிய தத்துவ நூல்கள் வெளியிடுதல் | பண்பாட்டு சமய மரபுகளில் மனித உரிமைகள் பெற்றுள்ள இடம் பற்றிய ஆய்வு. |

## மகளிர் நிலையும் மலிவு ஊதியமும்

உலகில் வயது வந்த மக்களில் 50 சதவீதத்தினர் பெண்கள். அதிகார பூர்வமான பாட்டாளிப் படையினரில் அவர்கள் மூன்றில் ஒரு பகுதியினர். எனினும், மொத்தப் பணி நேரங்களில் மூன்றில் இருபகுதி அளவுநேரம் அவர்கள் பணியாற்றுகிறார்கள். உலக வருமானத்தில் பத்தில் ஒரு பகுதியைத்தான் அவர்கள் பெறுகின்றார்கள். உலக சொத்துகளில் நூறில் ஒரு பகுதி மட்டுமே அவர்களுக்குச் சொந்தம். மகளிர்செய்யும் பணிகளில் பெரும் பகுதி அங்கீகரிக்கப்படுவதில்லை. இதனால் இந்தப் பணிகளுக்கு ஊதியமோ வேறு உரிமைகளோ அவர்களுக்குக் கிடைப்பதில்லை.

இல்லங்களில் மகளிர் செய்யும் பணிகள், "பெண்களின் வேலை" ஒதுக்கப்பட்டு விடுகின்றன. இப்பணிகள் ஷபணி' என்றே கருதப்படுவதில்லை. மாறாக, பெண்களின் இயல்பான அலுவலின் ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது. எனவே, பெண்கள் அன்றாடம் செய்யும் இந்தப் பணிகளின் உண்மையான பொருளாதார மதிப்பு மூடி மறைக்கப்படுகின்றது.

பெண்களுக்கு ஓரவஞ்சகம் காட்டுவதைத்தடுக்கும் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. எனினும், நடைமுறையில் உயர்ந்த ஊதியம் உள்ள பதவிகளுக்கு ஒரே தகுதிகள் இருந்த போதிலும் ஆண்களையே தேர்ந்தெடுக்கும் போக்கு முதலாளிகளிடம் காணப்படுவதால் பணிகளுக்கு ஆளெடுப்பதிலும் ஊதியக் கொள்கைகளை வகுப்பதிலும் பெண்களுக்கு எதிராக ஓர வஞ்சகம் காட்டப் படுகின்றது. நெருக்கடி காலங்களில் "பணிகளைத் திருடுபவர்கள்" என்று பெண்கள் பழிக்கப்படுகின்றனர். இன்றைய பொருளாதார நெருக்கடிகள் காரணமாக, "இல்லமே பெண்களுக்கு உகந்த இடம்" என்னும் கொள்கைக்கு புத்துயிர் அளிக்கப்படுகின்றது.

இந்த மனப்பான்மை, ஆண்-பெண் சமத்துவத்தை நிலை நாட்டும் முயற்சிக்குக் இடையூறு விளைவிக்கும்.

பாட்டாளிப் படையில் மகளிர் பெற்றிருக்கும் இடம், பெரும்பாலும் அவர்களுடைய கல்வியையும் தகுதிகளையும் பொறுத்திருக்கிறது. அவர்களின் கல்வியும், மற்றத் தகுதிகளும் பொதுவாக ஆண்களை விடக்குறைவு. படிப்பறிவின்றி பெண்களிடையில் தான் மிகப் பெருமளவில் நிலவுகின்றது. உலகில் படிப்பறிவில்லாத பெண்களின் எண்ணிக்கை 1990இல் 60 கோடியை தாண்டியிருந்தது. பல நாடுகளில், தாங்கள் பெற்றுள்ள கல்வியைப் பயன்படுத்திக் கொண்டு சரிநிகரான பொருளாதார, சமூக, அரசியல் அதிகாரத்தைப் பெறுவதில் ஆண்களின் அளவுக்குப் பெண்கள் இன்னும் வெற்றி பெறவில்லை.[8] சமூக-பண்பாட்டு மனப்போக்கு காரணமாக, மகளிர், அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறைகளைவிட இலக்கியத்துறைகளிலேயே அதிக நாட்டங் கொள்கின்றார்கள். ஆட்சிப்பணியின் மிக உயர்ந்த பதவிகளுக்கு இட்டுச் செல்லும் கல்வித்துறைகளில் மிகக் குறைவான பெண்களே காணப்படுகின்றார்கள். "பண்பாட்டையும் பெருமையையும் பெண்கள் அணுகலாம்; ஆனால், அதிகாரம் அவர்களுக்கு எட்டாக்கனி" என்பதுபோல் தோன்றுகிறது. சமீப ஆண்டுகளில் இந்நிலையில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது.

பொறுப்பான பதவிகளை எட்டுவதில் மகளிர்க்கு எதிர்ப்படும் முட்டுக்கட்டைகளிலிருந்து, ஆண் பெண் சமத்துவம் என்பதும் அடிப்படையில் ஓர் அரசியல் பிரச்சினை என்பதும், அது அதிகாரச் சமநிலையுடன் தொடர்புடையது என்பதும் தெளிவாகிறது. அரசியல் வாழ்வில் மகளிர் பங்கு பெறுவதோ அல்லது பங்கு பெறாமலிருப்பதோ தான் மகளிர் நிலையைச் சூழ்ந்திருக்கும் பிரச்சினைகளின் அடிப்படைக் கூறாக விளங்குகின்றது. மகளிர் தங்களின் தேவைகளையும், உண்மையான

ஆற்றலையும், தங்கள் உரிமைகளையும் நன்கு உணர்ந்து கொள்வதற்குக் கல்வியறிவு பேருதவியாக இருக்கும். இதற்கு எல்லா வகையான ஒரவஞ்சனைகளையும் அகற்றும் வகையில் பாடப் புத்தகங்களையும், கல்விச் சாதனங்களையும், திருத்தியமைக்க வேண்டும். அதே போன்று, பெண்களைப் பற்றி ஆடவர் கொண்டுள்ள பாரம்பரிய மனப்போக்குகளை மாற்றுவதற்கும் ஆண் பெண் இரு சாராரின் பங்குப் பணிகளை - குறிப்பாக இல்லறப் பணிகளை-மறுபகிர்வு செய்வதை ஊக்குவிப்பதற்கும் தனி நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.[9]

## மகளிர் பிரச்சினைகள் - சமுதாயப் பிரச்சினைகள்

மகளிர் நலனுக்காக அங்கொன்றும் இங்கொன்றுமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவேயன்றி, முழுமையாக எடுக்கப்படவில்லை. படிப்பறிவு இயக்கங்கள், இல்லற மற்றும் வேளாண்மை முறைகளில் மேம்பாடு, தொழில் நுட்ப மற்றும் தொழிற் பயிற்சி வசதிகள் போன்றவை மகளிருடைய தகுநிலையினை குறிப்பிட்ட அம்சங்களைக் கவனத்தில் கொண்டவை; சமுதாயத்தையும், அதன் அமைப்பையும், அதன் செயற்பாட்டு முறைகளையும் தழுவிய விரிவான கண்ணோட்டத்தில் இவை மேற்கொள்ளப்படவில்லை. மகளிரைச் செயலற்றவர் களாக்கும் தடைகள் “பெண்களின் பிரச்சினைகள்” என்று புறக்கணிக்கப்படுகின்ற வரையில் இவை சமுதாயம் முழுவதையும் பாதிக்கும் உலகளாவிய பிரச்சினைகள் என்று கருதப்படாத வரையில் இந்த முட்டுப்பாடுகள் நீங்கப் போவதில்லை.[10]

இந்த முயற்சியில் சமுதாயம் முழுவதுமே பங்கு கொள்ள வேண்டும். ஆடவர்களின் நலன்களையும், கனவுகளையும் ஒட்டிய உருவாக்கப்பட்ட உலகில் ஆடவர்களுக்கு நிகரான நிலையை எட்டுவதற்குப்

பெண்டிர்க்குத் துணை செய்வதற்கு ஆண் பெண் சமத்துவத்தை ஏற்படுத்தி விட்டால் மட்டும் போதாது. ஆண் பெண் பங்குப் பணிகளை உண்மையாகவே மறுவரையறை செய்ய வேண்டுமெனில் அதற்கு ஆடவர் பெண்டிர் உறவு நிலைகளை அடியோடு மாற்றியமைப்பதற்குத் திட்டவட்டமாக முயற்சி தொடங்க வேண்டும்.

மகளிர் தங்களுடைய பிரச்சினைகளைத் தாங்களே வரையறுக்க வேண்டும்; அவற்றுக்குப் பொருத்தமான தீர்வுகளையும் அவர்களே காண முயல வேண்டும். எனவே மகளிர் நிலையை மேம்படுத்துவதற்கு யுனெஸ்கோ வகுக்கும் திட்டங்கள் அனைத்தும், மகளிர் முன்னேற்றத்திற்கான அரசு சார்ந்த மற்றும் அரசுச் சார்பற்ற நிறுவனங்களுடன், தேசியமண்டல மற்றும் பன்னாட்டளவில் அமைந்துள்ள சங்கங்களுடன் நெருங்கிய ஒத்துழைப்புடன் வகுக்கப்பெற்று செயற்படுத்தப்பட வேண்டும். மகளிர் இயக்கங்களையும், சங்கங்களையும் வலுப்படுத்துவதற்கும் அவற்றின் நடவடிக்கைகளில் அனைத்துப் பிரிவுகளையும் சார்ந்த மகளிர் அதிக எண்ணிக்கையில் பங்கு பெறுவதற்கும் உதவி புரியத் தனி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். பொதுவாகக்கூறி இரண்டாவது நடுத்தரக் காலச்செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் அனைத்திலும் மகளிர் பரிணாமத்தைச் சேர்த்திட ஐ.நா.வும் மற்றும் யுனெஸ்கோவும் விரும்புகின்றன.

தந்தை பெரியார் கூறியதை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும் "பெண்களின் அடிமைத் தன்மை பெண்களை மாத்திரம் பாதிப்பதில்லை. அது, மற்றொரு வகையில் ஆண்களையும் பெரிதும் பாதிக்கின்றது. இதைச் சாதாரண ஆண்கள் உணருவதில்லை. ஆனால், நாம் இந்த இடத்தில் அதைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளவில்லை. பெண்களைப் பற்றியே கவலை கொண்டு சொல்லுகின்றோம். தற்கால நிலைமையில் பெண்கள் விடுதலைக்குப் பெண்கள்

வேறு எவ்விதமான முயற்சி செய்தாலும், அது சிறிதாவது ஆண்களுக்குக் கஷ்டத்தைக் கொடுக்கக் கூடியதாக இருக்கலாம்." -பெரியார் ஈ.வே.ரா.

உலகளாவிய விரிவான மனித சமுதாயம் அண்மை ஆண்டுகளில் உருவாகியுள்ளது. இதனால் இன்றைய உலகில், யுனெஸ்கோ நிறுவனங்கள் கனவு கண்ட மனிதகுல ஒற்றுமையை நடைமுறையில் நிலை நாட்டுவதற்கான அரியதொரு சூழல் தோன்றியுள்ளது. நம்மை அச்சுறுத்தும் எத்தனையோ இடர்பாடுகளுக்கிடையிலும் இந்த ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான அவசியம் அதிகரித்து வருகின்றது. மனிதகுலத்தின் எதிர் காலம், கட்டுக்கடங்காமல் போவதைத் தடுக்க வேண்டுமெனில், சகிப்புத்தன்மை, நீதி, அமைதி ஆகிய உணர்வுகளுடன் ஒற்றுமையான உலக சமுதாயத்தை உருவாக்குவது ஒன்றுதான் சிறந்த வழி.

## அடிக்குறிப்புகளும் சான்றுகளும்

1. காரல் வாசக் "மனித உரிமைகள் புதிய சட்ட அறிவுக் கொள்கை" யுனேஸ்போ கூரியர் டிசம்பர் 1978.

International Covenant on Economic, Social and Cultural Rights. General Assembly Resolution 2200A of 16 December 1966

2. Article, I, Part I International Covenant on Economic, Social and Cultural Rights, General Assembly Resolution 2200 A (XXI) of 16 December 1966.

International Covenant on Civil and Political Rights General Assembly Resolution 2200 A of 16 December 1966. Entered into force 23 March 1976.

3. Universal Declaration of Human Rights, Preamble

4 யுனெஸ்கோ கூரியர் டிசம்பர் 1978.

5. Stephen Marks, "UNESCO and Human Rights, The Implementation of Right Relating to Education, Science Culture and Communication **Texas International Law Journal** 13 (1977) 1: 35-67.

6. A. Subbian, **Human Rights Complaints systems International and Regional** (New Delhi: Deep Deep Private Ltd., (2000 x 2003) 85-103.

7. E/2727, Annex, 2, Draft resolution C, FI submitted by Commission on status of woman 14 March – I April 1955. Supra Note., 1; UNESCO Yearbook on Peace and Conflict Studies (Westport, Conn; Greenwood press, 1981). **Freedom in the World Wood Political Rights and Civil Liberties,** 1981 edited and principally authored by Raymond D. Gastil (Westport, Conn: Green Press, 1981)

8. Kathleen Barry "Female Sexual Slavery: Understanding the International Dimensions of women's oppression symposium. Women and International Human Rights" **Human Rights Quarterly** Vol. 3, No. 2 1981, 44-52.

   Convention on the Elimination of All Forms of Discrimination against women" Signature ratification and accession by General Assembly Resolution 34/180 of December 1979, Entry into force: 3 September 1981, in accordance with Article 27 (4).

9. Remuneration (No 90) concerning Equal Remuneration for Men and Women workers for work of Equal value, Adopted by the General Conference of the International Labour Organization on 29 June 1951 arts 34th session, UNESCO Ibid 83-85. Human Rights of Women A collection of International and Regional Normative Instruments Prepared by January Symonides & Valadmir in Volodin, (UNESCO

1999) 78-82. ILO Equal Remuneration convention (1957), the convention was adopted on 29 June 1951 by the International Labor conference (34 the session Entry into force: 23 May 1953.

10. Declaration on the Elimination of Discrimination against women UNGA R. 7 Nov. Resolution 2263 XXII, Convention on the Elimination of All Forms of Discrimination against woman GA Rs. 34/180, Dec. 1979.

# 5. உலகளாவிய மனித உரிமைகள்

இன, வர்க்க, தேசியப் பகைமைகளைப் போக்கி ஒரேயுலகில் சமாதானமாக வாழும் பொதுமையான மனித சமுதாயம் என்ற குறிக்கோளை நிலை நாட்டத் தன்னால் இயன்றதனைத்தையும் செய்தல்

- சர்வதேச எழுத்தாளர் காங்கிரஸ் கோட்பாடு.

## உலகளாவிய மனித உரிமைகளும் சமத்துவமும்

மனித உரிமைகள் இன்று உலகம் ஒருமனதாக ஏற்றுக்கொண்ட கோட்பாடாகிவிட்டது. மனித உரிமைகள் பற்றிய உலக அறிக்கையை 1948லேயே ஐ.நா. உறுப்பு நாடுகளில் பெரும்பாலானவை ஏற்றுக் கொண்டு விட்டன. எனினும் இக்கோட்பாட்டின் ஒரு சில அம்சங்கள் மேனாட்டு நாகரிகத்தின் வினைபயனேயாகும். 19-ம் நூற்றாண்டின் இறுதியில், ஜப்பான் நவீனமய மாகலாயிற்று. அப்பொழுது பல புதிய அரசியல் மற்றும் சட்டவியற் கோட்பாடுகள் நாட்டில் புகுத்தப்பட்டன. "மனித உரிமைகள்" என்பதற்கு ஐப்பானியச் சொல் இல்லாமையால் அதற்குப் புதிய சொல் புனைய வேண்டியதாயிற்று. மேனாட்டுச் சார்பற்ற பண்பாட்டுப் பாரம்பரியத்தில் இக்கோட்பாட்டிற்கு இணையான சொல் இல்லை என்பதற்கு இது ஒரு சான்று.[1]

மேனாட்டுக் குடியேற்ற ஆதிக்கத்தின் செல்வாக்கினால் இந்தக் கோட்பாடு மேனாட்டுச் சார்பற்ற நாடுகளில் புகுந்தது. அடிப்படை மனித உரிமைகளுள் ஒன்றான சமத்துவ உரிமை என்பது மேனாட்டுச் சார்பற்ற நாடுகளில் ஆண்டான் அடிமை என்ற உறவு நிலையில்தான் பிரச்சாரம் செய்யப்பட்டது.

இந்த முரண்பாடு காரணமாக, மேனாட்டுச்சார்பற்ற நாடுகளில் இருவிதமான கருத்துகள் உருவாயின. இந்தச் "சமத்துவ உரிமைக் கோட்பாட்டை" ஆயுதமாக ஏந்தி மேனாட்டு ஆதிக்கத்தை எதிர்க்க வேண்டும் என்பது ஒரு கருத்து. மேனாட்டார் கொள்கையில் காணப்படும் முரண்பாடுகளை அம்பலமாக்க இது சிறந்த வழியாகும். வளர்முக நாடுகளிலுள்ள மேனாட்டுக் கல்வி கற்ற உயர் மட்டத்தினருக்கு இவ்வகை வாதம் ஏற்புடையதாயிருந்தது. ஆனால் இந்நாடுகளின் மக்கள் ஆதரவைத் திரட்டுவதற்கு இந்த வாதம் உதவவில்லை.

இரண்டாவது வகைக் கருத்துதான் ஆழவேரூன்றியது. இந்தக் கருத்து முழுக்க முழுக்கத் தேசிய உணர்வின் பாற்பட்டதாகும். மேனாட்டு நெறிகள் அனைத்தும் உலகம் முழுவதற்கும் பொருந்துவது என்பதை இவர்கள் மறுத்தார்கள். உள்நாட்டு நெறிமுறைகளே சிறந்தவை எனப் போற்றலானார்கள்; சொந்த அரசியல் மற்றும் பண்பாட்டு அமைப்புகளை வலுப்படுத்தி, பாதுகாக்க முனைந்தார்கள்.

மேனாட்டுப் பண்பாட்டு ஆதிக்கத்தை எதிர்ப்பது என்பது மக்கள் உணர்வுகளை உறுதிப்படுத்துவதற்கான ஒருவழி. இது ஒரு ஆக்கமுறையான அம்சமேயாயினும் மேனாட்டு நெறி முறைகளை உலகம் முழுவதிலும் திணிப்பதால் உண்டாகும் அபாயத்தைப் போலவே, இதனால் அபாயம் நேரிடக் கூடும். உதாரணமாக மனித உரிமைகள் என்பது மேனாட்டுக் கோட்பாடு என்பதனாலேயே சில வளர்முக நாடுகளின் அரசுகள் மனித உரிமைகளுக்கு எதிரான கொள்கைகளைக் கையாண்டு வருகின்றன. மேனாடுகளும் பன்னாட்டு நிறுவனங்களும் மனித உரிமைகளை உலகநாடுகள் அனைத்தும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென வலியுறுத்துவதால் அவை தங்கள்

"சுதந்திரத்திலும்" உள்நாட்டு விவகாரங்களிலும் தலையிடுகின்றன என்று அந்நாடுகள் தவறாகக் கருதுகின்றன.

இவ்வாறாக குடியேற்ற ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்வதற்கு இக்கோட்பாட்டினை மேனாடுகள் பயன்படுத்தியதைப் போலவே, மேனாட்டுச் சார்பற்ற நாடுகளும் தங்கள் மக்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு அதே கோட்பாட்டினைக் கையாள்கின்றன. சுருக்கமாக கூறின், மேனாட்டினரின் "அகில உலகக்" கோட்பாடு மேனாட்டுச் சார்பற்ற நாடுகளின் "தன்னுரிமைக்" கோட்பாடு இரண்டுமே பன்னாட்டளவில் மனித உரிமைகளைச் செயற்படுத்துவதற்குத் தடையாக இருக்கின்றன. ஒன்று இந்தச் சிக்கல் மிகவும் கடுமையாகிவிட்டது. இதுகாறும் இல்லாத அளவுக்கு இன்று மனித உரிமைக் கொள்கை விரிவாக பரவியுள்ளது. அதே போல் மேனாட்டுச் சார்பற்ற மக்களிடையே "தன்னுரிமை" நாட்டமும், வேட்கையும் சொந்த பண்பாட்டைப் பாதுகாக்கும் உணர்வும் பெருமளவில் வளர்ந்திருக்கிறது.

மேனாட்டுச் சார்பற்ற மக்கள் மனித உரிமைகளை ஆதரித்த போதிலுங்கூட இதிலும் அவர்கள் தங்களுடைய வேறுபட்ட தன்மையினையும், பண்பாட்டுத் தன்னியல்பையும் வலியுறுத்துகின்றார்கள். இதில் மேனாட்டுச் சிந்தனைக்கும் தங்கள் சிந்தனைக்குமிடையிலான வேறுபாட்டைச் சுட்டிக் காட்டுகின்றார்கள். எடுத்துக்காட்டாக சமுதாயத்தில் மகளிரின் பங்கு பணியை ஆராயுங்கால் ஆண், பெண், இருவரது சமூகப் பங்குப் பணிகளிடையே காணப்படும் வேற்றமைகளுக்குப் பல சமுதாயங்கள் பெரும் முக்கியத்துவம் கொடுப்பது தெரிய வருகிறது. சில சமுதாயங்களில் முதியவர்கள் தாம் ஆட்சிப் பொறுப்புக்கு

ஏற்றவர்கள் என்றும், இளையவர்கள் எத்துணை திறமைசாலிகளாயினும், முடிவுகள் எடுக்கும் தகுதியைப் பெறமுடியாது என்றும் கருத்து நிலவுகிறது.

தனிநபர்களுக்கும், குழுமத்திற்குமிடையிலான உறவு நிலைகளும் மாறுபடுகின்றன. சில சமுதாயங்களில் தனிநபர் உரிமைகளைவிடக் குழுமத்திடம் அல்லது ஒரு நிறுவனத்திடம் கொள்ளும் பற்றுறுதிக்கு முதலிடம் அளிக்கப்படுகிறது. இது. தனிநபர் உரிமைகளை வலியுறுத்தும் மேனாட்டார் கொள்கைக்கு மாறுபட்டது. சில சமுதாயங்களில் இரட்டைக் கொள்கை கையாளப்படுகிறது. அங்கு சட்டங்களும் அரசமைப்புகளும், மனித உரிமைகளின் அகிலத்துவம் பற்றிய மேனாட்டுக் கோட்பாடுகளை ஆதரிக்கின்றன. மேனாட்டுச் சார்பற்ற சில பண்பாடுகளில் சில தனிவகை நெறிமுறைகளின் அடிப்படையில் எவ்வித விளக்கமும் கூற இயலாது. அதே சமயம் இந்தத் "தனிவகை நெறிமுறைகள்" என்ற ஆயுதம் தான், இங்கு மனித உரிமைகளுக்கு எதிரான அடக்குமுறைக்கும் பயன்படுத்தப்படுகின்றது.

பண்பாட்டுச் சார்பியல் என்னும் கோட்பாடு இப்பொழுது செல்வாக்குப் பெற்றிருக்கிறது. ஒவ்வொரு பண்பாட்டிலும் உள்ள தனிவகை நெறி முறைகளை ஏற்றுப் போற்றுவதும், ஏற்றத்தாழ்வு அடிப்படையிலான நெறிமுறைகளை ஒதுக்கித் தள்ளுவதும் இக்கோட்பாட்டின், அடிப்படையாகும். இக்கோட்பாடுதான் ஐரோப்பாவை மையமாகக் கொண்ட உலகக் கோட்பாட்டை, அதாவது ஐரோப்பியப் பண்பாடுதான் உயர்ந்தது என்ற எண்ணத்தைத் தகர்த்திருக்கிறது. ஆனால் பண்பாட்டுச் சார்பியலின் அடிப்படை வாதத்தை மட்டும் எடுத்துக் கொண்டால், அதனால் உலக நெறிமுறைகள் அனைத்தும் சீர்குலைவதற்குத்தான் வழிவகுக்கும். அப்போது, மனித உரிமைகளை மீறுவதைக் கடிந்துரைப்பதை அடிப்படையாகக்

கொண்ட உலக நெறி முறையொன்று உருவானால்கூட அதனால் ஒரு பயனும் ஏற்படாது.

உலகளாவிய மனித உரிமைகளைப் பண்பாட்டுச் சார்பியல் ஏற்க மறுக்கிறது என்ற எண்ணம் தோன்றலாம். ஆனால் பண்பாட்டுச் சார்பியலின் பொருளைக் கூர்ந்தாயுங்கால் இதற்கு மாறான கருத்தே தோன்றும்.

அடிப்படையான மனிதச் சமத்துவத்தை அதாவது மனித உரிமைகளின் சமத்துவத்தை ஒரு பண்பாடு மறுக்குமாயின் அது பன்னாட்டுக் கண்டனத்திற்கு உள்ளாகின்றது. வேண்டுமானால், அது சமத்துவம் என்ற சொல்லுக்குப் பதிலாகத் தான், விரும்பும் வேறு சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். இச்சமத்துவத்தைத் தான் விரும்பும் எந்தவடிவங்களிலும் செயற்படுத்திக் கொள்ளலாம். ஆனால், அந்த வேறுபாடு சம உரிமைகளை அடிப்டையாகக் கொண்டதாக இருக்க வேண்டும். ஒரு பண்பாட்டின் தன்னியல்பும், தன்னுரிமையும், மனிதச் சமத்துவத்தைத் தொடக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். பண்பாட்டுத் தன்னுரிமையிலிருந்தும், வேறுபாட்டிலிருந்தும் எழுகின்ற உலகளாகிய மனிதச் சமத்துவம், உலக மனித உரிமைகளேயன்றி வேறில்லை. அமைதியை நிலை நாட்டுவதற்குப் போரினைத் தவிர்த்துவிட்டால் மட்டும் போதாது. சமுதாயங்களிடையே ஏற்றத் தாழ்வற்ற நியாயமான உறவுகளை ஏற்படுத்தும் எல்லா மக்களையும் எல்லாப் பண்பாடுகளையும் சரிநிகராகப் போற்றுவதும் அமைதிப் பணியின் பாற்படும் இந்தவகையில் இது அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஈடானதாகும்.

## மனித உரிமைகளும் மூன்றாம் உலக நாடுகளும்

மனித உரிமைகள் இயக்கமானது ஒரு முக்கியக் காலக் கட்டத்தை எட்டியுள்ளது. இவ்வியக்கத்தின் வெற்றி வளரும்

நாடுகளின் முன்னேற்றங்களினால் விளைந்துள்ள பிரச்சினைகளைச் சமாளிக்கும் திறனுடன் பிணைந்துள்ளது. வளரும் சமுதாய இளைஞர்களின் கருத்தைக் கவரும் திறனையே அவ்வியக்கத்தின் வளர்ச்சி பெருமளவு சார்ந்துள்ளது. பல்வேறு பண்பாட்டுச் சூழ்நிலைகளில் பெண் உரிமையை அது எவ்வாறு கையாள்கிறது என்பதைப் பொறுத்தே அதனுடைய அமைப்பும் வளர்ச்சியுமிருக்கிறது.[2] பெருமளவுக்கு மனித உரிமைகளை வகுப்பதிலும், செயற்படுத்துவதிலும், வளரும் நாடுகள் ஆக்க பூர்வமான பங்கினை எடுத்துக் கொள்ளவில்லை.[3] உலகப் பண்பாடுகளில் காணப்படுகிற கூறுகள் பலவற்றை மனித உரிமைகள் கொண்டிருந்த போதிலும், கோட்பாடு முறையிலான மனித உரிமை இயக்கத்தின் தொடக்கம் மேலைநாடுகளைச் சார்ந்தது என்பது தெளிவாகும். விடுதலை, சமத்துவம், சேம நலம், தன்னாட்சி ஆகிய அடிப்படை கருத்துக்கள், தேசியம், முற்போக்கு, சம உரிமை ஆகிய நவீன இயக்கங்கள் கண்ட முறையின் அடிப்படையில் அமைந்துள்ளன. இவ்வியக்கங்கள் மேலைநாடுகளில் தோன்றி, உலகம் முழுவதிலும் அரசியல் கருத்துக்கள் மீது செல்வாக்கு செலுத்தியிருக்கின்றன.

மனித உரிமை இயக்கம் உலகளாவிய தன்மையானது என்பதை பண்பாட்டு, தேசிய சக்திகள் பல மறுப்பதற்கு இந்த வரலாற்று தொடக்கமே காரணமாகும். மனித உரிமைகள் முறையற்றவை என்று கூறி சில வளரும் நாடுகளில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து மற்றும் 21-ம் நூற்றாண்டிலும் இது மனித உரிமை இயக்கத்திற்கு பெரும் பிரச்சினையாக இருக்கின்றது.

மனித உரிமையின் மரபுக்கும் மேலைநாடுகள் அல்லாத பகுதிகளின் பெரும் வளர்ச்சிக்கும் இடையிலுள்ள மோதல் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு எத்தகைய அணுகுமுறை

மேற்கொள்ளப்படவேண்டும்? வரலாறு ஒரு கூட்டு அனுபவம், மனித உரிமையின் வளர்ச்சி என்ற கருத்துடனேயே மேற்கூறிய மறு மதிப்பீடு எதனையும் செய்தல் வேண்டும். இப்போது மனித உரிமைப் பாதுகாப்பை வளரும் நாடுகள் ஆழ்ந்து நோக்குவது அவசியமாகும். இந்த முறை ஆக்கப்பூர்வமானதாக இருக்க வேண்டுமேயன்றி மனித உரிமையைத் தகர்ப்பதாக இருக்கக் கூடாது.

இந்தப் பிரச்சினை இரு அம்சங்களைக் கொண்டதாகும். முதலாவதாக மனித உரிமைகளுடன் மேலைநாட்டுப் பண்பாடு அல்லாதவற்றை இணக்கமானவையாக ஆக்குவது. இரண்டாவதாக "வளர்ச்சி" அனுபவத்தை மனித உரிமைப் பாதுகாப்பு அமைப்புடன் ஒருங்கிணைப்பது, இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குள்ள முறையை மனித உரிமைகளை மட்டுமல்லாமல், "சட்டம், அரசியல், பொருளாதாரம்," ஆகியவற்றை அணுகுவதற்குரிய ஒரு வழியாகவும் கருதுவது. இது, மற்றப்பிரச்சினைகளை விட மனிதப் பிரச்சினையை முக்கியப் படுத்திக் காட்டும் அணுகு முறையாகும்.

மனித உரிமை இயக்கத்தை அதனுடைய வரலாறு மற்றும் அமைப்பிலிருந்து உடனடியாகப் பிரித்திட இயலாது. அவ்வாறு செய்வது அதனுடைய உள்ளமைப்பை மறுத்து ஐயத்தை அதிகரிப்பதாகும். பதிலாக இணக்கம் செய்யும் முறையானது தர்க்க முறைப்படி இருக்க வேண்டும். வளரும் நாடுகள் தங்களுடைய வரலாற்றில் தங்களுடைய சமூக மதிப்புகளை எடுத்துக்கூற ஊக்கம் இருக்க வேண்டும்.[4] இது மனித உரிமையின் அனைத்துலக மரபுடன் அவர்களை இணங்கிவரச்செய்யும் கடந்தகால வரலாற்று எல்லைகளைக் கடந்து சிந்தித்து உலக சமூகங்களின் கருத்தினை ஈர்க்கும் வகையில் மாற்று அமைப்புகளையும் நோக்குகளையும்,

தேடுமாறு இந்த அணுகுமுறை மனித உரிமையாளர்களைத் தூண்ட வேண்டும்.[5]

வளரும் சமூகங்களின் எதிர்கால மனிதஉரிமை வெற்றியானது, அரசியல் கோட்பாட்டில் மனித உரிமைக் கொள்கை முக்கியமானது என்பதை இன்றைய இளைஞர்கள் மற்றும் வளரும் தலைமுறையினர் ஏற்கும் வகையில் எடுத்துச் சொல்லும் திறனைப் பெருமளவு பொறுத்திருக்கிறது. உலகம் இப்போது பெரும் "ஒழுக்கப் பிரச்சினையில்" சிக்கியிருக்கிறது என்பதை நாம் கருதும் போது இது மிக முக்கியமானதாக இருக்கிறது. முரண்பட்ட மதிப்புகளும், வாழ்க்கை முறையின் இரட்டை அமைப்புகளும், வளரும் சமூகங்களில் மக்களை மரபுகளிலிருந்து விலகிவிடச் செய்திருக்கின்றன. உண்மையிலேயே இத்தகைய நிலை ஒரு ஒழுக்க சூனியத்தை உண்டாக்கியிருக்கக்கூடும். அது மனித உரிமைகள் போன்ற கொள்கைகளில் இளைஞர்களின் ஆர்வத்தை மங்கிடச் செய்யும். இத்தகைய நவீன உந்துதல்களால் உருவாக்கப்பட்ட ஒழுக்கப் பிரச்சினைகளிலிருந்து தப்புவதற்கு மனித உரிமைப் பாதுகாப்புக்கு வேண்டிய சமூகச் செயல்பாட்டை விட யதார்த்த வாதமும் பொருள்முதல் வாதமும் உயர்ந்தவை என்று இளைஞர்கள் கருதலாம். அல்லது தங்களைக் காத்துக் கொள்வதற்கும் தனித்துவத்தை பேணிக்கொள்வதற்கும் அடிப்படையாக இந்த கடந்தகால அமைப்புகளைப் பற்றிப் பிடித்துக் கொள்வதன் மூலம் அவர்கள் ஒழுக்கப்பிரச்சினைகளைத் தவிர்க்க முயலலாம். இந்த இரண்டில் எதுவுமே மனித உரிமையின் எதிர்காலத்திற்கு உதவிட இயலாது. ஆகையால் மனித உரிமைகளைப் பற்றிக் கற்றுக் கொடுப்பது பாடத்திட்டத்தில் அடிப்படை அம்சமாக இருக்க வேண்டும்[6] என்பது பற்றிப் பரிசீலிப்பது முக்கியமாகும். இவ்வாறில்லாவிட்டால் மனித உரிமைகள்

பற்றி அக்கறையானது கருத்து மோதல்கள், மதிப்பு மாற்றங்கள் போன்றவற்றால் அழிந்துவிடும். இத்தகைய கல்விமுறையில் அடிப்படையாக மனித உரிமைகளைப் பாதுகாக்கும் தேவை அரசியல் பண்பாட்டுப் பின்னணியில் இருக்க வேண்டும்.[7]

மேலைநாடுகளில் பெண் உரிமை மீது பெரும் கவனம் செலுத்தப்பட்ட போதிலும் வளரும் சமூகங்களில் அது ஓர் அடிப்படையான, ஆனால், சிக்கலான பிரச்சினையாகும். ஒரு வகையில் அது ஓர் அரசியல் சட்ட பொருளாதாரப் பிரச்சினையாகும். மேலே கீழை ஐரோப்பிய மற்றும் பொது உடமை நாடுகளிலுள்ள தொழில் அமைப்பு முறைகளைக் கொண்ட பகுதிகளில் பெண்ணுரிமையை மனித உரிமை என்று அணுகுவது மிகப் பொருத்தமாகும்.

மேலாண்மை மற்றும் கொள்கை உருவாக்குதல் ஆகிய அமைப்புகளின் "தொழில் நுட்ப-பகுத்தறிவுக் கொள்கைகள்" மனிதஉரிமைகள் இயக்கத்தால் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படும். பாதுகாப்பு அமைப்புகளுக்கு மிகமுக்கியமாகும். நவீன துறைகளிலுள்ள அமைப்புகள் ஐரோப்பிய நாடுகளின் அமைப்புகளைப் போன்றிருப்பதனால் மனித உரிமைப் பிரச்சினைகள் இப்போது வளர்ந்த சமூகங்களின் பிரச்சினைகளைப் போன்றே பெருமளவு இருக்கின்றது.

மாறாக வளரும் சமூகங்களில் பெண் உரிமைப் பிரச்சினை பெருமளவு சமூகம், மற்றும் மனத்தத்துவப் பரிமாணங்களைக் கொண்டிருக்கிறது.[8] பல வகைகளில் பெண் உரிமை பிரச்சினைகள் மரபுக்கும் நவீன முறைக்கும் இடையிலே மோதலை ஏற்படுத்தியிருக்கிறது. ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலை முறைக்கு மரபுகளைப் பேணி வருபவர்கள் பெண்களே என்று கருதப்பட்டு

வருகிறது. சமூகத்தில் அவர்களுடைய பாணியை மாற்றுவது பாரம்பரியப் பண்பாட்டின் அடிப்படையை பாதிப்பதாகும் என்று கருதப்படுகிறது. மரபு முறைக்கு மாறாக மேலை நாகரிகம் என்று இருக்கும் போது, அதற்கு இயற்கையாக பண்பாட்டு வழி எதிர்ப்பு ஏற்படுகிறது. அது பெண்களுக்கு சம உரிமை அளிப்பதை மறுப்பதற்கு இடமளிக்கிறது. சமூக மற்றும் அரசியல் வாழ்வில் பிற அம்சங்களில் மரபு சார்ந்த கருத்து ஆக்கப்பூர்வமாக இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளும் முறையான கோட்பாடுகளிலிருந்து பெண்ணுரிமையை விடுவிப்பது முக்கியமான மற்றும் அடிப்படைத் தேவையாக இருக்கிறது.[9]

வளரும் நாடுகளில் மனித உரிமைப் பிரச்சினைகள் உருவாக்கியிருக்கிற சிக்கல்களை சுருக்கமான முறையில் எடுத்துக் கூற இயலாது. குற்ற விசாரணை முறை, பேச்சு சுதந்திரம், இன உறவுகள், பெண்ணுரிமைகள் அரசியல் மற்றும் பொருளாதார உரிமைகள் முதலிய துறைகளில் மனித உரிமைப் பிரச்சினைகளைத் தொடங்கவே இயலவில்லை. இத்துறைகளில் கடின பிரச்சினைகள் தொடர்ந்து இருந்து வருகின்றன. இத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பது, மேலை நாடுகளில் அரசியல் சட்ட, பண்பாட்டு சூழ்நிலைகளில் பயிற்சி பெற்ற மனித உரிமை ஆதரவாளர்களால் மரபு வழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டவைகளிலிருந்து வேறுபடுகிறது.[10] ஆனால் மனித உரிமைப் பிரச்சினைகளைத் தீர்ப்பது வளரும் நாடுகளில் வேறுபடுகிறதா என்பது அடிப்படை வினா அல்ல. ஆனால் பிரச்சினைகளைத் தீர்க்கும் முறையானது மனித உரிமை வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் ஆக்கப் பூர்வமானதாக இருக்குமா அல்லது வேறுவிதமாக இருக்கமா என்பதே வினாவாகும்.

இத்தகைய முறை மனித உரிமைகளின் பலவிதமான அமைப்பை அழிக்கக்கூடியதாக அல்லது பாதிக்கக் கூடியதாகவும் இருக்கலாம். ஆனால் பகுத்தறிவு முறையில்

அணுகினால் அது ஒரு ஆக்கப் பூர்வமான புதுமையான செயலாக இருக்கும். இதற்கான முதற்படி மரபு சார்ந்த வளரும் சமூகங்கள் மட்டுமல்லாது அனைத்துலக மனிதஉரிமை இயக்கமும் கூட "திறந்த மனம்" கொண்டதாக இருக்க வேண்டுமென்பதேயாகும். வளர்ச்சி அனுபவங்களை மதிப்பிடாது பல்வேறு பண்பாட்டுக் கருத்துக்களுடன் இணக்கம் கொள்ளாதிருந்தால் இந்த இயக்கம் சட்டமுறைத் தன்மையை இழந்துவிடும் அல்லது சிதைந்து போய்விடும்.[11] இதில் எதுவும் மனித உரிமை இயக்கத்தின் பின்னணியிலுள்ள முக்கிய நோக்கத்திற்கு அதாவது மனித அடிப்படை நிலையை உயர்த்துவதற்கு உதவாது.

## மனித உரிமைகள் மீறல்கள்

மனித உரிமைகளை மீறுதல் இன்னும் பெருமளவில் நடைபெறுகின்றது. தென்ஆஃப்பிரிக்காவில் நிலவிய இன ஒதுக்கல் கொள்கை இதற்கெல்லாம் சிகரம்.[12] உலக சமுதாயத்தின் ஒருமுகமான கண்டனத்திற்குக் கூட தென்ஆஃப்பிரிக்க ஆட்சியாளர்கள் செவிசாய்க்கவில்லை. அவர்கள் இனவெறியை அமைப்பு முறையாக்கினர்கள். எல்லா இனங்களும் சமமானவை; எல்லாமனிதரும் சமமானவர்கள் என்ற மனிதஉரிமைகள் அடிப்படைத் தத்துவத்தையே அவர்கள் சீர்குலைத்தனர்.[13] பல்வேறு நாடுகளில் பல்வேறு தோற்றங்களில் இன ஒதுக்கல் கொள்கை மீண்டும் மீண்டும் தலையெடுத்துக் கொண்டுதான் உள்ளது.

மக்களின் சுயநிர்ணய உரிமையும் கடுமையாக மீறப்படுகிறது. சில மக்கள் குழுமங்கள் இன்னும் அரசியல் அடிமைகளாக உள்ளனர். பல சமுதாயங்களுக்குத் தனித்தியங்கும் உரிமை இன்னும் மறுக்கப்படுகின்றது.

உலகில் இன்று சுமார் ஒரு கோடி அகதிகள் உள்ளனர். அவர்களுடைய வாழ்க்கை நிலை படுமோசமாக இருக்கிறது.

நாடிழந்து, வீடிழந்து தவிக்கும் அவர்களுடைய இன்னல்களுக்கு அரசியல்-பொருளாதாரச் சூழல்களில் உகந்ததொரு தீர்வுகாண்பது மிகக் கடினமாக இருக்கிறது.[14]

தனிநபர்களின் சுதந்திரங்களும் பல்வேறு வழிகளில் பறிக்கப்படுகின்றன. பல நாடுகளில், ஆட்சியாளர்கள் அரசியல் சுதந்திரத்தையும், கூட்டம் கூடும் உரிமையையும் ஒடுக்கிவிட்டன. சில சமயங்களில் மனித உரிமையைப் பறிப்பதற்குச் சட்டத்தையே பயன்படுத்துகிறார்கள். தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் அவசர கால நடவடிக்கைகள் அமைப்பு முறையாக்கப்பட்டிருக்கின்றன. அரசியலில் மாறான கருத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக, எதிர்க்கட்சியினரைக் குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டிக்கும் போக்கும் காணப்படுகின்றன. சாதாரணமாக சட்டப்பாதுகாப்புகள் மறுக்கப்படுகின்றன. விசாரணையின்றிக் காவலில் வைக்கப் பல்வேறு முறைகள் கையாளப்படுகின்றன. ஆட்சியாளர்களின் ஆதரவோடு அரசியல் எதிரிகளைக் கடத்திச் சென்று படுகொலை செய்கின்ற கொடுமையும் பெருகியுள்ளது.

பெரும்பாலான நாடுகளில் சித்திரவதை தடைசெய்யப்பட்டுள்ள போதிலும், இந்த வெட்கக் கேடான செயல் இன்னும் கையாளப்படுகின்றது. சில இடங்களில் குற்றஞ்செய்தவர்களாக ஐயுறப்படுகின்றவர்கள் கைதாகி, காவலில் விசாரிக்கப்படுகின்ற போது இந்தச் சித்திரவதையைக் கையாள்வதை ஒருவிதிமுறையாகவே கொள்கின்றார்கள்.

## பன்னாட்டு மனித உரிமைகளும், சித்திரவதைக் கொடுமைகளும்

சீன நாட்டின் ஒரு பகுதியான திபெத்தில் அண்மையில் நடைபெற்ற சில நிகழ்வுகளையடுத்து அங்கே மனித

உரிமைகள் மீறப்படுவதாக பன்னாட்டு ஊடகங்களில் குற்றச்சாட்டுகள் பரவலாக இடம் பெற்றன. அவற்றுக்கு எதிராக மக்கள் சீன அரசாங்கம் அதன் தரப்பு வாதங்களையும் முன் வைத்துள்ளது.

உலக நாடுகள் அனைத்திலும் மனிதஉரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்ட நாடாக அமெரிக்கா தொடர்ந்து பறைசாற்றிக் கொண்டு வருகிறது. மனித உரிமைப் பாதுகாவலனாகத் தன்னைச் சித்தரித்துக் கொள்ளும் அமெரிக்கா, உலகமெங்கும், மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதற்காகவே அமைப்பு ஒன்றை நிறுவி நிர்வகித்து வருகிறது. அதன் பெயர் தான் சிஐஏ (Central Intelligence Agency) என்ற உளவு நிறுவனம். அது நடத்தி வந்துள்ள சித்திரவதைக் கொடுமைகளை விவரித்து முடிக்க இயலாது.

சந்தேகத்திற்கிடமானவர்களைப் பிடித்துக் கைது செய்து விசாரிப்பது என்பது பாதுகாப்பு அமைப்புகள் அனைத்தும் பின்பற்றுகிற நடைமுறைதான். ஆனால் இந்த விசாரணை 'சித்திரவதை'யாக மாறுகிற போது மனித உரிமைப் பிரச்சனை எழத்தான் செய்கிறது. சிஐஏ அமெரிக்க ராணுவத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ள விசாரணை நடைமுறைகளை மட்டுமே பின்பற்றி வருவதாகக் கூறிக்கொண்டாலும், மனித உரிமை மீறல் குற்றத்துக்கு இலக்காகக் கூடிய சித்திரவதையில் ஈடுபடுவது சிஐஏ-வுக்கு இயல்பான நடவடிக்கையாகி விட்டதாக அமெரிக்க நாட்டிலேயே குற்றச்சாட்டுகள் ஏராளம் எழுந்துள்ளன. பத்திரிக்கைகள் கண்டித்து எழுதுகின்றன.

சிஐஏவின் சித்திரவதை நடவடிக்கைகள் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக அமெரிக்கா கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாகச் செலவழித்து வந்துள்ள

தொகைகள் 1997, 1998-ம் ஆண்டுகளுக்கு மட்டும் 5.330 கோடி டாலர்கள் செலவிடப்பட்டன என்று அறிவிக்கப்பட்டது. (2 லட்சம் கோடி ரூபாய்களுக்கு மேல்)

பயங்கரவாதத்துக்கு எதிரான உலகளாவிய போரை அமெரிக்கா மேற்கொண்டுள்ள இன்றைய காலகட்டத்தில் சிஐஏவின் சித்திரவதைக் கொடுமைகளில், பலத்த கண்டனத்துக்கு உள்ளாகிவிட்ட ஒன்று தண்ணீரில் முக்குதல் (Water Boarding) என்பதாகும்.

விசாரணைக்கு உட்படுத்தப்படும் நபரைத் தண்ணீரில் முக்கி, மூச்சுத் திணறி உயிர் போகும் விளிம்புக்குக் கொண்டு நிறுத்தி அவரிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறும் முயற்சிதான் இந்தத் தண்ணீரில் முக்குதல் நடவடிக்கை.

சிஐஏவின் சித்திரவதை நடவடிக்கைகளுக்கு குறிப்பாகத் தண்ணீரில் முக்குதலுக்குத்தடை விதிக்கும் நோக்கத்தோடு அமெரிக்க நாடாளுமன்றத்தில் அமெரிக்க சித்திரவதை எதிர்ப்பு மசோதா ஒன்று நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதாவுக்கு ஆதரவு திரட்டியவர்கள் விடுத்த அறைகூவலில் இடம் பெற்ற வாசகங்கள் உண்மையிலேயே ஜனநாயக நோக்கமும், மனிதநேயமும் மிக்கவை:

'சித்திரவதையைப் பயன்படுத்துவது என்பது நாம் இதுவரை சந்தித்திராத மிகப்பெரிய மனித உரிமை மற்றும் அமெரிக்காவின் கோட்பாடுகள் மீறலாகும். தண்ணீரில் முக்குதல் உள்ளிட்ட சகல விதமான சித்திரவதை வடிவங்களும் அருவருக்கத்தக்கவை; அவற்றுக்கு அமெரிக்காவில் இடமில்லை.'

'அது மட்டுமல்ல; சித்திரவதை என்பது ஒரு பலன் தரக்கூடிய விசாரணை நடைமுறையல்ல. சித்திரவதையில் ஈடுபடுவது வெளி உலகத்துக்கு அமெரிக்காவைப் பற்றிய

எதிர்மறையான சித்திரத்தை முன்நிறுத்தி நம்மைப் பாதுகாப்பற்றவர்களாகவே ஆக்கிவிடும்.'

'2001-இல் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் தொடங்கியதிலிருந்து அமெரிக்கப் படைகளின் கவனிப்பில் உள்ள கைதிகள் சிறுநீர் புகட்டப்பட்டும், பாஸ்பரிக் அமிலத்தால் மயக்கமடையச் செய்தும், துப்பாக்கிக் கட்டையால் அடிக்கப்பட்டும், நுரையீரல்களில் தண்ணீரை நிரப்பியும் இன்னும் கொடூரமான இன்னல்களுக்காக வெளிநாடுகளுக்குக் கடத்திச் செல்லப்படும் மிகமிக மோசமாக நடத்தப்பட்டு வந்துள்ளனர்.'

"இது என்னுடைய அமெரிக்கா அல்ல என்னுடைய அமெரிக்கா சித்திரவதையில் இறங்காது என்று நான் உறுதியாக அறிவிக்கிறேன்" என அமெரிக்க மக்கள் எழுச்சியுல்ன் முழக்கமிட்டனர்.[15]

US Senate Proceedings; தினமணி கட்டுரை.

## இது அந்த அறைகூவலின் சாரம்

ஆனால், அமெரிக்க மக்களின் இந்த மனித உரிமைக் குரல் வெள்ளை மாளிகையைச் சற்றும் அசைக்கவில்லை.

அமெரிக்க நாடாளுமன்றத்தின் குழு அவைகளான காங்கிரசும், செனட்டும் நிறைவேற்றிய சித்திரவதை எதிர்ப்புச் சட்டத்தை அதிபர் ஜார்ஜ் புஷ் தன்னுடைய ரத்து (VETO) அதிகாரத்தைப் பயன்படுத்தித் தள்ளுபடி செய்துவிட்டார்.

'மனித உரிமைப் பாதுகாப்பு' வெறும் சொல்லலங்காரம் மட்டுமே! சித்திரவதைக் கொடுமைகள் தொடர்கதையாக நீடிக்கும்.

எனினும் உலகில் அரசியல் பூசல்கள் நிலவிய போதிலும் மனித உரிமைகளைப் பறிக்கும் செயலைக்

கண்டிப்பது ஓயவில்லை. ஒரு சில நடவடிக்கைகளைக் கடுமையாக கண்டிக்கிறவர்கள் அதே போன்ற வேறு கொடிய நடவடிக்கைகளை உரத்த குரலில் கண்டிப்பதில்லை. காரணம், அவர்களே அந்நடவடிக்கைகளைக் கையாள்வதுதான். இத்தகைய மனப்போக்கினால், மனித உரிமைகளை மீறுவதற்கு எதிரான குரல் தாழ்ந்து விடுகின்றது. அரசியல் கருத்துக்கள் எவ்வாறு இருப்பினும், மனித உரிமைகளை வலியுறுத்துவதில் எவ்வித தயக்கமும் காட்டலாகாது. தனிநபர் சுதந்திரங்களும் மக்கள் சுதந்திரமும் ஒரே நாணயத்தின் இருபக்கங்கள். உலக அமைதி முன்னேற்றம் மற்றும் எல்லாப் பிரச்சினைகளும், ஒவ்வொரு மனிதரையும் மனிதகுலம் முழுவதையும் பாதிக்கக் கூடியவை.

## இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுப்புறச்சூழல்

தனிமனிதரின் தலைவிதியை மனித குலத்தின் வருங்கால வாழ்வுடன் இரண்டற இணைந்திருக்கும் மற்றொரு துறையும் உண்டு. இதுதான் மனிதனுக்கும் இயற்கைக்குமிடையிலான உறவு நிலையாகும். தொழில் நுட்ப முன்னேற்றங் காரணமாக மனிதனுடைய நடவடிக்கைகள் பலவாகப் பெருகிவிட்டன. இயற்கை வளங்கள் அழிக்கப்படுகின்றன. இடப்பரப்புகள் குறைகின்றன. கழிவுப் பொருள்கள் அதிகமாக உற்பத்தியாகின்றன. இக்கழிவுப் பொருள்கள் சுற்றுப்புறச் சூழலைச் சீர்குலைக்கின்றன. மனித நடவடிக்கைகளுக்கு இன்றியமையாத ஒரு சில புதுப்பிக்க முடியாத இயற்கை வளங்கள் அற்றுப் போவ்தால் உயிரியல் மண்டலத்துச் சமநிலை சீர்குலைந்து மனிதனுக்கும் இயற்கைக்கு மிடையிலான உறவுநிலை பாதிக்கக்கூடிய பேரபாயம் உருவாகி வருகின்றது. எனவே, அண்மை ஆண்டுகளாக சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பதில் கவனம் திரும்பியிருக்கிறது.

சுற்றுப்புறச்சூழல் தூய்மைக்கேட்டிற்குத் தொழில் வளமடைந்த சமுதாயங்களின் உற்பத்தி உத்திகளும், நுகர்வு முறைகளும் பெருமளவு காரணமாக இருக்கின்றன. தொழில் வளர்ச்சியில், சுற்றுப்புறச் சூழலும், இயற்கை வளங்களும் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவுகின்ற சாதனங்கள் என்றுதான் கருதப்படுகின்றது. குறைந்த காலத்தில் நிறைந்த ஆதாயம் பெறும் நோக்கத்தில் சுற்றுப்புறச்சூழல் கேடுறுவதைப் புறக்கணிக்கின்றார்கள். இயற்கை வளங்களைக் கண்மூடித்தனமாகப் பயன்படுத்துவதால் இயற்கைக்குப் பெருஞ்சேதம் உண்டாகும். மூன்றாம் உலக நாடுகளில் இயற்கை வளங்கள் அளவுக்கு மீறிச் சுரண்டப்படுகின்றன. இதனால் நாளடைவில், காடுகள், மீன் வளங்கள் போன்ற புதுப்பிக்கும் வளங்களாயினும் சரி, குறிப்பிட்ட அளவுகளில் உள்ள கனிவளங்களாயினும் சரி, அவை அற்றுப் போய்விடலாம்.

ஆனால், பல நாடுகளில் வளர்ச்சிக்குறைபாடும் சுற்றுப் புறச் சூழலில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இந்நாடுகளில் கடும் வறுமைநிலை காரணமாக, உயிரியல் மண்டலங்கள் மண், நீர் ஆகியவற்றின் உற்பத்தித்திறம்பாடுகள் அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. பல நாடுகளில் நகரமயமாகலும் இயற்கைச் சுற்றுப்புறச் சூழலைச் சீர்குலைத்து வருகிறது.

பன்னாட்டு உழைப்புப் பகிர்வு வடிவங்களிலிருந்தும் பன்னாட்டுப் பொருளாதார முறையினாலும் சுமத்தப்பட்டுள்ள கட்டுப்பாடுகளிலிருந்தும் சுற்றுப்புறச்சூழல் பிரச்சினைகளைத் தனியே பிரித்துப் பார்த்திட இயலாது. வளர்முக நாடுகள் தங்களின் சொந்த இயற்கை வளங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொள்வது புதியதொரு பன்னாட்டுப் பொருளாதார அமைப்பு முறையை ஏற்படுத்துவதற்கான

முயற்சிகளுக்கு அடிப்படையானதென வலியுறுத்தப்படு கின்றது. ஆனால், இயற்கை வளங்களை அறிவார்ந்த முறையில் பயன்படுத்துவதை அடிப்படையாகக் கொண்ட உலகளாவிய சுற்றுப் புறச் சூழல் நெறிமுறையிலிருந்து இந்த நோக்கத்தைத் தனியே பிரித்திட முடியாது. உலகிலுள்ள பெரும்பாலான முறையை எதிர்காலத்தில் பெருமளவில் மாற்றியமைத்துக் கொள்ள வேண்டியதிருக்கும்.

## செய்தி மற்றும் தகவல் தொடர்புத்திறன்கள்

மக்களிடையேயும் பண்பாடுகளிடையேயுமான செய்தித் தொடர்பு மற்றும் பரிமாற்றங்களைப் பொறுத்தவரையில், அண்மைக்கால முன்னேற்றங்களால் உலகம் மேன்மேலும் ஒருமுகமாகி வருகிறது. உலகெங்கும் உற்பத்தி மேலாண்மை மற்றும் அமைவன உத்திகள் பரவி எண்ணற்ற செய்தித்தொடர்பு நிறுவனங்கள் ஏற்பட்டுள்ளன. மக்களும், பொருள்களும் மிகத் துரிதமாக இடம் விட்டு இடம் சென்று வரமுடிகிறது. தொலைச் செய்தித் தொடர்புகளும் தகவல் சேகரிப்பு முறைகளும் விரைவாகப் பெருகிவருகின்றன. உலகெங்குமுள்ள செய்தித் தொடர்புச் சாதனங்களால் பரப்பப்படும் செய்திகளின் அளவு அபரிமிதமாகப் பெருகி வருகின்றது.

இந்தத் தொழில் நுட்பங்கள், சமுதாயங்களை உருமாற்றுவதிலும் பெரும்பங்கு கொள்கின்றன. தற்காலச் சமுதாயங்களின் நரம்பு மண்டலமாகச் செய்தி மற்றும் தகவல் தொடர்புகளைக் கூறலாம். சமுதாய இயக்கத்திற்கு, முக்கியமாகப் பொருளாதார நடவடிக்கைகளுக்கு இவை இன்றியமையாதவை. நிதியியல் நடவடிக்கைகளிலும், வங்கியியலிலும், வாணிப வளர்ச்சியிலும், நிலம், கடல், வான்வழிப்போக்குவரத்திலும் உடல்நல அல்லது பொது நிருவாக அமைப்புகளிலும், இராணுவ அமைப்புகளிலும்

இவை பெரும்பங்கு பெறுகின்றன. முடிவுகள் எடுக்கும்போது, இடையுறாது மாறுதலடையும் புதிய தகவல்களைக் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. மேலும் வகுக்கப்படும் எந்தக் கொள்கையினையும் மக்களுக்கு விளக்கிக் கூறி அதனை அவர்கள் ஏற்கும்படி செய்ய வேண்டியுள்ளது. இதனால் எந்த ஒரு ஆட்சிக்கும் திறமையான தகவல் தொடர்பு முறை இன்றியமையாததாகின்றது. எதிர்காலப் பொருளாதாரம் பெரும்பாலும் தகவல்களையே நம்பியிருக்கும் என்றும், வருங்கால வளர்ச்சிக்குப் மூலப் பொருள்களையும் எரியாற்றலையும் விடத் தகவல்களே அதிகமாகத் தேவைப்படும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

செய்தி மற்றும் தகவல் தொடர்புத் திறன்களில் நாடுகளிடையே பெரும் ஏற்றத் தாழ்வுகள் நிலவுகின்றன. மிகக்குறைந்த அளவு வசதியுடைய நாடுகளில், மேம்பாட்டு முறையின் பல்வேறு அம்சங்களைத் திறம்படக் கட்டுப் படுத்துவதற்கான் வழி வகைகள் இல்லை. வளர்முக நாடுகளில் செய்தி மற்றும் தகவல் தொடர்பு வசதிகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை இன்றைய உலக சமுதாயம் நன்கு உணர்ந்துள்ளது. உலகில் சமத்துவத்தையும், ஒருமைப்பாட்டையும் வளர்ப்பதற்கும், பல்வேறு சமுதாயங்களில் சுதந்திரமான மக்களாட்சி முறையை வளர்ப்பதற்கும் செய்தித் தொடர்பு மிகவும் இன்றியமையாததாகும். வளர்முக நாடுகளில் செய்தித்தொடர்பு வசதிகள் போதிய அளவுக்கு பெருகுமானால் பன்னாட்டு விவகாரங்களில் அவர்களுடைய குரல் இன்னும் ஓங்கி ஒலிக்க முடியும்; அத்துடன் கல்வித்துறையிலும் - குறிப்பாகப் படிப்பறிவின்மையை ஒழிப்பதிலும் - அவை முன்னேற்றங் காணலாம். மேலும்

அவை தங்களுடைய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆற்றலை வளர்த்துக்கொள்ளலாம் உடல் நல அமைப்பு முறைகளை மேம்படுத்தலாம்; ஊரக வளர்ச்சியை ஊக்குவிக்கலாம்; இயற்கை உற்பாதங்களை எளிதாகச் சமாளிக்கலாம். நாடுகள் தங்களுடைய தேசிய ஒற்றுமையை வலுப்படுத்தவும் பண்பாட்டுத் தற்பண்பினைப் பாதுகாக்கவும், அன்றாட மாறுதல்களில் மக்கள் அதிகமாகப் பங்கு கொள்ளும்படி செய்யவும் செய்தி மற்றும் தகவல் தொடர்புகள் உதவிபுரியக்கூடும்.

எனவே, தகவல்களுக்கான அனைத்து ஆதாரங்களையும் மக்களும் நாடுகளும் அணுகுவதற்கும், தங்கள் கருத்துக்களை அவர்கள் நேரடியாக வெளிப்படுத்துவதற்கும், மக்களின் கண்ணியத்தையும் சுதந்திரத்தையும் சீர்குலைக்கும் வகையில் செய்திகளைத் திரித்துக் கூறுவதைத் தடுப்பதற்கும் தற்போது உள்ள தடைகளையெல்லாம் அகற்றுவது முதற் கடமையாகின்றது. எல்லாவகைச் செய்தித் தொடர்பு வசதிகளும் பெருக வேண்டும்; பல்வேறு பிரிவினரின் தேவைகளுக்கு ஏற்ப நிகழ்ச்சிகளைப் புதுமையாக தயாரிக்கும் முறைகளை ஊக்குவிக்க வேண்டும். தகவல்களைச் சேகரிப்பதில் பொதுமக்கள் பெருமளவில் பங்கு பெறவும், அவர்கள் தங்கள் பண்பாட்டு உணர்வுகளை வெளிப்படுத்தவும் வாய்ப்பளிக்க வேண்டும்.

இந்திய பத்திரிகைகளும் நம் இந்திய நீதிமன்றங்களும் நமது இன்றைய மக்களாட்சியை மேலும் அழிவுக்கு ஆட்படாமல் காப்பாற்றி வருகின்றன என்பதை இன்று ஊடகங்களின் மூலமாகக் காண்கிறோம்.

எவ்விதத் தடையுமில்லாப் பத்திரிக்கை சுதந்திரம் ஒரு புறம், எல்லாச் செய்திப் போக்குவரத்தும் அரசாங்கத்தின்

கட்டுப்பாட்டிற்கும் தணிக்கைக்கும் உட்பட்டிருக்கும் நிலை மறுபுறம். இந்த இரண்டு துருவங்களுமே, சமூக நலனுக்கு உகந்தவை அல்ல. புது அறிவுக்கும் பழைய அதிகாரத்துக்கும் இடையே எழும் போராட்டம் பல நூற்றாண்டுகளாக நடந்து வருகிறது. புது உண்மைகளைக் கண்டுபிடித்து, உலகுக்கு எடுத்துரைக்கும் உரிமையைக் கோருகின்றனர் பலர். அவர்களை அடக்கி அவர்கள் குரலை ஒடுக்க முற்படுகின்றனர் பிறர். அதிகாரத்தின் அச்சுறுத்தலுக்குப் பணியாத சுதந்திரத்தையும், கண் மூடித்தனமான பிற்போக்கு வாதத்தை எதிர்க்கும் வாய்மையையும் நாம் ஆதரிக்க வேண்டும்.

எல்லா நாட்டுப் பத்திரிகையாளரையும் கட்டுப்படுத்தும் பத்திரிகை அற நெறியைப் பத்திரிகையாளரே வகுத்து ஏற்றுக் கொள்ள முயற்சி செய்யப்பட்டுள்ளது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பீடிகையில் இடம் பெற்றுள்ள அடிப்படைக் கொள்கைகளான சுதந்திரம், சகோதரத்துவம், நீதி ஆகியவை பத்திரிகைகளின் நடவடிக்கைகளுக்கு வழிகாட்டியாக அமைய வேண்டும்.

இந்தியாவில் வெளிவரும் பத்திரிகைகளை நாம் கவனித்தால் பத்திரிகைச் சுதந்திரமும், பேச்சுச் சுதந்திரமும் முழுமையாய் உள்ளன என்பதை நாம் அறிய முடியும். சில சமயங்களில் நிதானம் தவறிய எழுத்தும், பேச்சும், நேர்மையற்ற நடத்தையைத் தூண்டியதன் விளைவாய், பலாத்காரக் குழப்பங்களும் மிருகத்தனமான செயல்களும் நிகழ்ந்துள்ளது அனைவருக்கும் கவலை அளித்துள்ளது. ஆனால் மொத்தத்தில் இந்தியாவில் மக்களாட்சியின் எதிர்காலம் நம்பிக்கை ஊட்டுவதாகவே உள்ளது. உலகிலேயே சுதந்திரமான முறையில் மிகப்பெரிய பொதுத் தேர்தல்கள் இந்தியாவில் தான் நடைபெறுகின்றன.

சுதந்திரத்தை வழங்கும் போது, அது சிற்சில சமயங்களில் தவறாகப் பயன்படக்கூடும் என்பதற்கும் நிர்வாக எந்திரம் தயாராக இருக்க வேண்டும்.

"பேச்சு சுதந்திரத்தைப் பாதுகாக்க எவ்வளவு உறுதியான நடவடிக்கை எடுத்துக் கொண்டாலும், ஒரு கலையரங்கத்தில் நெருப்பு நெருப்பு"[1] என்று பொய்யாகக் கூக்குரல் எழுப்பி, மக்களிடையே பீதியையும் கலவரத்தையும் எழுப்புபவனை பேச்சு சுதந்திரம் காப்பாற்றாது என்று அமெரிக்க உச்சநீதிமன்ற நீதிபதி ஹோல்ம்ஸ் ஒரு வழக்கில் தீர்ப்பு கூறுகையில் குறிப்பிட்டார். மதத்துக்கு ஆபத்து, பாசிச ஆதிக்கம் வகுப்புவாதம் தலைவிரித்தாடுகிறது. "சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது" "நாட்டின் பாதுகாப்பிற்கு ஊறு விளைந்துள்ளது" என்பன போன்ற முழக்கங்கள் அவ்வப்போது எழுப்பப்படுகின்றன. சமுதாய, பொருளாதார முன்னேற்றம், மக்களின் கண்ணியம் காணவே, அரசியல் சுதந்திரத்தையும் பத்திரிகை சுதந்திரத்தையும் பயன்படுத்தி வருகிறோம். தனி மனிதனின் சுதந்திரம், சமூக நீதி, இரண்டையும் நாம் வலியுறுத்துகின்றோம்.

இந்நூலில் விவாதிக்கப்படும் மனித உரிமைகள் மக்கள் அனைவருக்கும் பொதுவானவை; தனி மனிதர் மக்கள் தொகுதிகள் அனைவருக்கும் உரியவை. மனித உரிமைகள் உலக நாடுகள் அனைத்தும் சேர்ந்த சர்வதேச சமுதாயத்தின் கருத்தை அவை வெளிப்படுத்துகின்றன. செய்திப் போக்குவரத்துக்கும் பொதுக் கல்விக்கும் கேளிக்கைகளுக்கும் மிக முற்போக்குச் சாதனங்களாக விளங்கும் செய்தித்தாள்கள், வானொலி, தொலைக்காட்சி முதலியவை எல்லா நாடுகளிலும், இன, சமய, வர்க்க வேறுபாடுகளைக் கடந்து, ஒவ்வொரு வீட்டிலும்

எட்டுகின்றன. வர்க்க வேறுபாடுகள் அனைத்தையும் போக்கிச் சமநிலை உருவாக்கப் பெரிதும் உதவ வல்லவை இச்சாதனங்கள். அறிவியல் பெருகிப் பரவ வேண்டுமானால் செய்திகள் தடையின்றிப் பரவுவதுடன் கருத்துக்கள் பரிமாறுவதற்கும் முழு வாய்ப்புகள் இருக்க வேண்டும். சிறந்த அறிவியல் தொழில் நுட்ப நூல்களும், உலக இலக்கியங்களும் அவை கிரேக்க, ரோம, யூதேய, கிரித்துவ, சீன, இந்திய இலக்கியங்களாயினும், உண்மையில் உலகில் அனைவருக்கும் சொந்தமானவை. எல்லையற்ற இச்செய்தி தொடர்பு சாதனங்களால் நம் கலாச்சாரத்தைத் தவிர மற்ற கலாச்சாரங்களின் அடிப்படைக் குறிக்கோள்களையும் உணர்வதற்கு நமக்கு இப்பொழுது வாய்ப்புகள் கிடைத்துள்ளன.

தற்போதுள்ள நவீன தொழில்நுட்பங்கள் மனிதனுக்கு ஏராளமான ஆற்றலைக் கொடுத்துள்ளது. இவற்றைச் சீராகப் பயன்படுத்தினால் மனித சமுதாயங்களை அலைக்கழிக்கும் பல சிக்கல்களுக்குத் தீர்வு கண்டுவிடலாம். எனவே, நவீன அறிவியல் ஏற்படுத்தியுள்ள புதிய வாய்ப்புகள் அளவிறந்தன.

இந்த வாய்ப்புகளைத் தெளிவாகத் தெரித்துகொள்ள வேண்டுமெனில், அறிவியல் உலகத்து நிலப்பாட்டையும், பல்வேறு அறிவியல் துறைகளுக்கிடையிலான உறவுகளையும், மிகப்பெருங்கொந்தளிப்புகள் தாம் உருவாகியுள்ளன என்பதை அறிந்து கொள்வது முக்கியமாகும். இத்தகைய எழுச்சியும் அதன் விளைவுகளும், அறிவியல் மற்றும் தொழில் நுட்ப உத்திகளில் பெரும் மாறுதல்களை உண்டாக்குகின்றன. புதிய அறிவுத்துறைகளை உருவாக்குகின்றன. அவற்றில் உயிரியல், தகவல் பகுப்பாய்வு, அமைப்புமுறைக் கோட்பாடு செய்தி மற்றும் தகவல் தொடர்பு விஞ்ஞானங்கள் போன்ற

வருங்காலத்திற்குரிய துறைகள் முக்கிய இடம் பெறுகின்றன. இவ்வாறு, அறிவியல் மற்றும் தொழில் நுட்பப் புரட்சியையே நாம் காண்கிறோம். இந்தப் புரட்சியினால், உற்பத்தி உத்திகளும், நுகர்வு முறைகளும் அடியோடு மாற்றமடைவதோடு மக்களின் மனப்போக்குகள் சமூக நடைமுறைகளுங் கூட மாற்றமடையக் கூடும். இது ஓரளவுக்கு இயற்கை விஞ்ஞானங்களுக்குமிடையில் ஏற்பட்டிருந்த எல்லைக் கோட்டினைக் கூட அழித்து விட முனைகின்றது. இன்று மனித நடவடிக்கையின் பல்வேறு துறைகளுக்கிடையிலும், பல்வேறு அறிவியல்களுக்குமிடையிலும், பல்வேறு பண்பாடுகளுக்கிடையிலும் கலப்புகள் நிகழ்கின்றன.

எரியாற்றல் வழங்குதல், உணவு, உறைவிடம், போக்குவரத்து ஆகியவை பற்றிய சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்குக் கணிசமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் இன்னும் எவ்வளவோ செய்ய வேண்டியுள்ளது. எல்லாச் சமுதாயங்களிலும், சுற்றுப்புறச்சூழல் மேலாண்மை பல விதச் சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது. அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்திலும் அறிவு வளம் பெற்றுள்ள நாடுகளின் தேவைகளையும் பிரச்சினைகளையும் ஒட்டித்தான் அந்தந்தத் துறைகளில் ஆராய்ச்சிகள் நடத்தப்படுகின்றன. அதே சமயம் பெரும் பாலான வளர்முக நாடுகளுக்குத் தற்போதுள்ள தொழில்நுட்ப அறிவு இன்னும் கிடைக்காமலே இருக்கிறது.

மக்கள் குழுமங்கள் அனைத்தின் நல்வாழ்வுக்காகவும் அறிவியல் பயன்படுத்தப்படவேண்டும். இதற்கு, அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் தொடர்பான தகவல்கள் அனைத்தும் தங்குதடையின்றி அனைவருக்கும் கிடைக்கும்படிச் செய்ய

வேண்டும். மனிதகுலம் முழுவதும் தேவைகளுக்கேற்ப அறிவியல் ஆராய்ச்சிகளை நடத்துவதற்கு உலகெங்கும் ஒரு முகமான முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். எல்லா நாடுகளும், குறிப்பாக வளர்முக நாடுகள், தங்களுடைய அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தினைப் பெருக்கிக் கொள்வதற்கு வழிவகை செய்ய வேண்டும். பொருளாதார மற்றும் சமூகச்சிக்கல்களுக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முறையில் தீர்வுகள் காண்பதையும், ஆராய்ச்சியாளர்களுக்கும் நிபுணர்களுக்கும் பயிற்சியளிப்பதையும், அறிவியல் ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் ஏற்பாடுகள் செய்வதையும் அடிப்படையாகக் கொண்டு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு நடைபெற வேண்டும்.

## உரிமைகள் சட்டமாகின்றன

அரசியல் - பொருளாதார - சமுதாயத் தொடர்புகளின் அடிப்படையில் வரலாறு வளர்கிறது. அவ்வளர்ச்சியின் படிகளே மனித உரிமைகளாகும்.

மனித உரிமைகளின் தோற்றத்தில் தெளிவான நிலைகள் பல இருக்கின்றன. முதலில், மனித உரிமை பற்றிய கருத்தும் அக்கருத்து ஏற்றுக் கொள்ளத் தக்கது, என்னும் உறுதியும் தோன்றுகின்றன. பின்னர், அந்த உறுதி பலருடைய மனத்திலும் இடம் பெற்று வலுவடைந்தால், அவ்வந்நாட்டின் அரசுகள் அதற்குரிய ஆவணத்தை உருவாக்கிப் பலர்க்கும் அறிவிக்கின்றன. அவ்வாவணம் அதனை வெளியிடும் நாட்டிற்கு மட்டும் பொருந்தும். அதன்பின், அது பன்னாட்டு அறிக்கை ஒன்றில் இடம் பெறும். அவ்வறிக்கையும் அதற்கு அடிப்படையாயிருந்த ஆவணமும் குறிப்பிட்ட மனித உரிமையை வரையறுத்து அதனை அனைத்து நாடுகளும் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளும்

இறுதியாக, அவ்வுரிமையைப் பன்னாட்டுச் சிறப்புக்கூட்டம் ஒன்று ஏற்றுக் கொள்ளும். அப்போது அது தனி நாடுகளின் அரசியலமைப்பில் சிவில் உரிமை என்னும் முறையில் இடம் பெற்றுச் சட்டமாகிறது. பன்னாட்டுத் தீர்மானத்தை ஆதரித்துக் கையொப்பமிடும் நாடுகளைப் பொறுத்தவரையிலேனும் அது பன்னாட்டுச்சட்டத்தாலும் வற்புறுத்தப்படும் நிலையை அடைகிறது.

இவ்வாறுதான் மனிதனுக்கு வேலையும் சமுதாயப் பொருளாதார பாதுகாப்பும் அளிக்கப்பட வேண்டும் என்னும் உரிமையும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதற்கான உரிமையும் 1966-ஆம் ஆண்டில் பன்னாட்டுக்கூட்டு ஒப்பந்தம் ஒன்றில் இடம் பெற்றுள்ளது.

## ஹெல்சிங் ஒப்பந்தம்

மனித உரிமைகளைப் பற்றி மனிதர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்னும் உரிமை 1975 ஆம் ஆண்டில் ஹெல்சிங்கியில் நடைபெற்ற ஐரோப்பியப் பாதுகாப்பு ஒத்துழைப்பு மாநாட்டின் இறுதித் தீர்மானத்தில் இடம் பெற்றது.[17] தனிமனிதன் தன் உரிமைகளையும் கடமைகளையும் அறிந்து நடப்பதற்கு உரிமையுண்டு என்பதை அந்த மாநாட்டில் கலந்து கொண்ட நாடுகள் ஏற்றுக் கொண்டன. ஆனால், அவ்வுரிமை பன்னாட்டுச் சட்டத்தில் இடம் பெறவில்லை; ஏனெனில் அம்மாநாட்டின் தீர்மானம் பன்னாட்டு உடன்படிக்கை அன்று. அது ஒரு பன்னாட்டு அறிக்கையே ஆகும். ஐக்கிய நாடுகளின் பொது சபையோ யுனெஸ்கோவின் பொது மாநாடோ போன்ற உயர்நிலை பன்னாட்டுக் கூட்டமொன்று அதனை ஏற்றுக் கொள்வதாக அறிக்கை வெளியிட்டால், அந்த உரிமை மனித உரிமை என்னும் தெளிவான தகுதியைப் பெறும். அப்போது தான் அவ்வமைப்புகளின் உறுப்பு நாடுகள் அவ்வுரிமையைத்

தத்தம் நாட்டு அரசியல் சட்டத்தில் சேர்த்துக் கொண்டு அதைக் கடைப்பிடிக்கும். அதன்பின் அவ்வுரிமை பன்னாட்டுச் சிறப்பு கூட்டம் ஒன்றால் ஏற்கப்பட்டுப் பன்னாட்டுச் சட்டத்தில் இடம் பெறும்.

இந்த உரிமையை இன்னொரு கோணத்திலிருந்தும் பார்க்கலாம். பார்க்க வேண்டும். பிறர் தலையீடில்லாக் கருத்துச் சுதந்திரம் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டிய உரிமையாகும். மனித உரிமைகளைப் பற்றி அறிந்து கொள்ளும் உரிமையும் இந்த உரிமையின் ஒரு பகுதியே.

## பிறர் தலையீடில்லாக் கருத்துச் சுதந்திரம்

1966 டிசம்பர் 16ஆம் நாளன்று ஐக்கிய நாட்டுப் பொதுச்சபையின் இசைவு பெற்ற சிவில், அரசியல் உரிமைகள் பற்றிய கூட்டு ஒப்பந்தத்தில் இடம் பெற்றுள்ளது. அந்த ஒப்பந்தம் 1976 மார்ச்சு 23ஆம் நாள் நடைமுறைக்கு வந்தது.[18] 1978 செப்டம்பர் 20க்கு முன்னரே 50 நாடுகள் அதனை உறுதி செய்து விட்டன; மேலும் 24 நாடுகள் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு விட்டன.[19] பன்னாட்டுச் சட்டப்படி, அந்த உரிமையைப் பாதுகாக்கும்கடமை அந்த நாடுகளுக்கு உண்டு.

1948 டிசம்பர் 10 ஆம் நாளன்று பொதுச்சபை அனைத்துலக மனித உரிமை அறிக்கையை ஏற்றுக் கொண்டது. கருத்துச் சுதந்திரமும் அதனை வெளியிடும் உரிமையும் ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு என்ற அவ்வறிக்கையின் 19 ஆம் வாசகம் சொல்கிறது.

"ஒவ்வொருவருக்கும் எண்ணுவதற்கும், எண்ணியதை வெளியிடுவதற்கும் உரிமையுண்டு. இந்த உரிமை எத்தகைய தடையுமின்றி, ஒவ்வொருவரும் தம்தமக்கு வேண்டிய செய்திகளையும் கருத்துக்களையும் எந்த நாட்டிலிருந்தும்

எந்த முறையாலும் பெற்றுக்கொளவதற்கும் கொடுப்பதற்கும் உரிமையுண்டு" (பிரிவு. 19)

ஒருவருடைய கருத்தைப் பிறர் தடைசெய்யக் கூடாதென்பதும், அக்கருத்தை வெளியிடுவதற்கு பிறர் கருத்தக்களை அறிந்து கொள்வதற்கும் அவனுக்கு உரிமையுண்டு என்பதும், அந்த முயற்சிக்கு எவ்வித எல்லையும் தடையாய் இருக்கக்கூடாது என்பதும் கருத்துச் சுதந்திரமாகும். ஆதலால் முன்பத்தியில் சொன்ன நாடுகளேயன்றிப் பிற நாடுகளும் இவ்வுரிமையைப் பாதுகாக்கும் கட்டுப்பாடுடையனவாகும். ஒவ்வொருவனும் தன் உரிமைகள் யாவை என்று தெரிந்து கொள்ளும் உரிமையும் கருத்துச் சுதந்திர உரிமையின் ஒரு பகுதியாகும்.

மனிதன் இந்த உரிமைகளை அனுபவிக்கும் போது சில கடமைகளையும், பொறுப்புகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று அதே 19ஆம் வாசகம் சொல்கிறது. ஆதலால், பிறருடைய உரிமைகள் நற்பெயர் ஆகியவற்றிற்கும், தேசியப் பாதுகாப்பு, உள்நாட்டு அமைதி, பொதுச் சுகாதாரம், நன்னடத்தை முதலியவற்றிற்கும் ஊறு நேராமல் இருப்பதற்காகச் சிலத்தடைகளைக் கருத்துச் சுதந்திர உரிமைகளின் மீது விதிக்க வேண்டும். ஆனால், கருத்துச் சுதந்திரத்தின் ஒருபகுதியான மனித உரிமைகளை அறிந்து கொள்ளும் உரிமையால் மேலே சொன்ன தீமைகள் ஏற்படாததால், மேலே சொன்ன தடைகளை இந்த உரிமையின் மீது விதித்தல் கூடாது.

சிவில் அரசியல் உரிமைகளை மேலும் பல நாடுகள் ஏற்றுக்கொள்ளும் போது கருத்துச் சுதந்திரஉரிமை இன்னும் வலுவடையும். நடைமுறையில், இப்போதே, இவ்வுரிமை சில நாடுகளில் சட்டத்தின் வலிமையை பெற்றுள்ளது. வேறுசில நாடுகளின் அரசியலமைப்புச் சட்டத்திலேயே இடம்

பெற்றுள்ளது. முன்னரே சொன்னபடி, கருத்துச் சுதந்திர உரிமையில் மனித உரிமை பற்றி அறிந்து கொள்ளும் உரிமையும் அடங்கும்.

சமுதாய வாழ்வுடனும் தொடர்புடைய நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்திகளை அறிந்து கொள்ளும் உரிமை ஒவ்வொருவனுக்கும் உண்டு என்பது யுகோஸ்லாவியா போன்ற சில நாடுகளின் அரசியல் சட்டத்திலேயே இடம் பெற்றுள்ளது. ஆதலால், யுகோஸ்லாவிய நாட்டுச் செய்தித்தாள்கள், வானொலி தொலைக்காட்சி போன்ற கருவிகள் பொதுமக்களின் நன்மைக்கான செய்திகளை உண்மையாகவும் ஒரு சார்பின்றியும் எடுத்துரைக்க வேண்டும் என்னும் கட்டுப்பாட்டுடையன.

ஒருவருடைய நாட்டின் அரசியல் சட்டத்தில் இடம் பெற்றுள்ள மனித உரிமைகளை மட்டுமின்றி அவருடைய நாடு ஏற்றுக் கொண்டுள்ள பன்னாட்டுடன்பாடுகளில் சொல்லப்பட்டுள்ள உரிமைகளையும் அறிந்து கொள்ள அவனுக்கு உரிமையுண்டு. அன்றியும், ஐக்கிய நாட்டின் பொதுச்சபையால் அறிவிக்கப்பட்ட உரிமைகளை அறிந்துகொள்ளவும், அவனுக்கு உரிமையுண்டு. இந்த உரிமை “அனைத்துலக மனித உரிமைகளுக்குச்” சிறப்பாக பொருந்தும். அவ்வுரிமைகள் அவனுடைய நாட்டைக் கட்டுப் படுத்திக் காட்டிய பன்னாட்டுடன்பாடுகளில் சேர்க்கப்பட்டிருந் தாலும், இல்லாவிட்டாலும் அவ்வுரிமைகளைப் பற்றி அவன் அறிந்து கொள்ள உரிமையுண்டு. இதன் முக்கியத்துவம், ஒரு நாடு அதன் குடிமக்களுடைய அடிப்படை உரிமைகள் சிலவற்றை மறுக்கும்போது நன்கு விளங்கும்.

ஆனால், சில உரிமைகள் சமுதாய மனசாட்சியில் உருப்பெற்று இப்போதுதான் வெளிக்கிளம்பும் நிலையில் இருக்கக்கூடும். எடுத்துக்காட்டாக அமெரிக்கக் கண்டத்தில்

வழக்கிலிருக்கும் அரசியல் புகலிடம் உரிமையைக் கூறலாம். இத்தகைய உரிமைகள் அவ்வளவு முக்கியமானவை என்று சொல்ல முடியாது. தமிழகத்தில் நடைமுறையில் இருந்த ஒதுக்கீடு உரிமையானது இன்று இந்தியா முழுவதும் உள்ள உயர் கல்விநிலையங்களில் நடைமுறைக்கு வந்துள்ளது. சமுதாய மனசாட்சியில் உருப்பெற்று வெளிவந்ததாகும்.

அரசியல், சிவில் உரிமைகளை மட்டுமன்றி, பொருளாதார சமுதாய கலையியல் பண்பாட்டு உரிமைகளைப் பற்றியும் மக்கள் அறியவேண்டும். தனிமனித உரிமைகள் மட்டுமன்றி, சமுதாய உரிமைகளைப் பற்றியும் அறிந்து கொள்வதற்கு ஒருவனுக்கு உரிமையுண்டு. எடுத்துக்காட்டாக ஒரு நாட்டின் அரசியல் சுதந்திரம், அதனுடைய பொருளாதார வளங்களை, பன்னாட்டுப் பொருளாதார உடன்பாடுகளை மீறாத வகையில் தன் விருப்பம் போலப்பயன்படுத்துவதற்கு அந்தநாட்டு அரசுக்குள்ள சுதந்திரம் முதலிய உரிமைகளைப் பற்றியும் அந்த நாட்டுக் குடிமக்கள் தெரிந்து கொள்வதற்கு உரிமையுண்டு.[20]

## கடமைகள்

ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமைகளேயன்றிக் கடமைகளும் உண்டு. சட்டத்திற்குப் பணிதல், நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் நன்மை தரும் முயற்சிகளில் ஈடுபடுதல், பிள்ளைகள் பெற்றோருக்கும் பெற்றோர் பிள்ளைகளுக்கும் உதவுதல் போன்ற கடமைகள் அவற்றுள்அடிப்படையானவை. உரிமைகளைப் பற்றி அறிந்து கொள்ளும் உரிமையியல் இந்தக் கடமைகளும் அடங்குமா?

ஆம் கடமைகளும் அடங்கும். பன்னாட்டுடன் பாடுகளில் கடமைகள் வெளிப்படையாக சொல்லப்பட வில்லை. ஆனால், பல நாடுகளில் அரசியல் சட்டத்தில்

குடிமக்கள் உரிமைகளோடு அவர்களுடைய அடிப்படைக் கடமைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இதில் அனைத்து சோசலிஷ நாடுகளும் அடங்கும். உரிமைகளும் கடமைகளும் ஒன்றையொன்று சார்ந்தவை என்பது அந்நாடுகளில் கொள்கை. ஐரோப்பியப் பாதுகாப்பு ஒத்துழைப்பு மாநாட்டின் இறுதித் தீர்மானம் மனிதன் அறிந்துகொள்ள வேண்டிய உரிமையில் மனிதஉரிமைகள் மட்டுமன்றிக் கடமைகளும் அடங்கும் என்பதைத்தெளிவாய் எடுத்துரைக்கிறது.

இந்த உரிமை பலவகையில் செயல்படக்கூடும். இந்த உரிமையை அரசு எவ்விதத்திலும் தடைசெய்யக்கூடாது என்பது அடிப்படைக் கோட்பாடு. அன்றியும் ஒரு நாட்டின் சட்டங்களும் அந்தநாடு கையொப்பமிட்டுள்ள அந்நாட்டின் அரசு வெளியிடுகிற இதழ்களில் இடம் பெறவேண்டும். மனித உரிமைகளை எடுத்துரைக்கிற பிற ஆவணங்களும் அந்நாட்டில் தடையின்றி உலவுவதற்கு அரசு இணங்க வேண்டும்.

வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள், பருவ இதழ்கள், நூல்கள் முதலியவை மனிதஉரிமைகள்ளையும் எடுத்துரைப்பதற்கு அரசு இணங்க வேண்டும். அந்தப் பணியில் ஈடுபடுகிற அரசியல் கட்சிகளையும் சமுதாய இயக்கங்களையும் அரசு ஆதரிக்க வேண்டும். அன்றியும், ஐ.நா.யுனெஸ்கோ பன்னாட்டு தொழிலாளர் நிறுவனம், காமன் வெல்து நாடுகள் கூட்டுசேரா அமைப்பு போன்ற பன்னாட்டு நிறுவனங்களும், அந்த நாடு தொடர்பு கொண்டுள்ள மண்டல நிறுவனங்களும் வெளியிடுகிற மனித உரிமை பற்றிய தகவல்களைத்தன் எல்லைக்குள் தடை செய்யக்கூடாது.

இறுதியாக மனித உரிமைகளைப் பற்றி அறிந்து கொள்ளும் உரிமைக்குச்சிறப்பு உத்தரவாதம் எதுவும் கிடையாது என்பதையும் மனித உரிமைகள் பிறவற்றிற்கு

அளிக்கப்பட்டுள்ள உத்தரவாதமே இதற்கும் பொருந்தும் என்பதையும் சொல்ல வேண்டும். இன்று தகவல் தொடர்பில் வியத்தகு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஆதலால், பிற உரிமைகளைக் காட்டிலும் இவ்வுரிமை எளிதில் செயல்படமுடியும்.

## தப்பெண்ணங்கள், இனவெறி பொறையின்மை, இன ஒதுக்கம்

மனித உரிமை அறிக்கை வெளியிட்ட பிறகு எவ்வளவோ முன்னேற்றம் ஏற்பட்டுள்ள போதிலும், இனபூசல்கள் பெருகியுள்ளன. ஓரவஞ்சனையின் அனைத்து வடிவங்களையும் ஒழிப்பதற்கு எல்லா நாடுகளும் தென் ஆஃப்ரிக்கா உட்பட உறுதி பூண்டுள்ள போதிலும் தப்பெண்ணமும், காழ்ப்புணர்வும் அதிகரித்துள்ளன.

## இனவெறி

"இனங்கள்" எனக்கூறப்படும் குழுமங்கள் வாழும் நாடுகளில் வரலாற்றுக் காணரங்களுக்காக இனங்களுக்கு எதிராக ஓரவஞ்சனை காட்டப்படுகிறது. அங்கே எல்லா நிலைகளிலும் ஏற்றத்தாழ்வுகள் நிலவுகின்றன. இனங்களுக்கும் குழுமங்களுக்குமிடையிலான ஏற்றத்தாழ்வு களைக் கல்வி முறைகள் கூடநிலைப்படுத்துகின்றன. உயர்கல்வியின் சில துறைகளில் சில இனங்களின் மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படுவதில்லை. ஒரே மாதிரியான கல்வியும், பிற தகுதிகளையும் உடையவர் களைக்கழித்துக் கட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் "தேர்வுமுறை" சிலகுழுமங்களுக்குப் பாதகமாக இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சார்ந்திருப்பதானது, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறைகளில் இடம் பெறவும் தடையாக விளங்குகிறது. இதனால் ஒரு சிலகுழுமங்களைச் சேர்ந்த மக்களுக்குப் பொருளாதாரத்தின் குறிப்பிட்ட சில துறைகள் மட்டுமே ஒதுக்கப்படுகின்றன; அல்லது ஒருசில உடல்

உழைப்பையும் பணிகளையும் மட்டுமே அவர்கள் செய்ய வேண்டியிருக்கிறது.[21] இந்நிலை நீடிக்குமானால், ஆதிக்க வர்க்கத்தினருக்கும் இனக்குழுமங்களுக்கிடையிலும், பூசல் அதிகரிக்கும்.[22]

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப புரட்சியினால் உள்நாட்டு இடப்பெயர்ச்சி நீடித்த போதிலும், வேறு நாடுகளிலிருந்து இடம் பெயர்ந்து வரும் தொழிலாளர்களை வேலைக்கமர்த்திக்கொள்ளும் நாடுகளின் எண்ணிக்கை பெருகி வருகிறது. ஆனால் உள்நாட்டுத் தொழிலாளர்கள் பணியாற்ற விரும்பாத துறைகளில் தான் அயல்நாட்டுத் தொழிலாளர்கள் அதிக அளவில் அமர்த்தப்படுகின்றார்கள். சில நாடுகளில் சட்டத்தின் ஓர வஞ்சனைக்கு இடமளிக்கக்கூடிய வேளாண்மைத் துறையில்தான் இவர்கள் தொழிலாளர்களாக பயன்படுத்தப்படுகின்றார்கள். இவர்கள் முன்னாள் குடியேற்றப் பகுதியோ, அடிமைப்பட்ட பகுதிகளையோ சார்ந்தவர்களாக இருப்பின், குடியேற்ற ஆதிக்க முறையுடன் இணைந்த ஒருசில பணிகள் தான் இவர்களுக்கு அளிக்கப்படுகின்றன.

மிகுதியாக தொழில் வளமடைந்த நாடுகளில் இந்நிலை நிலவுகிறது. தொழில் வளமடைந்து வரும் ஒருசில நாடுகளில், பொருளாதாரத்தின், ஒரு சில துறைகளில் உயர் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் ஒரு புறமிருக்க, அயல்நாட்டுத்தொழிலாளர்களையும் நியமித்துக் கொள்கிறார்கள். இதனாலும் இன உறவுகளில் பெரும் பிரச்சினைகள் உண்டாகின்றன.

## இன அல்லது பொருளாதார மற்றும் சமயப் பூசல்கள்

"இனம்" அல்லது "இனமரபு" சார்ந்த சிக்கல்கள், நகர்ப்புறங்களில் அதிகமாகத் தோன்றிய போதிலும், கிராமப்

பகுதிகளிலும் சிக்கல்கள் இல்லாமலில்லை. கொடிய வறுமையும் நிலப்பற்றாக் குறையும், இனப்பாகுபாடுகளும் மிகுதியாக நிலவும் பகுதிகளில் இச்சிக்கல்களைப் பெருமளவில் காணலாம். கடந்த காலப் படையெடுப்புகள் காரணமாக இந்நிலைமை உருவாகியிருக்கலாம். இதன் விளைவாக ஒரு சில குழுமங்கள், வேளாண்மையின் ஏழ்மைப் பகுதிகளுக்குத் தள்ளப்படுகின்றனர்; அல்லது சில பருவங்களில் மட்டுமே தொழிலாளர்கள் தேவைப்படும் தோட்டத் துறைகளுக்குத் துரத்தப்படுகிறார்கள். மொழி, சமயம், பொது வரலாற்று அனுபவம், பொதுப்பண்பாட்டு நெறிகள், வெளிநாட்டு முறைகள் காரணமாக இனக்குழுமங்களும் இனமரபுக் குழுமங்களும், உருவாயின என்பது ஒரு பண்பாட்டு உண்மை. தப்பெண்ணங்கள் பரவுவதற்கும், ஆதிக்க உணர்வு உருப் பெருவதற்கும், அநீதிக்கும் ஏற்றத் தாழ்வுக்கும் எதிராகக் கருத்து உருவாவதற்கும் சாதனமாக விளங்குவதும் பண்பாடுதான்.

பலமொழிகளை வழங்கும் நாடுகளில்-முக்கியமாக மிக ஏழ்மையான நாடுகளில் எல்லா மொழிகளையும் கல்வியிலும்; ஆட்சியிலும் செய்தித் தொடர்புச் சாதனங்களிலும் பயன்படுத்துவதற்குப் பொருளாதாரக் காரணிகள், அடிப்படையில் தடையாக இருக்கின்றன. நாடு தழுவிய செய்தித்தொடர்பு தேவைப்படுவதால் அதற்கு ஒரு மொழியை அல்லது ஒருசில மொழிகளை மட்டுமே பயன்படுத்த வேண்டியிருக்கிறது. இவ்வாறு பொதுமொழி என்ற பெயரில் ஆதிக்கமொழி திணிக்கப்பட்டு, அந்த மொழி பேசாதவர்கள், ஓரவஞ்சனைக்குட்படுத்தப்படுகிறார்கள். இவ்வாறு ஒரு சில இனப்பூசல்கள் மொழியாலும் உண்டாகின்றன.

சமயத்தைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு சமுதாயத்தின் உயர்ந்த ஆன்மீக மற்றும் பண்பாட்டு

நெறிமுறைகளுடன் சமயம் இரண்டறக் கலந்துள்ளதாயினும், சில வகையான ஒதுக்கல்களுக்கும் சமயம் காரணமாகின்றது. சமய வேறுபாடுகள் குழுமங்களுக்கிடையே வேற்றுமையை வளர்க்கின்றன. இச்சமயங்கள், சமயப் பொறையுடைமையைப் போதிக்கும் அதே, சமயத்தில் சிலவகைச் சமூகப் பூசல்களுக்கும் வித்திடுகின்றன.

குடியேற்ற ஆதிக்க முறைக்கு எதிரான எதிர்ப்பு உணர்வு பல குழுமங்களை விடுதலைப் போராட்டத்தில் ஒருங்கிணைந்திருக்கிறது. ஆனால் கல்வி வசதிகளில் ஏற்றத்தாழ்வு, அரசுப்பணிகளுக்கு ஆளெடுக்கும் முறைகளில் வேறுபாடு, நிலம் ஒதுக்குவதில் பாகுபாடு, தகராறுகளைத் தீர்ப்பதில் ஒரு சார்பு போன்ற காரணங்களால், பல்வேறு இனமரபுக் குழுமங்களிடையிலும் அவ்வப்போது பூசல்கள் உண்டாகின்றன.[23]

## தப்பெண்ணங்களைப் பரப்பும் செய்தித் தொடர்புச் சாதனங்கள் நூல்கள்

பண்பாட்டின் சில கூறுகள், தப்பெண்ணங்கள் பரவக் காரணமாக இருப்பினும், மற்ற நாடுகள், இனங்கள், இனமரபுகள் குறித்துப் பொதுமக்கள் பெரும்பாலும் தகவல் அறிந்து கொள்வது செய்தித் தொடர்புச் சாதனங்கள் வாயிலாகத்தான் சில செய்திகளைத் திரித்து வெளியிடுவதன் மூலம் தப்பெண்ணங்கள் உருவாகின்றன. உதாரணமாகச் சில குற்றங்களை குறிப்பிட்ட சில இனங்களுடன் அல்லது இன மரபுகளுடன் இணைத்துக் கூறுவதால், அந்த இனங்கள் மீது தவறான எண்ணம் ஏற்படுகின்றது. அயல் நாட்டுக்குடிகள் வந்து குடியேறுவது சட்டவிரோதம் என்றும், அதைக்கட்டுப்படுத்த வேண்டும் என்றும் கருதும் வகையில் செய்திகள் வெளியிடப்படுகின்றன.[24] பண்பாட்டு வேறுபாடுகளைத் திரித்துக்கூறி எதிர்மறை விளைவுகளை

உண்டாக்குகின்றார்கள். இதைப்போல் பள்ளிப்பாட நூல்களும் தப்பெண்ணங்களைப் பரப்புகின்றன. இவை, இனவெறியை வெளிப்படையாகத் தூண்டவில்லையென்றாலும் எல்லா மக்களும் சரிநிகர் சமம் என இவை விளம்பிய போதிலும், இவை வரலாற்று நிகழ்ச்சிகளையும், தொழில் வளர்ச்சியையும், பண்பாட்டுச் சாதனைகளையும், போதிய விளக்கமின்றியும், ஒரு சார்புடனும் கூறுகின்றன. மோசமான தவறுகள் திருத்தப்பட்ட போதிலும் திருத்தப்படாத தவறுகள் பல இன்னும் உள்ளன. இவற்றிலுள்ள திரிபுகள் தெரியாமையால், இவை எளிதில் ஏற்றுக்கொள்ளப்பட்டு விடுகின்றன. "ஆக்கிரமிப்புத் தேசியம்" தன்னைத் தெள்ளத் தெளிவாக வெளிக்காட்டிக் கொள்வதில்லை. வரலாற்று நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்துக் கூறுவது, உயர்வு தாழ்வும் வேற்றுமைகளும் நிலையானவை என்ற எண்ணத்தை தோற்றுவிக்கிறது.

இந்தப் பிரச்சினைகள் மிகப் பெருமளவுக்குக் கடுமையாகி விட்டிருப்பதால், இன ஒதுக்களுக்கும், இனவெறிக்கும் ஓரவஞ்சனைக்கும், தப்பெண்ணங்களுக்கும், காழ்ப்புணர்வுகளுக்கும் எதிரான போராட்டத்திற்கு உலகெங்குமுள்ள மக்கள் அனைவரையும் ஒன்று திரட்ட வேண்டிய பொறுப்பு ஐ.நா. மற்றும் யுனெஸ்கோவிற்கு ஏற்பட்டிருக்கிறது.[25] இந்த நிகழ்வுகளின் செயல் முறைகளை ஆராய்ந்து வெளிப்படுத்த வேண்டியது முதல் நடவடிக்கையாகும். அடிப்படை மாறுதல்களை ஏற்படுத்துவதில், அரசுகளுக்கு உள்ள பொறுப்புக்குக் குந்தகமின்றி, ஓரவஞ்சனையில் திளைக்கின்ற சமூக நிறுவனங்களைச் சீர்படுத்த யுனெஸ்கோவும் முனைந்து நிற்கின்றன. கல்வியையும், அறிவியலையும் (சமூக அறிவியல்கள் உட்பட) பெறுவதில் எதிர்ப்படும் இடையூறுகளைப் போக்குவதிலும், தப்பெண்ணத்தையும், காழ்ப்புணர்வையும், இனவெறியையும் நிலை நிறுத்த

முயலும் பண்பாட்டையும், நெறிமுறைகளையும் தூய்மைப்படுத்துவதில் தனிக்கவனம் செலுத்தப்படும்.[26]

## இன ஒதுக்கலுக்கு எதிரான திட்டம்

இன ஒதுக்கலை ஒழிப்பதற்குத் தனி செயல்திட்டம் வகுக்கப்படும் சில ஆஃப்பிரிக்க நாடுகளின் பொருளாதாரத்திற்கு முட்டுக்கொடுப்பதற்கு குறைந்த கூலியில் கிடைக்கும் ஏழைத் தொழிலாளர்களைப் பயன்படுத்தும் தந்திரங்களைப் பயன்படுத்துவதைப் பற்றிய ஆய்வுகள் நடத்தப்படும். மற்றச் சமயங்களில் நிலவும் அற்பப் பூசல்களைத் சில ஆப்பிரிக்க நாடுகள் தன் இன வெறிக் கொள்கையை நிலை நாட்டுவதற்கு எவ்வாறு பயன்படுத்துகிறது என்பதும் எடுத்துரைக்கப்படும். இன ஒதுக்கீட்டை "தனி வளர்ச்சி" எனக்கூறி நியாயப்படுத்துவதற்கு போலிப் பண்பாட்டுக் கொள்கைகளை எவ்வாறு புனைந்து கூறுகின்றார்கள் என்பதும் உலகறியச் செய்யப்படும்.[27] மொழியைப் பிரிவினைச் சாதனமாகப் பயன்படுத்தும் சூழ்ச்சியும் வெளிப்படுத்தப்படும்.

பலதிறப்பட்ட சமூக நிலைமைகள், வரலாற்று அனுபவங்கள், பண்பாட்டு தத்துவப் பாரம்பரியங்கள் ஆகியவற்றுக்கிடையிலும் சகிப்புணர்வை வளர்க்கும் திட்டங்களும், பாகுபாடுகள், ஓரவஞ்சனைகள் ஆகியவற்றின் தன்மை, அவை பரவும் விதம் ஆகியவை குறித்து ஆராய்ச்சிகள் நடத்துவதற்கான திட்டங்களும் வழிகாட்டு நெறிகளும் இந்தப் பெருந்திட்டத்தில் இடம் பெறும். இந்த ஆராய்ச்சிகளின் முடிவுகள் அனைத்தும், விரிவான அளவில் வெளியிடப்படும். இவை பத்திரிகையாளர்கள், கல்வியாளர்கள் போன்றவர்களுக்குக் கிடைக்கும்படி செய்யப்படும். இந்த முடிவுகள், ஆசிரியர் பயிற்சி வகுப்புகளிலும், கல்வியின் அனைத்துக் கட்டங்களிலும் இடம் பெறுமாறு செய்யப்படும்.

## அமைதி, பன்னாட்டு உணர்வு, மனித உரிமை, நாடுகளின் உரிமை

"அமைதி என்பது ஆன்மீக ஆற்றலில் பிறக்கும் ஒரு நற்பண்பு." ஸ்பினோசாவின் இம் மேற்கோளானது என்றும் போல பொருத்தமாக இருக்கின்றது. கடந்த 60 ஆண்டுகளில் உலகப் போர் நிகழவில்லை என்பது உண்மை. அதுபோல் உலகில் அமைதியும், நிலவவில்லை என்பதும் உண்மை. உட்பகையினால் சில பகுதிகள் அழிந்து வருகின்றன. இன்றைய வருங்காலத் தலைமுறைகளை அழித்துவிடுவதுபோல் அச்சுறுத்தி வரும் அணுப் பேரழிவின் ஆபத்து இன்று மனித இனத்தைச் சூழ்ந்துள்ளது.

அமைதியைப் பாதுகாத்தல் இன்று ஆக்க முயற்சியாக உருவெடுத்து வருகின்றது. அது போர்களைத் தடுப்பது மட்டுமல்லாமல், இவ்வுலக முழுவதும் நிலவும் பொருளாதார, சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்கவும் முயல வேண்டும். போர் அல்லது அமைதி ஆய்வு வல்லுநர்கள், பொருளியலார், வரலாற்றிஞர், மருத்துவர், தத்துவ அறிஞர், சட்ட வல்லுநர் போன்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்த வெவ்வேறு நாட்டினர் எல்லோரும் இதை ஏற்றுக்கொள்கின்றனர்.

இவர்கள் இந்நிலையை வெவ்வேறு கோணங்களில் ஆய்ந்த போதிலும், அமைதி, படைக்கல ஒழிப்பு, பொருளாதார வளர்ச்சி ஆகியவை ஒன்றையொன்று சார்ந்துள்ளன எனும் பொதுக்கருத்தை ஏற்கின்றனர். வரலாற்று, பொருளாதாரக் காரணங்களினால், மூன்றாம் உலகே இன்றைய வன்முறைக்களமாக இருக்கின்றதென இவர்கள் கருதுகின்றனர். நாடுகளைச் சுரண்டுவதையும், நாடுகளிடையே நல்லிணக்கம் குறைவதையும், கூட்டணிகளின் எதிர்ப்பையும், மனித இன நலத்தை நசுக்கும் படைக்கலப் போட்டியின் மடமையையும், நாடுகளின்

நலங்களுக்காக நிகழும் காலத்திற்கு ஒவ்வாத போட்டியையும் அறிவியலாளர் அரசியல், படைத்துறை, அதிகாரத்திற்கு அடிமைப்படுத்துதலையும் இவர்கள் ஆராய்ந்து கண்டிக்கின்றனர். அமைதி பற்றிய ஒரு தத்துவமும் நடைமுறையும் உடனே தேவை என்பதை இப்பல்வேறு அணுகுமுறைகள் உணர்த்துகின்றன.

திட்டவட்டமான எல்லைகளுக்குட்பட்ட செயல் முறைகளில் நம்பிக்கை கொண்ட கிரேக்கக் கோட்பாட்டில் ஊறிப் போயிருந்த தத்துவ அறிஞர் பால் வாலரிக்கு, உலகில் உருவாகிய இந்தப் புதிய நிலைமை கவலையை அளித்தது. இந்தக் கவலையை அவர் "பலதரப்பட்ட உறவு நிலைகளும் தொடர்புகளும் கொண்ட இன்றைய உலகில், நிலைப்பாடோ, தொடர்பாடோ, காரண காரியத் தொடர்புக் கோட்பாடோ இல்லை. இந்தக் குழப்ப நிலையினால் செயலறிவு, பகுத்தறிவு, மாண்பு நலம் அனைத்தும் அழிந்துபோய் விடும்" என்று தெரிவிக்கிறார்.

அவருடைய இந்தக் கூற்றினை ஒரு தீர்ப்பு எனலாம். இதனைப் புறக்கணிக்க இயலாது. மனிதர் மேன்மேலும் நெருங்கி வரவர, அவர்கள் மற்றவர்களின் கூருணர்ச்சியைத் தொடுகிறார்கள் என்பது உண்மை தான். ஆனால் அந்த நெருக்கத்தின் அளவுக்குச் சுமுகமான உறவுகளும் தொடர்புகளும் ஏற்படவில்லை. மனித நடவடிக்கைகளில் கூட்டுச்சார்பு பெருகி வருகிற அளவுக்கு, உண்மையான மனித உரிமைகள் வலியுறுத்தப்படவில்லை. போரினைத் தவிர்த்திடும் அளவுக்கு உலகில் பிரிவினைகள் நீங்கவில்லை. எல்லோரையும் சரி நிகராகக் கருதும் அளவுக்கு, பண்டைய உயர்வு தாழ்வு மனப்பான்மை ஒழிந்துவிடவில்லை. மனிதருக்கிடையிலான உறவுகள் சரி நிகரானவர்களுக்கிடையிலான உறவாகவே இருக்க முடியும்

என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தான் முழுமையான அமைதியை ஏற்படுத்த முடியும். இந்த அமைதி, சுதந்திரத்திலிருந்து பிரிக்க முடியாதது. அங்காடி சக்திகளின் செயல் என்ற பெயரால், சில மக்களுடைய நிலப்பரப்பின் வள ஆதாரங்கள் பறிக்கப்பட்டு, அவர்கள் மறைமுகமான அல்லது நேரடியான சர்வாதிகாரத்திற்கு ஆட்படுகிறார்கள். அமைதி என்ற பெயரில் இந்த மக்களை எந்த வடிவத்திலும் சுரண்டுவதை அனுமதிப்பது கபட நாடகமாகவே அமையும். அதே போன்று தனி நபர்களுக்கும் சிறுபான்மையினருக்கும் அடிப்படை உரிமைகளை மறுக்கின்ற எதேச்சாதிகாரம் எதனையும் அனுமதிப்பதும் வஞ்சனைச் செயலாகும்.

இந்த விவாதத்தில் வெறும் கற்பனைக் கோட்பாடுகளில் வீழ்ந்து விடாமல், நம்கால உலகின் நடைமுறை நிலைமைகளைக் கவனத்தில் கொள்ளுமாறு நாம் கடமைப்பட்டிருப்பதால் அமைதிக் கொள்கையைப் பகுத்தறிவுக்குப் புறம்பான போரொழிப்புக் கோட்பாட்டுடன் குழப்பிக்கொள்ளலாகாது. அதே சமயம் நடைமுறை நிலைமைகளுக்கு மதிப்புக் கொடுக்கும்போது, தற்போதைய பூசல்களினால் உண்டாகின்ற தடுமாற்றத்திற்கு இடங்கொடுத்து விடலாகாது. ரூசோ கருதியதுபோன்று, "மனிதகுலத்தின் தலைவிதியை அரசுகள் மட்டுமே நிருணயிப்பதில்லை" என்பதையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். மனிதர்களை நெருக்கமாகக் கொண்டு வருவது மிகக் கடினமானதொரு பணி. ஒருவர் பழக்க வழக்கங்களையும் மனப்போக்குகளையும் மற்றவர் அறிந்து கொள்ளுதல், கல்வி முன்னேற்றம், தகவல் அறிவிப்பு மனித உரிமைகளைப் பிரச்சாரம் செய்தல் போன்றவற்றின் மூலமாகவே இந்தப் பணியை செய்து முடிக்க இயலும். இந்தப் பணி பயனற்றதாகப் போய்விடாமல், அமைதிக்கான திட்டவட்டமான அரசியல் நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும்.

இந்த நம்பிக்கைகள் எல்லாம் நிறைவேறுமா? இந்த வினாவுக்குத். தெளிவான மறுமொழி இனிதான் கிடைக்கவேண்டும். இதற்கிடையில், "பைத்தியக்காரர்கள் மத்தியில் புத்திசாலியாக இருப்பது பைத்தியக்காரத்தனம்" என்று ரூசோ கூறியதைப் பொய்ப்பிக்கும் வகையில், இடைவிடாத போராட்டத்திற்கிடையிலும் அமைதியை நாடும் உணர்வினை வலுப்படுத்துவதற்கு அமைதியாகப் பாடுபடுவது நலம்.

படைக்கலப் போட்டி உலக அமைதியைப் பெரிதும் அச்சுறுத்தி வருகிறது. இதனால், மனிதர் உழைப்பும் போரால் வளங்களும் கணக்கின்றி விரயமாகின்றன. உலக ஒற்றுமைக்கான உலகக்குழு, (World Council for Global Cooperation) படைக்கலங்களுக்காக ஒவ்வொரு நிமிடமும் 10 இலட்சம் டாலர் செலவிடுகின்றது. 1982வரை உலகெங்கும் 5,00,000 விஞ்ஞானிகள் இராணுவ ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார்கள் என கணக்கிடப்பட்டுள்ளது.

படைக்கலப் போட்டியால் இராணுவக் கூட்டுகள் உருவாகின்றன. ஆதிக்கவெறி ஏற்படுகின்றது. படைக்கலன்களை விற்கும் நாடுகள், பெருமளவில் படைக்கலன்களை உற்பத்தி செய்து பொருளாதார ஆதாயம் பெறுகின்றன. அந்நாடுகளின் தற்காப்புச் செலவுகளும் குறைகின்றன. இந்நாடுகள் போர்க்களங்கள் என்னும் ஆய்வுக் கூடங்களில் தங்கள் தொழில் நுட்பங்களுக்கு மெருகேற்றிக் கொள்கின்றன.

ஊட்டச் சத்துக் குறைபாடும், கடும் வறுமையும், மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுப்பதும் தாண்டவமாடும்போது, அமைதிக்கு ஏது இடம்? தனிநபர் உரிமைகளையும் மக்கள் உரிமைகளையும் புறக்கணிப்பதும், பன்னாட்டுப் பொரளாதாரக் கட்டமைப்பில் ஏற்றத்தாழ்

வுகளும், அயலவர் ஆக்கிரமிப்பும் பிறநாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் அயலார் தலையீடும் இன ஒதுக்கீடும் ஆயுதப் போர்களுக்குப் பன்னாட்டு நெருக்கடிக்கும் முக்கியக் காரணங்களாகின்றன. மனித உரிமைகளை மதித்துப் போற்றுவதன் அடிப்படையில் அமைந்த அமைதிதான் என்றும் நிலைத்திருக்கும். ஆனால் மனித உரிமைகளும், மக்கள் உரிமைகளும் இடையறாது மீறப்படுகின்றன. மனித உரிமைகளை மீறுகிற செயலுக்குச் சிகரமாக விளங்குகிறது. சித்திரவதைக் கொடுமைதான் மனிதரின் கண்ணியத்தையே இழிவுபடுத்தும் இந்தக் கொடூரம் பெருமளவில் இன்னும் தலை விரித்தாடுகிறது.

தனிநபர் உரிமைகளுக்கும் மக்கள் உரிமைகளுக்கு மிடையிலான உறவு மிகவும் முக்கியமானதென ஐ.நா.வும். யுனெஸ்கோவும் கருதுகின்றன. எனவே, மனித உரிமைகளைப் போற்றிப் பாதுகாப்பது யுனெஸ்கோவின் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாக இருந்திருக்கிறது. மக்கள் சுதந்திரத்தை போற்றுவதும் நாடுகளின் உரிமையை மதிப்பதும், மனிதரின் கண்ணியத்தைப் போற்றுவதுடன் இரண்டற இணைந்ததாகும். தனிநபர்களும், குழுமங்களும் தங்கள் உரிமைகள் அனைத்தையும் நன்கறிந்து கொண்டு அவற்றை முனைப்புடன் செயற்படுத்துவது மிகவும் இன்றியமையாதது. அதே சமயம், தனிமனிதரின் உரிமையியல், அரசியல், சமூகவியல் பண்பாட்டியல் உரிமைகளுக்கு உத்திரவாதமளிக்கும் பெரும் பொறுப்பினை அரசு ஏற்க வேண்டும்.

அமைதியாக வாழ்வதற்கு நாடுகளுக்கும் மக்கள் குழுமங்களுக்கும் தனிநபர்களுக்கும் உள்ள உரிமையை இயம்புவது உயிர் வாழ்வுக்கும், பாதுகாப்புக்குமான அடிப்படைத்தேவையை மட்டுமின்றி, உலக நாடுகளின்

கூட்டத்தில், சம நிலையில் முழுமையாகவும், சுதந்திரமாகவும் பங்கு பெறுவதற்கான தேசியச் சமுதாயத்தின் சட்டப்படியான வேட்கையினையும் வெளிப்படுத்துவதாகும்.

## மனித உரிமைகள், அமைதி, படைக்கலக் குறைப்பு, தொழில் நுட்பம்

பகுத்தறிவுக்கும் இசைவிணக்கத்திற்கும் வழிகாட்டும் ஓர் ஆக்கமுறையான சாதனம் அமைதி என்று நாம் கருதுகிறோம். இக்காரணத்தாலேயே, இந்நாளில் அமைதி என்பது "அமைப்புமுறைக்குட்படுத்தப்பட்ட போர் நிறுத்தமாக மட்டுமே இருக்க முடியாது என்பதை நாம் உணர்ந்து கொள்வது அவசியம். 1945 முதற்கொண்டு ஒவ்வொரு போர் நிறுத்தமும் ஒவ்வொரு உடன்படிக்கையும் ஒவ்வொரு ஒப்பந்தமும் அணு ஆயுத யுகத்தின் இராணுவத் தொழில் நுட்பத்தின் விரைவான வளர்ச்சிக்கும், ஆயுதப்போட்டிக்கும் புதிய ஊக்கமளித்திருக்கிறது."

இன்றைய உலகம் எதிர் அணிகளாகப் பிளவுபட்டுக்கிடக்கிறது. இராணுவ மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கு இந்த பிரிவினையே ஆணிவேராக இருக்கிறது. மேலும், ஒவ்வொரு அணியின் அரசியல் கோட்பாடும், சுதந்திரமான தத்துவ வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது. இதன் நடைமுறை விளைவுகளில் ஒன்று, அறிவியல் "குடியேற்றம்" ஆகும். இது பெரும்பாலும் ஆதிக்கக்கோட்பாட்டினாலும் அறிவியலின் வரலாற்றுப் பாதிப்புகளிலிருந்து அறிவியல் விலகிச்சென்றதாலும் ஏற்பட்டதாகும். இதனால் நடைமுறையில், முறைமையியலான பிரிவினையுணர்வு தோன்றி, அதன் விளைவாக, அறிவியல், மனித நலனுக்கு அல்லாமல், இராணுவத்தேவைகளுக்கு அடிமைப்பட்டிருக்க வேண்டும் என்ற எண்ணம் உருவாகியுள்ளது. இந்த

அறநெறிப் பிறழ்ச்சி நமது காலத்து அறிவியலின் பண்புகளாக அமைந்துள்ளன. இதற்கு அன்றாடம் சான்றுகளைக் காண்கிறோம். அணிகளாகப் பிளவுபட்டிருப்பதுதான் இயல்பான நிலவரம் என்பதை அது அனுமானித்துக் கொள்கிறது. மரபுக் கொள்கையிலிருந்தும், இராணுவத் தொழில் துறையினரின் கொள்கையிலிருந்தும் விலகிச்சென்றுள்ள விஞ்ஞானிகளின் அறநெறிச் செயல்களுக்கும் அது விளக்கமாக அமைகிறது. அந்த விஞ்ஞானிகளின் நிலைதான், மனித குலத்திற்கு ஓர் எதிர்காலம் இருக்கிறது என்ற நம்பிக்கையை அளிக்கிறது.

எனவே, இந்த நூற்றாண்டில், மேம்பாட்டுக்காகப் புதிதாக வகுக்கப்படும் குறிக்கோள்களுடன் அமைதி இணைந்திருக்கும் என்பது தெளிவு, கோட்பாட்டுப் பூசலில் அமைதி நிலவும் காலத்தைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு ஆதிக்கக் கட்டமைப்பில் நிலைகொண்டு விட்ட வன்முறையை ஒழிப்பதற்குக் தவறினால் உருப்படியான அமைதியைநிலை நாட்ட முடியாது.

அமைதியும் மேம்பாடும் ஒரே நிகழ்வு தான் எனக்கூறுவது. அருவமான அறநெறிக் கோட்பாட்டைப் பற்றி மட்டும் பேசுவதாகாது. மாறாக, இந்நூற்றாண்டின் நம்மை எதிர்நோக்கும் ஒரு முக்கியமான சிக்கலை எதிர் கொள்வதாகும். இன்றைய நிலையில் அமைதி என்பது போருக்கு எதிரானது மட்டுமன்று பூசல்களைக் கைவிட்டு, இசைவிணக்கம், தற்சோதனை, சுதந்திரம், மக்களாட்சி ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு புதிய வடிவச் சமுதாயத்தை உருவாககக் கூடிய புதுவகை மேம்பாட்டை நடைமுறையில் எட்டுவதற்குத் தேவையான அரசியல் மற்றும் தத்துவப் பின்னணியாக அமைதி விளங்குகிறது. அமைதி பற்றிய இந்த அம்சம் தெளிவாகாத வரையில் வட்டாரப்

பூசல்களும், பெரும் போர்களும், பன்னாட்டு உறவுகளை நிருணயிக்கும் காரணிகளாக அமையும். அதாவது வட்டாரப் பூசல்கள், உலகப் போராக மூளக்கூடிய அபாயம் அச்சுறுத்திக் கொண்டே இருக்கும்.

தற்போதைய நிலைமைகள் நீடிக்குமாயின், வெறும் தேசிய நலன் எதுவும்,-தன்னலக் குறிக்கோள் எதுவும் கோட்பாட்டு நோக்கில் இராணுவக் கொள்கையில் ஒரு காரணியாகக் கருதப்படும். இதனால், கொள்கை வெறியிலான பயங்கரவாதம், வட்டாரப் பூசல்கள் போன்ற கட்டமைப்பு வன்முறை அன்றாடம் நம்மை அலைக்கழித்துக் கொண்டே இருக்கும்.

இன்றைய உலகில் வளர்முக நாடுகளின் மக்கள் தொகை உலகமொத்த மக்கள் தொகையில் 75% ஆகும். இந்த நூற்றாண்டின் இறுதியில் இது பல மடங்கு உயரும் இந்த நாடுகளின் அயல்நாட்டுக் கடனுக்கு நிகராக (80,000 கோடி டாலர்) ஆண்டுதோறும் ஆயுதங்களுக்காகச் செலவிடப்படுவது கவலைக்குரியது. அமைதிக்கான போராட்டத்தின் அரசியல் மற்றும் தத்துவ அம்சங்களை புதியதொரு பன்னாட்டுப் பொருளாதார ஒழுங்கு முறையை ஏற்படுத்தும் திட்டத்தின் கீழ்மேற்கொள்ளும் பொருளாதார முயற்சிகளிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. ஒவ்வொரு வகையிலும், அமைதியும், படைக்கலைப்பும், மேம்பாடும் அடிப்படையில் ஒன்றோடொன்று பிணைந்துள்ளன. எனவே, தற்போது ஆயுதங்களுக்காகச் செலவிடும் வளவசதிகளை, வளர்முக உலக நாடுகளில் போர்கள் மூளக்கூடிய வாய்ப்புகள் நீடிப்பதால், ஆயுத உற்பத்திகளுக்கு தொடர்ந்து நிதி ஒதுக்க வேண்டியிருக்கிறது.

மக்களை வெறும் எந்திரகதியில் மாற்றிவிட முடியாது படைக்கலைப்பு என்பது, ஆயுதப் போட்டியில் முக்கியமாக

ஈடுபட்டிருக்கும் நாடுகள் தங்களுடைய முந்துரிமைகளை மாற்றியமைப்பதை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. அத்தகைய மாற்றம், உள்நாட்டிலும், வெளிநாட்டிலும், பொருளாதார மற்றும் கொள்கை வரையறையிலும் ஒரு மாற்றமாக அமைய வேண்டும். அத்துடன், ஒற்றுமை, கூட்டுச்சார்பு, அடிப்படையிலான சமகால மேம்பாட்டுக்கு வழிசெய்யும் வகையில் குறிக்கோள்களிலும் நோக்கங்களிலும் மாற்றம் ஏற்படவேண்டும்.

இதில், அமைதியைக் குறிக்கோளாகக் கொண்ட ஓர் அறிவியலுக்கு, அறிவியல் மற்றும் இராணுவ வளவசதிகளை எவ்வாறு மாற்றுவது என்ற மற்றொரு அடிப்படையான சிக்கலும் எழுகிறது. இதற்கு, ஆதிக்க அரசியலிலிருந்து அறிவியல் விடுதலை பெறவேண்டும். இக்காலத்தில் ஆதிக்கம் செலுத்துகிற வலிமை வாய்ந்த இராணுவ தொழில் துறையினரின் பிடியிலிருந்து அறிவியலும், விஞ்ஞானிகளும் விடுபட்டு, புதுமுறை ஆராய்ச்சிகளில் ஈடுபடவேண்டும். இது நிகழுமானால், அது இந்நூற்றாண்டின் மிகப்பெரிய புரட்சியாக அமையும்.

இறுதியாக ஒவ்வொரு மக்கள் குழுமமும் தனது ஆளுமையைப் பாதுகாத்து முழுமையாக மேம்படுத்துவதற்கும் தனது எதிர்காலத்தைத் தானே நிர்ணயித்துக் கொள்வதற்கும் அக்குழுமத்திற்கு உள்ள உரிமைகளை ஏற்றுக் கொண்டதனால் கூட்டுத் தற்பண்பின் பண்பாட்டுப் பரிமானங்களின் இன்றியமையாமையை ஒரு மனதாக உணர்ந்துகொள்ள வழி ஏற்பட்டுள்ளது. தனிமனிதர் தான் விரும்பும் பண்பாட்டில் தங்குதடையின்றிப் பங்கு கொள்வதற்கு அவருக்குள்ள உரிமையை யாரும் மறுப்பதற்கில்லை. எனினும் வாழ்கின்ற வளர்கின்ற தம் சொந்தப் பண்பாட்டினைப் பாதுகாக்கவும், நிலை நாட்டவும்,

மேம்படுத்தவும் மக்கள் குழுமங்களுக்குள்ள உரிமைமனித உரிமைகளில் முதலிடம் பெறுவதுடன், உலக அமைதிக்கான இன்றியமையாதத் தேவையாகவும் அமைகின்றது.

மனித உரிமைகள் குறித்து இன்னும் பரவலாக அறியாமை நிலவுகிறது. இந்த அறியாமையைப் போக்குவதில் ஐ.நா. யுனெஸ்கோ மற்றும் அரசுகளுக்கு முக்கியப்பங்கு உண்டு. அத்துடன், உலகின் பல்வேறு பகுதிகளில் இத்துறையில் நடந்து வரும் ஆராய்ச்சிகளின் முடிவுகளை விருப்பு வெறுப்பின்றி எல்லோருக்கும் அளிப்பதற்குச் செய்தித் தொடர்புச் சாதனங்களை ஊக்குவிக்க வேண்டும்.... அப்பொழுது தான் உலக அமைதி, மனித உரிமைகள் பற்றிய தகவல்களைப் பன்னாட்டு உணர்வுடன் அனுகும் போக்கினை வளர்க்க முடியும்.

உலக அமைதியை நிலைநாட்டுதல், பன்னாட்டு உணர்வை வளர்த்தல் மக்கள் குழுமங்களுக்கு விடுதலை ஈட்டித்தருதல் மனித உரிமைகளைப் பெற்றுத்தருதல் ஆகிய அனைத்தும் ஒன்றோடொன்று இணைந்த ஒன்றுக்கொன்று உறுதுணை செய்யக்கூடிய நோக்கங்களாகும். இவற்றுக்கான உத்தி கூட்டிணைவாக வகுத்திட வேண்டும். உலக அமைதிக்கும் மனித உரிமைகளுக்குமான போராட்டம், எல்லா நிலைகளிலும், அனைத்துச் சூழ்நிலைகளின் அறைகூவல்களுக்கிடையிலும் இடையறாது நடைபெறவேண்டும்.

அரசுகளுக்கிடையே நிலவும் உறவுகள் உறுதியாக இருப்பது ஒவ்வோர் அரசிலுமுள்ள நிலைமையைப் பொறுத்துள்ளது என்பதை இப்போது மக்கள் உணரத் தொடங்கி விட்டனர். உலகின் செல்வ நாடுகளுக்கிடையே நிலவும் உறவுகளின் உறுதி நிலையை, உலகிலுள்ள ஏழைநாடுகளின் அடிப்படை அமைப்புகளின் உறுதி

நிலையை பாதிக்கின்றது. செல்வமும் பாதுகாப்பும் பெற்றுள்ள நாடுகள், உலகின் தென்பாதி முழுவதும் நிலவும் வறுமைக் கொடுமையைப் புறக்கணித்தால் தம் செல்வத்தையும் பாதுகாப்பையும் கடக்க இயலாதென்பதை உணர வேண்டும்.

"சுதந்திரம்" எனும் சொல் தனிநாட்டின் அளவிலும், நாடுகளின் சமுதாய அளவிலும் பொறுப்பையும் உரிமையையும் உணர்த்தத் தொடங்கி விட்டது. சமூக, பன்னாட்டு, அரசியல் விளைவை பல்வேறு சமூகங்களிலும் சமூகச் சூழல்களிலும் புத்தெழுச்சியைக் காணலாம்.

அமைதி நிலவ வேண்டுமெனில் உலகம் முழுவதும் ஏற்புடைய பண்பு நெறிகள் தேவை. ஆயினும் அதே நேரத்தில், வேறு பண்பு நெறிகளையும் ஏற்கப் பழக வேண்டும். இது சமநிலையை உருவாக்கும். ஒரு சிலரை வெறுத்து, வேறுபாடுகளை ஏற்க மறுக்கும் ஒரே சார்புள்ள பண்பு நெறிகள் நிலவுமானால், சமநிலை குலைந்து, போர்ச் சூழல் உறுதியாக உருவாகும். சில வேலைகளில் இப்போர் அம்மண்டல அமைதியையே குலைக்கின்றது.

பல இனங்களடங்கிய அரசில் மற்றொரு வகை முரண்பாட்டைக் காண்கிறோம். கடந்த 200 ஆண்டுகளாக உலகில் நாட்டுணர்ச்சி மிகுந்த ஆற்றலுடன் வளர்ந்து வருகின்றது. மேலும் ஒரே நாட்டினம் வாழும் தேசிய அரசே இலட்சிய அரசாகக் கருதப்படுகின்றது. இந்நிலையில் ஆற்றல் மிகு மத்திய அரசின் கீழ் நாட்டின் உணர்வையும் மொழிகளையும் மதித்து, பொருளாதார, சமூக முன்னேற்றத்தை வளர்த்தாலொழிய பல நாட்டினங்கள் வாழும் ஓர் அரசில் வகுப்புக் கலவரங்கள் ஏற்படக் கூடும். இந்திய துணைக்கண்டத்தில் இதனை நாம் காண்கிறோம்.

இன, சமய வேறுபாடுகள் ஒன்றோடொன்று தொடர்புடையன. சிலவேறு இனப்பூசல்கள் சமயப்

பூசல்களாகவும், சமயப் பிணக்குகள் இனப் பிணக்குகளாகவும் வெடிக்கின்றன. உள் நாட்டுப்போர் சமயக் கொடியின் கீழ் நடக்கின்றது. எடுத்துக்காட்டாக, தற்காலத்தின் தொடக்கத்தில் சமயப் போர்கள் ஐரோப்பாவை உலுக்கின. மேலும், ஓர் அரசில் பல்வேறு நாட்டினங்கள் இருப்பதால், அந்த அரசுக்கு அதன் அருகிலுள்ள அரசுகளுக்கும் தேசிய சிறுபான்மையோரின் காரணமாகப் பிணக்குகள் எழக்கூடும். உதாரணம் இந்தியா-பாகிஸ்தான் மற்றும் இந்தியா-இலங்கை இடையே நிலவும் உறவுகள்.

## மண்டலச் சூழலில் அமைதியும் மனித உரிமைகளும்

ஆயினும் இன்று தத்துவச் சிந்தனையில் ஒரு புத்தூக்கம் பிறந்துள்ளது. இது செய்தித் தொடர்புச் சாதனங்களினால் பிணைக்கப்பட்டுள்ள சாதாரண மனிதரிடத்திலும் காணப்படுகின்றது. சமயப் புத்தெழுச்சியையும் இன்று நாம் காண்கிறோம். அதன் சமூக, பன்னாட்டு, அரசியல் விளைவை பல்வேறு சமூகங்களிலும் சமூகச் சூழல்களிலும் காணலாம். இச்சமயப் புத்தெழுச்சி இயக்கங்களிலிருந்தும், இன்றைய தத்துவங்களிலிருந்தும் எழும் புதிய போக்குகள் அமைதி, போர் பற்றிய பிரச்சினைகளைப் பாதிக்குமென்பது திண்ணம்.

அமைதி நிலவ வேண்டுமெனில் உலக முழுவதும் ஏற்புடைய பண்பு நெறிகள் தேவை. ஆயினும் அதே நேரத்தில், வேறுபாடுகளுடைய பிற பண்பு நெறிகளையும் ஏற்கப் பழக வேண்டும். இது சமநிலையை உருவாக்கும் ஒரு சிலரை வெறுத்து, வேறுபாடுகளை ஏற்க மறுக்கும் ஒரே சார்புள்ள பண்புநெறிகள் நிலவுமானால் சமநிலை குலைந்து, போர்ச்சூழல் உறுதியாக உருவாகும்.

ஒரே நிலப்பகுதியில் பல இனங்கள் கலந்த அரசுகள் அமைக்கப்படுவதால் பிணக்குகளும், வட்டார மண்டலப் பூசல்களும் தோன்றும். ஐரோப்பிய குடியேற்ற அரசுகள் வெளியேறி நாட்டுணர்ச்சி வெற்றிபெற்ற பிறகு, விதிமுறைகளின்றி செயற்கையாக வகுக்கப்பெற்ற எல்லைகளுடைய அரசுகள் தோன்றின. இச்செயற்கை அமைப்புகளுக்குட்பட்ட அரசுகளில் பல்வேறு குல, இனச் சமுதாயங்கள் இருந்தன. நாளடைவில் அவற்றுள் ஒன்று மேலாதிக்கம் பெற்றது. இத்தகைய அரசுகளில் குல அல்லது உள்நாட்டுப் போர் மூண்டது. இந்நிலை நீடிக்கும் தன்மையுடையது. ஏனெனில் அங்கு வாழும் மக்களிடையேயுள்ள பிரிவுகளே இதற்கு முக்கிய காரணம், பெரும்பாலும் இத்தகைய உள்நாட்டுப் போரில் காட்டுமிராண்டித்தனத்தைக் காண்கிறோம். சில வேளை இப்போர் அம்மண்டல அமைதியையே குலைக்கின்றது.

பல இனங்களடங்கிய அரசில் மற்றொரு வகை முரணியல்பைக் காண்கிறோம். கடந்த 200 ஆண்டுகளாக உலகில் நாட்டுணர்ச்சி மிகுந்த ஆற்றலுடன் வளர்ந்து வருகின்றது. மேலும், ஒரே நாட்டினம் வாழும் தேசிய அரசே இலட்சிய அரசாகக் கருதப்படுகின்றது. இந்நிலையில் ஆற்றல்மிகு மத்திய அரசின் கீழ், நாட்டின் உணர்வையும் மொழிகளையும் மதித்து பொருளாதார, சமூக முன்னேற்றத்தை வளர்த்தாலொழிய, பல நாட்டினங்கள் வாழும் ஓர் அரசில் வகுப்புக் கலவரங்கள் ஏற்படக்கூடும்.

இன சமய வேறுபாடுகள் ஒன்றோடொன்று தொடர்புடையன. சில வேளை இனப்பூசல்கள் சமயப் பூசல்களாகவும், சமயப் பிணக்குகள் இனப்பிணக்குகளாகவும் வெடிக்கின்றன. உள்நாட்டுப் போர் சமயக் கொடியின் கீழ் நடக்கின்றது. எடுத்துக்காட்டாக, தற்காலத்தின்

தொடக்கத்தில் சமயப் போர்கள் ஐரோப்பாவை உலுக்கின. மேலும், ஓர் அரசில் பல்வேறு நாட்டினங்கள் இருப்பதால், அந்த அரசுக்கு அதன் அருகிலுள்ள அரசுகளுக்கும் தேசிய சிறுபான்மையோரின் காரணமாகப் பிணக்குகள் எழக்கூடும்.

இரு நாட்டினங்களிலுள்ள அரசுகள் பல இனங்களுக்கு அரசுகளின் மற்றொரு வகையாகும். தற்காலத்தில் ஐரோப்பியக் குடியேற்றத்தின் பயனாக இத்தகைய அரசுகள் தோன்றின. இவற்றில் ஐரோப்பியச் சிறுபான்மையினர் சுதேசப் பெரும்பான்மையோர் மீது ஆதிக்கம் செலுத்தினர். இங்கு இரு பண்பாட்டுமுறையைக் காண்கிறோம். பலமுறை இந்த ஆதிக்கத்தின் விளைவாக வெவ்வேறு இனத்தவரிடையே கடும் போர் மூள்கின்றது.

பல இனங்களுள்ள அரசுகளில் மிகுந்த இடர் நிறைந்து குடியேறி ஆதிக்கம் செலுத்தும் அரசாகும். இஃது இனத்தாக்குதலால் நிலை நாட்டப்பெறும் அரசு, குடியேற்றக் காலத்தில் ஐரோப்பியர்கள் ஆப்பிரிக்கா, ஆசியா கண்டங்களின் பகுதிகளில் இவ்வாறு நடத்திக் குடியேறினார்கள்.

குடியேற்ற நாட்டுக்கொள்கையானது போர்களுக்கு ஒரு முக்கிய காரணமாக இருந்தது. இன்னும் இருந்து வருகின்றது. இது முன்னாள் இயற்கை. இன இயல்புகளின் காரணமாக ஒன்றுபட்டிருந்த பகுதிகளைத் துண்டாக்கும் அழிவாற்றலாக இருந்து வந்துள்ளது. இதன் அழிவு விளைவுகளைத்தடுத்து, ஏற்பட்ட இழப்பை ஈடு செய்வதற்காக முதலில் குடியேற்றத் தாக்குதல்களுக்கு எதிர்ப்பும், பிறகு விடுதலைப் புரட்சிகளும், தோன்றின. அமைதியை நிலைநாட்டி, பழைய நிலைக்குத் திரும்புவதற்கு இவை தேவையெனக் கருதப்பட்டது.

குடியேற்ற நாட்டு முறை வெளிப்படையான ஒரு வகை சுரண்டலாகும். ஒரே அரசியல் அல்லது சமுதாயத்தில்

சுரண்டல் நிகழ்ந்தால், அதனால் போர்களும் புரட்சிகளும் எழும். எந்த சமுதாயத்திலும் சமூகப் புரட்சியானது, ஆதிக்க வகுப்பினர் ஒடுக்கப்பட்ட வகுப்பினரைச் சுரண்டுவதை எதிர்க்கும் திட்டமான முயற்சியாகும். கருத்தியல் கொள்கைகள் தோன்றியிருப்பது இன்றைய உலகில் முக்கிய இயல்பு. இக்கொள்கைகளுக்கிடையே எழும் கடும் போர்கள் இக்காலத்தில் இடர்பாடுகளைத்தோற்றுவிக்கின்றன. இத்தகைய போராட்டமே இன்றைய மறைமுகப் போர் எனும் பிணக்கத்திற்குக் காரணம், இவை செய்தித் தொடர்புச் சாதனங்களினால் ஒன்றையொன்று தாக்குவதால் இப்போராட்டம் வலுப்பெறுகின்றது.

ஒரு மனிதரிடமிருந்து அவரது மனித உரிமையைப் பிரிக்க முடியாது. குற்றங்களே செய்யாத தூயவர்கள் மற்றும் பணம், பதவி, செல்வாக்கு உள்ளவர்களுக்கு மட்டுமே மனித உரிமைகள் உண்டு என்பது போன்ற வீண் கற்பனைகளை எல்லாம் தூக்கித் தூர எறிந்துவிட்டு சில அடிப்படை உரிமைகளைத் தெரிந்து கொள்வது நலம். ஏனென்றால் இது உரிமைகள் யுகம்.

மனித உரிமைகள் - சாதி, வகுப்பு, மொழி, இனம், நாடு, பொருளாதார நிலை மற்றும் மதத்திற்கு அப்பாற்பட்டது. மனிதர்கள் மனிதர்களுக்கு உரிய மாண்பு, கண்ணியத்தோடு பாதுகாப்பாக வாழ எவையெல்லாம் தேவையோ அவையெல்லாம் மனித உரிமைகள் ஆகும். ஒவ்வொரு மனிதருக்கும் எந்தெந்த உரிமைகள் இயற்கையாகவே உடனிருந்து அவரின் பாதுகாப்புக்கு உரியதாக அமைகிறதோ அவற்றை மனித உரிமைகள் என்று வரையறுக்கிறோம். மனித உரிமைகள் குறித்து சரியாக அறிவதால் ஒருவர் தனது உரிமையை மதிப்பதோடு தனது உரிமையைப் போல தன் வாழ்வில் எதிர்கொள்ளும் ஒவ்வொருவர் உரிமையையும்

மதித்துக் காக்க முடிகிறது. இதனால் ஏற்றத்தாழ்வுகள் அற்ற சமூகம் பிறக்க வழி தோன்றுகிறது. ஒரு தனி மனிதர் மற்றும் ஒரு சமூகத்தின் உரிமையில் தலையிடுவதை மனிதஉரிமைகள் மீறல்கள் என்கிறோம்.

## மனித உரிமைகள் பண்பாடு

மனித உரிமைகள் பற்றிய இந்தப் புதிய கண்ணோட்டத்தில் அந்த உரிமைகளின் மூன்று தலைமுறைகள் காணப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் மற்றவற்றுடன் பின்னிப் பிணைந்தவை. எனினும் அவற்றைத் தனியாக வேறுபடுத்திக் காணலாம். முதலாவது தனிமனித உரிமைகள், உடன் வாழ்வதற்கும், உடலியல், உளவியல், அறிவாண்மை ஆன்மீக ஒருமைப்பாட்டிற்குமான உரிமை இவற்றில் அடங்கும். மனிதரின் கண்ணியம் இந்த உரிமைகளை அடிப்படையாகக் கொண்டதாகும். அடுத்து வருபவை இரண்டாம் தலைமுறை உரிமைகள், சுகாதாரம், கல்வி, வேலை, தகவல், பிற பொருட்பாடுகள் பற்றிய உரிமை இவற்றில் அடங்கும். இவை வாழ்க்கைத் தரத்திற்கு உதவியாக இருப்பவை. இறுதியாக மூன்றாம் தலைமுறை உரிமைகள், மேம்பாடு, ஆரோக்கியமான சுற்றுச்சூழல், சுய நிருணயம் ஆகியவற்றுக்கான மக்களின் உரிமைகள் இவற்றில் அடங்கும். ஒருமைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட ஓர் அமைப்பு முறையாகக் கருதப்படும் மக்களாட்சியில், இந்த உரிமைகள், அடிப்படைத் தேவைகளையும் குறிக்கின்றன எனக் குறித்தார்.

அடால்ஃபோ பேரஸ் எஸ்குவிவல் (அர்ஜென்டினா) 1990-ல் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர்)

1. குடிமை மற்றும் அரசியல் உரிமைகள், முதல் தலைமுறை உரிமைகள்.

2. சமூக மற்றும் பொருளாதார உரிமைகள் இரண்டாம் தலைமுறை உரிமைகள்.

3. சுற்றுச்சூழல் மற்றும் கலாசார உரிமைகள்மூன்றாம் தலைமுறை உரிமைகள்.

இந்தியாவில் மனித உரிமைகளின் நிலையை அறிய வேண்டுமா? ஒரு சிறிய புள்ளி விபரம்: தேசிய மனித உரிமைகள் ஆணையத்தில் 70,000 மனிதஉரிமை மீறல் பிரச்சினைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

உரிமைகளைப் பற்றிய விழிப்புணர்வாலும் சட்டங்களாலும் மட்டுமே மனித உரிமைகளை முழுமையாகப் பாதுகாக்க முடியாது. சட்டங்களைத் தாண்டியும் மனித உரிமைகளைப் பேணுவதை சமூகத்தில் மதிப்பீடாக வளர்த்தெடுக்க வேண்டும்.

மனித உரிமை மீறல்கள் நமது சமுதாயத்தில் பெருமளவில் உள்ளன என்பதையும் உரிமைகளைப் பேணுவதற்குக் கூடுதல் முயற்சிகள் அவசியம் என்பதையும் ஒவ்வோர் ஆண்டும் மனித உரிமைகள் தினத்தில் நமக்கு நாமே நினைவுபடுத்திக்கொள்கிறோம். 1995 முதல் 2004 வரை மனித உரிமைகளின் கல்விக்காக அர்ப்பணிக்கப்பட்ட மனித உரிமைக் கல்வியை விரிவாக்க உறுதி கொள்ள வேண்டும். ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் மனித உரிமைக் கல்விக்கான பத்தாண்டுகள் (1995-2004) எனத் திட்டமிடப்பட்டு மனிதஉரிமைக் கல்வி, மனித உரிமைப் பாதுகாப்பு என்ற திசையில் செயல்பாடுகள் திட்டமிடப்பட்டன. அரசு மற்றும் அரசுசார் நிறுவனங்களுக்கு மனித உரிமைக் கல்வி இன்றியமையாதது. மனித உரிமைகளுக்கான ஆவணங்கள் அனைத்திலும் மனித உரிமைக் கல்விக்கான அவசியம் பின்வருமாறு வலியுறுத்தப்படுகிறது.

மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்க்கவும்; மனிதர்களின் கண்ணியம், சுதந்திரத்தை வலுப்படுத்தவும்; நட்புறவு, சகிப்புத்தன்மையை ஊக்குவிக்கவும்; சமூகக் குழுக்களுக்கிடையே ஒற்றுமையைப் பேணவும்; எழுத்தறிவின்மையைப் போக்கி, பாகுபாடுகளைக் களையவும்; மக்கள் பங்கேற்புக்கு உத்திரவாதம் அளிக்கவும் மனித உரிமைக் கல்வி இன்றியமையாததாகிறது.

மனித உரிமைக் கல்விக்கான பத்தாண்டுகள் முடிவுற்ற தருணத்திலும் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் பொது சபையில் உலகத்தலைவர்கள் ஒன்று கூடி மனித உரிமைக் கல்விக்கான உலகத் திட்டத்தை வகுத்துள்ளனர். முதற்கட்டமாக 2005-2007 ஆண்டுகளிலும், அதற்குமேலும் மனிதஉரிமைக் கல்வியைத் தொடங்க, இடைநிலைக்குக் கொண்டு செல்வதாக உத்தேசித்தனர். எனவே இத்தருணத்தில் கொள்கை வகுப்போர், பாடத்திட்டம் உருவாக்குவோர் மற்றும் வகுப்பு ஆசிரியர்கள், மனித உரிமைக் கல்வியில் தொடர்ந்து அக்கறை செலுத்த வேண்டும்.

மனித உரிமைக் கல்வியைப் பரவலாக்குவதில் யுனெஸ்கோ முன்னின்று தலைமைப் பொறுப்பேற்று பணியாற்றியுள்ளது. இந்திய நாடாளுமன்றத்தால் 1986 ஆம் ஆண்டு ஏற்கப்பட்ட தேசியக்கல்விக் கொள்கையும் மனித உரிமைக் கல்வியை வலியுறுத்துகிறது. சட்டபூர்வமாக இந்த உரிமைகளை உறுதி செய்வதில் அரசின் பங்கு மிகவும் முக்கியமானது. எனவே, முழு வீச்சில் மனித உரிமைக் கல்வியை அரசு செயலாக்க வேண்டும்.

இந்திய அரசு, 1993ஆம் ஆண்டு மனித உரிமையைப் பாதுகாக்க மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டத்தை இயற்றியுள்ளது. உரிமை மறுக்கப்பட்டவர்கள், சிக்கலின்றி நீதி பெற இச்சட்டம் வழி செய்கிறது. இச்சட்டத்தின்

விளைவாக மனித உரிமை ஆணையங்கள் தேசிய அளவிலும், மாநில அளவிலும் ஏற்படுத்தப்பட்டன.

மனித உரிமை மீறல்களைப் பற்றிச் சிந்திக்கும்போதெல்லாம் சில கேள்விகள் நம் மனத்தில் எழுகின்றன.

1. ஒவ்வொருவரின் மனித உரிமைகளையும்அரசு பாதுகாப்பதில் அதிக மக்கள் தொகையும் குறைவான வசதிகளும் தொய்வு ஏற்படுத்துகின்றன.

2. பெரும்பாலான மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றனர். அன்றாடப் பிழைப்பே கேள்விக்குறியாகும்போது உரிமைகள் பற்றிய நினைப்பே ஆடம்பரமானதுதான்.

3. ஏற்றத்தாழ்வுகள் அற்ற சமூகம் மலர, காலங்காலமாக நிலவும் சமூக நம்பிக்கைகள் இடையூறாக அமைகின்றன.

மனித உரிமைகள் குறித்த விழிப்புணர்வு குறைவாக உள்ளதும் மனித உரிமை மீறல்கள் அரசால் ஒரு தீவிரப் பிரச்சினையாகப் பார்க்கப்படாததும், அதிகப்படியான அச்சத்தால் உரிமை மீறல்களை ஊடகங்கள் மூலம் வெளிக்கொணர மக்கள் தயங்குவதும், தகவல் பெறுவதிலும் இயங்குவதிலுமுள்ள நடைமுறைச் சிக்கல்களும் உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டோர் நிவாரணங்கள் பெறுவதைத் தாமதமாக்கி சில நேரங்களில் இயலாததாக்குகின்றன. உலகம் முழுவதிலும் சண்டைகள் சச்சரவுகளின் போது முதலில் பலியாவது மனித உரிமைகளே! இது போன்ற நெருக்கடி நேரங்களிலெல்லாம் மனித உரிமைப் பாதுகாவலர்கள் பாதிக்கப்பட்டோர் உரிமைகளை மீட்பதில்கலங்கரை விளக்கமாகச் செயல்பட்டு அவர்கள் வாழ்வில் ஒளியேற்றியுள்ளனர்.

உரிமையைக் கேட்கும் முன் கடமையைச் செய்யுங்கள் என்ற கூக்குரல் ஓங்கி ஒலித்தாலும் கடமையைச் சரிவரச் செய்வதற்கு உரிமைகள் மறுக்கப்படாத சூழல் மிகவும் அவசியம் என்ற உண்மையை அனைவரும் உணர வேண்டும். மனித உரிமைக் கல்வி அர்த்தமுள்ளதாக அமைய வேண்டுமனால் பள்ளிக் கல்வி, கல்லூரி மற்றும் பல்கலைக்கல்வியில் இதனை பாடமாக்க வேண்டும் என முன்பே வலியுறுத்தப்பட்டுள்ளது.

## அடிக்குறிப்புகளும் சான்றுகளும்


1. யுனெஸ்கோ கூரியர் அக்டோபர், நவம்பர், 1982.
2. Warren Weinstein, "South Asian Colloquiam on Human Rights and Development" Symposium: South Asian Perspectives on Human Rights, **Human Rights Quarterly** Vol.3, No.3., Summer 1981 1-10.
3. **Ibid**
4. Reza Afshari "On Historiography of Human Rights: Reflections on Paul Gordon Lauren's The Evolution of International Human Rights : Visions Seen" HRQ. Vol. 29, No.1, Feb. 2007, 1-67; Lok Raj Banal, "The Relevance and Application of Human Rights to Developments" Symposium: South Asian Perspectives on Human Rights HRQ Vol.3 Nos: Summer 1981, 31-36.
5. **Ibid.** Steven C.Poe and C. Neal Tate, Repressin of Human Rights to Personal Integrity in the 1980s: A Global Analysis, 88. **American Political Science Review** 853 (1994).
6. Morton Sklar and James E. Zorn "Report of the Proceedings of an International Human Rights Teaching Institute", Washington D.C. 1-5 June 1981 **HRQ** Vol.3. No 3. 1981 – 104 – 128
7. **Ibid**

8. Rafia Hasan "The Role of woman as Agents of Change and Development in Pakistan" 68-75; Sigma Huda, "Bangladeshi Women and Development" Symposiums: South Asian Perspectives on Human Rights, **HRQ** Vol, 3. No. 3. 1981; 76-82

9. **Ibid**

10. Upendra Baxi, "Law Struggle, and Change in India: An Agendum for Activities" The International Context of Rural Poverty in the Third World Edited by David Dembo; Clarence Dias, Ward Morehouse and James Paul (Council on International and public Affairs 'Inc and International Centre for Law in Development 777 United Nations Plaza New-York NY 10017; 1987.)

11. Fr. Joseph Idiakunnel, "Legal Aid and Legal Services in Rural Areas:", Committee VI Legal Aid Legal Services, K.R Emrich, "Popular participation and Law: An ESCAP Project", **Rural Development and Human Rights in South Asia, Report of a seminar held in Lucknow,** India, 4-9 December 1982; International Commission of Jurists and Human Rights Institute 1984; 231-246.

12. "The Terrorism Act of South Africa' **Current History** May, 1969, Vol.56, No. 333; 298-99; and 304;

13. Richard Dale, "South Africa and Namibia: Changing the Guard and Guarded Change" **Current History** March 1979 Vol.76, No.445 101-104; 136-137; Patrick O' Meara, "South Africa: The Politics of Change" **Current History**, March 1981, Vol.80, No.464,111-114; and 134; Forced Removals in South Africa 5 vols, Surplus people project.

14. Gilburt D. Loescher and John A. Scanlan(special Editors) "The Global Refugee problem: U.S. And world response" **The Annals of the American Academy – of – Political and**

**Social Sciences** Vol.467 May 1983; 1-201. Sir, Zelmaw Cowen, "Cowen's Individual Liberty and the Law" Tagore Law Lecturers, Calcutta (1977), 5; The UN convention against Torture and other Cruel, Inhuman, on Degrading Treatment or Punishment; UN Resolution 3452 (XXX) 9th Dec. 1975; Treaty of Rome; Alain Van Hamme, **Human Rights and the Treaty of Rome,** Human Rights A European Peerspective 70 (Liztteeffernan (ed.) (1994).

15. Asian Human Rights watch, **Amnesty International Annual Report** 2001; Employment policy Convention No. 122, Adopted on 9 July 1964 by the General Conference of the International Labour organisation at its forty-eight session, Entry into force: 15 July 1966 in accordance with article 5; Denys E. Holland, "Freedom of the Press in the Commenwealth" **Current Legal Problems** 9 (1956): 184-2007 at 184; Grahan Mitten, "A Third World News Deal Tanzania – a case study", **Index on Censorship** 6, (1977); 35-46. John A. Lent, "A Third Word News Deal? The Guiding Light" **Index on Censorship** 6, (1971); 17-26; US, Senate Proceedings; **தினமணி கட்டுரை**

16. Ronald Dworkin (1977) **Taking Rights Seriously** (Massachusetts: Harvard University Press, 195, 204.

17. The European Conference on Security and Cooperation in Europe; B G. Ramcharan(Ed). **Human Rights Thirty Years After the Universal Declaration** [The Hague Martinus Nijhoff 1979] 235.

18. International Convenant on Civil and political Rights, UNGA resolution 2200(XXI) December 1966, Entry into force 23 March 1976, in accordance with article 49.

19. Anthea J. Jeffery "Free Speech and Press: An Absolute Right" **Human Rights Quaterly** Vol. 8, Number 2; May 1986;

197-226, **Human Rights International Instruments, Sginatures, Ratifications, Accessions** etc. UN, 1982, 1-163.

20. General Assembly resolution 1803 (XVII) 14 December 1962, "Permanent Sovereiguty over natural resources."

21. Report of the Commission to the Economic and Social Council on the work of its Thirty Seventh Session (E/CN.4/1475-E/1981/25), **Bulletin of Human Rights** 32, April-June 1981, 62-63. Denck Ingram, "Commonwealth Press : The years of Challenge in the New Framework World Information," **Commonwealth** (February – March 1976); 7. Rephael Mergui, " **Index on Censorship** 1(1981): 23-26, 24.

22. **The Journal of African Studies,** 21 I (1983); 152-158. Volentine J. Belfiglio "How will Majority Rule Come About in Azania/South Africa?" **The Journal of Modern African Studies.** 21, 3(1983), 509-521.

23. **Ibid.,**

24. Yuji Iwasawa "Legal Treatment of Koreans in Japan: The Impact of International Human Rights Law on Japanese Law" **HRQ** Vol 8., No.2, May 1986 131-179.

25. Proclaimed by the General Conference of the UNESCO at its twentieth Session on 28 Nov. 1978.

26. Kathryn Zoglin "United Nations Action Against Slavery: A Critical Evaluation" **HRQ** Vol.8; No.2; May 1986, 306-339; Proclamation by the General Assembly of the United Hations Educational Scientific and Cultural Organization at its Twentieth Session on 28 November 1978.

27. **Ibid.**

# 6. இந்தியாவில் மனித உரிமைகள்

நாம் வெறுக்கின்ற கருத்துக்கும் அளிக்கும் சுதந்திரம் தான் பேச்சு சுதந்திரம்

- ஆலிவர் வெண்டல் ஹோம்ஸ்

## அறநெறி இலட்சியங்கள்

மனித உரிமைகளுக்கான நமது பணி புனிதப் போராகும். மாபெரும் அறநெறி இலட்சியங்களை விளக்குவதில் ஒவ்வொரு தலைமுறைக்கும் பங்கு உண்டு. நமக்குரிய பணியைச் செய்ய வேண்டும். இந்தியர் ஒவ்வொருவரும் தம் உரிமைகளுக்காக நிமிர்ந்து நிற்பதற்கான உரிமையை ஆதரிக்க, ஒவ்வொருவரும் தம் பதவியின் மாபெரும் அறநெறி, அறிவு வழி ஆற்றலைப் பயன்படுத்த வேண்டும். ஒரு மகத்தான இலட்சியத்துக்கு இந்தத் தலைமுறைத் தலைவர்களும், அரசியல் விற்பன்னர்களும், அரசியல்வாதிகளும், சமூக அறிஞர்களும், குறிப்பாக இளைஞர்களும் தங்களைப் பிணைத்துக் கொள்ள வேண்டும்.

"எழுமின், விழுமின் கருதிய கருமம் கை கூடும் வரை உழைமின் உழைமின்"

"உலகிற்கு மதபோதனைகளை இந்தியா மட்டுமே வழங்க முடியும்" என்று பாம்பனிலும், "நலிந்தோர் - மெலிந்தோரிடம் இறைவனைக் கண்டு மகிழ்ந்திட வேண்டும்" என்று இராமேஸ்வரத்திலும் "நாம் எல்லோரும் இழிந்த நிலை அடைந்து விட்டோம்" என்ற கருத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று மானாமதுரையிலும் "உற்சாகம் என்ற நெருப்பு அணையாமல் இருக்கட்டும். இந்தியாவில் மாபெரும் செயல்களைச் செய்வதற்கு இந்த உற்சாகம் தேவை" என்று சென்னையிலும் சொற்பொழிவுகளில் குறிப்பிட்டார் சுவாமி விவேகானந்தர். இது ஒரு மிகப் பெரிய மனித உரிமை முழக்கமாகும்.

இந்திய அரசியல் அமைப்பில் கூறப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகள் மீண்டும் மீண்டும் சோதனைக்குள்ளாகின்றன. சட்டங்கள் இக்கலாம்! சமுதாய உணர்வு அதற்கு சாதகமாக இருக்கிறதா? என்பதை ஊடுருவிப் பார்க்க வேண்டும்.

விழிப்புடன் இருந்தால் பயப்பட வேண்டியதில்லை. இந்தியர்கள் ஒவ்வொருவரும் - அவர்கள் எங்கு வாழ்ந்த போதிலும் - சற்று நின்று, இந்தியச் சுதந்திரத்தைப் பற்றியும், இந்திய மக்களின் இன்றைய நிலைப் பற்றியும் நமது மாபெரும் அரசியல் சாசனம் பற்றியும் தம் மனச்சாட்சியுடன் சோதித்துப் பார்க்க வேண்டும். பல கலாச்சார பல பின்னனி பல சமய, மொழி இனங்களையும் சேர்ந்த மனிதர்களால் இந்தநாடு "இந்தியா" என்று அழைக்கப்படுகிறது. மனிதர்கள் அனைவரும் அதாவது இந்தியர்கள் அனைவரும் படைப்பில் சமமானவர்கள். ஒரு மனிதனுடைய உரிமைகளுக்கு ஆபத்து ஏற்படுகையில், அனனவருடைய உரிமைகளும் குன்றுகின்றன என்ற கொள்கையின் அடிப்படையில் இந்திய அரசியல் அமைபப்பு உருவாக்கப்பட்டது.

இந்தியர்கள் அனைவருக்கும் சமஉரிமைகளும், சம வாய்ப்புகளும் வழங்கப்படுமா, நாம் எவ்வாறு நடத்தப்பட வேண்டுமென்று விரும்புகிறோமோ அவ்வாறு நமது சகோதர இந்தியர்களை நடத்தப் போகிறோமா என்பதே பிரச்சினையின் சாரம். ஒரு சாரார் மதம், மொழி, இனம் காரணமாக இந்தியர் ஒருவர் எந்த மாநிலத்திலும் குடியிருக்க முடியாதென்றால், இருப்பதில் சிறந்த பள்ளிக்கு கல்லூரிக்கு பல்கலைக்கழகத்திற்கு நம் குழந்தைகளை அனுப்ப முடியாதென்றால்தான், தனக்குப் பிரதிநிதியாக விளங்கும் ஊராட்சிமன்றத் தலைவர்களை உறுப்பினர்களைத் தான் தேர்ந்தெடுக்க முடியாதென்றால், சுருக்கமாக நாம் அனைவரும் விரும்பும் முழு சுதந்திர வாழ்க்கையைத் தான் அனுபவிக்க முடியாதென்றால், பின்பு நமது மொழி இனம்

பண்பாடு கலாச்சாரத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமா? இஃது முடிகின்ற காரியமா? இதற்கு யார் மனமொப்புவார்கள்? பொறுமையாகவும் அமைதியாகவும் இருக்கக் கூறப்படும் அறிவுரைகளையும் தாமதத்தையும் ஏற்க நம்மில் யார் உடன்படுவார்கள்? மனமொப்புவார்கள்?

1947-ஆம் ஆண்டு இந்திய மக்கள் ஆங்கிலேயரிடம் இருந்து விடுதலைப் பெற்றார்கள். இருந்தும் அவர்களது வாரிசுகள், அவர்களது பேரப்பிள்ளைகள் முழு விடுதலை அடையவில்லை. அந்தச் சங்கிலிகளிலிருந்து அவர்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை. சமுதாய, பொருளாதார அடக்கு முறையிலிருந்து அவர்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை; எத்தனையோ கனவுகள் காணும் எத்தனையோ பெருமைகள் கொண்டாடும் இந்த நாடு, தன் குடிமக்கள் அனைவரும் கருத்துச் சுதந்திரமுள்ளவர்களாக, பொருளாதாரச் சுதந்திரமுள்ளவர்களாக, சமூக சுதந்திரம் உள்ளவர்களாக இல்லாத வரையில் முழு சுதந்திரமுள்ளதாகாது.

உலகம் நெடுகிலும் சுதந்திரம் பற்றி, சமத்துவம் பற்றி, அமைதி பற்றி, உரிமைகள் பற்றி நாம் போதனை செய்கிறோம்; உண்மையில் நாம் அதை விரும்புகிறோம்; இங்கு உள் நாட்டில் நமது சொந்த சுதந்திரத்தை நாம் போற்றுகிறோம். “இவர்களைத்தவிர” “அவர்களைத்” தவிர மற்றவர்களுக்குச் சுதந்திரமுள்ள நாடு என்று நாம் சொல்லப் போகிறோமா?

இந்திய அரசியல் அமைப்பின் வாக்குறுதியை இந்த நாடு நிறைவேற்றி வைக்க இப்போது தருணம் வந்து விட்டது. சமூக பொருளாதார நிகழ்ச்சிகள் சமத்துவக் கோரிக்கைகளை மனித உரிமைக் கோரிக்கைகளை மிகவும் அதிகப்படுத்தியுள்ளன; இனி, தேசிய, மாநில, நகர அல்லது கிராம சட்டமியற்றும் மன்றங்கள் எதுவும் விவேகத்துடன் அவற்றைப் புறக்கணிக்க முடியாது. நம் நாட்டிற்கு, நாட்டு

மக்களுக்கு இந்திய அரசு என்ற முறையில் நம் முன்பு ஒரு அறநெறி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அடக்குமுறை, காவல்துறை நடவடிக்கையால் அதை அடக்க முடியாது. அது தெருக்களில் அதிகக் கிளர்ச்சிகள் நடத்தவும் விட்டு விட முடியாது. அடையாள முயற்சிகள் அல்லது பேச்சினால் அதை அடக்கி விட முடியாது. மத்திய நாடாளுமன்றத்திலும் நமது மாநில, உள்ளூர் நகராட்சிகளிலும், பஞ்சாயத்துகளிலும் எல்லாவற்றிற்கும் மேலாக, நமது அன்றாட வாழ்க்கைகள் அனைத்திலும் செயல்புரிய ஒரு தருணம் இது.

மற்றவர்கள் மீது குற்றம் சாட்டுவதோ, நாட்டின் ஏதோ ஒரு பகுதியின் பிரச்சினை இது என்று சொல்வதோ, நம்முன்புள்ள உண்மைகளைக் கண்டு வருந்துவதோ மட்டும் போதாது. மாபெரும் மாறுதல் ஒன்று உருவாகி வருகிறது; அந்த விழிப்புணர்ச்சி, அந்த மாறுதல், அமைதியானதாகவும் அனைவருக்கும் ஆக்கமுள்ளதாகவும் இருக்குமாறு செய்வது நமது வேலை; நமது கடமை.

ஒன்றும் செய்யாமல் இருப்பவர்கள் அவமதிப்பையும் பலாத்காரத்தையும் வரவழைக்கிறார்கள். துணிச்சலுடன் செயலாற்றுபவர்கள் உரிமையையும் உண்மையையும் உணர்கிறார்கள்.

மனித உரிமை மீறல்களை நாம் தொடர்ந்து சகித்துக் கொண்டிருக்கிறோம். எனவே, பொது மக்களுக்கு கல்வி நிலையங்களில், சிற்றுண்டிச்சாலைகளில், குறிப்பாக காவல் நிலையங்களில் கண்ணியத்தோடு நடத்தப்பட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது நமக்கு ஒரு சாதாரண உரிமையாகவே தோன்றலாம். இதை மறுப்பது 21-ஆம் நூற்றாண்டில் இந்தியர் யாரும் சகித்துக் கொள்ளவேண்டியிருக்காத அக்கிரமமான இகழ்ச்சியாகும்; ஆனால் பலர் சகித்துக் கொள்கின்றனர்.

இந்தப் பிரச்சினைகளை நாம் தெருக்களிலிருந்தும், கிராமங்களிலிருந்தும் நீதி மன்றத்திற்கு கொண்டு போவதாக

இருந்தால், நாடு முழுமைக்குமான அளவுகோல் வேண்டும்; நாடு முழுமைக்குமான சட்டம் வேண்டும்.

இது ஒரே நாடு. நாம் அனைவரும் இந்தியக் குடிமக்கள். மக்கள் அனைவரும் தமது திறமைகளை வளர்க்கச் சமவாய்ப்பு பெற வேண்டும் என்றே அண்ணல் காந்தியடிகளும், அண்ணல் அம்பேத்காரும், பண்டித ஜவஹர்லால் நேருவும், தந்தை பெரியாரும், அறிஞர் அண்ணாவும் கனவு கண்டார்கள். நம்மக்களில் நூற்றுக்குப் பத்துபேரிடம் அல்லது இருபது பேரிடம், உங்களுக்கு அந்த உரிமை கிடையாதென்று நாம் சொல்ல முடியாது.

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 15-ம் தேதியும், ஜனவரி 26-ஆம் தேதியும் தலைநகரிலும், மாநில தலைநகரிலும், மாவட்ட தலை நகரிலும், பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்களிலும் குடியுரிமையைப் பற்றியும், குழந்தைகள், பெண்கள், தாழ்த்தப்பட்டோர், மிகவும் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியின மக்கள் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி தேசியக் கொடியின் கீழ் கூடி தங்களது சொற்பொழிவுகளை முழக்குகிறார்கள். மக்களாட்சியே வெற்றிபெற்று விட்டதாக நினைக்கிறார்கள். மனித உரிமைகள் பாதுகாக்கப்பட்டதாக சொல்லிச் செல்கின்றனர்.

ஆகஸ்ட் 15-ம் தேதியும், ஜனவரி 26-ஆம் தேதியும் நாட்டின் மனச்சாட்சியாக விளங்க வேண்டிய நாட்கள். நமது மக்களாட்சிமுறை அரசாட்சியிடம் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையையும் உறுதியையும் நாடு நெடுகிலிருந்தும் நாட்டின் தலை நகரில் கூடும் மக்கள் பிரதிநிதிகள், வெளிநாட்டுத் தூதுவர்கள், முப்படைகளின் அணி வகுப்புகள் காட்டிய ஊக்கத்தையும் அமைதியான கண்ணியத்தையும் கண்டு ஒருவர் ஈர்க்கப்படாமல் இருக்க முடியாது. மக்களின் இலட்சியம் வளர்ந்தோங்கி உள்ளது. ஆனால் இலட்சியத்தை நாம் எவ்வளவு பரிவுடனும், சட்டத்துக்கு உரிய மதிப்புக்

கொடுத்தும் நடைபெறச் செய்கிறோம் என்பதைப் பொறுத்துள்ளது.

மனித உரிமைகளை வளர்க்கவும், மதிக்கவும் ஐ.நா.மன்றத்தின் உறுப்பினராகிய நாம் சாசனப்படியும் இந்திய அரசியல் அமைப்புப்படியும் நம்மைப் பணித்துக் கொண்டுள்ளோம்.

நீண்ட நெடுங்காலமாக இந்நாட்டில் நிலவியுள்ள வேற்றுமையை ஒழிக்கச் சட்டமியற்றியும், நிர்வாக நடவடிக்கை எடுத்தும், அறநெறிப்படியும், சட்டநெறிப்படியும் இந்நாடு ஒரு உறுதியான முயற்சி தொடங்கியுள்ளது. ஆயினும் பெரும் இந்த உறுதியானது தளர்ந்து விடுகிறது. கல்வி, குடியிருப்பு, போக்குவரத்து, வேலை வாய்ப்பு, அரசாங்க வேலை, பொழுதுபோக்கு, வழிபடும் தளங்கள் அனைத்திலும் இவ்வேற்றுமை நீடித்துள்ளது.

ஒவ்வொரு இந்தியனும் உண்பதற்கு போதிய உணவும், வேலை செய்ய வாய்ப்பும் பெற்றிருக்க வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் படிக்கவும் ஒவ்வொரு குடும்பமும் நல்ல உறைவிடம் பெற்றிருக்கவும் திட்டங்கள் கொண்டு வரப்படுகின்றனவா? அத்தகைய ஒரு நாடு வேண்டும் என்பதே வருங்காலம் பற்றிய நமது பொதுவான நம்பிக்கை. அதில் சமுதாய அநீதி என்னும் விலங்குகளிலிருந்து ஒவ்வொரு இந்தியனும் விடுவிக்கப்பட்டவனாகவும், அவனது திறமைகள் அவனை எவ்வளவு தூரம் முன்னுக்குக்கொண்டு வருமோ, அவ்வளவுக்கு அவற்றை அவன்பயன்படுத்த உரிமையுள்ளவனாகவும் இருக்க வேண்டும். லட்சக்கணக்கானவர்களுக்கு வாய்ப்புகள் மறுக்கப்பட்டிருக்கையில் பொறுப்பில் உள்ளவர்கள் தலைவர்கள், உயர் அதிகாரிகள் தம் கடமைகளை மறந்திருக்கையில், உண்மையான முன்னேற்றம் காண முடியவே முடியாது.

இந்திய அரசியல் அமைப்பு இந்திய நாட்டு மக்களுக்கு எல்லாச் சிறுபான்மையினருக்கும் இந்தியாவில் சமுதாயம்

வழங்கும் நன்மைகளைப் பெறுவதற்கு உறுதி செய்யும் சட்டத்தை தயாரித்துள்ளோம். 1993-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இந்திய தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் முக்கிய உத்தரவுகளும் வழிகாட்டுதல்களும் ஆகும். மத்திய அரசின் வலிமையைத் திரட்டியுள்ளோம். நிலமற்ற குடியானவனுக்கும், ஒடுக்கப்பட்ட பல்வேறு சமூகத்தில் வாழ்பவர்களுக்கும் இதைச் செய்ய வேண்டும். சலுகைகள் எளிதில் கைவிடப்படுவதில்லை. ஆனால் ஒரு சிலரின் தனி நலன்கள், இந்திய நாட்டின் நலன்களுக்காக விட்டுக் கொடுக்கப்படாத வரையில், வாக்குறுதிகளும் நமது சமுதாயத்தைப் புதுமைப் படுத்துவதென்பதும், நமது குடிமக்களில் கோடிக்கணக்கானவர்களுக்கு வெறும் சொற்களாகவே இருந்து வரும்.

நாடாளுமன்றத்தில் குடியுரிமைச் சட்டத்தைப் பற்றிய விவாதத்தின்போது, இந்தியரைப்போன்று அந்நியருக்கு வழங்கப்படும் குடியுரிமைச் சலுகைகள், அதே போன்று இந்தியருக்குச் சலுகைகள் வழங்குகின்ற அந்நிய நாட்டுக் காமன்வெல்து குடிமக்களுக்கும் வழங்கப்படும் என்பதைக் குறித்து விவாதத்தின்போது மிகவும் வற்புறுத்திக் கூறப்பட்டது.

எந்த நாட்டு அரசியலமைப்புத் திட்டத்திலும், இந்தியக் குடியுரிமையைப் போன்ற தாராள மனப்பாங்குள்ள சட்டத்தை நாம் காணவியலாது. இந்திய நாட்டுக் குடிஉரிமை பெறுவதற்குச் சுலபமான, தெளிவான வழியை அது எடுத்துரைக்கின்றது. மேலும், சில சந்தர்ப்பங்களில் இருநாடுகளில் குடியுரிமை பெறுகின்ற வாய்ப்பினையும் அது ஆமோதிக்கின்றது.

## இந்தியாவின் விடுதலை அறிக்கை

காந்தியடிகள் ஆங்கில அரசுக்கு விடுத்த கோரிக்கையில் இந்திய மக்கள் முழுமையான சுதந்திரம் தவிர வேறு எதையும் ஏற்க மாட்டார்கள் என்பதைத் தெளிவுபடுத்தினார். ஆனால் இந்தியாவை ஆண்டு வந்த

ஆங்கில அரசு அதை அலட்சியப்படுத்தியது. 1930 ஜனவரி 26-ம் நாள் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சுதந்திரப் பிரகடன தினம் உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. ஆங்காங்கு பேரணிகள், பொதுக்கூட்டங்கள் நடத்தி சுதந்திரப் பிரகடனத்தை மக்கள் எடுத்துக் கொண்டனர்.

சுதந்திர தின அறிக்கையின் வாசகம் பின்வருமாறு இருந்தது.

“உலகின் ஏனைய மக்களைப் போலச் சுதந்திரம் என்பது இந்திய மக்களின் பிரிக்க முடியாத உரிமை என்பதையும் அவர்கள் தங்களின் உழைப்பின் பலன்களை வாழ்வின் தேவைகளை நிறைவு செய்து அனுபவிக்கவும், முன்னேற்றத்துக்கான முழு வாய்ப்புகளையும் பெற உரிமையுள்ளவர்கள் என்பதில் நாங்கள் முழு நம்பிக்கை கொண்டுள்ளோம். மேலும் எந்த அரசாவது இந்த உரிமைகளை மறுத்து மக்களை நசுக்கினால் அந்த மக்களுக்கு அந்த அரசை மாற்றவும் அல்லது அழிக்கவும் மேலும் உரிமை உள்ளது என்றும் நாங்கள் நம்புகிறோம்.

“இந்தியாவில் உள்ள ஆங்கிலேய அரசு இந்திய மக்களின் உரிமைகளைப் புறக்கணிப்பதுடன் மக்களைச் சுரண்டி இந்தியாவை அரசியல் அடிப்படையிலும், பொருளாதார அடிப்படையிலும், கலாச்சார அடிப்படையிலும், உணர்வு அடிப்படையிலும் அழித்து வருகிறது.

“அரசியல் அடிப்படையில் இந்தியாவின் கண்ணியம் ஆங்கிலேய ஆட்சியில் உள்ளது போல் என்றுமே சீர்குலைக்கப்படவில்லை. எந்தச் சீர்திருத்தமும் மக்களுக்கு உண்மையான அதிகாரத்தை வழங்கவில்லை. நம்மிலே மிக உயர்ந்தவர்கள் கூட அந்நிய அதிகார வர்க்கத்தின்முன் தலைகுனிய வேண்டியுள்ளது.

“பேச்சு சுதந்திரம், சங்கம் அமைத்தல் ஆகியவை நமக்கு மறுக்கப்படுவதுடன், நமது நாட்டுச் சகோதரர்கள் அயல் நாடுகளில் அடைக்கலம் புக நிர்ப்பந்தங்கள்

ஏற்படுத்தப்படுவதுடன், அவர்கள் தாய் நாடு திரும்ப முடியாமலும் செய்யப்படுகிறது. நமது மக்களின் திறமைகள் நசுக்கப்படுகின்றன. நமது மக்கள் இந்த அரசில் மிகச் சாதாரணமான கிராம அதிகாரிகள் அல்லது குமாஸ்தாக்கள் என்ற அளவுடன் திருப்பதியடைய வேண்டிய நிலை உள்ளது. கலாச்சார அடிப்படையில், கல்வியின்நிலை மிகவும் கேவலமாக நாம் கீழே தள்ளப்பட்டு, அடிமைத்தனத்திற்கே நம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ளவே பயன்படுத்தப்படுகின்றது.

"ஆன்மீக உணர்வுகள் நசுக்கப்பட்டு, பலவீனப்படுத்தப்பட்டு ஆக்கிரமித்துள்ள இந்திய அதிகார வர்க்கத்தை எதிர்த்துப் போராட வகையற்றவர்களாக ஆக்கியுள்ளதுடன், திருடர்கள், கொள்ளைக்காரர்கள், கொடுமைக்காரர்கள் ஆகியோரிடமிருந்து கூட நம்மையும் நமது குடும்பங்களையும் பாதுகாக்க வகையற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளது.

"எனவே, நமது நாட்டிற்கு இத்தகைய கொடுமைகளைச் செய்துள்ள அரசுக்கு இன்னும் கீழ்ப்படிந்து நடப்பது மனிதனுக்கும், இறைவனுக்கும் எதிரான குற்றமாக நாம் கருதுகிறோம். அத்துடன், நமது சுதந்திரத்தைப் பெற மிகச் சிறந்த பாதை வன்முறையில் அல்ல என்பதை நாம் உள்ளப்பூர்வமாக நிற்க நம்மைத் தயார் செய்து கொள்வதுடன் சட்டமறுப்பு இயக்கத்துக்கு, வரிகொடா இயக்கம் உள்பட நம்மைத் தயார் செய்து கொள்கிறோம். அந்நிய ஆதிக்கத்துக்குக் கொடுக்கும் ஆதரவை நாம் விலக்கிக் கொண்டு பலாத்காரமின்றி வரி கொடுப்பதை நிறுத்தினால், மனிதாபிமானமற்ற இந்த அரசின் முடிவு நிச்சயமென்பதை நாம் நம்புகிறோம். எனவே, முழுச்சுதந்திரத்தை அடைய அவ்வப்பொழுது காங்கிரஸ் காட்டும் வழியைப் பின்பற்ற முழு அளவில் முயல முடிவெடுக்கிறோம்."[1]

இந்த உறுதிமொழியை 1930 ஜனவரி 26-ம் நாள் ரவி நதிக்கரையில் லட்சக்கணக்கான மக்கள் கூடியிருந்த

கூட்டத்தில் ஜவஹர்லால்நேரு எடுத்துக்கொண்ட பொழுது அவர் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது. இந்திய நாடு சுதந்திரமடையும் வரை ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26-ல் காங்கிரஸ் தலைவர்கள், தொண்டர்கள் இந்த உறுதிமொழியை எடுத்துக் கொண்டு வந்தனர். "சுதந்திரத்தை மற்றவர்கள் கொடுத்து வாங்க முடியாது. அப்படி வாங்கும் சுதந்திரம் நீண்ட நாள் நிலைக்கவும் நிலைக்காது" (பாலகங்காதர திலகர்).

## விடுதலைப் பெற்ற இந்தியாவில் மனித உரிமைகள்

சுதந்திரத்தைப் போராடிப் பெற்ற பின்பு, சமூக நலவுரிமைகளை வார்க்க அந்தச் சுதந்திரத்தைப் பயன்படுத்தி, நோய், வறுமை, அறியாமை, தீண்டாமை ஆகியவற்றை நாட்டிலிருந்து விரட்டி, மூடநம்பிக்கை, காலத்துக்கொவ்வாத கருநாடகக் கருத்துக்கள், கொள்கை வெறி ஆகியவற்றை அகற்றி நம் மனத்தை தூய்மைப்படுத்த வேண்டுமென்று காந்தியடிகளும், பண்டித நேருவும் நம்பினார்கள். சுதந்திர உள்ளத்தை குறுகிய, இன, மொழி, மாநில, சாதி சமய உணர்ச்சிகளுக்கும் பகைமைக்கும் மேம்பட்ட உள்ளத்தை அவர்கள் போற்றினார்கள். பண்பட்ட உள்ளத்திற்கு சீரிய உதாரணமாக அன்றைய இந்தியத் தலைவர்கள் விளங்கினார்கள்.

இந்தியா விடுதலையடைய வேண்டுமென்று காந்தியடிகள் விரும்பியது இந்திய மக்களுக்காக மட்டுமல்ல. உலக சமாதான நலனை முன்னிட்டும் தான். "இப்பழம்பெரும்நாடு, உலகில் தனக்குரிய இடத்தைப் பெற்று, உலக சமாதானத்தை வளர்க்கவும், மனித இனத்தின் நலனுக்காகவும், தன் சக்தி முழுவதையும் மனமுவந்து பயன்படுத்த வாய்ப்புப் பெற வேண்டுமென்பதற்காகவே நாம் சுதந்திரம் வேண்டினோம்" என்பதை 1947 ஆகஸ்ட் 14-ந் தேதி நள்ளிரவில் நாம் எடுத்த உறுதிமொழி விளக்கியது.[2] அடிமைத்தனத்திலிருந்து இந்தியா மீண்டது. உலகில் காலனி

ஆதிக்கத்தின் கீழ் வாழ்ந்த மக்களனைவருக்கும் நன்மை செய்தது. நாம் வறுமையில் வாட்டப்பட்ட நிலையிலும் நாம் எந்த வல்லரசு மண்டலத்துடனும் சேர்ந்து அதனால் நன்மை அடைய எண்ணியதில்லை. நமது அயல் நாட்டுக் கொள்கை சுயேச்சையானது. உலகில் அடிமைப்பட்டு வேதனைப்படும் மக்களுக்கு உதவும் கிழக்கு-மேற்கு நாடுகளுக்கிடையே பகைமை உணர்வைக் குறைத்து உலக ஒற்றுமைக்காகப் பாடுபடவும், மனித உரிமைகளுக்காக பாடுபடவும், வலிமையற்ற ஒரு நாடு எவ்வளவு சாதிக்க இயலுமோ, அவ்வளவையும் சாதிக்க விரும்பி உழைத்தோம்.

## இந்திய அரசியல் நிர்ணய சபை டாக்டர் அம்பேத்கரின் பங்களிப்பு

உலகின் புகழ்பெற்ற அரசியலமைப்பை உருவாக்க வேண்டிய காலம் இந்தியாவிற்கு வந்தது. புகழ்பெற்ற அரசியல் சட்ட விற்பன்னர்கள் அந்த வரைவுக் குழுவில் இடம் பெற்றனர். வரைவுக்குழுத் தலைவராக (Chairman of the Drafting Committee) டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அண்ணல் காந்தியடிகளுக்கு அம்பேத்கரின் மீது இருந்த நம்பிக்கையாலும், பண்டித நேருவும், சரோஜினி நாயுடுவும் அம்பேத்கரின் திறமையையும், நாட்டுப்பற்றையும் உணர்ந்து செயல்பட்டதால் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1. சர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர்
2. திரு. டி.டி.கிருஷ்ணமாச்சாரி
3. திரு. என். கோபால்சாமி அய்யங்கார்
4. டாக்டர் கே.எம்.முன்ஷி
5. டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்
6. சர் முகமது சதந்துல்லா

ஆகியோர் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

1077 நாள் செலவு செய்து விவாதம் செய்து உருவாக்கப்பட்டது, இந்த புதிய இந்திய அரசியல் சட்டம். 1946-ல் நடைபெற்ற தேர்தலின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட

மாநில சட்டசபை அங்கத்தினர்களால் ஓட் செய்யப்பெற்று, அரசியல் நிர்ணயசபை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். ஆங்கிலேயர் அளித்த இந்திய சுதந்திரச் சட்டம் (Indian Independence Act) 1947-ல் கிடைத்தது. நாடு இரண்டாகப் பிரிந்த பிறகு எஞ்சியிருந்த உறுப்பினர்களால், மாநிலங்களிலிருந்து 235 பேர்களும், சமஸ்தானங்களிலிருந்து (இந்திய மன்னர்கள் ஆட்சிப் பகுதி) 72 பேர்களுமாக மொத்தம் 307 பேர்கள் இருந்தார்கள்.

இந்திய அரசியலமைப்பின் முன்னுரையில் "இந்திய மக்களாகிய நாம், இந்தியாவை முழுஇறைமை அதிகாரம் பெற்ற மக்களாட்சி குடியரசாக அமைத்து அதன் குடிமக்கள் அனைவருக்கும்

- சமூக, பொருளாதார, அரசியல்-நீதியும்,
- எண்ணம், வெளியிடுதல், கோட்பாடு, சமயம், வழிபாடு இவற்றில் சுதந்திரமும் - கண்ணியம், வாய்ப்பு - இவற்றில் சமத்துவமும் பெறச்செய்யவும் தனியொருவரின் கண்ணியமும், தேச சமுதாயத்தின் ஒருமைப்பாடும் நிலைபெறும் வண்ணம் அவர்கள் அனைவரிடமும் சகோதரத்துவம் ஓங்குமாறு செய்யவும் மனப்பூர்வமாக உறுதி எடுத்துக்கொண்டு உருவாக்கப்பட்டதால், நமது அரசியல் நிர்ணய சபையில் 1949-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இருபத்தாறாம் தேதியாகிய இன்று, இதனால் இந்த அரசியலமைப்பை ஏற்றுக்கொண்டு, சட்டம் இயற்றி நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம்."

## அடிப்படை உரிமைகள்

மக்கள் ஆட்சிக்கு மூன்று தளங்கள். அறவேர்கள் கொண்ட அடித்தளம் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. அதற்கு மேலுள்ள அரசியல் அமைப்பும் முறைகளுமே தெளிவாகத் தோன்றும். மேலும், அவை பல பாகங்களாக விரிந்தும் சிக்கலாகவும் இருப்பதால், அவற்றைப்பற்றி

ஆராய்வதும், விவரிப்பதும், விவாதிப்பதும் ஆவல் உள்ளதாக இருக்கும். ஆதலால் அவற்றின் மீதே அரசியலமைப்பு பற்றிச் சிந்திப்போர்களும், அதில் ஈடுபடுவோர்களும் அதிகக் கவனம் செலுத்துவதில் வியப்பில்லை.

ஆயினும், ஓர் மக்கள் ஆட்சி நிலைத்து நிற்பதற்கும், நன்றாகச் செயல் புரிவதற்கும் அதன் அறவேர்களே மூல காரணங்களாவன. அந்த அறவேர்கள் இந்திய அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகளில் பொதிந்துள்ளன.

## அடிப்படை உரிமைகள்

13(2) இப்பாகத்தில் அளிக்கப்பட்டுள்ள உரிமைகளைப் பறிக்கும் அல்லது சுருக்கும் சட்டம் எதையும் ஒரு அரசு இயற்றலாகாது. இப் பகுதியை மீறி இயற்றப்படும் சட்டம் எதுவும் அப்படி மீறிய அளவிற்கு பயனற்றதாகும்.

## சமய உரிமைகள்

25(1) அமைதி, நல்லொழுக்கம் உடல் நலம் இவற்றிற்கும் இந்தப் பாகத்திலுள்ள ஏனைய விதிகளுக்கும் உட்பட்டு, மக்கள் அனைவரும், மனச்சான்று சுதந்திரத்திற்கும் தடையின்றி எச்சமயத்தையும் பின்பற்றுதல், வழிபடுதல், பரவச் செய்தல் இவை பற்றிய உரிமைக்கும் சமமான உரிமை பெறுவர்.

## பண்பாடு, கல்வி இவை பற்றிய உரிமைகள்

29. (1) தனிப்பட்ட மொழி, எழுத்து, அல்லது பண்பாடு இவற்றை ஏற்கனவே உடையவராய் (இந்தியாவின் ஆட்சிப் பரப்பின்) இந்தியப் பகுதியின் அல்லது அதன் ஒரு பாகத்தில் வசிக்கும் குடிகளின் எப்பிரிவினரும் அவற்றைச் சிதையாமல் காக்க உரிமை உள்ளவர் ஆவார்.

(2) சமயம், இனம், சாதி, மொழி, இவை காரணமாக அல்லது இவற்றின் எவையேனும் காரணமாக

அரசினால் பராமரிக்கப்பட்ட அல்லது அரசு நிதிகளிலிருந்து உதவி பெறுகின்ற எந்தக் கல்வி நிலையங்களிலும் சேருவதற்கு எந்தக் குடிமகனும் மறுக்கப்படலாகாது.

## சமய உரிமை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய சட்ட மேதைகள் மதத்தைப் பற்றியும் விவாதித்தார்கள். மதத்தை வெறும் நம்பிக்கை (Belief) என்று மட்டும் ஒதுக்கிவிடாமல், அதைத் தனிமனிதனுடைய அடிப்படை உரிமை என்று நிர்ணயித்தார்கள். இவ்வாறு விளக்கமளிக்காமல் விட்டிருந்தால், மத நம்பிக்கை என்பதை வெறும் சித்தாந்தமாக (Philosophy) மட்டுமே கருதி, இந்து சமயப் பாரம்பரியச் சடங்கு முறைகள் சட்டரீதியாகப் பாதுகாக்கப்படாமல் போயிருக்கும்.

இந்தியாவில் உள்ள சிறுபான்மை மதத்தினரும் ஒன்று கூடித் தங்களது சிறுபான்மை மதங்களுக்கும் சட்டரீதியான பாதுகாப்பு வேண்டும் என்று குரல் கொடுத்தனர். அதற்கான விவாதம் நடந்தது. அதன்படி அரசமைப்புச் சட்டத்தில் வெளிப்படையாகத் தெரிவித்தும் பின்பற்றவும் (Right to Profess and Practice) உள்ள அம்சங்கள் இடம் பெற்றன. 19.04.1947-ல் 3வது ஒரு அம்சமும் விவாதிக்கப்பட்டது. அந்த அம்சம் என்ன?

ஒருவருக்குத் தன்னுடைய மதத்தைப் பிரச்சாரம் செய்வதற்கான உரிமையும் (Right to proagate Religion) உண்டு என்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றி 7.12.1948-ல் மதப்பிரச்சார உரிமை 3வது அம்சமாகச் சேர்க்கப்பட்டது. ஏனெனில், அதன் மூலம்தான் மதம் மாறியவர்கள் மற்றவர்களுக்கும் அதை வெளியே தெரிவிக்கமுடியும் என்று கருதப்பட்டது.[5]

மதப்பிரச்சாரத்திற்கான உரிமை அரசியல் சட்டத்திலேயே வழங்கப்பட்டிருப்பதால், இங்கே அதைத் தடுப்பதற்குச் சட்டப்படி எவருக்கும் உரிமை இல்லை. அவ்வாறு தடுப்பது தனி மனிதரின் அடிப்படைச் சுதந்திரத்தில் தலையிடுவதாகும். அவ்வாறு தலையிடுகிற அம்சம்

மக்களாட்சி நெறிமுறையாகாது. தலையிடாது இருக்கும்வரைதான் தனிநபர்தன் விருப்பப்படி எந்த மதத்தையும் தழுவ முடியும்.

இதைக்கருதியே கத்தோலிக்க சமயத்தின் குருநாதர் போப்பரசர் அவர்கள், "உலகத்தில் வேறு எந்த நாட்டிலும் இல்லாத மதச் சுதந்திரம் இந்தியாவில் பரிமளிக்கிறது" என்று மனமுவந்து சொன்னார். அது இந்திய நாட்டின் சமய சார்பற்ற கோட்பாட்டிற்குக் (Secularism) கிடைத்த பாராட்டாகும்.

"மதப் பிரச்சாரத்திற்கான உரிமை (Right to propagate) என்பது மதமாற்றத்திற்கான "லைசென்ஸ்" "அல்ல" என்று 1979-இல் பீகார் வழக்கில் உச்சநீதிமன்றம் தீர்ப்பு கூறியுள்ளது. அத்துடன் அச்சமூட்டியோ, மோசடியின் மூலமோ, பொருட்களின் மூலம் கவர்ந்தோ, மதமாற்றம் செய்யப்படுமானால், அதைத் தடுப்பதற்கான சட்டங்கள் அனைத்தும் செல்லுபடியாகக் கூடியவையே என்றும் உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

## சமதர்மக் குடியரசு

அரசியல் அமைப்புச் சட்ட முன்னுரையில் இந்தியா ஒரு "சமதர்மக் குடியரசு" என்ற வாசகம் காணப்படுகிறது. சமதர்மம் என்பது நமது பொருளியல் நடைமுறைக்கு உரியது. நாம் இந்த உலகில் வாழ்வதற்குப் பொருள் வேண்டும். பொருள்பட வாழ்வதற்குப் பொருள் வேண்டாமா? இந்த அடிப்படை உண்மையைப் புரிந்து கொண்டு தான் அய்யன் திருவள்ளுவர்

*பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்*
*பொருளல்ல தில்லை பொருள்*

- குறள் "பொருள் செயல்வகை" - 751

என்று கூறியுள்ளார்

டாக்டர் அம்பேத்கர் தொலை நோக்கும், தீர்க்க தரிசனமும் கொண்டு அரசியல் நிர்ணய சபையின் கடைசி நாளன்று உரையாற்றினார். நாம் அரசியல் ஜனநாயகம் மட்டுமல்லாமல், சமூகம் சார்ந்த மக்களாட்சியும், சமதர்மக் குடியரசையும் மிக அதிகமாகவே வலியுறுத்தினார். சமூக

மக்களாட்சி என்றால் என்ன? அது ஒரு வாழ்க்கை முறை, சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தை வாழ்க்கை முறையாக ஏற்றுக் கொண்டது. .... இவை ஒன்றை ஒன்று சார்ந்தே உள்ளன. இவைகளை தனியே பிரித்துப் பார்க்க இயலாது. இவைகள் ஒன்றை ஒன்று பிரிந்து செயல்படுமேயானால், மக்களாட்சியின் அடிப்படையே தோல்வி அடைந்து விடும். சுதந்திரத்திலிருந்து, சமத்துவத்தையும் சமத்துவத்திலிருந்து, சுதந்திரத்தையும் பிரிக்க இயலாது என இந்திய அரசியலமைப்பின் சிறப்பை உணர்த்தியதோடு எதிர்காலத்திற்கு அது மிகுந்த எச்சரிக்கையாகவும் இருந்தன.

"சமூகப் பொருளாதாரச் சமத்துவத்திற்கு இந்திய அரசு முனையவில்லை என்றால், அரசியல் அமைப்பில் வழங்கப்பட்டுள்ள அரசியல் சமத்துவம் பயனற்றதாக ஆகிவிடும். அரசியல் நீதியைக் கொண்டு போராடி மக்கள் ஏனைய இரண்டு உரிமைகளைப் பெற போராடுவார்கள்"[6] என எச்சரித்தார்.

"1950 ஜனவரி 26ஆம் தேதியன்று நாம் ஒரு முரண்பாடான வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்ள உள்ளோம். நாம் இன்று, அரசியலில் சமத்துவத்தையும், சமூகப் பொருளாதாரத் துறையில் சமத்துவமின்மையையும் ஏற்றுக் கொள்கிறோம். அரசியலில் ஒருவருக்கு ஒருவாக்கு என்ற அரசியல் சமத்துவத்தை நாம் ஒப்புக் கொண்டுள்ளோம். ஆயினும் சமூக பொருளாதார அமைப்பில் ஒவ்வொருவருக்கும் ஒரே நீதி என்ற கோட்பாட்டை மறுத்து வருகிறோம். எவ்வளவு காலத்திற்கு இத்தகைய முரண்பட்ட வாழ்வைத் தொடரப் போகின்றோம்? எவ்வளவு காலத்திற்கு சமூக பொருளாதார சமத்துவத்தை மறுக்கப் போகிறோம்? இத்தகைய முரண்பாட்டை தொடர்ந்தால் மக்களாட்சி அமைப்பிற்கு ஆபத்து நேரிடும். இத்தகைய முரண்பாட்டை மிக விரைவில் நாம் களைந்தெரிய வேண்டும். இல்லையேல், நாம் அரும்பாடுபட்டு இச்சபையில் கொணர்ந்த அரசியல் ஜனநாயக அமைப்பு தகர்த்தெரியப்படும்"[7].

ஒரு அடிப்படையான சமுதாயக் கொள்கையை ஏற்பதில் உறுப்பினர்களிடையே இணக்கம் இல்லை என்றாலும் டாக்டர் அம்பேத்கரின் தலைமையின் காரணமாக வரைவுக்குழுவின்"[8] குறிக்கோள் தெளிவாகவே இருந்தது.

அரசியலமைப்புச் சட்டம் 1950-க்கு முன் உருவாகியதைப் பற்றி ஏராளமான விமர்சனங்கள் உள்ளன. இந்த விமர்சனங்களைக் கருத்தில் கொண்டால், இருக்கிற அரசியல் சட்டத்தை அப்படியே ஒதுக்கிவிட்டு இன்னொரு அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விடும்.

மக்களாட்சி ஒன்றிலேயே அடிப்படையான மனித உரிமைகள் நிச்சயமாக நிலவக்கூடும். இந்திய அரசியல் அமைப்பில் உரிமைகளும், சுதந்திரங்களும் விரிவாகவும், தெளிவாகவும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

நமது அரசியல் சட்டத்தில் அனைத்து சமயங்களையும் போற்றுகிற மதச்சார்பின்மையை (Secularism) கோட்பாடாக அறிவித்துள்ளோம். இன்றைய நவீன அறிவியல் உலகில் மனித குலத்திற்குச் சவாலாக உள்ளவை: நம்முடைய இளைஞர்களுக்குப் போதிய வேலை இல்லை, வறுமை மருத்துவ வசதியின்மை, நதிகளின் இணைப்பு, 10ஆம் வகுப்புவரை இலவசக் கல்வி குக்கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர், பழங்குடி மக்களின் உரிமைகள் போன்றவைகள் தான். சுதந்திரம் அடைந்து 60 ஆண்டுகள் ஆன பிறகும் இவைகளில் நாம் இன்னும் முழு வெற்றி பெறவில்லை. இந்தச் சூழ்நிலையில் நம்முடைய சக்திகள் அனைத்தையும் சாதிச் சண்டைகளிலும், சமய மோதல்களிலும் செலவிடுவது நியாயமல்ல. அரசியல் விடுதலையைத் தொடர்ந்து பொருளாதார விடுதலை நாம் அடைய வேண்டும். அதுதான் நாட்டிற்கு பெருமை தரும். வள்ளல் பெருமான் இராமலிங்க அடிகள் கூறியதைப் போல,

"சாதியிலே மதங்களிலே
சமய நெறிகளிலே"

"சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச்
சண்டையிலே"

"ஆதியிலே அபிமானித்து
அலைகின்ற உலகீர்"

"அலைந்தலைந்து வீணேநீர்
அழிதல் அழகல்லவே"

என்பது நினைவு கூறத்தக்கது.

நர்மதை அணைக்கட்டுச் சிக்கலில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு பழங்குடிகளுக்கு முற்றிலும் எதிரான தீர்ப்பு. பழங்குடிகளின் வாழ்நிலத்தை அபகரிப்பதற்கு எதிரான முறையில் இந்திய அரசியல் சட்டம் இந்தியக் குடியரசுத் தலைவருக்கு உரிமை வழங்கியுள்ளது. இந்த உரிமையையும் மாற்றும் முறையில்தான், நீதிபதிகளோடு அரசியல்வாதிகளும் தற்போது பேசுகின்றனர்.

பழங்குடிகளை அவர்களின் வாழும் நிலங்களில் இருந்து அகற்றிவிட்டு அவர்களுக்கு வேறு இடத்தில் நிலம் வழங்கியோ, வேறு வகையில் உறுதி வழங்கியோ, அவர்களைப் பாதுகாக்க முடியாது. பழங்குடிகளின் வாழ்விடங்கள் அவர்களுக்கே உரிமையுடையவை. நகரம் முதலியவற்றின் தேவைகளுக்காகப் பழங்குடிகளின் வாழ்வுரிமையைப் பறிப்பது இயற்கை நீதிக்கு எதிரானது. பழங்குடிகள் மீது நமக்கு உரிமை கிடையாது.

## புகழ்பெற்ற மனித உரிமை வழக்குகள்

இந்தியக் குடிமக்களின் தனி உரிமைகளைக் காக்க இந்திய உச்சநீதிமன்றம் உறுதியாக நின்று வருகிறது. தனிமனிதரின் சுதந்திரமும் உரிமைகளும் நம் அரசியல் சட்டத்தினால் வலியுறுத்தப்பட்டு இருந்தாலும் அதற்குப் பாதுகாப்பு அளிப்பது நீதிமன்றங்களேயாகும். மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையே நியாயம் வழங்குவது மட்டுமல்ல, தனிமனிதருக்கும் அரசுக்கும் இடையே நியாயம் வழங்குவதும், நீதிமன்றங்களின் பொறுப்பாகும். விரிவான உரிமைச் சாசனம் அரசியல் சட்டத்தில் இடம் பெற்றுள்ளது. அந்த உரிமைகளை பல்வேறு வழக்குகளில் உச்சநீதிமன்றம் உலகப் புகழ்பெற்ற தீர்ப்புகளை வழங்கியுள்ளது. 1965-ஆம் ஆண்டு கோலாக்நாத் வழக்கில் இந்திய அரசு எவ்வகையான அடிப்படை உரிமைகளையும் தடுக்கின்ற,

குறைக்கின்ற சட்டத்திருத்தங்களையும் செய்யமுடியாது என்று நீதியரசர் கே. சுப்பராவ் தலைமையிலான நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.[9]

1972-ல் உலகப்புகழ்பெற்ற நீண்ட நாள் நடைபெற்ற (மூன்று மாதங்கள்) அடிப்படை உரிமைகளுக்கான இந்திய உச்சநீதிமன்ற வழக்கான கேசவானந்த பாரதி வழக்கில் அரசியல் அமைப்பின் அடிப்படை அம்சங்களான மக்களாட்சி, சட்டத்தின் முன் அனைவரும் சமம், சமத்துவம், கூட்டாட்சி, மதச்சார்பின்மை, சமதர்மக் கோட்பாடு ஆகியவற்றை திருத்தவோ, குறைக்கவோ,[10] எடுக்கவோ இந்திய அரசு சட்டத்திருத்தங்கள் செய்ய தடை விதித்தது. இவ்வழக்கில் நீதிபதி எஸ்.எம். சிக்கிரியின் தலைமையிலான நீதிமன்றத்தின் தீர்ப்பு அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாக்கும் தீர்ப்பாக அமைந்துள்ளது. உலகின் தலை சிறந்த வழக்கறிஞரான காலம் சென்ற என்.ஏ. பால்கிவாலா அவர்கள் அடிப்படை உரிமைகளுக்காக வாதாடினார்.

நூற்றுக்கும் மேற்பட்ட மனித உரிமைகள் வழக்குகள் உச்சநீதிமன்றத்திலும் மாநிலங்களின் உயர் நீதிமன்றங்களிலும் நடந்துள்ளன. உலகத்தின் பல்வேறு நாடுகளின் நீதிமன்றங்களில் இத்தீர்ப்புகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

## அடிப்படை உரிமைகளும் பன்னாட்டு மனித உரிமைககள் ஒப்புமைகள்

பன்னாட்டு மனித உரிமைகள் அறிக்கையும் இந்திய அரசியல் அமைப்பும் சமகாலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆவணங்களாகும். இந்தியாவில் அரசியல் அமைப்பு தோற்றுவிக்கப்பட்ட காலத்தில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அனைத்து நாடுகளிலும் நடைமுறையில் இருந்த அரசியல் அமைப்புகளையும் குறிப்பாக அடிப்படை உரிமைகளையும் கவனத்தில் எடுத்துக் கொண்டார். அவற்றில் மிக முக்கியமான வழிகாட்டுதலாக அமைந்தவைகள், ஐக்கிய அமெரிக்காவில் நடைமுறையில் இருக்கும் உரிமைகள் மசோதா (Bill of Rights) மற்றும் அனைத்துலக மனித உரிமைகள் அறிக்கையாகும்.[11]

| இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகள்: பிரிவுகள் | அனைத்துலக மனித உரிமைகள் அறிக்கையின்: பிரிவுகள் |
|---|---|
| 14. இந்திய எல்லைப் பகுதிக்குள், அனைவருக்கும் சமமான உரிமை, சமமான சட்டப்பாதுகாப்பு பெறும் உரிமை. | இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள அனைத்து உரிமைகளின்படி சட்டத்தின்முன் அனைவருக்கும் சமமான உரிமை, சமமான பாதுகாப்பு பெறும் உரிமை, எந்தவித பாகுபாடும் இன்றி பாதுகாப்பு பெறும் உரிமை. |
| 15. அரசு எவரையும் சமயம், இனம், சாதி, பாலினம், பிறந்த இடம், ஆகியவற்றால் எந்த வேற்றுமையும் காட்டக்கூடாது. | 2(1) மேலே கண்ட அனைத்துலக அறிவிப்பில் கண்ட உரிமைகளும் விடுதலைகளும் மக்களாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் உடமைகளாகும். இனம், நிறம், பால், மொழி, சமயம் அரசியல் கொள்கை, அல்லது பிறவகைக் கொள்கை பிறந்த நாட்டியல்பு அல்லது பிறந்த சமூக இயல்பு காரணமாக அமையும் சிறப்பு, வளம், குடிப்பிறப்பு அல்லது பிறவகைச் செல்வாக்கு இவைகளில் ஒன்றையும் கருதாமல் மேற்படி உலக அறிவிப்பில் அடங்கிய எல்லாவகையான உரிமைகளும், விடுதலைகளும் மக்களாகப் பிறந்த எல்லோருக்கும் பொதுவுடைமைகளாகும். |
| 16. குடிமக்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்புகளில், சமவாய்ப்பு, அரசின் எத்தகைய பதவியிலும் சம வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் | 21 (1) ஒவ்வொருவரும் தங்களுடைய நாட்டாட்சியில் நேராகவோ தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் (representatives) மூலமாகவோ, பங்கெடுத்துகொள்வதற்கு உரிமை உண்டு. |

| | |
|---|---|
| | (2) ஒவ்வொருவரும் அரசியல் அலுவல்களில் சமமான பங்குபெற உரிமை உண்டு. |
| 17. "தீண்டாமை" ஒழிக்கப்படு கிறது, அது எந்தவகையிலும் செயல்படுவதை தடைசெய்யப் படுகிறது. | 5. எவரும் சித்திரவதை அல்லது கொடிய கண்ணற்ற இழிந்த நடத்தைக்கோ அன்றி. தண்டனைக்கோ ஆட்படுத்தப்படார். |
| 19.(1)(a) குடிமக்கள் அனைவருக் கும் பேசுவதற்கும், கருத்துக் களை வெளியிடுவதற்குமான உரிமைகள். | 19. ஒவ்வொருவருக்கும் எண்ணுவதற்கும், எண்ணியதை வெளியிடுவதற்கும் உரிமையுண்டு. இந்த உரிமை எத்தகைய தடையுமின்றி, ஒவ்வொருவரும் தம்தமக்கு வேண்டிய செய்தி, செய்திகளையும் கருத்துக்களையும் எந்த நாட்டிலிருந்தும் எந்த முறையாலும் பெற்றுக் கொள்வதற்கும் கொடுப்பதற்கும் உரிமையுண்டு. |
| (b)ஆயுதங்கள் இன்றி அமைதியான முறையில் கூடுவதற்கு உரிமைகள் | 20(1) ஒவ்வொருவருக்கும் அமைதியான முறையில் கூடுவதற்கும் கழகம் அமைத்துக் கொள்வதற்கும் உரிமையுண்டு. |
| (c) சங்கங்கள், மற்றும் தொழிற் சங்கங்கள் அமைத்துக் கொள்வதற்கு உரிமைகள். | 23(4) ஒவ்வொருவருக்கும் தம் நலனைக் காப்பாற்றிக் கொள்ள தொழிற் சங்கங்களில் சேருவதற்கும் அவற்றை அமைத்துக் கொள்வதற்கும் உரிமையுண்டு. |
| (d) இந்திய நாட்டின் எல்லைக்குள் சுதந்திரமாக சென்று வர உரிமை<br>(e) இந்திய எல்லைக்குள் எவ்விடத்திலும் தங்குவதற்கும் குடியிருக்கவும் உரிமை. | 13(1) நாட்டு எல்லைக்குள் விரும்பியவாறே எங்கும் போகவோ குடியிருக்கவோ ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. |
| (2) சொத்துகளை பெறவும், வைத்துக்கொள்ளவும் மற்றும் விற்பனை செய்யும் உரிமை. | 17(1) ஒவ்வொருவரும் தனியாகவோ, சேர்ந்தோ சொத்துடைமை கொள்ள உரிமையுண்டு. |

| | |
|---|---|
| 20. எவரும் நடைமுறையில் குற்றம் நிகழ்ந்த காலத்தில் இருந்த சட்டப்படி அல்லாது அதற்கு அதிகமான தண்டனையோ, அளிக்கப்படக் கூடாது. | 11(2) அப்பொழுதைய நாட்டியல் அல்லது அனைத்து நாட்டியல் நடைமுறைச் சட்டப்படி ஒருவருடைய செய்கையோ அது நிகழும் காலத்தில் தண்டனைக் குற்றமாகாதெனில் அதனை செய்தவர் குற்றவாளியாகக் கருதப்பட மாட்டார். அன்றியும் அப்போதைய விதிப்படிப் பொருந்தும் தண்டனையைவிடக் கடுமையான தண்டனையும் வழங்கப்பட மாட்டார். |
| 21. எவருடைய உயிரையும், உடைமையையும், சட்டப்படி யான முறையன்றி பறிக்க முடியாத உரிமை. | (9) நினைத்தபடி கைது செய்தல், காரணங்காட்டாது சிறையிடல் அல்லது நாடுகடத்தல் என்ற இவற்றுக்கு எவரும் உப்படுத்தப்படார். |
| 23. அடிமையாக்குதல், பிச்சை எடுக்கச் செய்தல், வன்முறையாக வேலை வாங்குதல், இவை சட்டப்படியான தண்டனைக்கு உரியவைகள். | (4) எவரும் அடிமைத்தனத்திலே யோ, அல்லது ஆட்பணியிலேயோ ஆழ்த்தப்படார்; அடிமை வணிகமும் எவ்வடிவில் தோன்றினாலும் தொடர்ந்து தடைசெய்யப்படும். |
| 25(1) பொது ஒழுங்கு, ஒழுக்கம், உடல் நலம், ஊறு விளைவிக் காமல், அனைவருக்கும் மனசாட்சி யின்படியான உரிமை, எந்தச் சமயத்தையும் பின்பற்றவும், வழிபடுவதற்கும் பரப்புவதற் குமான உரிமை. | (18) ஒவ்வொருவருக்கும் தம் கொள்கையையும் எண்ணத்தையும் சமயத்தையும் பின்பற்ற உரிமையுண்டு. இந்த உரிமை, சமயத்தை மாற்றிக் கொள்ளவும், தனியாகவோ அல்லது கூடியோ சமயக் கோட்பாட்டையோ நம்பிக்கையையோ வெளிப்படுத்துவதற்கும், பின்பற்றுவதற்கும், வணங்குவதற்கும், வழிபடுவதற்கும் உரிமையுண்டு. |

| | |
|---|---|
| 29(1) இந்திய எல்லைப் பகுதியில் வாழும் சமூகத்தின் அனைத்து தரப்பினருக்கும் தங்களின் மொழி, எழுத்துவடிவம், அல்லது பண்பாடு ஆகியவற்றை பாதுகாக்கும் உரிமை | (22) ஒவ்வொருவரும் நாட்டியல் முயற்சியினாலும் பன்னாட்டு கூட்டு ஒற்றுமையினாலும் அந்தந்த நாட்டின் அமைப்பிற்கும் பொருளாதார நிலைமைக்கும் தகுந்தபடி சமுதாயப் புாதுகாப்பு உறுதியளிப்பதோடு அதற்கேற்ப ஒருவருடைய கண்ணியம், வாழ்வு, பண்பும் உயர்வதற்கு வேண்டிய பொருளாதார, சமுதாய, கலை, பண்பு உரிமைகள், காப்பாற்றப்படும், சுதந்திரமான ஆளுமை முன்னேற்றம் காணப்படும். |
| | 27(1) ஒவ்வொருவருக்கும் சமூகத்தின் பண்பாட்டு வாழ்வில் கலந்து கொள்வதற்கும், கலையிலே ஈடுபடுவதற்கும், கலை மற்றும் அறிவியல்துறை முன்னேற்றத்தில் பங்கு பெறுவதற்கும் அதன் பயன்களைப் பெறுவதற்கும் உரிமை உண்டு. |
| 30(a) சமயம், மொழி போன்ற அனைத்து சிறுபான்மையினர் அனைவரும் தங்களுக்கான கல்வி நிறுவனங்களை நிறுவவும், நடத்தவதற்குமான உரிமை | 26(3) பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு எத்தகைய கல்வியை அளிக்க வேண்டும் என முன்கூட்டியே முடிவு செய்ய முழு உரிமையும் உண்டு. |
| 31(1) எவருடைய சொத்தையும் முறைகேடான முறையில் கவர்வதை சட்டப்படியாக பாதுகாத்துக் கொள்ள உரிமை. | 17(2) முறைகேடான முறையில் எவருடைய பொருளும் கவர்ந்து கொள்ளப்படக் கூடாது. |
| 31(1) அடிப்படை உரிமைகளில் கூறப்பட்டுள்ள இப்பகுதியை தகுதியான முறையீட்டின் மூலமாக உச்சநீதி மன்றத்தில் நிலைநிறுத்திக் கொள்ளும் உரிமை. | (8) அரசியலமைப்பு அல்லது சட்டம் வழங்கிய அடிப்படை உரிமைகளுக்கு முரணாகத் தோன்றும் மீறல் நடவடிக்கைகளுக்கு தேசிய அளவிலான தகுதி வாய்ந்த நடுவர் மன்றத்தால் (Tribunal) பரிகாரம் தேடிக் கொள்ள உரிமை உண்டு. |

## அரசியலமைப்புச் சீர்திருத்தம் 10(எ)[12]

நமது அரசியலமைப்புச் சட்டத்தைச் சீர்திருத்துகிற பணியினை முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி எம்.என். வெங்கடாசலய்யா அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைத்து மத்திய அரசு மேற்கொண்டது. நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர், நீதிபதிஜீவன் ரெட்டி, நீதிபதி ஜெகநாதராவ், நீதிபதி சி.ஆர். இராணி, பேராசிரியர் அம்ரிக் சிங், பேராசிரியர் ஆந்த்ரி பெட்டிலி, பேராசிரியர் முனசருல் ஹாசன் ஆகியோர் சீர்திருத்தக் குழுவில் இடம் பெற்றனர்.

இந்தக்குழு நமது அடிப்படை உரிமைகளை மேலும் விரிவாக்கம் செய்ய வேண்டும் என்று ஒரு திட்ட அறிக்கையை வெளியிட்டது. அரசியல் அமைப்பின் 14-வது பிரிவில் அடிப்படை உரிமைகளின் படி சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று உறுதி மொழி வழங்கப்பட்டுள்ளது.

15-வது பிரிவில் என்னென்ன பிரிவுகளுக்குப் பாரபட்சம் (Discrimination) காட்டக்கூடாது என்றும் ஒரு பட்டியல் தரப்பட்டுள்ளது. இதில் மதம், இனம், ஜாதி, ஆண் அல்லது பெண், பிறந்த ஊர் போன்றவைகளில் பாரபட்சம் இருக்கக் கூடாது. இவற்றையும் சமமாகவே நடத்த வேண்டும் என்று இப்பிரிவில் வரையறுக்கப்பட்டுள்ளது.

சட்டத்திற்கு முன்பு அனைவரும் சமம், எந்த மதத்தவராய் இருந்தாலும் சமம், எந்த ஜாதியினராய் இருந்தாலும் சமம், ஆணாயினும், பெண்ணாயினும் சமம். இதுதான் இப்போதுள்ள அரசமைப்புச் சட்டத்தில் 14-வது பிரிவில் வழங்கப்பட்டுள்ளன. சீர்திருத்தக்குழு இதில் மாற்றம் செய்யவில்லை.

ஆயினும் 15-வது பிரிவில் பாரபட்ச பட்டியலை மேலும் விரிவாக்கி விவாதத்திற்கு வைத்துள்ளது. எந்த இனமாக இருந்தாலும், எந்தச் சமூகத்தில் பிறந்திருந்தாலும், எந்த நிறத்தவராக இருந்தாலும், எந்த வயதினராய் இருந்தாலும், எந்த மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவராய்

இருந்தாலும், எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவராய் இருந்தாலும், சொத்து உள்ளவராக இருந்தாலும், இல்லாதவராக இருந்தாலும் எங்குப் பிறந்திருந்தாலும் அவர்களும் நமது நாட்டின் சட்டத்திற்கு முன்பு சமமானவர்களே என்கிறது சீர்திருத்தக் குழுவின் அறிக்கை

1999-ல் மத்திய அரசுக்கான தேர்தலில் சில கட்சிகள் தனது தேர்தல் திட்டத்தில் இந்தியாவின் மிக உயர்ந்த பதவிகளான குடியரசுத் தலைவர், பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் ஆகிய பதவிகளுக்கு இந்தியாவிலேயே பிறந்த இந்தியக் குடிமக்கள் தான் உரிமை கோர முடியும் என்று குறிப்பிட்டிருந்தது.

இதனை உன்னிப்பாகக் கவனித்த அரசமைப்புச் சட்ட சீர்திருத்தக் குழு பாரபட்சப் பட்டியலை விரிவாக்கி எந்த நாட்டில் பிறந்தவராய் இருந்தாலும் அவர்களும் நமது சட்டத்திற்கு முன்பு சமமானவர்களே என்று சேர்த்துள்ளது.

இந்த விரிவாக்கப்பட்டியல் குறிப்பாக எந்த இனத்தவராய் இருந்தாலும், எந்தச் சமூகத்தில் பிறந்தவராய் இருந்தாலும், எந்த நிறத்தவராய் (வெள்ளையர், கருப்பர்) இருந்தாலும், எந்த மொழி பேசுகிறவராய் இருந்தாலும், நமது சட்டத்திற்கு முன்பு சமமே என்பது விவாதிக்கப்பட வேண்டியுள்ளது.

அமெரிக்காவில் பிறக்காத தாயோ, தந்தையோ அமெரிக்காவில் இருந்தால், அவர்களின் பிள்ளைகளுக்குத்தான் அமெரிக்கக் குடியுரிமை உண்டு. அமெரிக்காவில் பிறக்காத தாயாருக்கோ அல்லது தந்தையாருக்கோ அந்த உரிமை கிடையாது. இதே போல், நமது அடிப்படை உரிமைகளில் பல்வேறு சுதந்திரங்கள் தரப்பட்டுள்ளன. எழுத்துச் சுதந்திரம், தகவல் சுதந்திரம், உடைமைச் சுதந்திரம், கல்விச் சுதந்திரம் (14-வயது வரை) சுற்றுச் சூழல் உரிமை, நீதி கேட்கும் உரிமை இவையெல்லாம் குறிப்பிடப்பட்டுள்ளன.

புதிய சீர்திருத்தக்குழு, மேலும் சில உரிமைகளைச் சேர்த்துள்ளது. இழப்பீட்டுக்கு உரிமை என்பது அதில் ஒன்று. மத்திய அல்லது மாநில அரசுகள் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒரு ஏழையின் வாழ்வாதார உடைமையைப் பறிமுதல் செய்து கொண்டால், உடைமை இழந்தவர் வழக்குத் தொடர்ந்து நட்ட ஈடு பெறுகின்ற உரிமை இதுவரை இல்லை.

நர்மதா நதியில் அணை கட்டுவதற்காகப் பழங்குடியினர் உழைத்து வந்த வன பூமிகளை விட்டு அவர்கள் வெளியேற்றப்பட்டார்கள். நர்மதா நதியில் அணையும் நமக்குத் தேவை. அதே சமயம் வெளியேற்றப்பட்ட அந்த ஏழைகள் அடைந்த நட்டத்தையும் அதே போல சமமான பூமிகளை வனத்தில் வேறு பகுதியில் வழங்கி அவர்களுக்குப் புனர்வாழ்வும் அளிக்க வேண்டும்.

அரசு யாருடைய சொத்துக்களையாவது எடுத்துக் கொண்டால், அதற்கு ஈட்டுத்தெகை செலுத்தும் இழப்பீடு வழங்கும் சட்டம் ஏற்கனவே உள்ளது. அவர்கள் இழந்த சொத்திற்கு இழப்பீட்டுப் பணம் கிடைத்து விடுகிறது. ஆனால், வனத்தில் உள்ளவர்கள் வாழ்க்கையையே இழந்து விடுகிறார்கள். அவர்களுக்கு புனர்வாழ்வு தேவை. இது நமது சட்டத்தில் இப்போது இல்லை. இந்த உரிமையை அடிப்படை உரிமைகளில் ஒன்றாகச் சேர்த்து சீர்திருத்தக் குழு பரிந்துரை செய்துள்ளது. விவாதத்திற்குரிய இந்த இரண்டு பிரச்சனைகளுமே நாம் அண்மையில் பெற்ற அனுபவத்தினால் கண்டு கொண்டோம்.

இவற்றிலிருந்து என்ன தெரிகிறது என்றால், 50 ஆண்டுகளுக்கு ஒருமுறை அல்லது 25 ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது அரசமைப்புச் சட்டத்தைச் சீர்திருத்த வேண்டும் என்றே ஒரு சட்டம் அரசமைப்புச் சட்டத்திலேயே இடம் பெற வேண்டும்.

## தொழிலாளர்களின் உரிமைகள்

வாழ்க்கை, உழைத்து உண்ணும் உணவினால் மட்டும் உண்டாவதன்று. தொழில் தவிர இதரப்பணிகள், தூக்கம் ஆகியவற்றையும் உள்ளடக்கியது என்பதால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முதன்முதலாக அமெரிக்கத் தொழிலாளர்கள் "சூரிய உதயத்திலிருந்து, சூரியன் மறையும் வரை" பணிபுரிய வேண்டும் என்ற எழுதப்படாத சட்டத்தை எதிர்த்து வெஞ்சினத்துடன் பாயும் வேங்கையாகப் போராடத் தொடங்கினார்கள்.

உலகின் முதல் தொழிற் சங்கம் என்று கருதப்படும். அமெரிக்காவிலுள்ள புகழ்பெற்ற முக்கிய பெரிய நகரமான பிலடெல்பியாவிலுள்ள "இயந்திரத் தொழிலாளர்கள் சங்கம்" தான் 1827-ஆம் ஆண்டு ஒரு நாளைக்கு பத்து மணி நேரம் வேலை என முதன்முதலாக கோரிக்கை வைத்துப் போராடியது. எதிர்ப்பு எனும் அலைகடலைக் கிழித்துக்கொண்டு அமெரிக்கத் தொழிலாளர்களின் ஐக்கிய நிறுவனத்தின் ஐந்தாவது கூட்டத்தில்தான் "1886-ஆம் ஆண்டு மே 1-ம் தேதி முதல் தொழிலாளர்கள் தினமாகக் கொண்டாடப்படுவது எனவும், தொழிலாளர்களுக்கு எட்டு மணி நேர வேலை"[13] எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

செவ்வானத்தில் ஒரு நட்சத்திரமாக உதித்த கார்ல் மார்க்ஸ், உலகப் பொருளாதாரத்தையே மாற்றிப் போட்ட தனது மூலதனம் என்ற நூலில் தொழிலாளர்களுக்கு எட்டு மணிநேரம் வேலை, எட்டு மணி நேரம் இதரப்பணிகள், எட்டு மணி நேரம் தூக்கம் வேண்டும் என தேசிய தொழிற் சங்கங்களுக்குக் கோரிக்கை விடுத்துள்ளார். மேலும் "உலகப் பொருள்கள் யாவும், உழைப்பாளர்களால் உண்டாக்கப்பட்டபடியால் அது உழைப்பவனுக்கே உரியது. உழைப்பே விலை"[14] என்ற மாபெறும் உண்மையையும் அந்த நூலில் அவர் விளக்கியுள்ளார். மனித இனத்தை அடக்கி

ஒடுக்கி வைத்திருக்கும் அடிமைத்தளைகளிலிருந்து விடுதலை அடையச் செய்யத் தொழிலாளி வர்க்கம் ஒன்றினால்தான் முடியும். மார்க்சும் ஏங்கெல்சும், தொழிலாளி வர்க்கத்திற்குச் செய்த சேவையை இந்தச் சில வார்த்தைகளிலே குறிப்பிடலாம். "அவர்கள் தொழிலாளி வர்க்கத்திற்குத் தன்னைத்தானே உணர்ந்து கொள்ளவும். தன்னுணர்வோடிருப்பதற்கும் கற்பித்தார்கள். கற்பனாவாதத்திற்குப் பதிலாக அறிவியலை அதன் கையிலே கொடுத்தார்கள்"[15] என்று லெனின் கூறுகிறார். கார்ல் மார்க்ஸ் தொழிலாளர்களின் உரிமையை மிகத்தெளிவாக உரைக்கின்றார். "சமுதாயமானது சக்திக்கு தகுந்த உழைப்பு, உழைப்புக்குத் தகுந்த ஊதியம் என்பதிலிருந்து சக்திக்கு தகுந்த உழைப்பு, தேவைக்கு தகுந்த ஊதியம் என்ற நிலைமைக்கு வளர்ச்சி அடையும்."[16]

பாமரத் தொழிலாளர்களையும், புரட்சி மனம் கொண்டோரையும் ஒருங்கிணைக்கும் தினமாகவும், தொழிலாளர்களின் ஒற்றுமையை வீறுடன் கூறி பீடுடன் நடக்கும் தினமாகவும், குரலற்றவர்களுக்கு குரலாகவும், மே தினம் விளங்குகிறது. இந்தியாவில் முதன்முதலில் மே தினம் சென்னையில் 1932-ம் ஆண்டு கொண்டாடப்பட்டது. "சென்னையில் மே தினம்" என்னும் குறிப்பு 1933-ஆம் ஆண்டு மே தினவிழாவில் சிங்கார வேலர் நிகழ்த்திய சொற்பொழிவைத் தாங்கியது.

உணவு, உடை, இருப்பிடம், பார்க்கும் இடங்கள் உபயோகிக்கும் பொருள்கள் யாவும் உழைப்பாளர்களின் கைவண்ணத்தால் உருவானவையே, உலகில் அதிக அளவில் உழைப்பாளிகளைக் கொண்ட நாடு இந்தியா. பல அறிவுழைப்பாளிகளும், உடலுழைப்பாளிகளும் நம் நாட்டிலிருந்து வளர்ந்த நாடுகளுக்கும் அமெரிக்கா, இங்கிலாந்து, சிங்கப்பூர், மலேசியா, ஈழம் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் உழைக்கச் செல்வதிலிருந்து நம்

நாட்டுத் தொழிலாளர்களின் உழைப்பின் மேன்மையை அறியலாம்.

இந்தியாவிலுள்ள மொத்தத் தொழிலாளர்களில் 92 சதவீதத்தினர் அமைப்பு சாரா தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். தொழில்வாரியாக 62 சதவீதத்தினர் விவசாயத்திலும், 11 சதவீதத்தினர் தொழில்துறையிலும், 27 சதவீதத்தினர் சேவைத் துறையிலும் ஈடுபட்டு வருகின்றனர். பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 10 சதவீதத் தொழில் வளர்ச்சியை இந்தியா எய்த வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கிராமப்புறத் தொழிலாளர்கள் எண்ணிக்கையில் கடந்த 20 ஆண்டுகளில் 70 சதவீதம் குறைந்துள்ளனர். இதற்குக் காரணம் விவசாயம் உள்ளிட்ட அமைப்பு சாரா தொழில்களைவிட அமைப்புத் தொழில்களில் ஊதியம் அதிகம் என்பதும், நகர்ப்புறங்களில் கல்வி வசதி, மருத்துவ வசதி முதலியவை எளிதில் கிடைப்பதும் முக்கிய காரணம்.

அமைப்பு சாரா தொழில்களில் ஈடுபடுபவர்களுக்கு விலைவாசி உயர்வுக்கு ஏற்ப ஊதியம், பணி பாதுகாப்பு கிடைப்பதில்லை. அமைப்பு சாரா தொழில்களுக்குரிய சமூகப் பாதுகாப்பை அவ்வப்போது அரசு அறிவித்தாலும், அதை அவர்கள் அறியாதவர்களாகவே உள்ளனர். பெரும்பாலான காலங்களில் வேலை ஏதும் இல்லாமலும் வேலை இருக்கும் போது கூடுதல் நேரம் பணியாற்ற வேண்டிய நிலையிலும் அவர்களில் பலர் உள்ளனர்.

உலக அரங்கில் அதிக அளவு மக்கள் தொகையைக் கொண்ட சீனா இன்று தொழிலாளர்களுக்கு பணி பாதுகாப்பு அளிப்பதோடு அரசுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே உள்ள உறவை வளர்த்து தொழில் துறையில் முன்னேறிய நாடாக வளர்ந்து வருகிறது. மேலும் அங்கு தொழிலாளர்கள் ஒரு தொழிலையே நம்பியிராமல் பல தொழில்களைக் கற்றுத் தேர்ந்து நிபுணத்துவம் பெற்று விடுகிறார்கள். அதிக உழைப்பு

வேலைவாய்ப்பு உத்தரவாதம், சுய தொழிலில் ஆர்வம், ஊதிய உயர்வு, கடல் சார்ந்த தொழில்களில் ஈடுபடல், பணி பாதுகாப்பு ஆகியவையே அங்கு தொழிலாளர்கள் வளர்ச்சிக்கு முக்கிய காரணிகளாக விளங்குகின்றன.

இந்தியாவில் 55 மில்லியன் குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனர். பதினான்கு வயதுக்குக் கீழ் உள்ள குழந்தைகளை பணியமர்த்தக் கூடாது என சட்டமிருந்தும், புத்தகம் தூக்க வேண்டிய பிஞ்சுக் கைகளில் உணவுத் தட்டுகளையும், தேநீர் குவளைகளையும், இயந்திரக் கருவிகளையும் தாங்கி ஒரு நாளைக்கு பன்னிரண்டு மணி நேரத்துக்கும் அதிகமாக உழைப்பதைக் காண முடிகிறது. சிறைப் பறவையாக கூட்டுக்குள் இருக்கும் அவர்கள், நல்வாழ்வு என்னும் புன்னகைப் பூங்காவில் சுதந்திரப் பறவையாக மாறி, புத்துணர்வுடன் ஆடிப்பாடி பறந்து வாழ விடுதலை செய்ய ஒரே வழி கல்வி என்னும் சாவியை அவர்களிடமே கொடுப்பதாகும்.

ஒரு நாள் நபிகள் நாயகம், தம்மைக் காண வந்தவர்களுடன் கட்டித் தழுவியும், கைகளைப் பற்றியும், கண்ணில் ஒற்றியும் வாழ்த்துகளையும், மகிழ்ச்சியையும் வழங்கிக் கொண்டிருந்தார். அப்படி வந்தவர்களுள் ஒருவரின் கையைப்பற்றி கண்களில் ஒற்றிக்கொண்டதோடன்றி கண்களில் நீர் மல்க நின்று கொண்டிருந்தார். மற்றவர்கள் காரணம் கேட்ட போது, இவருடைய கைகளில் உழைத்துக் காய்த்துப்போன சுவடுகள் இருந்தன. அவை எனக்குப் பெருமகிழ்வைத்தந்தன என்று நபிகள் நாயகம் அருளிச் செய்ததாக அவரின் வரலாறு கூறுகிறது. உழைக்கும் கால்களே தவம் செய்யும் கால்கள் என்கிறது புறநானூறு. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தொழிலாளி நிலை குறித்து “முதலாளித்துவத்தின் உடம்புக்குள் உணவாகச் செல்லுகிற தொழிலாளர் வர்க்கம், தேவையான இரத்தத்தை அளித்துவிட்டுக் கழிவுப் பொருளாக வெளியேறுகிறது” என்கிறார்.

உலக நாடுகளிடையே காணப்படும் பொருளாதார வளர்ச்சியின் போட்டியாலும் உலக மயமாக்கம், தனியார் மயமாக்கம் ஆகிய கவர்ச்சியான முகமூடிகளை அணிந்து வரும் பன்னாட்டு நிறுவனங்களின் படையெடுப்பாலும் இன்று அந்த 8 மணி நேர வேலை என்பது உருகும் பனிக்கட்டியாக கானல் நீராக மாறி வருகிறது. மேலும் பல தொழிற் சங்கங்கள் கட்சி சார்புடன் நடத்தப்படுவதால், தொழிலாளர்களின் கோரிக்கைகள் கட்சி சார்புடையதாகவே அமைகின்றன.

"உழைப்பாளிகள் இழப்பதற்குத் தங்களைப் பிணைத்திருக்கும் தளைகளைத் தவிர வேறொன்றும் இல்லை. அடைவதற்கோ ஓர் உலகமே இருக்கிறது. ஆதலால், உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்" என்று கார்ல் மார்க்ஸால் நிறுவப்பெற்ற முதலாவது சர்வதேச சங்கத்தின் போதனை மீண்டும் வேண்டுகோள் விடுக்கிறது.[17]

## சிறார்களின் உரிமைகள்

சிறார்களின் உரிமைகள் பன்னாட்டளவிலும், தன்னார்வ நிறுவனங்களுக்கிடையேயும், சிந்தனையாளர்களிடமும் கவனத்தை ஈர்த்துள்ளன. பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகள் பற்றிய பன்னாட்டு ஒப்பந்தம் சிறார்களின் உரிமையை செவ்வனே குறிப்பிட்டு வலியுறுத்துகிறது.[18]

"(1) சமுதாயத்தின் இயற்கை மற்றும் அடிப்படையான குழு அளவாகிய குடும்பம் என்பதற்கு, குறிப்பாக அது அமைக்கப்படுவதற்கும், தனது காப்பில் உள்ள குழந்தைகளின் பராமரிப்புக்கும் கல்விக்கும் அது பொறுப் பேற்றிருக்கும் போதும் எவ்வளவு விரிவான பாதுகாப்பும் உதவியும் அளிக்க முடியுமோ அவ்வளவையும் அளித்தல்: (பிரிவு 10(1)."

"தாய் தந்தையர் வழியையோ மற்ற நிலைமைகளையோ காரணங்களாக வைத்து எவ்வித வேறுபாடும் காட்டாமல், குழந்தைகள், இளைஞர்கள் ஆகிய

அனைவரின் சார்பிலும் உதவியும் பாதுகாப்பும் வழங்க சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பொருளாதார மற்றும் சமூக ரீதியான சுரண்டல்தனத்திலிருந்து குழந்தைகளையும் இளைஞர்களையும் பாதுகாக்க வேண்டும். அவர்களுடைய நல்லொழுக்கத்திற்கோ, உடல் நலத்திற்கோ ஊறு விளைவிக்க கூடிய அல்லது வாழ்க்கைக்கு ஆபத்தான அல்லது அவர்களின் சீரான வளர்ச்சியைப் பாதிக்கக் கூடிய வேலைகளில் அவர்கள் ஈடுபடுத்தப்படுவது சட்டப்படி தண்டனைக்குரியதாக்கப்பட வேண்டும். அரசுகள் வயது எல்லைகளை நிர்ணயம் செய்து அவற்றுக்குக் கீழேயுள்ள குழந்தைகள் ஊதியம் பெறும் உழைப்பக்கு அமர்த்தப்படுவதைத் தடை செய்து அதைச் சட்டப்படி தன்டனைக்குறியதாகவும் ஆக்கவேண்டும்." (பிரிவு 10(3)"

"குழுந்தை இறந்து பிறக்கும் பிரசவ விகிதத்தையும், சிசு மரணத்தையும் குறைப்பதற்கும், குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கும் உரிய ஏற்பாடு" (பிரிவு 12(அ))

"தொடக்கக் கல்வி அனைவருக்கும் கட்டாயமாகவும், இலவசமாகவும் கிடைத்தல் வேண்டும்." (பிரிவு 13-2-அ)

ஐ.நா.வால் நிறைவேற்றப்பட்ட வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச ஒப்பந்தம் சிறார்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்புப் பற்றி மிகச் சிறப்பாக கூறுகிறது.

நீதி மன்றங்களுக்கும், விசாரணைக் குழுக்களுக்கும் முன்பு அனைவரும் சமமாவார்; - ஆனால் குற்ற வழக்கொன்றில் அல்லது சட்டரீதியான வழக்கொன்றில் அளிக்கப்பட்ட எந்தத் தீர்ப்பும், இளம் வயதினரின் நலன்களுக்காகவோ அல்லது வழக்கு தாம்பத்திய விவகாரங்கள் சம்பந்தபட்டதாய் தாய் அல்லது குழந்தைகளின் காப்புப் பொறுப்புப் பற்றி இருந்தாலோ தவிர மற்றவற்றில் பகிரங்கமாக்கப்படும் (பிரிவு 14-1 )

"பெற்றோர்களும் சந்தர்ப்பத்திற்கேற்ப சட்டபூர்வமான காப்பாளர்களும் தத்தம் குழந்தைகளுக்கு, தமது சொந்தக் கோட்பாடுகளுக்கு உகந்த வகையில், மத சம்பந்தமான மற்றும் தார்மீகக் கல்வி கிடைக்கச் செய்வதற்குரிய சுதந்திர உரிமையை மதித்துப் போற்ற, தற்போதைய ஒப்பந்தத்திற்கு உடன்பட்ட நாடுகள் பொறுப் பேற்கின்றன." (பிரிவு 18-4)

"ஒவ்வொரு குழந்தைக்கும், இனம், நிறம், பால், மொழி, மதம் நாட்டியல் மற்றும் சமூக வழித்தோன்றல், சொத்துடைமை அல்லது பிறப்பு, ஆகிய வேறுபாடு எதுவும் கருதாது, உரிய வயதை எய்தாத இளமை என்னும் தனது கண்ணியத்திற்கேற்ப, தனது குடும்பம், சமுதாயம், நாடு ஆகியவற்றால் பாதுகாக்கப்படுவதற்கான நடவடிக்கைகளைப் பெறுவதற்குரிய உரிமை உண்டு" (பிரிவு 24-1)

"ஒவ்வொரு குழந்தையும் பிறந்தவுடனே பதிவு செய்யப்பட்டு, பெயரும் வைக்கப்பட வேண்டும்" (பிரிவு24-2)

"ஒவ்வொரு குழந்தைக்கும் தனக்குரிய தேசிய அந்தஸ்தைப் பெற உரிமை உண்டு" (பிரிவு 24-3)

இந்தியாவின் எதிர்காலம் குழந்தைகளுக்கு உரியது. நமது மாபெரும் தலைவர்கள், காந்தி[illegible]கள், தாகூர், மற்றும் ஜவாஹர்லால் நேரு, குழந்தைகளி[illegible] அளவற்ற அன்பு கொண்டிருந்தனர்.

## தரமான கல்வி

கும்பகோணம் கொலைத் தீயில் உயிரிழந்த ஒவ்வொரு குழந்தையின் பெற்றோரும் ஒவ்வொரு நினைவு நாளிலும் சொல்வது இதைத்தான். "எங்கள் துயரம் எங்களோடு போகட்டும். இனியேனும் கல்வியின் பெயரால் இத்தகைய சம்பவம் நிகழாதிருக்கட்டும்"

"தரமான கல்வி என்பது பயிற்றுவிக்கும் இடம், சூழல், ஆசிரியர், பயிற்றுவிக்கும் முறை என எல்லாவற்றையும்

உள்ளடக்கியது. பள்ளியில் பாடம் நடத்தும் ஆசிரியர்களும் பயிற்றுவிக்கும் முறையும் எத்தனை முக்கியமோ அதைவிட முக்கியமானது நல்ல சூழலில் குழந்தைகள் படிப்பது.

"60 ஆண்டு கால சுதந்திர இந்தியாவில் சமத்துவத்தின் பெயரால் எத்தனையோ கட்சிகள் ஆட்சிக் கட்டிலில் ஏறியிருக்கின்றன. ஆனால், அடிப்படை உரிமைகளான கல்வியும், சுகாதாரமும்கூட இந்தியக் குழந்தைகளுக்கு இன்னமும் கிடைக்கவில்லை.

"தரமான கல்விக்கும் பொருளாதார ரீதியாக பிற்பட்டோருக்கும் இடையிலான இடைவெளி நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. தரமான கல்வியை விலை கொடுத்துத்தான் வாங்க வேண்டும் என்பது எழுதப்படாத விதியாகி விட்டது.

"நல்ல சூழலில் பள்ளிக்கூடங்கள், குழந்தைகளை குழந்தைகளாகப் புரிந்து நடந்து கொள்ளும் ஆசிரியர்கள், மனப்பாடத்துக்கு அன்றி படைப்பாற்றலுக்கு முக்கியத்துவம் அளிக்கும் சுமைகளற்ற - எளிய முறையிலான பாடத் திட்டங்கள்..... இந்த எளிய தேவைகளுக்கு இந்திய குழந்தைகள் இன்னும் எத்தனை ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் எனத் தெரியவில்லை."[19]

இந்திய அரசியல் அமைப்பு 14 வயது வரை சிறார்களுக்கு அடிப்படைக்கல்வி இலவசமாக அளிக்கப்படவேண்டும் என உறுதி அளித்துள்ளது. 1950ல் இருந்து பத்து ஆண்டுகளுக்குள் இந்தியாவில் அடிப்படைக் கல்வி இலவசமாக அளிக்கப்படும் என்ற உறுதி மொழி நிறைவேற்றமுடியவில்லை.

குழுந்தைகளைப் பேணிப் பராமரிக்கும் கலை, அறிவியலில் ஒரு சிறப்புப் பகுதியாகவே வளர்ந்துள்ளது. குழந்தைகளுக்காகத் தனி நூல் நிலையம், பொருட்காட்சிச் சாலை, திரைப்படங்கள், கலையரங்கங்கள் ஆகியவற்றை நிறுவ நாம் முயற்சி மேற்கொண்டுள்ளோம். குழந்தைகளுக்கு புத்தக டிரஸ்ட் ஒன்று உருவாக்கியுள்ளோம்.

நம் குழந்தைகள் வளரும் போது, வளமான, நிறைவான, இன்பமான வாழ்வு வாழ வகை செய்ய, நம் தலைவர்கள், அரசு, நிர்வாகம், ஊடகங்கள் தொடர்ந்து பாடுபடவேண்டும். குழந்தைகள் வண்ணப் பொலிவு, சந்த இசைவு, இசை, வாழ்க்கையின் துடிப்பு ஆகியவற்றை நாடி விழைகின்றனர், அவர்கள் பண்பட்ட மக்களாய் வளர வேண்டுமானால் நாம் அறிவுப் பூர்வமான கதைகளையும், வரலாற்றையும், அறிவியலையும் சொல்லி, அவர்கள் உள்ளத்தையும் இதயத்தையும் உருவாக்கிப் பண்படுத்த வேண்டும். குழந்தைகள் தங்கள் கண்ணால் காண்பதை ஒட்டித்தான் தாங்களும் உருவாகின்றனர். வாழ்வில் மதிப்பு, நற்குணத்தில் ஈடுபாடு, கயமையில் வெறுப்பு, ஆகிய பண்புகள் குழந்தைகளின் பண்பில் ஆழப்பதிந்துள்ளன. இயல்பானதையும், தானாக ஊற்றெடுக்கும் உணர்ச்சியையும் ஊழலால் கரைபடாமல் உயர்வானதையும் நிதானமானதையும், குழந்தைகள் அறிந்து, தங்களோடு இசைவும் நிறைவும் காண, நாம் அவர்களுக்கு உதவ வேண்டும். அறிவை வளர்க்க அவர்களுக்குள்ள ஆர்வத்தை நாம் அழிக்கக் கூடாது. அவர்கள் கற்பனா சக்தியைக் கட்டுபடுத்தி முடக்கக் கூடாது. அனுதாபம் காட்ட அவர்களுக்குள்ள ஈடுபாட்டினை நாம் பறிக்கக் கூடாது.

பெரியவர்கள், தங்கள் கருத்துக்களையே குழந்தைகளிடம் புகுத்தித் திணிக்க முற்படுகின்றனர். பழமையின் பயங்கரப் பிசாசுகள் இன்றைய தலைமுறையினரையும் துன்புறுத்த நாம் இடம் தரலாகாது.

குழந்தைகள் தங்கள் கருத்துக்களையும் மனக்கண்ணோட்டத்தையும், தங்கள் பெற்றோர்களிடம் இருந்து பெற்றுப் பயில்கின்றனர், ஆகவே குழந்தைகளுக்குக் கல்வி புகட்டுவதில் தாய்தந்தைக்குள்ள பொறுப்பு மகத்தானது.

குழந்தைகள், வளர்ச்சிக்குச் சாதகமான சூழ்நிலையில் வசித்து, ஆடம்பரமில்லாத ஆனால் வசதியான வாழ்க்கை

வாழவும், உடலையும் அறிவையும் கலை உணர்வையும் வளர்க்கவும், நியாயமான வாய்ப்புகள் பெற நாம் வகை செய்ய வேண்டும்.

## குழந்தை தொழிலாளர் முறை ஒழித்தல்

ஒவ்வொரு ஆண்டும் ஜீன் 13-ம் தேதி குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமாக அனுசரிக்கப்படுகிறது. குழந்தை தொழிலாளர் முறையில் சிறார்களின் உழைப்பு சுரண்டப்படுகிறது என்பதாலும், முறையான பாதுகாப்பு இல்லாத ஆபத்தான தொழில்களிலும் சிறார்களை ஈடுபடுத்துவதால் அவர்களது உடல் நலம் பாதிக்கப்படுகிறது என்பதாலும், இவை யாவற்றுக்கும் மேலாக, குழந்தைகள் படிப்பை இழந்து, வாழ்க்கையில் முன்னேறும் வாய்ப்புகளை இழந்து விடுகிறார்கள் என்பதாலும்தான் குழந்தைத் தொழிலாளர் முறை கூடாது எனக் கருதுகிறோம்.[20]

வறுமையின் காரணமாகத்தான் அவர்கள் கடினமான வேலைகளில் சேர்க்கப்படுகிறார்கள். "பசியால் வாடும் இந்தக் குழந்தையைப் பார்க்கும்போது பெரும் வேதனை ஏற்படுகிறது; ஒரு பெரியமுள் குத்துவது போல் வலி உண்டாகிறது" என்று ஸ்பானியப் பெருங்கவிஞர் மிகப் ஹெர்னான் டெஸ் எழுதினார்.

இந்தியாபோன்ற மக்கள் தொகை அதிகம் உள்ள நாட்டில், ஏழைமக்கள், குறிப்பாக வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் ஏழைகள் அதிகம் உள்ள, நாட்டில், குழந்தைகளை வேலைக்கு அனுப்பக்கூடாது என்று சட்டம் இயற்றுவதால் மட்டும் இதை தடுத்து விட முடியாது.

ஏழ்மையின் காரணத்தால் இந்தியா முழுவதிலும் குழந்தைத் தொழிலாளர்கள் முறை ஒழிக்கப்படவில்லை என்பதுதான் நம் மனச்சாட்சியை உறுத்துகின்ற உண்மை. குழந்தைத் தொழிலாளர்கள் ஒழிக்கப்பட்டுவிட்டதாக கூறினாலும் கூட பல மாநிலங்களில், தமிழ்நாட்டில் பல

மாவட்டங்களில் இன்றும் நிறைய குழந்தைகள் பல்வேறு கடினமான தொழில்களில் ஈடுபட்டிருப்பதைக் காணமுடியும்.

மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களை சிறப்புப் பள்ளியில் சேர்த்துவிடுவதாகவும், அவர்களுக்கு மாதந்தோறும் சிறிய உதவித்தொகையை அளிப்பதாகவும் இந்த மீட்புப் பணியில் உள்ள அதிகாரிகள் கணக்கு காட்டினாலும், அந்த சிறப்புப் பள்ளிகளை வெற்றிகரமாக நடத்த முடியாததன் காரணம் என்ன?

குழந்தைத் தொழிளாளர் முறையை ஒழிப்பதில் சில அணுகுமுறைகளை அரசு மாற்றுமானால் இந்தத் திட்டம் பயனுள்ளதாகவும் அமையும்.

14 வயதுவரை சிறார்களாகக் கருதப்படுகிறார்கள். குழந்தைத் தொழிலாளர்களில் 90 விழக்காடு 10 வயதுக்கு மேற்பட்டவர்கள்தான். அவர்களில் படிப்பறிவு இல்லாதவர்கள், பள்ளியிலிருந்து நின்றுவிட்டவர்கள், மிகமோசமான ஏழ்மையை அனுபவித்து வருபவர்கள். இது ஒரு சமுதாயப் பிரச்சனையாகும். இந்தச் சிறார்களை எவ்வாறு வாழவைப்பது, படிப்பறிவை ஊட்டுவது, மற்றும் சிறப்பூதியம் வழங்குவது குறித்து புதிய அணுகுமுறையைப் கடைப்பிடிக்க வேண்டும்.

குழந்தைத் தொழிலாளர்களை ஈடுபடுத்தியதால் திருப்பூரைச் சேர்ந்த மூன்று ஏற்றுமதி நிறுவனங்களுடன் உறவை முறித்துக் கொண்டதாக இங்கிலாந்தைச் சேர்ந்த நிறுவனம் அறிவித்தது, இத்தகைய கண்ணோட்டம் அணுகுமுறை நம், ஒவ்வொருவருக்கும் வரவேண்டும். படித்த சமூக சிந்தனையுடைய நம் ஒவ்வொருவரையும் அலட்ட வேண்டிய, அவசரக்கால நடவடிக்கையாகத் தீர்வு காண வேண்டிய பிரச்னைகளில் ஒன்று குழந்தைத் தொழிலாளர் முறை. இதற்குத் தீர்வு சட்டம் மட்டுமல்ல. பொருளாதார மற்றும் சமூக மாற்றங்கள் என்பதை மறந்து விடக்கூடாது.

## வறுமை

மனிதர் வாழ்வு, புறநிலை வசதிகளாலும் சூழ்நிலைச் சந்தர்ப்பங்களினாலும் நிர்ணயிக்கப்படுகிறது. மனிதர் நிறைவான வாழ்க்கை வாழ்வதற்குத் தடையாக உள்ளவற்றை அகற்ற நம்மாலியன்றதை; நாம் செய்யவெண்டும். நம் முன்னுள்ள தடைகளில் மிகக் கொடியது, வறுமை. மனிதனின் நலனைப் பெருக்கும் வகையில் இயற்கையை ஆள வழிவகுக்கும் பொறியியலின் மூலம் வறுமையை ஓரளவு போக்க அரசு முயலுகின்றது. வறுமை வாட்டுகின்ற இடத்தில், உண்மையான மனித வாழ்வு தழைக்க முடியாது. துன்பம், வறுமை, பிணி, ஆகியவற்றால் எண்ணற்ற மக்கள் வாட்டப்படுகின்றனர். அவர்கள் வாழ்க்கை நிலை அவர்களுக்கு வேதனையும் வெறுப்பும் மூட்டுவதுடன், அவர்கள் உள்ளத்தின் வலிமையையும் ஆன்ம வளத்தையும் முடக்கி ஒடுக்குகிறது. அய்யன் திருவள்ளுவர் கூறினார்

> இன்மையின் இன்னாதது யாது? எனின், இன்மையின்
> இன்மையே இன்னாதது
>
> - குறள் நல்குரவு: 1041

வறுமை போலக் கொடியது யாதென்றால், வறுமையைப்போலக் கொடியது வறுமையேயன்றிப் பிறிதில்லை. வறுமைக் கொடுமைக்கு ஒப்புமை சொல்லப் பிறிதொன்று இல்லை

- குறள் 1041

1928-ல் கல்கத்தா காங்கிரசில் நிகழ்த்திய தலைமைப் பேருரையில் பண்டித மோதிலால் நேரு கூறினார்: "பாமரமக்கள் வேண்டுவது உணவு. பரிசோதனைகள் நடத்தவும், அயல்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தத்துவ சித்தாந்தங்கள், கொள்கைக் கண்டிப்புகள், ஆகியவை பற்றி ஆராய்ச்சி நடத்தவும், அவர்களுக்கு அவகாசமில்லை" மக்களாட்சி முறைக்கு உட்பட்டுச் செழிப்பான இந்தியாவை உருவாக்க நாம் முயன்று

வருகிறோம். நாம் அனைவரும் சமமாக ஏழைகளாக வேண்டுமென்பதோ ஒரே நிலையில் பட்டினியால் பிணியால் வாடவேண்டுமென்பதோ, மக்களாட்சி மற்றும் சமதர்மக் கொள்கையின் பொருள் அல்ல. நாம் பாதுகாக்க வேண்டிய ஓர் உடைமை அல்ல, சமதர்மம்; அது, நாம் எய்த வேண்டிய குறிக்கோள், பொருளாதார சக்தியும் அதிகாரமும் நாட்டின் பொது நலனுக்குக் கட்டுப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதுதான் மக்களாட்சியின் உட்பொருள். கல்லாமை, வறுமை, பிணி, ஆகியவற்றை எதிர்த்து நாம் போராட வேண்டும்.[21]

அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர் ஆங்சான் சுயூகீய் மியான்மாரில் 1989 முதல் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார். அவர் சொல்வதைப் பார்ப்போம். “ஏழைகளுக்குப் பொருளுதவி மட்டும் அளித்துவிட்டால் போதாது. தங்கள் மீது அக்கறை காட்டாத ஓர் உலகில் தாங்கள் கையாலாகாதவர்கள், பயனற்றவர்கள் எனத் தங்களைப் பற்றி அவர்கள் கொண்டுள்ள கண்ணோட்டத்தை மாற்றிக் கொள்வதற்கு அவர்களுக்குப் போதிய அதிகாரமளிக்க வேண்டும்.”[22]

விடுதலை பெற்ற இந்தியாவில் சிறப்பான சாதனைகள் சிலவற்றையும் நாம் செய்துள்ளோம். ஆயினும் நம் மக்களில் பெரும்பாலோர் இன்னும் வறுமையிலும் பிணியிலும் அறியாமையிலும் அழுந்தியுள்ளனர். பிணியால் வாட்டப்பட்டுப் பட்டினியால் பலவீனமடைந்த உடல்கள், நோயின் தாக்குதல் ஏற்பட்ட மாத்திரத்தில் முறிந்து விடுகின்றன. நம் மக்களில் மிகப் பெரும்பான்மையோர் வளர்ச்சிகுன்றிய, பின்தங்கிய நிலையில், இருக்கின்றனர்.

நம்முன் உள்ள அடிப்படையான கேள்வி வேலையில்லாத் திண்டாட்டமும் வறுமையும் மோசமடைவதன் விளைவாகச் சமுதாயங்கள் சிதைவுறுவதைத் தடுக்க என்ன செய்யலாம்?

## காந்தியடிகளின் முன்மாதிரி

உலக அமைதிக்கான வித்தாக அமைந்திருப்பது சர்வோதயம் காந்தியடிகள் நமக்கு வழங்கிய மகத்தான செல்வம். "கடையனுக்கும் கடைத்தேற்றம்" என்ற லட்சியத்துடன் கூடிய செல்வம் அது.

அறவியலும், மேம்பாடும் ஒருங்கிணைந்து செல்கின்றன. இவ்விரண்டையும் இணைப்பதில் காந்தியடிகள் வெற்றிகண்டார். கீழ்நோக்கிக் கசிந்து வடியும் பொருளாதாரத்தைவிட மேல்நோக்கிப் பொங்கி எழும் பொருளாதாரத்தின் அடிப்படையிலான ஒரு வளர்ச்சி முன்மாதிரியை அவர் செயற்படுத்தினார். இதற்கு அடிப்படையாக இரு சீர்திருத்தங்கள் தேவை.

ஓர் அரசியல் சீர்திருத்தம். அரசின் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும். மக்களாட்சி முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அதிகாரிகள் நிருவாகத்தை நடத்த வேண்டும். ஆனால், பொருளாதாரமும், தொழில்நுட்பமும் பரவலாக்கப்பட்டால் மட்டுமே அரசியல் அதிகாரப் பரவலாக்கம் நடைபெற முடியும்.

ஒரு பொருளாதாரச் சீர்திருத்தம் ஏழைகளிலும் மிக ஏழைகளாக இருப்பவர்கள் குறித்துக் கவனம் செலுத்தப்பட வேண்டும் நமது திட்டங்கள் அனைத்திலும் அவர்களே மையமாக அமைய வேண்டும்.

எடுத்துக்காட்டாக, இந்தியாவில் ஒரு சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. இது உள்ளாட்சி அரசுகளுக்கு அதிகாரமளிக்கிறது. உள்ளாட்சி அரசுகளில் இது ஏழைகளுக்கு அதிக அளவில் பிரதிநிதித்துவம் அளிக்கிறது. (மகளிர்க்கு 30% தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 30%)

## கனவை நனவாக்குதல்

வறுமையைக் குறைப்பது பற்றித்தான் நிறைய பேசுகிறார்கள். வறுமையை அடியோடு ஒழிப்பது குறித்து அதிகம் பேசுவதில்லை. எனினும், நிலையான

மேம்பாட்டுக்கு வறுமையை ஒழிப்பது உயிர்நாடி என்பேன். நீதியின் கட்டமைப்புக்குள் பொருளாதார மேம்பாட்டை உருவாக்க வேண்டும். இதற்கு வடக்கும் தெற்கும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும். ஆனால், முதலில் வடக்கு தனது பொருளாதாரக் கொள்கைகளை மாற்றிக் கொண்டு, அதன் சமுதாயம் இன்னும் அதிகமான பங்குப் பணியாற்றுவதற்கு அனுமதிப்பதன்மூலம், இன்னும் அதிக அளவுக்கு மக்களாட்சி நெறியில் செல்ல வேண்டும். சொந்தக் கட்டுப்பாடுகள், சிந்தனையிலும் செயலிலும் ஒற்றுமையுணர்வு, அறிவியல் கடமைகள், தியாகம், பிறர்க்கென வாழுந்தகைமை, மக்களின் தகுதிப்பாட்டில் நம்பிக்கை ஆகிய அனைத்தும் மேம்பாட்டுக்கான போராட்டத்தில் இன்றியமையாத அம்சங்களாகும். இந்தக் கோட்பாடுகளைப் பெருமளவு மக்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் அறிவுச் சான்றோர்கள் ஒன்று திரள வேண்டும். கனவுக் கற்பனை நனவுலகில் செயற்படுவதற்கு ஒரு வாய்ப்பளிக்க வேண்டும்.[23]

## மரண தண்டனை

மரண தண்டனையை தடை செய்யலாமா? தண்டனைகளில் எல்லாம் உச்ச நிலைத் தண்டனை மரண தண்டனைதான். ஆயுள் தண்டனையை விட இது கடுமையானது. தூக்குப் போடுவதன் மூலம் சாகடிக்கப்படுகின்ற ஒரு கொலையாளி, சட்டத்தைத் தானே எடுத்துக் கொண்டு இன்னொருவரின் உயிரைப் பறித்தவன். அச்செயல் மிகவும் கொடூரமானது.

அவ்வாறு உயிரைப் பறிப்பதற்கு அவனுக்கு உரிமையில்லை. உரிமையை மீறிய இச்செயலுக்கு உரிய தண்டனை மரண தண்டனைதான் என்று மற்றவர்களுக்கு ஒரு எச்சரிக்கையையும், அச்சத்தையும் ஊட்டுவதுதான் மரண தண்டனையின் மகத்தான நோக்கம். இந்த அச்சத்தை ஊட்டுவதன் மூலம் கொலை செய்கிற விளிம்பு வரை வந்தவர்கள் கூட அரிவாளை ஓங்கியதோடு துப்பாக்கியை கையில் எடுத்ததோடு நிறுத்தி விடுவார்கள். ஒரு தூக்குத்

தண்டனை நிறைவேற்றப்படுகிறபோது எத்தனை எத்தனையோ கொலைகள் நடப்பதற்கு முன்பே தடுக்கப்படுகின்றன என்பது தான் பொருள். ஆகவே தான் 100 கொலைகள், 1000 கொலைகளைத் தடுக்க ஒரு சில மரண தண்டனைகள் அவசியமாகிறது என்றும், இதைத்தான் அச்சமூட்டுகிற தண்டனை (Deterant Punishment) என்று சட்ட மேதைகள் வருணிக்கிறார்கள். அச்சப்படுகிற ஒருவன் எத்தனை அவசரக்காரனாக இருந்தாலும், கொலையைத் தாமதிக்கவே முயற்சி செய்வான்.

மரண தண்டனை சமூகத்தின் கோழைத்தனம் என்று ஓய்வு பெற்ற நீதிபதி மாண்பமை வி.ஆர். கிருஷ்ணய்யர் போன்ற மேதைகள் ஜூலை 1999-ல் சென்னையில் மரண தண்டனைக்கு எதிரான இயக்கப் பொதுக் கூட்டத்தில் பேசியுள்ளனர். ஒரு கொலைக்கு இன்னொரு கொலை தீர்வாகாது என்று வலியுறுத்துகிறார்கள்.

பயங்கரவாதம் (terrorism) என்பது ஒரு வகைக் கோழைத்தனம். பகத்சிங் போல மரணதண்டனையை வரவேற்க வேண்டும். அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பதற்காகச் சட்டத்திலுள்ள சந்து பொந்துகளில் நுழைந்து விசித்திரமான சாட்சிகளாலும் வினோதமான வாதங்களினாலும் வெற்றி பெற முயற்சிப்பது அறிவு ஜீவிகளுக்கு வேண்டுமானால் சவாலாக இருக்கலாம். ஆனால் தியாகிகளுக்கு அது அவசியமில்லை.

தெலுங்கானா போராளிகளுக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை ரத்து செய்ய தந்தைப் பெரியார் கோரினார் என்று எழுத்தாளர் எஸ்.வி. ராஜதுரை கூறுகிறார். அப்படியென்றால், மரண தண்டனையை ஒட்டு மொத்தமாக ரத்து செய்ய வேண்டும் என்று ஏன் கேட்கிறார்கள்?

மரண தண்டனையை நாகரிகமானதல்ல என்கிறார் நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர். மரண தண்டனை

மோசமானதுதான் அந்த மோசமானதை வைத்துத்தான் நாம் சமாளிக்க வேண்டியிருக்கிறது என்பது பல வழக்கறிஞர்களின் வாதம் "சமூகத்தின் கோழைத்தனம்" என்று மரணதண்டனையைப் பற்றி சாடுகிறார் நீதிபதி வி.ஆர்.கிருஷ்ணய்யர். முற்றிலும் உண்மை. ஆனால் பயங்கரவாதம் வீரம் என்று சொல்லி அவர்களுக்கு சமூகம் துணை போக முடியாது.

உண்மையில், மரண தண்டனை ரத்து செய்யப்படத்தான் வேண்டும். ஒத்துக் கொள்ளலாம். ஆனால் அது எப்போது என்பதுதான் கேள்வி.

ஐ.நா.வின் அறிக்கையும், பன்னாட்டு மனித உரிமைகள் அமைப்புகளும் மரண தண்டனை சுமார் 60 நாடுகளில் ஒழிக்கப்பட்டு விட்டன என்று புள்ளி விபரம் கூறுகின்றன. ஆயினும் அந்த 60 நாடுகளிலுமுள்ள சட்டத்தின் ஆட்சியை சமுதாய நெறிமுறைகளைப் பற்றிய தகவல்களைத் திரட்டி நாம் ஆய்வு செய்ய வேண்டும்.

வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய பன்னாட்டு ஒப்பந்தம் (1966) மரண தண்டனை குறித்து மிக ஆழ்ந்த கருத்துக்களைத் தெரிவித்துள்ளது.[24]

"மரண தண்டனையை நீக்காத நாடுகளில் மிகக் கடுமையான குற்றங்களுக்கு மட்டுமே, குற்றம் நிகழ்ந்த சமயத்திலான சட்டப்படி, மரணதண்டனை அளிக்கப்படலாம். தற்போதைய ஒப்பந்தத்தின் விதிமுறைகளுக்கும், மக்கள் படுகொலைத் தடுப்பு மட்டும் தண்டனை பற்றிய மாநாட்டின் முடிவுகளுக்கும் மாறாக அத்தண்டனை அளிக்கப்படுதல் கூடாது. தகுதிவாய்ந்த ஒரு நீதி மன்றம் வழங்கிய இறுதித் தீர்ப்பை ஒட்டித்தான் இந்த தண்டனையை நிறைவேற்றலாம்." (பிரிவு6-2)

"உயிரை மாய்ப்பது என்பது மக்கள் படுகொலைக் குற்றத்திற்கு உட்படுமானால், மக்கள் படுகொலைத் தடுப்பு மற்றும் தண்டனைபற்றிய மாநாட்டின் விதிமுறைகளுக்கேற்ப

மேற்கொள்ளப் பெற்ற எந்தப் பொறுப்பிலிருந்தும் எந்த விதத்திலும் கழன்று கொள்ள, தற்போதைய ஒப்பந்தத்திற்கு உடன்பட்ட எந்த நாட்டிற்கும், இந்தப் பிரிவிலுள்ள எதுவும், அதிகாரம் அளிப்பதாகக் கருதப்படுதல் கூடாது என்பது சொல்லாமலே விளங்கும்." (பிரிவு6-3)

"மரண தண்டனை விதிக்கப்பெற்ற எவருக்கும், மன்னிப்பு வேண்டவோ, தண்டனையை மாற்றக்கோரவோ உரிமை உண்டு. பொது விடுப்பு, மன்னிப்பு அல்லது மரண தண்டனைக் குறைப்பு எல்லாக் குற்றவாளிகளுக்கும் அளிக்கப்படலாம். பதினெட்டு வயதுக்குட்பட்டவர்கள் செய்த குற்றங்களுக்கு மரண தண்டனை அளிக்கப்படக்கூடாது. கருவுற்றிருக்கும் பெண்மணிகளின் விஷயத்திலும் இத்தண்டனை நிறைவேற்றப்படமாட்டாது." (பிரிவு 6-5)

"கொலைத் தண்டனையைத் தாமதப்படுத்தவோ, தடுக்கவோ, இந்தப் பிரிவிலுள்ள எதையும் தற்போதைய ஒப்பந்தத்திற்கு உடன்பட்ட நாடு எதுவும் பயன்படுத்தக்கூடாது (பிரிவு-6-6)."

ஒரு தனி மனிதனுக்கு நம்மால் உயிர் கொடுக்க முடியாதபோது எடுக்கவும் உரிமை இல்லை. தவறுதலான சாட்சியங்களால் தண்டனை பெற்றவரைக் கொன்றுவிட்டால், உண்மை தெரிந்தபின் என்ன செய்ய முடியும். தண்டனையால் ஒருவனைத் திருத்த வேண்டுமே தவிர, வஞ்சம் தீர்த்துக் கொள்ளக் கூடாது.[25]

மரண தண்டனை என்பது மனித இனத்திற்கு வேண்டாம். தவறுக்குத் தண்டனையாகவும், பயமுறுத்தி அடுத்தவனைத் தவறில் இருந்து தடுக்கவும், மேலும், பல கொடிய தவறுகள் நிகழாமல் தடுக்கத்தான், இம்மரண தண்டனை எனக் கூறினாலும், அது சரியான தீர்வாகாது. மரணத்திற்கு மரணம் தீர்வு அல்ல. மனிதப் படைப்பு உன்னதமானது. அதன் பரிணமிப்பு வையகத்தையே உய்யவைக்கும். எனவே மரண தண்டனை ஒழிக்கப்பட வேண்டியதே.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி, கொலைக் குற்றம் செய்யும் ஒருவனுக்கு அதிகபட்ச தண்டனையாக மரண தண்டனை நீதிபதிகளால் விதிக்கப்படுகிறது.

## மக்களின் கடைமைகளும் உரிமைகளும்

மனித உரிமைகளை அனுபவிக்கும்போது சில கடைமைகளையும் பொறுப்புகளையும் மேற்கொள்ள வேண்டும் - என்று அனைத்துலக மனித உரிமைகள் அறிக்கை கூறுகிறது: "ஒவ்வொருவரது சுபாவம் முழுமையாக கட்டுப்பாடின்றிப் வளர்ச்சியடைவதற்குரிய ஒரே ஒரு சாதனம் அவரது சமூகமே ஆதலின் அவ்வச் சமூகத்துக்கு அவரவர் ஆற்ற வேண்டிய கடமைகள் உண்டு" (பிரிவு 29-1) ஆதலால் பிறருடைய உரிமைகள் நற்பெயர் ஆகியவற்றிற்கும், தேசியப் பாதுகாப்பு, உள்நாட்டு அமைதி, பொதுச் சுகாதாரம், நன்னடத்தை முதலியவற்றிற்கும் ஊறு நேராமல் இருப்பதற்காகச் சில தடைகளைக் கருத்துச் சுதந்திர உரிமையின்மீது விதிக்க வேண்டும். ஆனால், கருத்துச் சுதந்திரத்தின் ஒரு பகுதியான மனித உரிமைகளை, அறிந்து கொள்ளும் உரிமையாய் மேலே சொன்ன தீமைகள் ஏற்படாவாதலால், மேலே சொன்ன தடைகளை இந்த உரிமையின் மீது விதித்தல் கூடாது.[26]

ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமைகளேயன்றிக் கடமைகளும் உண்டு. சட்டத்திற்குப் பணிதல், நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் நன்மைதரும் முயற்சிகளில் ஈடுபடுதல், பிள்ளைகள் பெற்றோருக்கும் பெற்றோர் பிள்ளைகளுக்கும் உதவுதல் போன்ற கடமைகள் அவற்றுள் அடிப்படையானவை. உரிமைகளைப் பற்றி அறிந்து கொள்ளும் உரிமையில் இந்தக் கடமைகளும் அடங்குமா?

ஆம், கடமைகளும் அடங்கும். பன்னாட்டு உடன்பாடுகளில் கடமைகள் வெளிப்படையாய்ச் சொல்லப்படவில்லை. ஆனால், பல நாடுகளில் அரசியல் சட்டத்தில் குடிமக்கள் உரிமைகளோடு அவர்களுடைய

அடிப்படைக் கடமைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. அந்நாடுகளுள் அனைத்துச் சோஷிலிச நாடுகளும் அடங்கும். உரிமைகளும் கடமைகளும் ஒன்றையொன்று சார்ந்தவை என்பது அந்நாடுகளின் கொள்கை. ஐரோப்பியப் பாதுகாப்பு ஒத்துழைப்பு மாநாட்டின் இறுதித் தீர்மானம் மனிதன் அறிந்துகொள்ள வேண்டிய உரிமையில் மனித உரிமைகள் மட்டுமன்றிக் கடமைகளும் அடங்கும் என்பதைத் தெளிவாய் எடுத்துரைக்கிறது.

## வழிகாட்டும் நெறிகள்

வழிகாட்டும் நெறிகள் (Directive Principles) நம் அரசியல் சட்டத்தில் சட்டஉரிமைகளாக இல்லாவிடினும், அவையும் நாட்டிற்குத் தேவையானவையே. அவற்றை இலட்சியங்களாகக் கவனத்தில் கொண்டு அரசுகள் செயலாற்ற வேண்டும் என்பதே இவற்றின் நோக்கம். இவைகள் அரசின் கடமைகளாகும். மக்கள் நலம் பேணுதல், பொருளாதார சமத்துவம், பாலின சமத்துவம், பொருளாதார வளர்ச்சி, உடல் நலம் பேணுதல், குழந்தைகள் நலவளர்ச்சி, கிராம நலத்திட்டங்கள், ஆதரவற்றோருக்கு உதவி, கல்வி, வேலை வாய்ப்பு, குறைந்தபட்ச ஊதியம், தொழிலாளர்கள் தொழில்களில் பங்கேற்றல், ஒரே உரிமையியல் (Civil) சட்டம், பிற்பட்ட சமூகத்தினரின் முன்னேற்றம், விவசாய வளம், சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்தல், வன விலங்குகள் ஆகியவற்றைப் பாதுகாத்தல், கலைப் பொருள்களைப் பாதுகாத்தல், உலக நேயத்திற்காகப் பாடுபடுதல் ஆகியவைதாம் அடிப்படைக் கோட்பாடுகள். அரசு சட்டம் இயற்றும்போது இவற்றைக் கவனத்தில் கொள்வதுடன், அது தனது கடமைகளையும் உணர வேண்டும் என்பதே இந்த நெறிகளின் நோக்கம்.

## அடிப்படைக் கடமைகள்

1976 - இல் அடிப்படைக் கடமைகள் என்ற ஒரு முக்கியப் பகுதியாக பிரிவு 51அ மூலம் நம் நாடாளுமன்றத்தில் அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்டது.[27] ஏனெனில், சட்டத்திற்குப் புறம்பாக

நடந்தால் மட்டுமே சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். ஆயினும் நம் நாடு முன்னேற, கீழ்வரும் கடமைகளை ஒவ்வொரு குடிமக்களும் ஏற்றுச் செயல்பட வேண்டும் என்பது முக்கிய நோக்கம்.

1) நம் அரசியலமைப்புச் சட்டத்தையும், கொடியையும், தேசியகீதத்தையும் மதிக்க வேண்டும்.

2) நம் நாட்டின் சுதந்திரத்திற்கான சிறந்த நோக்கங்களை மனத்தில் கொண்டு அதன்படி நடத்தல்.

3) நம் நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை, நேர்மை ஆகியவற்றையும் பாதுகாத்தல்.

4) நம் நாட்டைப் பாதுகாப்பதுடன், பாதுகாப்பு முயற்சிகளிலும் பங்கேற்றல்.

5) மதம், மொழி, பிறந்த இடம் போன்ற பல்வேறு பிரிவினைகளைத் தவிர்த்து, சகோதரத்துவத்தை நிறுவுதல், பெண்களை அவமானப் படுத்தாமல் அவர்களுக்கு சம மதிப்பு அளித்தல்.

6) நம் பண்பாட்டைக் காப்பாற்றுதல்.

7) காடு, நீர்த்தேக்கங்கள், ஆறுகள், வன விலங்குகள், பிற உயிரினங்கள் ஆகியவற்றையும், சுற்றுப்புறச் சூழலையும் பாதுகாத்து வளர்த்தல்.

8) அறிவையும், மனித நேயம், சீர்திருத்த எண்ணங்கள் ஆகியவற்றையும் வளர்த்தல்.

9) பொதுச் சொத்துகளைப் பாதுகாத்து வன்முறையைத் தவிர்த்தல்.

எந்தத் தனிப்பட்ட செயலாக இருந்தாலும், கூட்டு முயற்சியாக இருந்தாலும், நம் உழைப்பைத் தந்து முன்னேற்றத்தை நாடுதல் நாட்டிற்கு நலனாக அமையும். எல்லோரும் கடமைகளைச் சரிவரச் செய்தால் உரிமைகள் தானே வந்தடையும் என்பது அடிப்படைக் கடமைகளின் சித்தாந்தம்.

## அரசியலமைப்பு தரும் பாடம்

நம் அரசியலமைப்பில் எல்லாரும் சமம் என்று வலியுறுத்தப்படுகிறது. சாதாரணக் குடிமகனுக்கும் எல்லா உரிமைகளும் உண்டு என்று தெளிவாகக் கூறப்படுகிறது. கடமைகளை உணர்ந்து அவற்றை நிறைவேற்றி உரிமைகளை நிலைநாட்டினால், நம் நாடு ஒரு வளமான மக்களாட்சியாக மேலும் உயரும். அரசும் மக்களும் அறிந்து செயல்படுகிறார்களா என்றால் இல்லை என்பதே இன்றுள்ள நிலை. இந்த உரிமைகளும் கடமைகளும் குடிமக்களின் தனி உரிமை என்றாலும், அவற்றைச் செயல் படுத்துவது நம் அரசியல் தலைவர்கள், ஊழியர்கள்தாம். "அரசியல் பிழைத்தோர்க்கு அறமே கூற்றாகும்" என்பது சிலப்பதிகாரத்தின் அடிப்படைக் கருத்தாக மட்டுமல்லாது, நாம் காணும் கண்கூடான பாடம். தங்கள் கடமைகளைச் செய்யத் தவறினால், குடிமக்களுக்கும் இந்தப் பாடம் பொருந்துமல்லவா?

## அடிக்குறிப்புகளும் சான்றுகளும்


1. Jawaharlal Nehru in the Proceedings of the Indian National Congress Annual Session held in January 1930; Quoted in Jawaharlal Nehru **Toward Freedom** (New York: John Day Company 1942) 388-389
2. **Constituent Assembly Debates** Vol.IX.
3. **Constituent Assembly Debates** Vol.IX.
4. **The Constitution of India** (New Delhi: Govt. of India Publication 1978)
5. **Constituent Assembly Debates** Vol.XI.
6. **Constituent Assembly Debates** Vol.XI. 978.
7. **Constituent Assembly Debates** Vol.XI. 978. V.R. Krishna Iyer **Social Democracy and Dalit Egalite** Ambedkar Memorial Lecture) 1986-87 (University of Madras 1989) 32-33 for further details on social Justice refer V.R. Krishna Iyer,

**Some Half-Hidden Aspects of Indian Social Justice** (Lucknow: Eastern Book Company 1979) Lecture 3, 86-127.

8. தமிழாக்கம் ப. சீனிவாசன், சமூகப் புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கார் (சென்னை : மணிவாசகர் பதிப்பகம், 1997) 141.

9. **Golak Nath V. State of Punjab,** AIR (1967)SC 1643.

10. **Kesavananda Bharathi V. State of Kerala,** (1973) 4 Sec 225, Upendra Baxi, "Judicial Activism, Legal Education and Research in Globalising India" in **Mainstream** February 24, March 2 and 9, 1996, Verinder Grover and Ranjana Arora, (Ed): **India Fifty years of Independence (2)** (New Delhi: Deep and Deep Publication) 173-203; கேசவானந்த பாரதி அடிப்படை உரிமைகள் வழக்கு Kesavananda Bharathi Case (Kerala State) N.A., Palkhivala "Rekindling the Light of the Constitution" 16th May **Indian Express** 1986; N.A Palkhivala, "Structure of Marble or of red bricks" **Indian Express** 18th May 1980. Kesavananda Bharathi from October 3, 1972- to March 1973; S.M. Sikri யில் தலைமையில் 13 பேர் கொண்ட உச்சநிதிமன்றம் அடிப்படை உரிமைகள் வழக்கில் திர்ப்பு கூறப்பட்டது.

11. N.A. Palkhivala **Indian Constitution Defaced Defiled**

12. "Half a century of the constitution **"One India one people** Mumbai January 2000; Refer Second Decade to Combat Racism and Racial Discrimination, Global Compilation, of national legislation against Racial Discrimination "India" 101-111, Centre for Human Rights Geneva 1991.

13. ILO Developments : 60th Anniversary Report of the ILO Committee of experts on the Application on conventions and Recommendations HRI Reporters (U.S) Vol.II NOs.5/6 (Winter Spring 1987) A. Subbian **Supra note** Chapter on ILO.

14. ரா. தணலன், சிந்தனையாளர், கார்ல் மார்க்ஸ், (சென்னை : பிரேமா பிரசுரம் 1983), 40, 41

15. மேலது,
16. மேலது,
17. Communist Manifesto
18. International Covenant on Economic, Social and Culture Rights; the Convention on the Rights of the Child,
19. தினமணி (தலையங்கம்) 16 ஜூலை 2008.
20. A. Subbian, "Education: A Human Right or a Privilege to Indian Children" Centre for the Study of Human Rights, Columbia University, New York, U.S. VI. International (Human Rights Symposium and Research Conference From June 11th to 14th 1985). "Bonded Child Labour", "protection of the Vulenarable Sections of the Society" World Congress on Human Rights, UN Human Rights Center, Geneva, and Jawaharlal Nehru University, New Delhi, December, 1990.
21. மேலது,
22. யுனெஸ்கோ கூரியர், மே 1995 ஆங்சான் சுயூகீய், "மக்களாட்சி மனித குலத்தின் பொதுப் பாரம்பரியம்".
23. தேவகி ஜெயின் அறவியல் கடமை யுனெஸ்கோ கூரியர், மே 1995
24. U.N General Assembly Resolution 2993 XXIII 26 December 1968.
25. **Ibid.,** Ecosoc Resolution 1984 of May 1984. World Campaign for Human Rights, **Summary or Arbitrary Executions** Pact Sheet No.11, Centre for Human Rights UN; Human Rights Commission, 49th Session, UN Dec. CCPR/C/49/D/469 at 21 (1991); Joan Hartman, 'Unusual" Punishment: The Domestic Effects of International Norms Restricting the Applicatin of the Dealth Penalty 52, **Cincinati Law Review,** 655 (1983).
26. Universal Declaration of Human Rights.
27. **The Constitution of India.**

# 7. தமிழ்நாடும் மனித உரிமைகளும்

ஒரு நாகரிகத்தின் உயர்வு, பலவீனமான மக்கள் பகுதியை அது எவ்வாறு நடத்துகிறது என்பதைக் கொண்டுதான் தீர்மானிக்கப்படும்.

- டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்.

நம்முடைய வரலாற்றில் எண்ணற்ற கட்டங்களில் வீழ்ச்சி அடைந்து, வேதனையுற்று, இருளில் சிக்கி, இழிநிலை அடைந்தது ஏன் என்பதை நாம் உணர வேண்டும். நம் வீழ்ச்சிக்குக் காரணமாய் இருந்தது எது? நம் சிறப்புக்கு ஆதாரமாய் இருந்தது எது? உயர்ந்தோர் அனைவரையும் நாம் ஏத்திப் போற்றுகிறோம். இருபதாம் நூற்றாண்டில் (இந்த நூற்றாண்டிலும்), இந்தத் தலைமுறையில் தமிழகத்திலும் இந்திய அளவிலும் நம் சிறந்த தலைவர்கள் அண்ணல்காந்தி அடிகள், டாக்டர் பி.ஆர். அம்பேத்கர், ஜவஹர்லால்நேரு, தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, காமராஜர் போன்றோர் வாழ்ந்தனர். இந்த நூற்றாண்டிலும் போற்றுகிறோம். அவர்கள் தங்கள் துறைகளில் மட்டும்தான் கவனம் செலுத்தினரா? அனைத்தையும் தழுவிய பரந்த நோக்கு அவர்களை ஆட்கொள்ளவில்லையா? இன்றுள்ள சூழ்நிலையில் உலகம் முழுவதையும் ஒரே இனமாக, ஒரு குடும்பமாக நோக்க நாம் பழகிக் கொள்ள வேண்டுமென்பதை அவர்கள் உணரவில்லையா? இப்பொது உணர்வு எப்பொழுது தேய்ந்தது? குறுகிய எல்லைக் கோடுகளுக்குள் ஒடுங்கிய போதெல்லாம், நாம் வீழ்ச்சி அடைந்தோம்.

இந்த மகத்தான தலைவர்கள் வைதிகத்தை மறுதலித்தவர்கள், ஆசாரக் கண்டிப்புக்கு அடிமைப்பட மறுத்தவர்கள், இவர்களால்தான் இந்த நாடு முன்னேற்றம் கண்டுள்ளது; பழமையையே இறுகப் பற்றிக் கொண்டிருப்பவர்களால் அல்ல. பழமையை ஆய்ந்தறிந்து, இயற்கைக்கு விரோதமாயும், நெறிகெட்டதாகவும் செல்லரிக்கப்பட்டதாகவும் இருந்ததனைத்தையும் களைந்து விட்டு, அதில் இயற்கையோடு இயைந்ததாகவும், கண்ணியம் மிக்கதாகவும், உணர்வு பொருந்தியதாகவும், அமைந்திருந்ததை ஏற்றுப் போற்றுகிறவர்களால்தான் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பழமையானது அனைத்தும் மகத்தானது, உயர்ந்தது என்று பிரதாபம் பேசாமல், அக் கண்மூடித்தனமான போக்கைக் கைவிட்டு, அறிவிலே நேர்மையைக் கடைப்பிடித்தால் ஒழிய புது இந்தியாவை உருவாக்க நாம் உதவ முடியாது.[1]

தமிழர்களாகிய நாம் நேற்றைய மனிதர்களாய் நிற்போமா? நாளைய மனிதர்களாய் வளர்வோமா? அதுதான் இன்று நம் எதிர்நோக்கியுள்ள பிரச்சனை

## திராவிட இயக்கமும் மனித உரிமைகளும்

தென்னிந்திய நலஉரிமைச் சங்கம், நீதிக்கட்சி, திராவிடர் கழகம், சுயமரியாதை இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம் அனைத்துமே அடிப்படையில் மனித உரிமைகள் இயக்கங்களே ஆகும்.

இந்திய வரலாற்றுப் பின்னணி மனித உரிமைகள் போராட்டத்தில் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றது. இந்திய விடுதலை இயக்கம் மனித உரிமைகளுக்கு மிக முக்கியத்துவம் அளித்து தேசத் தந்தை காந்தியடிகள், தந்தை பெரியார், பாவேந்தர் பாரதிதாசன், அறிஞர் அண்ணா,

அண்ணல் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர், இருபதாம் நூற்றாண்டின் முன்னிலையில் நின்று பணியாற்றினார்கள். மனித உரிமைகள் கோட்பாடு தமிழகப் பண்பாட்டில் கலாச்சாரத்தில் மிகமிக முக்கியப் பங்காற்றியுள்ளது. அய்யன் திருவள்ளுவர், வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகள், கேரளாவில் நாராயண குரு, மராத்திய மாநிலத்தில் ஜோதிபாய் பூலே, தமிழகத்தில் ஜி. சுப்பிரமணிய அய்யர் எ. மாதவையா, ரெட்டைமலை சீனிவாசன், பாரதியார், சிங்காரவேலர், திரு.வி. கலியாண சுந்தரனார், டாக்டர் எ. இராமசாமி முதலியார், சர்.எ.டி. பன்னீர்செல்வம், முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் காலத்தில் மனித நேயக் கோட்பாடுகள் மற்றும் சாதி சமயமற்ற, ஏற்றத் தாழ்வற்ற சமூகத்தைப் பற்றி சிந்தித்து செயலாற்றினார்கள்.

அனைவரும் அவரவர் காலத்தில் மனித உரிமைகள் குறித்து ஆழமாகச் சிந்தித்துள்ளனர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, பண்பட்ட நாகரிகத்தை வளர்த்து உலகிற்கே வழிகாட்டும் முறையில் மனித சமுதாயத்தையே ஓர் குடும்பமாக கருதி வாழ்க்கை நடத்தியவர் தமிழர் என்பது பின்வரும் எடுத்துக்காட்டால் அறியலாம்.

யாதும் ஊரே யாவருங் கேளிர் - கணியன் பூங்குன்றனார்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் - குறள் 972[2]

அறவினை யாதெனிற் கொல்லாமை - குறள் 321

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் - குறள் 322

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் - திருமூலர்[3]

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல்
வேறொன்றறியேன் பராபரமே - தாயுமாணவர்

உயிரெல்லாம் பொதுவின் உளம்பட நோக்குக -
திருவருட்பிரகாச வள்ளலார்[4]

## அடிமைத்தனம் பற்றி மகாகாவி பாரதியார்

சமூக விடுதலைக்காகவும், பெண்களின் விடுதலைக்காகவும், பாடுபட்ட மகாகவி பாரதி கூறியதை இங்கு காண்போம்.

மிருகங்களும் ப களும் பிற ஜாதி மிருக ப களை அடிமைப்படுத்துவதில்லை, ஸ்வ ஜாதிகளையும் அடிமையாக்குவதில்லை.

சிங்கத்துக்குக் கீழே மற்றொரு சிங்கம் அடிமை கிடையாது. ஒரு நாய், ஒரு கழுதை, ஒரு நரி, ஒரு பன்றி கூடச் சிங்கத்தின் கீழே அடிமையில்லை.

நம்மைப் போன்றதொரு ஆத்மா நமக்கு அச்சத்தினாலே அடிமைப்பட்டிருக்கும் என்று நினைப்பவன் அரசனாயினும், குருவாயினும், புருஷனாயினும் மூடனைத் தவிர வேறில்லை. அவனுடைய நோக்கம் நிறைவேறாது.

அச்சத்தினால் மனுஷ்ய ஆத்மா வெளிக்கு அடிமை போல நடித்தாலும் உள்ளே துரோகத்தை வைத்துக் கொண்டு தான் இருக்கும்.

வீட்டில் அண்ணன் தம்பிகளையும், தாய் தந்தையரையும், அக்கா தங்கைகளையும், பெண்டு பிள்ளைகளையும் அடிமைப்படுத்தி ஆளச் சதி செய்யும் ஜனங்களின் கூட்டங்களே தேசங்களையும் அடக்கி அடிமையாக்கி ஆளச் சதி செய்கின்றன.

ஆண் மக்கள் ஒருவருக்கொருவர் அடிமைப்பட்டிருக்கும் கொடுமை சகிக்க முடியாது. ஆனால், இதில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைக் காட்டிலும் பல்லாயிர மடங்கு அதிகக் கஷ்ட நஷ்டங்கள் பெண் கூட்டத்தை ஆண் கூட்டம் அடிமைப்படுத்தி வைத்திருப்பதால் விளைகின்றன.

அறிவு கொண்ட மனித வுயிர்களை
அடிமை யாக்க முயல்பவர் பித்தராம்;

நெறிகள் யாவினும் மேம்பட்டுமானிடர்
நேர்மை கொண்டுயர் தேவர்கள் ஆதற்கே,
சிறிய தொண்டுகள் தீர்த்து அடிமைச்சுருள்
தீயிலிட்டுப் பொசுக்கிட வேண்டுமாம்;

அடிமைகள் யாராயினும், அவர்களுக்கு விடுதலை கொடுத்தால், அதனின்றும் யுகப் பிரளயம் நிச்சயமாக நேரிட்டு, அண்டச் சுவர்கள் இடிந்து போய் ஜகத்தே அழிந்து விடும் என்று சொல்லுதல் அவர்களை அடிமைப்படுத்தி ஆள்வோருடைய ஸம்பிரதாயம்.

நீயும் அடிமைத்தனத்திலிருந்து நீங்க வேண்டும். உன்னுடைய ஜய பேரிகையை அடித்துக் கொண்டு உலகத்தில் எந்தெந்த பாகத்தில் யார் யார் அடிமைப் பட்டிருக்கிறார்களோ அவரவரை விடுவிக்க வேண்டும்.[5]

சொந்த நாட்டில் பிறர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம் இனி அஞ்சிடோம்
நாங்கள் முப்பது கோடி ஜனங்களும்
நாய்களோ? பன்றிச் சேய்களோ? - பாரதி[6]

சாதிமத பேதங்கள் மூடவழக்கங்கள்
தாங்கி நடைபெற்று வரும் சண்டை உலகிதனை
ஊதையினில் துரும்புபோல் அலக்கழிப்போம்
பின்னர் ஒழித்திடுவோம், புதியதோர் உலகம்
செய்வோம் - பாரதிதாசன்[7]

உயர்வு, தாழ்வு என்னும் உணர்ச்சியே நமது
நாட்டில் வளர்ந்து வரும் சாதிச்சண்டை எண்ணம்
நெருப்புக்கு நெய்யாய் இருப்பதால், இவ்வுணர்ச்சி
ஒழிந்து அனைத்துயிர் ஒன்றென்று எண்ணும்
உண்மை அறிவு மக்களிடம் வளர வேண்டும்

-தந்தை பெரியார்[8]

இந்த நாட்டிலே சாதிதான் மக்களுக்குள் பேதத்தை ஏற்படுத்தும் முதல் சாதனம், மக்களின் இரத்தத்திலே கலக்கப்பட்டிருக்கும் கடு விஷம், மனதிலே முடக்கு நோயைப் புகுத்துவிட்டமுறை - எனவேதான் பேதமுற்ற சமுதாயத்தை - சமத்துவத்தை - சமதர்மத்தை நாம் நாடவேண்டுமானால் முதலில் சாதி தொலைந்தாக வேண்டும். - அறிஞர் அண்ணா

இருபதாம் நூற்றாண்டின் அரசியல், சமூக, சமயத்தலைவர்கள் அனைவராலும் அங்கீகரிக்கப்பட்ட சிந்தனையாளர், கோடிக்கணக்கான இந்திய விவசாயிகளின் எண்ணங்களையும், தொழிலாளர்கள், மற்றும் பெண்களின் அடிமைத்தனத்தையும், எண்ணங்களையும், உலகத்திற்கு எடுத்துரைக்கும் ஒரு கம்பீரமான குரலாகவும் விளங்கினார் தந்தை பெரியார். அந்தக் குரலில் தெளிந்த சிந்தனைத் துளிகள் மாபெரும் கடல் போல ஆழ்ந்து அகன்று பொருள் பொதிந்து காணப்படுகின்றன.

தமிழகத்தின் மூத்த கல்வியாளராக விளங்கிய நெ.து. சுந்தரவடிவேலு அவர்கள் தந்தை பெரியார் பற்றி கூறுகிறார்:

பொதுமக்களிடம் உரிமை உணர்வு இல்லாமையைக் கண்டார். தமது சொல்லாலும் எழுத்தாலும் அதை வளர்க்கப்பாடுபட்டார். முழுமூச்சாகப் பாடுபட்டார். அடுத்து சென்னை மாகாணத்தில் நீதிக்கட்சியும் பிற மாகாணங்களில் சிற்சில நிறுவனங்களும் மெல்ல மெல்ல அரசியல் உரிமை பெறுவதே நல்லது என்று குரல் எழும்புவதைக் கண்டார். அதன் காரணத்தை ஆய்ந்தார். அச்சம் என்னும் வேரிலிருந்து அவநம்பிக்கை என்னும் கிளையாக அந்தக்குரல் எழும்புவதை அறிந்தார். ஏன் அச்சம் என்று துருவிப்பார்த்தார்.

சாதிகள் நிறைந்த நாட்டில், ஒருசில பிரிவினரே பெரும் பதவிகளில் நிறைந்து கிடந்தார்கள். சமவாய்ப்பு இல்லாமையும், சம வாய்ப்புகளைப் பற்றி பேசவும் அனுமதியாத நிலையும், பொதுமக்களிடம் அச்சத்தையும் அவநம்பிக்கையையும் வளர்த்திருந்தன. ஆங்கிலேய ஆட்சியின் போதே நமக்குரிய பங்கைக் கொடுக்க மறுப்பவர்கள், நாளை தன்னாட்சி கிடைத்து விட்டால், நம்மை அண்டவும் விடமாட்டார்கள் என்னும் அச்சமும் அவநம்பிக்கையும் படித்த பார்ப்பனரல்லாதாரிடமும், முஸ்லீம்களிடமும் பரவலாக இருந்தன. அவர்கள் அச்சம் அடிப்படை இல்லாதது அல்ல; அவநம்பிக்கை பொருளற்ற பீதியல்ல.[9]

தந்தை பெரியார் அவர்கள் மனித உரிமைகள் குறித்தும் மனித இன முன்னேற்றம் குறித்தும் சிந்தித்த பெருந்தகை. சமூக நீதிகுறித்து தந்தை பெரியார் கழக ஏடான குடியரசு நாளிதழில் பல கட்டுரைகளையும், தலையங்கங்களையும் எழுதினார். அவற்றுள் சில

பொதுவுடைமை வேறு; பொது உரிமைவேறு.
பொதுவுடைமை என்பது சமபங்கு என்பதாகும்;
பொது உரிமை என்பது சம அனுபவம் என்பதாகும்[10]

"நாம் உலக முற்போக்கில் கலந்துகொள்வதற்கும், புதிய ஆராய்ச்சியின் முறைகளை அனுபவித்து ஜனசமூகம் சந்தோஷமும், சவுகரியமுமடைவதற்கும் தகுந்த முறையில் எல்லாப் பொதுத் தொழிற்சாலைகளையும், உற்பத்தி ஸ்தாபனங்களையும், பாங்குகளையும் பொதுமக்களின் உரிமைக்காகச் சமதர்மப் படுத்துவதென்பதும், பிறவி என்பதன் காரணமாகவோ அல்லது நிறம், வகுப்பு, தேசம் போன்ற போலி உரிமைகளின் காரணங்களினாலோ அனுபவிக்கும் சலுகைகளைத் தகர்த்தெறிவதாலும் -

இன்னும் இதுபோன்ற கொள்கைகளாலும் சட்டபூர்வமான முறையில் அமுல் ஏற்படுத்தி சமதர்ம இலட்சியத்தை நிறுவுவது என்கிற ஆரம்ப வேலையில் முனைந்திருப்பதானது ஓர் மகிழ்ச்சிக்குரிய விஷயமேயாகும்."[11]

"சமூகத் துறையில் நமது நிலைமை என்ன? நமது அடிமைத்தனத்தின் கொடுமை எவ்வளவு? இவைகளுக்குக் காரணம் என்ன? - என்பதை நினைத்துப் பார்த்தால் அறிவும் மானமும் உள்ள மனிதன் அரசியல் தன்மையைக் கொஞ்சமும் பெரியதாகக் கருதி இலட்சியம் செய்யமாட்டான் என்றே கருதுகிறேன். . .

"என்னுடைய நாட்டு மனிதன் ஒருவன் தன்னை ஒரு மனிதனாய்க் கருத வேண்டும்; அவன் என்னைப் பிறவியில் சமமாய் நினைக்க வேண்டும் என்று தான் ஆசைப்படுகிறேன். . . நமது மக்கள் 100-க்கு 90-பேர்கள் மூடமக்களாக இருந்து வருகின்றார்கள்; கல்வியறிவு வாசனை இல்லை; இருந்தாலும் அறிவுச் சுதந்திரம் இல்லை. . .

"பொருளாதாரத் துறையில் நாம் அடிமைகளாய் இருக்கின்றோம். நமது நாட்டில் சமூகத்துறையிலேயே, பிறவியிலேயே பொருளாதார உரிமை அனேக மக்களுக்குத் தடுக்கப்பட்டிருக்கின்றது."[12]

"விவசாயத் துறையிலும் ஏராளமான பூமிகள் இருப்பதும், அவற்றிற்கு அனுகூலமாக நீர்வசதிகள் இருப்பதும், ஒவ்வொரு மிராசுதார்கள் 1000 ஏக்கர், பதினாயிரம் ஏக்கர், சிலர் லட்சம் ஏக்கர் நிலங்களை உடையவர்களாக இருப்பதும், விவசாயம் செய்யப்பட வேண்டிய பூமிகள் இன்னும் எவ்வளவோ இருப்பதுமான நாடாக உள்ளது."[13]

## சமதர்ம இயக்கம்

சமதர்ம நோக்கமுள்ள உண்மைத் தொண்டர்களை இரண்டு கைகளையும் நீட்டி மண்டியிட்டு வரவேற்கச் சமதர்ம இயக்கம் காத்திருக்கின்றது. அது உலக மக்கள் எல்லோரையும் பொறுத்த இயக்கம், சாதி, மதம், வருணம், தேசம் என்கின்ற கற்பனை நிலைகளை எல்லாம் தாண்டிய இயக்கம், "எல்லோரும் எப்பொழுதும் மனிதரே" என்று கூவும் இயக்கம். ஏழை என்றும் பணக்காரன் என்றும்; முதலாளி என்றும் தொழிலாளி என்றும்; எஜமான் என்றும் கூலி என்றும்; ஜமீன்தாரன் என்றும் குடியானவன் என்றும் உள்ள சகல வகுப்புக்களையும், வேறுபாடுகளையும் நிர்மூலமாக்கித் தரைமட்டமாக்கும் இயக்கம் மற்றும் குரு என்றும் சிஷ்யன் என்றும், பாதிரி என்றும் முல்லாவென்றும், முன் ஜென்மம், பின் ஜென்மம், கர்ம பலன் என்றும்; அடிமையையும், எஜமானனையும், மேல் சாதிக்காரனையும், கீழ்சாதிக்காரனையும், முதலாளியையும், தொழிலாளியையும், ஏழையையும், பணக்காரனையும், குடிகளையும், மகாத்மாவையும் சாதாரண ஆத்மாவையும், அவனுடைய முன்ஜென்ம கர்மத்தின்படி அல்லது ஈஸ்வரன் தன் கடாட்சப்படி உண்டாக்கினான் என்றும் சொல்லப்படும். அயோக்கியத்தனமான சுயநலங்கொண்ட சோம்பேறிகளின் கற்பனையெல்லாம் வெட்டித் தகர்த்துச் சாம்பலாக்கி எல்லோருக்கும் எல்லாம் சமம், எல்லாம் பொது என்ற நிலைமை உண்டாக்கும் இயக்கம். சாதி, சமய, தேசச் சண்டையற்று உலக மக்கள் யாவரும் தோழர்கள் என்று சாந்தியும், ஒற்றுமையும் அளிக்கும் இயக்கம் இன்று உலகமெங்கும் தோன்றித் தாண்டவமாடும் இயக்கம்.[14]

பகுத்தறிவாளர்களுக்கும் தந்தை பெரியார் அவர்கள் மனித உரிமைகள் குறித்த உண்மைகளைக் கூறத்தவறவில்லை.

"நாம் முதலாவதாக சமுதாயத் துறையில் பகுத்தறிவைச் செலுத்தி இப்போது சிந்திக்க வேண்டும். பிறகு விஞ்ஞான வளர்ச்சிக்கும், அதிசய அற்புதங்களைக் கண்டு பிடிக்கவும் பயன்படுத்திக் கொள்ளலாம்; பயன்படுத்தவும் வேண்டும்.

"முதலில் சமுதாய மாற்றம் ஏற்பட்டால்தான், நாம் மனிதர்களாக ஆவோம். நாம் உண்மையான பகுத்தறிவுவாதிகளாக ஆகிவிடுவோமேயானால், நம் மனிதத் தன்மை வளர்ச்சி மட்டுமல்ல சமுதாய வளர்ச்சியும் ஏற்பட்டுவிடும்; மனித சமுதாயத்திலும் ஒழுக்கம் நாணயம் ஏற்படும். மனிதனுடைய கடமை சமுதாயத் தொண்டுதான். ஒருவருக்கு உதவி செய்வது என்பதனை உயரிய நிலை ஏற்படும்; மனித சமுதாயமே பரிசுத்தமாகும்"[15]

பெரியாரின் சுயமரியாதை இயக்கம் தொடங்கப்படுவதற்கு முன்னரேயே சாதி சங்கங்கள் தோன்றி தம் சாதிகளில் உள்ள புதிய வர்க்கங்களின் நலன்களை சாதியப் போர்வையில் முன் வைத்தன. ஆனால் இவை தம் சாதிக்காரர்களுக்கெனவே இயங்க முடிந்தது. சென்னை மாகாணம் முழுமைக்கும் உரிய பார்ப்பனரல்லாதார் அரசியல் இயக்கமான நீதிக்கட்சி 1921, 1923 ஆகிய ஆண்டுகளின் தேர்தல்களில் வெற்றி வெற்று வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ அரசு ஆணைகள் வெளியிட்டும் சமூக சீர்திருத்தச் சட்டங்களை இயற்றியும் சேவை செய்தது. இதன்பின் 1926-இல் தோல்வியடைந்தது. இந்த இரண்டு வகைப்பட்ட அமைப்புகளும் இருக்கின்ற பொழுதுதான், பெரியாரின் சுயமரியாதை இயக்கமும் தோன்றியது. எல்லாவற்றிற்கும் நோக்கங்கள் ஒன்று, பாதைகள் வேறானவை.

## சுயமரியாதையும் மனித உரிமைகளும்

ஐ.நா. மாமன்றம் சுயமரியதை ஒரு மனித உரிமை என்ற அறிக்கையை வெளியிட்டது. ஆனால் திராவிட

இயக்கம் முதல் சுயமரியாதை மாநாட்டை 1929-ல் நடத்தியது. திருவாளர் பி.டி.ராஜன் அவர்களை எவரும் தீவிரவாதியென்றோ, புரட்சியாளர் என்றோ குற்றஞ்சாட்ட முடியாது. செங்கற்பட்டில் 1929-ஆம் ஆண்டு பிப்ரவரி 17,18 நாட்களில் நடந்த முதல் சுயமரியாதை மாநாட்டில் கொடியேற்றி வைத்து அவர் உரையாற்றியதாவது:

மனிதனுக்கு மனிதன் வேற்றுமையையும் வகுப்புக்கு வகுப்பு பிரிவினையையும், உண்டாக்குகிற ஒரு சமுதாய கட்டுப்பாட்டையும், பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் ஒரு முறையையும் சமூகத்தில் பெரும்பாலோரை ஆடு மாடுகளுக்கும் கேவலமாய் நடத்துவதற்கு ஏதுவான நடைமுறையையும் கோயில்களுக்குள் சாதியின் அடிப்படையில் பக்தர்களில் பலரைக்கூட செல்லக்கூடாதென்று தடுக்கும் கட்டுப்பாட்டையும் பெண்களை தட்டுமுட்டு சாமான்களைப்போல் கருதும் சமுதாய முறையையும் ஒழிப்பதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும்.

எல்லார்க்கும் சமவாய்ப்பு தருதல், ஆண்களும், பெண்களும் சட்டத்தின்முன்பும், வாழ்க்கையிலும் சமமாக வாழவைத்தல், எல்லோர்க்கும் சம வளர்ச்சி வாய்ப்புகளை அளித்தல், குடி மக்களுக்குள் ஒற்றுமையை வளர்த்தல், நாட்டின் இன்பதுன்பங்களில் எல்லோர்க்கும் சமபங்கு இருக்கச் செய்தல், குடிமக்கள் தங்கள் கடமைகள், உரிமைகள், இரண்டையும் உணரவைத்தல் ஆகியவை இயக்கத்தின் நோக்கங்கள் ஆகும். இத்தகைய இயக்கத்திற்காக நெடுநாட்களாக காத்திருந்தோம்.[16]

செங்கற்பட்டு மாநாட்டில் தீண்டாமை ஒழிப்பு முடிவு எடுக்கப்பட்டது. அதேபோன்று ஈரோட்டிலும், தீண்டாமை என்னும் கொடுமை, மனித தர்மத்திற்கு விரோதமென்று

இம்மாநாடு கருதுவதுடன், மக்கள் சமூகத்தில் எந்த வகுப்பாருக்கும் பொது உரிமைகளை மறுக்கும் பழக்க வழக்கங்களை உடனே ஒழிக்க வேண்டுமென்றும் பொது வழிகள், குளங்கள், கிணறுகள், தண்ணீர்ப் பந்தல்கள், கோயில்கள், சத்திரங்கள் முதலிய இடங்களில் சகலருக்கும் சம உரிமை வழங்க வேண்டுமென்றும் இம்மாநாடு முடிவு செய்கிறது என்பதை ஒருமனதாக ஏற்றுக் கொண்டோம்.[17]

பெரியார் பின்னாளில் சாதிய ஒழிப்பைக் கடுமையாகப் பிரச்சாரம் செய்தார். ஆனால் ஏனைய சாதிய சங்கங்களை அவர் புறந்தள்ளவில்லை. அவற்றுள் முழுமையாக இணைந்து விடாமலே அவை குறிப்பிடும் பொருளாதார அரசியல் நலன்களைப் பிரதிபலிக்கக்கூடிய அளவில் தமிழ்நாட்டின் மக்களுடைய ஒருமித்த நலன்களுக்கும், உரிமைகளுக்கும் பாடுபட்டு உழைத்தார். நீதிக்கட்சிக்குரிய அடிப்படை நோக்கங்களில் பெரியாரின் சுயமரியாதை இயக்கம் ஒன்றுபட்டிருப்பினும் அவற்றை அடைவதற்குரிய வழிமுறைகளில் சுயமரியாதை இயக்கம் வேறுபட்டிருந்தது.

"உலகிலுள்ள கொடுமைகள் எல்லாவற்றையும் விட இந்தியாவில் மக்களை மக்கள் தீண்டாமை என்ற இழிவு சம்பந்தமாகச் செய்துவரும் கொடுமையே மிகப் பெரிய கொடுமை. அதற்குச் சமமாக வேறு எந்தக் கொடுமையும், கூறமுடியாததென்பதும், பொது மக்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயமாகும். இந்த நிலையில் தீண்டப்படாதார் தகுந்தபடி கிளர்ச்சி செய்தோ அல்லது தீண்டாமைக்கு ஆதாரமான இந்து மதத்தை விட்டு விடச்செய்தோ தங்களது இழிவுகளையும், கொடுமை களையும் ஒழித்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும்."[18]

பெண்ணுரிமை, தீண்டாமை, சாதி வேறுபாடுகளைக் களைதல், சமய மறுப்பு என்பன போன்றவற்றை இதற்கு முன்னரே தமிழகத்தில் பலர் வலியுறுத்தி உள்ளனர். ஆனால்

இவற்றை பிரச்சார இயக்கத்துக்கு உரிய அம்சங்களாக மாற்றிக் காண்பித்த பெருமை பெரியாருக்கு உண்டு.

எல்லாத் தனிமனிதர்கட்கும் விடுதலை, சமத்துவம், நீதி கிடைக்கும் வகையில் சமூகத்தை புணரமைப்பதே இயக்கத்தின் நோக்கமென அறிவிக்கப்பட்டது.[19]

பெண் கல்வி, விதவை மறுமணம், திருமண வயதை உயர்த்தல், திருமணச் சீர்திருத்தம், சாதிவேறுபாடு களைதல், தீண்டடத்தகார் மேம்பாடு என்பன போன்ற சமூகசீர்திருத்தக் கருத்துக்கள் பிரச்சாரம் செய்யப்பட்டு அவை செயல் உருவங்களும் கொண்டிருந்தன என அறிகிறோம்.

ஐரோப்பிய நாடுகளில் பெரியார் பெற்ற புத்தொளி அவரது இலங்கைப் பேருரையில்காணப்படுகிறது. இலங்கையிலும் மதுரை, தூத்துக்குடி ஆகிய ஊர்களிலும் பெரியார் ஆற்றியவுரைகளின் சாராம்சங்களைக் காண்போம்.

1. பெரும்பாலான மக்கள் தம் அடிப்படைத் தேவைகளைக்கூட நிறைவு செய்ய இயலாததற்குக் காரணங்கள் சாதியம், தேசியம், கடவுள், மதம், தேசாபிமானம் ஆகியவை ஆகும். இந்தக் கவசங்கள் சமூகத்தின் மேற்படியில் உள்ளவர்களுக்குத் தம் நிலையை நிரந்தரப் படுத்தப்பயன்படுகின்றன. இந்தக் கவசங்களை உடைக்க வேண்டும். அப்போதுதான் இன்னல்கள் தீரும்.
2. அரசன் அரசாட்சி என்பவையெல்லாம் மக்களுக்காக அல்ல, செல்வர்களின் செல்வத்தைக் காக்கவே.
3. தேசாபிமானம், தேசியம் என்பது முதலாளிகள் தமக்குள் சட்டைபோட்டுக்கொண்டு தம் முதலைப் பெருக்கிக் கொள்ளும் தந்திரங்கள், உலக ஒற்றுமைக்குத் தடைகள்.
4. ஏற்றத்தாழ்வுகளை இடித்துத் தள்ளி, தரை மட்டமாக்கி அதன்மீது தேசம், மதம், சாதி என்கிற பாகுபாடு இன்றி

மனிதனின் சம உரிமை சமநிலை என்ற கட்டிடத்தைக் கட்டுவோம்.

5. கடவுள், மதம், தேசியம் ஒழிந்த நாடுகளில் பணக்காரத்தன்மை இல்லை.

புரட்சி எரிமலையாக வாழ்ந்த பெரியார், தமது தொண்ணூற்று அய்ந்தாம் வயதில் சென்னையில் தமிழர் சமுதாய இழிவு ஒழிப்பு மாநாட்டைக் கூட்டினார். கருஞ்சட்டைப் படையினர் பெரும் வெள்ளமெனக் கூடினர். தந்தை பெரியாரின் தலைமையில் 8, 9-12-1973இல் நடந்த அம்மாநாடு, எடுத்த முடிவுகள் பல, அவற்றில் சிலவற்றைக் காண்போம்.

"சாதி என்பது எந்த இடத்திலும் இல்லாது செய்யப்பட வேண்டும். நடப்பிலும் இல்லாது பார்த்துக் கொள்ளப்பட வேண்டும். சாதி உணர்ச்சி அறவே மறையும் படி செய்ய வேண்டும். இதனை வெறும் மனமாற்றத்தால் மட்டுமே செய்ய முடியுமென்று தத்துவார்த்தம் பேசி காலம் கடத்தாமல், செயல்பட வேண்டும்."

தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது; அதனை எந்த ரூபத்தில் கடைபிடித்தாலும் அது சட்ட விரோதம் என்று அரசியல் சட்டத்தில் 17-ஆவது விதி கூறுகிறதே! அவ்விதியிலுள்ள தீண்டாமை என்பதற்குப் பதிலாக சாதி என்ற சொல்லை மாற்றி சாதி ஒழிப்பைஅரசியல் சட்டமே பிரகடனப்படுத்துவதாக அமைய வேண்டும்.[20]

இதற்கான கிளர்ச்சி செய்ய முடிவு எடுத்தார் பெரியார் அவர்கள். கிளர்ச்சி நடத்துவதற்கு முன்பே பெரியார் 24.12.1973-இல் மறைந்து விட்டார்.

கோட்பாடு உருவாக்கம் மனித குலத்துக்கே சொந்தமாகும். விலங்கு இனத்திலிருந்து மனித இனத்தைப் பிரித்தறியா நிலையைக் குறிப்பிடும் பெரியார்,

தனிமனிதனிடம் உள்ள பகுத்தறிவே, மனிதனை விலங்கைவிடக் கீழ்மையானவனாக்குகிறது என்கிறார். ஆசை, கவலை, சுயஇன அடிமைப்படுத்துதல், வஞ்சகம், ஏமாற்றம், மூடத்தனம் இன்னும் இவைபோன்ற கெட்ட குணங்கள் மனிதனுக்குப் பகுத்தறிவின் பயனாகவே உடையதாயிருக்கிறது. "மனிதனை மனிதன் உண்ணவும், சுரண்டவும் இழிவுபடுத்தவும், வெறுக்கவும் ஆன காரியங்களைச் செய்கின்றான் (தத்துவ விளக்கம் பக். 25) இதனால் பகுத்தறிவுள்ள மனிதன் உயர்ந்தவன் அல்லன் என்பதோடு பலவிதத்திலும் தாழ்ந்தவன் என்றும் சொல்ல வேண்டியிருக்கிறது.[21]

## வகுப்புவாரி உரிமையும் இடஒதுக்கீடும்

பெரியார் அவர்கள் மக்களின் வாழ்வை தொலை நோக்கோடும் உயர்கண்ணோட்டத்தோடு அணுகினார். 1950-ல் வகுப்புவாரி உரிமைக் கோரிக்கையின் அடையாளமாக தமிழக மாணவர்கள், பள்ளிகளைப் புறக்கனித்தார்கள். கடையடைப்பு நடந்தது. பெரியார் வரலாற்றுப் பின்னணியைச் சொன்னார்: "நம்முடைய மக்கள் எப்படிப் பாமர மக்களாய் அரசியல் என்பதே இன்னது என்று தெரியாதவர்களாய், யார் எதைச் சொன்னாலும், நம்பிக் கொள்வது என்ற தன்மையில் இருப்பது போலவேதான், அன்றைய தினமும் இருந்து வந்தார்கள்." அந்தச் சமயம் ஜஸ்டிஸ் கட்சிக்கு எதிரான தவறான பிரச்சாரத்தால் 1928-ஆம் ஆண்டு தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி தோற்றது. அவ்வமயம் டாக்டர் சுப்பராயன் தலைமையில் முத்தையா முதலியார் அவர்களையும் சேதுரத்தினம் அய்யர் அவர்களையும் சேர்த்து அமைச்சரவை அமைத்தார். இந்த அரசு செய்த "பல நன்மைகளில் மிகவும் முக்கியமானது இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உத்தரவாகும். இந்த உத்தரவை மிக்க தைரியத்தோடு எவருடைய எதிர்ப்பையும் லட்சியம் செய்யாது நிறைவேற்றி

வைத்தவர் நமது தலைவர் முத்தையா முதலியார் அவர்கள் தான் ஆவார்கள்."[22]

"வகுப்புவாரித்திட்டம் இந்திய அரசியல் சட்டமன்றத்திற்குப் புறம்பானது என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்ததினால் மட்டும் கிளர்ச்சி துவங்கவில்லை. நாளைய தினம் சுப்ரீம் கோர்ட்டிலாகட்டும், வகுப்புவாரித் திட்டம் அரசியல் சட்டத்திற்கு விரோதமானதல்ல என்று தீர்ப்புச் செய்யப்பட்டாலும் கூட நாம் போராடித்தான் ஆக வேண்டும். ஏனென்றால், இன்றைய தினம் இருக்கின்ற வகுப்புவாரி உத்தரவும் சரியானபடி வகுப்புகளின் எண்ணிக்கைக்குத் தகுந்தபடி விகிதாச்சாரம் அளிக்கக்கூடிய திட்டமாக இல்லை"[23]

"கல்வித்துறையிலும் மேல்சாதியினர் அனுபவிப்பது இவர்களுடைய பங்குக்கு மேற்பட்டுத்தான் அனுபவித்து வருகின்றார்கள். இந்தப் புள்ளி விவரங்களை காந்தியடிகளும் ஒத்துக் கொண்டுள்ளார். உயர்சாதியினர் காந்தியாரிடத்தில் சென்று "எங்களுக்கு கல்லூரிகளில் இடமளிக்கப்படுவதில்லை என்று புகார் செய்த போது, காந்தியார் கூறினார். நீங்கள்தான் எல்லோரும் படித்து விட்டீர்களே! ஆகவே கடவுளுக்குத் தொண்டு செய்யும் வேலையில் கொஞ்சநாள் ஈடுபடுங்கள். படிக்காத மக்களாகிய பார்ப்பனரல்லாதார் தான் படிக்கட்டுமே"[24] என்றார்.

"தோழர்களே! நான் கூறுகிறேன்; ஒவ்வொரு வகுப்பாருக்கும் இத்தனை உத்தியோகம்தான் என்று வரையறுத்து விட வேண்டும். அந்த எண்ணிக்கைக்கு மேற்பட்டு எவராவது எந்த வகுப்பினராவது ஒரு ஆள் அதிகமாக உத்தியோகம் பார்த்தால், அவர்மீது. . . ஆக்கிரமிப்பு குற்றம் சாட்டப்படும். அவனுக்கு வேலை கொடுத்தவனுக்கு நாணயக் குறைவுக் குற்றம் சாட்டியும்

அதற்கு ஆன தண்டனை கொடுக்க வேண்டும். அப்போதுதான் அனைவரும் எல்லா வகுப்பினரும் சம நிலை எய்த முடியும்".

"இல்லையேல், மேலே இருப்பவர்கள் இன்னும் உயர உயரப் போய்க்கொண்டே இருக்க தாழ்ந்த நிலையில், சமுதாயத்தின் அடித்தளத்திலே வேதனையுறுவோர் மேலும் மேலும் தாழ்ந்து அழிந்து போக வேண்டிய நிலைமைதான ஏற்படும்."[25]

அரசியல் சிறுபான்மை வகுப்பு பாதுகாப்பு என்பது அரசியல் சம்பந்தப்பட்ட அதாவது படிப்பிலும் - உத்யோகம் பதவி ஆகிவற்றிலும், யார் குறைந்த விகித எண்ணிக்கை உடைய மக்களாக-வகுப்பாக-ஜாதியாக இருக்கிறார்களோ அவர்களைத்தான் (மைனாரிட்டி) சிறுபான்மை வகுப்பு என்று கூற வேண்டும் என்பதுடன் இந்த (மைனாரிட்டிக்குத்தான்) சிறு பான்மையினருக்க்குத்தான் பாதுகாப்பும், சலுகையும் அளிக்க வேண்டும் என பெரியார் வலியுறுத்தினார்கள்.

இடஒதுக்கீட்டிற்கான பரிந்துரைகளை பல்வேறு ஆணையங்களின் பரிந்துரைகளை தமிழக அரசு நடைமுறைப்படுத்தியது. அவற்றிற்கு மேலாக மண்டல் கமினின் பரிந்துரைகளின்படி முன்னாள் பாரதப் பிரதமர் வி.பி.சிங் அவர்களின் ஆணையின்படி 27% சதவீதம் மத்திய அரசின் பணிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் ஒதுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்தியாவின் பல பகுதிகளில் ஆதரவும் எதிர்ப்பும் கிளம்பியது.

இப்படிப்பட்ட சூழலில், அஞ்சா நெஞ்சத்துடன் சீரிய சிந்தனையுடன் இப்பிரச்சனையை அணுகி இடஒதுக்கீடுகளை நெறிப்படுத்த முயன்றிருக்கிறது இந்திய உச்சநீதிமன்றம். நீதிபதி சபர்வால், நீதிபதி கே.ஜி. பாலகிருஷ்ணன், நீதிபதி கபாடியா, நீதிபதி தாக்கர், நீதிபதி பாலசுப்பிரமணியன் ஆகிய

ஐந்து நீதிபதிகள் அடங்கிய பெஞ்ச், பணி நியமனம் மற்றும் பணி உயர்வுக்கான இட ஒதுக்கீடு ஐம்பது சதவிகிதத்துக்குள் அமைய வேண்டும் என்று உச்சவரம்பு விதித்ததோடு வசதி படைத்த, முன்னேறிய குடும்பத்தினருக்கு ஒதுக்கீட்டுச் சலுகை வழங்கலாகாது என்றும் ஆணித்தரமாகத்தீர்ப்பு கூறியது.[26]

பலர் இந்த ஆணையை வரவேற்றுள்ளனர். பலர் இதனை எதிர்த்தும் குரல் கொடுத்துள்ளனர். எதிர்ப்புக்கான காரணம் மிகவும் பலவீனமாக இருக்கின்றன.

சமூகரீதியாக ஒடுக்கப்பட்டவர்களுக்காகத்தான் ஒதுக்கீடு என்பதே ஏற்பட்டிருக்கிறது. ஆகவே பொருளாதார அடிப்படை என்பது ஒதுக்கீட்டை நிர்ணயிக்கலாகாது என்கின்றனர் எதிர்ப்பாளர்கள்.

அப்படியானால் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரிடையேயும் முன்னேறிவிட்ட பிரிவினருக்கு மட்டுமே இடஒதுக்கீட்டினால் ஆதாயம் விளையும். இந்த அபாயத்தைக் களையத்தான் உச்சநீதிமன்றம் இந்த ஆணையைப் பிறப்பித்துள்ளது.[27]

இடஒதுக்கீடு அறுபதாண்டுகளாக அமலில் இருந்தும் அதன் விளைவாக ஒரு பயனும் அடையாத பிறப்படுத்தப்பட்ட வகுப்பினரும் சீர் மரபினரும் இன்னமும் ஏராளமாக இருக்கின்றனர். இந்திய சமூகத்தில் தந்தை பெரியார், மொத்தத்தில் திராவிட இயக்கத்தினர், ஏற்றத்தாழ்வுகளை “கொடுமை” என்று இனம் கண்டு மாற்ற போராடினர். அறுபதாண்டுகளாக நடைமுறையில் இருக்கும் ஒதுக்கீட்டால் இன்னமும் பயனடையாதவர்களைக் குறித்து உச்ச நீதிமன்றம் கருத்தில் எடுத்துக் கொண்டுள்ளது. பிற்படுத்தப்பட்டவர்கள் யார் என்பது குறித்து ஆரோக்கியமான மறுபரிசீலனையை நிகழ்த்தியிருக்கிறது.

## கோயில்களில் சமூகநீதி

தமிழ்நாட்டில் சுமார் 35,000 கோயில்கள் உள்ளன. இந்தக் கோயில்களில் ஆதி சைவர்கள், பிராமணர்கள், பண்டாரங்கள், பூசாரிகள் ஆகியோர் அர்ச்சகர்களாக இருக்கிறார்கள்.

தமிழகத்தில் அரசியல் என்பது மிகப் பரந்துபட்ட பொருளில் பயன்படுத்தப்படுகிறது. சமூகத்தை ஒரு குறிப்பிட்ட திசையில் நகர்த்த முயல்வது, நாம் எப்படிப்பட்ட சமூகத்தை அமைத்திடல் வேண்டும் என்பது பற்றிய சிந்தனையை உடையது திராவிட இயக்கம். அத்தகைய சிந்தனைகளை மனத்தில் கொண்டு, தகுதியுள்ள ஒரு சிலர் தோன்றி அவர் மனத்துட்புகுந்து அந்தச் சீர்திருத்தம் வெளித் தோன்றுகிறது. அவற்றில் ஒன்றுதான் கோயில்களில் சமூகச் சீர்திருத்தமும் மனித உரிமைகளும் ஆகும்.

1970-ஆம் ஆண்டு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதியின் ஆட்சியில் தமிழக அரசு அனைத்துத் தரப்பினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டத்தைக் கொண்டு வந்தது. இதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. ஐந்து நீதிபதிகள் கொண்ட பெஞ்ச் “மத சம்பந்தப்பட்ட விஷயங்களில் தலையிட அரசுக்குச் சிறிதும் உரிமையில்லை. ஆகம விதிகளின் கீழ்கட்டுப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் கோயில்களில் பாரம்பரியமாக இருக்கும் நடைமுறையை மாற்றக்கூடாது” என்று தீர்ப்பு வழங்கியது. ஆயினும் 2002-ல் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின்படி, தகுதி இருப்பின் யார் வேண்டுமானாலும் அர்ச்சகர் ஆகலாம், கேரள கோயில்களில் ஆகம நடைமுறை கடைப்பிடிக்கப்படுவதில்லை. அங்கே வைதீக முறையில்தான் வழிபாடு நடைபெறுகிறது.

“பெரியாரின் நெஞ்சில் தைத்த முள் எடுக்கப்பட்டு விட்டது” என்று சொன்னார் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி. ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு நடந்த

முதல் அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளில் ஒன்று "எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் பயிற்சி, தகுதி இருக்குமேயானால் அவர்கள் இந்து அறநிலையத் துறையின் கீழ் வரும் கோயில்களில் அர்ச்சகர்களாக நியமிக்கப்படுவார்கள்"[28] என்பது அரசின் இந்த முடிவை அனைத்துக் கட்சியினரும் வரவேற்று அறிக்கை வெளியிட்டனர்.

"இந்து மதத்தின் அனைத்துப் பிரிவினரும் ஒன்று என்று சொல்லிவிட்டு அர்ச்சகர்கள் பொறுப்புக்கு மட்டும் பெரும்பான்மையினரை நிராகரிப்பது எந்த வகையில் நியாயம்? குறிப்பிட்ட பிரிவினர்தான் ஆதியில் இருந்து கோயிலில் அர்ச்சகராக இருந்தனர் என்பது சரியான வாதம் அல்ல. ராஜராஜன் கட்டிய தஞ்சை பெரிய கோயிலில் லிங்கத்தை பிரதிஷ்டை செய்தவர் கருவூர்த் தேவர்தானே. அதே போல் 16-ம் நூற்றாண்டுவரை பழனி கோயிலில் பூஜை செய்தவர்கள் பண்டாரம் பிரிவினர்தான். தாழ்த்தப்பட்டோர் என்று கருதப்பட்ட முடிதிருத்தும் மருத்துவ குலத்தோரின் மனைவிகள்தான் அன்று பிரசவம் பார்க்கும் மருத்துவச்சிகள். அந்தத்தொழிலை இன்று படித்துவிட்டு பல்வேறு வகுப்பினர் எடுத்துக் கொள்ளவில்லையா? கோயில்களில் அர்ச்சகர் வருமானம் மிகக் குறைவு. பின்னர் அதை ஏன் விட்டுத்தர மறுக்கிறார்கள்? அந்தப் பொறுப்பு கொடுக்கும் சமூக உயர்வுதான் அதற்குக் காரணம். ராமானுஜர் மனோபாவம் எல்லோருக்கும் வரவேண்டும். அப்போதுதான் மதத்தைப் பாதுகாக்க நினைப்பவர்களின் எண்ணம் ஈடேறும். . . இதை நிறைவேற்ற மன உறுதி வேண்டும்"[29] என்றார் தமிழர் தேசிய இயக்கத்தைச் சேர்ந்த பழ.நெடுமாறன்.

## அறிஞர் அண்ணாவின் மனித உரிமைகள் பணியும் சிந்தனைகளும்

பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டு விழா நடைபெறும் காலத்தில் அண்ணா அவர்கள் மனித உரிமைகள்

குறித்து சிந்தித்தது இன்றும் பயனுடையதாகும். மனித உரிமைகளுக்காகப் போராடுவது என்பது ஒரு தொடர்கதையாகும். மக்களாட்சி நாட்டில் எவ்வாறு மனித உரிமைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன அல்லது நசுக்கப்படுகின்றன என்பதை உணர்ந்து தம் வாழ்நாள் முழுவதும் தமிழர்களின் உரிமைக்காகப் போராடியவர் அந்தப் போராட்டம் முற்றுப் பெறுவதில்லை என்பதை அண்ணா எடுத்துக் காட்டுகிறார்.

"பொறுத்தார் பூமியாள்வார்; கல்வி எவரையும் உயர்த்தும்; காலம் மெள்ள மெள்ள, ஆனால் உறுதியாக மாறித்தீரும் என்று அறிவுரைகள் அளிக்கப்படுகின்றன. தாழ்ந்த இனம் அல்லது தாழ்த்தப்பட்ட இனம்; தத்தளிக்கும் சமூகம் என்ற நிலை இருப்பினும், அதிலேயும் நல்முத்துக்கள் தோன்றிடின் மதிப்பளித்தே தீருவர் என்று பேசி மகிழ்வர். தீவிரமான மாறுதலைத் திட்டமிட்டு ஏற்படுத்தத் துணிவற்றவர்கள், மனமற்றவர்கள், வழி அறியாதவர்கள், தமது வாதத்தை வலுயுள்ளதாக்கிட, உழைப்பால் உயர்ந்த உத்தமர்களின் கதைகளை ஆதாரமாகக் கூறுவர். அவ்வித மணிகள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் தோன்றாமலில்லை. இந்த நிபுணன் நீக்ரோ இனமா? இந்த நிபுணன் தீண்டத்தகாதவனா? இந்த நிபுணன் பிற்படுத்தப்பட்டவனா?"[30] என்றெல்லாம் வினாக்களை எழுப்பி சிந்திக்க வைத்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். மனித உரிமைகள் குறித்த அண்ணாவின் சிந்தனைகள் இன்றைய மனித உரிமைகள் பிரச்சனைக்கு பொருத்தமாக உள்ளன.

மனித உரிமைக் கல்வி என்பது என்ன? அது வாழ்க்கைக் கல்வியல்லவா?

"மாணவர்கள் இளைஞர்கள் உணாச்சி கொந்தளிக்கும் பருவத்தினரல்லவா, கல்லூரி மாணவர்கள், வரலாற்று

நிகழ்ச்சிகளையும், மக்கள் மனதிலே தோன்றிய எழுச்சிகளையும், உரிமைப்போர் நிகழ்ச்சிகளையும் விடுதலை வீரர்களின் கதைகளையும், சமத்துவம், சகோதரத்தும் போன்ற இலட்சியங்களின் வரலாறுகளையும் படித்துப் படித்து, ஆர்வம் ததும்பும் உள்ளத்தினரல்லவா?"[31] ஆகவே, கல்லூரிகள், விடுதலைக்கு இளைஞர்களைத் தயாரிக்கும் பாசறைகளாகத்தானே இருக்க முடியும். எத்தனையோ கொடுங்கோலர்கள் வீழ்த்தப்பட்ட வரலாறுகளைப் படித்தது வீண்போகுமா? எத்தனையோ வல்லமையுடன் அமைக்கப்பட்ட பேரரசுகள் மக்களில் ஒரு பிரிவினரைத் தாழ்வாகவும், மிருகத்தனமாகவும் நடத்திய காரணத்தால், சமூகத்தில் வெடிப்புகள் தோன்றி, புரட்சிகள் புயலெனக் கிளம்பி, அதன் வேகத்தாலே அழிக்கப்பட்டுப் போயின என்ற வரலாற்று உண்மைகள் இதயத்தில் பதிந்துள்ளனவே; அத்தகையவர்கள் அடிமைத்தளைகள் தன்னாலே விலகிடா, உடைத்தெறியப்பட வேண்டும் என்ற உண்மையினைப் பெறாமலா இருந்திருப்பர்"[32] என வினா எழுப்பினார் அண்ணா.

நீக்ரோக்களின் உரிமைக் கிளர்ச்சியை 1960ஆம் ஆண்டு வெற்றிகரமாக நடத்திச் சென்ற நீக்ரோ தலைவர் மார்ட்டின் லூதர் கிங் என்பார். "ஒருமுறை, அமெரிக்கக் குடிஅரசுத் தலைவராக இருந்து மறைந்த மாவீரன், அவனிபுகழ் கென்னடியிடம் தொலைபேசி மூலம் கேட்டாராம். குடிஅரசுத் தலைவர் அவர்களே! நிறபேதம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதிலே அக்கறை காட்டும் தாங்கள் வீற்றிருக்கும் மாளிகையின் பெயரே, வெள்ளை மாளிகை என்று இருக்கிறதே! பொருத்தமாக இல்லையே" என்று கென்னடி "அது நெடுநாட்களாக இருந்து வரும் பெயர்; வேறு பொருள் கொள்ளத் தேவையில்லை" என்று பதிலளித்தாராம்.[33]

“ஆதிக்கம் செலுத்தும் போக்கு ஒவ்வோர் நாட்டில் ஒவ்வோர் விதமான வடிவம் கொள்ளுகிறது; கருவியைத்தேடிப் பெற்றுக் கொள்கிறது. வடிவமும் கருவியும் வகையிலே பலவாக இருப்பினும் நோக்கம் மட்டும் ஒன்று தான்; எளியோர் தமை வலியோர் சிலர் வதை புரிவது தான், வலியோராகச் சிலர் இருப்பதற்குக் காரணம் பலப்பல; கட்டத்துக்குக் கட்டம், நாட்டுக்கு நாடு இக்காரணம் வேறு வேறாக இருந்திடும்.

“இனம், மதம், மொழி, நிறம், பணம் என்பதை ஒவ்வொன்றும் ஒவ்வோர் காலத்தில், ஒவ்வோர் நாட்டில் ஆதிக்கக் கருவியாகப் பயன்பட்டு வருவதைக் காண்கிறோம். இந்த ஆதிக்கத்தின் எந்த வடிவத்தை ஆராய்ந்திடினும், ஒரு பொதுவான பாடம் கிடைத்திடும். அதற்காகவே “நிறம்” காரணமாகப் புகுத்தப்பட்டுள்ள ஆதிக்கத்தைக் குறித்துச் சிறிதளவு விரிவாகவே விளக்கிக் கொண்டு வருகிறேன். நிறம் என்பது கருவியாக அமைந்திருப்பதுபோல், இனம், மதம், பணம் என்பவைகளிலே ஏதேனும் ஒன்று கருவியாக அமைந்திடினும் கொடுமையின் அளவு குறைவானதாக இருந்திடாது. எனவேதான், எங்கோ அமெரிக்காவில் கப்பிக்கொண்டுள்ள நிறவெறி பற்றிய விவரங்களைத் தெரிந்துகொள்வது வேறுவிதமான கருவியின் துணையுடன் இருந்து வரும் ஆதிக்கம்பற்றி எண்ணிடவும் பாடம் பெற்றிடவும் வழி காட்டும் என்ற எண்ணத்துடன் இத்தனை விரிவாக எழுதிக் கொண்டிருக்கிறேன். பிரச்சினை எங்கோ நெடுந்தொலைவில் இருப்பது என்றோ; நமக்குச் சம்பந்தமில்லாதது என்றோ எண்ணிக்கொண்டு, பெற வேண்டிய பாடத்தினை இழந்து விடக்கூடாது.

“மதவெறி குறையவில்லை. ஜாதிப்பித்தம் போகவில்லை. குலச்சண்டை ஒழியவில்லை என்று பிறநாடுகள் குறித்து மிகக் கேவலமாகப் பேசும் வாடிக்கை

பொதுவாக மேனாட்டினருக்கு உண்டு. மேனாட்டினரில் புரட்சிக் கருத்துக்களையும் புதுமுறை அரசியலையும் மேற்கொண்டவர்கள் அமெரிக்கர்கள் "இந்த இயல்பு, அமெரிக்கர் மட்டுமே பெற்றுள்ளது என்று எண்ணிக்கொள்ளக் கூடாது.[34]

"ஆதிக்கத்தை எதிர்த்து நின்று ஒழித்தவர்கள். கொடுமைகளைத் தாக்கித் தகர்த்தவர்கள், பிறகு தாமே ஆதிக்கம் செலுத்துவோராகவும், கொடுமையாளர்களாகவும் மாறிவிடுகின்றனர் எப்போது? தங்கள் நிலை, வலுவாகிவிட்டது என்ற துணிவு பிறந்ததும், இதற்கான சான்றுகள் வரலாற்றுச் சுவடிகளில் நிரம்ப உள்ளன. சுவடிகளைக்கூடப் புரட்டிக் கொண்டிருக்கத் தேவையில்லை. நம்மைச் சுற்றிலும்கூட அந்த நிலைமை இருந்திடக் காண்கிறோம்.

இந்தியாவில் மக்களாட்சி நடைபெறுகிறது. எல்லோரும் இதை ஒப்புக்கொள்வார்கள். தேர்தல்கள் நடக்கின்றன. ஆட்சிகள் மாறுகின்றன. பத்திரிகைகள் சுதந்திரமாக செயல்படுகின்றன. ஆகவே இந்தியாவில் மக்களாட்சி நடைபெறுகிறது என்போம்.

"பேச்சுச் சுதந்திரம் எழுத்துச் சுதந்திரம், கூடிக்குறைகளை எடுத்துக்கூறும் சுதந்திரம், கிளர்ச்சிச் சுதந்திரம், என்று மேடை அதிரப் பேசியவர்கள் ஆர்வம் கொந்தளிக்கப் பேசியவர்கள், ஆர்வத்தை மற்றவர்களுக்கும் ஊட்டியவர்கள்தான் "ஆளும்" கட்சியினர். ஆனால், அவர்களின் இன்றைய போக்கு எந்த ஆதிக்கத்தையும் கொடுமையையும் எழுச்சியுடன் எதிர்த்து நின்றனரோ, அதே விதமான ஆதிக்கத்தையும் கொடுமையையும் கூசாமல், தட்டுத்தடங்கல் இல்லாமல் செய்திடக் காண்கின்றோமே? இந்த அறுபது ஆண்டுகளில் அடக்குமுறையை எதிர்த்து

நின்ற இந்த ஆற்றல் மிக்கோர், தடைச் சட்டங்களைத் தூளாக்கிய இந்தத்தீரர்கள், சிறைச்சாலை என்ன செய்யும் என்று சிந்து பாடிய இந்தச் சீலர்கள், வெள்ளையராட்சியிலே வீசப்பட்ட எந்த அடக்குமுறைக் கருவியைவிட்டு விட்டார்கள்? அதே குண்டாந்தடி; புதிதாகப் பித்தளைப்பூண் போட்டிருக்கிறார்கள். அதே துப்பாக்கிச் சனியன்; மாணவர்களின் மார்பினைக்கூடப் பதம்பார்க்கிறது; அதே குண்டுகள்; முன்பு விரட்டுவதற்கு; இப்போது சாகடிப்பதற்கு; அதே சிறை, அதே 144; அதேவிதமான அவசரச் சட்டங்கள், ஆள்தூக்கிச் சட்டங்கள், ஊரடங்குச் சட்டங்கள், உடமையைப் பறிக்கும் சட்டங்கள்; நாடுகடத்தும் சட்டங்கள்; நாக்கறுப்புச் சட்டங்கள்!! ஒன்றுகூட விட்டுவிடவில்லை; ஆங்கில ஏகாதிபத்தியம் தனது பாசறையில் வைத்திருந்த கருவிகள் அனைத்தையும் இன்று பயன்படுத்துகின்றனர். உரிமை குரலை அடக்கிட; கிளர்ச்சிகளை ஒழித்திட!! வெள்ளையர்கள் கொண்டிடாத அளவு துணிவுடன், நம்பிக்கையுடன்!! ஆயினும் இவர்களேதான் ஐம்பதாண்டுகளுக்கு மேலாக ஆர்ப்பரித்தனர். அடக்குமுறை ஒழிக! அநியாயச் சட்டங்கள் ஒழிக! என்று[35]

"எனவேதான் தம்பி! உரிமைக்காகப் போராடுவது, ஒரு தொடர் கதையாக, முடிவுபெறாத நீண்ட நெடுங்கதையாக இருந்து வருகிறது. விழிப்புடன் இருந்து வந்தாலன்றி, எழுச்சியுடன் இருந்து வந்தாலன்றி ஆதிக்கம் ஓசைப்படாமல் மறுபடியும் இடம் பிடித்துக் கொண்டுவிடும்! கதிரவன் ஒளி நித்தநித்தம் தேவைப்படுகிறது அல்லவா, கப்பிக்கொண்டுள்ள இருளை நீக்கிட அதுபோல! உரிமை வாழ்வினைப் பெற்றிட மனிதகுலம் ஓய்வின்றி உழைத்தபடி இருந்தாக வேண்டி வருகிறது.

"அமெரிக்காவில் குடியேறியவர்கள், கொடுங்கோலர்களின் வழிவழி வந்தவர்கள் அல்லர்;

கொடுங்கோலை எதிர்த்து நின்றவர்கள். எனினும் அவர்கள் தங்களைக் கொடுங்கோலர்களிடமிருந்து விடுவித்துக் கொண்டான பிறகு, தாமே கொடுமைகளைப் புரியத் தொடங்கி விட்டனர்; அந்தக் கொடுமைகளை எதிர்த்து நிற்பவர்களை அழித்தொழிக்க, தமது வலுவினைப் பயன்படுத்தி வந்தனர். அந்தக் கொடுமையிலே ஒன்றுதான் நிறவெறி."[36]

மக்கள் நலனைக் காக்கும் அரசு, மனித உரிமைகளைக் காக்கும் அரசு, எவ்வாறு இருக்க வேண்டும். சமூகம் எத்தகையதாக இருக்க வேண்டும் என மிக எளிய முறையில் தெளிவாக்குகிறார் அறிஞர் அண்ணா.

"பொறாமை! வஞ்சகம்! பொல்லாங்கு! பகை! சூது! சூழ்ச்சி! மாச்சரியம்! இவை நெளியும் நிலையில் நாடு இருந்திடின், அந்த நாட்டிலே மாளிகை உண்டு மந்தகாச வாழ்வு உண்டு என்று கூறி இருந்திட முடியுமா!

"நீதி! நேர்மை! பண்பு! அறம்! அறிவு! இவைகளற்ற நிலையில் ஒருநாடு இருந்திடின். . . அங்கு கோடி கோடியாகப் பணம் குவிந்திருந்திடினும், வாழ்விலே ஒரு நிம்மதி கிடைத்திடுமா!"

"நல்ல நாடு! என்பதைக் காட்டிலும் மேலான செல்வம் நிலையான செல்வம் வேறு எதுவும் இல்லே."

"நல்ல நாடு! ஒருவரை ஒருவர் தாழ்த்திடும் இழித்தன்மை இல்லாத நாடு! நிறம், மதம், மொழி, குலம், எனும் எதன் காரணமாகவும், பேதமும் பிளவும் ஏற்படாமல், எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் ஓர் நிறை என்ற முறை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இடமே நல்ல நாடு!"

"என் மக்கள் வாழ்வதற்காக அத்தகைய நல்ல நாடாக இந்நாட்டை ஆக்கிட உழைப்பேன்; இதனைக் காட்டிலும் நான் என் பிள்ளைகளுக்குச் செய்யக்கூடிய நன்மை-

தரக்கூடிய செல்வம்-விட்டுச் செல்லக்கூடிய வரலாறு என்ன இருக்க முடியும்."

"செல்வம் சேர்த்துக் கொடுத்திடலாம்-எதற்கு அது பயன்பட வேண்டும்? நிறவெறி தலைக்கேறி ஆட்டமாடுகிறார்களே அதற்காகவா! ஆளப்பிறந்த இனம், அடிமைகளை, அடக்கித் திரியும் இனம் என்ற செருக்கை மூட்டிவிடவா செல்வம்!!"

"நாம் வாழும் நாட்டில் நாம் காணும் கொடுமைகளில் அநீதிகளில் ஒரு சிறு அளவினையாகிலும் நாம் நமது அறிவாற்றலால், உழைப்பால், தன்னல மறுப்பால், போக்கிடுவதுதான் நாம் முதல் கடமையாகக் கொண்டிடுவது என்ற நெறி, நடைமுறையாகிடுமானால், தம்பி! உலகு புன்னகைப் பூங்காவாக அல்லவா வடிவம் கொள்ளும்."

"ஒரு தலைமுறை மற்றோர் தலைமுறைக்காக, தனித்தனி இல்லங்கள் செல்வம் என்ற இன்றைய முறையைக் காட்டிலும், ஒரு தலைமுறை தன் காலத்தில் காணப்படும் கேட்டினைக் களைந்தெறிந்து தன் நாட்டை தான் காண்பதைக் காட்டிலும் சிறிதளவேனும் நல்ல நாடு ஆக்கி அளித்து விட்டுச் சென்றிடவேண்டும் என்ற முறை எத்துனை நேர்ததியானது.

## மனிதன் என்றால் என்ன பொருள்?

"மனிதன்! மனிதன்! என்று எல்லோருந்தான் பேசுகிறோம், என்ன எண்ணிக்கொண்டு பேசுகிறோம்? என்ன பொருள் தந்து பேசுகிறோம்? எண்ணிப் பார்த்திடும்போது தான் விந்தையான பல உண்மைகள் தமக்குத் தோன்றிடும்."

"நானும் மனிதன்தான்!"

அவன் ஒரு மனிதனா? எல்லோரும் மனிதர்கள்
தானய்யா!

மனிதனுக்கு மனிதன் என்ன வித்தியாசம்,

மனிதனாகப் பிறந்துவிட்டால் போதுமா!

அவன் மனிதன் அல்லய்யா....!

மனிதன் செய்கிற காரியமா இது!

இப்படிப் பல்வேறு நிலைகளில் பல்வேறு முறையாகப் பேசுகிறோம்.

மனிதன் என்றால் என்ன பொருள்? இது பற்றியே வழக்கு மன்றத்தில் விளக்கம் அளிக்கப்படுகிறது.

"பல்வேறு சிந்தனையாளர்கள் தந்துள்ள விளக்கங்களை எடுத்துக் காட்டி விட்டு, இறுதியாகக் கூறுகிறார்."[37]

"இதைக்கூடச் சொல்லவேண்டுமா என்று கேட்கத் தோன்றும், தம்பி! ஆனால் நீக்ரோக்களை மிருகம் என்று கூட அல்ல, உடைமை என்றே அமெரிக்க நீதிமன்றங்கள் கூறியுள்ளன என்பதை மறந்துவிடக்கூடாது."

"இங்கு மட்டும் என்ன! ஜாதியால், பொருளாதார நிலையால் மூடப்பட்டு விடும் வெறுப்பும் கேவல உணர்ச்சியும் ஆட்டிப் படைக்கும் நிலையில் உள்ளவர்கள், தம்மிலும் தாழ்ந்தவர்கள் என்று கருதப்படுபவர்களை மனிதர்களாகவா நடத்துகிறார்கள். மிருகமா! மிருகத்தை விடக் கேவலமாக"

"டாக்டர் அம்பேத்கார் ஒருமுறை கூறினார் ஒரு உயர் ஜாதி இந்து தன்னுடைய நாயிடம் பரிவு காட்டித் தொட்டு விளையாடுவான். ஒரு தாழ்த்தப்பட்டவனைத் தொடமாட்டான் என்று."

"மனிதன் - மிருகம் - இவை பற்றிய விளக்கம் கூறுவதற்காகப் பொறுத்திட வேண்டுகிறேன்; ஆனால் இந்த வழக்கு நடைபெறும் போது இந்த விளக்கத்தை மறந்து விடாதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்."

"நான் ஒரு மனிதனுக்காக வாதாடுகிறேன்-மனிதன் மிருகமல்ல என்ற தூய கருத்துக்காக வாதாடுகிறேன்"[38]

## சாதியும் தீண்டாமையும்

தனி மனிதனையும் சமுதாய அமைப்பையும் திருத்தி உயர்த்தி, உருமாற்ற இயலும் அளவுக்குத்தான் ஒரு நாட்டின் சமயம் உண்மையானதாக இருக்க முடியும்; உயிருள்ளதாக இருக்க முடியும். நம் சமூக வாழ்விலும் சமய வாழ்விலும் இருள் கவ்வியுள்ள இடங்களில் மனித உரிமைகள் என்ற ஒளி பரவச் செய்ய வேண்டும். மனித இனம் அனைத்தும் ஒன்று,

"பிறப்பொக்கும் எவ்வுயிர்க்கும்" என்ற திருக்குறள் அடிப்படை உண்மையைப் போதிக்கின்றது. மனிதர் அனைவரும் சகோதரர்கள் மனிதப் பிறவி அளவிடற்கரிய அருமையும் மதிப்பும் கொண்டதென்றும் அதற்கு உரிய மரியாதை செலுத்தி, குறிப்பாகத் தாழ்வுற்றவர்களிடம் அன்பான பரிவுகாட்ட வேண்டுமென்றும், எல்லா சமயங்களும் போதிக்கின்றன. ஆழமான புண்களைத் தாங்கி நிற்கும் நமது மக்கள் நமது ஆழ்ந்த கண்ணியத்திற்கும் ஆதரவுக்கும் உரியவர்கள்.

நம் நடத்தைக்கான நெறியம் நியதியும் தான் அறம் எனப்படுகிறது.

மன் உயிர் ஓம்பி ஆள்வாற்கு இல் என்ப
தன் உயிர் அஞ்சும் வினை

- குறள் "அருளுடைமை" 244

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை

- குறள் "கொல்லாமை" 322

சமூகத்தை ஒன்று சேர்த்துப் பிணைப்பதுதான் அறம் எனப்படும். சமூகத்தை சீரழிக்கும் அமைப்புகளும் முறைகளும் - அவை எவ்வுளவு தொன்மை

வாய்ந்தவையாய் இருந்தாலும் - அகற்றப்பட வேண்டியவை. பழமையின் உண்மையான அறக்கோட்பாடுகளை செத்த சுமையிலிருந்து நாம் தனியாகப் பிரிக்க வேண்டும்.

சாதி அமைப்பு உருவானதற்கு வரலாற்று அடிப்படையில் என்ன ஆதாரம் இருந்த போதிலும் தனிமனிதன், குடிமகன் ஆண் பெண் ஒவ்வொருவரும் கண்ணியத்தோடும், சுயமரியாதையோடும் வாழ உரிமையுடையவர்கள் என்பதை நமது அரசியல் அமைப்பு வலுவாக கூறுகிறது. மனிதனின் கண்ணியத்தை இழிவுபடுத்தும் வகையில்தான் சாதி முறை இயங்கியுள்ளது. நாம் மனிதரைப் பிரிக்கக் கற்சுவர்களை எழுப்பி, ஒரு சிலர் உயர்ந்தோர் என்று ஏத்திப், பிறர் தாழ்ந்தவர்கள் என்று பழித்தோம். மக்கள் மனத்தை முடக்கி முடமாக்கி வாழ்க்கையைக் குறுக்கி ஒடுக்கினோம். சம் சமூகத்தின் விதிகளும் வேலிகளும் தடைகளும் மனித கண்ணியத்தையும் சுயமரியாதையையும் செல்லரித்துத் தகர்த்துள்ளன. நம் மூட நம்பிக்கைகள் ஆழ்ந்த ஞானத்தின் வெளித்தோற்றங்கள், என்று நாம் சமாதானம் கூற முற்படுகின்றோம். நம்மைப் பிரிக்கும் பிளவுகளைத் தாண்டப் பாலம் கட்ட வேண்டுமே ஒழிய, பிளவுகளை விரிவாக்கக் கூடாது. நம்மைத் தனியாகப் பிரித்து வைக்கும் போலி வேலிகளைத் தகர்க்க வேண்டும். சாதி, சமுதாயக் கொடுமையாக இருந்த நிலை மாறிவருகிறது; ஆனால் அது அரசியல் கொடுமையாகவும் நிர்வாக அநீதியாகவும் கூட வளர்ந்து வருகிறது. அரசியல் அதிகாரத்தை கைப்பற்றவும் நிர்வாகத்தின் மிது ஆதிக்கத்தை நிலைநாட்டவும் சாதிபற்றுக்களை இன்னும் பயன்படுத்துகிறோம்.

நாம் பக்தியுடன் பின்பற்றுவதாகக் கூறும் சமயத்திற்கு "தீண்டாமை" ஒரு பெரிய களங்கமாகும். கடவுள் முன்னாள் அனைவரும் சமம், சட்டத்தின் முன்னாள் அனைவரும் சமம்

என்பதன் பொருள் தீண்டத்தகாததும் எதுவும் கிடையாது. சிறந்த வைணவ ஆசான்களில் ஒருவரான வேதாந்த தேசிகர் நமக்குக் கூறுகிறார்.

ஒழுக்கமே உயர்குலத்தின் குணமாகும் நம்
பெற்றோர்கள் யார் என்பதும், நம் இனம் எது
என்பதும் ஒரு பொருட்டல்ல. நம் உயர்
பண்பு, நம் அறிவுத் தெளிவையும் நம் செய்கை
களையும் பொறுத்ததே ஒழிய நம்
நிறத்தையோ சமய நம்பிகையையோ,
இனத்தையோ, பிறப்பையோ பொறுத்ததல்ல.

இன ஒதுக்கல் சாதிப்பிரிவினை உணர்வை நாம் இதயங்களிலிருந்து அகற்றாவிடில் மற்ற நாடுகளில் இக்கொடுமையை நாம் கண்டிக்க முடியாது. நம்மிடையே அனைவரையும் நாம் சமமாக நடத்த முன்வராமல் மற்றவர்கள் நம்மைத் தங்களுக்குச் சமமாக நடத்தவேண்டுமென்று வற்புறுத்துவது பொருந்தாது.

சாதித்தடைகளிலிருந்தும், தீண்டாமைக் கொடுமைகளிலிருந்தும் நம்மை விடுவிக்க சான்றோர்கள், மாமனிதர்கள் அண்ணல் காந்தியடிகள், பெரியார், டாக்டர் அம்பேத்கர் போன்றோர் அவ்வப்போது நம்மிடையே தோன்றியுள்ளனர். ஆனால் அவர்களின் அறவுரையை, அறிவுரையை நாம் மறந்துவிட்டோம். நாம் பிரிவுகளைப் பலப்படுத்தி உட்பிரிவுகளை உண்டாக்கி, அவர்கள் எந்தத் தளையிலிருந்தும் நம்மை விடுவிக்க முயன்றனரோ, அவற்றையே நம்மைச் சுற்றி இறுக்கிக் கொள்கிறோம், வேலிகள் அமைத்துக் கொள்கிறோம்.

நமது அரசியல் சட்டம், சாதித்தடைகளை அனுமதிக்கவில்லை; தீண்டாமையைப் பின்பற்றுவது சட்டப்படி குற்றமாக்கப்பட்டுள்ளது. ஆனால் அரசியல்

சட்டவிதிகள் இயற்றுவது மட்டும் போதாது. நம் எண்ணப் போக்கையும் நடத்தை நெறியையும் மாற்றிக்கொள்ளப் பழக வேண்டும். நம் மக்களின் பல்வேறு பிரிவினரையும் ஒன்று சேர்த்துப் பொதுவான குறிக்கோள் கொண்ட ஒரே சமுதாயமாக இணைக்கவேண்டுமானால், பலவீனமாக இருக்கும் பிரிவினரை நாம் பலப்படுத்த வேண்டும். நம் வாழ்வை முடக்கி ஊனமாக்கும் சமூக அநீதிகளை நாம் எதிர்த்துப் போராட வேண்டும்.

நம் சகோதர மக்களை அடிமைப்படுத்தவோ, அவர்கள்மிது ஆதிக்கம் செலுத்தவோ, அவர்களின் வசதிகளை நாம் பயன்படுத்தக்கூடாது. பலநூற்றாண்டுகளாகப் புறக்கணிக்கபட்டுக் கிடந்த நிலைக்கு ஈடு செய்ய வேண்டுமானால், நாம் பொருளாதாரப் புரட்சியைத் துரிதப்படுத்த வேண்டும்.

தந்தை பெரியார் "அரசியல் பொருளாதார மாறுதல்களை விட முக்கியமானவை, சமூக மாறுதல்கள்" என்று அடிக்கடிச் சொன்னார். நமது அரசியல் சட்டம் சமூக நீதியை வற்புறுத்துகிறது. இருப்பினும் தொடர்ந்து நம்மக்களின் உரிமைகள் மிறப்படுவதை நேருக்கு நேர் நாம் காண்கிறோம். நம்நாட்டில் மனித உரிமைகளுக்கு முட்டுக்கட்டைகளாகவும், நம் மக்களை வருத்தும் சமூகத் தடைகளாகவும் விளங்குபவை சாதிக் கொடுமை, தலித்மக்களுக்கு இழைக்கப்படும் அநீதி, வகுப்புவேறுபாட்டு உணர்ச்சிகள், ஆகியவை. ஒருசிலர் மேலோர் என்ற தாழ்வு மனப்பான்மை, சமூக வேலிகள், சமூகதடைகள், தடுப்புகள், ஆகியவற்றைச் சமாளித்து வெல்வது கடினமாயுள்ளது. இவற்றைப்போல் கண்ணுக்கு எளிதில் புலனாகாமலும், இவற்றைவிடத் தாண்டுவதற்குக் கடினமாகவும், உள்ள மற்ற தடைகளும் வேலிகளும் உண்டு. மக்களை அடக்கி ஒடுக்கும் இச்சமூகத் தடைகளால் சமூகத்தில் கசப்பும் ஆத்திரமும்

மூள்கின்றன. இத்தடைகளையும் வேறுபாடுகளையும் மேடைகளிலே கண்டித்து அரசியல் சட்டத்திலே அவற்றிற்குத் தடைவிதித்துள்ள போதிலும், நாம் பிளவுகளுக்கும் பேதங்களுக்கும் பலியாகின்றோம். சமுதாயத் சமத்துவத்தைத் தத்துவ அளவில் ஏற்றிப் போற்றும் நேரத்திலேயே, நடைமுறையில் அதைப் பழித்துப் புறக்கணித்துப் பொய்யாக்குகின்றோம்.

நம்மவரில் பணமும் பதவியும் பெற வாய்ப்பு பெற்ற சிலர், அடங்கியுள்ள நிலையில் உள்ள மற்ற மக்கள், நம்மைவிட ஆற்றலிலும் அறிவிலும், ஒழக்கத்திலும் தாழ்ந்தவர்கள் என்ற எண்ணத்தில் நம்மை நாமே தேற்றிக் கொள்கிறோம், பெரிதுபடுத்திக் கொள்கிறோம். ஒடுக்கப்பட்டுள்ள இம்மக்களுக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டால், சமுகத்திற்குப் பயனாக சேவை செய்யும் ஆற்றல் பணியாற்றும் ஆற்றல் தங்களுக்கும் உண்டு என்பதை இம்மக்கள் எழுச்சியுற்று மெய்ப்பிக்கின்றனர்.

## அடிக்குறிப்புகளும் சான்றுகளும்

1. எஸ். இராதாகிருஷ்ணன், ஆசிரியர்களுக்கு தேசிய விருதுகள், வழங்கி உரை, அக்டோபர் 31, 1961.
2. திருக்குறள், குறள் 972, குறள் 321, குறள் 322.
3. திருமந்திரம்
4. திருவருட்பிரகாச வள்ளலார், திருவருட்பா,
5. அரு. ராமநாதன், மகாகவி பாரதியார் பொன் மொழிகள், (சென்னை: பிரேமா பிரசுரம் 1962).
6. பாரதியார், பாரதியார் பாடல்கள்
7. பாரதிதாசன், பாரதிதாசன் பாடல்கள்
8. டி.சி. மோகன், 'அணிந்துரை' அடைக்கலம் சுப்பையயன், மனித குடும்பத்தின் மாற்றமுடியாத உரிமைகள், (1989)

9. நெ.து. சுந்தரவடிவேலு புரட்சியாளர் பெரியார் (சென்னை: எஸ்.சந்த் அண்டு கம்பெனி லிமிடெட் 1979)

10. குடி அரசு, தலையங்கம், மார்ச் 25, 1944; வே. ஆனைமுத்து பதிப்பாசிரியர் பெரியார் ஈ.வே.ரா. சிந்தனைகள் (பெரியார் ஈ.வே.இராமசாமி அவர்களின் சொற்பொழிவுகளும், கட்டுரைகளும்) மூன்றாம் தொகுதி, 1712

11. குடி அரசு கட்டுரை ஜூலை 10, 1933, மேலது, 1681.

12. குடி அரசு, செப்டம்பர் 6, 1931, திருச்செங்கோட்டில் சொற்பொழிவு செப்டம்பர் 1, 1931.

13. குடி அரசு, தலையங்கம், செப்டம்பர் 13, 1931, மேலது,

14. குடி அரசு தலையங்கம், ஜூலை 30, 1923; மேலது, 1682.

15. மானாமதுரை, சிவகெங்கை, தேவகோட்டை சொற்பொழிவுகள், 9,10 மற்றும் 11, நவம்பர் 1971; விடுதலை நவம்பர் 16, 1971.

16. மேலது; Christian Bay "Self-Respect as a Human Right: Thoughts on the Dialectics of wants and Needs in the Struggle for Human Community" **Human Rights Quarterly**, Vol.4:1 1982, 53-93.

17. குடி அரசு, மே 24, 1937.

18. கோ. கேசவன், சுயமரியாதை இயக்கமும் பொதுவுடைமையும் 1930-1936 (விழுப்புரம் சரவணபாலு பதிப்பகம்) 115-116 சுயமரியாதை இயக்கத்தின் நகல் அமைப்பு விதிகள் ரிவோல்ட் இதழில் 30-1-1929-ல் வெளியாயிற்று. இது 18-02-1929-இல் முதல் மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

19. மேலது,

20. நெ.து.சு. 163-164.

21. மேலது, குடி அரசு, செப்டம்பர் 3, 1933.

22. தந்தை பெரியார் கம்யூனல் ஜி.ஓ. வகுப்பாரி உரிமை ஏன்? வகுப்பாரி உரிமை ஆணை செல்லாது என்று சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பு வந்தபின் கிளர்ச்சி நடத்த முன் வந்து முதல் நாள் ஆற்றிய பேருரை (சென்னை பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, ஆறாம் பதிப்பு, 1998), கல்கி, நவம்பர் 5, 2006.

23. மேலது,

24. மேலது,

25. மேலது,

26. கல்கி, ஜூன் 6, 2006.

27. மேலது,

28. மேலது,

29. மேலது,

30. மேலது,

31. அறிஞர் அண்ணா வெள்ளை மாளிகையில் (காஞ்சிபுரம் பரதன் பதிப்பகம், 1970)

32. மேலது,

33. மேலது,

34. மேலது,

35 மேலது,

36. மேலது,

37. மேலது,

38. மேலது,

# 8. நீதித்துறையும் மனித உரிமைகளும்

சொற்கோட்டம், இல்லது செப்பம் ஒரு தலையா
உட்கோட்டம் இன்மை பெறின்

- குறள் "நடுவுநிலைமை"

நீதித்துறையும் மனித உரிமைகளும் மறுக்கப்படும் நீதி

நீதித்துறை என்பது நடுநிலையாளர்களின் துறை, அங்கு நீதி வழங்கவும், நீதிக்காக வாதாடவும் நியமிக்கப்படுகிறவர்கள் தங்களுடைய கல்வி, அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் நீதியின் பக்கம், ஏழைகளின் பக்கம், ஆதரவற்ற அப்பாவிகளின் பக்கம் நின்று சுதந்திரமாக பணி புரியவேண்டும் என்ற எதிர்பார்ப்பு நம் நாட்டு மக்களிடம் இருக்கிறது.

## மக்களாட்சிக்கான போராட்டம்[1]

அரசு அமைப்பின் பன்முகப்பாங்கு மாறும்பொழுது ஊழல் இடம்பெறும் களங்களும் மாறுகின்றன. ஆனால் அதன் முக்கிய வடிவம் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதாக உள்ளது. ஊழலை முளையிலே கிள்ளி எறியக்கூடிய கருவியை இன்னும் நம்முடைய சட்ட வல்லுநர்கள் கண்டறியாதது நமது நல்வினைப் பயனே!

ஊழலுக்கு எதிரான தடைகளை எழுப்புவோருக்கும் அத்தடைகளை மீறிய புதிய உத்திகளைக் கண்டுபிடிப்பவர்களுக்கும் இடையிலான போட்டியாகவே நிறுவனச் சட்ட வரலாறு அமைந்துள்ளது. சில அமைப்பு வடிவங்கள் சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்ற வகையில் தங்களைத் தகவமைத்துக் கொள்ளவில்லை. அவை ஊழல் நிலைபெற

மற்றவற்றைவிட இடமளிப்பவையாக உள்ளன. அதனால் அவற்றின் செயல்பாடு கட்டுப்படுத்தப்பட்டவையாக அமைகின்றன.

பல ஏழை நாடுகள் சுதந்திரம் பெற்றதும் ஊழல் ஊக்குவிக்கப்படுகிறது. அதனைச் சில பணக்கார நாடுகளின் தலைவர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் தங்களுக்குக் கீழ்ப்படிகிற வாடிக்கையாளர்களைத் தேர்வு செய்ய ஊழலை ஒரு வழியாகப் பயன்படுத்துகிறார்கள். அண்மைக் காலத்தில் இத்தகைய உறவு குறித்து எழுப்பப்படும் ஐயப்பாடுகள் வழிவழியான ஊழல் அமைப்புகள் செயலற்று நிற்கக் காரணமாக அமைந்துள்ளன.

ஊழல் இன்று நமக்கு முக்கியமான பொருளாக உள்ளது. அது ஒரு புதிய அம்சம் போலத் தோன்றுகிறது. ஏனெனில் அது நீண்டகாலமாக இடம்பெற்றிருந்த நிலையில் வளர்ச்சியடைந்த மற்றும் வளரும் நாடுகளின் பொருளாதார அரசியல் வாழ்வைச் சீர்குலைக்கத் தொடங்கி உள்ளது.

இன்றையச் சூழலில் ஊழல் தொடர்பான புதிய அம்சம் என்னவென்றால் அது தன்னைத்தானே சீரழிக்கத் தொடங்கி உள்ளது. வளரும் நாடுகளில் இடம்பெறும் ஊழல்கள் வளர்ச்சியடைந்த நாடுகளில் இடம் பெற உதவுகிறது. புதிய பொருளாதார ஒழுங்கின் நோக்கங்களில் ஒன்று ஏழை நாடுகளில் ஊழலைத் தடுத்து நிறுத்துவதாகும். அதன் மூலமாகப் பணக்கார நாடுகளை எல்லாவிதச் சட்டவிரோதமாக பொருள்களின் கடத்தலுக்கு இட்டுச் சென்ற அதிகமான கட்டுப்படுத்த முடியாத செல்வக் குவிப்பிலிருந்து ஏழை நாடுகளைக் காப்பதாகும்.

உற்பத்தி அமைப்புக்கு முதலீடு கடுமையாகத் தேவைப்படுகிறது. இதற்கு ஊகவாணிகத்தைத் தடுக்க

நம்பகமான சட்ட அமைப்பு முறை தேவை. முதலீட்டாளர் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதும், அது ஊக்குவிக்கும் ஊழலும் ஒரு அபாயம் என்று கருதுகிறார்கள். ஆனால் ஊக வணிகத்தில் ஈடுபடுவோர் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துதல் ஒரு வாய்ப்பு என்று கருதுகிறார்கள். உலகப் பொருளாதாரம் வலுவானதாகவும் நிலையானதாகவும் அமையவேண்டுமானால், ஊக வாணிகத்தைப் பொறுப்புள்ள முதலீடு வெற்றி கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் பொருளாதாரம் நிலையற்றதாகி விடும். பேரிடரான விளைவுகள் ஏற்படக்கூடும்.

அண்மைக் காலத்தில் ஊக வாணிகம் உலகு தழுவிய ஒன்றாகி விட்டது. குற்றவியல் சட்டம் மட்டும் ஊழலை ஒழிக்கப் போதுமானது என்ற கருத்து உண்மை அல்ல. உலக மயமாதலுக்கு ஊழல் கடுமையாக ஒடுக்கப்பட வேண்டும். இதனை அடைய ஊழல் செழிக்கும் இடங்களைக் குறைக்க வேண்டும். இதற்கு உடனடியாக எல்லா அமைப்புகளும் மேம்படுத்தப்பட வேண்டியது அவசியம். யாரும் அரசின் ஒழுங்குமுறை அதிகாரங்கள் அதிகரிப்பை விரும்புவதில்லை.

ஊழலை எதிர்க்கும் போராட்டத்தில் குற்றவியல் சட்டம் மிகப்பெரும் பாத்திரம் வகித்த போதிலும், முதல் நடவடிக்கை அரசியல் நிறுவனச் சீர்திருத்தங்களாக மேம்பட்ட அதிகாரச் சமநிலையை ஊக்குவிக்க வேண்டும். தகவல் பரிமாற்றம் மற்றும் பேச்சுக்கு விரிவான சுதந்திரம் அளிப்பதாக அமையவேண்டும். பொது விவகாரங்களை நிர்வகிப்பதிலும் கண்காணிப்பதிலும் பொது மக்களுக்குப் பெரும் பங்களிப்பதாக இருக்க வேண்டும்.

ஒடுக்குமுறை அதிகாரம் அதன் அமைப்பிலே குறப்பிட்ட சிலர் மீது மட்டும் பயன்படுத்தப்படுவதாக

அமைவதால் அதனைக் கண்காணிப்பது மிகவும் கடினமாகும். மற்றவர்களை விடச் சில பிரிவினர்மீது சட்டம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. இம்முறையில் குற்றவாளிகள் மற்றும் பலியாவோர் தன்னிச்சையாகத் தேர்வு செய்ப்படுகிறார்கள். அதனால் அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்துதலுக்கும், ஊழலுக்கும் இடமளிக்கப்படுகிறது.

சுருக்கமாகச் சொன்னால், ஊழலை எதிர்த்த போராட்டம் என்பது அரசியல் போராட்டமாகும். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்கிற சட்டத்தை மதித்து நடக்கிற அரசு ஒன்றுக்காக நடக்கிற போராட்டத்துக்கு நெருக்கமானதாகும். அது சர்வாதிகாரப் போக்குக்கான தூண்டுதல்களை நிலையாக எதிர்ப்பது என்னும் ஒடுக்குமுறைக் கோட்பாட்டைச் சார்ந்ததாக அது நிலை பெறுகிறது. இறுதியாக ஊழலுக்கு எதிரான போராட்டம் சட்டத்தை மதித்து நடக்கிற அரசுக்கான போராட்டத்தின் மதிப்பீடுகளுக்கு மிகவும் நெருக்கமானதாகும். இப்போராட்டம் ஒடுக்குமுறைச் சக்திகளைக் கண்காணித்தல் மற்றும் குறைத்தலுக்கானது. இச்சக்திகள் அரசில் ஒருங்கிணைந்த நிலையில் உள்ளன. நிறுவன அமைப்பில் கிடைக்கும் சிறிய பிளவில் கூட முற்சிக்கக்கூடும்.

வளமையான அரசியல் கட்சிகள் பொறுப்பான சமூகம், தனிப்பட்ட ஒவ்வொருவருடைய உரிமைகள், சுதந்திரத்துக்கு மதிப்பளித்தல், சுயேச்சையான நீதித்துறை, திறனுள்ள நிதி ஒழுங்குமுறை அமைப்புகள் ஆகியவற்றுடன் உள்ள உண்மையான மக்களாட்சி அமைப்பைவிட, ஒடுக்குமுறை அமைப்பின் கடுமையைக் குறைப்பது ஊழல் சக்திகளை ஒடுக்குவதற்குப் பெரிதும் பயன்படும். மற்றொரு மிகவும் முக்கியமான அம்சம் ஊழலுக்கான பன்னாட்டு வாயில்களை அடைப்பதாகும். இது உலகு தழுவிய புதிய கூட்டுறவு வடிவங்கள் தேவைப்படுவதைச் சுட்டிக் காட்டுகிறது!

2007-ல் ஆந்திரப்பிரதேச போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றி பணிக்காலத்தில் இறந்த தொழிலாளியின் மனைவி, வாரிசுப் பணி கோரிய வழக்கில் உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் "அரசு ஊழியர் இறந்தால் கருணை அடிப்படையில் வேலை கேட்பதற்கு அவரது வாரிசுக்கு உரிமையில்லை" எனவும் இந்த விஷயத்தில் இறந்த அரசு ஊழியர் குடும்பத்தினரின் நிதி நிலையைக் கருத்தில் கொண்டு முடிவெடுக்கலாம்" எனவும் தெரிவித்தது தொழிலாளர் வர்க்கத்தினரிடையே அதிர்ச்சியையும், வேதனையையும் தோற்றுவித்தது.

20 ஆண்டுகளுக்கு முன்பாக நீதியரசர்கள் வி.ஆர்.கிருஷ்ணய்யர், ஓ. சின்னப்படி ரெட்டி, ஸ்ரீனிவாசன் போன்றவர்கள் வழங்கிய மிகச் சுதந்திரமாக நடுநிலைமை நின்று தீர்ப்பளித்தார்கள். அரசியல் அமைப்பின் படியும் தொழிலாளர்களின் சட்டங்களின் படியும் பெண்கள் குழந்தைகளின் சம உரிமைச் சட்டங்களின் படியும் தீர்ப்பு வழங்கினார்கள்.

தொழிலாளர்களுக்கு நீதி வழங்கும் போது சுமார் 20 ஆண்டுகள் பணியில் அந்தப் பணியாளருக்கு குடும்பத்தினால் ஏற்பட்ட சமூகப் பொறுப்புகள் ஏராளம். குழந்தைகளின் கல்வி, தன்னைப் பெற்ற தாய், தந்தையரின் மருத்துவச் செலவுகள் போன்றவற்றுக்கு உறவினர்கள், நண்பர்களிடம் வாங்கிய கடன்களுக்கே பணியில் இறந்தால் கிடைக்கும் ரூ.1 லட்சம், பணிக்கொடையில் ஓரிரு லட்சம் ஆகியவை ஈடாகிவிடும்.

இத்தகைய பணிக்காலக் கடன்கள் போக எஞ்சியிருக்கும் சொற்பத் தொகையான வருங்கால வைப்பு நிதி போன்றவை அனைத்தும் அடுத்த சில நாள்களில் கரைந்து விடும். அதன்பின் குடும்பத் தலைவரை இழந்த அந்தக் குடும்பத்தின் வாழ்வு கேள்விக்குறியாகிவிடும்.

இவைகளை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு தொழிலாளர்களுக்கு நீதி வழங்கவேண்டும்.

இப்போது பணியில் சேரும் புதிய வழக்கறிஞர்களில் பலர் முந்தைய தீர்ப்புகள், கடந்த கால வழக்குகள் ஆகியவற்றைப் படிப்பதில்லை என்று மத்திய நிதியமைச்சரும்சிறந்த வழக்கறிஞருமான ப. சிதம்பரம் அவர்கள் வேதனையோடு சுட்டிக்காட்டியிருக்கிறார்.

பணிநிலை வழக்குகளில் நல்ல அனுபவம் பெற இளம் வழக்கறிஞர்கள் நிறையப்படிக்க வேண்டும். மனுதாரர் ஒரு தாவாவுடன் வந்தால் அதை அப்படியே முதலாளி/ நிர்வாகிக்கு மனுவாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவிட்டு, அந்த ஒப்புதல் கார்டுடன் ஒரு மாதம் கழித்து வரச் சொல்லி, "மனுதாரர் மனுமீது எந்தவிதப் பதிலுமில்லை மனுவைப் பரிசீலனை செய்து இருவார காலத்தில் தீர்வளிக்க வேண்டும்" என்ற வகையில் நீதிமன்ற உத்தரவு கேட்டு மனுச்செய்து மேலோட்டமான எளிய உத்தரவுகளைப் பெற்று விடுகின்றனர்.

நிர்வாகமும் குறிப்பிட்ட மனுவைப் பரிசீலனை செய்து இன்ன காரணங்களினால் கோரிக்கையை ஏற்க இயலாது என பதிலுரை கொடுத்து நீதிமன்ற உத்தரவை மதித்து விடுகின்றனர்.

இத்தகைய சட்ட வழிகாட்டுதல்களினால் தீர்வின்றி தெருவில் நிற்பது தொழிலாளர் வர்க்கம் மட்டுமே

தொழிலாளர் தரப்பிலிருந்து வரும் வழக்குகளைப் பரிசீலிக்கும்போது சட்டத்தை ஆராயும் நீதிபதிகள் கூடுதலாகக் கருணை காட்டுவது எந்த வகையிலும் பாரபட்சமான செயலாகிவிடாது. தாமதப்படுத்தும் நீதி மறுக்கப்படும் நீதியாவது ஏழைத் தொழிலாளர்கள் வி□யத்தில் உண்மையாகிவிடுவதால் அவர்களின்

வழக்குகளை விரைந்து முடிக்க அரசு முன்வந்தால் நல்லது.

## காவல் துறையின் அத்துமீறல்

தமிழக உயர்நீதிமன்றம் பல்வேறு மனித உரிமைகள் மீறல் வழக்குகளைச் சந்தித்துள்ளது. அவற்றில் ஒன்று மனித உரிமை மீறல் சம்பந்தமான வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்புகள், இன்னமும் சாமானியர்களுக்கு இந்த நாட்டில் நீதி கிடைக்கும் என்பதை நிரூபிக்கப்பட்டுள்ளன. அவற்றில் முக்கியமான ஒன்று ராஜாக்கண்ணு வழக்கு. நரிக்குறவச் சமூகத்தைச் சேர்ந்த ராஜாக்கண்ணுவை, ஒரு திருட்டு வழக்கில் சந்தேகத்தின் பேரில் காவல்துறையினர் கைது செய்தனர். அவரை காவலில் வைத்து அடித்துச் சித்திரவதை செய்து கொன்று விட்டதாக ராஜாக்கண்ணுவின் உறவினர்கள் இருவர் சொன்னார்கள். காவல் துறையினர் அந்த இருவரையும் மிரட்டி ஊரைவிட்டே விரட்டி விட்டார்கள். ராஜாக்கண்ணுவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும் என்று ஹேபியஸ் கார்பஸ் மனு போட்டார் வழக்கறிஞர் சந்துரு (இன்றைய உயர்நீதிமன்ற நீதிபதி) அவர் காவலில் இருந்து தப்பி ஓடி விட்டார் என்று காவல் துறையினர் சொல்ல, அந்த இரண்டு உறவினர்களையும் கேரளா வரை சென்று தேடி அழைத்து வந்தார் சந்துரு. ராஜாக்கண்ணுவை அடித்துக் கொன்ற காவல்துறையினர், மிளகாய்ப் பொடியை அவர் கண்களில் தூவி, அவர் இறந்து விட்டாரா என்று பரிசோதித்துப் பார்த்ததாகத் தெரியவந்த போது, நீதிபதிகளே அதிர்ந்து போனார்கள். சம்பந்தப்பட்ட காவல்துறையினர் அனைவர் மீதும் வழக்கு தொடரப்பட்டு, தண்டனை வழங்கப்பட்டது. சர்ச்சைக்குரிய கண்டதேவி கோயில் திருவிழாவில், தலித்துக்களுக்கும் கோயில் தேர் இழுக்கவும், கோயில் மரியாதையைப் பெறவும் உரிமை உண்டு என்று வாதாடி வென்றார் திரு. சந்துரு.

ஒழுக்கம் எல்லோருக்கும் பொதுவானது என்றாலும், அரசு ஊழியர்களுக்கு என்று சில கட்டு திட்டங்கள், ஒழுங்கு முறைகள் உள்ளன. கோர்ட்டில் தண்டிக்கப்பட்டவர் அரசு ஊழியராகப் பணியாற்ற முடியாது. அமைச்சர்களும் அரசு ஊழியரே. அதனால் அவர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கான நெறிமுறைகள் பொருந்தும். இராணுவத்தில் குடிப்பது அனுமதிக்கப்பட்ட வழக்கம். ஆனால் குடி போதையில் பொது இடத்தில் தாறுமாறாக நடந்தால், அவர்கள் பதவியிழக்க நேரிடும்.

நீதிமன்றத்தில் பொய் கூறல் பெரிய குற்றமாகும். சட்டத்தை ஆள்வோரே சட்டத்தை பகிரங்கமாக மீறல் கூடாது. இதை மக்கள் மன்னிக்க மாட்டார்கள். ஏற்க மாட்டார்கள். அரசன் எவ்வழி மக்கள் அவ்வழி என்பது பழமொழி. சீசரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவளாக இருக்க வேண்டும் என்பது மேலை நாட்டு வழக்கு. வேலியே பயிரை மேயலாமா? காவல் துறையினரே திருடலாமா? சட்டத்தை ஆள்வோரே சட்டத்தை மீறலாமா? இதுதான் நம் முன்னுள்ள பிரச்சனை. குடியரசு நாட்டில், எந்தத் தனி மனிதரும் இன்றியமையாத மனிதரல்ல. சாமான்ய மனிதர் பல்வேறு சபலங்களுக்கு உட்பட்டு தவறு இழைக்கலாம். ஆனால், தலைவர்களாவது தவறு இழைக்காத உத்தமர்களாக இருக்க வேண்டும். மக்களுக்கு, எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும்.□□

குடியரசு நாட்டில் தலைவர்கள் கண்ணாடிக் கூண்டுக்குள் (Glass House) வாழ்ந்துதான் ஆக வேண்டும். அக வாழ்வு என்ற போர்வைக்குள் ஒளிந்து கொள்ள தலைவர்களுக்கு உரிமையில்லை. மக்களாட்சியின் வலுவே மக்களின், பத்திரிக்கைகளின், எதிர்க்கட்சிகளின், நீதித்துறையின், விழிப்புணர்விலே தான் அடங்கியுள்ளது.

## நீதிபதிகளும் மக்கள் சேவையும்

"நீதித்துறை சம்பந்தமானதாக இருந்த போதிலும் அதன் அதீத அதிகாரமும், அதிர்ச்சியூட்டும் தவறும் முற்றிலும் ஒத்துக்கொள்ள முடியாததாகும். நீதிமன்றங்களின் நீதிபதிகள் மகத்தான ஹோமருக்கு மேம்பட்டவர்களல்ல. லார்ட் பைரன் கூறியது போன்று சில சமயங்களில் ஒத்துப் போகின்றனர். சில சமயங்களில் செய்வதறியாது விழிக்கின்றனர்."

"ஒவ்வொரு நீதிபதியும், பதவிப்பிரமானம் செய்யும் போது உறுதி கூறுவதுபோல், அச்சமோ அல்லது வேண்டியவர்களுக்கு சலுகை காட்டுவதோ இல்லாமல் அன்போ, வெறுப்போ இல்லாமல் மக்களுக்கு நீதி வழங்குவதற்கு கடமைப்பட்டவர். பொது மக்களுக்கு நீதி வழங்குவதுதான் பொதுமக்களுக்கு சேவை செய்வதாகும்."

"அரசியல் சட்டப்படியான அதிகாரிகள் பொது அலுவலர்களின் ஓர் உயர் அடுக்கை சேர்ந்தவர்களாவர். அவர்கள் பொதுச் சேவையாளர்களின் ஒரு சிறப்பான பண்புமிக்க குழுவைச் சேர்ந்தவர்கள். ஜனநாயக ரீதியில் கூடுதல் பதில்சொல்லும் நிலைமையிலிருப்பவர்கள். (மேலும் அவர்களைப்பற்றியும் அவர்களது செயல்பாடுகளைப் பற்றியும் அது பொதுநலனுக்கு உகந்ததாக இருந்தால்) மக்களுக்கு தகவல் தருவதற்கு மற்றவர்களைக் காட்டிலும் குணநலன்களின் அடிப்படையில் கூடுதல் கடமைப்பட்டவர்களாவர்" என நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர் கூறுகிறார்.

ஒரு புகழ்மிக்க நீதிபதி ஜெயரோம் ஃபிராங்க் என்பவர் "விசாரணையிலுள்ள நீதிமன்றங்கள்" என்ற தனது புத்தகத்தில் "நீதித்துறை பற்றிய ஜீரணிக்க முடியாத உண்மைகளை பொதுமக்களிடம் கூறுவது அபாயகரமானது என்ற கருத்தை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். அதை மதிக்கமாட்டேன் என்று கூறியிருந்தார். ஒரு ஜனநாயக

ஆட்சியில் அரசின் எந்தப்பிரிவின் செயல்பாடுகளைப் பற்றிய உண்மையை பொதுமக்கள் தெரிந்து கொள்ளச் செய்வது எப்போதும் விவேகமற்றது என்ற கருத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது மனிதர்களால் உருவாக்கப்பட்ட அமைப்புகளின் தவிர்க்க முடியாது குறைபாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாத குழந்தைகள் என்று பொதுமக்களை கருதுவது முற்றிலும் ஜனநாயக விரோதமானதாகும். நமது நீதி அமைப்பின் இந்தக் குறைபாடுகளை அகற்றப்பட முடியக்கூடிய தன்மையான இவற்றை அகற்றுவதற்கான சிறந்த வழிமுறை. இந்த அமைப்பு இப்போது எவ்வாறு செயல்படுகின்றது என்பதை அனைத்து குடிமக்களுக்கும் தெரியப்படுத்துவதேயாகும். எனவே, அறியாமையின் வாயிலாக நமது நீதிமன்றங்களின்பால் பொதுமக்களின் மரியாதையை நிறுவுவதற்கும், பராமரிப்பதற்கும் முயல்வது தவறாகும்.

ஜனநாயகக் கருவி: புனிதத் தன்மை பொருந்திய அறிவுக்கெட்டாத வகைப்பட்ட ஒன்றாக அல்லாமல் ஜனநாயகக் கருவி என்ற வகையிலான ஒரு நீதித்துறைக்காக நான் உறுதியாக நிற்கிறேன். அவர்களது வேலைக்கும் பயிற்சி பெற்ற நீதிபதிகள் நமக்கு தேவை. அவர்களது நடத்தை தங்கு தடையின்றி விமர்சிக்கப்படலாம். நீதித்துறை செயல்பாடு பற்றி ஆய்வு செய்யும் ஓர் ஆணையம் அவர்கள் பற்றி புலனாய்வு செய்யலாம். பொய்முடிக் கவியையும், மேலங்கிகளையும், அவசியமற்ற சட்டச் சொல்லாடல்களையும் கைவிடும் நீதிபதிகள் தமது நடவடிக்கைகளுக்கு விளம்பரத்தை துறப்பதற்கு பதிலாக வரவேற்கும் நீதிபதிகள் பற்றி புலனாய்வு செய்வதை ஏற்றுக்கொள்ளும் நீதிபதிகள் நமக்கு தேவை" என்று டேவிட் பான்னிக் என்ற ஆங்கில அரசியாரின் வழக்கறிஞர் கூறினார்.

டேவிட் பான்னிக் மேலும் கூறினார்: “நீதித்துறையானது அரசுக்கு அபாயமல்லாத துறையல்ல. அவர்கள் நண்பர்களை சிறைக்கு அனுப்புகிறார்கள் சகலவகைப் பட்ட உரிமைகள் மற்றும் கடமைகளின் வீச்சு மற்றும் அவற்றின் செயல்முறை பற்றி அவர்கள் முடிவு செய்கிறார்கள். அவை தனி நபர்களுக்கும் சமுதாயத்திற்கும் முக்கிய விளைவுகளை கொண்டுள்ளன. சமுதாயத்தில், அரசில் அவர்களுக்கு உள்ள மையமான பாத்திரத்தின் காரணமாக நீதித்துறையை நாம் (ஜஸ்டிஸ் வெண்டெல் ஹோம்சின் சொற்களில்) பொதுவாழ்வின் இந்த அம்சத்தை திராவகத்தைக் கொண்டு கழுவிவிட வேண்டும். நிதிபதிகளை தவறிழைக்கக்கூடிய மனிதப்பிறவிகள் என்றும், அவர்களுடைய பதவி சார்ந்த நடத்தை அரசின் பிற உறுப்புக்களைப் போன்ற அதே கூர்மையான விமர்சன பகுப்பாய்வுக்கு உட்பட்டது என்றுதான் நாம் கருத வேண்டும். அவ்வாறு கருதுகின்ற வரையில், நீதிபதிகள் புரோகிதர்களின் வம்சத்தை சார்ந்தவர்களாகவே இருப்பார்கள். சமுதாயத்தின் எஞ்சியுள்ள பகுதியின்மேல் பெரும் அதிகாரங்களைக் கொண்டவர்களாக இருப்பார்கள். ஆனால் அதே பொழுதில் அவர்கள் சமுதாயத்திலிருந்து தனிமைப்பட்டவர்களாக பரஸ்பரம் இருதரப்பினருக்கும் பாதகமான முறையில் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டவர்களாகவும் இருப்பார்கள்.”

அமைச்சர்கள், ஆளுநர்கள், குடியரசுத் தலைவர்கள், சபாநாயகர்கள் மற்றும் பல இதர அலுவலர்களைப் போன்று நீதிபதிகளும் அரசியல் சட்டரீதியான அதிகாரம் படைத்தவர்களே. அவர்கள் பொதுமக்களுக்கு சேவை செய்பவர்களே என்று மிகவும் உறுதியாகக் கூறலாம். அதீத எஜமானர்களல்ல. ஜனநாயகக் கடமை, பொறுப்புகளுக்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல. அவர்களின் செயல்பாடு ஒளிவுமறைவற்றதாக இருக்க வேண்டும்.

அடிப்படையாகவே அவர்கள் ஊழலுக்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

நீதித்துறை அதிகாரத்தின் அறங்காவலர்கள்: சுருங்கக்கூறின் நீதிபதிகள் அரசியல் சாசனத்தின் கீழ் மேலங்கிகளை அணிந்து கொண்டு நீதித்துறை அதிகாரத்தின் சிறந்த அறங்காவலர்களாக உறுதிமொழி எடுத்துக் கொள்கின்றனர். அவர்களின் சட்டப்படியான அதிகார வரம்புக்கு உட்பட்டும் அரசியல் சட்டப்படியான நீதிநெறிக்கு உட்பட்டும் தான் என்பதை கூறத் தேவையில்லை. உச்சநீதிமன்ற அரசியல் சட்டப்பிரிவின் ஒரு தீர்ப்பில் கே.வீராசமி - எதிர் - இந்திய யூனியன் (199) எஸ்சிசி (பக்கம் 655) வழக்கில் ஊழல் தவிர்ப்பு சட்டத்தில் பயன்படுத்தியுள்ள பொதுமக்களின் சேவகர் என்ற சொற்றொடரானது ஐயத்திற்கிடமின்றி உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் உள்ளிட்ட ஒவ்வொரு நீதிபதியையும் குறிப்பதாகும். நீதிபதிகள் சட்டத்திற்கு உட்பட்டவர்களேயன்றி அதற்கு மேலானவர்கள் அல்ல. உங்களுடைய பொது வாழ்வும், உங்களுடைய நீதித்துறையின் பாத்திரத்தின்மீது அது செல்வாக்கும் செலுத்துமளவிற்கு தனிப்பட்ட வாழ்க்கையும் கூட பொதுமக்களுக்கு பதில்சொல்லக் கூடியதாகவும் வெளிப்படையானதாகவும் இருக்க வேண்டும்.”

நமது நீதிபதிகள் விழிப்புடனும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். அரசியல் சாசனத்தின் முகவுரையை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்தக் குடியரசு சமதர்ம மதச்சார்பற்ற மக்களாட்சிக் குடியரசு என்று அது கூறுகிறது.

நீதித் துறையின் மிகச்சிறந்த மிகவும் சுயேச்சையான உறுப்பினர்கள் நீதித்துறை அதிகாரத்தை செயல்படுத்துவதை உறுதி செய்வதற்கு அது இன்றியமையாததாகும். அவர்கள் இந்திய மக்களின் கல்வி விளக்கம் பெற்ற

விவேகமுள்ளவர்களால் மிகவும் உயர்வாய் மதிக்கப்படுவார்கள். இந்த இன்றியமையாமைக்கு நீதித்துறை செயல்பாட்டின் ஒவ்வொரு பரிமாணத்திற்கும் பொருத்தமுடையவரை உறுதியுடன் கூடிய அரசியல் சாசன சட்டத் தொகுப்பு தேவைப்படுகிறது.

## தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் பங்களிப்பு

மனித உரிமைகளுக்கான நமது பணி புனிதப் போராகும். குடிமக்களது ஆலோசனைகளையும், அறிக்கைகளையும் குற்றச்சாட்டுகளையும் பரிசீலிக்கும் இந்த குறிப்பிட்ட வழிமுறையானது, மனித உரிமைகள் ஆணையம் குடிமக்களது உரிமைகளைக் காக்கும் சக்திமிக்க பாதுகாப்பாகவும், பொதுக்கருத்தை வெளியிட உதவும் முக்கியமான கருவியாகவும் திகழ்கிறது. குடிமக்கள் தங்களது தீவிரமான விமர்சனங்களைக் கடித வாயிலாக அரசு நிறுவனங்களுக்கும் அல்லது செய்தித் தாள்கள் மற்றும் இதழ்களுக்கும் அடிக்கடி தெரிவிக்கிறார்கள். குடிமக்களிடமிருந்து வரும் அத்தகைய கடிதங்கள் தகவலுக்கான முக்கிய ஆதாரமாகின்றன.

இந்திய மனித உரிமைகள் ஆணையம் ஏற்பட்ட பிறகு (1993) குடிமக்களிடமிருந்து வரும் கணக்கற்ற கடிதங்கள், குறிப்பாக செய்திப் பத்திரிகை ஆசிரியர்களுக்கு, குறைகளைக் களையவும், நிர்வாக யந்திரத்தின் (நிர்வாகம் காவல்துறை) பணியை முன்னேற்றுவதற்கும் காட்டப்படும் தீவிரமான ஆர்வத்தினை வெளிக்காட்டும் விண்ணப்பமாக அமைகின்றன. சென்ற பல ஆண்டுகளாக மனித உரிமைகள் ஆணையத்திற்கு ஆண்டுதோறும் சுமார் 80,000-க்கும் மேற்பட்ட மனுக்கள் பெறப்பட்டன.

இந்தியக் குடியரசில் மனித உரிமைகள் அடிப்படை உரிமைகளாக இந்திய அரசியல் அமைப்பில்

வழங்கப்பட்டுள்ள போதிலும், தனி நபர் மீறல்களும், அரசுத்துறைகள் பல நேரங்களில் தவறு செய்வதோடு மனித உரிமைகள் மீறல்களிலும் ஈடுபடலாம். அரசு அலுவலர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட சட்ட உரிமைகளை சில நேரங்களில் தவறாகப் பயன்படுத்தி குடிமக்களின் உரிமைகளை மீறலாம். மனித உரிமைகளைப் பயன்படுத்தும் போது ஏதேனும் மீறல்கள் ஏற்பட்டால் அவைகளைத் தடுத்து நீதி வழங்க சட்டத்துறையில் மேலும் வளர்ச்சி தேவை என்பதையே இது காட்டுகிறது. தடுப்பு என்பது மேலும் முக்கியமானதாகிறது. முதிர்ச்சியின் ஓர் அடையாளமாக, இந்தியக் குடியரசில், அரசியல் அமைப்பில், நடைமுறையிலும் ஏற்பட்டுள்ள ஒழுங்கான சட்டப்பூர்வமான தொடர்ந்த வளர்ச்சியின் விளைவுகளே மேற்கண்ட உண்மைகளாகும்.

## தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் முக்கிய ஆணைகளும் வழிகாட்டுதல்களும்

தேசிய மனித உரிமைகள் ஆணையம் 1993-ல் அமைக்கப்பட்டது. இந்திய மக்களின் உரிமைகளைக் காப்பதில் மிக விரிவான கோட்பாடுகளை நடைமுறைப் படுத்தி வருகிறது. நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா தனது அறிவிப்பில் எவ்வாறு நடைமுறைப்படுத்துவது எனபதை தெளிவாக்கியுள்ளார்.

சமூகத்தின் பல்வேறு பிரிவினருக்கும் மனித உரிமைகள் குறித்த கல்வியைப் பரவலாக அளிப்பதும், மனித உரிமைகளைப் பாதுகாத்திடுவதற்கான வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வை மேம்படுத்துவதும் - மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1993 பிரிவு 12 (h)-ன்படி தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் சட்டபூர்வமான கடமையாகும். தேசிய மனித உரிமைகள் ஆணையமானது-காவல்துறை, இராணுவம், துணை

இராணுவம் மற்றும் அனைத்து அரசு ஊழியர்களுக்கும் மனித உரிமைகள் பாதுகாப்பதில் மகத்தான பங்கு உள்ளது என்று கருதுகிறது. எனவே, இவையே மனித உரிமைப் பிரச்சினைகள் குறித்து விழிப்புணர்வு படுத்தப்பட வேண்டிய முக்கிய குழுக்களாக உள்ளன. ஆணையம் இவர்களுக்கான பயிற்சித் திட்டத்தில் மனித உரிமைக் கல்வி இடம் பெறவும், இதற்காக முதன்மையான பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட்டு, மனித உரிமைக் கல்விப் பாடத்திட்டத்தை மிகப்புதியதாக மேம்படுத்தவும் ஒரு கருவியாகச் செயல்படும்.[1]

## காவல்நிலைய மரணங்கள் மற்றும் பாலியல் பலாத்காரங்கள்

தவறு செய்தல் மனித இயற்கை, அதைப்பொறுத்து மன்னிப்பது என்பது தெய்வீகத்தன்மை. குற்றம் செய்தவனுக்கு கொடுமையான தண்டனை ஒருகாலத்தில் வழங்கப்பட்டது. அக்குற்றத்தை மற்றவர்களும் செய்யக் கூடாது என்பதற்காகத்தானேயொழிய அக்குற்றம் செய்தவன் தண்டிக்கப்பட வேண்டும் என்பதற்காக மட்டுமல்ல. எவ்வாறாயினும் இந்திய நீதிமன்றங்களும், மனித உரிமைகள் ஆணையமும், குற்றவியல் தண்டனை சட்டத்தையும் காவல்துறையின் பணிகளையும், கடமையையும் மிகமிக கவனமாக ஆய்வு செய்ததன் காரணமாக மனித உரிமைகளைக் காப்பதற்கு மிகப்பெரிய பணிகளை மேற்கொண்டுள்ளார்கள்.

"காவல்நிலையத்தில் நிகழும் மரணங்கள் மீதான அறிக்கையை 24 மணி நேரத்திற்குள் அனுப்பிட," மாநில தலைமைச் செயலர்களுக்கு தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் மூலம் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.[2]

"காவல் நிலையங்களில் மரணங்களும் மற்றும் பாலியல் பலாத்காரங்களும் அதிக எண்ணிக்கையில் நிகழ்ந்தாலும், அச்சம்பவங்களை மறைக்கவோ, அவை

குறித்துத் தவறான தகவல் அறிக்கைகளைக் காலம் கடந்து கொடுக்கவோ முயற்சிக்கப்படுகின்றது. எனவே, ஆணையம் எல்லா மாவட்டங்களின் நீதிபதி மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர் காவல்நிலைய மரணங்கள் அல்லது பாலியல் பலாத்காரங்கள் குறித்து அவர்கள் தகவல் பெற்ற 24 மணி நேரத்திற்குள், தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் பொதுச் செயலருக்குக் கட்டாயம் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு செய்யத்தவறினால் காவல்நிலைய மரணங்கள் மற்றும் பாலியல் பலாத்காரம் குறித்த தகவல்களை மறைக்க முயற்சித்ததாகவே கருதப்படும்."[3]

போலீஸ் காவலில் ஏற்படும் மரணங்களை மட்டும் அல்லாது நீதித்துறை காவலில் ஏற்படும் மரணங்கள் குறித்தும் அறிக்கை தரக்கேட்டு, மாநில அரசுகளுக்கு அறிக்கை அனுப்பியுள்ளது.

"தேசிய மனித உரிமைகள் ஆணையம் 1993 அக்டோபரில் அமைக்கப்பட்ட பின்னர், நாட்டில் சட்டம் ஒழுங்கினை மாவட்ட அளவில் நிருவகிக்கும் சட்டரீதியான நிறுவனங்களை, காவலில் ஏற்படும் மரணங்கள் மற்றும் பாலியல் பலாத்காரம் மீதான தகவல் அறிக்கைகளை 24 மணி நேரத்திற்குள் அனுப்பிட ஆணையம் கேட்டுக்கொண்டது. இதன் பின்னர், மாவட்ட அளவிலான சட்டம் ஒழுங்கை நிர்வகிக்கும் நிறுவன அறிக்கைகள் சாதாரணமாக ஆணையத்திற்கு வருகின்றன. போலீஸ் காவலிலும் சிறைச்சாலைகளிலும் மரணங்கள் அதிகரித்து வருவது கண்டு ஆணையம் தனது ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது. பெரும்பாலும் இந்த அறிக்கைகள் அக்கறையற்று எழுதப்படுவதாகவும், மரணத்திற்கான காரணம் குறித்து சரியான கருத்தை உருவாக்கிட

முடிவதில்லை எனவும், காவலில் மரணங்களுக்கான உண்மையான காரணத்தை மூடி மறைத்து, போலீஸ் தன் தரப்பு நியாயத்துடன் காவல் மரண சம்பவங்களை முடிக்கிறது என ஆணையம் கருதியது.[4]

இறந்தவரின் உடலை பரிசோதனை செய்து மரணத்தின் உண்மைக் காரணங்களை அறிந்திட வேண்டும். உள்ளூர் மருத்துவர்கள் போலீசின் வற்புறுத்தலுக்கு ஏற்ப உண்மைகளை மாற்றிவிட வாய்ப்புண்டு என ஆணையம் ஆரம்ப நிலையிலேயே கருதுகிறது. ஆணையம் காவல் மற்றும் நீதித்துறை காவலில் ஏற்படும் எல்லா மரணங்களிலும் சடலக் கூறாய்வு பரிசோதனையை வீடியோ படமாக்கி, அதன் கேஸட்டுகளை, சடலக்கூறாய்வு அறிக்கையுடன் ஆணையத்திற்கு அனுப்பிட வேண்டும்.[5]

சில வழக்குகளில் சடலக் கூறாய்வு பரிசோதனை முறையாகச் செய்யப்படவில்லை. மேலும் சில வழக்குகளில் தகவல்களைத் திரட்டுதலிலும் அறிக்கை சமர்ப்பித்தலிலும் தாமதம் செய்வது தெரிகின்றது. காவல்நிலைய வன்முறைகளில் வெளியே சுயேட்சையான சாட்சியத்திற்கான வாய்ப்பு அபூர்வம் என்பதால் சடலக் கூறாய்வு பரிசோதனை செய்த மருத்துவர் கண்டறிந்த தகவல்களும், அவரின் முடிவுரைகளும் வழக்கினைத் தீர்மானிப்பதில் முக்கியமானவை. சடலக்கூறாய்வு பரிசோதனை சரியாகச் செய்யப்படா விட்டாலோ அல்லது அதிகாரிகளின் நலன்களுக்கு ஏற்ப தகவல்கள் திரித்து மாற்றப்பட்டாலோ, குற்றவாளிகளைத் தண்டிக்க முடியாது என்பது மட்டுமல்ல. நீதியின் நோக்கத்தை நிறைவேற்ற முடியாமலும், காவல்நிலையத்தில் நடக்கும் மிகக் கொடுமையான மனித உரிமை மீறலைத் தண்டிக்க முடியாமலும் போய்விடும். இத்தகைய மோசடிகளைத் தடுத்திட, ஆணையம் எல்லா மாநிலங்களையும் சடலக் கூறாய்வு பரிசோதனைகளை

வீடியோ படமாக எடுத்து ஆணையத்திற்கு அனுப்பிட பரிந்துரைத்தது. மனித உரிமைகளைக் காக்கும் நோக்கம் உடையதாக சடலக் கூறாய்வு பரிசோதனை அறிக்கை படிவத்தை மாற்ற மனித உரிமைகள் ஆணையம் வலியுறுத்தியது.[6]

## "மோதல் சாவுகள்"

காவல் துறையினருடன் மோதலில் ஏற்படும் மரணங்களின் போது கடைபிடிக்க வேண்டிய முறை குறித்து மாநில முதலமைச்சர்களுக்கு எழுதிய கடிதம் "இந்தியாவில் நிலவும் குற்றவியல் சட்டமுறையின்படி, "ஒருவர் தன்னை தற்காத்துக் கொள்ளும் உரிமையை நடைமுறைப்படுத்தும் போது மரணம் விளைந்தால் அது தண்டிக்கக் கூடிய குற்றமல்ல." ஆணையத்திற்கு முன் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை உணர்ந்து, கூர்ந்து ஆய்ந்துதான் நடந்தது மோதலா? அல்லது பொய்யான மோதல் சித்தரிப்பா? என்பதை ஆணையம் முடிவு செய்ய சான்றை மதிப்பிடவேண்டும். முக்கியமான விஷயங்களை கணக்கில் எடுத்துக் கொண்டும், ஆணையத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்ட விஷயங்களையும், சாட்சிகளையும் ஆய்ந்தும், போலீஸ் தரப்பு சொல்வது உண்மையா? பொய்யா என்பதை கண்டறிய முடியும். மோதல் நடந்தது உண்மை. நாங்கள் ஏற்கனவே குறிப்பிட்டபடி ஒவ்வொரு வழக்கிலும் பல அம்சங்கள் பிரச்சினைக்கு தொடர்புடையதாக உள்ளன. அடிப்படையில் புகார்தாரரின் கூற்றுக்கள் உண்மையாகத் தோன்றினாலும், உடனே இந்த வழக்குகள் யாவும் புலனாய்வு செய்யப்பட்டே உண்மையானது என கண்டறியப்பட வேண்டும்.

இந்திய அரசியல் சட்டம் பிரிவு 21-ன்படி சட்டப்படியான முறையிலன்றி எந்த ஒரு நபரின் வாழ்வினை

அழிக்க முடியாது. சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான உடன்படிக்கை பகுதி III பிரிவு 6-ன்படி

"ஒவ்வொரு மனிதருக்கும் வாழ்வுரிமை என்பது உள்ளார்ந்த உரிமையாகும். இந்த உரிமை சட்டத்தால் பாதுகாக்கப்படுகிறது. எவருடைய வாழ்வையும் (தான்தோன்றித்தனமாகப்) சட்ட விரோதமாக பறிக்கக் கூடாது."

"எந்த மனிதருக்கும் வாழ்வுரிமை மிக முக்கியமான ஒன்று. ஏனென்றால், மற்ற எல்லா உரிமைகளும் அவர் உயிருடன் வாழ்வதை ஒட்டியே உள்ளன. அரசியல் சட்டமும், சர்வதேச உடன்படிக்கையும் உயிர் வாழ்க்கைக்கு உரிய முக்கியத்துவமும், உத்தரவாதமும் கொடுக்கிறது. சட்ட முறையிலான வழியில் சரியான காரணங்களின் அடிப்படையில் உயிரிழப்பை ஏற்படுத்தலாம் என்பது விதிவிலக்கு. ஆனால் இது மிகவும் துவக்க நிலையானதால், இந்த முடிவுக்கு எந்த அதிகாரியும் ஆதரவளிக்கத்தேவையில்லை. அடுத்து, இந்த வழக்குகளில் நாம் ஆய்ந்திட வேண்டியது என்னவென்றால் எந்த சட்டமுறைகளின்படி உயிரானது பறிக்கப்படுகின்றது என்பதாகும்.... தற்காப்பு உரிமை என்ற வாதம் எழுப்பப்பட்டால் அதை நிரூபிக்க வேண்டும். நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டாலன்றி, விதிவிலக்காக மட்டுமே குறிப்பிடப்பட்ட தற்காப்பு உரிமை வழங்கப்படும் என்கிறது குற்றவியல் சட்டம். உயிர்காப்பதற்கான போராட்டத்தில் சரியான அளவில் தற்காப்பு உரிமையை நிர்ணயிப்பதும் கடினமே. சாதாரணமான சூழலில் இழைக்கப்பட்ட குற்றத்தைவிட தண்டனை குறைவாக இதற்கு வழங்கப்படலாம். புலனாய்வின் பொழுது அல்லாமல், விசாரணையின் பொழுதுதான் தற்காப்பு வாதம் எழுப்பப்பட்டு நிரூபிக்கப்பட வேண்டும். இந்திய சாட்சியச்

சட்டம் பிரிவு 105-ன்படி ஒரு நபர் ஏதாவது ஒரு குற்றம் செய்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டால், அக்குற்றமானது இழைக்கப்பட்ட சூழலலானது இந்திய தண்டனைச் சட்டத்தின் (45/1860) பொது விதிவிலக்குகளில் விவரிக்கப்படும் சூழ்நிலைகளிலோ அல்லது வேறு ஏதாவது சிறப்பு விதிவிலக்கின் கீழ் என்றோ அல்லது இதே சட்டத்தின் வேறு ஏதாவது பிரிவுகளின்படியோ, விதிகளின்படியோ அல்லது அந்தக் குற்றத்தை விளக்கும் வேறு எந்த சட்டத்தின்படியோ மாறுபட்ட சூழ்நிலையிலோ குற்றம் நடந்தது என்பதை நிரூபிக்க வேண்டியது குற்றம் சாட்டப்பட்டவரின் பொறுப்பாகும். நீதிமன்றமானது அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இல்லை என்றே அனுமானிக்கும்.[8]

"எவ்வாறு இருப்பினும், மக்கள் யுத்தக் குழுவினரின் சட்ட விரோத நடவடிக்கைகளில் பலியான அப்பாவி குடிமக்களின் மற்றும் போலீசாரின் மனித உரிமைகளைப் பற்றியும் நாங்கள் குறிப்பிட விரும்புகிறோம். மனித உரிமைகள் உலகளாவியவை. ஒவ்வொருவருக்கும் அவற்றை அனுபவிக்க உரிமை உண்டு. வாதங்களின் போது நாங்கள் சொன்ன ஆலோசனைகளை மீண்டும் கூறுகிறோம். மக்கள் யுத்தக்குழுவினர், தங்கள் சட்ட விரோத நடவடிக்கைகளை கைவிட்டு விட்டு அவர்கள் மற்றவர்களின் வாழ்வையும், உயிரையும் மதிக்க வேண்டும். மேலும் அவர்கள் தாங்களாகவே சட்டப்படியான நடைமுறைக்கு வந்து வாழ வேண்டும்.

மக்கள் யுத்தக் குழுவினரின் சட்டத்திற்கு எதிரான நடவடிக்கைகளால் ஆந்திரப் பிரதேசத்தில் குழப்பமும், களங்கமும் பெரிய அளவில் ஏற்பட்டதை நாங்கள் உணர்ந்து உள்ளோம். அந்தந்த சமயங்களில் மக்கள் யுத்தக் குழுவினரின் தாக்குதல்களில் போலீசார் பாதிப்புக்கு

உள்ளாவது மட்டுமல்லாமல், நகரங்களிலும், கிராமங்களிலும் பொதுமக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். பொதுமக்கள் உயிருக்கு ஆபத்து. அவர்கள் உடைமைக்குப் பாதுகாப்பு இல்லை. அவர்களுக்கு நிம்மதி இல்லை. சமுதாயத்தின் அமைதியும், நிம்மதியும் மக்கள் யுத்தக் குழுவினரின் கைகளில்தான் இருந்தன. அரசிற்கு இன்னலான சூழல் என்பதால், அது தன் கடமையை உறுதியாகவும், முழுமையாகவும் செயல்படுத்துகையில் தேவை என்ற கோட்பாட்டை, அடிப்படை உரிமைகளுக்கு எதிராக எடுத்துக்கொண்டு அரசியல் சட்டம் பிரிவு 21 மற்றும் சர்வதேச உடன்படிக்கை பிரிவு 6-ல்அளிக்கப்பட்டுள்ள உத்திரவாதத்தைப் பறிப்பதாக அமைந்து விடக்கூடாது என" மனித உரிமைகள் ஆணையம் கருதுகின்றது.[9]

காவல் கொட்டடிகளைப் பார்வையிடல் குறித்து கைது மற்றும் பொய் பேசுவதைக் கண்டறியும் (Polygraph) சோதனைகளுக்கு வழிகாட்டுதல்கள்

கைது செய்வது குறித்த தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் வழிகாட்டுதல்கள்[10]

அனைத்துலக மனிதகுல அறிக்கை கைது பற்றி கூறியுள்ளது.

நினைத்தபடி கைது செய்தல், காரணங்காட்டாது சிறையிடல் அல்லது நாடு கடத்தல் என்ற இவற்றுக்கு எவரும் உட்படுத்தப்படார் (பிரிவு 9).

வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய அனைத்துலக ஒப்பந்தம் கைது பற்றி தெளிவாகக் கூறுகிறது.

ஒவ்வொருவருக்கும் சுதந்திரமாய் இருக்கவும்; சொந்தத் தற்காப்புக்கும் உரிமை உண்டு. நினைத்தபடி கைது செய்தல் அல்லது காவலில் வைத்தலுக்கு எவரையும் ஆட்படுத்தக் கூடாது. சட்டபூர்வமாக ஏற்படுத்தப்பட்ட நடைமுறைகளுக்கு

ஏற்பவும், சட்ட ரீதியான காரணங்களுக்காகவும் தவிர, வேறு வகையில் எவரது சுதந்திரமும் பாதிக்கப்படக் கூடாது (பிரிவு 9-1).

கைது செய்யப்பட்ட எவருக்கும், கைது செய்யப்படும் சமயத்தில், அதற்குரிய காரணங்களை அறிவிக்க வேண்டும். அவருக்கெதிரான குற்றங்கள் பற்றியும் சரியானபடி உரிய நேரத்தில் அவருக்குத் தெரிவிக்க வேண்டும். (பிரிவு 9-2).

குற்றமிழைத்ததற்காகக் கைது செய்யப்பட்ட அல்லது காவலில் வைக்கப்பட்ட எவரும், உடனடியாக ஒரு நீதிபதிக்கு முன்போ, நீதித்துறை அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்குச் சட்டரீதியாக அங்கீகரிக்கப்பெற்ற வேறு அதிகாரிக்கு முன்போ கொண்டு வரப்பட வேண்டும். நியாயமானதொரு காலவரையறைக்குள் விசாரணையோ, விடுதலையோ பெற அவருக்கு அருகதை உண்டு. விசாரணையை எதிர் நோக்கியிருப்பவர்கள் பாதுகாவலில் சிறைப்படுத்தப்பட வேண்டும் என்பது பொது விதி அல்ல; ஆனால் நீதித்துறை நடவடிக்கைகளின் வேறு எந்தக் கட்டத்திலாவது விசாரணைக்கு ஆஜராகும் உத்தரவா தங்களின் அடிப்படையில் விடுதலை வழங்கப்படலாம்; சந்தர்ப்பம் வரும் போது தீர்ப்பை நிறைவேற்றவும் வேண்டும். (பிரிவு 9-3).

கைது செய்யப்படுதல் அல்லது காவலில் வைக்கப்படுதல் மூலமாய் எவரது சுதந்திரமாவது பறிக்கப்பட்டு விட்டால் அவர் கைதான சட்டரீதியான தன்மை பற்றித் தாமதமின்றி நீதிமன்றம் முடிவெடுக்கவும், அப்படிக் காவலில் வைக்கப்பட்டது சட்டரீதியாகச் செல்லாது என்றால் அவரது விடுதலைக்கு உத்தரவிடவும் உதவும் வகையில், ஒரு நீதி மன்றத்தின் முன்பாகத் தமது வழக்கை எடுத்துச் சொல்ல அவருக்கு உரிமை உண்டு (பிரிவு 9-4).

சட்டத்திற்குப் புறம்பான விதத்தில் கைது செய்யப்படல் அல்லது காவலில் வைக்கப்படலுக்கு உள்ளாகி அவதியுற்ற எவருக்கும், நஷ்ட ஈடு கோரும் உறுதியான உரிமை உண்டு (பிரிவு 9-5).

"கைது செய்யப்படுவது, கைது செய்யப்பட்டவரின் சுதந்தரத்தைக் கட்டுப்படுத்துகிறது. எனவே, கைது செய்வது மனித உரிமைகளின் அடிப்படையான சுதந்திரத்தில் தலையிடுகிறது. இந்திய அரசியல் சட்டம் மட்டுமல்ல, சர்வதேச மனித உரிமைகள் சட்டமும்கூட, மாநில அரசு, சட்டம் ஒழுங்கினை நிலைநாட்டும் தன்னுடைய அடிப்படைப் பணியில் எந்த ஒருவரையும் கைது செய்யும் அதிகாரத்தை அங்கீகரிக்கிறது. நியாயமான,நேர்மையான, உண்மையான சட்ட முறைகளின்படி மட்டுமே இச்சுதந்திர பறிப்பை அரசியலமைப்புச் சட்டம் அனுமதிக்கிறது.[11]

அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 22(1)-ன்படி கைது செய்யப்படும் எல்லா நபருக்கும், எந்த அடிப்படையில் கைது செய்யப்படுகிறார் என்பதை கைது செய்யப்பட்டவுடன் தெரிவிக்க வேண்டும். கைதானவரின் விருப்பத்திற்கு இணங்க வழக்குரைஞரை கலந்து ஆலோசிக்கும் உரிமையையோ, அவர் மூலம் பாதுகாத்துக் கொள்ளும் உரிமையையோ மறுக்கக்கூடாது. 1973 குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 50-ன்படி ஒருவரைக் கைது செய்யும் காவல் அலுவலர், உடனடியாக அவர் கைது செய்யப்படுவதற்கான குற்றத்தின் முழு விபரங்களையும் அல்லது கைதுக்கான அடிப்படைக் காரணங்களையும், தெரிவிக்க வேண்டும். இத் தேவைகள் மீறப்படும் போதே கடைப்பிடிக்கப்படுவதாகவும் உள்ளது.[12]

"அரசியல் சட்டம் பிரிவு 22 (2) மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 57 இவற்றின்படி கைது

செய்யப்பட்டவரை நீதிமன்றத்தில் சட்ட முறைப்படி கட்டாயம் ஆஜர்படுத்தவேண்டும்.

மனித உரிமை மீறல்களில் கைது செய்தல் மற்றும் காவல் நிலைய காவலில் வைக்கும் போது போலீசின் அதிகாரங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதாக மனித உரிமைகள் ஆணையம் கருதுகிறது, தொடர்பாக நிறையப் புகார்கள் உள்ளன. குறிப்பாக, சட்டத்திற்கும், நடைமுறைக்கும் உள்ள இடைவெளியைக் குறைக்கின்ற வகையிலே, சட்டம் ஒழுங்கை சிறப்பாகப் பராமரிப்பதற்காக சரியாக புலன் விசாரணை செய்யும் போலீசாரின் அதிகாரங்களைக் குறைக்காமலேயே கைது செய்வதில் வழிகாட்டும் நெறிகளை வரையறுக்க வேண்டிய அவசியம் உள்ளது என மனித உரிமைகள் ஆணைம் கருதுகிறது.

1. கொலை, கலகம் விளைவித்தல், திருட்டு, பாலியல் பலாத்காரம் போன்ற மிகக் கடுமையான குற்றங்களில் குற்றவாளியென சந்தேகிக்கப்படுபவர் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பித்து அல்லது மறைந்துவிடுவார் என்றால் அவரைக் கைது செய்வது அவசியம்.
2. சந்தேகத்துக்கு உள்ளானவர் கொடூரமான நடத்தையாளர். அவர் மீண்டும் குற்றங்கள் செய்வார் என்றாலும் கைது செய்யலாம்.
3. சந்தேகத்துக்கு உள்ளானவர், சாட்சியங்களை அழித்து விடுவார் அல்லது சாட்சிகளை கலைத்து விடுவார் அல்லது சந்தேகத்துக்குள்ளான கைதாகாத மற்றவர்களை எச்சரித்து விடுவார் என்றாலும் கைது செய்யலாம்.
4. சந்தேகத்துக்கு உள்ளானவர் வழக்கமான குற்றவாளி, கைது செய்யப்படாவிட்டால் இதே போன்ற அல்லது வேறு குற்றங்களை அவர் செய்வார் என்றாலும் கைது

செய்யலாம். (தேசிய போலீஸ் ஆணையத்தின் மூன்றாவது அறிக்கை)

மேலே குறிப்பிட்ட மிகக் கொடிய வழக்குகளைத்தவிர, காவல்துறை அதிகாரி சம்பந்தப்பட்ட நபருக்கு போலீஸ் நிலையத்துக்கு வந்து அங்கிருந்து அனுமதி இல்லாமல் வெளியே போகக்கூடாது என நோட்டீசு அனுப்பி, கைதினைத் தவிர்க்கலாம்.

சந்தேகப்படுபவர்கள் தலைமறைவாகி விடுவார்கள் என்ற அச்சம் இல்லாவிட்டால் ஜாமீனில் விடக்கூடிய குற்றங்களுக்கும் கைது செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

கைது அல்லது விசாரணைக்குச்செல்லும் காவல்துறை அலுவலர்கள் தங்களின் பெயர் மற்றும் பதவி அட்டையுடன், சரியான அடையாளத்துடன் சென்று செயல்பட வேண்டும். காவல் நிலையத்தில் உள்ள பதிவேடுகளில் கைது மற்றும் விசாரணையில் ஈடுபட்ட காவல் அதிகாரிகளின் பெயர்கள் உடனடியாகப் பதிவு செய்யப்பட வேண்டும்.[13]

## கைது : குற்றம் சாட்டப்பட்டவர்களின் உரிமைகள்

கைது செய்யும் பொழுது பலாத்காரத்தைப் பயன்படுத்தக்கூடாது என்பதை ஒரு விதியாகவே கடைப்பிடிக்க வேண்டும். இருப்பினும், கைது செய்வதைத்தடுக்க எதிர்ப்புக் காட்டினால், அந்த எதிர்ப்பை எதிர்கொள்ள குறைந்தபட்ச வலிமையைப் பயன்படுத்தலாம். கைது செய்யப்படுபவருக்கு வெளிப்படையாகவோ, வேறு வகையிலோ காயங்கள் ஏற்படக்கூடாது என்பதில் கவனமாய் இருக்க வேண்டும்.

கைது செய்யப்படுபவரின் கண்ணியம் காக்கப்பட வேண்டும். கைதுக்குப்பின் ஊர்வலமாக நடத்திச் செல்வதோ, அவரை பொதுமக்களின் பார்வைக்குக் காட்சிப்

பொருளாக்குவதோ எந்த நிலையிலும் அனுமதிக்கக் கூடாது.

கைது செய்யப்படுபவரின் அந்தரங்க உரிமையை மதித்து, பலாத்காரமின்றியும், ஆவேசமின்றி, அவர் கண்ணியத்தை மதித்து, அவரைக் கைது செய்திடுவதற்காக பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். பெண்களை நாகரீகமான முறையில் பெண் போலீசார்தான் பரிசோதனை செய்ய வேண்டும். (பிரிவு 51 (2) குற்றவியல் நடைமுறைச் சட்டம்)

கை விலங்கிடுவதோ, கால் சங்கிலியிடுவதோ கூடாது. அப்படிச் செய்யும் அவசியம் ஏற்பட்டால் உச்சநீதிமன்றம் விளக்கியுள்ள நடைமுறைப்படியே செய்யப்பட வேண்டும்.

பெண்களைக் கைது செய்யும் பொழுது, இயன்றவரை பெண் காவலரை, கைது நடவடிக்கையின் போது உடனிருக்க வேண்டும். சூரியன் மறைந்து பின் சூரியன் உதயம் ஆகும் கால இடைவெளியில் பெண்களைக் கைது செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

எந்தச் சூழ்நிலையிலும் குழந்தைகள் மற்றும் வளர் இளைஞர்களை (Juveniles) கைது செய்யும் பொழுது பலாத்காரத்தை, பயன்படுத்துவதோ, அடிப்பதோ கூடாது. காவல் துறை அலுவலர்கள், குழந்தைகள் அல்லது வளர் இளைஞர்களை கைது செய்கையில் சமூகத்தில் மதிப்பிற்குரிய நபர்கள் உடனிருக்க வேண்டும். இதனால், இவர்கள் அச்சுறுத்தப்படுவது தவிர்க்கப்படலாம். குறைந்த அளவு பலாத்காரமே பயன்படுத்தப்படும்.

பிடியாணை இல்லாமல் கைது செய்யப்படும் பொழுது, கைதாகுபவருக்குப் புரிகின்ற மொழியில் கைதுக்கான காரணங்களை உடனடியாக விளக்கிடவேண்டும். இந்த நோக்கத்திற்காகப் போலீசார் தேவைப்பட்டால் சமூகத்தில் மதிப்பிற்குரிய நபர்களின் உதவியைப் பயன்படுத்திடலாம்.

கைதுக்கான காரணங்கள் காவல் துறை பதிவேடுகளில் எழுத்து மூலம் பதிவாகியிருக்க வேண்டும். கைதான நபரிடம் பதிவேட்டில் உள்ள தகவலைக் காட்டுவதுடன், அவர் வேண்டினால் அதன் நகலையும் தரவேண்டும்.

கைதான நபர் தேவையென்று வேண்டுகோள் விடுத்தால் அவருடைய நண்பர் அல்லது உறவினர் அல்லது தெரிந்தவருக்கு அவர் கைது செய்யப்பட்ட தகவலையும், காவலில் வைக்கப்பட்டதையும் தெரிவிக்க வேண்டும். யாருக்குத் தெரிவித்தார்களோ,அந்த நபர் குறித்த தகவல்களையும் பதிவேடுகளில் பதிவாக்கிட வேண்டும்.

பிணையில் விடக்கூடிய குற்றத்திற்காகக் கைது செய்யப்படும் ஒருவரை கைது செய்தால், காவல் துறை அதிகாரி அந்த நபருக்கு அவரின் பிணையில் வெளிவருவதற்கான உரிமை குறித்து தெரிவிக்க வேண்டும். அப்போதே அவர் தனக்கான ஜாமீன்தாரரை ஏற்பாடு செய்து கொள்ள முடியும்.

கைதானவரின் இந்த உரிமைகளைச்சொல்வதுடன், காவல் துறை அவர் விருப்பப்பட்ட வழக்குரைஞரை கலந்தாலோசிக்கவோ, பாதுகாப்புப் பெறவோ அவருக்கு உரிமை உண்டு என்பதையும் தெரியப்படுத்திட வேண்டும். அவருக்கு அரசு செலவில் இலவச சட்ட உதவி பெறவும் உரிமை உள்ளதைத் தெரிவிக்க வேண்டும்.

கைது செய்யப்பட்டவர் காவல் நிலையத்திற்குக் கொண்டு வரும் பொழுது, அவர் விரும்பி வேண்டினால் சரியான மருத்துவ உதவி தரப்பட வேண்டும். அதற்கான உரிமை அவருக்கு உண்டு என்பதைத் தெரிவிக்க வேண்டும். கைதானவருக்கு மருத்துவ உதவி தேவை இருந்தும் அதற்கான வேண்டுகோள் கொடுக்கும் நிலையில் இல்லாவிட்டாலும், அதனைக் கண்டுணர்ந்த காவல் துறை

அதிகாரி மருத்துவ உதவிக்கு சரியான முறையில் ஏற்பாடு செய்ய வேண்டும். இது பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும். கைதானவர் பெண்ணாக இருந்தால் அவர் பதிவு செய்த பெண் மருத்துவரால் மட்டுமே பரிசோதிக்கப்பட வேண்டும். மருத்துவ உதவி பெற்றிட வேண்டும். (பிரிவு 53 குற்றவியல் நடைமுறைச் சட்டம்)

கைதானது மற்றும் காவலில் வைக்கப்பட்டுள்ள இடம் குறித்த தகவல், கைது செய்த காவல்துறை அதிகாரியால் உடனடியாக மாவட்ட - மாநில காவல் கட்டுப்பாட்டு அறைக்கு அனுப்பிட வேண்டும். 24 மணி நேரமும் இந்தத் தகவல்களைப் பெறும் கட்டுப்பாட்டு அமைப்புகள் செயல்பட வேண்டும்.

ஒரு நபர் கைதானவுடன், கைதானவரின் உடலில் காயங்கள் உள்ளனவா? இல்லையா? என்பதை கைதை செயல்படுத்திய காவல் துறை அதிகாரி கைதுப் பதிவேடுகளில் குறிப்பிட வேண்டும். கைதானவரிடம் காயங்கள் காணப்பட்டால், காயங்களின் முழுமையான விவரிப்பும் காயங்களுக்கான காரணங்களும் பதிவேடுகளில் குறிப்பிடப்பட வேண்டும். அக்குறிப்பில் காவல் அதிகாரியும், கைதானவரும் கையொப்பமிட வேண்டும். கைதானவர் விடுவிக்கப்படும் பொழுது இது குறித்த சான்றிதழ் காவல் அதிகாரியின் கையொப்பத்துடன் கைதானவருக்கு கொடுக்கப்பட வேண்டும்.

நீதிமன்ற உத்தரவின்படி கைதானவர் காவல் துறையின் காவலில் வைக்கப்பட்டால் காவலில் உள்ள 48 மணி நேரத்திற்கு ஒருமுறை சம்மந்தப்பட்ட மாநிலம் அல்லது யூனியன் பிரதேச மருத்துவ சேவைத்துறை இயக்குநரால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர்குழு மருத்துவரால் கைதானவர் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட

வேண்டும். காவலில் இருந்து விடுவிக்கப்படும் பொழுது மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அவர் உடம்பில் காயங்கள் உள்ளனவா?இல்லையா? என்று குறிப்பிட்டு அவருக்குச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும்.

கைது செய்யப்பட்டவர் உரிய நீதிமன்றத்தில் கைதான 24 மணி நேரத்திற்குள் ஆஜர்படுத்தப்படவேண்டும்.

விசாரணையின் போது எந்நேரத்திலும் கைதுசெய்யப்பட்டவர் அவருடைய வழக்குரைஞரைச் சந்திக்க அனுமதிக்கப்பட வேண்டும்.

விசாரணைக்காக அரசு அறிவித்துள்ள, எளிதில் அடையாளம் காணக்கூடிய இடங்களில் தான் விசாரணை நடத்தப்படவேண்டும். அது எளிதில் சென்று அடையக்கூடிய இடமாக இருக்க வேண்டும். எங்கு விசாரணை நடைபெறுகின்றது என்பதை கைதானவரின் உறவினர்களுக்கோ அல்லது நண்பர்களுக்கோ அவசியம் தெரியப்படுத்திடவேண்டும்.

விசாரணை முறையானது அங்கீகரிக்கப்பட்டுள்ள உயிர் வாழும் உரிமை, கண்ணியமாக, சுதந்திரமாக நடத்தப்படுவதற்கான உரிமை மற்றும் சித்திரவதை மற்றும் கீழ்த்தரமாக நடத்தப்படுவதற்கெதிரான உரிமை ஆகியவற்றுடன் இயைந்ததாக இருக்க வேண்டும்.[14]

## வழிகாட்டுதல்களை செயல்படுத்துதல்

1. இவ்வழிகாட்டுதல்கள் கூடுமானவரை பிற மொழிகளில் மொழியாக்கம் செய்ய முடியுமோ அவ்வாறு செய்து எல்லா காவல்நிலையங்களுக்கும் தரப்பட வேண்டும். இந்த வழி காட்டுதல்கள் சிறு கையேடுகளாக ஒவ்வொரு காவல் துறை அதிகாரிகளுக்கும் வழங்கப்படவேண்டும்.

2. இந்த வழிமுறைகள் அச்சு மற்றும் மின்னனு தகவல் தொடர்பு சாதனங்களின் மூலமாக அதிக அளவில் பரப்பப்பட வேண்டும். எல்லா காவல் நிலையங்களிலும் ஒன்றுக்கு மேற்பட்ட மொழியில் இவ்வழிகாட்டுதல்கள் அறிவிப்புப் பலகையில் எடுப்பானதாக இடம்பெறச் செய்ய வேண்டும்.

3. இந்த வழிகாட்டுதல்கள் மீறப்படுவது குறித்து, விசாரித்து குறைபாடுகளை நிவர்த்தி செய்து முறையான நடவடிக்கை எடுக்கும் அமைப்புகளை (Redressal Cells) காவல்துறை ஏற்படுத்திடவேண்டும்.

4. வழிகாட்டுதல்கள் எழுதப்பட்டுள்ள அறிவிப்புப்பலகையிலே புகார்களின் மீது குறை தீர்க்கும் அமைப்பு எங்குள்ளது? அதை எவ்வாறு அணுகலாம்? என்பதும் குறிப்பிடப்பட வேண்டும்.

5. அரசு சாரா நிறுவனங்கள், நீதிமன்றங்கள், மருத்துவமனைகள், பல்கலைக்கழகங்கள் இன்ன பிற அமைப்புகள் வழிகாட்டுதல்கள் குறித்த தகவல்களை பரவலான தளத்தில் எடுத்துச் சென்று மக்களை அடைந்திட தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

6. குறைதீர்க்கும் அமைப்பின் செயல்பாடுகள் வெளிப்படையாகவும், அதன் அறிக்கைகள் புகார்தாரருக்கு கிடைப்பனவாகவும் இருக்க வேண்டும்.

7. வழிகாட்டுதல்களை மீறிய காவல் அதிகாரி மீது சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும். அது போலீஸ்துறை சார்ந்த விசாரணை நடவடிக்கையாக மட்டுமின்றி, குற்றவியல் நீதி அமைப்புகளையும் நடவடிக்கை எடுக்கத் தூண்டுவதாக அமைய வேண்டும்.

8. இந்த வழிகாட்டுதல்கள் சரியாகக்கடைப்பிடிக்க வேண்டுமெனில் போலீஸ் அதிகாரிக்கு இவை குறித்து உணர்த்துதலும், பயிற்சியும் அவசியம்.

குற்றம் சாட்டப்பட்டவரிடம் பொய் பேசவதைக் கண்டு பிடிக்கும் கருவியான பாலிகிராப் மூலம் சோதனை மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் ஆணையம், மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த இந்த வி□யத்தை தனித்த கவனத்துடன் பரிசீலனை செய்து, பொய் பேசுவதைக் கருவிகள் மூலம் கண்டறியும் சோதனை செய்ய கீழ்க்குறிப்பிடும் வழிகாட்டுதல்களை முன்வைக்கின்றது.[15]

1. குற்றம் சாட்டப்பட்டவரின் சம்மதம் இல்லாமல் இச்சோதனை நடத்தப்படக்கூடாது. இந்த சோதனைக்கு உட்பட அவர் விரும்புகிறாரா? இல்லையா? என்பதை குறிப்பிட அவருக்கு வாய்ப்புத் தரவேண்டும்.

2. குற்றம் சாட்டப்பட்டவர் இச்சோதனைக்கு தன்னை உட்படுத்த தானாகவே முன்வந்தால், அவர் தன்னுடைய வழக்குரைஞரை சந்திக்க வாய்ப்புத்தரவேண்டும். மேலும், இச்சோதனை மூலம் விளையும், உடல் மற்றும் உணர்வு ரீதியான, சட்ட ரீதியான விளைவுகளை போலீஸாரும், வழக்குரைஞரும் அவருக்கு விளக்கிடவேண்டும்.

3. அவருடைய ஒப்பந்தமானது நீதிபதியின் முன்னிலையில் பதிவு செய்யப்பட வேண்டும்.

4. நீதிபதி முன்னிலையிலான விசாரணையில் சோதனைக்கு உட்பட சம்மதம் தரும் குற்றம் சாட்டப்பட்டவரின் சார்பாக அவரின் வழக்குரைஞருக்கு பிரதிநிதித்துவப்பட வேண்டும்.

5. நீதிமன்ற விசாரணையில், குற்றம் சாட்டப்பட்டவர் தரும் வாக்குமூலமானது ஒப்புதல் வாக்குமூலம் அல்ல

என்பதையும், அது போலீசாருக்கு தரும் வாக்கு மூலத்திற்குரிய தகுதியையே பெறும் என்பதையும் தெளிவுபடுத்திட வேண்டும்.

6. போலீஸ் காவலில் வைத்திருக்கும் காலம், விசாரணையின் தன்மை ஆகியவற்றிற்குத் தொடர்பான விஷயங்களை நீதிபதி பரிசீலிக்க வேண்டும்.

7. ஒரு வழக்குரைஞரின் முன்னிலையில் சுதந்திரமாகவுள்ள நிறுவனம் ஒன்றில் மருத்துவமனை போன்ற இடத்தில் பொய் பேசுவதைக் கண்டறியும் சோதனை நடத்தப்பட வேண்டும்.

8. ஒரு முழுமையான மருத்துவரீதியிலும்உண்மையை அடிப்படையாகக் கொண்டதுமாக தகவல் பெறப்பட்ட முறையானது பதிவு செய்யப்பட வேண்டும்.[16]

## உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிகளின் கடமைகள்

சிறைச்சாலைகளைப் பார்வையிடுவதும், சிறைக்கைதிகளின் நிலையைக் கண்டறிவதும், அங்குள்ள சீர்கேடுகளுக்கு தீர்வு காணும் நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதும், மனிதஉரிமை பாதுகாப்புச் சட்டம் 1993-ன்படி தேசிய மனித உரிமைகள் ஆணையத்திற்கு ஒப்படைக்கப்பட்ட முக்கிய செயல்பாடுகளில் ஒன்று. கடந்த பல ஆண்டுகளில் ஆணையத்தின் உறுப்பினர்களும், மூத்த அதிகாரிகளும் நாட்டின் பல பகுதிகளில் உள்ள சிறைச்சாலைகளைப் பார்வையிட்டு, அங்கு நிலவுகின்ற அளவுக்கு அதிகமான கைதிகளின் கூட்டம், சுகாதாரச் சீர்கேடுகள் மிக மோசமானசிறை நிர்வாகம் ஆகியவற்றால் அதிர்ச்சி அடைந்துள்ளனர். சிறை அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள், சிறைக்கைதிகளின் அடிப்படை மனித உரிமைகள் குறித்த உணர்வோ, அறிவோ இல்லாமல்

இருப்பது இந்தப் பிரச்சினையின் தீமைகளை இன்னமும் கூடுதலாக்குகிறது.

அமர்வு நீதிபதிகள்: "சிறைக்கைதிகளுக்கு அடிப்படையான குறைந்தபட்ச உடல்நலம், சுகாதாரமான சூழல், நல்ல மருத்துவ சிகிச்சை ஆகியவை மறுக்கப்படக்கூடாது" என்பதையும் அரசுதரப்பு பார்வையாளர்கள் உறுதிப்படுத்திட வேண்டும். நீதித்துறைக் காவலில் இருப்பவர்கள், சிறைச்சாலையில் சிறைக் கைதிகள் மனிதர்கள் வாழக்கூடிய நிலையில் இருப்பதை உறுதிப்படுத்தும் கடமை நீதிபதிகளுக்கு உள்ளதால், கைதிகளின் சிறை வாழ்வு நிலைமைகளை அவர்கள் முறையாகக் கண்காணிக்க வேண்டும். நீதிபதி கிருஷ்ணய்யர் பொருத்தமாகக் குறிப்பிட்டது போல, "சிறைக் கதவுகளுக்கும், மனித உரிமைகளுக்கும் இடையே இரும்புத்திரை எதுவும் இல்லை." மேலும் உச்சநீதிமன்றம் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதிகளும் குறிப்பாக, இந்த நோக்கத்திற்காக சிறைச்சாலைகளைப் பார்வையிடவேண்டும். இதை அவர்களின் அலுவலகக் கடமையின் ஒரு பகுதியாகக் கருத வேண்டும் என கட்டளையிட்டது. சிறைக்கைதிகளின் புகார்கள் குறித்து விரைவான விசாரணைகளை முடித்து, பொருத்தமான, நிலைமையை திருத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

ஆணையம் வெவ்வேறு சிறைச்சாலைகளைப் பார்வையிட்ட பொழுது, அமர்வு நீதிபதிகள் சிறைச்சாலைகளை அடிக்கடி முறையாகப் பார்வையிடுவதில்லை என்றும் அமர்வு/மாவட்ட நீதிபதியைத் தலைவராகக் கொண்ட மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளரை உள்ளடக்கிய மாவட்டக்குழு, சிறைக்கைதிகளின் நிலைமை மறுபரிசீலனை செய்ய

குறிப்பிட்ட கால இடைவெளிகளில் கூடுவதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

உண்மையிலேயே பெரும்பான்மையான சிறைகளில் விசாரணைக் கைதிகளே அதிகம் உள்ளனர். அவர்கள் வழக்குகள் பெரும்பான்மையாக நீதித்துறையின் கால தாமதம், காவல்துறையின் அலட்சியப் போக்கு ஆகியவற்றால் முடிக்கப்படாமல் இருப்பதால் சிறு குற்றங்கள் செய்ததற்காக நெடுங்காலம் சிறையில் வாடுகின்றனர். இதை இங்கு மீண்டும் கூறத்தேவையில்லை. மாவட்ட நீதிபதிகள் சிறைச்சாலையைப் பார்வையிடும் பொழுது இந்தப் பிரச்சினையை ஆய்வு செய்து, விசாரணையை விரைவாக முடிக்க உறுதி செய்ய வேண்டும். உச்சநீதிமன்றம் பல தீர்ப்புகளில் இந்த உண்மையைக் கவனத்தில் கொண்டு, சிறைச்சாலைகளில் உடனடியாகக் கவனிக்க வேண்டிய பிரச்சினைகளையும், தவறினால் ஏற்படும் விளைவுகளையும் விளக்கியுள்ளது. உச்சநீதிமன்றம் விரைவான விசாரணைகளுக்கு உடனடி விரைவு நடவடிக்கைகள் எடுத்து அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 21-ன்படி விரைவானநீதி என்பதை உண்மையாக்கிட வலியுறுத்துகிறது.

ஒரு மனித உரிமை மீறலுக்கான பாதிப்பை உருவாக்கும் இத்தீவிரமான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்க மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதிகளுக்கு தகுந்த உத்தரவுகளை அளிப்பதை நீங்கள் பரிசீலிக்குமாறுகேட்டுக் கொள்கிறேன். இதுவே அரசியல் சாசனத்தில் உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

## சிறார்களை கடுமையான பணிகளில் ஈடுபடுத்துதல்

கடுமையான வீட்டுவேலைகளுக்குச் சிறாரை நீண்ட நேரம் உட்படுத்துவது குறித்த அறிக்கைகள் மனித உரிமைகள்

ஆணையத்தின் ஆய்விற்கு வந்தன. 14 வயதுக்கு உட்பட்ட சிறாரை அரசு ஊழியர்கள் வீட்டுவேலைகளுக்கு பயன்படுத்துவதாகவும் புகார்கள் சென்றன. 14 வயதிற்கு உட்பட்ட சிறாரை யார் வேலைக்கு அமர்த்தினாலும், அதுவும் அரசு ஊழியர்கள் அமர்த்துவதானது மிகவும் கண்டனத்துக்குரியது ஆகும். மத்திய மற்றும் மாநில அரசு ஊழியர்களுக்கான நடத்தை விதியில் இப்படி சிறாரை வேலைக்கு வைப்பதை தடைசெய்து, மீறி செய்தால் மிகப் பெரிய தண்டனைக்குரிய குற்ற நடவடிக்கையாகக் கருதும் அளவில் புதிய விதி சேர்க்கப்பட்டன.

மத்திய ஆட்சிப்பணி நடத்தை விதிகள் 1964, பிரிவு 22-ஏ கீழ்க்குறிப்பிட்டபடி சேர்க்கப்பட்டுள்ளன.

1. 14 வயதுக்குட்பட்ட சிறுவர்களை எந்த அரசு ஊழியரும் வேலைக்கு அமர்த்தக் கூடாது.
2. இந்த விதியை மீறுவது பெரிய தண்டனைக்குரிய குற்ற நடவடிக்கையாகக் கருதப்படும்.

மாநில ஊழியர்களுக்கு இதே போன்று விதியை நன்னடத்தை விதியை அரசு ஊழியர்கள் 14 வயதுக்குட்பட்ட சிறாரை வீட்டுவேலைக்கு அமர்த்துவதை தடை செய்து நடவடிக்கை எடுக்க மாநில முதலமைச்சர்களுக்கு மனித உரிமைகள் ஆணையம் கடிதம் எழுதியது.

14 வயதுக்குட்பட்ட சிறாரை கடுமையான வீட்டு வேலைகளுக்கு அரசு ஊழியர்களே பயன்படுத்துவதாகவும், சில சந்தர்ப்பங்களில் அவர்களை சித்ரவதைக்குள்ளாக் குவதாகவும் ஆணையத்திற்கு வேதனைக்கு இடமளிக்கும் அறிக்கைகள் வந்து கொண்டே இருக்கின்றன. அண்மையில் உச்சநீதிமன்றம், வழங்கிய தீர்ப்பு ஒன்றில் 14 வயதுக்குட்பட்ட எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாயமாக, இலவசக் கல்வி பெறும் உரிமையை அடிப்படை உரிமையாக, தெளிவாக

நிலைநாட்டி உள்ளது. சிறாரை வீட்டு வேலைக்கு அமர்த்துவது இந்தத்தீர்ப்பின் சீரிய உணர்வை மதித்து உதவுவதாக இருக்காது.

14 வயதுக்கு உட்பட்ட சிறாரை யார் வேலைக்கு அமர்த்தினாலும், அதுவும் அரசு ஊழியர்கள் செய்வது மிகவும் கண்டனத்துக்குரியது. மத்திய மற்றும் மாநில அரசு ஊழியர்களுக்கான நடத்தை விதியில் இப்படி சிறாரை வேலைக்கு அமர்த்துவதை தடை செய்து மீறினால் மிகப்பெரிய தண்டனைக்குரிய குற்ற நடவடிக்கையாகக் கருதிட - புதிய விதி சேர்க்கப்பட்டுள்ளன.

22-ஏ ஆவது கீழ்க்கண்டவாறு இது பற்றி தெளிவாக வலியுறுத்துகிறது.

1. 14 வயதுக்கு உட்பட்ட சிறாரை எந்த அரசு ஊழியரும் வேலைக்கு அமர்த்தக்கூடாது.
2. துணை விதி (1)ஐ மீறுவது மிகப்பெரிய தண்டனைக்கு உரிய குற்ற நடவடிக்கையாகக் கருதப்படும்.

## தேசிய மனித உரிமை ஆணையம் பொது மக்களின் விழிப்புணர்வு[17]

நாட்டின் மனித உரிமை மீறல் தொடர்பாக பொது மக்களிடம் விழிப்புணர்வு குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்துள்ளது.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் மனித உரிமை மீறல் தொடர்பாக மனித உரிமை ஆணையத்துக்கு வந்த மனுக்கள் வெறும் 500 ஆகும். ஆனால் இந்த ஆண்டில் மட்டும் இதுவரை சுமார் 70 ஆயிரம் மனுக்கள் வந்துள்ளதாக தேசிய மனித உரிமை ஆணையம் தெரிவித்துள்ளது.

மனித உரிமை தினம் டிசம்பர் 10-ம் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. உலக நாடுகளுடன் இந்தியாவும் இணைந்து இதனைக் கடைப்பிடித்து வருகிறது.

மனிதஉரிமை மீறல் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து வரும் புகார் மனுக்கள் எண்ணிக்கை முன்பை விட 7 மடங்கு அதிகரித்துள்ளது. அடிப்படை உரிமைகளுக்காக மட்டுமின்றி துன்புறுத்தல் போன்ற சம்பவங்களுக்காகவும் மனிதஉரிமை ஆணையத்தை நாடும் அளவுக்கு பொதுமக்கள் விழிப்புணர்வு பெற்றுள்ளனர் என்று மனிதஉரிமை ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

1993-94ல் மனித உரிமை மீறல் தொடர்பாக 498 மனுக்கள் ஆணையத்துக்கு வந்தன. ஆனால் இது படிப்படியாக உயர்ந்து கடந்த 2000-01ம் ஆண்டில் 71,556 ஆக உயர்ந்துள்ளது.

குறிப்பாக பஞ்சாப், ராஜஸ்தான், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து தான் அதிக அளவில் மனுக்கள் வந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

போலீஸ் அத்துமீறல்கள், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின மக்கள் மீதான கொடுமைகள், குழந்தைத் தொழிலாளர் மற்றும் கொத்தடிமைகள், குழந்தைத் திருமணம், மதக் கலவரம், வரதட்சணை சாவு, ஆள் கடத்தல், பலாத்காரம் மற்றும் பாலியல் கொடுமை ஆகியவை தொடர்பாகவே அதிக மனுக்கள் வருவதாக தேசிய மனித உரிமை ஆணையம் அறிவித்துள்ளது.

எட்டாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி எந்த மொழியிலும் புகார்களைப் பதிவு செய்யலாம். அதேபோல், தபால், தந்தி, அல்லது இ-மெயில் மூலமாகவோ புகார் அனுப்பலாம். தொலைபேசி வாயிலாகவோ புகார்களைத் தெரிவிக்கலாம். இதற்கு கட்டணம் எதுவும் கிடையாது.

புகார் மனுக்கள் தொடர்ந்து அதிகரித்து வருகிறதே தவிர, ஆணையத்தில் பணிபுரியும் ஊழியர்களின்

எண்ணிக்கையில் மாற்றமில்லாததால் எதிர்பார்த்த அளவுக்கு மனுக்களின் மீது உடனடி நடவடிக்கை இல்லை என மக்கள் சிவில் உரிமைக் கழகம் கருதுகிறது.[18]

## அடிக்குறிப்புகளும் சான்றுகளும்


1. அடைக்கலம் சுப்பையன், காமன்வெல்து நாடுகள் (சென்னை, மணிவாசகர் பதிப்பகம், 1999) 99-102.

1எ. The Protection of Human Right Act 1993; No.10 of 1994, 8th January 1994, National Human Rights Commission. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் முக்கிய உத்தரவுகளும், வழிகாட்டுதல்களும், புது டெல்லி 2001,

2. மேலது,

3. மேலது,

4. நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா தலைவர் தேசிய மனித உரிமைகள் ஆணையம் கடிதம் தேதி ஆகஸ்ட் 10, 1995.

5. மேலது,

6. நீதிபதி எம்.என். வெங்கடாச்சலய்யா, தலைவர், இந்தியாவின் முன்னால் தலைமை நீதிபதி, கடிதம் மார்ச் 27, 1997.

7. International Covenant on Civil and Political Rights Adopted by the General Assembly resolution 220 of (XXI) of 16 December 1966 Entered into force 23 March 1976.

8. நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா, நீதிபதி எம். பாதிமா பீவி, வி.எஸ். மாலிமாத் தேசிய மனித உரிமைகள் ஆணையம், புதுடில்லி, நவம்பர் 5, 1996, புகார்தாரரின் பெயர் ஆந்திரப் பிரதேச சிவில் உரிமைகள் குழு.

9. மேலது,

10. கைது செய்வது குறித்த தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் வழிகாட்டுதல்கள் நவம்பர் 5, 1996.

11. மேலது,

12. மேலது,

13. பிரேம்சங்கர் சுக்லா எதிர் டில்லி நிர்வாகம் (1980 3 உச்சநீதிமன்ற வழக்கு 526) மற்றும் ஜனநாயகத்திற்கான குடிமக்கள் அமைப்பு எதிர் அஸ்ஸாம் மாநில அரசு (1995 3 உச்சநீதிமன்ற வழக்கு 743) வழக்குகளில்

14. டி.கே.பாசு வழக்கு (1999) 1 உச்சநீதிமன்ற வழக்கு.

15. பொய் பேசுவதைக் கண்டுபிடிக்கும் கருவியான பாலிகிராப் பரிசோதனையை மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள், தேசிய மனித உரிமைகள் ஆணையம், ஜனவரி, 2000.

16. மேலது,

17. தினமணி, டிசம்பர் 10, 2004.

18. தினமணி, டிசம்பர் 10, 2004.

# 9. மகளிரும் மனித உரிமைகளும்

"ஆணுக்குப் பெண் சரிநிகர் சமானம்" இது பெண்களின் பிரச்சினை மட்டுமல்ல, மனித சகோதர சகோதரிகளின் பிரச்சினை ஆகும். இரு தரப்பினரும் ஒன்றாக எழ வேண்டும். பெண்களையோ ஆண்களையோ தனித்தனியாக உயர்த்த முடியாது.

- பிரடெரிக் டக்ளஸ்

அமைதியை உருவாக்கும் செயல்முறையில் மக்களாட்சியையும் மனித உரிமைகளையும், ஊக்குவிப்பது ஓர் இன்றியமையாத அங்கமாகும். அவ்வாறே மகளிர் உரிமைகளை ஊக்குவிப்பதும் இன்றியமையாததாகும். மனித உரிமைகளில் நமக்கு உண்மையிலேயே நம்பிக்கை இருக்குமானால், மகளிர்க்கு எதிரான ஓரவஞ்சனையை நாம் எவ்வாறு சகித்துக்கொள்ள முடியும்?

நடைமுறையில், மக்களின் அருந்திறம்பாடுகளைப் புறக்கணிப்பதால் மேம்பாட்டுக்கு ஏற்படும் இழப்பு அளவிறந்தது. அறநெறிப்படி 21-ஆம் நூற்றாண்டின் விடியலில், மகளிரின் அடிப்படைச் சுதந்திரங்களைக் கட்டுப்படுத்துவது மன்னிக்க முடியாத கொடுமை. மகளிர் உரிமைகள் பற்றிய சிக்கல் கல்வியின் எல்லைக்கு அப்பாற்பட்டது. எனினும் கல்வி முறைகள் குறிப்பாக ஆசிய நாடுகளில் முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்று இதுவாகும்.

## பெண்ணுரிமைகள்

ஆணுக்குச் சரிநிகராகப் பெண்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்புப் பெறுவதன் மூலம், மிகப்பெருமளவுப் படைப்பாற்றலும், ஆக்கமுறை ஆற்றல்களும் வெளிப்படும், புதுமையான பங்கேற்புக்கு ஊக்கம் உண்டாகும்; அதே சமயம், ஆண்களின் மனப்போக்குகளும் மாறுதலடையும்.

ஒரு காலத்தில் ஆண்களுக்கே உரித்தானவை என கருதப்பட்ட, பெண்கள் நுழையவே முடியாமல் தடைசெய்யப்பட்ட பணிகளையும் தொழில்களையும் ஏராளமான பெண்கள் செய்யத் தொடங்கி விட்டார்கள். மருத்துவர்கள், கம்மியர்பணி, பொறியாளர்கள், வழக்கறிஞர்கள், பொறி பற்றவைப்பாளர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் அமைச்சர்கள் ஆட்சித்துறை பணிகள் (IAS, IPS) அதிகாரிகள், என உயர்வருமான தொழில்களிலும் பணிகளிலும் பெண்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவ்வாறே ஆண்களும், தந்தையர் கடமைகள் என்று சொல்லப்பட்டதை மறு வரையரை செய்யத் தொடங்கி விட்டார்கள். அதில், குழந்தைகளுக்கு உணவூட்டி, ஆடையணிவித்து பேணிக்காப்பது போன்ற “பெண்கள் வேலைகளும்” அடங்கும்.

மேலும், கடும் எதிர்ப்புகளையும் மீறி, பெண்களுக்கும் ஆண்களுக்குமிடையிலான உறவுகள் படிப்படியாக சமத்துவமடைந்து வருகின்றன. ஆண்கள், பெண்களை விட முக்கியமானவர்கள். ஆண்கள் செய்வது பெண்கள் செய்வதைவிட முக்கியமானது என என்றோ ஆழ்மனதில் விதைக்கப்பட்ட, நம்பிக்கைகளும் மாறத் தொடங்கி விட்டன.

"அடுத்த முறையாவது பையன்" என இப்போதும் பேசுகின்றார்கள்.

## பெண்ணுரிமை இயக்கம்

பெண்ணுரிமை இயக்கம் நீண்ட வரலாற்றைக் கொண்டது. பெண்கள் விடுதலை இயக்கம் இன்னும் முன்னோடிக் கட்டத்தைக் கடந்து விட்டது. இப்போது அதற்கு மிகப் பெரும் ஆதரவு கிடைத்துள்ளது. பாலினங்களுக்கிடையிலான போரில் இந்த இயக்கம் ஒரு தலையானது என்று இனியும் கருத முடியாது. இது இன்று அதிகாரத்தையும், ஏற்றத் தாழ்வு அடிப்படையிலான நடத்தை முறைகளையும் எதிர்த்து அரசியல், சமூக, சட்ட, சொந்த நிலைகளில் நடைபெறும் போராட்டத்தின் ஒரு பகுதியாகிவிட்டது. இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மகளிர் ஆண்களின் சில சமயம் பெண்களின் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. அதே சமயம், இவர்கள் போராட்டத்தில் மேன்மேலும் அதிகமான ஆண்கள் சேர்ந்து பணியாற்றுகிறார்கள்.

ஆணுக்குப் பெண் சரிநிகர் சமானமாக மதிக்கப்பட வேண்டும். எல்லாத்துறைகளிலும் அவரவர் திறம்பாடுகளுக்கேற்ப வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும்; இதுவரை ஆண்களுக்கு மட்டுமே பொறுப்பு வகித்து வந்த அனைத்து நிலைகளிலும் பெண்களுக்கும் சமவாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்; ஆண்களுக்கு நிகரான சமூக உரிமைகளும், வெற்றி வாய்ப்புகளும் பெண்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும். வாழ்வு, சாவு, குடும்பம், சமுதாயம், பொருளாதார மேம்பாடு, உலகின் எதிர்காலம்

போன்ற அடிப்படைச் சிக்கல்களுக்குத் தீர்வுகாண்பதில் மனிதகுலத்திற்கும் பங்களிப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்பளிப்பது மிகமிக முக்கியமாகும். இவையே இந்தப் போராட்டத்தின் நோக்கங்கள்

"வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் சொந்த சமூக, உடலியல், அறிவியல், ஆன்மீகம் அனைத்திலும் சமத்துவம் பிறக்கட்டும்" என்று யாராவது சொன்னால் அதை மனத்தை புண்படுத்துவதாக எடுத்துக் கொள்ளும் தாய் தந்தையர் இன்று அதிகம்.

சிலரைப் பொறுத்தவரை (இதில் இருபாலரும் உண்டு) இந்த மாற்றங்கள் இன்னமும் உயர்ந்த மனித நேயமுள்ள, வன்முறை குறைந்த அநீதியற்ற, எதிர்காலத்திற்கான நம்பிக்கை ஊற்றாக விளங்குகிறது; ஒரு வகைமனிதர் அவர் வேறு இனத்தையோ, நாட்டையோ, சமயத்தையோ, பாலினத்தையோ சேர்ந்தவராக இருந்தாலும் இன்னொரு வகையினரை விட கீழானவராகக் கருதப்பட மாட்டார். ஆனால், மற்றவர்களுக்கு இந்த மாற்றங்கள் குழப்பத்தின், அச்சத்தின் ஊற்றுக்கண்ணாக விரைந்து மாறும் உலகில் எழுந்துள்ள கவனிக்கப்பட வேண்டிய இன்னொரு சிக்கலாக இருக்கின்றது.

மகளிர்க்குச் சொத்தில் சமஉரிமை என்ற சட்டம் தமிழ்நாட்டில் இருந்தாலும், நடைமுறையில் சொத்துரிமையில் மகளிர்க்குச் சமபங்கு இல்லை. என்றைக்கு மகளிர்க்கு சொத்துரிமையில் சமபங்கு கிடைக்கின்றதோ அன்றைக்குதான் உண்மையான சமத்துவம் ஏற்படும். அரசியலில் மகளிரை ஈடுபடுத்த வேண்டுமென்பதற்கான உரிமையை உள்ளாட்சித் தேர்தலின் முப்பது விழுக்காட்டை

மகளிர்க்காக ஒதுக்கியிருப்பது பாராட்டுதற்குரியது. ஆனால் இதை முழுமையாக பயன்படுத்துவதென்பது மகளிர் கையில் தான் உள்ளது.[2]

## பெண்ணுரிமைகளும், பணியிடங்களில் பாலியல் வன்முறையும்

பணிக்குச் செல்லும் பெண்களுக்கு, இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகள் 14, 19 மற்றும் 21 ஆகியன வழங்கும் உரிமைகள் அடிக்கடி மீறப்படுவதால், அவ்வுரிமைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதற்காக இந்நீதிப் பேராணை மனு ஒன்று (Writ) தாக்கல் செய்யப்பட்டது. பாலியல் நீதி குறித்த விழிப்புணர்வும் முக்கியத்துவமும் அதிகரித்து வருவதால், அம்மீறல்களைத் தடுப்பதற்கான முயற்சிகளும் அதிகரித்து வருகிறது. பாலியல் வன்முறை குறித்த அதிருப்தியும் அதிகரித்து வருகிறது. இச்சமூக நெறி வழுவல் குறித்தும் பாலியல் சமத்துவம் என்ற கொள்கையினை அடைவதற்கான வழிமுறைகளைக் கண்டறிய உதவவும், அனைத்துப் பணியிடங்களிலும் பணிபுரியும் பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகளை நீதிமன்ற நடவடிக்கை மூலம் தடுக்கவும், இருக்கின்ற சட்டங்களில் உள்ள வெற்றிடத்தை நிரப்பவும், சில சமூகச் செயல்பாட்டாளர்களும் அரசு சாரா நிறுவனங்களும் கூட்டு நடவடிக்கையாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படுகின்றன.

1990-ஆம் ஆண்டு இராஜஸ்தான் மாநிலத்தின் கிராமம் ஒன்றில் சமூக சேவகிக்கு பலரால் ஏற்பட்ட பாலியல் வன்முறைக் கொடுமையே இதன் காரணமாகும். பணிபுரியும் பெண்கள் எப்படிப்பட்ட கொடுமைகளுக்கெல்லாம்

ஆளாகிறார்கள் என்பதையும் பாலியல் வன்முறை எவ்வளவு தூரம் சீரழிவை நோக்கிச் சென்றுள்ளது என்பதையும் மேற்கூறிய சம்பவம் காட்டுகிறது. சட்டத்தின் வாயிலாக சரியான பாதுகாப்புக்கு வழியில்லாதபோது அதற்கான மாற்றுத் திட்டத்தின் தேவையை அவசியப்படுத்துகிறது. சட்டரீதியான வழிகள் இல்லாதபோது அவசரமான இச்சமூகத் தேவை குறித்து சரியான மாற்று வழிமுறை ஒன்றை உருவாக்கியாக வேண்டும்.

இது போன்ற பாலியல் வன்முறை பாலியல் சமத்துவம் மற்றும் உயிர் வாழ்வதற்கும், சுதந்திரம் உரிமை ஆகிய அடிப்படை உரிமைகளை மீறுகின்றது. இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகள் 14, 15 மற்றும் 21 ஆகியன தரும் உரிமைகளை அப்பட்டமாக மீறுவதாகும். இது போன்ற நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியாக பிரிவு 19 (1) (g)-ன்படி பாதிக்கப்பட்டவருக்குள்ள அடிப்படை உரிமையான எந்த ஒரு தொழிலையும், வேலையையும் வர்த்தகம் அல்லது வணிகம் செய்வதற்கான உரிமையும் மீறப்படுகிறது. எனவே இதுபோன்ற உரிமை மீறல்கள், அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 32 வழங்கும் நிவாரனத்தைப் பெறவும், பெண்கள் தங்கள் அடிப்படை உரிமைகளை செயல்படுத்தவும் வழிவகுக்கிறது. இக்காரணத்திற்காகவே பிரிவு 32-ன் கீழ் இக்கூட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இம்மனுகுறித்த அறிவிப்பு இராஜஸ்தான் மாநிலத்திற்கும், இந்திய அரசிற்கும் தரப்பட்டது. இந்திய அரசுக்காக முன்னிலையான அரசு வழக்கறிஞர் (Solicitor General) முக்கியத்துவம் வாய்ந்த சமூகப் பிரச்சனையில் உரிய முடிவெடுக்கப்பட்டது.[3]

இச்சமூகக் கொடுமையைக் களைவதற்காக நீதித்துறையின் தலையீடு பற்றி இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 32-க்கு அப்பாற்பட்டு பிற சட்ட வழிமுறைகளும் உள்ளன. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுகள் 14, 19 (i) (g) மற்றும் 21 இவற்றோடு கூட தொடர்புடைய பிற பிரிவுகளும் இந்த வழக்கில் ஆய்வுச் செய்யப்பட்டது.

பிரிவு 15 மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாட்டுக்குத்தடை

1. அரசு குடிமக்களை மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம் அல்லது இவற்றில் ஏதாவதொன்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டுதல் கூடாது.
2. பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் அரசு சிறப்பு வழிவகைகள் செய்வதை இப்பிரிவு தடைசெய்வதாகக் கொள்ளக்கூடாது.

பிரிவு 42. நியாயமான, மனிதத்தன்மையுடன் கூடியதுமான பணிச்சூழலையும், மகப்பேறு நிவாரணத்திற்கும் உரிய வழிவகைகளையும் அரசு உருவாக்க வேண்டும்.

பிரிவு 51A அடிப்படைக் கடமைகள் கீழ் வருவன ஒவ்வொரு குடிமகனின் கடமைகளாகும்.

அ. அரசியலமைப்புச் சட்டத்திற்குக் கீழ்ப்படிவதும், அதன் கொள்கைகளையும், நிறுவனங்களையும் மதிப்பதும்......

ஆ. மதம், மொழி, பிராந்தியம் அல்லது பிரிவு சார்ந்த பிரிவினைகளைக் கடந்து இந்திய மக்கள் அனைவரிடத்திலும் நல்லிணக்கத்தையும்,

சகோதரத்துவத்தையும் வளர்க்க வேண்டும். பெண்களை இழிவுபடுத்தும் பழக்கவழக்கங்களை நிறுத்த வேண்டும்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்க ஐ.நா. பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

பன்னாட்டு மனித உரிமைகள் அறிக்கைகளான அனைத்துலக மனித உரிமைகள் அறிக்கை 1948

ஐ.நா.வின் பெண்களுக்கு எதிரான வன்முறையை துடைத்தெறியும் அறிக்கை ஆகியவைகளை இந்திய அரசியலமைப்பு அங்கீகரித்துள்ளது.

ஐ.நா.வின் பொருளாதார சமூக சபையின் தீர்மானங்கள் விரிவான செயல்திட்டங்களை வகுத்துள்ளது.[4]

இதோடு தொடர்புடைய அகில உலக உடன்படிக்கைகள், நடைமுறைகளை அவற்றை நடைமுறைப்படுத்தி, சட்ட ரீதியாக பொருள்படுத்துவதில் உள்ள முக்கியத்துவத்தைக் காண்பதற்கு முன் அவ்வாறு அவற்றைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கிற அரசியலமைப்புச் சட்டத்தின் சில பிரிவுகளையும் காண்போம்.

## பிரிவு 51

51 அகில உலக அளவில் அமைதி மற்றும் பாதுகாப்பை வளர்ப்பது

அகில உலக உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள் மீதும், ஒருங்கிணைந்த மக்கள் சமுதாயங்களுக்கிடையேயான உறவுகளின் மீதும் மதிப்பை வளர்க்க அரசு முயற்சிக்க வேண்டும்.

## பிரிவு 253

அகில உலக உடன்படிக்கைகளுக்கு செயலதிகாரமளிக்க சட்டமியற்றல்

பிற நாடுகளுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் ஒப்பந்தம் அல்லது அமைப்புகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிவுகளைச் செயல்படுத்த இந்தியா முழுமைக்குமோ, ஒரு பகுதிக்கு மட்டுமோ பொருந்தும் வகையில் சட்டங்களை இயற்ற நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது.

14. அயல்நாடுகளுடன் உடன்படிக்கைகள் அல்லது ஒப்பந்தங்கள் செய்து கொள்வதும் மற்றும் அயல்நாடுகளுடன் செய்து கொண்ட உடன்படிக்கைகள், ஒப்பந்தங்களைச் செயல்படுத்துவதும்.

இப்பிரச்சனைகள் குறித்த உள்நாட்டுச் சட்டங்கள் இல்லாதபோது, அனைத்துப் பணியிடங்களிலும் பணிபுரியும் பெண்கள் மீதான பாலியல் வன்முறை என்னும் தீமையைத் தடுக்க, இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவுகள் 14, 15, 19 (i) (g) மற்றும் 21 உறுதியளிக்கும் பாலியல் சமத்துவம், மனித மாண்புடன் பணிபுரிவதற்கான உரிமை, பாலியல் வன்முறைக்கெதிரான பாதுகாப்பு ஆகியவற்றைப் பொருள்படுத்த அகில உலக உடன்படிக்கைகளும், வழிமுறைகளும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.[5] அடிப்படை உரிமைகளுடன் முரண்படாத எந்த ஒரு அகில உலக உடன்படிக்கையும், அவைகள் அவ்வுரிமைகளின் நோக்கத்திற்கு உகந்ததாக உள்ளபோது, அவ்வுரிமைகளின் பொருளையும், உள்ளடக்கத்தையும் விரிவாக்கும் வகையில்

அரசியலமைப்புச் சட்டம் தரும் உத்தரவாதத்தின் நோக்கத்தை வளர்க்கும் வகையில் எடுத்தாள வேண்டும். பெண் உரிமைகள் மனித உரிமைகளின் முக்கிய அங்கமாக பன்னாட்டு உடன்படிக்கைகள் வலியுறுத்துகின்றன.[6]

எனவே, பிரிவு32ன் படி அடிப்படை உரிமைகளைச் செயல்படுத்துகின்ற உச்சநீதிமன்றத்தின் அதிகாரமும், மத்திய அரசின் நிர்வாக அதிகாரமும் பணிக்குச் செல்லும் பெண்களைப் பாலியல் வன்முறைகளினின்று பாதுகாக்கும் பொறுப்பை ஏற்று, அவர்களுக்கான அடிப்படை உரிமைகளைப் பொருள் பெற்றதாக்க வேண்டும். சட்டத்தின் ஆட்சி மூலம் சமூகத்தை ஆளுமை செய்வதில் மேற்கண்ட தேவையை நிறைவு செய்வது அரசியல் சட்ட அமைப்பின் காரணகாரியத் தொடர்ச்சியாகும். இவ்வி□யத்தில் நீதிமன்றம் மேற்கொள்ளும் முயற்சியானது இப்பொதுவான புரிதலின் அடிப்படையில்தான் என்பதை பொதுநல நோக்கில் இக்கடினமான பணியை நிறைவேற்றுவதில் சீரிய உதவி புரிந்த அரசு வழக்கறிஞரும், ஏனைய வழக்கறிஞர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

விசாரணையின் ஒவ்வொரு கட்டத்திலும் உருவான இவ்வழிகாட்டுதல்களுக்கு மத்திய அரசு, அரசு வழக்கறிஞர் மூலம் ஒப்புதல் கொடுத்திருப்பது, இந்நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்ட இவ்வழிகாட்டுதல்களை வேலையளிப்ப வர்களும், பணியிடங்களில் உள்ள மற்றவர்களும் இச்சமூகத்தீங்கைக் களைவதற்காகக் கடைப்பிடிக்க வேண்டிய வழிகாட்டுதல் ஆகும் என்பதைக் காட்டுகிறது.

பாலியல் சமத்துவம் என்பது பாலியல் வன்முறைகளிலிருந்து பாதுகாப்பையும், மனித மாண்புடன்

பணி புரிவதையும் உள்ளடக்கியதாகும். இஃது உலக அளவில் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை மனித உரிமையாகும். இப்பொதுவான குறைந்தபட்ச தேவை உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். எனவே இந்நோக்கத்தை அடைவதற்கான வழிகாட்டல்களை வகுப்பதில் சர்வதேச உடன்படிக்கைகள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.[7]

இந்த அடிப்படை உரிமைகளைச் செயல்படுத்துவதற்கான சட்டங்கள் இல்லாதபோது, பிரிவு 32-ன்படி இந்நீதிமன்றத்திற்குள்ள கடமையை, நீதித் துறையின் பங்கு குறித்த ஆசியச் சட்டம் (Law ASIA) பகுதிக்கான பீஜீங் கூட்டத்தில் ஏற்கப்பட்ட நீதித்துறையின் சுதந்திரத்திற்கான கொள்கை அறிக்கையுடன் சேர்த்துப் பார்க்க வேண்டும்.[8]

## நீதித்துறையின் நோக்கங்கள்

அ. அனைத்து நபர்களும் சட்டத்தின் ஆட்சியின் கீழ் பாதுகாப்பான வாழ்க்கை நடத்துவதை உறுதி செய்ய வேண்டும்.

ஆ. நீதித்துறைப் பணியின் உரிய வரையறைகளுக்குட்பட்டு மனித உரிமைகளைக் கடைப்பிடிப்பதையும் அடைவதையும் வளர்க்க வேண்டும்.

இ நபர்களுக்கிடையிலும், அரசுக்கும் நபர்களுக்குமிடையிலும் பாரபட்சம் ஏதுமின்றி சட்டத்தை நிர்வகிக்க வேண்டும்.

பெண்களுக்கெதிரான பாகுபாட்டை ஒழிப்பதற்கான அகில உலக உடன்படிக்கை (CEDAW)யின் தற்போதைய

விவாதப் பொருளோடு தொடர்புடைய சில வழிவகைகள் கீழ்க்கண்டவாறு உள்ளன.

## பிரிவு 11

1. ஆணும், பெண்ணும் சமம் என்ற அடிப்படையில் உறுப்பு நாடுகள் வேலைவாய்ப்பில் பெண்களுக் கெதிரான பாகுபாட்டைத் தடுப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.[9]

குறிப்பாக மனிதர்கள் அனைவருக்கும் வேலைக்கான உரிமை என்பது பிரிக்க முடியாத உரிமை

சுகாதாரம் மற்றும் மறு உற்பத்திப்பணியை உள்ளடக்கிய பணிச்சூழல் பாதுகாப்புக்கான உரிமை

## பிரிவு 24

இந்த உடன்படிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளை முழுமையாக அடைவதை நோக்கமாகக் கொண்டு தேசிய அளவில் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க உறுப்பு நாடுகள் உறுதியேற்க வேண்டும்.

பெண்களுக்கெதிரான பாகுபாட்டை ஒழிப்பதற்கான அகில உலக உடன்படிக்கையின் பொதுப்பரிந்துரைகளாவன:

## வேலையில் சமத்துவமும், வன்முறையும்

22. பணியிடங்களில் பாலியல் வன்முறை போன்ற பாலியல் சார்ந்த வன்முறைக்கு பெண்கள் உள்ளாக்கப்படும்

போது வேலையில் சமத்துவம் என்பது கடுமையாக பாதிக்கப்படுகிறது.

23. பாலியல் வன்முறை என்பது விரும்பத்தகாத பாலியல் வக்கிரத்துடன் கூடிய திட்டமிட்ட செயல்களான உடல் ரீதியாக தொடுதல், இணக்கம் வேண்டி வற்புறுத்தல் அல்லது வேண்டுதல், பாலியல் உள்நோக்கம் கொண்ட விமர்சனங்கள் கீழ்த்தரமான வெளிப்பாடுகள் மற்றும் வாய் மொழியாக அல்லது உடல் ரீதியான செய்கை மூலம் பாலியல் நோக்கம் கொண்ட நடத்தைகள் அனைத்தையும் உள்ளடக்கியதாகும். அப்படிப்பட்ட செயல்கள் அவர்களைச் சிறுமைப்படுத்துவதாகவும், அவர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக்கு பிரச்சனையாகவும் அமையும். அவற்றிற்கு எதிர்ப்பு தெரிவித்தால் பணியில் சேர்ப்பது, பணி உயர்வு ஆகியவற்றை பாதிக்கும் அல்லது ஒவ்வாத பணிச்சூழலை உருவாக்கும் என அப்பெண் நம்பக் காரணமிருந்தால் மேற்படிச் செயல்கள் பெண்களுக்கெதிரான பாரபட்சம் கொண்டதாகும். எனவே முறையீட்டுக்கான வழி வகைகளும் இழப்பீடும் வழங்கப்பட வேண்டும்.

24. அரசுகள் தங்களது அறிக்கையில் பாலியல் வன்முறை குறித்த தகவல்களையும், பாலியல் வன்முறைகளினின்று பெண்களைப் பாதுகாப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் பணியிடங்களில் காணப்படும் பிறவகை வன்முறைகள் பற்றியும் குறிப்பிட வேண்டும்.

1993 ஜுன் 25ம் தேதி இந்திய அரசானது மேற்கண்ட தீர்மானங்களை சில விலக்குகளுடன் ஏற்றுக்கொண்டது.

பீஜிங்கில் நடந்த பெண்களுக்கான நான்காவது உலக மாநாட்டில் இந்திய அரசு அதிகாரப் பூர்வமாக சில பொறுப்புகளை ஏற்றுக்கொண்டது. அதன்படி பெண்களுக்கான தேசியக் கொள்கையை உருவாக்கி செயல்படுத்தவும், அதன் மூலம் ஒவ்வொரு துறையிலும் அனைத்து மட்டத்திலும் தொடர்ந்து வழிகாட்டுவதெனவும், பெண்களுக்கான மனித உரிமைகளைப் பாதுகாக்கும் பொதுப் பாதுகாவலராக, பெண்களுக்கான உரிமைகள் ஆணையத்தை அமைப்பதென்றும், செயலுக்கான தளத்தை செயல்படுத்தி கண்காணிக்க தேசிய அளவிலான அமைப்பு ஒன்றை நிறுவனப்படுத்தவும் இந்திய அரசு ஏற்றுக்கொண்டது. எனவே இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் பாலியல் சமத்துவம் குறித்துத் தரப்பட்டுள்ள உத்திரவாதத்தின் தன்மையையும் நோக்கத்தையும் பொருள்படுத்துவதில் மேற்கண்ட உடன்படிக்கைகளைச் பின்பற்றுவதிலும் கடைபிடிப்பதிலும் தயக்கமுமில்லை.[10]

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளின் பொருள் மற்றும் உள்ளடக்கமானது பாலியல் வன்முறை அல்லது தெரிந்தே தவறாகப் பயன்படுத்துதல் ஆகியவற்றை தடுப்பது உள்ளிட்ட பாலியல் சமத்துவத்தின் அனைத்து பரிமாணங்களையும் பொருள் விளங்கப் போதுமானதாகும். நீதித்துறைச் சுதந்திரம் என்பது நமது அரசியலமைப்புச் சட்ட முறையில் ஒரு பகுதியாகும். இப்பிரச்சினை குறித்து இயற்றப்பட்ட உள்நாட்டுச் சட்டங்கள் இல்லாதபோது, அகில உலக உடன்படிக்கைகள், வழிமுறைகளுக்கும் நமது அரசியலமைப்புக்கும் முரண்பாடு இல்லையெனில்,

அரசியலமைப்புப் பிரிவுகளுடன் சேர்ந்தே மேற்கூறிய உரிமைகளை அணுக வேண்டும்.

முரண்பாடுகள் இல்லாத போதும், உள்நாட்டுச் சட்டம் இல்லாதபோதும் ஏற்கெனவே உள்ள உள்நாட்டுச் சட்டங்களைப் பொருள்படுத்த கவனத்தில் கொள்ள வேண்டும். அயல் நாட்டார் வரவு மற்றும் இனப் பிரச்சனைக்கான (அமைச்சர் - எதிர்-தியோ (128 AIR 353) என்கிற) வழக்கில் ஆஸ்திரேலிய உயர்நீதிமன்றம், ஆஸ்திரேலிய அரசியலமைப்புச் சட்டத்தில் உரிமைகளுக்கான மசோதா இல்லாத போதும், மாறுபட்ட சட்டங்கள் இல்லாத போது அகில உலக உடன்படிக்கைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்பது சட்ட ரீதியான எதிர்பார்ப்பு என்பதை அங்கீகரித்து உள்ளது.

ஒரிசா மாநிலத்தை சார்ந்த வழக்கில் நிலாபதி பெஹேரா-எதிர்-ஒரிசா மாநிலம் 1993(2) SCC 746 என்ற உச்சநீதிமன்ற வழக்கில் பிரிவு 32ன் கீழ் பொதுச்சட்டப் பரிகாரமாக இழப்பீடு பெறுவதை செயல்படுத்த உள்ள உரிமை, உறுதியளிக்கப்பட்ட உரிமைகளைச் செயல்படுத்தும் கொள்கைக்கு அந்நியமானதல்ல என்றும் அதனை உறுதிப்படுத்த சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான அகில உலக உடன்படிக்கையில் கூறப்பபட்டிருந்த வழிமுறையைச் சார்ந்தும் தீர்ப்பளித்தது. இஃது தீங்கியல் சட்டத்தின் கீழ் இழப்பீடு பெறும் தனிச்சட்ட நிவாரணத்தினின்றும் மாறுபட்டதாகும். எனவே மனித நடவடிக்கைகளின் அனைத்துத் தளங்களிலும் பாலியல் சமத்துவமென்னும் அடிப்படையான கொள்கையை உள்ளடக்கிய இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ்

உறுதியளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளைப் பொருள்படுத்துவதில் அகில உலக உடன்படிக்கைகள் மற்றும் வழிமுறைகளைப் பயன்படுத்துவதினின்று தடைசெய்யும் வகையில் எந்த ஒரு காரணமும் இருக்கவியலாது.

பாலியல் வன்முறைக்கு எதிரான பாதுகாப்பு குறித்த செயல்படுத்தத்தக்க உள்நாட்டுச் சட்டங்கள் இயற்றப்படாத சூழலில் மேற்கண்ட நோக்கில் சட்டம் இயற்றப்படும் வரை பணியிடங்களிலும், பிற நிறுவனங்களிலும் முறையாகப் பின்பற்றப்படுவதற்கான கீழ்கண்ட வழிகாட்டுதல்களையும், வழிமுறைகளையும் முன் வைக்கின்றோம். அடிப்படை உரிமைகளைச் செயல்படுத்துவதற்காக பிரிவு 32-ன்கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி இத்தீர்ப்பு வழங்கப்படுகிறது. மேலும் இத்தீர்ப்பு அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 141-ன்கீழ் இந்நீதிமன்றத்தால் வழங்கப்படும் சட்டமாகக் கருதப்பட வேண்டுமென்பதும் சுட்டிக் காட்டப்படுகிறது.

## வழிகாட்டலும் வழிமுறையும்

1993ம் வருட மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மனித உரிமைகள் பற்றி தரப்பட்ட விளக்கத்தைக் கவனத்தில் கொண்டும், இந்தியாவில் தற்போதுள்ள உரிமையியல் மற்றும் தண்டனைச் சட்டங்களில், பணியிடங்களில் பெண்கள் மீதான பாலியல் வன்முறைக்கு எதிரான போதிய பாதுகாப்பு வழங்கப்படாததையும் அதற்கான சட்டம் இயற்ற கணிசமானகால அவகாசம் தேவைப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளும் போது பணியிடங்களில் வேலை அளிப்பவர்களும் பொறுப்புள்ள நபர்களும் பிற நிறுவனங்களும், பெண்கள் பாலியல்

வன்முறைக்கு உள்ளாக்கப்படுவதைத் தடுக்க சில வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிப்பது தேவையும் அத்தியாவசியமும் ஆகின்றது.

1. பணியிடங்களிலும், நிறுவனங்களிலும் வேலையளிப்பவர் அல்லது பொறுப்புள்ள நபர்களின் கடமை

பணியிடங்களிலும், நிறுவனங்களிலும் பாலியல் வன்முறை சார்ந்த செயல்கள் புரிவதைத் தடுப்பதோடு தவறிழைப்போர் மீது வழக்குத் தொடரத்தேவையான வழிமுறைகளையும் நிர்வாகம் அல்லது பணியிடத்திற்குப் பொறுப்பாக உள்ளவர்கள் வகுத்து தேவைப்படும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும்.

## 2. பொருள் விளக்கம்

பாலியல் வன்முறை என்பது நேரடியான அல்லது பொருள்படுத்துவதான விரும்பத்தகாத பாலியல் வக்கிரத்துடன் கூடிய திட்டமிட்ட செயல்களை உள்ளடக்கும். அவை

அ. உடல் ரீதியாக தொடுதல் அல்லது அதற்கான முயற்சிகள்

ஆ. பாலியல் இணக்கம் வேண்டிய வற்புறுத்தல் அல்லது வேண்டுகோள் விடுத்தல்.

இ. பாலியல் உள்நோக்கம் கொண்ட விமர்சனங்கள்.

ஈ. வக்கிரம் தூண்டும் புகைப்படங்கள் மற்றும் ஓவியங்களைக் காட்டுதல்

உ. வாய்மொழியாக அல்லது உடல் ரீதியான செய்கை மூலம் வக்கிர நோக்கம் கொண்ட நடவடிக்கைகள்.

இது போன்ற செயல்களினால் பாதிக்கப்பட்டவர் ஊதியத்திற்காகவோ, கௌரவ ஊதியத்திற்காகவோ தன்னார்வமாகவோ, அரசுப்பணியிலோ, பொது அல்லது தனியார் நிறுவனத்திலோ பணிபுரிந்த போதிலும் அச்செயல் தன்னைச் சிறுமைப்படுத்தும் அல்லது சுகாதாரம் மற்றும் பாதுகாப்பிற்குப் பிரச்சினையாகுமென நியாயமான அச்சம் கொள்ளக்கூடிய சூழ்நிலையில் அது பாலியல் வன்முறையே. மேற்கண்ட செயல்களுக்கு அவர் மறுப்பு தெரிவித்தால் அவருடைய வேலை அல்லது பணியமர்த்தல் அல்லது பணி உயர்வு அல்லது பாதகமான பணிச்சூழலை உருவாக்குமெனில் அது பாரபட்சமானதாகும். கேள்விக்குறிய அச்செயலுக்கு அவர் எதிர்ப்பு தெரிவித்தாலோ அல்லது உடன்பட மறுத்தாலோ பாதிக்கப்பட்டவருக்குப் பாதகமான விளைவுகள் ஏற்படக்கூடுமெனில் அதுவும் பாலியல் வன்முறையே ஆகும்.

## 3. பாலியல் வன்முறை தடுப்பதற்கான வழிமுறைகள்

பொதுத்துறை அல்லது தனியார் துறை நிறுவனங்கள் அல்லது பணியிடத்திற்குப் பொறுப்பாக உள்ளவர்கள் பாலியல் வன்முறையைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பொதுவான இக்கடமைக்கு எந்தப் பாதகமுமின்றி கீழ்க்கண்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

அ. மேலே விளக்கியபடி பாலியல் வன்முறை பணியிடங்களில் தடை செய்யப்பட்டுள்ளது என்பதை சரியான வழிகளில் அறிவித்து வெளியிட்டு சுற்றறிக்கை செய்ய வேண்டும்

ஆ. அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் நடத்தை மற்றும் ஒழுங்குமுறை விதிகளில் பாலியல் வன்முறையைத் தடைசெய்யும் விதிமுறைகள் சேர்க்கப்பட்டு தவறிழைப்பவர்களுக்கு தக்க தண்டனையும் அவ்விதிகளில் சேர்க்கப்பட வேண்டும்.

இ. தனியார் நிறுவனங்களைப் பொறுத்து மேற்கண்ட தடை தொழிற்சாலை பணியமர்த்துகை (நிலை ஆணைகள்) சட்டம் 1946-ன் கீழான நிலை ஆணைகளில் சேர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஈ. வேலைக்குகந்த பணிச்சூழலோடு ஓய்வு, நலம், சுகாதாரம் பேணப்படுதல் மூலம் பணியிடங்களில் பெண்களுக்குப் பாதுகாப்பான சூழலை உறுதி செய்ய வேண்டும். பணியாற்றும் எந்த ஒரு பெண்ணிடத்தும் தான் தகுநிலைக் குறைவான பணிச்சூழலில் வைக்கப்பட்டுள்ளோம் என்ற உணர்வு ஏற்படாத வகையில் உறுதி செய்ய வேண்டும்.

## 4. குற்ற நடவடிக்கைகள்

ஒரு குறிப்பிட்ட செயல் இந்திய தண்டனைச் சட்டப்படியோ பிற சட்டங்களின் படியோ குற்றமெனில் வேலையளிப்பவர் தக்க அதிகாரிகளிடம் புகார் கொடுத்து குற்ற நடவடிக்கை தொடர ஆவண செய்ய வேண்டும்.

குறிப்பாக பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சிகள் பாலியல் வன்முறை குறித்த புகாரைக் கையாளும்போது பழிவாங்கப்படவோ பாரபட்சம் காட்டப்படவோ கூடாத வகையில் உறுதி செய்ய வேண்டும். பாலியல் வன்முறையால பாதிக்கப்பட்டவர் விரும்பும் வகையில் குற்றம் சாட்டப்பட்டவரை வேறிடத்திற்கு மாற்றவோ அல்லது தான் வேறிடத்திற்கு மாறிச்செல்லவோ வாய்ப்புத்தர வேண்டும்.

## 5. ஒழுங்கு நடவடிக்கை

மேற்கண்ட செயலானது பணியில் தவறான நடத்தை என பணிவிதிகளில் கூறப்பட்டிருந்தால் அவ்விதிகளின்படி வேலையளிப்பவரால் உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 6. முறையீட்டுக்கான அமைப்பு

மேற்கண்ட செயலானது சட்டத்தின்படி குற்றமாகவோ அல்லது பணிவிதிகளை மீறியதாகவோ இருப்பினும் அல்லது இல்லாவிட்டாலும் வேலையளிப்பவரது நிறுவனத்தில் பாதிக்கப்பட்டவரால் தரப்படும் முறையீட்டை விசாரித்து பரிகாரம் வழங்க முறையீட்டுக்கான அமைப்பு உருவாக்கப்படவேண்டும். அது முறையீட்டை குறிப்பிட்ட காலவரையறைக்குள் விசாரித்து முடிப்பதாக இருக்க வேண்டும்.

## 7. முறையீட்டுக்குழு

பிரிவு 6ல் கூறப்பட்ட முறையீட்டு அமைப்பு தேவையானபொழுது முறையீட்டுக் குழுவையும் சிறப்பு ஆலோசகரையும் அல்லது ஆதரவுச் சேவையையும்

உள்ளடக்கியதாகவும் நம்பகத்தன்மையைப் பாதுகாப்பதாகவும் இருக்க வேண்டும்.

முறையீட்டுக்குழுவின் உறுப்பினர்களில் பாதிப்பேருக்கு மேல் பெண்களாக இருப்பதுடன் அதன் தலைவியாக ஒரு பெண்ணே இருக்க வேண்டும். மேலும் அக்குழுவில் மேலிடத்து நிர்ப்பந்தங்களை தவிர்க்க இப்பிரச்சினையில் ஈடுபாடுள்ள அரசு சாரா நிறுவனம் போன்ற மூன்றாவது தரப்பு ஆட்களும் இடம் பெற வேண்டும்.

சம்பந்தப்பட்ட அரசுத்துறைக்கு பெறப்பட்ட முறையீடுகள் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து முறையீட்டுக் குழு ஆண்டறிக்கை அளிக்கவேண்டும். வேலையளிப்பவர் அல்லது பணியிடத்துக்குப் பொறுப்பாக உள்ளவர் மேற்கூறிய வழிகாட்டுதல்களை பின்பற்றுவது குறித்தும், முறையீட்டுக் குழுவின் அறிக்கை குறித்தும் சம்பந்தப்பட்ட அரசுத்துறைக்கு அறிக்கை அளிக்க வேண்டும்.

## 8. பணியாளர்களின் முன் முயற்சி

பணியாளர் கூட்டங்களிலும் தேவையான பிற இடங்களிலும் பணியாளர்கள் தங்களுக்கு இழைக்கப்படும் பாலியல் வன்முறைகள் குறித்துப் பேச அனுமதியளிக்கப்பட வேண்டும். சாதகமான முறையில் வேலையளிப்பவர் பணியாளர் கூட்டங்களிலும் விவாதிக்கப்பட வேண்டும்.

## 9. விழிப்புணர்வு

பெண் பணியாளர்களது உரிமைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக

இவ்வழிகாட்டுதல்களையும் இப்பொருள்குறித்து உரிய சட்டம் இயற்றப்படும் பொழுது அவை குறித்தும் உரிய வழிமுறைகளில் தெளிவாக அறிவிப்பு செய்வதன் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

## 10. மூன்றாவது நபர்களின் சித்திரவதை

பாலியல் சித்திரவதை வேற்று நபர்கள் அல்லது மூன்றாவது நபர்களால் இழைக்கப்படும்போது அதனைத் தடுப்பதற்கும் தவறிழைத்தவர் மீது தேவையான நடவடிக்கை எடுப்பதற்கும் வேலையளிப்பவர் அல்லது பணியிடத்திற்குப் பொறுப்பாக உள்ளவர் பாதிக்கப்பட்டவருக்கு ஆதரவாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

11. தனியார் நிறுவனங்களில் மேற்படி வழி காட்டுதல்கள் கடைப்பிடிக்கப்படுவதை உறுதி செய்ய, சட்டம் இயற்றுவது உள்ளிட்ட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய/மாநில அரசுகள் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

12. இங்கு தரப்பட்டுள்ள வழிமுறைகள் 1993ம் ஆண்டு மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தில் (மனித உரிமைகள் ஆணையம்) வழங்கப்பட்டுள்ள உரிமைகளைப் பாதிப்பதாக இருக்கக் கூடாது.

மேற்கண்ட வழிகாட்டுதல்களும் வழிமுறைகளும் பணிக்குச் செல்லும் பெண்களுக்கான பாலியல் சமத்துவத்தைப் பாதுகாத்து செயல்படுத்தும் வகையில் அனைத்துப் பணியிடங்களிலும் கடுமையாகப் பின்பற்றப்பட வேண்டும். இவ்வழிகாட்டுதல்கள் இதற்கெனச் சட்டம்

இயற்றப்படும் வரை கட்டுப்படுத்தக்கூடியதும் சட்டத்தில் செயல்படுத்தக் கூடியதுமாகும் என உச்ச நீதிமன்றம் இந்நீதிப் பேராணை மனு மீது தீர்ப்பளித்தது.

## பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்க அம்னெஸ்டி இன்டர்நேஷனல் வகுத்துள்ள திட்டங்கள் (சர்வதேச மன்னிப்பு கழகம்)

பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்க, குறிப்பிடத்தக்க சில நடவடிக்கைகள் தனியாக எடுக்கப்பட வேண்டும். இவை அனைத்தையும் கவனத்தில் கொண்டு மனித உரிமைகளுக்காக குரல்கொடுத்து வரும் அம்னஸ்டி இன்டர்நேஷனல் இங்கு சில பரிந்துரைகளை அளித்துள்ளது.

- அனைத்து பெண் கைதிகளும், தடுப்புக் காவலில் உள்ள பெண்களும், கைது செய்யப்பட்டு ஓரிடத்திற்கு செல்லப்பட்டவுடனும், பிறகு தொடர்ந்தும் மருத்துவ பரிசோதனை செய்துகொள்ள வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். மருத்துவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.
- பெண் கைதிகள் அல்லது தடுப்புக் காவலில் உள்ள பெண்கள், தங்கள் மீது பாலியல் வன்முறை நிகழும் போது புகார் செய்யும் பட்சத்தில் அவர்களை உடனடியாக மருத்துவரால் முடிந்தபோதெல்லாம் பெண் மருத்துவரால், பரிசோதிக்க வேண்டும். பின்னர் சட்டத் தொடர்பான நடவடிக்கை எடுக்க இது மிக அவசியமானதாகும்.
- துன்புறுத்தலுக்கு பலியானவர்களைப் போல, பாலியல் வன்முறைக்கு உள்ளானவர்களும், மருத்துவ உதவி பெறவும், இழப்பீடு வகை செய்யப்பட வேண்டும்.

- குடும்பத் தொடர்பு காரணமாக பெண்கள் துன்புறுத்தப்படுதல் நிறுத்தப்பட வேண்டும்.

- குடும்பத் தொடர்புக்காரணமாக காவலில் வைக்கப்படும் அல்லது கைது செய்யப்படும் பெண்கள், உடனடியாகவும், நிபந்தனையற்றும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

- உறவினர்களை வழிக்குக் கொண்டு வருவதற்காகப் பெண்கள் கீழ்த்தரமாக நடத்தப்படுவது மற்றும் துன்புறுத்தப்படுவது போன்ற வழக்கங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப் படலாகாது. இது போன்ற செயல்களுக்குப் பொறுப்பானவர்கள் நீதிக்கு முன் கொண்டு வந்து நிறுத்தப்பட வேண்டும்.

- தாயையும், சேயையும் ஒன்றாக சிறையில் அடைப்பதை அதில் யாராவது ஒருவரை துன்புறுத்தி அதன் மூலம் மற்றொருவரை மன, உடல் வேதனைக்கு ஆட்படுத்துவதற்கு பயன்படுத்தக் கூடாது. தாயிடம் இருந்து குழந்தை பிரிக்கப்படும் பட்சத்தில் அக்குழந்தை இருக்குமிடம் அத்தாய்க்கு உடனடியாகத் தெரிவிக்கப்பட வேண்டும். மேலும் அக்குழந்தையுடன், அத்தாய் தொடர்ந்து தொடர்பு கொள்ளவும் வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும்.

- அனைத்து கைதிகளும், காவலில் வைக்கப்பட்டு உள்ளோருக்கும் போதுமான மருத்துவ வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும்.

- அனைத்துக் கைதிகளுக்கும், காவலில் வைக்கப்பட்டு உள்ளோருக்கும் போதுமான மருத்துவ வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும். இதை மறுப்பது, கீழ்த்தரமாக நடத்தப்படுவதற்கு ஒப்பானதாகும்.

- கருவுற்றிருக்கும் பெண் கைதிகளுக்கும், தடுப்புக்காவலில் இருக்கும் பெண்களுக்கும், குழந்தை பிறப்பதற்கு முன்பும், பின்பும், தேவையான மருத்துவ வசதி செய்துகொடுக்கப்பட வேண்டும்.
- பெண் கைதிகளையும், காவலில் உள்ள பெண்களையும் பெருமளவில் பாதிக்கும் சூழ்நிலைகளை சீர்செய்ய தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.
- மனசாட்சிக் கைதிகள் உடனடியாகவும், நிபந்தனையற்றும் விடுதலை செய்யப்பட வேண்டும்.
- ஆயிரக்கணக்கான பெண்கைதிகள் உட்பட காவலில் வைக்கப்பட்டிருக்கும் அல்லது சிறையிலிடப்பட்டிருக்கும் அனைத்து மனசாட்சிக் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும். தங்கள் நம்பிக்கைகள், நிறம், பால், இனம், மொழி மற்றும் மதம் ஆகியவற்றிற்காக காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களே மனசாட்சிக் கைதிகள்.இவர்கள் வன்முறையில் ஈடுபடுவதோ, அல்லது கற்பிப்பதோ கிடையாது. இவர்களில் தங்களுடைய சமுதாயத்தின் அரசியல் சமூக, பொருளாதார, பண்பாட்டு நடவடிக்கைகளில் அமைதியான முறையில் பங்கேற்றதற்காக காவலில் வைக்கப்பட்டவர்களும் அடங்குவர்.
- ஆண்கள் அனுபவித்துவரும் அடிப்படை உரிமைகளையும், சுதந்திரத்தையும் பெறுவதற்காக, அமைதியான முறையில் போராடும் பெண்கள் காவலில் வைகககவோ, கைது செய்யவோ கூடாது.
- அனைத்து அரசியல் கைதிகளுக்கும், நியாயமான, நேர்மையான நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும்.

- ஆயிரக்கணக்கான பெண்கள் உட்பட எண்ணற்ற அரசியல் கைதிகளின் அடிப்படை உரிமைகளை மீறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும் நியாயமற்ற விசாரணைகள் நிறுத்தப்பட வேண்டும்.

- குற்றவியல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள அனைத்துஅரசியல் கைதிகளுக்கும், பாகுபாடற்ற, சுதந்திரமான, திறமையான தனிக்குழு மூலம்நியாயமான, நேர்மையான விசாரணை நடத்தப்பட உறுதி செய்யப்படவேண்டும்.

- நியாயமான சட்ட நடைமுறைகளை உறுதிப்படுத்தும் உலக விதிமுறைகளுக்கு ஏற்ப அனைத்து அரசியல் கைதிகளும் நடத்தப்பட வேண்டும். இதில் என்ன காரணத்திற்காக கைதுசெய்யப்பட்டுள்ளோம் என்பதைக் கைதி உடனடியாக அறிந்து கொள்ளும் உரிமை, ஒருவரைத் தடுப்புக்காவலில் வைத்திருப்பதை சட்டரீதியாக ஒரு நீதி மன்றத்தின் முன் கேள்வி கேட்கும் உரிமை, சாட்டப்பட்ட குற்றத்தை குற்றம் சாட்டப்பட்டவர் முறையாக அறிந்து கொள்ளும் உரிமை, குற்றவியல் குற்றம் சாட்டப்பட்டவர் அப்பாவி என்று கொள்ளக்கூடிய உரிமை, தனது தரப்பை பாதுகாத்துக்கொள்ள ஒருவர் தயாராக கால அவகாசமும், பிற உதவிகளும் பெறக்கூடிய உரிமை தான் விரும்பும் வழக்குரைஞரோடு தொடர்பு கொள்ளக்கூடிய உரிமை, துன்புறுத்தல் அல்லது கீழ்த்தரமாக நடத்தப்பட்டதன் மூலமாகப் பெறப்பட்ட வாக்குமூலத்தை சாட்சியமாகப் பயன்படுத்துவதைத் தடை செய்யும் உரிமை ஆகியவையும் அடங்கும்.

- மாயமாய், மறைதலைத் (disappeared) தடுக்க உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
- ஒருவர் மாயமாய், மறைந்துவிடுவதால் நேரடியகாவும், உறவினர் என்ற முறையிலும் ஆயிரக்கணக்கான பெண்கள் பாதிக்கப்படுகின்றனர். இத்தகைய மாயமாய், மறைதல்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.
- மாயமாய், மறைதல் குறித்துவரும் அனைத்துப் புகார்களும் உடனடியாக பாரபட்சமற்று, முழுமையாக விசாரிக்கப்படவேண்டும். அதற்குப் பொறுப்பானவர்கள் நீதிக்கு முன்பு நிறுத்தப்பட வேண்டும்.
- ஒருவர் கைது செய்யப்பட்டவுடன், அவரது குடும்பத்திற்கு அது தெரிவிக்கப்படவேண்டும். அதன்பிறகு அவர் எங்கு வைக்கப்பட்டிருக்கிறார் என்ற தகவல் தொடர்ந்து அவரது குடும்பத்திற்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.
- கைதிகளும், தடுப்புக்காவலில் வைக்கப்படுவோரும், அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ள தெரிந்த காவல் முகாம்களில் மட்டும் வைக்கப்படவேண்டும்.

## அடிக்குறிப்புகளும் சான்றுகளும்

1. C. Shyamala, **Impact of Social Legislations in Tamil Nadu with Special Reference to Women's Problems'** Ph.D., Thesis in History of Annamalai University, Refer for Gender Justice, V.R. Krishna Iyer, **Woman Unbound A Plea for Gender Justice** (Madurai: Society for Community Organisation Trust) 1985.

2. நீதிபதி வர்மா தலைமை நீதிபதி பணியிடங்களில் பாலியல் வன்முறை குறித்த உச்சநீதிமன்றத்தீர்ப்பு (AIR 1997, Sec. P. 3011) குற்றவியல் நீதிப்பேராணை மனுக்கள் எண் 666 முதல் 670 வரை 1992

3. அரசு வழக்கறிஞர் உகந்த வகையில் சிறப்பாக உதவி புரிந்தார். முழு ஈடுபாட்டுடன் நீதிமன்றத்திற்கு உதவி புரிந்த திருமிகு. மீனாட்சி அரோரா, நைனா கபூர் ஆகியோருடன், நீதிமன்ற உதவியாளராக நியமிக்கப்பட்ட பாலி எஸ். நரிமன் அவர்களும் மிகுந்த உதவி புரிந்தார். வழக்கத்திற்கு மாறான இப்பிரச்சினையில் அதற்குத்தக்க வகையில் கையாள தேவையான அனைத்து உதவிகளையும் பல வழங்கினார்கள். வழக்கறிஞர்கள்அவர்கள் பெரிதும் பாராட்டுக்கு உரியவர்கள்.

4. UN Economic and Social Council Resolution 1990/15 of 24 May 1990; 1991/18 of May 1991; The Convention on the Elimination of All Forms of Discrimination against Woman;

5. "Declaration on the Elimination of Violence against women" proclaimed by the General Assembly of the United Nations on 20 December 1993 resolution 48/104.

6. The Convention on the Nationality of Married Women, adopted 29 January 1957; entered into force 11 August 1958, 309 UNTS 65; the Declaration on the Elimination of Discrimination Against Women, G.A. Res. 2263, 22 U.N. GAOR Supp. (No.16) : UN Doc. A/6716 (1967) : Fram P. Hosken 1981, "Editorial : Women's Rights and Human Rights" **Human Rights Quarterly** 3.

7. Convention on the Elimination of all Forms of Discrimination against Women; UN General Assembly resolution 34/180 of 18 December 1979; entry into force: 3 September 1981. in accordance with Article 27 (1)

8. நீதித்துறையின் சுதந்திரத்தையும் திறம்பட்ட செயல்பாட்டையும் பராமரிக்கத் தேவையான குறைந்த பட்சத்தேவைகள் இவையென இக்கொள்கைகளை ஆசிய மற்றும் பசிபிக் நாடுகளது தலைமை நீதிபதிகள் 1995-ஆம் ஆண்டு பீஜிங்கில் ஏற்றுக் கொண்டுள்ளனர். பீஜீங் அறிக்கை நீதித்துறையின் நோக்கமென ஏற்றுக்கொள்ளப்பட்டன.

9. மேலது,

10. யுனெஸ்கோ கூரியர், "மகளிர் விண்ணகத்தின் ஒரு பாதி" சிறப்பிதழ், நவம்பர், 1995.

# 10. சுற்றுச் சூழலும் மனித உரிமைகளும்

"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து"

- குறள் "நாடு" 738

மனித உரிமைகள் குறித்த விழிப்புணர்ச்சி ஓங்கி ஒளிரும் 21-ம் நூற்றாண்டில் சொல்லோவியங்களும், ஆய்வுக் கருத்துக்களும், நாம் வாழும் காலத்தைப் பற்றிய வேட்கைகளையும், வரம்புகளையும், வினாக்களையும், விடைகளையும் உள்ளடக்கியுள்ளன. அமைதி, சுற்றுச்சூழல், மக்கள் நலம், மக்களாட்சி, அறிவியல், கல்வி, பண்பாடு, வரலாறு போன்ற மையப் பொருட்கள் அடிக்கடி பேசப்படுகின்றன.

நிகழ்காலத்தின் மீது எதிர்காலம் உருவாக்கப்படுகிறது. ஆனால் அனைத்தும் தோன்றுவது இதயத்தில்தான். அவதியுறும் மனிதகுலத்திடம் நமக்குக் கருணை பொங்கி, அவர்களுடன் ஒன்றிவிடும் போது, நமது இதயங்கள் அடிக்கடி உறைந்து விடுகின்றன. இன்றைய உலகில் ஆதிக்கம் செலுத்துவது தன்னல உணர்வுதான். . . . தனி மனிதர்களும், குழுமங்களும், நாடுகளும் தன்னலத்தினால் தீவினையும், மரணமும்தான் வளர்கின்றன என்பதை உணர வேண்டும். இவற்றை வெற்றிகொள்ள வேண்டும். தாங்கள் அறங்காவலர்களாக இருந்து பாதுகாத்து வரும் செல்வத்தைப்

பகிர்ந்து கொள்ள வேண்டும். பணக்காரர்கள் கூட ஏழைகளிடமிருந்து பெறமுடியும் என்பதை மறந்து விடாமல், நாம் அனைவரும் கொடுக்கவும் வாங்கவும் கற்றுக் கொள்ள வேண்டும்.[1]

வேறு எப்போதும் இல்லாத வகையில் இப்போது தேசிய அல்லது இனச்சிக்கல்கள் மிகக் கடுமையாக எழுந்துள்ளன. இது சில சமயம், தேசிய உணர்வாகப் பீறிட்டெழுந்தது. இரத்தக்களரிகளாக உருவாகி விடுகின்றன. இது மனித குலத்தின் மனச்சாட்சிக்கும் பொது அறிவுக்கும் ஒரு பெரும் அறை கூவலாகும். ஆனால் அனைத்திற்கும் மேலாக, அனைத்து மக்களையும் பாதிக்கும் சிக்கல்கள் பெருகி வருகின்றன. இவற்றைத் தனி நாடுகளின் முயற்சிகளினால் தீர்க்க முடியவில்லை. மனிதகுலம் முழுவதும், ஒரு குலச்சமுதாயமாக ஒருங்கிணைந்து, தேசிய நலன்களை ஒதுக்கிவைத்து விட்டு, மனித குலத்திற்காக ஒன்றுபட்டு செயற்பட்டால் மட்டுமே இந்தச் சிக்கல்களுக்கு தீர்வு காண முடியும். இதுவே 21-ஆம் நூற்றாண்டின் தலையாய சமூகச் சிக்கலாக இருக்கும்.[2]

மூன்று முக்கிய ஏற்றத்தாழ்வுகளால் நாம் அவதிப்படுகிறோம்; பூமியின் வடக்கு, தெற்கு நாடுகளுக்கிடையிலான ஏற்றத்தாழ்வு, ஒரு சமுதாயத்திற்குள்ளேயே ஏழை பணக்காரரிடையிலான ஏற்றத்தாழ்வு, இயற்கைக்கும் மனித குலத்திற்குமிடையிலான ஏற்றத்தாழ்வு. . . இந்த மூன்று நெருக்கடிகளையும் தனித்தனியே சமாளிக்க இயலாது. மனிதருக்கிடையிலும், சமுதாயங்களுக்கிடையிலும் ஒரே சமயத்தில் இணக்கமான உறவுகள் உருவாக்கப்படவில்லையென்றால் மனிதருக்கும்

சுற்றுச்சூழலுக்குமிடையில் எந்த நிலையிலும் இணக்கமான உறவுகளை நாம் ஏற்படுத்த இயலாது.[3]

## இயற்கையைப் பாதுகாத்தல் விவேகத்துடன் பயன்படுத்தல்

சுற்றுப்புறச் சூழல் மற்றும் மேம்பாடு பற்றி 1992-ல் நடந்த ரியோ மாநாட்டில் உயிரியல் மாறுபாடு குறித்து ஓர் உலக உடன்படிக்கை கையெழுத்தானது. இந்த உடன்படிக்கை செயலுக்கு வந்தது. ஜூலை 2008-ல் ஜப்பானில் நடைபெற்ற ஜீ 8 மாநாட்டில் மீண்டும் இதே போன்ற சுற்றுப்புறசூழல் குறித்து விவாதிக்கப்பட்டது.

விலங்கு, தாவர இனங்கள் ஒரு நாள் நமக்குத் தேவைப்படலாம். இவை, மனிதகுலத்தின் ஈடு செய்ய முடியாத இயற்கைப் பாரம்பரியத்தின் ஒரு பகுதியாக அமைந்துவிடும். எனவே இவற்றை நாம் பாதுகாக்க வேண்டியது அவசியம் என்பது நமக்குத் தெரியும். ஆனால், உலகெங்கிலும் இந்த உயிரினங்கள் வாழ்கின்ற உயிரினமண்டலங்கள், நகர்மயமாதல், சாலைகள் அமைத்தல், காடழிப்பு, பிறமேம்பாடுகள் காரணமாக இவை அச்சுறுத்தலுக் குள்ளாகியிருப்பதையும் நாம் அறிவோம். உயிரியல் மாறுபாடுகள் நிறைந்து, பொருளாதாரத்தில் ஏழையாகவுள்ள வெப்பமண்டல நாடுகளில் விறகுக்காகவும், பிழைப்புக்கான வேளாண்மைக்காகவும் கிராம மக்கள் மரங்களை வெட்டுவதைத் தவிர வேறு வழியில்லாமல் இருக்கிறார்கள்.

மனிதரின் இந்த இன்றியமையாத் தேவைகளை இயற்கைப் பாதுகாப்புடன் எவ்வாறு இணக்கப்படுத்த

முடியும்? கடந்த 30 ஆண்டுகளில் இந்த இரண்டுங்கெட்டான் நிலைக்கு உயிரியல் மண்டலக் காப்பிடங்கள்! என்ற பெயரில் யுனெஸ்கோ ஒரு தீர்வினைக் கூறியுள்ளது. ஐ.நா.வும் உலகின் பெரும்பாலான நாடுகளும் மக்களிடையில் இதுகுறித்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றன.

யுனெஸ்கோவின் மனிதன் மற்றும் உயிரியல் மண்டலப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இப்போது 83 நாடுகளில் 324 உயிரியல் மண்டலக் காப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது பெரிதும் ஊக்கமளிக்கும் ஒரு தொடக்கமாகும். இந்த இணைவனத்தை வலுப்படுத்துவதற்காகவும், உயிரியல் மாறுபாடுகளைப் பாதுகாப்பதிலும், மேலாண்மையிலும் நிலத்தில் அங்கு வாழும் மக்களின் நலனுக்காகப் பயன்படுத்துவதிலும் நடப்பு முன்னேற்றங்களுக்கிணங்க ஒரு நடவடிக்கைத் திட்டத்தை வகுப்பதற்காகவும் 1995 மார்ச் இறுதியில் செவில் (ஸ்பெயின்) நகரில் உயிரியல் மண்டலக் காப்பிடங்கள் பற்றிய பன்னாட்டு மாநாடு ஒன்று நடைபெற்றது.[4]

சுற்றுப்புறச்சூழல் மற்றும் மேம்பாட்டுக்கான உலக ஆணையம் நமது பொதுவான எதிர்காலம் என்னும் தலைப்பில் ஓர் அறிக்கையை அளித்தது. அதன் பிறகே நமது பொதுவான எதிர்காலம் என்னும் சொற்றொடர் உலகெங்கும் அறியப்படலாயிற்று. அந்த ஆணையத்தின் தலைவராக இருந்தவர் நார்வே தலைமை அமைச்சர் கிரோஹார்லம் பிரண்ட்லண்ட் அம்மையார் ஆவார். எனவே, அவர் பெயரால் பிரண்ட்லண்ட் அறிக்கை என்றும் இது அழைக்கப்பட்டது. 1987இல் வெளியான இந்த அறிக்கை, பெரும் வரவேற்பைப் பெற்றது. “நிலைபெற்ற

மேம்பாடு” என்னும் சொல்லை இது வழக்கிற்குக் கொண்டு வந்தது. ரியோடிஜெனீரோவில் 1992இல் நடந்த பூமி உச்சி மாநாட்டில் இந்த நிலை பெற்ற மேம்பாடு மையப் பொருள்களில் ஒன்றாக விவாதிக்கப்பட்டது. “நமது பொதுவான எதிர்காலத்திற்கான மையம்” என்னும் அறப்பணி அமைவனம் 1998 இல் ஜெனீவாவில் நிறுவப்பட்டது. நிலைபெற்ற மேம்பாட்டினை ஊக்குவிப்பதற்கு உலகெங்கும் முயற்சிகள் மேற்கொள்வதும், பிரண்ட்லண்ட் அறிக்கையில் கண்டுள்ள மற்றப் பரிந்துரைகளை நிறைவேற்றுமாறு செய்வதும் இந்த மையத்தின் நோக்கம்.

“இன, சமயச் சார்புகள், அரசியல் கொள்கைகள், சமூக, பொருளாதாரச் சூழ்நிலைகள் ஆகிய பாகுபாடுகள் எதுவுமின்றி, மனிதராய்ப் பிறந்த ஒவ்வொஃருவருக்கும் உரிய அடிப்படை உரிமைகளில் ஒன்று, பொதுச் சுகாதாரம்” என்பதை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம். உலகில் சுகாதார நெறிகளையும் நியதிகளையும் பாதுகாத்து வளர்ப்பதில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளின் ஒத்துழைப்பின் சின்னமாக உலகச் சுகாதாரப் பொதுச்சபை (WHO) அமைந்துள்ளது. பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகள் பற்றிய பன்னாட்டு ஒப்பந்தம்”[5] “எல்லா நாடுகளின் மக்களுக்கும் தத்தம் நாட்டு இயற்கைச் செல்வத்தையும் வளங்களையும் முழுவதுமாகவும் சுதந்திரமாகவும் பயன்படுத்தி அனுபவிப்பதற்குரிய இயற்கையான பிறப்புரிமையைக் குலைப்பதாகப் பொருள் கொள்ளல் கூடாது” என்று வலியுறுத்துகிறது. (பிரிவு 11-21) வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய பன்னாட்டு ஒப்பந்தம்.”[6]

"பரஸ்பர நன்மைக் கொள்கையையும், பன்னாட்டு சட்டத்தையும் ஆதாரமாகக் கொண்ட பன்னாட்டு பொருளாதார ஒத்துழைப்பினால் தோன்றும் கடமைப் பொறுப்புகள் எவற்றிற்கும் இடையூரின்றி, தத்தம் இயற்கைச் செல்வத்தையும், வளவாய்ப்புகளையும் எல்லா மக்களும் தமது நலன்களைக் கருதி, சுதந்திரமாய்ப் பகிர்ந்து கொள்ளலாம்" என வலியுறுத்துகிறது. (பகுதி 1 பிரிவு 1=2)

"எல்லா மக்களுக்கும், தம் இயற்கைச் செல்வத்தையும் வசதி வாய்ப்புகளையும் முற்றிலும் சுதந்திரமாகப் பயன்படுத்தி அனுபவிப்பதற்குரிய இயற்கையான பிறப்புரிமையை தற்போதைய ஒப்பந்தத்தில் எதுவும் பலவீனப்படுத்துவதாகப் பொருள் கொள்ளக்கூடாது." (பிரிவு 47)

நலமான வாழ்வின் நிறைநிலையை மக்கள் அனைவரும் அடைய வேண்டுமென்ற குறிக்கோளை எய்த ஐ.நா.வும் அதன் உறுப்புகளும், இந்திய அரசியல் அமைப்பும் வலியுறுத்துகின்றன. நலமான வாழ்வின் அவசியத்தை எல்லாச் சிறந்த நாகரிகங்களும் அறிவுறுத்துகின்றன.

"இறைவனின் பரிசுகளில் சிறந்தது உடல்நலன், இனியதாய்க் காட்சிக்கு இருப்பது இரண்டாவது, நியாயமாய்த் தேடிய செல்வம் நிலையான மூன்றாம் பரிசு; நட்பு சூழ் இளமை நலனுடன் வாழ்வது நான்காம் பேறு"

என்ற கிரேக்க ஆசிரியர் சிமோனிடீஸ்ன் பாடல் தனிநபருக்கும், நாட்டிற்கும் பொருந்தும். மனிதனின் பொருளாதார, ஒழுக்க, கலை, நடவடிக்கைகள் அனைத்துக்கும் உடல் நலனே அடிப்படையானது என்பதை

நம் பண்டைய மருத்துவ முறையான ஆயுர்வேதம் உணர்த்துகிறது.

முனிவர் அபிராமிபட்டர் அருளிய அபிராமியம்மைப் பதிகமும்இதையே வலியுறுத்துகிறது.

"கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
மூளுபிணியிலாத உடலும்[7]

என வேண்டி நம்மை வாழ்த்துகிறது இப்பாடல்"

இத்தகைய வழிபாடுகள் எல்லாக் காலங்களிலும் குறிப்பாக இன்றைய சூழ்நிலையில் நமக்கு அவசியம் தேவைப்படுகிறது. நோய்வாய்ப்படுவோரையும் துன்பத்தால் நலிவோரையும் குணப்படுத்துவது அரசின் கடமை என்று நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். நாட்டின் மக்களுக்கும் விலங்கினங்களுக்கும் மருத்துவ உதவிகளும் சிகிச்சை அளிப்பதை அசோகரின் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

"மனிதர் அனைவரையும் நோயிலிருந்து விடுவிப்பது
நம் குறிக்கோள்
அனைவரும் நோயற்ற வாழ்வு வாழ்வார்களாக"[8]

## இந்திய விவசாயிகள்

நாம் இங்கு ஆராய வேண்டாத பல்வேறு காரணங்களால் நம் நாட்டு மக்களின் நலம் சீர்குலைந்தது. நாடு விடுதலையடைந்தபின், நம் வாழ்க்கையில் அடிப்படை முன்னேற்றங்கள் ஏற்படுத்த ஐந்தாண்டுத் திட்டங்களில் முயற்சிகள் மேற்கொண்டோம். ஆயினும் இயந்திரத் தொழில்

உலகத்தில் பெருக்கத்திற்கும் விவசாய உற்பத்திப் பெருக்கத்திற்கும் இடையே பெருத்த வேறுபாடு ஏற்பட்டது. விவசாயிகளின் வாழ்வில் முன்னேற்றம் ஏற்படவில்லை. இந்திய விவசாயிகள் கடும் உழைப்புக்குப் பழக்கப்பட்டவர்கள். ஆனால் மற்ற நாடுகளின் விவசாயிகளுக்குக் கிடைக்கும் பல்வேறு வசதிகள் ஊட்டமுள்ள உணவு, சுத்தமான குடிநீர், வசதியான குடியிருப்பு, சுகாதாரமான கிராமங்கள் போன்றவை இந்திய விவசாயிகளுக்கு கிட்டவில்லை. இவ்வசதிகளை நமது விவசாயிகளுக்குச் செய்து கொடுத்தல், அவர்கள் உடலுறுதியும் ஆற்றலும் வளரும், விவசாய உற்பத்தியும் பெருகும். குடிமக்களின் உடல் நலன்தான் ஒரு நாட்டின் சிறந்த சொத்து.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் உழவர்களின் நிலையை உணர்ந்தவர். "வியர்வை நெல் மணியையும், மூடியிருக்கும் தோல் உழவனின் சதையாலும், உள்ளேயிருக்கிற அரிசி அவனது எலும்பாலும் ஆனது என்பதை உணர்ந்து கொண்டால், அந்த நெல்லை உற்பத்தி செய்ய அவன் வடிக்கிற வியர்வை, விலை மதிப்பற்றது என்பதைப் புரிந்து கொள்ளலாம்."[9]

உறுபசியும், ஓவாப் பிணியும், செறுபகையும்
சேராது இயல்வது-நாடு - குறள், நாடு 734

பிணிஇன்மை, செல்வம், விளைவு இன்பம், ஏமம்
அணிஎன்ப, நாட்டிற்கு இவ்ஐந்து - குறள், நாடு 738

சுதந்திர இந்தியாவில் கடந்த ஐம்பது ஆண்டுகளில் விவசாயிகளின் வருமானத்தைப் பாதுகாக்கவும்,

அதிகரிக்கவும் மத்திய, மாநில அரசு ஆணைகள் மற்றும் சட்டங்கள் பல கொண்டுவரப்பட்டன. பசுமைப் புரட்சியினால் நெல், கோதுமை, கரும்பு, பருத்தி போன்ற பல பயிர்களின் உற்பத்தி அதிகரித்தது. பல காலகட்டங்களில் பிறப்பிக்கப்பட்ட அரசு ஆணைகளையும் மற்றும் சட்டங்களையும் திருத்தியமைக்காததினால் அதிக உற்பத்தி பெற்றும் விவசாயிகளின் வருமானம் அதிகரிக்கவில்லை.

அரசு தலையீட்டினால் விவசாயிகளுக்கு விலைகிடைப்பதில்லை. அப்படி என்றால் அரசு தலையிட வேண்டிய அவசியம் என்ன? மக்களுக்கு உணவு அளிப்பவர்கள் விவசாயிகள் தான் - அரசு அல்ல, மக்களைக் காப்பாற்றுகிறோம் என்று அரசும், அதிகாரிகளும் தங்களைக் காட்டிக் கொள்வதால் விவசாயிகளுக்குத் தான் பெரும் இழப்புகள். அரசுத்துறையில் பொது விநியோகம் செய்வதால் தங்கள் வசதிக்கேற்றவாறு சட்டத்தை இயற்றிக் கொண்டு ஊழலுக்கு வழி வகுக்கிறார்கள்.

ஊழல் மனித உரிமைகளை சீர்குலைக்கும், முதல் நோயாக வளரும் நாடுகளில் காண்கிறோம்.

கந்தக மருந்துகள், ஆன்டிபயாடிக் மருந்துகள், ரேடியோ கதிர் சிகிச்சை போன்றவற்றில் ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றங்களின் பயனாக, வறுமை, பிணி, ஊட்டமில்லா உணவு ஆகியவற்றால் விளையும் நோய்களை விலக்குவது சாத்தியமாகியுள்ளது. நோய்களை வெல்வதில் ஆய்வுகள் இன்னமும் தொடர்கின்றன. காலமுள்ளவரை இப்பணி தொடரும். உலகில் பலநாடுகள், குறிப்பாக ஆசிய ஆப்பிரிக்க நாடுகள், போதிய மருத்துவ வசதிகள் இல்லாத

காரணத்தால் துன்பப்படுகின்றன. அம்மை, காலரா, கொள்ளை நோய், மலேரியா, விஷக்காய்ச்சல், ஏமக்குறைவு நோய் (AIDS) (HIV) ஆகியவை பெரிதும் பரவியுள்ளன. வறுமையால் வாழும் இந்நாடுகள் தங்கள் நிலையில் முன்னேற்றம் காண உலகச் சுகாதார நிறுவனம் (WHO) இயன்ற உதவிகளைச் செய்து வருகிறது.

நாம் ஒரு சில நோய்களைச் சமாளித்து வரும் நேரத்திலேயே, வேறுபல நோய்கள் பரவி வருகின்றன. குறிப்பாக ஏமக்குறைவு நோய் (எய்ட்ஸ்) மனிதர்களாக வாழும் கண்ணியத்தையே சீர்குலைத்து விட்டது.

நலமாக வாழ்வது ஓர் உரிமை. நலமாக வாழ்வது என்றால் என்ன? உடலும், உள்ளமும் நிறைவு பெறுவதே ஆரோக்கியம். இன்று மக்களின் வாழ்க்கையில், நிறைவும் நிம்மதியும் குலைந்து, சிக்கலும் சோதனையும் சூழ்ந்து முனைப்பும் மோதலும் மூண்டு, நாம் நம்மையே இழந்து, பறிகொடுத்த நிலையில், பரிதாபமாய் உள்ளோம். கபட வாழ்வு வாழும் நிலை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. நம் எண்ணம் ஒருவகையானது; நம் நடத்தை நேர்மாறானது. இந்த உணர்ச்சிச் சிக்கல்களும் கொந்தளிப்புகளும் உடல்நலனை, மனநலத்தை கண்ணியமான வாழ்வை அடிப்படையிலேயே பாதிக்கின்றன. வெறும் மருந்துகளால் மட்டும் நாம் மன நிறைவையும் அமைதியையும், கண்ணியத்தையும் விலைக்கு வாங்க முடியாது.

ஒரு புறம் நாம் வறுமை, பிணி, துன்பங்களைத் தணிக்க முயற்சிகள் மேற்கொண்டுள்ளோம். மறுபுறம் அழிவுச் சாதனங்களை மேலும் கூர்மையாக்கி வருகின்றோம். மனித நாகரிகத்தின் உயிருக்கே உலை வைக்கும் அணு ஆயுத

சோதனைகளை போட்டிப்போட்டுக் கொண்டு செய்கின்றோம்.;

21-ஆம் நூற்றாண்டில் நம்மை எதிர்நோக்கியுள்ள மிகப்பெரிய பிரச்சனை சுற்றுச் சூழல் கேடுதான் (Pollution). மகாத்மா காந்தியடிகள் நகரங்களின் வளர்ச்சியை விரும்பியதேயில்லை. ஆனாலும் நகரங்கள் அசுர வேகத்தில் வளர்ந்து விடும் என்று அஞ்சினார். அதனால்தான் கிராமப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து, கிராம ராஜ்யத்தை உருவாக்க எண்ணினார்.

விடுதலை பெற்ற இந்தியாவில் நாம் உற்பத்தி செய்த பெருமளவு மின்சாரத்தைச் சென்ற 60 ஆண்டுகளாக நகரங்களுக்கே நாம் வழங்கிவிட்டோம். மின்சாரத்தைக் கொண்டு ஏராளமான தொழிற்சாலைகள் நகரங்களில் வளர்ந்து விட்டன. போக்குவரத்து வாகனங்கள் பெருகி விட்டன. நகரங்களில் வேலை கிடைப்பதால், நகர மக்கள் தொகையும் அதிகரித்து விட்டது. சுற்றுச் சூழல் கேடும் இரைச்சலும், உடல் நலம் குறைவும் நமது நகரங்களில் நிறைந்து கெண்டிருப்பதைச் சென்ற நூற்றாண்டிலிருந்தே அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

குறிப்பாக டெல்லி, மும்பை, கொல்கத்தா, கான்பூர், ஹைதராபாத், பெங்களூர், சென்னை ஆகிய 7 நகரங்களில் போக்குவரத்து வாகனங்களின் நச்சுப்புகை தாங்க முடியாத அளவுக்கு அதிகரித்து விட்டது. ஆரோக்கியக் குறைவுக்கு உரியதாக இந்த 7 நகரங்களும் மாறிவிட்டன.

இந்த, நூற்றாண்டிலாவது 7 நகரங்களும் மின்சாரத்தால் இயங்கும் பேருந்துகளை நகரத்திற்குள் இயங்குமாறு செய்ய

வேண்டும். மின்சாரப்பேருந்துகள் இயங்குமானால், கரிய புகையை வெளியேற்றிக் கொண்டு வேகமாக வரும் தனியார்போக்குவரத்து வாகனங்களின் அவசியத்தைக் குறைக்க முடியும்.

வாகனங்கள் அனைத்தையும் பெட்ரோல், டீசல் இல்லாமல் ஆல்கஹால் மூலம் இயங்கும் வாகனங்களாக மாற்ற வேண்டும். பிரேசில் நாட்டில் ஆல்கஹாலை எரிபொருளாகப் பயன்படுத்தித் திருப்திகரமான வெற்றியைப் பெற்றுள்ளார்கள். சுற்றுச்சூழலுக்குக் கேடு விளைவிக்காத வகையில் அந்த வாகனங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

ஆல்கஹாலை எரிபொருளாக உபயோகப்படுத்துகிற முயற்சியில் நாம் இறங்குவோமானால், சர்க்கரை ஆலைகளில் ஆல்கஹால் மட்டுமே உற்பத்தி செய்யும் சர்க்கரை ஆலைகளாக ஒரு பிரிவிவை ஒதுக்கலாம். இந்த ஆல்கஹால் பெட்ரோலை விட விலை குறைவானது. நச்சுப் புகையும் இல்லை.

மானிடவர்க்கத்தின் புதிய கண்டுபிடிப்புகள் மிகப்பெரிய கண்டு பிடிப்புகள் அறிவியல் தொழில் நட்ப வளர்ச்சி பூமியை சிறிது சிறிதாக நச்சு மயமாக்கிக் கொண்டிருக்கிறது. அறிவியலின் அசுர வளர்ச்சி இயற்கை அன்னையைத் துன்புறுத்துகிறான் என்றால் மிகையாகாது. தொழில்துறையில் முன்னேறிவிட்ட நாடுகள் அதன் இரசாயன மற்றும் கதிர்வீச்சுக் கழிவுகளை கடலில் கலப்பதும், பூமிக்குக் கீழ் புதைப்பதும் தீவிரவாதச் செயலாகும்.

உலகின் 70% கார்பன்-டை-ஆக்சைடு என்ற கரியமில வாயுவின் வெளியேற்றத்திற்கு அமெரிக்க நாடுகளும்,

ஐரோப்பிய நாடுகளும் பொறுப்பாகின்றன. இந்த வாயு ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் அதிகமாகும் போது பூமி மிகவும் வெப்பமடைந்துவிடும்.

## உலக மயமாக்கல் மற்றும் தாராள மயப்படுத்தல் மனித உரிமைகள் பாதிப்பும்

உலக மயமாக்கல், தாராள மயப்படுத்துதல் என்னும் பெயர்களில் இந்தியாவில் மற்றும் பெரும் பாலான ஆசிய நாடுகளில் பின்பற்றப்படும் சந்தைப் பொருளாதார முறையை மக்களின் மீது ஒரு மாபெரும் படையெடுப்பு மனித உரிமைகள் மீறல் என்றே குறிப்பிட வேண்டும். மூலதனத்திற்குத்தான் உலக மயமாக்கல், இயற்கை சொந்தம், மனிதர் உழைப்புத்திறன் சொந்தம் என்று பிரகடனம் செய்கிறது சந்தைப் பொருளாதாரம். இந்தியாவில் தேவையான மூலதனம் இல்லை. போதிய அறிவியல் தொழில் நுட்பம் இல்லை, சாத்தியமில்லை. இவை இரண்டும் வெளிநாடுகளில் இருந்து வந்தாக வேண்டும் என்று கருதப்படுகிறது.

ஆகவே, பன்னாட்டு நிறுவனங்களை முழு அளவில் அனுமதிப்பதைத் தவிர இந்தியாவிற்கு வேறு வழியில்லை. சர்வதேச நிதியமும், உலக வங்கியும், உலக வர்த்தக நிறுவனமும் முன் வைக்கும் கோரிக்கைகளை நிறைவேற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. பொதுத்துறை நிறுவனங்களைத் தனியாருக்குத் தந்துவிட வேண்டும். ஏற்றுமதி இறக்குமதிக்கான கட்டுப்பாடுகளைப் பெருமளவில் குறைக்க வேண்டும். ஏற்றுமதியைப் பெருமளவில் அதிகரிக்க வேண்டும். இவ்வகையில் சந்தைப் பொருளாதாரம் இந்திய மக்களின் வாழ்வாதார பொருளாதார உரிமைகளை தகர்க்கின்றது.

நவீன அறிவியல், தொழில்நுட்பம் பெருமளவில் இங்கு இறக்குமதியானால் ஒழிய, நமக்கு வாழ்வில்லை என்று சொல்லி, அந்நிய நிறுவனங்கள் இந்திய நிறுவனங்களோடு கூட்டு சேர்வதாகச் சொல்லிக்கொண்டே இந்திய நிறுவனங்களை விழுங்கி விடுகின்றன.

உலகமயம், தாராளமயம் என்கிற கொள்கைகளை அன்றைய தலைமை அமைச்சர் நரசிம்மராவ் அரசு அறிவித்த போது, அன்றைய மக்களவையில் முன்னாள் பிரதமர் சந்திரசேகர் எச்சரித்தது இப்போதும் காதில் ஒலிக்கிறது. "உலகமயம் என்கிற பெயரில் இந்தியாவில் அன்னிய சக்திகள் எந்தவித வரைமுறையோ, கட்டுப்பாடோ இல்லாமல் வளைய வர அனுமதிக்கப் போகிறீர்கள். இதன் பின்விளைவுகள் மிகவும் மோசமானதாக இருக்கும். நமது கட்டுப்பாட்டில் நமது நாடும் சுதந்திரமும் இல்லாமல் போகும் அபாயம் எனக்குத் தெரிகிறது."[10]

"ப்ளு லேடி" என்ற எஸ்.எஸ். நர்வே என்கிற கப்பல் சுமார் 1,240 டன்கள் நச்சுத்தன்மை கொண்ட ஆஸ்பெஸ்டாஸை பாலிக்ளோரினேட்டட் பைபினைல்ஸ் என்கிற நச்சுத்தன்மையுடைய ரசாயனமும் இருப்பதாக அந்த நிறுவனத்தாரே ஒப்புக்கொண்ட அந்தக் கப்பல், இந்தியாவைத் தஞ்சம் புகுந்தது.

இத்தனைக்கும், இந்தியா உள்பட சுமார் நாற்பது நாடுகள், புற்று நோய் ஏற்படக் காரணமாக இருக்கும் என்பதால் ஆஸ்பெஸ்டாஸ் இறக்குமதியைத் தடை செய்திருக்கின்றன. மனிதாபிமான அடிப்படையில், உச்சநீதிமன்றத்தையும், மத்திய அரசின் சுற்றுச் சூழல் அமைச்சகத்தையும் அந்தக் கப்பலின் உரிமையாளர்கள் தங்களது கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வைத்து விட்டனர்.

தூத்துக்குடி துறைமுகத்திற்கு செப்டம்பர் மாதம் 2005 ஆம் ஆண்டு அமெரிக்காவிலிருந்து ஒரு கப்பல் வந்தடைந்தது. அதில் 25,000 டன் பழைய பேப்பர் 960 கண்டெய்னர்களில் பிளாஸ்டிக் பைகள், பூச்சிக்கொல்லி மருந்து டப்பாக்கள், உபயோகித்துத் தூக்கி எறிந்த பேட்டரிகள், கக்கூஸ் குப்பைகள், மிதியடிகள் அடைக்கப்பட்டிருந்தன. மத்திய மாசுக்கட்டுப்பாடு ஆணைய நிபுணர்கள் மீண்டும் நியூஜெர்சிக்கே அனுப்பிவிடும்படி அறிக்கை அளித்தும் ஐ.டி.சி. நிறுவனம் அதைத்திருப்பி அனுப்பக் கூடாது என்பதற்கு நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தது.

நமது ஆட்சியாளர்களை வேண்டிக்கொள்வது இந்தியாவை வல்லரசு நாடுகளின் குப்பைத் தொட்டியாக்க வேண்டாம் என்பதுதான்?[5]

நவீன விளம்பர சாதனங்களும், செப்படி வித்தைகளும் நம் மக்களுக்குள் நுகர்வு வெறியைத் தூண்டுகின்றன. அடிப்படைத் தொழில்களின் ஆக்கங்களுக்குப் பதிலாக நுகர்வு சாதனங்களின் உற்பத்தியிலேயே மூலதனம் குவிக்கப்படுகிறது. உள்நாட்டு வெளிநாட்டுக் கடன்கள் பலமடங்கு அதிகரித்து மக்களை அழுத்துகின்றன.

வாழ்வின் எல்லாத் துறைகளையும் ஊழலுக்கு உட்படுத்திவிட்டால் நாம் எவ்வாறு வாழமுடியும். இயற்கையை நாசப்படுத்துவதில் இவர்கள் முனைந்து நிற்கிறார்கள். நவீன வாழ்க்கை வசதிகளை ஏராளமாகக் குவித்துக் கொள்வதன் மூலம் இந்தியாவின் பண்பாடும் வாழ்வியல் முறையும் அழிந்து வருகிறது.

20 விழுக்காடு நகர மக்களுக்காக 80 விழுக்காடு கிராம மக்கள் தம் வாழ்வை அழித்துக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் தவிர்க்க முடியாது என்று அறிவுரை கூறுகின்றனர். சுரண்டலும், ஒடுக்கு முறையும் அதிகரிக்கும் விகிதத்தில் சாதிச்சண்டையும் மதக் கலவரங்களும் அதிகரிக்கின்றன.

உலகம் முழுவதும் ஆட்டிப்படைக்கும் இச்சிக்கல்கள் குறித்து ஐ.நா. கூறியுள்ளது இந்தியாவிற்கும் இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திற்கும் பொருந்தும். நமது இயற்கைச் சூழல் நாசமாவது பற்றி பெரிதும் அக்கறை கொண்டு செயல்படவேண்டும். இந்தியாவின் மாநில அரசுகள் தங்கள் மாநிலங்களை டெட்ராய்டாகவும், மான்செஸ்ட்டராகவும் மாற்றுவதில் முனைந்திருக்கின்றன. ஆறுகள் மறைந்து வருகின்றன. அல்லது கூவங்களாக மாறி வருகின்றன. அந்நியச் செலாவணி பெருக வேண்டும் என்பதற்காகத் தோல் பதனிடும் தொழிற்சாலைகளாலும் இயற்கைநிலம் நஞ்சேறி வருகிறது. அரசு அனுமதித்துதான் இவ்வளவும் நடைபெறுகிறது. ஆயிரம் கோடி அந்நியச் செலாவணிக்காக லட்சக்கணக்கான கிராமங்கள் அழிவதைப் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். இவற்றின் இறுதி விளைவு என்னவாகும்?

"மனிதர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய அளவுக்கு இந்தப்பூமியில் வளங்கள் இருக்கின்றன. ஆனால் மனிதனின் பேராசையைப் பூர்த்தி செய்ய இவை போதாது" என்று அண்ணல்காந்தி அடிகள் கூறினார். தேவையில்லாத நுகர்வுகளைத் தவிர்த்து, பசுமை சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு கார்பன் உமிழ்வைக்

குறைப்பதன் மூலம் தனி நபர்களும் சுற்றுப்புறச் சூழலோடு மனித உரிமைகளைக் காக்க முடியும். 2007-ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவரும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக உலகெங்கும் பிரச்சாரம் செய்து வருபவருமான அல்கோர் கூறினார்: “இந்த பூமி நமது வீடு. இதற்கு ஆபத்து வந்திருக்கிறது. செயல்பட இதுதான் தருணம். இதுதான் இடம்...”

கொலை மேற்கொண்டாரிற் கொடிதே அலைமேற்கொண்டு
அல்லவை செய்து ஒழுகும் வேந்து

- குறள் அதிகாரம் “கொடுங்கோண்மை” 551

குடிகளைவருத்தி அறம் அல்லாத செயல்களைச் செய்யும் மன்னவன் கொலை செய்வார்களைக் காட்டிலும் கொடியவன்

சுயமான தொழில் வளர்ச்சிக்கு அந்நிய நிறுவனங்களை நம்பிப் பயனில்லை. நம் சொந்தக் காலில் நிற்பதுதான் நமக்குச் சுதந்திரம். நம் கிராமங்களையும், வேளாண்மை மற்றும் கைவினைஞர்களின் மரபு முறை அறிவையும் தொடர்ந்து அழிப்பதன் மூலம் இவர்களை நாம் வறியவர்களாக்குகிறோம். சுயபலத்தை அழிக்கிறோம். நவீனத் தொழிற்கூடங்களில் இவர்களைக் கூலிகளாக்குகிறோம். அவர்கள் கண்ணியம் இழந்து நிலைகுன்றி நிற்கிறார்கள்.

ஒரு நாட்டு மக்கள் கண்ணியமாக வாழ என்ன தேவை என்பதை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அய்யன் திருவள்ளுவர் சொல்லிச் சென்றதை மறந்ததனால் பல இன்னல்களுக்கு ஆளானோம்.

தள்ளா விளையுளும், தக்காரும், தாழ்வுஇலாச்
செல்வரும், சேர்வது நாடு

- குறள் "நாடு" 731

எந்நாளும் தட்டுப்பாடில்லாத நல்ல விளைச்சலையும் எல்லா வகையிலும் தகுதியுடைய சான்றோர்களையும் எவ்வகையிலும் தாழ்வுபடாத நல்ல செல்வர்களையும் ஒரு சேரக்கொண்டு விளங்குவதே நாடு எனப்படும்.

(பொருள் குறள் 731)

கேடு அறியா கெட்டஇடத்தும் வளம் குன்றா
நாடு, என்ப, நாட்டின் தலை - குறள் "நாடு" 736

இயற்கைச் சீரழிவாலோ பகையாலோ கெடுதல் அறியாததும், அறிதாகக் கேடு வந்தாயினும், தன் வளங்குறையாதுமாகிய நாட்டினை நாடுகள் எல்லாவற்றிலும் தலைமையானது என்பர். (பொருள் - குறள் நாடு : 736)

இருபுனலும், வாய்ந்தமலையும் வருபுனலும்
வல் அரணும் நாட்டிற்கு உறுப்பு - குறள் "நாடு" 737

ஊற்று நீர் மழைநீர் எனப்பட்ட இரண்டு நீரும் வளந்தருமாறு வாய்ந்த மலைகளும் மலைகளில் உண்டாகி வரும் ஆற்று நீரும்,. இவற்றும் வலிமை வாய்ந்த இயற்கை அரண்களும் ஒரு நாட்டிற்கு இன்றியமையாத உறுப்புகளாகும்.

இத்தகைய கோட்பாடுகளை அறநெறிகளைக் காத்துவரும் நாடுகள் இன்றும் வாழ்வாங்கு வாழ்கின்றன. அவற்றை தவறவிட்ட நாடுகள் மரண அடிவாங்கி தவிக்கின்றன.

சந்தைப் பொருளாதாரம் தொடர்ந்து ஆதிக்கம் பெற்று வருகிற சூழலில், மக்களின் கைகளைவிட்டு நிலங்கள், நீர்நிலைகள், காடுகள் முதலியவை மட்டுமல்லாமல் தொழில்களும் அந்நியர்களுக்கு உடமையாகின்றன. கல்வி நிறுவனங்களிலும், அந்நியர்களின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது. மக்களுக்குத் தாய்மொழியில் கல்வி தரப்படுவதில்லை. தன்மானம் பெறுவதற்கான கல்வி இங்கு தரப்படவில்லை.

தமிழ் இதழ்கள் வணிக உணர்வோடுதான் தீவிரமாகச் செயல்படுகின்றன. நுகர்வு வெறி, அறிஞர்களின் தடங்களை அழிக்கின்றன. தாய் மொழியில் இங்கு ஆய்வுகள் சிறக்க வேண்டும். மக்களுக்குள் வந்திருக்கக் கூடிய முரண்பாடுகளையும், சிக்கல்களையும் ஆழமாகவும், அகலமாகவும் ஆய்வு செய்வதற்குத் தேவையான வரலாறு மற்றும் பொருளியல் அறிவும் உலக அளவிலான பார்வையும் நம் இலக்கியவாதிகளுக்கு வேண்டும். இலக்கியம் படைப்பதற்கு இவ்வகை ஆய்வு இல்லாமல் முடியாது என்ற உண்மையை நாம் உணர வேண்டும். அறிவுடைய சான்றோர்களை அவர்களின் பங்களிப்பிற்கு தாராளமாக அனுமதிக்க வேண்டும்.

சந்தைப் பொருளாதாரத்தின் விளைவாக உலகச் சூழலில் இந்தியா தன்னைத் தக்கவைத்துக் கொள்ள முடியாது. இந்தியாவிற்கான தனிமுகம் அழிந்துபோகும். ஓருலகம் என்ற உயர்ந்த கொள்கை நிறைவேறுமா என்றால் அப்படி எதுவும் நடந்து விடாது. அதற்கு மாறாக அமெரிக்கா மற்றும் சில ஐரோப்பிய நாடுகளின் கீழ் உலகம் அடிமைப்பட்டுக் கிடக்கும்.

சந்தைப் பொருளாதாரம் நமக்கு வழங்குவது சமதர்மம் அல்ல. சமத்துவம் அல்ல கண்ணியமும் அல்ல. நமக்குள் திணிப்பது அடிமைத்தனம். மனிதத் தரத்தோடு கூட நாம் வாழ முடியாது. இயற்கையோடும் உயிரினங்களோடும் நாம் வளர்த்துக் கொண்ட உறவுகளுக்கு பொருள் இல்லை. இந்த அழகுகளையெல்லாம் நாம் இழந்து வறியவர்களாவோம். அன்பற்றவர்களாவோம்.

முன்னொரு காலத்தில் இந்திய மக்கள் எங்கும் நிறைந்திருந்த வனங்களைக் கிராமத்து மக்களே பராமரித்து வந்தனர். வனங்களையும் பாதுகாத்து,. அவற்றிலிருந்து விறகு, தேன், பழம், மூலிகை போன்ற தமக்குத் தேவையான பொருள்களை வனங்களைப் பாதிக்காத வகையில் எடுத்துக் கொண்டு அவற்றோடு ஒரு அழகான உறவை ஏற்படுத்திக் கொண்டிருந்தனர். இங்கிருந்து சேகரித்த மரத்தைக் கொண்டு தங்களுடைய வீடுகளைக் கட்டிக் கொண்டும், விவசாயக் கருவிகளைச் செய்து கொண்டும் வாழ்ந்து வந்தனர். வனங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவற்றைப் புனிதத்தன்மை கொண்டவையாகப் பாவித்து வந்தனர். சில வனப் பகுதிகளை “Sacred Groves”களாகவும் பாதுகாத்து வணங்கி வந்த கலாச்சாரம் அது.[11]

தெய்வப் பேராசான் அய்யன் திருவள்ளுவருக்கும், வடலூர் வள்ளலாருக்கும், உத்தமர் காந்தியடிகளுக்கும் என்ன மரியாதை செய்துள்ளோம். விவிலியம் உறைத்தது போல் ஆன்மாவை இழந்தவிட்ட நிலையில் உலகமே நம் கைக்கு வந்தாலும் என்ன பயன்?

இதுதான் மக்களாகிய நமக்கு இன்று நேர்ந்துள்ள நெருக்கடி நிலை. மனித உரிமைகளை இழந்து வரும் நிலை. இதிலிருந்து நம்மை எப்படி மீட்டுக் கொள்ளப் போகிறோம்?

தாய்மொழி உணர்வென்பது வெறும் மொழி உணர்வு இல்லை. வெறும் இன உணர்வும் அல்ல. தமிழ் உணர்வை வரலாற்றிலிருந்தும் இலக்கியத்திலிருந்தும் மட்டும் நாம் திரட்டிக் கொள்ளவில்லை. நம் மக்களின் பெருந்தொழில் வேளாண்மை. நிலத்தோடும் நீரோடும் இயற்கையோடும் உறவு அழிந்த நிலையில் நாம் தமிழர்களாக இருக்க மாட்டோம். அன்பும் அற உணர்வும் நமக்குள் தங்க முடியாது. ஆகவே, மொழி உணர்வு என்பது நிலத்தோடும் நீரோடும், உயிரினங்களோடும், உழைப்போடும் பகிர்வோடும் நமக்குள் சேகரித்துக் கொள்கிற உணர்வு. உழவர்களையும் உழவுத் தொழிலையும் நசிந்து போகச் செய்துவிட்டோம்.

உழுவார் உலகத்தூர்க்கு ஆணி, அஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து

- குறள் “உழவு” 1032

பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகு உடை நீழலவர்

- குறள் “உழவு” 1034

உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை

- குறள் “உழவு” 1036

நமது முன்னோர்கள் முனிவர்கள், சான்றோர்கள், இறைவனையும் இயற்கையையும் ஒன்றிணைத்தே வழிபட்டார்கள்.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்றஇத் தாவர சங்கமத்துள்[12]

என பிரபஞ்சத்தையே ஒருங்கிணைத்துக் கண்டார்கள்.

தமிழ் மக்களுக்கு ஏன் இந்திய மக்கள் அனைவருக்கும் நீரும், நிலமும், காற்றும், வானமும் வேண்டும். தனது பொருளியலை, அரசியலைப் படைத்துக் கொள்கிற உரிமையும் ஆற்றலும் நமக்குத் தேவை.

## யாரும் தனித்து வாழ்வதில்லை

இப்புவிமண்டலத்தில் (No man is an island) வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனும் சுற்றுப்புறத்தோடு பின்னப்பட்டிருக் கின்றான்.

மனிதன் உண்ணும் உணவின்
புனிதத் தன்மை
அவனைத் தழுவும் காற்றின் மென்மை
அவன் வாழ்கின்ற மண்ணின் வாசனை
வளர்க்கின்ற மரத்தின் நிழல்
வான்மேகம் தருகின்ற மழை
ஏகாந்தம் தருகின்ற இனிமை

இவையனைத்தும் சுத்தமான சுற்றுப்புறம் மனிதனுக்குத் தருகின்ற சுகங்கள்.

இயற்கையோடு இணைந்து காடுகளிலும், மலை அடிவாரத்திலும் மனிதன் வாழ்ந்த போது சுற்றுப்புறம் மிகவும்

சுத்தமாகவே இருந்தது. ஆனால், அறிவியலின் தூண்டுதலால், இயற்கையிலிருந்து விலகி, தனக்கென தன் சுயநலத்திற்காக இயற்கையை என்று மனிதன் வளைத்தானோ, அன்றிலிருந்து சுற்றுப்புறத்தின் புனிதம் குறையத் தொடங்கிவிட்டது. தான் வகுத்த பாதையில் பொதுநோக்கு குறைந்து, சுயலாபத்தையும், சுயமுன்னேற்றத்தை மட்டுமே கருத்தில் கொண்டு மனிதன் எதிலுமே தன் தேவையை மட்டுமே என்று மையமாக வைத்தானோ அன்றிலிருந்து சுற்றுப்புறத்தை மாசுபடுத்த ஆரம்பித்து விட்டான்.

“ஒருமண் சத்திழந்து, தாவரங்கள் பசுமையாக வளராவிட்டால் நவீன அறிவியல், நைட்ரஜன் சத்தை மண்ணுக்கு ஊட்ட, யூரியாவை மண்ணில் சேர்க்கச் சொல்லும். இந்த உப்பின் சேர்க்கையால், மண்ணில் வாழும் நுண்ணுயிர்கள் அழிந்து, இயற்கையாகக் கிடைத்துக் கொண்டிருந்த ஊட்டச்சத்துக்கள் கிடைக்காமல் போய் மண் மலட்டுத்தன்மை அடைகிறது.”[13]

“ஒவ்வொரு உயிரினத்திற்கும் சுற்றுச் சூழலில் தனித்த பங்கு உள்ளது. அதிலே இடர் தோன்றுமானால் மானுடத்தின் அழிவுக்கு அது ஆரம்பமாகும். உதாரணமாக, பூமியிலிருந்து பட்டாம் பூச்சிகள் அழிக்கப்படுமானால், மகரந்தக் கலப்பு நின்று போகும். பிறகு மலர்கள் ஏது கனிகள் ஏது? இறுதியாக, மானுடம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய்விடும்.

“மொரீஷியஸ் தீவில் டோடோ பறவை அழிந்து போன பிறகு அங்கே சுற்றுச்சூழலில் ஏற்பட்டிருக்கும் இழப்பு வர்ணிக்க முடியாதது. டோடோ பறவையின் எச்சத்தினா லேயே முளைவிடும் ஒரு சிறப்புவாய்ந்த தாவரவகை அங்கே இல்லாது ஒழிந்து போயிற்று. கடந்த நானூறு

வருடங்களாக அந்த தாவர இனத்தை மறுபடியும் முளைக்கச் செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் எல்லாம் பயனளிக்கவில்லை. மக்கள் இயற்கைக்கு ஊறு விளைவித்தால், இயற்கை உடனே எதிர்த்து தாக்குகின்றது."[14]

முடிவு? மிதமிஞ்சிய வேதனைதான்.

உணவு என்ற பெயரில் இன்று மனிதன் இரசாயன உரங்களை உண்கிறான். மென்காற்று, நச்சுப்புகையாக மாறிவிட்டது. மரங்கள் அழிக்கப்பட்டு விட்டன. வளம் குறைந்து மண் தன் வாசனையை இழந்து விட்டது.

மேகத்திடம் மழையில்லை. அந்த இனிமை தருகின்ற ஏகாந்தம் இல்லை. எங்கும் இரைச்சலின் ஆதிக்கம்.

இந்த அவலநிலை இனியும் தொடர வேண்டுமா?

சென்ற ஐம்பது ஆண்டுகளில் நம் நாட்டில் காடுகள்அழிக்கப்பட்ட வேகத்தைப் பார்க்கும் போது மிகவும் வேதனையாக இருக்கிறது. வனத்துறையில் அதிகாரப் பூர்வமான அறிவிப்பின்படி, நமது நாடு 1951-க்கும் 72க்கும் இடையே 34 லட்சம் ஹெக்டேர் காடுகளை இழந்துவிட்டது. வளரும் நாட்டில் ஏற்படுகின்ற மிதமிஞ்சிய தேவைகளே இதற்குக் காரணம். பேராசைகள். புதிய பயிர் நிலங்கள், சாலைகள், தொழிற்சாலைகள் ஆகியவற்றை உருவாக்கும்பொருட்டு காடுகள் அழிக்கப்பட்டன. இதைத் தவிர சட்டத்தை மீறி மரம் வெட்டப்படும் நிலங்களும் உண்டு. ஆந்திரப் பிரதேசத்தில் அனந்தபூர் மாவட்டத்திலுள்ள ஒதுக்கப்பட்ட காடுகளில் மரங்களே இல்லை என்பதை விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் வானிலிருந்து செய்த மதிப்பீட்டின்படி கூறுகிறது. நகர்ப்புற வளர்ச்சியின் காரணமாகவும் காடுகள் அழிந்து வருகின்றன.[15]

தங்களுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள, ஆங்கிலேய அரசு, 1800 களில் வன மேலாண்மையைத் (உண்மையில் அதன் கட்டுப்பாட்டை) தன் கைகளில் எடுத்துக்கொண்டது. முதலில், கிராம மக்கள் வனங்களுக்குச் சென்று கால்நடைகளை மேய விடுவதற்கும். அவற்றிலிருந்து தங்களுக்குத் தேவையான பொருள்களை எடுத்துக்கொள்ளவதற்கும் தடைவிதிக்கப்பட்டது. 1803இல் தான் முதலில் கடல் வர்த்தகத்துக்கான ,கப்பல்களைக் கட்டுவதற்காக மலபார் தேக்கு மரங்களை "reserved" (ஒதுக்கப்பட்டுள்ளது) என்று அறிவித்து, வெட்டி வீழ்த்தினர். . . . வனத்துறை நிறுவப்பட்டபோது, விலை மதிப்புள்ள மரங்களடர்ந்த வனங்களைப் பாதுகாத்து, அதை வெட்டியெடுத்து ஆங்கிலேயருக்கு வருமானத்தை ஈட்டிக் கொடுப்பதே அதன்முக்கிய நோக்கமாக இருந்தது. இதனால் நமது வேளாண்மையும் அதன் அடிப்படையில் அமைந்த நமது கிராமியப் பொருளாதாரமும் கலாச்சாரமும் வெகுவாகப் பாதிக்கப்பட்டன.[16]

நமது சுயநலம் கலந்த பொருளாதார வளர்ச்சி, கடல் நீரை மட்டுமன்றி, காற்று மண்டலத்தையும் அசுத்தப்படுத்தி விட்டது. நச்சுப் பொருளைப் புகைக்கின்ற தனிமனிதன் முதல், சாலை முழுவதும் சத்தம் போட்டுக்கொண்டும், சகிக்க முடியாத கரும்புகையை கக்கிக் கொண்டும் ஓடுகின்ற வாகனங்கள் வரை காற்றைக் கரியாக்கிவிட்டன. இயற்கை நமக்களித்துள்ள பாதுகாப்பு வளையம் தான் ஓசோன். ஓசோன் என்ற காற்று மண்டலம் பூமியைச் சுற்றி அமைந்து சூரியனிடத்தில் இருந்து வரும் தீய கதிர்களை பூமிக்கு வரவிடாமல் தடுக்கிறது. நமது வாகனங்கள் அனுப்புகிற கரியமிலவாயு ஓசோன் வளையத்தில் ஆங்காங்கே

ஓட்டைபோட்டு விட்டு இனி, தீயகதிர்கள் பூமியை வந்து சேரும் அபாயம் வெகுவாகப் பெருகிவிட்டது. நந்தவனத்தில் ஓர் ஆண்டி என்று, இப்பூமியை நந்தவனமாகச் சித்தரித்து ஒரு சித்தர் பாடினாரே, அந்த நந்தவனம் இன்று பாலைவனமாக மாறிக் கொண்டிருக்கிறது.

## அணு உலையின் ஆபத்துக்கள்

1986-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ஆம் நாள் அன்றைய சோவியத்யூனியனில் செர்னேபில் எனும் இடத்திலுள்ள அணு உலையில் விபத்து ஏற்பட்டதை நாம் அனைவரும் அறிவோம். விபத்தின் காரணமாக அந்த அணு உலையிலிருந்து வந்த தீங்கு நிறைந்த கதிரியக்கத்தால் சுமார் 10,000 மக்கள் இறந்து விட்டனர். மேலும் அங்கு தற்போது பிறக்கின்ற குழந்தைகள் கதிரியக்கத்தால் பாதிக்கப்பட்டு ஊனமுற்றோ அல்லது மன வளர்ச்சியின்றியோ இருக்கின்றன. விபத்து நடந்து முடிந்த சில நிமிடங்களிலேயே ரேடியோ-ஐஸோடோப்கள் என்ற கதிர்வீச்சுத்துகள்கள் ஐரோப்பாவிலும், சுவீடனிலும், அமெரிக்கா கண்டத்திலும் கண்டெடுக்கப்பட்டனவெனில் அக்கதிர்வீச்சுத் துகள்கள் பரவும் வேகத்தினை நாம் ஊகிக்கலாம். ஜெர்மனி முழுவதும் இந்த விபத்தின் தாக்கம் முழுமையாக உணரப்பட்டது. விவசாயப் பயிர்களை அழித்து விடுமாறு ஜெர்மானிய அரசாங்கம் தனது விவசாயிகளுக்கு உத்தரவிட்டது. கறந்தபால், காய்கறிகள் எதையும் உண்ண வேண்டாம் என அது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தது. உலகெங்கிலும் உள்ள பல அணு உலைகளில் இவ்வாறான ஆபத்து ஏற்படாதென்பதற்கு என்ன உத்தரவாதம்? என்றாவது ஒருநாள் மனித இனத்தையே

விழுங்கப் போகின்ற இந்த அணு உலைகள் நமக்குத் தேவைதானா?

விபத்தின் கொடுமையை அறிந்தே இத்தகைய நடவடிக்கைகளை ஜெர்மனி எடுத்தது. இந்தியாவில் இந்த விபத்தின் தாக்கம் இருந்தாலும், அதனை அளவிடவோ, நடவடிக்கை எடுக்கவோ நம்மிடையே விழிப்புணர்வு மிகவும் குறைவு என்ற கசப்பான உண்மையை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இது போன்ற அதிபயங்கர விபத்துக்கள் தொடர்ந்து நடந்தால் பல நகரங்கள் மனித இனம் வாழ்வதற்கே அருகதையற்றதாகிவிடும். பூமிக்குக் கீழே நடத்தப்படும் அணுகுண்டு வெடிப்புச் சோதனைகளும், தொழில் துறையில் முன்னேறிவிட்ட நாடுகள் அதன் இரசாயன மற்றும் கதிர்வீச்சுக் கழிவுகளை கடலில் கலப்பதும், பூமிக்குக் கீழ் புதைப்பதும் தீவிரவாதச் செயல்தான்

நாட்டை வெறும் தொழிற்சாலையாக்கிவிடக் கூடாது. இயந்திரத் தொழில் மயமான சமுதாயத்தில், உணர்வற்ற நிர்ப்பந்தங்களினால் மனிதன் நசுக்கப்படுகின்றான்.

ஒரு நாட்டின் வாழ்வும், தாழ்வும், அந்த நாட்டில் ஓடுகின்ற நதிகளின் வாழ்வையும், தாழ்வையும் பொறுத்துத்தான் அமைகிறது. ஒரு நதியின் கரையில்தான் அந்த நாட்டின் நாகரிகம் தோன்றுகிறது. ஒரு நதியின் கரையில் தான் அந்த நாட்டின் வரலாறும் எழுதப்படுகிறது. புனிதமான அந்த நதிகளையும் நாம் விட்டுவைக்கவில்லை. மாசுபடுத்தத் தொடங்கி விட்டோம்.

நதிகளின் முக்கியத்துவத்தையும் அதனோடு இயைந்த மக்களின் வாழ்வையும் ஆட்சியாளர்கள் மறந்தார்கள். “நீரின்றமையாது உலகு” என்பதை நாம் மறந்தோம்.

லட்சக்கணக்கான மக்கள் நாள்தோறும் நீராடி கங்கையை மாசுபடுத்தி வருவதை நாம் அனைவரும் அறிவோம். கங்கையானாலும் சரி, காவிரியானாலும் சரி, குளிப்பது, துணி துவைப்பது, அஸ்தியைக் கரைப்பது, முழுவதும் எரிக்கப்படாத உடல்களை எறிவது போன்ற செயல்கள் இந்நதிகளை மேலும், மேலும் மோசமாக்குகின்றன. இதைத் தவிர தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவுகள், காகித ஆலைகள், பெட்ரோலிய இரசாயன உர மற்றும் ரப்பர் தொழிற்சாலைகள், தோல் பதனிடும் தொழிற்சாலைகள், ஆக இன்னும் பல வகை நிறுவனங்கள், தங்கள் கழிவுகளை அப்புறப்படுத்த நதியைப் பயன்படுத்திக் கொள்கின்றன.

இந்திய நதிகளின் நிலை நமது நாட்டின் சுற்றுச்சூழல் எந்த நிலையில் உள்ளது என்பதற்கு சாட்சி. ஒரு மேம்போக்கான பார்வையிலேயே இந்திய நதிகள் செத்துக் கொண்டிருக்கின்றன என புரியும். வீட்டுக் கழிவுகளும் தொழிற்சாலைக் கழிவுகளும் கலப்பதாலும் ஏற்ற, இறக்கமிக்க நீரோட்டத்தாலும் ,அவை மாசடைந்திருக்கின்றன. உலக வெப்பமயமாதலால், இந்தியாவின் முக்கியநதிகள் மீதான நெருக்கடி அதிகரிக்கும். மத்திய மாநில அரசுகள் நதிகளின் சூழலியல் ஆரோக்கியத்தை மீட்க தீவிர இயக்கங்களில் இறங்க வேண்டும்.[17]

விரயத்தை தவிர்த்து செம்மையாக நீராதாரத்தை பயன்படுத்தும் திட்டங்களை அரசு செயல்படுத்த வேண்டாம். நதி மற்றும் நிலத்தடி நீரை திறம்பட நிர்வகிக்கும், சதுப்பு நிலங்களைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி

- குறள் "வான்சிறப்பு" 13

கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை

- குறள் "வான்சிறப்பு" 15

தானம் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்காதெனின்

- குறள் "வான் சிறப்பு" 19

நீரின் றமையாதுலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு

- குறள் "வான்சிறப்பு" 20

ஒரு சிலரின் தேவைக்காகக் காடுகள் அழிக்கப்பட வேண்டுமா? ஒரு சில நாடுகளின் ஆதிக்கத்திற்காக அணு குண்டுகள் தயாரிக்க வேண்டுமா? இயற்கை அன்னை உலகெங்கும் கடல் நீரைப் படைத்தது நமது தொழிற்சாலையின் கழிவுநீரை வாங்கவா? நமது வாகனங்களின் நச்சுப் புகைக்கு அடைக்கலம் கொடுக்கவா, வானத்தை இயற்கை அன்னை படைத்தாள்?

## எதிர்காலத்தை நினைத்துப் பாருங்கள்

இந்த பூமியும், அதன் சுற்றுப்புறமும் என்றென்றும் காலம் காலமாக இருக்கப் போகிறவை. ஆனால் சிறிது காலம் மட்டுமே வாழ்ந்து மறையப் போகிற நமக்கு இயற்கையை மாசுபடுத்த என்ன அதிகாரம் இருக்கிறது?

இயற்கையைச் செயற்கைப்படுத்தி செயலிழக்கச் செய்ய வேண்டாம். வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமென்பதற்காக வாழ்க்கையின் ஆன்மாவை அழிக்க வேண்டுமா? இயற்கை, இயற்கையாகவே இருக்கட்டும். அதுவே இனிமை.

அண்டை வீட்டுக்காரர்களை நேசியுங்கள் Love Thy Neighbour என்று ஏசுபிரான் கூறவில்லையா? Neighbour என்பது நம் பக்கத்து வீட்டுக்காரர் மட்டுமல்ல. நம்மைச் சுற்றியுள்ள நீர், நிலம், காற்று, மலை, மக்கள், மரங்கள் விலங்குகள் அத்தனையும் தான் உங்கள் Neighbour, அவைகளை கருணையோடு அன்போடு பாருங்கள்.

"வரலாற்றுக்கு புவியியல் தரும் அறிமுகம்" என்ற தமது நூலில் கவிஞர் தாகூர் எழுதுகிறார் :

அரங்கம் இன்றி நாடகம் நடக்காது; புவியியல்
இன்றி வரலாறு இல்லை

அதோ நம் தலைக்கு மேலே பறக்கிறதே ஒரு தாய்ப் பறவையும், அதன் குஞ்சுகளும் குஞ்சுகள் பறந்து பறந்து மிகவும் களைத்து விட்டன. தாய்ப் பறவையிடம் கெஞ்சுகிறது. பூமிக்குத் தரையிறங்க, ஆனால் தாய்ப் பறவையோ, பூமி அசுத்தமாகிவிட்டது. எங்கு நோக்கினும் சுகாதாரக் கேடு இருப்பதால் தரையிறங்குவது உயிருக்கு ஆபத்தாக முடியும் என்று எச்சரிக்கிறது.

குஞ்சுகள் தரையிறங்குமா? மனித சமுதாயத்திற்கு விடப்பட்ட எச்சரிக்கை

## மனித உரிமைப்புரட்சியும் சுகாதாரமும்

சுகாதார ஆராய்ச்சிகள் நடைபெற்றுவரும் இன்றைய உலகில், சுகாதாரச் சிக்கல்கள் குறித்து ஒருங்கிணைந்த, உலகளாவிய முறையில் சிந்திப்பதற்கான திறம்பாடு

அதிகரித்து வருவதுடன், மற்றொரு முக்கியமான வழியிலும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இது இன்றைய உலகில் மனிதஉரிமைகள் பற்றிய நம்பிக்கை நிறைந்த கருத்துக்கள் உருவாக இடமளித்துள்ளது.

இன்றைய மனித உரிமைகளின் அடிப்படைப் பண்புகளில் குறிப்பிடத்தக்கவை. அவை தனிமனிதர்களின் உரிமைகள் மனிதர்களாக இருப்பதாலேயே உரிமை அவர்களிடம் உள்ளார்ந்து அமைந்துள்ளன. இவை முக்கியமாக அரசுக்கும், தனிமனிதருக்குமிடையிலான உறவுநிலை பற்றியவை; உலகிலுள்ள அனைத்து மக்களுக்கும் இவைபொருந்தும். இப்போது பொருள் வரையறை செய்யப்பட்டுள்ள மனித உரிமைகளின் தத்துவ மற்றும் பண்பாடு குறித்து அளவற்ற சர்ச்சைகள் பற்றிய ஒரு பொதுவான அக்கறையும் ஒரு சொற்களஞ்சியமும் மனித உரிமைகளின் தொகுதியும் தேசிய மற்றும் உலகளாவிய உறவுகளில் சமுதாயத்தின் ஓர் அங்கமாகி விட்டன.

இந்த மனித உரிமைப் புரட்சியானது, சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்குமான குறிக்கோள்களையும், அதற்கான முயற்சிகளின் உள்ளடக்கத்தையும் தீவிரமாகப் பாதிக்கிறது. இந்தவகையில், சுகாதார ஆராய்ச்சிகளின் குறிக்கோள், நடைமுறைகள் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. முதலாவதாக, சுகாதாரக் கொள்கைகளும், திட்டங்களும், நடைமுறைகளும், மனித உரிமைகள் கண்ணியத்தின் மீது முக்கியமான பாதிப்புகளை உண்டாக்குகின்றன. இந்தப் பாதிப்புகளைத் தவிர்ப்பது அல்லது இயன்ற அளவு குறைப்பது இன்றியமையாததாகும்.

எடுத்துக்காட்டாக தனி மனிதர்களிடமிருந்து அவர்கள் எச்ஐவி கிருமித் தொற்று உடையவர்களா மார்பகப் புற்றுநோய் கொண்டவர்களா, மரபுவழி இதயநோய் பீடித்தவர்களா என்பதுபோன்ற, தகவல்களைச் சேகரிப்பது, தனிமனிதரின் உயிருக்கும், தனிமைக்குமான பாதுகாப்பு உரிமைகளை மீறுவதாகும் என்பது தெளிவு. பாலுறவு, முந்துரிமை அல்லது போதைப் பொருள் பயன்பாட்டு வரலாறு போன்ற சுகாதார நிலைமை அல்லது சுகாதார நடத்தை முறைபற்றிய தகவல்களை அரசு தவறாகப் பயன்படுத்துமானால் அல்லது மற்றவர்களுக்கு அளிக்கப்படுமானால், தனி மனிதர்களுக்கு பெருந்தீங்கு விளையக்கூடும்; அவர்களின் பல உரிமைகள் மீறப்படும். இதனால் எச்.ஐ.வி. நோய்த்தொற்று பற்றிய தகவல்களில் நேர்ந்தது போன்று அவர்கள் கொடூரமாகவும், மனிதாபிமானமின்றியும் இழிவாகவும் நடத்தப்படுவதற்கு ஆளாகக் கூடும். அத்துடன், அவர்கள் வலுக்கட்டாயமாகக் காவலில் வைக்கப்படலாம். நாடு கடத்தப்படலாம். அவர்கள் இடம் பெயர்வதற்கான சுதந்திரம் கட்டுப்படுத்தப்படலாம். திருமணஞ் செய்து கொண்டு குடும்பம் நடத்துவதற்கு அவர்களுக்குள்ள உரிமைகள் மறுக்கப்படலாம். வேலை பெறுவதற்கும், கல்வி பெறுவதற்குமான அவர்களின் உரிமைகள் கட்டுப்படுத்தப்படலாம்.

சுகாதாரத்திற்கும் மனித உரிமைகளுக்குமிடையிலான தொடர்பு திடீரெனத்தோன்றியது. தொடக்கத்தில், சுகாதார ஆதரவாளர்களுக்கும், மனித உரிமைகளுக்குமிடையில் மோதல்கள் ஏற்பட்டன. சட்டப்படிப் பரிசோதனை, நோய்த்தடுப்புக்காப்பு, தனிமைப்படுத்துதல் போன்ற

வழக்கமான கட்டாயக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மூலம் ஏமக்குறைவு நோயைக் கட்டுப்படுத்துவதற்குச் சுகாதார அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் விரும்புகிறார்கள். ஓரினச்சேர்க்கையாளர்கள், ஊசிமூலம் போதை மருந்து போட்டுக்கொள்பவர்கள் போன்ற வெளிப்படையாக நோய் பாதிக்கப்பட்டு, ஓரங்கட்டப்பட்ட குழுமத்தினரின் அவல நிலையைப் பார்த்து ஏற்பட்ட அச்சத்தின் காரணமாகவே இதுபோன்ற கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தகைய கட்டாயச் சுகாதார அணுகுமுறைகளை மனித உரிமை ஆதரவாளர்கள் தீவிரமாக எதிர்த்தார்கள். எனினும், நாளடைவில் எச்ஐவி தடுப்பு முயற்சிகளில் ஈட்டிய அனுபவத்திலிருந்து ஓரவஞ்சனை காட்டுவதும், கட்டாய நடவடிக்கையும், தகவல் கல்வியறிவூட்டுதல், உதவித்திட்டங்கள் ஆகியவற்றுக்குத் தடங்கலாக இருப்பதையும் இந்த உதவிகளும் ஆதரவும் மிகவும் தேவைப்படுபவர்களைத் தொலைவில் துரத்திவிடுவதையும் சுகாதார அதிகாரிகள் உணர்ந்து கொள்ளலானார்கள்.

பொதுச் சுகாதாரக் குறிக்கோளை அடைவதற்கு மனித உரிமைகளை மதிப்பது பயனுடையது அல்லது இன்றியமையாதது என்னும் கொள்கை முற்றிலும் புதுமையான கொள்கையாகும். ஆனால், இந்தக் கொள்கை நடைமுறை அனுபவத்திலிருந்து தோன்றியது. கோட்பாடுகளிலிருந்து அன்று. இதற்கிணங்க, மனித உரிமைகளையும், கண்ணியத்தையும், பாதுகாப்பதற்கான ஒரு பொதுச் சுகாதாரக் கொள்கை உருவாகிறது.[18]

## மருத்துவத்துறையும் மனித உரிமைகளும்

1948-ஆம் வெளியிடப்பட்ட அனைத்துநாட்டு மனித உரிமைகள் அறிக்கை மக்களின் உடல் நலம் பொதுச்சுகாதாரம் மற்றும் வாழ்க்கைத் தரம் குறித்து வலியுறுத்துகின்றது.[19]

"உணவு, உடை, வீடு, மருத்துவ சேவை (பராமரிப்பு) என்பவற்றுடன் தேவையான சமுதாயச் சேவைகளையும் தானும் தன் குடும்படும் ஆரோக்கியமாக நல்வாழ்வு வாழ்வதற்குப் போதிய வாழ்க்கைத் தரத்தைப் பெறுவதற்கும் வேலையின்மை சுகவீனம், அங்கக்குறை, கைம்பெண்ணாதல், முதுமை அல்லது தன் சக்திக்கு அப்பாற்பட்ட காரணங்களினால் ஊதியமின்மை ஏற்படும் காலத்தில் பாதுகாப்பு பெறுவதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு." (பிரிவு 25 -1)

"கருவுற்ற பெண்களும் சிசுக்களும் சிறப்பான பாதுகாப்பிற்கும் உதவிக்கும் உரிமை உடையவராவர். முறைப்படி திருமணமானவர்களுக்குப் பிறந்த மற்றும் திருமணமாகாதவர்களுக்கு பிறந்த பிள்ளைகளாயினும் அவர்கள் ஏற்றத்தாழ்வின்றி ஒரே விதமான சமுதாயப் பாதுகாப்பினை அனுபவிக்க உரிமை உடையவர்களாவர்." (பிரிவு 25 - 2)

ஐ.நா.வின் பன்னாட்டு பொருளாதார, சமூக கலாச்சார உரிமைகள் பற்றிய ஒப்பந்தம்,[20] மக்களின் உடல் நலம் மற்றும் மன நலம் குறித்து செறிவாகக் குறிப்பிடுகின்றது.

தற்போதைய ஒப்பந்தத்தில் பங்கேற்கும் நாடுகள், ஒவ்வொரு மனிதனுக்கும் உடல் மற்றும் மனநலத்தில் எய்தக்கூடிய மிக உயர்ந்த நிலையை அடைந்து மகிழ்வதற்குரிய உரிமையை அங்கீகரிக்கின்றன

(பிரிவு 12-1)

குழந்தை இறந்து பிறக்கும் பிரசவ விகிதத்தையும், சிசுமரணத்தையும் குறைப்பதற்கும், குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கும் உரிய ஏற்பாடு

(பிரிவு 12 - 1 - அ)

சூழ்நிலை மற்றும் தொழில்துறைச் சுகாதாரத்தின் அனைத்துக் கூறுகளிலும் முன்னேற்றம் காணல்

(பிரிவு 12 - 1 - ஆ)

தொற்றுநோய், ஒரு பகுதியில் மட்டும் பரவும்நோய், தொழிலால் தோன்றும் நோய் மற்றும் இதர நோய்களை எல்லாம் தடுத்தல், சிகிச்சை அளித்தல், கட்டுப்படுத்துதல் (இ)
நோய் ஏற்பட்ட சமயத்தில், மருத்துவ சேவை, மருத்துவ கவனிப்பு ஆகிய அனைத்தையும் உறுதிப்படுத்துவதற்கான சூழ்நிலைகளைத் தோற்றுவித்தல்.

உலகச் சுகாதார நிறுவனம் (WHO) தன்னனுடைய சாசனத்தில் "இனம், சமயம், அரசியல் நம்பிக்கை, பொருளாதார அல்லது சமூக வேறுபாடுகள் இன்றி ஒவ்வொருவரும் மிக உயர்வான மருத்துவ

வசதிகளைப்பெற்று அனுபவிக்கும் அடிப்படை உரிமைகள் உண்டு"[21] என அறிவிக்கிறது.

குழந்தைகள் நலன் குறித்த உலக ஒப்பந்தம் ஒவ்வொரு நாடும் குழந்தைகளின் நலனிலும், அதிகபட்ச ஆரோக்கியத்திற்குமான உரிமைகளை அங்கீகரித்துள்ளன.

## மருத்துவமும் மனித உரிமைகளும்

மருத்துவத் துறையில் இன்று மிகப் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இக்காலத்து மக்கள் வாழ்க்கை வசதிகளைப் பற்றியும் சமுதாயத்தில் தங்களுடைய நிலையைப் பற்றியும் சிந்தித்து, தங்களுடைய உரிமைகளை நிலை நாட்ட வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆனால், முற்காலத்து மக்கள் தங்களடைய உரிமைகளைப் பற்றி மிகத் தீவிரமாய் எண்ணாமல் "நமக்குக் கிடைத்தது இவ்வளவுதான்" என்று ஓரளவு சமாதானமாய் இருந்தார்கள். இன்று பொது வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது. ஆதலால், மக்கள் மருத்தவ வசதி பற்றியும் அதிகமாய்ச் சிந்திக்கிறார்கள். முன்பு மருத்துவர்கள் தங்கள் தொழில் முறைகளை ரகசியமாய் வைத்திருந்தார்கள். இன்றோ வெனில், அத்துறை பற்றிய எண்ணற்ற வெளியீடுகள் பொதுமக்களுக்குக் கிடைக்கின்றன. இத்தகைய பல காரணங்களால் இன்று உலக மக்கள் பலரும் உடல் நலம் பற்றியும் கிடைக்கின்ற மருத்துவ வசதிகள் பற்றியும் மனித உரிமைகளின் அடிப்படையில் சிந்தித்துப் பார்க்கிறார்கள்.

மக்கள் மனப்பான்மையில் ஏற்பட்டுள்ள இந்த மாறுதல் நல்லதுதான். மனித நலத்திற்கு அடிப்படையாய் இருக்கிற மருத்துவ வசதிகளை வழங்குவதில் தனிமனிதனுக்கும்

சமுதாயத்திற்கும் உள்ள பொறுப்புகள் யாவை என்பதிலும் மருத்துவ உதவி தேவைப்படுகிற அனைவர்க்கும் நவீன மருத்துவ வசதிகளை அளிப்பது எளிதன்று என்பதிலும் இப்போது மக்களுடைய கவனம் மிகுதியாய்ச் செல்கிறது.

மருத்துவத் துறையில் மனித உரிமைகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை அறிந்து கொள்வதற்கு, மருத்துவச் சட்டம் மருத்துவர் ஒழுக்கவியல் ஆகியவற்றைப் பற்றிய அறிவு மருத்துவக்கல்வி நிலையங்களில் தரப்படுகிறா என்று பார்ப்பது ஒரு வழியாகும். இதைப் பற்றி 1977-78 இல் யுனெஸ்கோ ஐ.நா. மற்றும் உலக சுகாதார நிறுவன, அறிக்கைகள் குறித்து மனித உரிமை நிறுவனம் ஓர் ஆய்வை நடத்தியது. 107 நாடுகளிலுள்ள 955 மருத்துவக்கல்வி நிலையங்களுக்கு வினாப்பட்டிகள் அனுப்பப்பட்டன. இன்று 2007-2008 ஆண்டுகள் வரை சுமார் 100 கல்வி நிலையங்கள் மனித உரிமைக் கல்வியைக் கற்பித்தன என்பதும் தெரியவந்தன. எனினும், பெரும்பாலான நிலையங்கள் பதில் அனுப்பவில்லை. சுமார் 100 நிலையங்களில் மட்டும் மனித உரிமைக் கல்விக்கும் மருத்துவர் ஒழுக்கவியலுக்கும் தனிப்பாடத்திட்டம் இருக்கிறது என்பதையும் பிற நிலையங்கள் பிற பாடங்களின் ஒரு பகுதியாய்த் தான் அவ்வறிவைப் புகட்டுகின்றன என்பதையும் நாம் அறிகிறோம்.

மேலும், மனித உரிமைகளையும் மருத்துவர் ஒழுக்கவியலையும் கற்பிப்பதற்குப் போதுமான ஆசிரியர்கள் இருக்கிறார்களா என்னும் வினாவிற்கு பெரும்பாலான நிலையங்கள் இல்லையென்று விடைதந்தன. பல நிலையங்கள் விடையே தரவில்லை. அக்கல்வியைக்

கற்பிக்கிற ஆசிரியர்கள் போதுமான பயிற்சி பெற்றவர்கள் என்னும் வினாவிற்கு 32 நிலையங்கள் இல்லையென்று பதில் கூறின, பல நிலையங்கள் பதிலே கூறவில்லை.

எனினும், இத்துறையில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பது தெளிவு. உயிரோடிருக்கும் உரிமை சிறப்பாக, கருச் சிதைவு செய்வது சரியா என்பது, இறப்புரிமை (பரிவுக் கொலை), மருத்துவருக்கும் நோயாளிக்கும் உள்ள உறவு ஆகியவை பற்றிய அறிவே இப்போது மிகப் பெரும்பாலும் புகட்டப்படுகிறது.

72 சதவீத மறுமொழிகள் மருத்துவக் கல்வி நிலையங்களில் மனித உரிமைக் கல்வி பிரிவை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்பதை வற்புறுத்துகின்றன. அமெரிக்கக் கண்டத்தில் 85 சதவீத நிலையங்கள் இவ்வாறு வற்புறுத்தும்போது ஐரோப்பாவில் 55 சதவீத மறுமொழிகளே இக்கருத்தை வற்புறுத்துகின்றன.

எந்தப் பாடங்களுக்கு இன்னும் அதிகமான கவனம் செலுத்தவேண்டும் என்னும் வினாவிற்குக் கிடைத்த விடைகளில் தீராத நோயால் இறப்பவர்களுடைய உரிமையே முதலிடம் பெறுகிறது. அடுத்துச் "சாதாரண நோயாளிகளின்" உரிமைகள் வருகின்றன. மருத்துவச் சோதனைகள், நோய்நீக்க முறைகள், கடுமையான சிகிச்சை தேவைப்படும்போது நோயாளிகளின் உடன்பாடு பெறுதல் புதியன கண்டு பிடிப்பதற்கான சோதனைகளுக்கு நோயாளியை உட்படுத்தல், அனைவர்க்கும் சமமான இலவச மருத்துவ உதவியளித்தல் போன்றவை பற்றியவை அவ்வுரிமைகள்.

சித்திரவதை, போர்க்காலக் கொடுமைகள் போன்ற விதிவிலக்கான நிகழ்ச்சிகள் நடைபெறும் போது மருத்துவரின் பொறுப்புயாது என்பதில் மிகச் சிறிதே கவனம் செலுத்தப்படுகிறது.

இப்போது, பொதுமக்கள் என்ன நினைக்கிறார்கள், நோயாளிகளே தங்கள் உரிமைகளையும் மருத்துவர் களுடைய கடமைகளையும் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.

முதலில் ஃபிரான்ஸை எடுத்துக் கொள்வோம். மருத்துவ ஒழுக்கவியலையும் மருத்துவர் நடந்துகொள்ள வேண்டிய முறைகளையும் மருத்துவக் கல்வி நிலையங்கள் கற்றுக்கொடுப்பதில்லை என்று அம்முறைகளைத் தொகுத்து வழங்கிய நிறுவனமே வருந்துகிறது. அதே சமயத்தில், அம்முறைகள் இன்றைய சமுதாயத்திற்கு ஏற்றவையாய் இல்லையென்று குற்றவியல் மருத்துவப் பேராசிரியர்கள் குறை கூறுகின்றனர். அன்றியும், அந்த மருத்துவ ஒழுக்க விதிகள் மருந்தைப் பயன்படுத்துகிற மக்கள் அக்கறை கொள்ளவேண்டிய செய்திகளைப் பற்றி மக்களுடைய கருத்துகளைப் பிரதிபலிப்பதற்கு மாறாக மருத்துவர்களுடைய கருத்தைப் பிரதிபலிக்கின்றன. மனித உரிமைகளைப் பற்றி ஆராய்ந்து இதற்கு நேர்மாறான நிலையிலிருந்து தொடங்கவேண்டும். மொத்தச் சமுதாயத்தினுடைய சிந்தனையும் இதற்கு அடிப்படையாய் இருக்கவேண்டும், ஆதாவது, நோயாளிகள் மருத்துவர்கள் ஆகிய இருதிறத்தாருடைய கூட்டுச் சிந்தனையின் பயனாக மருத்துவ ஒழுக்க விதிகள்தோன்ற வேண்டும். ஆதலால், வேகமாய் மாறிக்கொண்டு வருகிற சமுதாயத்தின் தேவைகள் யாவை என்பதிலிருந்து நமது ஆராய்ச்சி தொடங்கவேண்டும்.

மருத்துவக் கல்வி நிலையங்களில் மனித உரிமைக் கல்வியைக் கற்பித்தல் மருத்துவரோடு மட்டுமோ சட்டத்தையும் ஒழுக்கவியலையும் தம் தொழிலாகக் கொண்டவர்களோடு மட்டுமோ தொடர்புடையதன்று. மருத்துவ மாணவர்கள் பொதுமக்களோடு தொடர்புகொள்ள வாய்ப்பிருக்கவேண்டும். அப்போதுதான் அவர்கள் தங்கள் குணங்குறைகளைப் பற்றித் தாங்களே மதிப்பீடு செய்யமுடியும்.

மனித உரிமைகளைப் பற்றி மருத்துவக் கல்வி நிலையங்களில் கற்பிப்பது மட்டுமோ ஒழுக்கவியல் பாடத்தில் தேர்வு நடத்துவது மட்டுமோ போதாது. மருத்துவர் நடைமுறைக் கோட்பாடுகளைத் திருத்தி இக்காலத்திற்கு ஏற்றவாறு மாற்றுவதும் பயன்தாராது. அப்படியே பயன்தருவதாக வைத்துக்கொண்டாலும், அப்பணி பல கூறுகளையுடைய பிரச்சினையின் ஒரு கூறை மட்டும் கவனித்ததாகத்தான் இருக்கும்.[22]

மருத்துவர்கள் தங்கள் உதவியை நாடுகின்ற சமுதாயத்தின் பிரச்சினைகளைப் பற்றி வாழ்நாள் முழுவதும் சிந்தித்துக் கொண்டே இருக்க வேண்டும். அந்தப் பிரச்சினைகளும் நாளுக்கு நாள் அதிக முக்கியத்துவத்தையும் சிக்கலையும் அடைந்து கொண்டேபோகும் அந்தப் பிரச்சினைகளுக்கு அவர்கள் காணும் தீர்வுகளே மருத்துவ உதவியின் அடிப்படையாய் இருக்கும்.[23]

## அடிக்குறிப்புகள் மற்றும் சான்றுகள்

1. Jack Donnelly “The Relative Universality of Human Rights” **Human Rights Quarterly,** Vol.29, No.2, May 2007, 281-

306. எட்வர்ட் சவூமா, "உலக மற்றும் வேளாண்மை அமைவனம் - 1976-1993," யுனெஸ்கோ கூரியர் ஜுன் 1995.

2. மின்கல் கோர்பச்சேவ், ரஷியா முன்னாள் குடியரசுத் தலைவர், பன்னாட்டு சமூக பொருளாதார மற்றும் அரசியல் அறப்பணி நிறுவனத்தலைவர் - யுனெஸ்கோ கூரியர், ஜுன் 1995.

3. யுனெஸ்கோ கூரியர், ஜுன் 1995.

4. மைக்கேல் பாட்டிசே, யுனெஸ்கோ கூரியர், ஜுன் 1995.

5. International Convenant on Economic, Social and Cultural Rights.

6. International Covenant on Civil and Political Rights,

7. அபிராமி அந்தாதி பதிகம்.

8. Asoka's The Second Edict; The Rock Edicts I and II, in R.Sathianathier **The Political and Cultural History of India,** Vol.I, **Ancient India,** (Chennai: S. Viswanathan, 1952), 113

9. "கலைஞரின் கருத்தோவியம்", தினகரன் கலைஞர் 74வது பிறந்த நாள் சிறப்பு மலர், ஜீன் 3, 1997. Rhoda E. Howard - Hassmann, "The Second Great Transformation : Human Rights Leapfrogging in The Era of Globalisation" **Human Rights Quareterly** 27 (2005) 1-40.

10. தினமணி, தலையங்கம் ஜுன் 12, 2008.
"Climate Change 2007. The Physical Science Basis - Extracts from the Fourth Assessment Report of the Intergovernmental

Panel on Climate Change"- Documents Survey of the Environment 2007, **The Hindu;** Kinhide Mushakoji "Development and Racism in Asia and the Pacific" **Peoples for Human Rights** IMADR Yearbook 1992, Vol. 4 15-30. Sadruddin Agakhan and Hussan bin Tallat, **Indigenous Peoples; A Quest for Justice** (Report of the Independent commission on Humanitarian Issues) London 1987, 6-8.

11. சங்கீதா ஸ்ரீராம், "இயற்கை நியதிகளின் மீறல் இந்திய வேளாண்மையின் சரிவு," காலச்சவடு 101, மே, 2008.

12. மாணிக்கவாசகர், திருவாசகம், சிவபுராணம், 26-30.

13. சங்கீதா ஸ்ரீராம், "வித்தியாசங்களும் விபரீதங்களும், பாரம்பரிய மற்றும் நவீன வேளாண் அறிவியல்" காலச்சுவடு, ஏப்ரல் 2008.

14. Menaka Gandhi, **The Hindu** 30 January 1996. நன்றி ஓம் சக்தி மார்ச் 1996.

15. N.H. Ravindranath "Forests in India Take action now" Survey of the Environment 2007, **The Hindu,** 13-18.

16. காலச்சுவடு 101, மே. 2008. Refer, Richard P. Hiskes, "The Right to a Green Future: Human Rights, Enviornmentalism, and Intergovernmental Justice" HRQ 27 (2005) 1346-1364.

17. இந்திய டுடே, ஜூலை 16, 2008.

18. The UN General Assembly Resolution No. 3148 (XXVIII), 1973, Recommendation on Participation by the People at Large in

Cultural Life and their contributon to it, 1976, adopted on 26 November 1976 by the General Coference of UNESCO at its nineteenth session held in Nairobi **(UNESCO and Human Rights Standard Setting Instruments**, Second Edition, 1999), 267-283.

19. ஜோனாதன் மான், "சுகாதாரம் மனித உரிமைகளின் அடிப்படை" யுனெஸ்கோ கூரியர். ஆகஸ்ட் 1995. Universal Declaration of Human Rights, (1948).

20. International Covenant on Economic Scoial and Cultural Rights.

21. Thomas Buergenthal, "International Human Rights Law and Institutions" PAHO Publication, Jonathan M. Mann, Lawrence Gostim, Sofia Gruskin, Troyen Brennan, Zita Lazzarini and Harvey V. Fineberg (1994) "Health and Human Rights" **Health and Human Rigths** (Massachusetts Harvard School of Public Health) 1 : 1-6.

22. The Right to Health as a Human Right, a multi-disciplinary workshop organised by the Hague Academy of International Law and the United Nations University in 1978.

23. Theo C. Van Boven, "The Rights to Helath", **Health and Human Rights,** Vol. 1, No. 1, 29 **Harvard Journal of Health and Human Rights.**

# 11. உலக அமைதியும் மனித உரிமைகளும்

அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்;
மறத்திற்கும் அஃதே துணை

- குறள் "அன்புடைமை"76

உலகமெங்கிலுமுள்ள நேர்மையான மக்கள், நல்லெண்ணம் கொண்ட எல்லோரும் - சமாதானம், பதட்டத் தணிவு, உலகை பெருங்களப் பலியிலிருந்து தடுக்கக்கூடிய வாய்ப்புகளாகும். போரைக் கண்டு அஞ்சுகிறார்கள் என்ற எண்ணம் இப்பொழுது ஏற்பட்டுள்ளது. மற்றொரு பக்கம் மக்களது நன்மைக்காக தியாகம் செய்து கொள்கின்ற பணியாட்களாகத் தங்களைக் காட்டிக் கொள்கின்றவர்களும், நீதியையும் நேர்மையையும் பாதுகாப்பவர்களாகவும், அதற்காகப் போராடுபவர்களாகவும் தங்களைக் காட்டிக் கொள்கின்றனர். ஆனால் உண்மையில் நமது காலத்தில் தோன்றும் முற்போக்கு எண்ணங்களின் நடைமுறைக்கும், மனித உரிமைகளின் சவால்களையும் கண்டு அஞ்சுகிறார்கள் என்பது மிகவும் வெளிப்படையான ஒன்று.[1] கருத்துச் சுதந்திரம், பேச்சுரிமை, கலைகளை உருவாக்கும் சுதந்திரம் ஆகியவற்றிற்கு எதிராக உடன்பாடு காண முடியாமல் தவிக்கின்றார்கள்.

உண்மையான மனித உரிமைகளின் பாதுகாப்பாளர்கள் தோன்றிக் கொண்டே உள்ளனர். அவர்கள், பத்திரிக்கையாளர்கள், பேராசிரியர்கள், சிறந்த அறிவியல் அறிஞர்கள், நோபல் பரிசு பெற்றோர்கள், உலகின் தலை சிறந்த எழுத்தாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மருத்துவர்கள், சிற்பிகள், கலைஞர்கள் என பலர் தம்தம்

நிலையில் உறுதியாக நின்று பணிபுரிகின்றார்கள். அவர்களின் உரையாடல்களையும் கருத்துக்களையும் எவை என நாம் செவிமடுப்போம். இவர்கள் மனித உரிமைகளை நீதியற்ற முறையில் பயன்படுத்த எண்ணாதவர்கள், அஞ்சாதவர்கள், தீரர்கள் முற்போக்கு எண்ணங்களை மனதில் கொண்டு என்றென்றும் செயல்படுபவர்கள்.[2] வரலாற்று எதிர்கால வழக்கு மன்றத்தில் ஏற்கனவே தங்களுக்கு என்று ஓர் இடத்தைப் பிடித்துள்ளனர். ஏனெனில் அந்த சான்றோர்கள் அனைவரும் மனித குலத்தின் தீர்க்கதரிசி திருவள்ளுவர் வழிநின்று வந்தவர்கள்/வாழ்பவர்கள்.

வசை ஒழிய வாழ்வாரே வாழ்வார், இசை ஒழிய
வாழ்வாரே வாழாதவர் - குறள் புகழ் 240

உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன் - குறள் வாய்மை 294

வரலாற்றில் குருதி படிந்த பலபோரின் கொடுமைகளை அனுபவித்த ஒரு தலைமுறையைச் சேர்ந்த உறுப்பினர்களாகிய மனிதர்களும், அந்தப் போர்களில் கோடிக்கணக்கான உயிர்களைப் பலி கொடுத்த ஒருதலைமுறையினர், வரவிருக்கும் தலைமுறையினரும் இளைஞர்களும் மனித உயிரின் மான்பை, மனித உரிமைகளை உணர வேண்டும். ஐ.நா.வின் சாசனப்படி "அடிப்படை மனித உரிமைகளில் மனிதரின் உயர்விலும், கண்ணியத்திலும் பெரிய மற்றும் சிறிய நாடுகளைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள் அனைவருக்கும் சம உரிமை உண்டு என்பதில் மீண்டும் நம்பிக்கை கொள்கிறோம்."[3]

மனிதனின் வாழ்க்கை குறித்து எல்லாச் சமயத்தினரும் சிந்தித்துள்ளனர். பேராசிரியர் ரினி மார்சிக், இயற்கைவிதி குறித்த ஆர்வமிக்க சிந்தனையாளர். ஒரு விமான விபத்தில் சிக்கி துயர மரணம் எய்தும் வரை பல ஆண்டுகளாக

மகிழ்வூட்டும் ஆஸ்திரிய நகரமான சால்ஸ்பெர்க்கில் அவர் வாழ்ந்தார். மனித உரிமைகள் குறித்து மார்சிக் மிக அதிகமாக எழுதியுள்ளார். இருப்பினும், மனிதனுக்கு கடவுள் தந்துள்ள உரிமைகளில் சிறந்த எல்லாவற்றிலும் சாவதற்கான உரிமையே, அவனது உரிமைகளில் தலையாயது என்று அவர் நம்பினார். மார்சிக்கின் சமய சமூக நம்பிக்கை, மனித விடுதலையின் வரையறைகளை தனியான பாதைக்கு அவரைக் கொண்டு சென்றது. சாவு, அது நமது முடிவாக இருந்தாலும் இருப்பதன் பொருளேயாகும் என்று எழுதினார். வாழ்வின் உச்சநிலை, முழுநிறைவின் முடிவை மரணத்தின் ஒரு நொடியில் அறிந்து கொள்ள முடியும். தனது மரணத்திற்கு முன்னர் அவர் கடைசியாக எழுதிய மனிதன் - சட்டம் - அண்டம் என்ற நூலில் மனித இனத்தின் உண்மையான விடுதலையும், உண்மையான சமத்துவமும் சாவில்தான் தோன்றும் என்பதைப் படித்திருக்கிறோம்.[4] இப்படிப்பட்ட சிந்தனைகள் உலகம் முழுவதும் பரவியுள்ளது என்பதை அறிவோம். உலக அமைதிக்கும் மனித உரிமைகளுக்கும் இயல்பாகவே உள்ள தொடர்புகளை இளம் தலைமுறையினர் அறிய வேண்டும். உலகியல் விதிகள் பெரும்பாலும் புதியதாகவே தோன்றினாலும் நடைமுறையில் மிகமிகச் சிக்கலாகவே உள்ளன. மனித உரிமைகளைப் போற்றி பாதுகாப்பது என்பது ஏதோ கால்பந்து விளையாட்டுக்குழு விளையாட்டின் போது செய்யும் பயிற்சி போன்றதல்ல. அது மிக, மிக முக்கியமானதொன்று, ஏனெனில் அது மக்களின் வாழ்க்கையின் உட்பகுதியைப் பாதிக்கிறது. அது அமைதிக்கு அடித்தளமிடுகிறது....[5] இவை சிந்தனைக்கு ஏற்ற அடித்தளமாகும்.

இது முதற்கொண்டு குடிமக்கள் இனியும் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்யாமல், வாழ்க்கையை வாழ்ந்து காட்ட வேண்டும் என்று மனிதகுல மனச்சாட்சிக்கு

ஆணையிடுவோம். சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலும் நடந்த போர்கள் அனைத்திலும் பலியானவர்களுக்கு நாம் செலுத்தும் தலைசிறந்த அஞ்சலி இது மனித சமுதாயத்தின் உயர் நிலையே ஐ.நா.வின் குறிக்கோள், இந்த நூற்றாண்டின் தலைசிறந்த சான்றோர்கள், அறிஞர்கள் கூற்றை இங்கு காண்பதும், செயல்படுத்துவதும் இன்றியமையாதது. 1981-ஆம் ஆண்டு பல்துறைகளிலும் சிறந்து விளங்கி மனித குலத்திற்காகப் பணியாற்றி நோபல் பரிசு பெற்றவர்களின் அறிக்கையைக் காண்போம்.

## நோபல் பரிசு வென்றோர் கூட்டறிக்கை[6]

"அமைதி வேட்கையும், அறிவியல் இலக்கியம் மேதகவும் உடைய ஆண் பெண் இருதிறத்தோருமாகிய நாங்கள் வேறு வேறு மதங்களையும், வரலாறுகளையும் பண்பாடுகளையும் கொண்ட நாங்கள், வாழ்வில் உண்மையையும், உண்மையில் வாழ்வையும் நோக்குபவர்களாகவும், பாராட்டி போற்றுவதாலும், விருதுகளால் சிறப்பிக்கப் பெற்றோராய் பேச்சு வார்த்தைகளிலும், சகோதரத்துவத்திலும், பொதுமை நாகரிக நிலையிலும் அமைதியும் முன்னேற்றமும் காணும் வேட்கையுடையவர்களாகிய நாங்கள் கீழே கையொப்பமிட்டிருக்கின்றோம்.

"நல்லெண்ணம் கொண்ட ஆண் பெண் இருபாலரையும் வலிமையுடையோரும், எளிமையுடையோருமாகிய அனைவருக்கும் அவரவர் தகுதிக்கேற்ப, சாவின் விளிம்பில் பசியாலும், வளர்ச்சி குன்றியும் துன்புறும் கோடிக்கணக்கானோர் பொருட்டும், பன்னாடுகளிலும் நிலவுகின்ற அரசியல், பொருளாதார ஒழுங்கீனத்தினின்றும் அவர்களை வாழ்வுப் பாதையில் திருப்பி விடும் பொருட்டும் செயல்பட இதில் கையொப்பமிட்டுள்ள நாங்கள் வேண்டுகோள் விடுக்கிறோம்.

“இதுவரை கண்டிராத அளவு, இந்நூற்றாண்டின் (இருபதாம் நூற்றாண்டு) முற்பகுதியில் கண்ட கோரம்மிக்க அவ்வழிவுகளை ஓராண்டிலேயே தற்போது நிலைபெறச் செய்தும், செல்லும் ஒவ்வொரு கணமும், காட்டுமிராண்டித் தனத்தின் எல்லையை விரிவடையச் செய்தும், உலகத்து மக்களின் இறப்பை மட்டுமல்லாமல் நமது மனச்சான்றையும் சாகடிக்கக் காரணமாகின்றது.

“இப்பேரழிவினைக் கண்டித்துப் போரிடும் அனைவரும் இந்த அவலத்திற்குக் காரணம் அரசியலே என்று தூற்றுதல் காணலாம்.

“எனவே, நாம் அரசியல் ரீதியான ஒரு உறுதிப்பாட்டை குறிக்கோளோடு உலகப் பேரழிவுக்கான காரணங்களை அகற்றுதலில் முனைதலோடு உடனடியாக அதன் தீய விளைவுகளை நீக்குவதற்கும் முயல வேண்டும்.

“வழிகள் பலவாயினும் அவற்றுள் பொருத்தமானதைக் கண்டு அல்லது நம் சிந்தனையில் தோன்றும் வழியொன்றை அமைத்து, பின்பற்றி உடனடியாகச் செயல்படுத்த வேண்டியது அவசியமாகும்.

“நம் கடமைகளையும், மனச் சான்றுகளையும் தொடர்புடைய சக்திகளின் பன்மை இயல்பு அறிந்து, அவற்றிற்கு ஏற்ப ஒருமை நோக்கோடு கூடிய அமைப்பொன்றை உருவாக்குவது அவசியமாகும்.

“பன்னாட்டு உயர்நிலை தழுவிய அதிகார அமைப்புக்கள், அரசுகள் மக்கள் இனம் இவை அனைத்தும் மனித இனப் பாதுகாப்பு, வாழ்க்கையரிய பேறு இவற்றைக் காப்பது செயல்படுத்தக் கூடியதே என்பதை அறியாத வண்ணம் அமைந்துள்ளன. உலகத்து ஆன்மீக உயர்நிலை சக்திகள் ஒன்றுபட்டுச்செய்யும் வேலைகள் குறிப்பிட்ட திட்டவட்டமான கோட்பாடுகளோடு மரணத்தை எதிர்த்து,

வென்று மலைப்புறச் செய்து, இக்காலத்து மனித இனத்தைச்சாடும் செயல்பாட்டில் இறங்கியுள்ளன.

"நாம் எதிர்த்துப் போராட வேண்டியது பொய்மையாம் உண்மையை. ஏனெனில் அத்தன்மை நிலை பெற்றுள்ள அமைப்புகளின் கோட்பாடுகளின் விளைவே இதற்குக் காரணம். உண்மையில் அவை ஒழுங்கின்மையின் நிலைபாடே. நாம் உண்மையாகச் சாதிக்கக் கூடிய போராட்டத்தை மேற்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அடையக் கூடியதை அடையலாம்; மேலும் இழப்பைத் தவிர்க்கலாம்.

"நல்லெண்ணத்தோடு அளிக்கப்படுகின்ற உதவிகளிலேயே ஒரு நல்ல மாற்றம் வேண்டும் என அழைக்கிறோம். அவை உண்மையில் நல்வாய்ப்புள்ள வர்களின் வேதனையைத் தணிப்பதற்கே உதவுகின்றன. யாரைக் காக்க வேண்டுமோ அதற்கு மாறாகக் கொடுமை நிறைந்த, வறண்ட கற்பனை உலகுக்கு இன்றைய மனிதனைப் பலிகொடுத்து, நாளைய புதிய மனிதனை உருவாக்குவதற்கும் புதிய சமுதாயத்தை உருவாக்குவதற்கும் முனைகின்றன.

"குடிமக்களுக்கும் அரசியல்வாதிகளும், அவரவர் நிலையில் தேர்தல்களிலும், பாராளுமன்றங்களிலும், அரசுகளிலும் வாக்களித்து அல்லது உலகளாவிய நிலையில் புதிய சட்டங்களும், புதிய வரவு செலவுத் திட்டங்களும், புதிய வழிமுறைகளும் உருவாக்கப்பட்டு, பலகோடி மக்கள் சத்துணவின்மை, வளர்ச்சி குன்றிய நிலைமை ஆகியவற்றினின்றும், ஒவ்வொரு தலைமுறையும் பட்டினிச் சாவிலிருந்தும் உடனடியாகக் காப்பாற்றப்பட வேண்டும்.

"ஒவ்வொருவரும் சட்டத்தின் வலிமையினால் வாழ்க்கை பாதுகாக்கப்படுவதோடு, கொலை அழிவுகளிலிருந்து பாதுகாப்பும், சோம்பல், கவலையுற்ற மனோபாவத்திலிருந்தும் காப்பது இன்றியமையாததாகும்."

“இவ்வுலகில் வலிமையுடையோருக்கு மாத்திரம் இப்பெரும் பொறுப்பு என்பதில்லை. திக்கற்றவர்கள் தாங்களே தங்கள் விதியை நிர்ணயிக்க முயல்வரேல், பல்லோர் சட்டத்தைக் கடைப்பிடிக்க மறுப்பாரேயானால் அடிப்படை மனித உரிமைகளைத் தவிர அதிலும் மிகவும் அடிப்படையான வாழ்வதற்குரிமை பலவீனர்கள் தங்களுக்குள்ள வலிமை வாய்ந்த சில கருவிகளை தாமே ஒருங்கிணைத்து, அளவோடுகூடிய பொருத்தமான காந்தியடிகள் காட்டிய அஹிம்சை வழியே செயல்பட முனைந்தால், மனித இனத்துக்கு ஏற்படும் பேரழிவை நம் காலத்தில் முடிவிற்குக் கொண்டு வரலாம்.

“நாம் செயலிழந்து நின்றுகொண்டு வரும் அழிவினைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. நம் அறிவு நமக்கு உணர்த்துவது மனித இனம் முழுவதும் மாய்ந்து மடியும் ஆபத்திலிருந்து விடுதலை பெறவும், நம்பிக்கை ஏற்படுத்தவும் நமது நம்பிக்கைகளுக்கும், எண்ணங்களுக்கும் அடித்தளம் வகுக்க நாம் நமது அறிவைப் பயன்படுத்த வேண்டும்.

“எங்களுக்கு விருது அளித்தோரும், செய்தி பரப்பும் நிறுவனங்களும் தற்போது எங்கள் குரலை செவிமடுப்பதோடும், ஏனையோரும் கேட்கும்படி செய்தால் எங்கள் பணிக்கும், எங்களைப் போலவே இப்பணியில் ஈடுபட்டிருப்போர் கருத்துகளுக்கும், முயற்சிகளுக்கும் செவிமடுக்க வேண்டும். மக்கள் தாமே அறிந்தும், அறிவுறுத்தப்பட்டுமிருந்தால் வருங்காலம் இவ்வுலகத்து மக்கள் அனைவருக்குமாக அமையும் என்பதில் எங்களுக்கு ஐயமில்லை.

“ஆயினும் இது நிறைவேற்றப்பட்டால் தான்; இதுவே செயல்படுவதற்கு உரியகாலம், இதுவே படைப்பதற்கு

உரியகாலம். இதுவே நாமும் வாழ்ந்து ஏனையோரையும வாழவைக்கும் காலமாகும்."

## நீதி இல்லாததால் அமைதி இல்லை

டெஸ்மாண்ட் டுட்டு என்ற ஆப்பிரிக்காவின் சமய பாதிரியார் தனது நோபல் பரிசு உரையில் "நீதி மறுக்கப்படும் ஒரு நாட்டை நாம் காண்கிறோம். ஆகவே அங்கு அமைதியும் பாதுகாப்பும் மறுக்கப்படுகின்றன. அமைதியின்மை நிலை பெற்றுள்ளது. அதன் மூல காரணமான இன ஒதுக்கம் ஒழிக்கப்படும் வரை அது தென்ஆப்பிரிக்காவின் மாறாத இயல்பாக இருந்து விடும். தென்ஆப்பிரிக்காவில் அமைதியில்லை. அங்கு அமைதியில்லை; ஏனெனில் நீதியில்லை. அவ்வழகிய நாட்டின் மக்கள் எல்லோருக்கும் நீதி வழங்கப்பெற்றாலொழிய அங்கு அமைதியும் பாதுகாப்பும் இருக்க முடியாது.

"உலகில் பாதுகாப்பு இல்லையாதலால், நாடுகள் இன்று மதிகெட்ட படைக்கலப் போட்டியில் ஈடுபட்டு வருகின்றன. இலட்சக்கணக்கான மக்கள் பட்டினியால் வாடும் போது அவை அழிவுக் கருவிகளை உற்பத்தி செய்வதில் கோடிக்கணக்கான டாலர்களை வீணே செலவழிக்கின்றன. நாம் அவர்களுக்குப் பலமுறை மிகுதியான உணவளிக்கும் திறமை பெற்றுள்ளோம். இருப்பது போதும் என்பதை எப்போது நாம் உணர்வோம்? எப்போது உலகம் எடுத்துக்கூறும்?. . . பரவி வரும் ஆயுதப் போட்டி உலகப் பாதுகாப்பின்மையையே பரப்புகின்றதென எப்போது உணர்வோம்? நம் தொழில் நுட்பமும் செலவுகளும் குறையாக இருந்த காலத்தை விட இப்போது அணுப் பேரழிவு நம்மை நெருங்கி வந்துள்ளது. அமைதியை நிலைநாட்ட உழைப்போம் அமைதி வேண்டுமெனில், நீதிக்காக உழைப்போம். நம் வாள்களைக் கலப்பைகளாக மாற்றுவோம்."[7]

## நோபல் பரிசு பெற்ற மருத்துவ நிபுணர்கள்

### அணு ஆயுதத்தின் ஆபத்து பற்றிய கருத்துக்கள்[8]

"வேறு பிரச்சினைகள் அறநெறிப்படி எவ்வளவு முக்கியமாக இருப்பினும், அவற்றில் நாங்கள் ஈடுபடவில்லை. அணுப்போரின் ஆபத்தை எதிர்ப்பதே எமது தனி வேலை. ஏனெனில் வாழ்க்கையின் நிலைகளைக் காக்க சாவின் நிலைகளைத் தடுக்க வேண்டும் என்பதற்காகவே எங்களை அர்ப்பணித்திருக்கிறோம். பல்வேறு நாடுகளின் எதிர்காலங்களுக்கு இடையே போராட்டம் இல்லை. அதற்கு மாறாக அழிவுக்கும், உயிர் வாழ்வதற்குமிடையே தான்போராட்டம் என்பதை மக்கள் உணர வேண்டும் எனக்கருதுகிறோம். எல்லா நாடுகளும் ஒரு பொதுவான எதிர்காலத்தில் பங்கு பெறுகின்றன. அணுக்கருவிகள் அவற்றின் பொதுப் பகைவன்.

"எமது சங்கம் ஒருசில முக்கிய முடிவுகளை வலியுறுத்துகின்றது."

"முதலாவது, இதுவரை மனித குலத்திற்கு ஏற்பட்ட (உடல்நலத்) தீங்கு எதுவும் அணுப்போரின் ஆபத்திற்கு ஈடானதில்லை."

"இப்பூமியையே வாழத் தகாததாகச்செய்யக்கூடிய அறிவாற்றலை மனிதன் இதற்கு முன் பெற்றதில்லை."

"இரண்டாவது அணுப்போர் நிகழுமானால், இக்கால மருந்துகளால் ஒன்றும் செய்ய இயலாது. அடையாள உதவிகூடச் செய்ய முடியாது."

"மூன்றாவது, எந்நாட்டின் நலனுக்காகவும், அணுப்போரை ஆதரிக்க முடியாது. நாம் படைத்துள்ள தொழில் நுட்பம் மனிதனின் கட்டுக்கடங்காமல் போய்க் கொண்டிருக்கிறது."

"இறுதியில், குண்டு, இயந்திர மனிதன், கணிப்பொறி ஆகியவை தீர்மானம் செய்யும் வாய்ப்பை மனிதனுக்கு அளிக்காமல், தாமே முடிவு செய்கின்றன."

"நான்காவது போரைத் தடுத்தாலுங்கூட ஆயுதப் போட்டியினால் பெருமளவு பொருளாதார, உளவியல், அறநெறிச் சேதம் விளைகின்றது."

"உலகின் அரிய வளங்களைப் படைத்துறைக்கு அடகு வைப்பதாலேயே இன்றைய உலகப் பொருளாதார நெருக்கடி விளைந்துள்ளது."

ரிகோபெர்ட்டா மெஞ்சு : (அமைதிக்கு நோபல் பரிசுபெற்ற பெண்மணி) அம்மையார் மனிதகுலம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எடுத்து தனது நோபெல் பரிசு உரையில்.[9]

"ஆதி குடிகள், சிறுபான்மையினர், எதேச்சாதிகார நடவடிக்கைகளுக்கும் அடக்கு முறைக்கும் ஆளானவர்கள், பெண்கள், விதவைகள், குழந்தைகள், அகதிகள், பிற நலிவுற்ற மக்கள், இவர்கள் அனைவரும் நமது சமுதாயங்களில் மிகப் பெரும்பான்மையினராக விளங்கும் ஏழை எளியோரில் அடங்குவர். இவர்கள் முழு அளவில் பங்கு பெறாமல் இன்றைய உலகின் மிகக்கடுமையான சிக்கல்களில் எதற்கும் நாம் தீர்வு கண்டுவிடமுடியாது என்பது இன்று மிகத் தெளிவாகிவிட்டது. இந்தப் பிரிவினர்களின் அனுபவங்களையும் கோரிக்கைகளையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

"ஆதி குடிகளும், சிறுபான்மையினரும் மோதல்களையும், இன வெறியையும், ஓரவஞ்சனையையும் தவிர்ப்பதற்காகவும், தங்களுடைய உரிமைகளும், நற்பண்பும் முழுமையாக மதிக்கப்படுதற்குத் தாங்கள் நடத்தும் போராட்டம் வெற்றிபெற வேண்டும் என்பதற்காகவும்,

சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரின் ஒத்துழைப்பையும் நாடுகிறார்கள். இந்தச் செய்தியை எல்லோருக்கும் உணர்த்தக் கூடிய புதுமைக் கல்வி முறையை வகுத்தமைப்பது மனித குலத்தின் எதிர்கால நலனுக்கு இன்றியமையாதது.

"பண்பாட்டுப் பன்மையினை உணர்ந்து மதிப்பது, மக்களிடையிலும், உலக நாடுகளிடையிலும் சமத்துவம், அமைதியான சகவாழ்வு அடிப்படையிலான புதிய உறவு நிலைகளை உருவாக்குவதற்கு இன்றியமையாது தேவையாகும்."

## அமைதி பற்றிய சிந்தனைகள்

"அமைதி என்பது ஆன்மீக ஆற்றலில் பிறக்கும் ஒரு நற்பண்பு." உலக ஐ.நா.பொதுச்சபை 60 ஆம் ஆண்டுகளை நிறைவு செய்து வைரவிழாக் கொண்டாடும் இந்த ஆண்டில் பினோசாவின் இம்மேற்கோள் என்றும் போல் பொருத்தமாக இருக்கின்றது. கடந்த 50 ஆண்டுகளில் உலகப் போர் நிகழவில்லை என்பது உண்மை. அது போல் உலகில் அமைதியும் நிலவவில்லை என்பதும் உண்மை. உட்பகையினால் நிலப்பகுதிகள் அழிந்து வருகின்றன. இன்றைய வருங்காலத் தலைமுறைகளை அழித்து விடுவது போல் அச்சுறுத்தி வரும் அணுப் பேரழிவின் ஆபத்து இன்று மனித இனத்தைச் சூழ்ந்துள்ளது.

"அமைதியைப் பாதுகாத்தல் இன்று ஆக்க முயற்சியாக உருவெடுத்து வருகின்றது. அது போர்களைத் தடுப்பது மட்டுமல்லாமல் இவ்வுலகம் முழுவதும் நிலவும் பொருளாதார, சமூக ஏற்றத் தாழ்வுகளை நீக்கவும் முயல வேண்டும். ஐ.நா.வின் பேரவையின் 50ஆம் ஆண்டு விழா நேரத்தில் உலகெங்கிலும் போர் அல்லது அமைதி ஆய்வு வல்லுநர்கள், பொருளியல் வல்லுநர்கள், வரலாற்று மேதைகள், மருத்துவர்கள், தத்துவ ஞானிகள், சட்ட வல்லுநர் போன்ற

பல்வேறு துறைகளைச் சேர்ந்த வெவ்வேறு நாட்டினர் எல்லோரும் இதைஏற்றுக் கொண்டுள்ளனர்.

"இவர்கள் இந்நிலையை வெவ்வேறு கோணங்களில் ஆராய்ந்த போதிலும், அமைதி, ஆயுத ஒழிப்பு, பொருளாதார வளர்ச்சி ஆகியவை ஒன்றையொன்று சார்ந்துள்ளன எனும் பொதுக் கருத்தை ஏற்கின்றனர். வரலாற்று, பொருளாதாரக் காரணங்களினால் மூன்றாம் உலகே இன்றைய வன்முறைக் களமாக இருக்கின்றதென இவர்கள் கருதுகின்றனர். நாடுகளைச் சுரண்டுவதையும், நாடுகளிடையே நல்லிணக்கம் குறைவதையும், கூட்டணிகளின் எதிர்ப்பையும், மனித இன நலத்தை நசுக்கும் படைக்கலப் போட்டியின் மடமையையும், நாடுகளின் நலன்களுக்காக நிகழும் காலத்திற்கு ஒவ்வாத போட்டியையும், அறிவியலை அரசியல் படைத்துறை அதிகாரத்திற்கு அடிமைப்படுத்துதலையும் இவர்கள் ஆராய்ந்து கண்டித்துள்ளனர். அமைதிபற்றிய ஒரு தத்துவமும் நடைமுறையும் உடனே தேவை என்பதை இப்பல்வேறு அணுகு முறைகள் உணர்த்துகின்றன. இதில் கல்வித்துறை அறிஞர்களும், அரசியல், வரலாறு, தத்துவம், சமூக இயல் பேராசிரியர்களும், சிந்தனையாளர்களும் முக்கியப் பங்கேற்க வேண்டியது அவசியமாகும்."

சமாதானத்திற்காக நிறுவப்பெற்றது ஐ.நா. நிறுவனம். ஆனால் பல ஐயங்கள் எழுகின்றன. சமாதானத்திற்காக ஒரு சர்வதேச நிறுவனத்தை வைத்துக் கொள்ள முடியாத நிலைக்கு உலகம் வளர்ச்சி பெறாமல் போய்விட்டதா? அல்லது தகுதியற்றுப் போய்விட்டதா? மக்கள் ஐக்கியப்பட்ட உலகத்தைப் பற்றிப் பேசுகின்றனர். தீர்க்கதரிசனமும், அறிவும், ஆர்வமுமுள்ள பலர் உலகக் கூட்டமைப்பு இலட்சியத்தைப் பற்றிப் பரிந்துரை செய்கின்றனர். ஆனால் நாம் அதை நிறைவேற்ற முடியாமல், திரும்பத் திரும்பத்

தோல்வியடைகின்றோம். அரசியல், பொருளாதாரம் மற்றும் இதர கொள்கைகளில் முற்றிலும் வேறுபட்டிருக்கும் நாடுகள் ஒத்துழைக்க முடியுமா, அல்லது அவை பிரிந்தே நிற்க வேண்டுமா? "முரண்பட்ட நோக்கங்களைக் கொண்ட நாடுகளை உறுப்பினராகக் கொண்ட ஒரு பன்னாட்டு நிறுவனம் நிலைத்திருக்க முடியுமா என்று நான் மீண்டும் மீண்டும் ஆச்சரியப்படுவதுண்டு. முடியும் என்று நான் நிச்சயமாக உணர்கிறேன். மேலும், அது ஏன் திறமையாக நடக்க முடியாது என்பதற்குக் காரணமும் தெரியவில்லை"[10] என்று நேரு அவர்கள் தனது ஆழ்ந்த நம்பிக்கையை வெளியிட்டார். அமெரிக்க ஐக்கிய நாடுகளும், அன்றைய சோவியத் யூனியனும் ஒத்துழைத்து, ஒன்றாகச் சேர்ந்திருந்தன. பின்பு தான் பிளவுண்டாயிற்று. மறுபடியும் அவை ஒன்று சேர்ந்து பல முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன.

இந்திய நாடாளுமன்றத்தில் சில உறுப்பினர்கள் நாம் ஐ.நா.விலிருந்து விலகி விடவேண்டுமென்று யோசனை கூறினார்கள். அப்போது நேரு அவர்கள் தனது கருத்துகளையும் இந்தியாவின் நிலையையும் தெளிவாகக் கூறினார்.

"அவ்வாறு கூறுவது அனுபவக் குறைவின் விளைவு என்பதாகும். ஒரு பிரச்சினையிலிருந்து இப்படி ஒருவர் ஓடிவிட முடியாது. ஐ.நா. பல குறைகளையுடையது. ஏனெனில் அது ஒரு பெரிய உலக நிறுவனம். எதிர்காலம் பற்றிய நம்பிக்கைக்கும், சமாதானத்திற்கும் உரிய விதைகள் அதில் அமைந்திருக்கின்றன. ஒரு நாடு தான் விரும்புவது போல அது முற்றிலும் நடந்து கொள்ளாவிட்டால், அந்த அமைப்பையே அழித்துவிட முயல்வது, வேண்டுமென்றே தவறு செய்வதாகும். எந்த நாடாவது அப்படிச் செய்தால் அந்த நிறுவனத்தை விட அந்த நாடே அதிக இன்னல்

அடையும் என்பதில் எனக்கு ஐயமில்லை. வெளித் தொடர்புகளை எல்லாம் அறுத்துக் கொண்டு, நமது குறுகிய எல்லைக்குள் அடங்கி, நமக்குச் சொந்தமான வாழ்க்கையை நடத்திக் கொண்டு, உலகிலிருந்து நாம் ஒதுங்கியிருக்க முடியாது. இந்தியாவிலுள்ள நம்மில் பெரும்பாலோர் நம் மனங்களிலும், உண்ணல், பருகுதல், திருணம் போன்ற நம் சமூகப் பழக்கங்களிலும், இயற்கையாகவே ஒதுங்கி வாழ்பவர்களாயிருக்கிறோம். நாம் சாதிகளாகப் பிரிந்து தனித்து வாழ்கிறோம். இந்தப் பழக்கம் இந்த உலகில் வேறொங்கும் இல்லாத புதுமையாகவே இருக்கிறது. தனித்தனி அறைகளில் நாம் பிரிந்து வசிக்கிறோம். அதனால்தான், ஒரு வேளை, நாம் ஒரு நாடாகவும், தனித்திருக்க வேண்டும் என்று எளிதாகச் சிந்தனை செய்யத் தொடங்கிவிடுகிறோம். ஆனால், முற்காலத்தில் இப்படிப் பிரிந்திருந்ததால், நாம் மிகவும் பலவீனம் அடைந்தோம். அறிவியலிலும் மற்ற அபிவிருத்திகளிலும் உலகம் முன்னேறிக் கொண்டிருந்த காலத்தில் நாம் இருளில் உழன்று கொண்டிருந்தோம். நாம் தனித்திருக்க முடியாது. உண்மையில் எந்த நாடுமே தனித்திருக்க இயலாது. ஆதலால் ஐ.நா. வை விட்டு வெளியே வருதல் அல்லது இந்த உலகப் பிரச்சினைகளையெல்லாம் விட்டு விலகியிருத்தல் பற்றிப் பேசுதல் இப்போதுள்ள அடிப்படை நிலையைச் சரியாக உணராமையாகும்."[11]

நேரு அவர்களின் இத்தகைய கோட்பாடுகள் இந்தியாவிற்கு ஐ.நா. வில் தொடர்ந்து பணியாற்றுவதற்கு வழிகாட்டி நெறியாக அமைந்துள்ளன.

அமைதியை வலிமையுறச் செய்வது பற்றி ஐ.நா. நிறுவனத்தில் விவாதிக்கப்படும் அனைத்துப் பிரச்சினைகளிலும் மற்றும் பல பன்னாட்டுப்

பிரச்சினைகளிலும் எப்பொழுதும் கருத்து உடன்பாடு இருந்து வந்துள்ளது. உலக அமைதிக்காக இந்தியா ஆற்றிவரும் பணிகளை மிகவும் உயர்வாகப் பல நாடுகள் பேசி வருகின்றன. சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு இந்தியா உண்மையிலேயே ஓய்ச்சல் ஒழிவின்றிப் பாடுபட்டு வருகிறது. ஆனால், ஐ.நா.வின் வேண்டுகோள் மூலமும், விண்ணப்பங்கள் மூலமும் சமாதானத்தை அடைந்துவிட முடியாது. சமாதானத்திற்காக உழைக்க வேண்டும். கடினமாக உழைக்க வேண்டும். இத்தகைய ஒரு பணியை இந்தியா தொடர்ந்து நடத்தி வருகிறது. போரினால் மனித குலத்திற்குப் பெரும் பேராபத்தே ஏற்படும். எனவேதான் இந்த ஆபத்தைத் தவிர்ப்பதற்கு இந்தியா தன்னாலான அனைத்துப் பணிகளிலும் ஈடுபட்டுக் கொண்டுள்ளது. தற்போது ஆயுத உற்பத்திக்காகச் செலவிடப்படும் மக்களின் உழைப்பு, ஏராளமான பொருள்கள், செல்வங்களை மீதப்படுத்தி இவற்றை எல்லா நாடுகளிலும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குப் பயன்படுத்த வேண்டுமென இந்தியா ஐ.நா.வின் நிறுவனங்களில் பணியாற்றுகிறது.

## ஐ.நா.வின் தோற்றமும் இந்தியாவின் பங்களிப்பும்

நீதிக்கட்சியின் தலைவர், சிறந்த சிந்தனையாளர் புகழ்பெற்ற சொற்பொழிவாளர் சான்பிரான்சிஸ்கோ மாநாட்டில் உரையாற்றிய டாக்டர் சர். ஏ. இராமசாமி முதலியார் அமைதிக்காக இந்தியா பல நூற்றாண்டுக் காலமாக ஆற்றிவரும் பணியினை மிகச் சிறப்பாக எடுத்துரைத்தார். இந்திய நாடு உலக அமைதிக்கும், ஒழுங்குக்கு மட்டுமல்ல, அன்பும் நம்பிக்கை ஆர்வமும் நிறைந்த ஒரு நாடு என்று மனித இனத்தின் அடிப்படை ஒற்றுமையைப் பலப்படுத்த இந்தியா பணியாற்றி

வந்துள்ளதை எடுத்துக் கூறினார். அடிப்படை மனித உரிமைகளையும், சமூக நீதியையும், சாமான்யர்களின் கண்ணியத்தையும் ஏர்.ஆர்.முதலியார் அவர்கள் வலியுறுத்திப் பேசினார்கள். அவரது இந்தச் சொற்பொழிவு உலகப் புகழ் வாய்ந்த சொற்பொழிவுகளில் ஒன்றாக இன்றளவும் விளங்கிறது.[12]

இந்தியா விடுதலை அடைவதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பே ஐ.நா.வின் பாதுகாப்புச் சபையில் இந்தியா நிரந்தர உறுப்பினர் பதவியை வேண்டியது. இது குறித்து சான்பிரான்சிஸ்கோ மாநாடு தொடங்குவதற்கு முன்பே காமன்வெல்த் நாடுகளின் தூதுக்குழு லண்டனில் கூடி விவாதித்தது. இந்தியத் தூதுக்குழுவின் தலைவராக சர்.ஏ. இராமசாமி முதலியார் மற்றும் சர்.பெரோஸ்கான் நூன். சர்.வி.டி. கிருஷ்ணமாச்சாரி, கே.பி.எஸ்.மேனன் ஆகியோர் பங்கேற்றனர். ஐ.நா.வின் சான்பிரான்சிஸ்கோ மாநாட்டின் முன்பிருந்தே சற்றேறக்குறைய எல்லா நாடுகளும் மூல உறுப்பினர்கள் 50-ம் இரண்டு அணியாகப்பிரிந்து நின்றன.

வல்லரசு நாடுகள் ஐந்து தனியாக வல்லரசு என்ற அந்தஸ்தை வேண்டி நின்றன. ஏனைய "45 சிறிய நாடுகள்" தனியாக நின்று தங்களுக்கு ஐ.நா. மன்றத்தில் என்னென்ன உரிமைகள் வேண்டும் என வேண்டின. இந்தியாவின் சார்பாக குறிப்பாக மிகச்சிறப்பாக "45 சிறிய நாடுகளின்" சார்பாக அவைகளுக்கு உரிய இடத்தை ஐ.நா.வில் பெற்றுத்தர எல்லா வகையிலும் சர்.ஏ. இராமசாமி முதலியார் பணியாற்றினார். இந்தியத் தூதுக் குழுவினரில் இராமசாமி முதலியார் அவர்களும், வி.டி.கிருஷ்ணமாச்சாரி அவர்களும் சீனாவிற்கும், பிரான்சிற்கும் "வல்லரசு" என்ற தகுநிலையையும் "வீட்டோ" வெட்டதிகாரத்தையும் அளிக்கப்படுவதைக் கண்டித்தார்கள். "யால்ட்டா மாநாட்டின் கோட்பாடுகளை" தாங்கள் ஏற்பதாவும், வல்லரசுகளுக்கு

நிரந்தர உறுப்பினர் பதவி அளிப்பது ஆனால் சீனாவிற்கும், பிரான்சிற்கும் அத்தகைய பதவி தேவையில்லை எனவும் வாதிட்டனர்.

"45 சிறிய நாடுகள்" சார்பாகப் பேசிய டாக்டர் ஏ.ஆர். முதலியார், இந்தியாவிற்கு ஐ.நா.வில் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர் பதவியை அளிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

மூல உறுப்பினர் என்ற வகையில் 1945ஆம் ஆண்டு டாக்டர் ஏ.இராமசாமி முதலியார் அவர்கள் ஐ.நா.வின் சாசனத்தில் கையெழுத்திட்டார். இது இந்திய வரலாற்றில், ஆசிய ஆப்பிரிக்க வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும். டாக்டர் சர்.ஏ.இராமசாமி முதலியார் அவர்கள், பல்வேறு அமைப்புகளில் ஐ.நா.வோடு தொடர்பு கொண்டு பணியாற்றி இந்தியாவிற்குப் பெருமை சேர்த்தார்கள்.

## பொதுவான உலக அரசு

ஒரு நாடு தேசிய உறவுகளிலும், வெளிநாட்டு உறவுகளிலும் ஒழுக்க சம்பந்தமான உயர்வை மதிக்காவிட்டால், அந்நாட்டிற்கு நிலையான சமாதானம் ஏற்படாது என்பதை இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது. சரியான வழிகளை நாம் கடைப்பிடிக்கா விட்டால், முடிவும் சரியானதாய் இருக்காது. அதிலிருந்து புதிய தீமையே உண்டாகும். இதுதான் காந்தியடிகள் உலகிற்குப் புகட்டிய பாடமாகும். மனித குலம் தெளிவான பார்வையைப் பெறுவதற்கும் சரியாக நடப்பதற்கும் இதைப் போற்றிக் கைக் கொள்ள வேண்டியது அவசியம்; விடுதலை அடைந்த நாட்களில், உலக நிறுவனங்கள் எவ்வாறு அமைய வேண்டும், எத்தகைய கோட்பாடுகளைப் பின்பற்ற வேண்டும் என்பதை எல்லாம் இந்தியாவின் முதல் பிரதமர் நேரு அவர்கள் நன்றாகவே உணர்ந்து செயல்பட்டார்.

"உலகிற்குப் பொதுவான அரசாங்கம் வர வேண்டும். வந்தே தீரும் என்பதில் எனக்குச் சந்தேகம் கிடையாது. ஏனெனில் உலகின் நோய்க்கு வேறு மருந்தே இல்லை. இதற்கு வேண்டிய ஓர் அமைப்பை உருவாக்குவதில் இடர்கள் இல்லை. உலகக் கூட்டமைப்புத் தத்துவத்தை (பல நாடுகளுக்கும் சேர்த்து) விரிவாக்கலாம். அதுதான் ஐக்கிய நாடுகளுடன் கூட்டுக்குரிய கருத்தாகவும் இருக்கின்றது. ஒவ்வொரு நாட்டுக்கும் அதன் பண்பாட்டுக்குத் தக்கபடி தன் தலைவிதியை நிர்ணயித்துக் கொள்ளச் சுதந்திரம் அளித்துவிட்டு உலக அரசாங்கத்துடன் அது செய்து கொண்ட ஒப்பந்தப்படி எப்பொழுதும் நடந்து வர வேண்டும் என்று விதிக்கலாம்."[13]

## பகைமையும் பலாத்காரமும்

இனி நாம் என்ன செய்ய வேண்டும். எதை நாம் இலட்சியமாகக் கொள்ள வேண்டும்? எந்தப் பாதை வழியாகச் செல்ல வேண்டும்? ஒரே நேரத்தில் தோன்றும் உணர்ச்சியிலும், விருப்பு வெறுப்பிலும் நாம் நம்மை இழந்துவிடக்கூடாது. நாம் உயர்ந்த குறிக்கோளைக் கொள்ள வேண்டுமானால் நாம் உயர்ந்த தத்துவங்களைப் பின்பற்ற வேண்டும். புத்தர் காலத்திலிருந்து நம் காலத்தில் காந்தியடிகள் நாம் சரியாகச் செயல்புரிய வழிகாட்டியதுவரை அத்தத்துவங்களே இந்தியச் சிந்தனையின் அடிப்படையாக விளங்கி வந்துள்ளது. "தெளிவான பார்வை, ஆன்மீகச் சகிப்புத்தன்மை, கருணை, இடர்ப்பாடுகள் அல்லது நல்ல வாய்ப்புகளில் கலங்காத நிதானமான மனநிலை ஆகியவற்றிலிருந்தே பெருமை தோன்றுகின்றது. பகைமை பலாத்காரம் அல்லது உள்நாட்டில் பிணக்கு ஆகியவற்றின் மூலம் நாம் உண்மையான முன்னேற்றம் அடைவதில்லை. பலாத்காரக் கோட்பாடுகள் இனிப் பயனில்லை என்பது இன்றைய உலகத்திற்குப் பொருந்துவது போல நமது

நாட்டிற்கும் பொருந்தும்."[14] சமாதான நிலையில் ஒத்துழைப்பு, ஒருவருக்கொருவர் சகிப்புத்தன்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நமது முன்னேற்றம் அமைய வேண்டும்.

ஒருமையின் உலகெலாம் ஓங்குக!
உலகுயிர்த் திரளெலாம் ஒளி நெறி பெறுக!
அகிலமாம் சகோரத்துவமே ஆன்ம நேய உரிமை!
இதுவே இன்றைய நாட்களில் தேவைப்படும் சர்வதேசச்
சமுதாயத்தை உருவாக்கும் அடிப்படையாகும்.

ஒருவருக்கு ஒருவர் வாழ்வைச் சிக்கலும் துன்பமும் நிறைந்ததாக்கிக் கொள்கின்றோம். மன நோய்க்கு நாம் ஆளாகிவிட்டது போல் தோன்றுகிறது. "மனிதனே, மனிதனுக்குக் கொடிய பகைவனாகி விட்டான்."[15] மக்கள் அனைவரும், தங்களைத் தாங்களே பூண்டோடு அழித்துக் கொள்ளப் பல வழிகள் உண்டு. மனித இனம் உய்வதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. சத்திய சோதனை. நம்மை எதிர்நோக்கி நிற்கிறது. நம்பிக்கையை ஊட்டி, விசுவாசத்தை உறுதிப்படுத்தும் செயலே இன்று தேவைப்படுகிறது. மக்கள் குலம் முழுமைக்கும் பயன்மிக்க வாழ்க்கை கிட்டும்படியாக வடக்கும், தெற்கும், கிழக்கும், மேற்கும், உலகம் யாவும் ஒன்றுபட்ட உலக சமுதாயம் உருவாவதற்கு வேண்டிய "உலக சமுதாய நோக்கு" நமக்கு வேண்டும். அந்த நோக்கிற்கு அடிப்படையாக விளங்குவது தான் நாம் இங்கே காணவிருக்கும் அறிக்கைகளாகும். மனித அறிக்கை (Human Manifesto)

## மனிதகுல அறிக்கை (Human Manifesto)

"நம் பூமியில் மனித வாழ்க்கைக்கு ஆபத்து நேர்ந்திருக்கின்றது. மனித வாழ்க்கையே நசிந்துவிடக்கூடிய போரால் ஆபத்து நேர்ந்திருக்கிறது. கண்ணியமான வாழ்வைச் சிதைத்து விடும் போர் ஆயத்தம் அல்லது தீமை

விளைவிக்கும் போக்கால் மனித இனத்துக்கு ஆபத்து நேர்ந்திருக்கிறது. மனித உரிமைகள் மறுக்கப்படுவதால் ஆபத்து நேர்ந்திருக்கிறது. காற்று அசுத்தப் படுத்தப்படுவதாலும், நீரும் நிலமும் நஞ்சாக்கப்படுவதாலும் ஆபத்து நேர்ந்திருக்கிறது. கட்டுக்கடங்காத மக்கள் தொகைப் பெருக்கத்தாலும் ஆபத்து நேர்ந்திருக்கிறது.

"இத்தகைய ஆபத்துக்கள் நீங்க வேண்டுமானால், மனித இன வளர்ச்சி உறுதிப்படுத்த வேண்டுமானால், இப்பூமியில் உள்ள நாம் ஒருவருக்கொருவர் ஆற்ற வேண்டிய கடமையையும், அடுத்து வரும் தலைமுறையினர்க்கு ஆற்ற வேண்டிய கடமையையும் ஏற்றுச் செயலாற்ற வேண்டும். உலகு தழுவிய சமாதானத்துக்கான அடிப்படையை உருவாக்குவதன் மூலம் போரிடும் நமது உலகை அதிலிருந்து விடுவிக்கும் கடமை நமக்கு உள்ளது. மனித இன நன்மைக்காக நுண்ணிய இயற்கைச் சூழ்நிலையைப் பாதுகாப்பதோடு, உலகின் மூலப்பொருள்களைச் செழுமைப்படுத்தும் கடமையும் நமக்கு உள்ளது.

"மனித நலனே தேசிய நலனை விட உயர்ந்தது. மனித உரிமையே தேசிய உரிமையைவிட உயர்ந்தது எனப்போற்றும் கடமை நமக்குண்டு.

"மனித உரிமைகளை சமுதாயத்தின் முதன்மைப் பொருளாக்கும் ஒழுங்கைப் படைக்கும் கடமை நமக்குண்டு.

"மனிதனை மனிதன் கொல்லவோ கொல்லப்படவோ இயலா உலக ஒழுங்கைப் படைக்கும் கடமை நமக்குண்டு இக் கடமைகளையெல்லாம் நிறைவேற்றும் பொருட்டு இவ்வுலக மக்களாகிய நாம், மனித குடும்பத்தில் ஒருவர் மீது ஒருவர்க்குள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறோம். உலக சமுதாயத்தில் நம்முடைய தனிமனிதன் குடியுரிமையையும், மனித இனத்தின் பொது நலனுக்காக

ஆட்சி செலுத்தத் தகுதிபெற்ற ஐ.நா.வுக்கு ஆதரவையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

"இவ்வுலகம் இந்த மண்ணில் வாழும் மக்களுடையது. இதை மாற்றவும் ஒழுங்குபடுத்தவும், வளமாக்கவும் நமக்கு உரிமையுண்டு.

"இவ்வுலக வாழ்க்கை கற்பனைக்கு எட்டா அளவில் அரியது. இவ்வாழ்க்கை பாதுகாக்கப்பட வேண்டும். மதிக்கப்பட வேண்டும். நேசிக்கப்பட வேண்டும்.

"நம் காலத்தில், நம்முடைய சக்திகளையும், ஆன்ம மூலாதாரங்களையும் மனித இனத்தைக் காப்பதற்கு வரம்பற்ற மனித இன நன்மைக்கும் அர்ப்பணிக்கிறோம்."[16]

ஆக்கல் சக்தியை வளர்த்து, மனித இனத்தை வளமாக்கவும், மனித சமுதாயத்தின் தோற்றத்தையே மாற்றிப் புதிய பொலிவு கொள்ளச் செய்யவும், அதன் பொருளாதாரச் செழிப்பையும், ஆன்ம சிறப்பையும் பெருக்கவும் அறிவியல் அறிவைப் பயன்படுத்த வேண்டும்.

அறிவியல் சாதனைகளிலும் தொழில்வள முன்னேற்றங்களிலும் எல்லா நாடுகளும் தடையின்றிச் சமமாகப் பங்கு கொள்ளும் சர்வதேசக் குடும்பத்தை நாம் உருவாக்க வேண்டுமென்றால், அறிவியல் புரட்சியோடு அரசியல் புரட்சியும், கல்விப் புரட்சியும் ஒருங்கே ஏற்பட வேண்டும். அப்பொழுதுதான் சாதி, இனப் பாகுபாடுகளுக்கு அப்பாற்பட்டு, உலக மக்களிடையே "ஓர் உலக அரசு" என்ற அமைப்பு வளரும்.

உலகம் ஒரு முழுமை. அந்தக் கோட்பாட்டை அறிவியலின் வாயிலாக ஆராய்ச்சிக் கண்ணோட்டத்தோடு புது உலகின் மாண்புமிக்க அமைப்பை நோக்குவோம். மனிதன் கண்டுபிடித்துள்ள அற்புதப் படைப்புகள் அவன் அழிவுக்குப் பயன்படாமல், அவன் வாழ்வுக்குக்

காணிக்கையாகச் செலுத்தப்படும் வழியைக் காண்பதில் சர்வதேசக் குடும்பத்தைச் சேர்ந்த நாம், நம் இதயம் முழுவதையும் ஈடுபடுத்த வேண்டும்.

உலகத்தின் எதிர்காலம் குறித்து உட்ரோ வில்சன் 1920ஆம் ஆண்டு தனது நோபல் பரிசு உரையில் கூறினார். "அமைதிக்கான காரணமும், உண்மைக்கான காரணமும் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவைகளாகும். யாரெல்லாம் அறிவியலை விரும்புகிறார்களோ, பௌதிகத்திற்கும், வேதியலுக்கும் தங்கள் வாழ்வை அர்ப்பணிக்கிறார்களோ, யாரெல்லாம் மனித இனத்திற்காக இலக்கியத்தில் புதிய உயர்ந்த இலட்சியத்தைப் படைக்கிறார்களோ, யார் யார் அமைதியை விரும்புகிறார்களோ இச்சாதனைகளுக்கு எல்லையே இல்லை. கடந்த காலத்தில் எவ்வளவு சாதித்திருந்தாலும் வருங்கால புகழ்மிக்க சாதனையோடு ஒப்பிடும்போது அது மிகச்சிறிதே."[17]

இப்பொழுது உருவாகிவரும் புது உலகிற்குப் புதுத்தரமான மனிதன், நிதானப் போக்கும் மனிதத்தன்மையும் நிறைந்த மனிதன் தேவை. மனித உயர்வுக்கெல்லாம் ஆதாரமாயுள்ள தன்னம்பிக்கையையும், உறுதியையும் இழுக்காதிருந்தால் "உலகியம்," "ஓர் உலக அரசு" என்ற கோட்பாடுகள் நடக்கக்கூடியதே

"போரினால் உண்டாகும் கசப்பான அனுபவமும்,உலகில் மக்கள் பெருக்கம் பெருகி வருவதும் மனித குலத்திற்கு ஒரு தொகுப்புச் சட்டத்தை வகுப்பது இன்றியமையாதது என்பதை வலியுறுத்துகிறது" என்று உலகப்புகழ் பெற்ற ஜெர்மன் தத்துவஞானி இமானுவேல் காண்ட் (1724-1804) கூறினார். அவர் காலத்திய உலகும், இன்றைய உலகும் எத்துணை முரண்பட்டதாகவும், சிதறலாகவும் இருக்கிறது என்பதைக் கருதும் போது காண்ட்டின் தீர்க்கதரிசனம் நமக்கு வியப்பூட்டுகிறது. அவர்

மட்டும் இந்தக் கருத்தைக் கொண்டிருக்கவில்லை. 19-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த தலைசிறந்த சிந்தனையாளர்களில் பெரும்பாலானோர் பிரான்சின் செயின்ட் சைமன் முதல் காரல் மார்க்ஸ் வரை அவர்கள் எந்தக் கொள்கைகளை உடையவர்களாக இருந்தாலும் உலகின் குறுகிய நிலப்பரப்பில் மக்கள் தொகை மிகத் துரிதமாகப் பெருகி வருவதால் உண்டாகும் அபாயத்தினை உணர்ந்திருந்தார்கள். அது குறித்து அவர்கள் அன்று முதல் இன்று வரை எச்சரித்து வந்திருக்கிறார்கள். பிரெஞ்சுக் கவிஞரும் கட்டுரையாளருமாகிய பால் வாலரி, 1931-ல் எழுதிய இன்றைய உலகம் பற்றிய சிந்தனைகள் என்ற நூலில் வெளியிட்ட கருத்து இதற்கு ஒரு சான்று:

"இந்தப் பூமியில் மக்கள் குடியிருக்கத்தக்க மண்டலங்கள் அனைத்தும் கண்டுபிடிக்கப்பட்டு, நாடுகளிடையே பகிர்ந்து கொள்ளப்பட்டு விட்டன. மனிதன் இல்லாத நிலப்பரப்புகள் எதுவுமில்லை. ஆட்சி எல்லையை விரிவுபடுத்துவதற்கு இனியும் வாய்ப்பு இல்லை. ஏதாவது ஒரு நாட்டின் கொடி பறக்காத பாறை ஒன்று கூட இல்லை. நிலப்படத்தில் காலியிடம் எதுவும் இல்லை. சட்டங்களும், சுங்க அதிகாரிகளும் இல்லாத மண்டலம் ஒன்றுகூட இல்லை. கண்டுபிடிக்கப்படாத ஆதிகுடிகள் யாருமே இல்லை. வரையறைக்குட்பட்ட உலக சகாப்தம் தொடங்கிவிட்டது."[18]

"இந்த முக்கிய நிகழ்வினால், மண்டலங்களிடையிலும், நிகழ்ச்சிகளுக்கிடையிலும் உடனடியான கூட்டுச் சார்பு புதிதாக உருவாகி வருகிறது. இப்பொழுது ஒவ்வொரு அரசியல் நிகழ்ச்சியினையும் உலகளாவிய நோக்குடன் அணுக வேண்டியிருக்கிறது. மனித நடவடிக்கைகளில் மேன்மேலும் நெருக்கமான கூட்டுச்சார்பு ஏற்பட்டு வருகின்றது."[19]

## அமைதியான வாழ்க்கைக்குத் தயாராகுதல்

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் பெர்ட்ரண்ட் ரசலும் ஆல்பர்ட் ஐன்ஸ்டினும் "புதிய முறையில் சிந்திக்கக் கற்றுக் கொள்ளுங்கள்" என்று அழைத்தனர். ரசல்-ஐன்ஸ்டின் அறிக்கையில் இவ்விரு தத்துவ அறிஞர்கள் "மக்கள் தங்களை மனித இனத்தின் ஒரு அங்கமாகக் கருத வேண்டும்." தொழிலாளர்கள், கடைக்காரர்கள், குடியானவர்கள், பெரும் சொத்துகளை உடையவர்கள்-நீங்கள் யாராக இருந்தாலும் - ஓர் உயிரினத்தைச் சார்ந்தவர் என்பதை உணர வேண்டும்"[20] என்று கூறினர். இதே கருத்துகளை 1928ஆம் ஆண்டிலேயே ரொமெய்ன் ரோலண்ட் என்ற பிரெஞ்சு எழுத்தாளர் அனைத்துலக அமைதி நிறுவனம் அமைக்கப்பட வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தார். மனித இனத்தைப் பிரித்து நிற்கும் அரசியல், சமுதாயம், சமயம், தத்துவம் மற்றும் அறிவு ஆகிய பாகுபாடுகளைக் கடந்து ஐ.நா. நிறுவனம் செயல்பட வேண்டும். அனைத்து உயிர்களின் சமுதாயத்தின் நலனைத் தெளிவாகக் கருத்தில் கொண்டு ஐ.நா. இயங்கி வருகிறது; இயங்க வேண்டும்.

மனிதனின் அறிவு உருவாக்கிய அணு ஆயுதம், அறிவற்ற அரசியல் காரணத்தால் வரலாற்றின் முன்னேற்றத்தையே, தடை செய்கிறது. மிகப் பழங்காலத்தில் போர்கள் மக்களை அழித்தது போல அணு ஆயுதப் போருக்குப் பின்னர் மனித வரலாறு முடிந்துவிடும். வரலாற்றைப் படிப்பதற்கும் ஒருவரும் இருக்க மாட்டார்கள் என் பல அறிஞர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.[22] நமது எதிர்கால சந்ததியினருக்கு நாம் ஆற்ற வேண்டிய கடன் ஒன்று உண்டு. "கிளையோ" என்ற வரலாற்றுக் கலைத் தெய்வத்துக்கு நாம் உறுதிமொழி கொடுத்து, வரலாறு அழிந்துபடாமல் காக்க வேண்டும்.

மனித சமுதாயம் ஒரு முக்கியமான இடத்தில் நிற்கிறது. எவ்வழிச் செல்ல வேண்டும் என்பதை முடிவு செய்தாக வேண்டும். கடந்த காலத்தடைகளை உடைத்தெறிந்து விட்டு, பாதுகாப்பு என்பது படை வலிமையையும், இராணுவ வலிமையையும், தொழில் நுட்பத் தீர்வுகளையும் அடிப்படையாகக் கொண்டது என்ற கருத்தினை மாற்றி அமைக்க வேண்டும். இல்லாவிட்டால் படைக்கலன்களின் போட்டியிடையே, அணு இரசாயன ஆயுதங்கள் போன்ற அச்சுறுத்தும் ஆயுதங்களிடையே அடிமைப்பட்டுக் கிடக்க வேண்டியதுதான்.

அழிவுப்பாதை, அறிவுப் பாதை இவற்றிடையே எவ்வழிச் செல்வது என்ற முடிவை, அனைத்து நாடுகளும் இணைந்து எடுக்க வேண்டும்.

ஹிரோசிமா, நாகசாஹி குண்டு வெடிப்புக்குப் பின்னர் தம் தலையின் மீது தொங்குகின்ற அச்சுறுத்தும் வாளினின்றும் விடுதலை பெற வேண்டும். மிக அதிகமான அளவில் அணு ஆயுதங்களை உடைய அனைத்து நாடுகளும் முதல் முடிவு எடுத்து, மற்ற நாடுகளுக்கு வழிகாட்ட வேண்டும்.

அனைத்துலக அமைதியைக் கருத்தில் கொண்டு உலக நாடுகளின் புதிய சிந்தனையை ஏற்படுத்துவது முக்கியப் பணியாகும். இக்கருத்துக்கு உலகின் பல்வேறு நிறுவனங்களும், அறிவியல் பொருளியல் சமூகஇயல் மற்றும் வரலாற்று அறிஞர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.[23]

அன்பு வழியை அரசியலுக்கு எப்படிப் பயன்படுத்துவது? அறவழியில் அநீதிகளை எப்படி எதிர்ப்பது? என்பதை உலகுக்குக் கற்றுக் கொடுத்தவர் காந்தியடிகள். காந்தியடிகளின் வழியில் மார்ட்டின் லூதர் கிங் தமது இயக்கத்தை அறவழியில் நடத்தினார். அமெரிக்க மக்களுக்கும், கறுப்பு இன மக்களுக்கும், உலக மக்கள்

அனைவருக்கும் கருப்பு மக்களின் நிலையை உணர்த்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பேரணியை மார்ட்டின் லூதர் கிங் நடத்தினார். அமெரிக்கநாடு கண்டிராத வகையில் நடைபெற்ற பேரணியில் மார்டடின் லூதர் கிங் ஆற்றிய பேருரை இன்றும் அமர இலக்கியமாகப் போற்றப்படுகிறது. "எனக்கொரு கனவு உண்டு" (I have a Dream) என்ற ஒரு தலைப்பை எடுத்துக் கொண்டு பேசினார். அவருடைய அந்தச் சொற்பொழிவு உலக மக்கள் அனைவருக்கும் பொருந்தும். ஐ.நா. நிறுவப்பட்டு 60 ஆண்டுகள் முடிந்து அடுத்து 21ஆம் நூற்றாண்டில் பணியாற்றும் வேளையிலும் அதை உலக மக்கள் நினைவு கொள்ள வேண்டும்.

"மனிதர் ஒருநாள் விழித்தெழுந்து சகோதரர்போல் ஒன்றாக வாழவே பிறந்திருக்கிறோம் என்பதை உணர்வார்கள் எனக் கனவு காண்கிறேன். ஒரு நாள் இந்நாட்டு நீக்ரோக்கள் அனைவரும், உலகிலுள்ள கறுப்பர் அனைவரும் அவரது தோல் நிறத்திற்குப் பதிலாக, நற்குணங்களுக்கேற்ப மதிக்கப்படுவார்கள் என்றும் ஒவ்வொருவரும் மனிதனின் மாண்பையும், தகுதியையும் மதிப்பார்கள் என்றும் இன்று காலையில் கனவு காண்கிறேன்.....ஒரு நாள் நீதி நீர்போல் பாயும் என்றும், நேர்மை மாபெரும் மடைபோல் ஓடும் என்றும், இன்றும் கனவு காண்கிறேன்.... நமது நாட்டு அவைகளுக்கும், நகர மன்றங்களுக்கும் நீதியுடன் ஒழுகி கருணைப் பற்றுடன் இறைவனின் நெறியில் பணிந்து நடக்கும் மக்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்றும் இன்னும் கனவு காண்கிறேன். ஒரு நாள் போர் ஒழிந்து விடும் என்றும், மனிதர் தம் வாள்களைக் கலப்பைகளாகவும், ஈட்டிகளைச் செடிவெட்டும் அரிவாள்களாகவும் மாற்றுவர் என்றும் நாடுகள் ஒன்றொடொன்று போரிடாமலும், போரைப்பற்றிப்

படிக்காமலும் இருக்கும் என்றும் இன்னும் கனவு காண்கிறேன்".[24]

இக்கருத்திற்கு ஐ.நா. நிறுவனமும், மக்களும் பெருமளவில் ஆதரவு தந்தால் "கிளியோசைட்" அதாவது "வரலாற்று அழிவு" ஏற்படாமல் இருக்கும்.

## மூன்றாம் உலக நாடுகள்

வளர்ச்சியடையும் காலம் எப்பொழுதும் கொந்தளிப்பானது வன்முறைக்குக் காரணமாகிறது. வெற்றிகரமான வளர்ச்சி, கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. வழிவழி வந்த அதிகார அமைப்பை மாற்றுவதால் வன்மறை ஏற்படுகிறது. வளர்ச்சியின்றித் தோல்வி ஏற்பட்டாலோ, சமுதாய அமைப்பில் இன்னும் மோசமான பாதிப்பு ஏற்படுகின்றது. பொருள் இல்லாதவர்களின் வெறுப்பு, இனம், துன்பம் இவற்றோடு, பொருள்வளம் மிக்கோரின் அச்சமும், செறுக்கும் மோதுவதால், மத, இன, மொழி வகைகளால் வர்க்கப் போராட்டம் ஏற்பட்டு, சமுதாயம் பிளவுபடத் தொடங்கிவிட்டது.[25]

ஒன்றை நம் நினைவில் கொள்ள வேண்டும். சமுதாய மாற்றம் மூன்றாவது உலக நாடுகளில் மட்டும் ஏற்படவிலலை. மனிதனின் வரலாற்றில் இதுகாறும் கண்டிராத அளவிலும், வேகத்திலும், அறிவியல் நுட்பங்களிலும் அமைப்புகளிலும் பெரும் மாற்றங்கள் எல்லா நாடுகளிலும் ஏற்பட்டுள்ளன. பழையனவற்றை ஆய்ந்து புதியனவற்றைப் புகுத்துவதால் எல்லா நாடுகளிலும் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. அமெரிக்காவின் பழமைவாதிகளும், மதவெறியர்களும், ஐரோப்பாவில் "பச்சைக்" கட்சியினரும், சோவியத் நாட்டின் சிறுபான்மை குடிமக்களும், மூன்றாவது உலக நாடுகளில் உள்ள எண்ணற்ற சமுதாய, பொருளாதார அமைப்புகளும், "புதிய சிந்தனை"க்கும் புதிய "உலக ஒழுங்கிற்கும்," புதிய "பொருளாதார ஒழுங்கிற்கும்" பெரும் சவாலாக உள்ளன.

பல அரசுகள் அதிகாரத்தை மையத்தில் குவித்துக் கொண்டு நாட்டின் நிலையைக் காக்க இராணுவத்தை நம்பி நிற்கின்றன. மூன்றாவது உலக வரலாற்றைப் படிக்கும் போது இந்நாடுகள் எளிதில் இராணுவத்திடம் பணிந்து அடக்குமுறையை மேற்கொள்வது புரியும்.[26]

மாற்றத்தை ஏற்றுக்கொள்ள முடியாததால் இன்றுள்ள பல போராட்டங்கள் தோன்றின. மாற்றத்தைப் பற்றிய மாறுபட்ட கருத்துகள் இருப்பதே இப்போராட்டங்களின் அடிப்படைக் காரணம்.

அரசியல் உலகம், அதிகாரத்திற்கும் அறிவியலுக்கும் இடையில் தீர்க்கப்படாத சண்டைக்களமாகி இருந்தது. இரண்டாம் உலகப் போருக்கு முன்பும் பின்பும் இன்றும் அவ்வாறே நிலவுவதை நாம் காண்கிறோம். சமூக மற்றும் பொருளாதார காரணிகள் வரலாற்றை ஆட்டிப்படைக்கின்றன.

"பசியும், நிர்வாணமும், ஒடுக்குமுறையும் இரண்டரைக் கோடி மக்களுடைய இதயங்களை வாட்டின. பிரெஞ்சுப் புரட்சிக்கு முக்கியமான தூண்டுதலாக இருந்தது இவையே; தத்துவ ஞானிகள், பணக்காரக் கடைக்காரர்கள், நாட்டுப்புறச் சீமான்களின் ஆணவ பங்கம் அல்லது மறக்கப்பட்ட தத்துவம் அல்ல. எல்லா நாடுகளிலும் இப்படிப்பட்ட எல்லாப் புரட்சிகளிலும் இதைப் பார்க்க முடியும்"[27]

என உலகப்புகழ்பெற்ற தத்துவ அறிஞர் எழுத்தாளர் கார்லைல் எழுதினார்.

மனிதன் "கடந்த தலைமுறைகளின் அனுபவத்தைத் திரட்டி தன்னிடம் மறைந்துள்ள ஆற்றலை வளர்த்துக் கொள்கிறான். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த மனிதனுடைய மூளையைக் காட்டிலும் இன்றைய மனிதனுடைய மூளை பெரியது அல்ல; அவனுடைய

சிந்தனை ஆற்றலும் அதிகமல்ல. ஆனால் இடையிலுள்ள தலைமுறைகளின் அனுபவங்களைக் கற்று அவற்றை உள்வாங்கிக் கொண்டதன் மூலம் அவனுடைய சிந்தனையின் ஆற்றல் பன்மடங்கு அதிகரித்து விட்டது."[28]

இவ்வாறே உலக அமைதிக் கோட்பாடும், அமைதி நிறுவனங்களும், மனித நேயக் கோட்பாடுகளும் மனித உரிமைக் கோட்பாடும் தோன்றின. "பிற்கால சந்ததியினருக்குச் செய்ய வேண்டிய கடமை என்பது முன்னேற்றம் என்ற கருத்திலிருந்து நேரடியாகப் பெறப்படுகிறது"[29] என்று பெரி எழுதினார்.

வரலாற்றிலிருந்து பாடம் கற்றுக் கொள்வது ஒரு போதும் ஒருவழிப்பாதை அல்ல. கடந்த காலத்தின் ஒளியில் நிகழ்காலத்தைப் பார்ப்பது என்பதற்கு நிகழ்காலத்தின் ஒளியில் கடந்த காலத்தைக் கற்பது என்ற அர்த்தம் இருக்கிறது. கடந்த காலத்துக்கும், நிகழ்காலத்துக்கும் இடையிலான இடையுறவின் மூலம்-மனித உரிமைகளை இன்னும் ஆழமாகப் புரிந்து கொள்ளலாம்.

"முன்னேற்றம் என்பது மேற்கத்திய நாகரிகத்தின் உயிர்த்துடிப்பான அனைத்தையும் இயக்கும் கருத்து"[30] என்று பெரி (1920) எழுதினார். பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் பின்வருமாறு எழுதியிருப்பதைப் படிக்கும் பொழுது நமக்கு அதிர்ச்சி ஏற்படும். "மொத்தமாய் பார்க்கும் பொழுது உலகத்தில் நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலைமையுடன் ஒப்பிட்டால் இன்று சுதந்திரம் குறைவாக இருக்கிறது."[31]

"அரசியலமைப்புச் சட்ட சுதந்திரங்களும் அரசியல் உரிமைகளும் முக்கியமான நோக்கங்களாக இருந்த காலத்தில் வரலாற்றாசிரியர் கடந்த காலத்தை அரசியலமைப்புச் சட்ட மற்றும் அரசியல் கோணங்களில் விளக்கினார். அரசியலமைப்புச் சட்ட மற்றும் அரசியல்

நோக்கங்களுக்குப் பதிலாக பொருளாதார சமூக நோக்கங்கள் முக்கியத்துவம் பெற்ற பொழுது வரலாற்றாசிரியர்கள் கடந்த காலத்தைப் பொருளாதார மற்றும் சமூகக் கோணங்களில் விளக்கினார்கள். புதிய விளக்கம் பழைய விளக்கத்தைப் போல நம்ப முடியாதது என்று அவநம்பிக்கையாளர் கூறுவர். ஒவ்வொரு விளக்கமும் அந்தந்தக் கால கட்டத்துக்கு உண்மையாக இருந்தது. அரசியல் மற்றும் அரசியலமைப்புச் சட்ட நோக்கங்களைக் காட்டிலும் பொருளாதார மற்றும் சமூக நோக்கங்கள் மனிதச் சமூக முன்னேற்றத்தில் வளர்ச்சியடைந்த கட்டத்தைக் குறித்தபடியால் வரலாற்றைப் பற்றிய பொருளாதார மற்றும் சமூக விளக்கம் வரலாற்றில் முற்றிலும் அரசியல் விளக்கத்தைக் காட்டிலும் அதிக வளர்ச்சியடைந்த கட்டத்தைக் குறித்தது பழைய விளக்கம் நிராகரிக்கப்பட்டு புதிய விளக்கத்தில் சேர்க்கப்படுகிறது."[32] இத்தகைய படிப்பினை மனித இனத்திற்கு வாய்த்துள்ளது.

எனவேதான் அமைதியும், ஒத்துழைப்பும் நிலவும் ஒரு பன்னாட்டுச் சூழலை உருவாக்குவதில் ஐ.நா. இதுவரைத் தோல்வி கண்டிருக்கிறது என்றால், அதற்கு இத்துறையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அறிவுத்திறனை நோக்கி அமைந்திருந்தாலும், அடிப்படைக் கோட்பாடுகளை நியதிகளைக் கைவிட்டதுமே காரணமாகும். பண்பாட்டை ஒருங்கமைந்த ஒரு முழுமையாக நாம் சிந்திக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு குடும்பம், ஒரு குடும்பப் பண்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும். ஓர் அரசுக்கு ஓர் அரசுப்பண்பாடு வேண்டும். நாம் உருவாக்க முயன்றுவரும் ஒருங்கமைந்த மனிதகுலம், ஒருங்கமைந்த மனிதப்பண்பாடு ஒன்றைக் கொண்டிருக்க வேண்டும்.

மனித குலத்தின் வரலாற்றில் இத்தகைய நயத்தக்க நாகரிகப் பார்வை கொண்டு பன்னாட்டு அமைப்புகளும், அரசுகளும், தனி மனிதர்கள், ஒவ்வொரு துறையின்

விற்பன்னர்களும் உலகப் பண்பை வளர்க்க வேண்டும். மனித குல உரிமைகள் தோற்பது போல் தோன்றினாலும் அவைகள் மீண்டும் மீண்டும் எழுச்சியுறும். நேற்றைய மனிதர்கள் தோற்றதால் இன்று நாம் வெற்றி அடைகிறோம். நேற்றைய சமுதாயத்தின் கதை என்றாலும் இன்றைய சமூகத்தையும் நாளைய சமூகத்தையும் தொட்டுத் தொடரும் தொடர் ஓட்டப்பந்தயமாகும்.

அமைதியும் மனித உரிமைகளும் தான் பன்னாட்டு நல்லுறவில் இடம் பெறவேண்டும் என்பது மிக உயர்ந்த சிந்தனை. அமைதிக்கும் மனித உரிமைகளுக்கும் இடையே உள்ள உண்மையான தொடர்புகள் யாவை?

## முதலாவது

சமுதாய முன்னேற்றத்திற்கும், மனித உரிமைகளை முன்னோக்கிச் செயல்படுத்துவதற்கும், உறுதியளிப்பதற்கும் அமைதிதான் மிகச்சிறந்த சூழலாகும். சமூக, பொருளாதார மற்றும் அரசியல் உரிமைகளைப் பயன்படுத்துவதற்கும், நாடு முழுவதற்கும் பன்னாட்டளவிலும் உறுதியாகவும், ஆழமாகவும் வேரூன்றச் செய்யவும் வாய்ப்பாக இருக்கக்கூடிய பொருளாதாரச் சூழ்நிலைகளை அமைதியும், பதட்டத்தனிவும் ஏற்படுத்துகின்றன. சமூக-பொருளாதார வளர்ச்சியில் மிக அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்க்கவும் சிறந்த சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்துகின்றன.

இன்றைய நாகரிகத்தின் அற்புதங்களைக் கணக்கற்ற லட்சம் மக்களது உடல் மற்றும் உள்ளத்துயரங்களை எப்படி ஒருவரால் இணைத்துப் பார்த்து சிந்திக்க முடியும்? மகிழ முடியும்?

## இரண்டாவது

அமைதியான சூழ்நிலையில் வாழ உரிமை என்பது, மனித உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை உள்ளடக்கிய

முறையை ஒன்றாகச் சேர்த்த அடிப்படையான மற்றும் முக்கிய உரிமைகளைக் கொண்டது.

"வாழ்க்கை உரிமை" என்பதன் உயர்ந்த வெளிப்பாடானது முழுதும் மக்களாட்சியின் உண்மையான சுதந்திரச் சூழலில் வாழும் உரிமை என்பதாகும். அமைதியாக வாழ்வதென்பது உயர்ந்த நெறியானது, பன்னாட்டு பாதுகாப்பு மற்றும் சமூகநீதி உள்ள உலகில் வாழும் உரிமையாகும்.

அமைதியும், மனித உரிமைகளும் அடிப்படையாகவே இணைந்தவை என்பதை உலகமெங்கிலும் உள்ள அதிகமான மக்கள் உணர்கின்றார்கள். சமாதான உரிமை ஓர் அடிப்படை மனித உரிமையாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என மக்கள் தங்களது குரல்களை எழுப்புகிறார்கள்.

சமாதானமாக வாழ உரிமை என்பது அடிப்படை மனித உரிமையாகுமா? எனப் புகழ்பெற்ற போலந்து நாட்டின் வழக்கறிஞர் ஆடம் லோபாட்காவைக் கேட்டபோது சமாதானம்-மனித குலத்தின் நாடுகளின் மற்றும் தனி நபர்களின் உரிமைகளை முழுமையாகப் பாதுகாக்கும் சக்தியாகத்தான் தோன்றுகிறது என பதிலளித்தார்.

அனைத்து நாடுகளையும், ஒருங்கிணைத்த கேம் போபெல்லோ மாநாட்டின் இறுதி ஆவணத்தில் "சமாதான உரிமை என்பது மனித உரிமையாக அங்கீகரிக்கப்பட வேண்டும்" என வலியுறுத்தப்பட்டது.

## மூன்றாவது

அமைதிக் கருத்துகள் மனிதாபிபானம் மற்றும் மக்களாட்சியோடு இணைந்து செல்கிறது. நீடித்த அமைதியை வளர்ப்பதன் மூலம், விழுமிய நீதியையும், மனிதாபிமான லட்சியங்களையும் நாம் வளர்த்துக் கொள்ளமுடியும். வளர்த்துக் கொண்டு வருகிறோம். இதில் மிகமிக உயர்வானது, அமைதியாக வாழ பரந்த மனித உரிமையாகும்.

இந்தியா போன்ற மக்களாட்சி நாடுகள் இயல்பாகவே மனிதாபிமானத்தையும் அடிப்படை உரிமைகளையும் மேற்கொ : டுள்ளக. எல்லாவகையான சமூக அநீதிகளினின்றும் மக்களை விடுவிப்பதும், போரைத் தவிர்ப்பதையும் இந்தியா வரலாற்றுப் பணியாகக் கொண்டுள்ளது.

## நான்காவது

மனித உரிமைகளைப் பாதுகாப்பது என்பது, நாட்டின் மற்றும் பன்னாட்டளவிலும் ஏனைய அடிப்படைக் கொள்கைகளோடு மிக நெருக்கமாக ஆய்வுச் செய்யப்பட வேண்டும். சில நாடுகள் ஏதோ ஒரு வகையான சாக்குப் போக்கில் மனித உரிமைகளைப் பயன்படுத்த முடியாது. மிகத் தெளிவாகச் சொன்னால், அறிவிக்கப்பட்டதற்கும் அறிவிக்கப்படாத உண்மையான நிலைக்கும் எந்தத் தொடர்பும் இல்லாத நிலையை நாம் அறிவோம்.

## ஐந்தாவது

மனித உரிமைகள் குறித்த பன்னாட்டு ஒத்துழைப்பானது அமைதியான சூழ்நிலையிலேயே சாத்தியமாகும்.

சமூகத்தை, மனித இனம் முற்றிலும் எதிர் நோக்கும் தலையாய பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதில் அனைத்து நாட்டு மக்களும் செயல்பட வேண்டியதை, குறிப்பாக இளம் தலைமுறையினர், மக்களுக்கிடையே சிறந்த வாழ்க்கைத்தரத்தை வளர்க்கவும் ஒவ்வொரு அரசும் உறுதிப்படுத்த வேண்டும்.

மனித உரிமைகள் குறித்த பன்னாட்டு ஒப்பந்தங்களின் கூட்டு முயற்சியும், தீர்மானமும் மிக முக்கியமாக இந்த ஒப்பந்தங்களின் பன்னாட்டு நிர்பந்தங்களும், மனித உரிமைகள் குறித்த பன்னாட்டு ஒத்துழைப்பின் முக்கிய அம்சமாகும். இது போன்று சுமார் 50 பன்னாட்டு

ஒப்பந்தங்களை வரைந்து, தீர்மானமாகவும், பன்னாட்டு உரிமைகள் ஒப்பந்தங்களாகவும், ஐ.நா. இயற்றியுள்ளது. அவை குறித்த முக்கிய ஒப்பந்தங்களையும் அவைகளை ஏற்றுறுதி செய்த நாடுகளையும் நாம் பார்ப்போம். அது குறித்த அட்டவணைகளையும் காணலாம்.

நமது உலகில் காணப்படும் ஏற்றத்தாழ்வினைச் சீர்படுத்த நாம் விரும்பினால், அதன் வள ஆதாரங்களின் பகிர்மானத்தில் ஏற்றத் தாழ்வுகளை நீக்கலாம். ஆனால், அறியாமை, வறுமை, இழிவுபடுத்தும் கொடுமை ஆகியவற்றுக்கு எதிரான போராட்டத்தில் நாம் சிறிதேனும் தளர்ந்து விடலாகாது. முரண்பட்ட நலன்களை எதிர்க்கவும், குறுகிய மனப்பான்மையைச் சீர்படுத்தவும் நமது முயற்சிகளை வலுப்படுத்த வேண்டும், அவற்றை நிறைவேற்ற இடையறாது பாடுபட வேண்டும்.

அரசியல் - பொருளாதார - சமுதாயத் தொடர்புகளின் அடிப்படையில் வரலாறு வளர்கிறது. அவ்வளர்ச்சியின் படிகளே மனித உரிமைகளாகும். மனித உரிமைகளின் வெளிப்பாட்டில் தெளிவான பல நிலைகள் உள்ளன. முதலில், மனித உரிமை பற்றிய கருத்தும் அக்கருத்து ஏற்றுக்கொள்ளத்தக்கது என்னும் உறுதியும் தோன்றுகின்றன.

மனித உரிமைகள் பல வகைகளில் செயல்படக் கூடும். இந்த உரிமைகளை அரசு எவ்விதத்திலும் தடை செய்யக்கூடாது என்பது அடிப்படைக் கோட்பாடு. மேலும் ஒரு நாட்டின் சட்டங்களும் அந்தநாடு கையொப்பமிட்டுள்ள பன்னாட்டு உடன்பாடுகளும் எடுத்துரைக்கிற உரிமைகள் அந்நாட்டின் அரசு வெளியிடுகிற இதழ்களில் இடம்பெற வேண்டும். மனித உரிமைகளை எடுத்துரைக்கின்ற பிற ஆவணங்களும் அந்நாட்டில் தடையின்றி உலவுவதற்கு அரசு இணங்க வேண்டும்.

வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள், பருவ இதழ்கள், நூல்கள் முதலியவை மனித உரிமைகளையும் எடுத்துரைப்பதற்கு அரசு இணங்க வேண்டும். அந்தப் பணியில் ஈடுபடுகிற அரசியல் கட்சிகளையும், சமுதாய இயக்கங்களையும் அரசு ஆதரிக்க வேண்டும். அன்றியும், ஐ.நா., யுனெஸ்கோ., ஐ.எல்.ஓ., செஞ்சிலுவைச்சங்கம், சர்வதேச மன்னிப்பு கழகம், ஏனைய பன்னாட்டு நிறுவனங்களும் அந்த நாடு தொடர்பு கொண்டுள்ள மண்டல நிறுவனங்களும் வெளியிடுகிற மனித உரிமை பற்றிய தகவல்களைத் தன் எல்லைக்குள் தடை செய்யக்கூடாது.

## கொள்கை குறித்த கருத்து மாறுபாடுகள்

மனிதனின் உரிமைகளில் முதலாவது வாழ்வதற்கான உரிமையே என பல சமயங்கள் உறுதி செய்கின்றன. பிறக்காத குழந்தைக்காக, வாழ்வதற்கு உரிமை ஏன் எனக்கூறி கருச்சிதைவு, கருக்கலைப்பு செய்வதற்கும் தடைவிதிப்பதை பல விமர்சகர்கள் எதிரும் புதிருமாக நியாயப்படுத்த முயல்கிறார்கள்.

கருச்சிதைவு என்று வரும்போது அல்லது பெண் சிசுக்களைக் கொலை செய்வது என்று வரும்போது பல்வேறு நிலைகளை மேற்கொள்ள வேண்டி வரும் என்பதை நாம் அறிவோம். புதிதாகக் கருக்கொண்ட குழந்தையின் வாழ்வதற்கு உரிமை என்ற அடிப்படையில் கருச்சிதைவு செய்து கொள்ளும் சுதந்திரத்தை ஒரு பெண்ணுக்கு மறுப்பது, பொருளாதாரத் தத்துவப்படி நியாயமானதல்ல.

மனித உரிமைகள் தொத்து நோய் எனக்கருதுவோரும் உண்டு. ஒரு குறிப்பிட்ட நாட்டில், ஒரு மனிதன் தனது பாலினைச் சேர்ந்த ஓர் உறுப்பினரிடம் நெருக்கமான தொடர்புகள் வைத்துக் கொள்வதும், ஒரே பாலினைச் சேர்ந்த இருவர் திருமணம் சட்டப்படி அங்கீகரிக்கப்படுகிறது.

ரோமில் 1978-ஆம் ஆண்டு நடந்த பாற்பண்பு குறித்த பன்னாட்டு மாநாட்டில் தற்கால மக்களாட்சியில் மற்ற எல்லாச் சுதந்திரங்களையும் போல், பாலீடுபாட்டுச் சுதந்திரம் அங்கம் வகுப்பது எந்த அளவிற்கு என்ற வினா விவாதிக்கப்பட்டது. சிலர் இதை அடிப்படையான வரம்பு மீறியது என்று கூட ஒருவர் சொல்லக் கூடும். பல நாடுகளில் மனித உரிமைகள் குறித்து இருந்து வரும் கருத்துகளை மறுபரிசீலனைக்கு உட்படுத்தும் திட்டங்கள் பொறுப்புடனும், மரபு தழுவியும் தயாரிக்கப்படுகின்றன.

சில ஐரோப்பிய நாடுகள் நான்கு அடிப்படையான உரிமைகளை அங்கீகரிப்பதன் மூலம் இழந்து விட்ட இயற்கையின் நடுநிலைத் தன்மையின் சொர்க்கத்திற்கு நாம் திரும்பி விட்டோம் என்ற ஆலோசனையை சைப்கர் தந்தார். மனித உரிமைகள்: வேலை செய்யாமல் வாழ்வதற்கு உரிமை, ஏழ்மையில் இருக்க உரிமை, புகை பிடிக்காதார் பிரிவுக்கு உரிமை மற்றும் உண்மைக்கு உரிமை ஆகியனவாகும். இவைகளை மனித உரிமைகளின் விவாதத்தின் உச்சநிலை எனக் கருதப்படுகின்றன.

வேறுபாடு காட்டுவதற்கு எதிரான அறிக்கைகள், சொற்பொழிவுகள், செய்திகள் மீறப்படுகின்றன. சமத்துவக் கருத்து செயல்படுவதை ஏற்றுக் கொள்ளாமை, குடிமக்களுக்குள்ள சம உரிமையை அலட்சியப்படுத்துதல் அறிக்கை ஆகியன, அநேக அரசியல் சட்டங்களையும் சட்டம் மூலம் அளிக்கப்பட்டுள்ள விரிவான உறுதிகளையும் பயனற்றதாக்குகின்றன. மேலும் ஒருவரது தகுதிக்கும் சுயமான விருப்பத்திற்கும் ஏற்ப பணி அல்லது அலுவலகத்தைத் தேர்ந்தெடுக்கும் உரிமைக்கும், பேச சிந்திக்க, கருத்துகளை வெளிப்படுத்துதல் முதலியவற்றுக்கான உரிமைகளுக்கும், சுதந்திரங்களுக்கும் இது பொருந்தும்.

ஜெர்மன்நாட்டு அரசியல் சட்டத்தில் எடுத்துக்காட்டாக மனித உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. ஒருவரது நம்பிக்கை அல்லது அவரது சமயம் மற்றும் அரசியல் கருத்துக்களுக்காக எவருக்கும் வெறுப்பையோ, சலுகையோ காட்டப்பட மாட்டாது. (விதி 3, பாரா 3)

இதைப் போன்றே மிகச் சுவையான எண்ணம் அமெரிக்காவில் தோன்றியது. 1987 ல் நடைபெற்ற அமெரிக்க மக்களாட்சியின் இருநூறாவது ஆண்டு விழாச் சிந்தனைகளில் ஒன்று அரசியல் சட்டத்தைக் காலத்திற்கேற்றபடி அமைத்து எழுதுவது குறித்து பேசப்பட்டன. "மாறியுள்ள காலம், தனிநபர் மற்றும் குழு உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அரசியல் சட்டத்தை உருவாக்கக்கூடிய முற்றிலும் புதிய சூழ்நிலை உருவாகியுள்ளது" என்ற நியாயத்தை அனுபவமிக்க சட்டநிபுணர்கள் வலியுறுத்தினார்கள்.

## மக்கள் ஆட்சியில் மனித உரிமைகள்

"வாழ்வு பாதுகாக்கப்படும்" என்ற உறுதியைத்தான் எல்லா அரசாங்கங்களும் திட்டமாகச் சட்டத்தின் மூலம் அறிவிக்கின்றன. ஆனால் உலகெங்கிலும் மனித உரிமைகள் மீறப்படும் ஒரு காலத்தில் நாம் வாழ்கிறோம். மனிதர்களுக்கு "வாழும் உரிமை மறுக்கப்படுகிறது. மனிதனுக்கு உரிமைகள் இன்றியமையாதன என்பது வெள்ளிடை மலை. பேச்சுரிமை, எழுத்துரிமை, வழிபாட்டுரிமை, கழகம் அல்லது சங்கம் அமைக்கும் உரிமை, எங்கும் செல்வதற்குரிய உரிமை, அரசியல் உரிமை, பொருளாதார உரிமை போன்ற உரிமைகள் மனிதனின் மகத்தான மேம்பாட்டை பெரிதும் வேண்டி நிற்கின்றன.

உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் என்ற அடிப்படை தேவைகளையே இன்னும் மனிதன் சரிவரப்

பெறவில்லை. மக்களாட்சியில் மனிதன் பெறும் வெகுமதி அல்லது சாபம், பெரும்பாலும் சமுதாயத்தையும் அரசாங்கத்தையும் பொறுத்தே அமைகின்றன. இந்த உரிமைகளை அடையவே பெருத்த போட்டிகள் ஏற்படுகின்றன. உணவு, உடை, வீடு என்ற அடிப்படைத் தேவைகளையே அரசாங்கம் திட்டமாக அளிக்க முடியும் என்ற நம்பிக்கை பிறக்கவில்லை.

பெரும்பான்மையின் ஆதரவு பெற்று ஆட்சிக்கு வருவதால் மட்டும் ஒரு அரசாங்கம் மக்களாட்சி அரசாங்கமாகிவிடாது. ஒரே ஒரு கட்சியைத்தான் ஆதரிக்க வேண்டும் என்று விதிப்பதும் மக்களாட்சி ஆகாது. அரசாங்கம் குடிமக்களுக்கு மக்களாட்சி உரிமைகள் அளிக்கின்றதா? கருத்து, பேச்சு, சுதந்திரத்தையும் தனி கருத்து கொண்டவர்கள் ஒன்று கூடிச் செயலாற்றும் சுதந்திரத்தையும் எதிர் தரப்பினருக்கு அளிக்கிறதா என்பது தான் கேள்வி. தனக்குப் போட்டியாக வேறுகட்சி வளர்வதைத் தடுத்து அடக்குவதுடன், தன் கட்சிக்குள்ளாக கருத்துவேற்றுமைகள் எழுவதையும் அனுமதிக்காமல் அடக்குமுறை செய்யும் எந்தக்கட்சியும், வாக்காளர் ஆதரவு பெற்று நடந்த போதிலும் மக்களாட்சிக்கு விரோதமானதே

இந்திய அரசியல் அமைப்பில் அடிப்படை உரிமைகள் பற்றிய மூன்றாவது பாகம், ஒரு சில உரிமைகளையும் குடிமைச் சுதந்திரங்களையும் குறிப்பிட்டுள்ளது. இந்த உரிமைகள் குடிமக்கள் நலனை காப்பதற்காக, அரசியல் நிர்ணயசபை விதித்துள்ள வரம்புகளாகும். அவ்வரம்புகளை அரசாங்கங்களும் மீற முடியாதென்பதால், நாட்டில் கொடுங்கோன்மை ஏற்படாமல், மக்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்பதே அடிப்படை நோக்கமாகும். நியாயமான சட்டதிட்டங்களால் கட்டுப்படுத்தப்பட்ட சுதந்திரமே, அரசியல் நலன்களில் சிறந்தது. எல்லா குடிமக்களுக்கும்

இந்த உரிமைகள் உண்டு. மற்றவர்களுடைய உரிமைகளை மதித்துக் காக்கும் கடமையும் அவர்களுக்குண்டு. பிறருடைய உரிமையில் நாம் தலையிட தொடங்கினால் அப்பொழுது நம் உரிமையும் பறிபோகிறது. உதாரணமாகப் பேச்சு சுதந்திரம் என்ற உரிமை அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் நாம் பேசுவதைக் கேட்க மக்கள் கூடுமாறு செய்ய நமக்கு உரிமை கிடையாது. அவ்வாறு செய்வது பிறர் உரிமையில் தலையிடுவதாகும்.

நூறு ஆண்டுகளுக்கு முன்பே அமெரிக்கா பற்றி டாக்குவில் (Tocqueville) எழுதுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார் "எதேச்சதிகாரம் எந்த உருவத்தில் காட்சியளித்தாலும், அது வெறுக்கத்தக்கது என்று நம் காலம் வரை கருதப்பட்டு வந்தது. மக்களின் பெயரால் அநீதி இழைத்து, அது நியாயமான கொடுங்கோன்மை, புனிதமான அநீதி என்று பெயர் சூட்டமுடியும் என்பது இன்றுதான் மனிதன் கண்டுபிடித்துள்ள அரிய புதுமை."

சமூகத்தின் குறிக்கோள் நல்வாழ்வை வளர்ப்பதே என்று அரிஸ்டாட்டில் அறிவித்துள்ளார். கொடுங்கோல் ஆதிக்கத்தின் பொறுப்பற்ற தாண்டவத்தில் நல்வாழ்வு சாத்தியமல்ல. ஆகவே தான்அதிகாரத்துக்குச் சட்டத்தால் வரம்புகள் விதிக்க வேண்டும். ஆட்சிசெலுத்த சட்டத்தை அழைப்பவன், ஆண்டவனும், அறிவும் மட்டுமே ஆள்வதை விரும்புபஹ்ன்; ஆட்சி செலுத்த மனிதரை அழைப்பவன், மிருக பலம் ஆட்சி செலுத்துவதையும் அனுமதிப்பவனாவான். என்று கூறுகிறார் அரிஸ்டாட்டில்.

பல பிரச்சனைகள் நம்மை எதிர்நோக்கி நிற்கின்றன. சுதந்திர உணர்வை வளர்க்க வேண்டுமானால், தடைகளிலிருந்தும் சமூக கட்டுப்பாடுகளிலிருந்தும் விடுதலை பெறுவது அவசியம். கைவிலங்குகளையும் கால்கட்டுகளையும் விட மிகக் கொடிய அடிமைத்தனத்தில்

நம் நாட்டு மக்களில் லட்சக்கணக்கானவர் சிக்கி வாடுகின்றனர். வாங்கி விற்கும் சந்தைப் பொருள்களான மனிதர்கள் நடத்தப்படுகிறார்கள். அரசியல் சட்டத்தில் விதிகள் சேர்ப்பதாலோ, சட்டமன்றத்தில் சட்டங்கள் இயற்றுவதாலோ மட்டும் சமூக அமைப்பில் மாறுதல்கள் செய்து விடமுடியாது. இங்கும் அங்கும் அலைந்து அல்லற்பட்டு, வேலைகிடைக்காது, ஊதியம் பெறாது, பசியால் வாடி வாழ்க்கை முழுவதும் ஒரு துயரக்கதையாகக் கொண்டுள்ள ஏழை மக்கள், அரசியல் சட்டத்தைப் பற்றியோ அதன் விதிகளைப் பற்றியோ பெருமை கொள்ள முடியாது. நம் ஏழ்மை பல நூற்றாண்டுகளாகப் பெருகித் திரண்டுள்ள ஏழ்மை, வறுமை, பட்டினி, பிணி, அறியாமை ஆகியவற்றிலிருந்து நாம் நமது குடிமக்களை விடுவிக்கும் வரை நமது மக்களாட்சி சொல்லளவில்தான் இருக்க முடியும். தற்காலத்தில் பெரும்பாலான அரசுகள் வர்க்க உணர்ச்சியை அதிகப் படுத்தி, வர்க்க பேத உறவுகளைப் பலப்படுத்துகின்றனவே தவிர, மனித குலத்தின் மகத்தான குறிக்கோளான மனித உரிமைகளை வழங்கவில்லை. மக்களாட்சி முறையில், மனித உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று கூறப்பட்டாலும், நடைமுறையில் இந்த எண்ணம் செயல்படுகிறதா என்றால் சந்தேகம் தான்.

## அடிக்குறிப்புகள் மற்றும் சான்றுகள்


1. Declaration on the Role of Religion in the promotion of a culture of Peace, Barcelona, Spain, 1994, Adopted at the meeting on "The contribution by Religions to the culture of Peace, organised by UNESCO and the centre UNESCO of Catalunya, Barcelona, Spain, 12-18 December 1994.
2. **List of other Standard-setting Instruments Related to Human Rights Issues and Humanitarian Law,** UNESCO and Human Rights Second Edition (Paris: UNESCO 1999) 337-379.

3. UN Charter

4. மார்சிக் மனிதன் - சட்டம் - அண்டம்

5. சாமுவேல் ஜீவ்ஸ் மனித உரிமைகள் விவாதம் தொடர்கிறது. (சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்) 250.

6. "Manifesto" of Nobel Prize Winners: **Gandhi Marg** 1981; "Laureates Call for Gandhian Stir" **Times of India,** June 25, 1981; Translation by அடைக்கலம் சுப்பையன் ஐ.நா. மனித குல நம்பிக்கை ஒளி (சென்னை: மணிவாசகர் பதிப்பகம் 1997) 143-145. Irwin Abrams (Editor) (Antioch University) Nobel Lectures in Peace 1996-2000; for further details; World Scientific is the Exclusive Publisher of the Nobel Lectures.

7. டெஸ்மாண்ட் மிப்பிலோ டுட்டு ஆஸ்லோவில் அமைதிக்கான நோபெல் பரிசு வழங்கப்பெற்ற விழாவின்போது ஆற்றிய நோபெல் பரிசு உரை, Further Reading; Du Boulay, Shrilay **Tutu: Voice of the Voiceless** Grand Rapids, Mich: Eerdmans, 1988; Tutu Desmond **Crying in the Wilderness: The Struggle for Justice in South Africa** Grand Rapids, Mich: Eerdmans, 1990.

8. Dr. Bernard Lourn and Dr. Evgueni Cliazou of the International Physicians for the prevention of Nuclear War, which won the Nobel Peace Prize for 1985, **The Indian Express,** Nov.17, 1985. Geir Lundestad and Olav Njolstad (Editor) (The Norwegian Nobel Institute Norwary) and **Journal of Peace Research** March 2003; World Scientific is the Exclusive Publishers of the Bovel Lectures.

9. ரிகோபெர்ட்டா மெஞ்சு நோபெல் பரிசு உரை. 1992; Menchu, Rigoberta I, Rigoberta Menchu: **An Indian Woman**

**in Guatemala** : Transulated by An Wright London: Verso, 1984, "Menchu Rigberta" In **Current Biography Yearbook,** 1993, New York: H.W. Wilson, 1994.

10. ஜவஹர்லால் நேரு, நாடாளுமன்றச் சொற்பொழிவு பிப்ரவரி 2, 1953.
11. ஜவஹர்லால் நேரு, நாடாளுமன்றச் சொற்பொழிவு, செப்டம்பர் 17, 1953.
12. Dr. A. Ramaswami Mudaliar's Address at the United Nations Conference April 28, 1945; **The Hindu,** 1 May, 1945, in Swaminatha Subramanian, **Dr.A. Ramaswami Mudaliar and Dr. A. Lakshmanaswami Mudaliar 81st Birthday commemoration volume Madras; 578-582.**
13. ஜவஹர்லால் நேரு, புதுடெல்லி வானொலி சொற்பொழிவு, ஏப்ரல் 3, 1948.
14. ஜவஹர்லால் நேரு, புதுடெல்லி வானொலி சொற்பொழிவு, டிசம்பர் 31, 1952.
15. "How men go to Destruction", a Hellanic Philosopher quoted by Arnold Toynbee, **A Study of History** (London: OVP 1972) 161.
16. Human Manifesto From the Planetary Citizenship Campaign, and the Planetary Citizens Registary, United Nations Plaza, U.S.A., Translation of A. Subbian,
17. Woodrow Wilson Nobel Prize Address, 1920.
18. **Unesco Courier,** June 1995.
19. **Ibid,**
20. Einstein-Russell Manifesto, in **The Autobiography of Bertrand Russell** Vol.III; (London: George Allen and Unwin Ltd; 1969) 70-79.
21. Romain Rolland, **Journal de Generve;** Les Tablattes.

22. John G. Stoessinger **The Might of Nations World Politics in our Time** (New York: Random House 1969) 183-187.

23. Joseph Clark, "Asia and the prospects for world order", Annals of the American Academy of Political and Social Science Vol.390 (July 1970); 35-37; "On Changing the World", in Noam Chomsky's Problems of Knowledge and Freedom, (Thr Russell Lectures), New York's Vintage Books, 1971), 53-111.

24. மார்ட்டின் லூதர் கிங் (1929-1968) அமைதிக்கான நோபெல்-1964-பரிசு பெற்றார்;

25. Rajini Kothari; "Life-Styles: A political Analysis" **Alternatives VI**. No.4, (December 1980), 591-598, Andre Gunder Frank, "The World Crisis: Theory and Ideology" **Alternatives** Vol.VI (1980) 497-523.

26. Rajni Kothari, "Environment and Alternative Development", **Alternatives** V (1979-1980), 427-475.

27. Carlyle, **History of the French Revolution,** III iii Ch.1

28. J.B. Bury **The Idea of Progress,** P.IX.

29. Ibid.

30. J.B. Bury The Idea of Progress Pp.Vii-Viii.

31. B. Russell, **Portraits from Memory** P.124.

32. ஈ.எச்.கார், வரலாறு என்றால் என்ன? (ஆங்கில மூலம்) மொழி பெயர்ப்பாளர் நா. தர்மராஜன், (சென்னை அலைகள் வெளியீட்டகம்) 127.எ

# நூற்பட்டியல்

## BIBLIOGRAPHY

## INTERNATIONAL DOCUMENTS

### UN Documents

American Declaration of Independence.

Centre for Human Rights UN; Human Rights Commission, 49th Session, UN Dec. CCPR/C/49/D/469 at 21 (1991).

Commission on Human Rights (CHR) Established in 1946 by ECOSOC Resolution 5 (1) Reports to ECOSOC 43 members elected by ECOSOC, each from a different Member State of the U.N.

Convention on the Elimination of All Forms of Discrimination against women" Signature Ratification and Accession by General Assembly Resolution 34/180 of December 1979, Entry into force: 3 September 1981, in accordance with Article 27 (4).

Convention on the Elimination of all Forms of Discrimination against Women; UN General Assembly resolution 34/180 of 18 December 1979; entry into force: 3 September 1981. in accordance with Article 27 (1)

Convention on the Prevention and Punishment of the crime of Genocide GAR 260 A (III). December 1948 Entry into force 12 January 1951 accordance with article XIII.

Declaration of the Rights of Man and of Citizens Preamble, Art I (Fr. 1789).

Declaration of the Rights of the Child, proclaimed by the General Assembly of the United Nations on 20 November 1959 (resolution 1386 XIV).

Declaration on the Elimination of Discrimination against women UNGA R. 7 Nov. Resolution 2263 XXII, Convention on the Elimination of All Forms of Discrimination against woman GA Rs. 34/180, Dec. 1979.

"Declaration on the Elimination of Violence against women" proclaimed by the General Assembly of the United Nations on 20 December 1993 resolution 48/104.

E/2727, Annex, 2, Draft resolution C, FI submitted by Commission on status of woman 14 March – I April 1955.

Economic and Social Council resolution 1979/38; Sub-commission on prevention of Discrimination and protection of Minorities, resolution 5 B (E/CN 4 Sub 2/435, E CN. 4/ 1350) 1979.

Economic and Social council, Committee on Human Rights, Sub- commission on prevention of Discrimination and Protection of Minorities (1 756) 198M" September 1980.

Ecosoc Resolution 1984 of May 1984. World Campaign for Human Rights, **Summary or Arbitray Executions Pact Sheet No.11.**

Frank Newman and David Weissbroth; **International Human Rights: Law, Policy and Process** (Clicimnati Ohio: Anderson

Publishing Co. 1996).

General Assembly resolution 1803 (XVII) 14 December 1962, "Permanent Sovereiguty over natural resources."

General Assembly Resolution 1803 (XVII) of 14 December 1962. "Permanent Sovereignty over natural resources."

General Assembly Resolution 2200 A XXI of 16 December 1966, Entry into force 23 March 1976 in accordance with Article 49; UN Year Book 1966.

General Assembly Resolution 2200 A XXI of 16 December 1966, Entry into force 23 March 1976 in accordance with Article 9.

General Assembly Resolution 2200 AC XXI of 16 December 1966. Entry into force: 3 January 1976 in accordance with Article 27; **UN Year Book,** 1966.

General Assembly Resolutions 523 (VI) of 12 January 1952, 626 (VII) of 21 December 1952; 1314 (XIII) of 12 December 1958; 1515 (XV) of 15 December 1960 and 1803 (XVII) of December 1962, **Human Rights, International Instruments** UN New York 1983, 20-21.

Human Manifesto From the Planetary Citizenship Campaign, and the Planetary Citizens Registary, United Nations Plaza, U.S.A. Translation in Tamil by A. Subbian.

**Human Rights A compilation of International Instruments, Prevention of Discrimination, Declarations, Conventions** etc.

**Human Rights International Instruments, Sginatures, Ratifications, Accessions** etc. UN, 1982.

Human Rights Teheran proclamation 1968. **UN Year Book** 1968.

Human Rights: A compilation of International Instruments of the United Nations UN Publication, Sales No. E. 83. XIV. 1.

International Convention on the Elimination of all forms of Racial Discrimination of all Forms of Racial Discrimination General Assembly Resolution 2106 (XX) of 21 December 1965;.

International Convention on the Elimination of All Forms of Racial Discrimination. GAR 2105 A (XX) 21 December 1965; Entry into force: 4 January 1969.

International Convention on the Suppression and Punishment of the Crime of Apartheid GAR 3068 (XXVIII) – 30 November 1973; Entry into foce, 18 July 1976, in accordance with article XV.

International Covenant on Civil and Political Rights General Assembly Resolution 2200 A of 16 December 1966. Entered into force 23 March 1976.

International Covenant on Economic Social and cultural Rights, General Assembly Resolution 2200 A (XXI) 16 December 1966; Entry into force 3 January 1976, in accordance with article 27; U.N. Doc. A/6316 (1966).

Proclaimad by the International conference on Human Rights at Tehran, 13 May 1968. International Covenant on Civil and Political Rights, General Assembly Resolution 2200 A (XXI) 16 December 1966, Entry into for ce: March-1976 in accordance with article 49; U.N.Doc. A/6316 (1966);

Report of CERD to the General Assembly at its fifty- fifth session (CERD/C/55CRP. 1/ ADD. 3 Para 136.Luis Valencia Rodriguez "Racial Discrimination in Economic Social and cultural life" UNESCO United to Combat recism" Selected articles and standard – Setting Instruments. (Paris: 2001).

Report of the Commission to the Economic and Social Council on the work of its Thirty Seventh Session (E/CN.4/1475-E/ 1981/ 25), **Bulletin of Human Rights** 32, April-June 1981.

**Second Decade to Combat Racism and Racial Discrimination, Global Compilation, of national legislation against Racial Discrimination "India"** Centre for Human Rights Geneva 1991.

Slavery, Servitude, Forced Laour and Similar Institutions and practices, signed at Geneva on 25 September 1956. The Convention was amended by the protocol done at the Headquarters of the United Nations, New York, on 7 December 1953, the amended convention entered into force on 7 July 1955.

The Convention on the Nationality of Married Women, adopted 29 January 1957; entered into force 11 August 1958, 309 UNTS 65.

The Convention on the Rights of the Child,

The Declaration on the Elimination of Discrimination Against Women, G.A. Res. 2263, 22 U.N. GAOR Supp. (No.16) : UN Doc. A/6716 (1967).

The UN convention against Torture and other Cruel, Inhuman, on Degrading Treatment or Punishment; UN Resolution 3452 (XXX) 9th Dec. 1975.

Treaty of Rome; Alain Van Hamme, **Human Rights and the Treaty of Rome,** Human Rights A European Perspective 70 (Liztteeffernan (ed.) (1994).

U.N. GAORC. 3 ($88^{th}$- $180^{th}$ mig) at 26-980 (Third Committee Records);

UN Charter

UN Declaration on the Elimination of All Forms of Racial Discrimination; GAR 1904 (XVIII) on 20 November 1963.

UN Doc. CCPR (SP) SR. 2 of September 1976, Faroorkh "Jhabuala "The Practice of the Covenant's Human rights committee, 1976-82 review of the state party Reports", 1 (Feb 1984) 81-106.

UN Economic and Social Council Resolution 1990/15 of 24 May 1990; 1991/18 of May 1991; The Convention on the Elimination of All Forms of Discrimination against Woman;

United Nations Declaration on the Elimination of all Forms of Racial Discrimination, General Assembly resolution 1904 XVIII of 20 November 1963.

Universal Declaration of Human Rights, G.A. Res. 217 A (III) U.N., Doc.A/18810 at 71(1948).

Universal Declaration of Human Rights, UN Year Book 1948; UN Bulletin 1948 and 1949; R. Cassin, La Declaration Universelle des Droit de 'L' Homme et samise enoeuvre, Paris 1956; The UN and the UN Human Rights New York 1968.

## UNESCO Documents

Convention against Discrimination in Education, Adopted by the General Conference of the UNESCO on 14 December 1960, Entry into force: 22 May 1962, in accordance with article 14.

Declaration on the Role of Religion in the promotion of a culture of Peace, Barcelona, Spain, 1994, Adopted at the meeting on "The contribution by Religions to the culture of Peace, organised by UNESCO and the centre UNESCO of Catalunya, Barcelona, Spain, 12-18 December 1994.

**List of other Standard-setting Instruments Related to Human Rights Issues and Humanitarian Law,** UNESCO and Human Rights Second Edition (Paris: UNESCO 1999).

Proclamation by the General Assembly of the United Hations Educational Scientific and Cultural Organization at its Twentieth Session on 28 November 1978.

The UN General Assembly Resolution No. 3148 (XXVIII), 1973, Recommendation on Participation by the People at Large in Cultural Life and their contributon to it, 1976, adopted on 26 November 1976 by the General Coference of UNESCO at its nineteenth session held in Nairobi **(UNESCO and Human Rights Standard Setting Instruments**, Second Edition, 1999).

UNESCO Human Rights of Women A collection of International and Regional Normative Instruments Prepared by January Symonides & Valadmir in Volodin, (UNESCO 1999).

UNESCO Yearbook on Peace and Conflict Studies (Westport, Conn; Greenwood press, 1981).

## ILO Documents

Discrimination (Employment and Occupation) Convention No. 111 Adopted on 25 June 1950 by ILO Entry into force: 15 June 1960 in accordance with article. 8.

ILO Developments : 60th Anniversary Report of the ILO Committee of Experts on the Application on Conventions and Recommendations **Human Rights Quarterly** Reporters (U.S) Vol.II NOs.5/6 (Winter Spring 1987).

ILO Equal Remuneration Convention (1957), the convention was adopted on 29 June 1951 by the International Labor conference (34 the session Entry into force: 23 May 1953.

Remuneration (No 90) Concerning Equal Remuneration for Men and Women workers for work of Equal value, Adopted by the General Conference of the International Labour Organization on 29 June 1951 arts 34th session.

**Amnesty International (AI)**

Amnesty International Report 1977, (Ethiopia's Summary Killings).

Asian Human Rights watch, **Amnesty International Annual Report** 2001; Employment policy Convention No. 122, Adopted on 9 July 1964 by the General Conference of the International Labour organisation at its forty-eight session, Entry into force: 15 July 1966.

## Indian Constitutional Documents

**Constituent Assembly Debates** Vol.IX.

**Constituent Assembly Debates** Vol.XI.

**Golak Nath V. State of Punjab,** AIR (1967)SC 1643.

**The Constitution of India** (New Delhi: Govt. of India Publication 1978)

The Protection of Human Rights Act 1993; No.10 of 1994, 8th January 1994, National Human Rights Commission, New Delhi.

## English Books

Bury. J.B. **The Idea of Progress.**

Carlyle. **History of the French Revolution,** III iii Ch.1

Commager, **Documents of American History.**

Communist Manifesto

Dworkin. Ronald; (1977) **Taking Rights Seriously** (Massachusetts: Harvard University Press).

Ebenstein William, Rousseau, The Social Contract, **Great Political Thinkers Plato to the Present** (Calcutta Oxford and IBH Publishing Co. 1969).

Edited and Principally Authored by Gastil Raymond D. **Freedom in the World Political Rights and Civil Liberties,** 1981 (Westport, Conn: Green Press, 1981).

Grover. Verinder; and Arora, Ranjana; (Ed): **India Fifty years of Independence (2)** (New Delhi: Deep and Deep Publication).

Humphrey, John P, The UN Charter and the Universal Declaration of Human Rights" in **International Protection of Human Rights, Ed. Evan Luard.** (New York 1967).

Humphrey, John P. **"The Great Adventure: The United Nations and Human Rights"** Transnational Publishers. IncDobbs Ferry, NY

Iyer, Krishna. V.R; **Social Democracy and Dalit Egalite** Ambedkar Memorial Lecture) 1986-87 (University of Madras 1989).

Iyer, Krishna. V.R; **Some Half-Hidden Aspects of Indian Social Justice** (Lucknow: Eastern Book Company 1979).

Iyer, Krishna. V.R; **Woman Unbound A Plea for Gender Justice** (Madurai: Society for Community Organisation Trust) 1985.

Kommers; Donald P. and Loescher Gilburt D. (Ed) **Human Rights and American Foreign Policy** (Note Dame: University of Norte Dame Press 1979).

Nehru Jawaharlal in the Proceedings of the Indian National Congress Annual Session held in January 1930; Quoted in Jawaharlal Nehru **Toward Freedom** (New York: John Day Company 1942).

Noam; Chomsky; **Problems of Knowledge and Freedom,** (The Russell Lectures), New York's Vintage Books, 1971).

Paine Thomas, **Rights of Man 42** [E. Rhys ed. 1915).

Palkhivala. N.A; **Indian Constitution Defaced Defiled**

Ramcharan. B G. (Ed). **Human Rights Thirty Years After the Universal Declaration** [The Hague Martinus Nijhoff 1979].

**Rural Development and Human Rights in South Asia, Report of a seminar held in Lucknow, India, 4-9 December 1982;** International Commission of Jurists and Human Rights Institute 1984.

Russell. B. **Portraits from Memory.**

Sathianathier. R; **The Political and Cultural History of India,** Vol.I, **Ancient India,** (Chennai: S. Viswanathan, 1952).

Shyamala, C. **Impact of Social Legislations in Tamil Nadu with Special Reference to Women's Problems'** Ph.D., Thesis in History of Annamalai University.

Stoessinger, John G. **The Might of Nations World Politics in our Time** (New York: Random House 1969).

Subbian, A; **Human Rights Complaints Systems: International and Regional** (New Delhi: Deep Deep Private Ltd., (2000 and 2003).

Swaminatha; Subramanian, **Dr.A. Ramaswami Mudaliar and Dr. A. Lakshmanaswami Mudaliar 81st Birthday commemoration volume Madras.**

**The Autobiography of Bertrand Russell** Vol.III; (London: George Allen and Unwin Ltd; 1969).

**The Complete Works of Thomas Paine** (Fonered 1945)

Toynbee, Arnold; **A Study of History** (London: OUP 1972).

Wood, **The Creation of the American Republic (1969) Bailyn, The Ideological Origins of the American Revolution** (1967).

## English Journals

"Bonded Child Labour", "protection of the Vulenarable Sections of the Society" World Congress on Human Rights, UN

Human Rights Center, Geneva, and Jawaharlal Nehru University, New Delhi, December, 1990.

"Climate Change 2007. The Physical Science Basis - Extracts from the Fourth Assessment Report of the Intergovernmental Panel on Climate Change"- **Documents Survey of the Environment 2007, The Hindu.**

"Manifesto" of Nobel Prize Winners: **Gandhi Marg** 1981.

"The Terrorism Act of South Africa' **Current History** May, 1969, Vol.56, No. 333.

Subbian, A. "Education: A Human Right or a Privilege to Indian Children" Centre for the Study of Human Rights, Columbia University, New York, U.S. VI. International (Human Rights Symposium and Research Conference From June 11th to 14th 1985).

Agakhan. Sadruddin; and Tallat. Hussan bin, **Indigenous Peoples; A Quest for Justice** (Report of the Independent commission on Humanitarian Issues) London 1987, 6-8.

Andre Gunder Frank, "The World Crisis: Theory and Ideology" **Alternatives** Vol.VI (1980).

Anthea J. Jeffery; "Free Speech and Press: An Absolute Right" **Human Rights Quaterly** Vol. 8, Number 2; May 1986.

Barry, Kathleen: "Female Sexual Slavery: Understanding the International Dimensions of women's oppression symposium. Women and International Human Rights" **Human Rights Quarterly** Vol. 3, No. 2 1981.

Bay, Christian: "Self-Respect as a Human Right: Thoughts on the Dialectics of wants and Needs in the Struggle for Human Community" **Human Rights Quarterly**, Vol.4:1 1982

Belfiglio. Volentine J; "How will Majority Rule Come About in Azania/South Africa?" **The Journal of Modern African Studies.** 21, 3(1983).

Bernard. Lown. Dr. and Dr. Chazov; Evgueni of the International Physicians for the prevention of Nuclear War, which won the Nobel Peace Prize for 1985, **The Indian Express,** Nov.17, 1985.

Boven, Theo C. Van. "The Rights to Helath", **Health and Human Rights, Harvard Journal of Health and Human Rights.** Vol. 1, No. 1, 29.

Buergenthal Thomas; "International Human Rights Law and Institutions" PAHO Publication, Jonathan M. Mann, Lawrence Gostim, Sofia Gruskin, Troyen Brennan, Zita Lazzarini and Harvey V. Fineberg (1994) "Health and Human Rights" **Health and Human Rigths** (Massachusetts Harvard School of Public Health) 1.

Dale, Richard; "South Africa and Namibia: Changing the Guard and Guarded Change" **Current History** March 1979 Vol.76, No.445 101-104.

Denck, Ingram: "Commonwealth Press : The years of Challenge in the New Framework World Information," **Commonwealth** (February – March 1976).

Donnelly. Jack; "The Relative Universality of Human Rights" **Human Rights Quarterly,** Vol.29, No.2, May 2007.

James Upendra. Baxi; David Dembo; Clarence Dias, Edited Ward Morehouse and Paul "Law Struggle, and Change in India: An Agendum for Activities" **The International Context of Rural Poverty in the Third World** (Council on International and public Affairs 'Inc and International Centre for Law in Development 777 United Nations Plaza New-York NY 10017; 1987.)

Farer Tom J. "The United Nations and Human Rights, More than a Whimper less than a roar in United Nations. Divided World," **Human Rights Quarterly** 9 (1987) 550-586.

Further Reading "International Physicians for the Prevention of Nuclear War." In **Nobel Prize Winners**, New York: H.W. Wilson, 1987.

Lundestad Geir, and Niolstad Olav (Editors) The Norwegian Nobel Institute Norway and **Journal of Peace Research**, March 2003. World Scientific is the Exclusive Publishers of the Nobel Lectures.

Hartman. Joan; 'Unusual" Punishment: The Domestic Effects of International Norms Restricting the Applicatin of the Death Penalty 52, **Cincinati Law Review,** 655 (1983).

Hasan, Rafia; "The Role of woman as Agents of Change and Development in Pakistan" Sigma Huda, "Bangladeshi Women and Development" Symposiums: South Asian Perspectives on Human Rights, **Human Rights Quaterly** Vol, 3. No. 3. 1981.

Hiskes, Richard P; "The Right to a Green Future: Human Rights, Enviornmentalism, and Intergovernmental Justice" **Human Rights Quarterly** 27 (2005).

Holland, Denys E; "Freedom of the Press in the Commenwealth" **Current Legal Problems** 9 (1956).

Hosken. Fram P; 1981, "Editorial : Women's Rights and Human Rights" **Human Rights Quarterly** 3, 1981.

Howard, E. Rhoda; Hassmann, "The Second Great Transformation : Human Rights Leapfrogging in The Era of Globalisation" **Human Rights Quareterly** 27 (2005).

Irwin Abrams (Editor Antionch University) Nobel Workd Scientiest is the Exlclusive Publishers of the Nobel Lectures.

Iwasawa. Yuji; "Legal Treatment of Koreans in Japan: The Impact of International Human Rights Law on Japanese Law" **Human Right Quarterly** Vol 8., No.2, May 1986.

Jack Donnelly "Cultural Relativism and Universal Human Rights" 6 Human Right Quaterly 400 (1984); Stephen Marks, "Emerging Humna Rights: A New Generation for the 1980's" 33 **Rutgers Law Review** 435 (1981).

Humphrey John P, **Human Rights Quarterly** Vol. 5. No. 4. Nov. 1983.

Joseph Clark, "Asia and the prospects for world order", **Annals of the American Academy of Political and Social Science** Vol.390 (July 1970);

Kaufman Edy; "Prisoners of Conscience: The shaping of A New Human Rights Concpet" **Human Rights Quartaly** 13, No. 3, (August 1991). Amnesty International UN: Oral Statement on Thematic Mechanisms, AI Index : IO'R 41/WU 02/1994.

**Kesavananda Bharathi V. State of Kerala,** (1973) 4 Sec 225, Upendra Baxi, "Judicial Activism, Legal Education and Research in Globalising India" in **Mainstream** February 24, March 2 and 9, 1996.

Lent, John A; "A Third World News Deal? The Guiding Light" **Index on Censorship** 6, (1971).

Loescher; Gilburt. D. and A. Scanlan John; (special Editors) "The Global Refugee problem: U.S. And world response" **The Annals of the American Academy of Political and Social Sciences** Vol.467 May 1983.

Lok Raj, Banal; "The Relevance and Application of Human Rights to Developments" Symposium: South Asian Perspectives on Human Rights **Human Rights Quarterly**. Vol.3 Nos: Summer 1981.

Makhijani, Arjun, et.al., eds Nuclear Wasterlands: A Global Guide book to **Nuclear Weapons Production and Its Health and Environmental Effects.** Report of the Special Commission of International Physicians for the Prevention of Nuclear War and the Institute for Every and Environmental Research Cambridge: MIT Press, 1995.

Manchu, Rigoberta, I, **Rigberta Merchu An Indian Women in Guatemale** Translated by Ann Wright. London: Verso, 1984.

Marks, Stephen. "UNESCO and Human Rights, The Implementation of Rights Relating to Education, Science Culture and Communication **Texas International Law Journal** 13 (1977) 1: 35-67.

Meara. Patrick. O; "South Africa: The Politics of Change" **Current History**, March 1981, Vol.80, No.464, Forced Removals in South Africa 5 vols, Surplus people project.

Menaka Gandhi, **The Hindu** 30 January 1996.

Menchu, Rigoberta." **In Current Biography Year Book 1993.** New York: H.W. Wilson, 1994.

Mitten. Grahan; "A Third World News Deal Tanzania – a case study", **Index on Censorship** 6, (1977) UK.

Morsink. Johannes; "The Philosophy of the Universal Declaration" **Human Rights Quarterly,** Vol. 6, No. 3 Aug. 1984.

Mushakoji. Kinhide; "Development and Racism in Asia and the Pacific" **Peoples for Human Rights** IMADR Yearbook 1992, Vol. 4.

Palkhivala. N.A; "Rekindling the Light of the Constitution" 16th May **Indian Express** 1986; N.A Palkhivala, "Structure of Marble or of red bricks" **Indian Express** 18th May 1980.

Poe, Steven C. and Tate, C. Neal, "Repression of Human Rights to Personal Integirity in the 1980s: A Global Analysis, 88." **American Political Science Review** 853 (1994).

Kothari; Rajini; "Life-Styles: A political Analysis" **Alternatives VI**. No.4, (December 1980).

Kothari, Rajni; "Environment and Alternative Development", **Alternatives** V (1979-1980).

Ravindranath. N.H; "Forests in India Take action now" **Survey of the Environment** 2007, **The Hindu,** 13-18.

Rephael. Mergui; "**Index on Censorship** 1(1981). UK.

Reza. Afshari; "On Historiography of Human Rights: Reflections on Paul Gordon Lauren's The Evolution of International Human Rights : Visions Seen" **Human Rights Quarterly**. Vol. 29, No.1, Feb. 2007.

Rolland, Romain ; **Journal de Generve;** Les Tablattes.

Sir, Zelmaw Cowen, "Wowen's Individual Liberty and the Law" Tagore Law Lecturers, Calcutta (1977), 5.

Sklar, Morton; and Zorn James E. "Report of the Proceedings of an International Human Rights Teaching Institute", Washington D.C. 1-5 June 1981 **Human Rights Quarterly**. Vol.3. No 3. 1981.

Smith. Henry Forbes. and Freeman Mark; "The Mandatory Reporting of Torture by Detention Center Officials. An Original Proposal" **Human Rights Quarterly** 27 (2005).

Subbian. A., "Laureates Call for Gandhian Stir" **Times of India,** June 25, 1981; Translation by A. Subbian.

Subbian. A., "Half a century of the constitution **"One India one people** Mumbai January 2000.

**The Hindu,** 1 May, 1945,

The Right to Health as a Human Right Proceedings, a multi-disciplinary workshop organised by the Hague Academy of International Law and the United Nations University in 1978.

Tolley. Howard; Jr. "Decision- Making at the United Nations Commission on Human Rights, 1979-82" **Human Rights Quarterly** Vol. 5, 1983.

Twiss. Sumner B. "Torture; Justification and Human Rights: Toward and Absolute proscription" **Human Rights Quarterly** Vol. 29 No. 2 May 2007.

**UNESCO Courier** August 1973.

**Unesco Courier,** June 1995.

Weinstein. Warren; "South Asian Colloquiam on Human Rights and Development" Symposium: South Asian Perspectives on Human Rights, **Human Rights Quarterly** Vol.3, No.3., Summer 1981.

Wilson. Woodrow; "Edmund Burke and the French Revolution" **Century Magazine,** LXII (September 1901).

Zoglin Kathryn; "United Nations Action Against Slavery: A Critical Evaluation" **Human Rights Quarterly** Vol.8; No.2; May 1986,

# தமிழ் நூற்பட்டியல்

## தமிழ் நூல்கள்

அண்ணா அறிஞர் வெள்ளை மாளிகையில் (காஞ்சிபுரம் பரதன் பதிப்பகம், 1970)

ஆனைமுத்து, வே. பதிப்பாசிரியர் பெரியார் ஈ.வே.ரா. சிந்தனைகள் (பெரியார் ஈ.வே.இராமசாமி அவர்களின் சொற்பொழிவுகளும், கட்டுரைகளும்) மூன்றாம் தொகுதி, 1712

அபிராமி அந்தாதி பதிகம்.

இராதாகிருஷ்ணன் எஸ்., பேருரைகள் மூன்றாம் தொகுதி, தமிழாக்கம் கா. திரவியம் (சென்னை, 1970 பழனியப்பா பிரதர்ஸ்)

கேசவன், கோ. சுயமரியாதை இயக்கமும் பொதுவுடைமையும் 1930-1936 (விழுப்புரம் சரவணபாலு பதிப்பகம்)

தணலன், ரா. சிந்தனையாளர், கார்ல் மார்க்ஸ், (சென்னை : பிரேமா பிரசுரம் 1983).

தந்தை பெரியார் கம்யூனல் ஜி.ஓ. வகுப்பாரி உரிமை ஏன்? வகுப்பாரி உரிமை ஆணை செல்லாது என்று சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பு வந்தபின் கிளர்ச்சி நடத்த முன் வந்து முதல் நாள் ஆற்றிய பேருரை (சென்னை பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, ஆறாம் பதிப்பு, 1998),

திருவள்ளுவர், திருக்குறள்,

திருமந்திரம்

திருவருட்பிரகாச வள்ளலார், திருவருட்பா,

பாரதியார், பாரதியார் பாடல்கள்

பாரதிதாசன், பாரதிதாசன் பாடல்கள்

மாணிக்கவாசகர், திருவாசகம், சிவபுராணம், 26-30.

மார்சிக், மனிதன் - சட்டம் - அண்டம்

சுப்பையன் அடைக்கலம், மனித குடும்பத்தின் மாற்றமுடியாத உரிமைகள், (1989) சிதம்பரம்.

சுந்தரவடிவேலு, நெ.து. புரட்சியாளர் பெரியார் (சென்னை: எஸ்.சந்த் அண்டு கம்பெனி லிமிடெட் 1979)

சுப்பையன் அடைக்கலம், காமன்வெல்து நாடுகள் (சென்னை, மணிவாசகர் பதிப்பகம், 1999).

சுப்பையன் அடைக்கலம், ஐ.நா. மனித குல நம்பிக்கை ஒளி (சென்னை: மணிவாசகர் பதிப்பகம் 1997).

நேரு ஜவஹர்லால், சொற்பொழிவுகள், 1948, 1952-1953.

கார்.ஈ.எச், வரலாறு என்றால் என்ன? (ஆங்கில மூலம்) மொழி பெயர்ப்பாளர் நா. தர்மராஜன், (சென்னை அலைகள் வெளியீட்டகம்).

ராமநாதன் அரு, மகாகவி பாரதியார் பொன் மொழிகள், (சென்னை: பிரேமா பிரசுரம் 1962).

ஜீவ்ஸ் சாமுவேல் மனித உரிமைகள் விவாதம் தொடர்கிறது. (சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்).

டுட்டு, டெஸ்மாண்ட் மிப்பிலோ, ஆஸ்லோவில் அமைதிக்கான நோபெல் பரிசு வழங்கப்பெற்ற விழாவின்போது ஆற்றிய நோபெல் பரிசு உரை,

ரிகோபெர்ட்டா மெஞ்சு, நோபெல் பரிசு உரை; 1992.

மனித உரிமைகள் ஆணைய ஆவணங்கள், புதுடெல்லி

தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் முக்கிய உத்தரவுகளும், வழிகாட்டுதல்களும், புது டெல்லி 2001,

நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா தலைவர் தேசிய மனித உரிமைகள் ஆணையம் கடிதம் தேதி ஆகஸ்ட் 10, 1995.

நீதிபதி எம்.என். வெங்கடாச்சலய்யா, தலைவர், இந்தியாவின் முன்னால் தலைமை நீதிபதி, கடிதம் மார்ச் 27, 1997.

நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா, நீதிபதி எம். பாதிமா பீவி, வி.எஸ். மாலிமாத் தேசிய மனித உரிமைகள் ஆணையம், புதுடில்லி, நவம்பர் 5, 1996, புகார்தாரரின் பெயர் ஆந்திரப் பிரதேச சிவில் உரிமைகள் குழு.

கைது செய்வது குறித்த தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் வழிகாட்டுதல்கள் நவம்பர் 5, 1996.

பிரேம்சங்கர் சுக்லா எதிர் டில்லி நிர்வாகம் (1980 3 உச்சநீதிமன்ற வழக்கு 526) மற்றும் ஜனநாயகத்திற்கான குடிமக்கள் அமைப்பு எதிர் அஸ்ஸாம் மாநில அரசு (1995 3 உச்சநீதிமன்ற வழக்கு 743) வழக்குகளில்

டி.கே.பாசு வழக்கு (1999) 1 உச்சநீதிமன்ற வழக்கு.

பொய் பேசுவதைக் கண்டுபிடிக்கும் கருவியான பாலிகிராப் பரிசோதனையை மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள், தேசிய மனித உரிமைகள் ஆணையம், ஜனவரி, 2000.

நீதிபதி வர்மா தலைமை நீதிபதி பணியிடங்களில் பாலியல் வன்முறை குறித்த உச்சநீதிமன்றத்தீர்ப்பு (AIR 1997, Sec. P. 3011) குற்றவியல் நீதிப்பேராணை மனுக்கள் எண் 666 முதல் 670 வரை 1992

## தமிழ் இதழ்கள்

இந்திய டுடே, ஜூலை 16, 2008.

கல்கி, நவம்பர் 5, 2006.

கல்கி, ஜூன் 6, 2006.

காலச்சவடு 101, மே, 2008.

காலச்சுவடு, ஏப்ரல் 2008.

குடி அரசு, தலையங்கம், மார்ச் 25, 1944.

குடி அரசு கட்டுரை ஜூலை 10, 1933.

குடி அரசு, செப்டம்பர் 6, 1931, திருச்செங்கோட்டில் சொற்பொழிவு செப்டம்பர் 1, 1931.

குடி அரசு, தலையங்கம், செப்டம்பர் 13, 1931.

குடி அரசு தலையங்கம், ஜூலை 30, 1923.

குடி அரசு, மே 24, 1937.

குடி அரசு, செப்டம்பர் 3, 1933.

யுனெஸ்கோ கூரியர் ஆகஸ்டு 1973.

யுனெஸ்கோ கூரியர் டிசம்பர் 1978.

யுனெஸ்கோ கூரியர் அக்டோபர், நவம்பர், 1982.

யுனெஸ்கோ கூரியர், மே 1995

யுனெஸ்கோ கூரியர், ஜூன் 1995.

யுனெஸ்கோ கூரியர், சிறப்பிதழ், நவம்பர், 1995.

யுனெஸ்கோ கூரியர். ஆகஸ்ட் 1995.

தினமணி (தலையங்கம்) 16 ஜூலை 2008.

தினமணி, டிசம்பர் 10, 2004.

தினகரன் கலைஞர் 74வது பிறந்த நாள் சிறப்பு மலர், ஜீன் 3, 1997.

தினமணி, தலையங்கம் ஜூன் 12, 2008.

விடுதலை நவம்பர் 16, 1971.

ஓம் சக்தி மார்ச் 1996.

299161
DR. T.M. LIBRARY * MADURAI KAMARAJ UNIVERSITY